இந்திய அரசு

சட்டம், நீதி மற்றும் வணிக நிறுவன விவகாரங்கள் அமைச்சகம்

1973 ஆம் ஆண்டு

ற விசாரணை முறைச் சட்டம்

(மத்தியச் சட்டம் எண். 2/1974)

THE CODE OF CRIMINAL PROCEDURE, 1973

(Act No. 2 of 1974)

இந்திய அரசாங்கத்திற்காகத் தமிழ்நாடு எழுது பொருள் அச்சுத் தொழில் இயக்குநரால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

1976

இந்திய அரசு

சட்டம், நீதி மற்றும் வணிக நிறுவன விவகாரங்கள் அமைச்சகம்



1973 ஆம் ஆண்டு

குற்ற விசாரணை முறைச் சட்டம்

(மத்தியச் சட்டம் எண். 2/1974)

THE CODE OF CRIMINAL PROCEDURE, 1973

(Act No. 2 of 1974)

இந்திய அரசாங்கத்திற்காகத் தமிழ்நாடு எழுது பொருள் அச்சுத் தொழில் இயக்குநரால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

1976

1973 ஆம் ஆண்டு

குற்ற விசாரணை முறைச் சட்டம்

(சட்டம் என் 2/1974)

அத்தியாயம் I.

முன்னுரையாக.

பிரிவுகள்—

1. குறுந்தலைப்பு, அளாவுகை, தொடக்கம்.
2. இலக்கணங்கள்.
3. சுட்டப்படுவதை எப்படிப் பொருள் கொள்வது என்பது.
4. இந்தியத் தண்டனைச் சட்டம் மற்றும் பிற சட்டங்களின்படி விசாரணை.
5. காப்பு.

அத்தியாயம் II.

குற்ற வழக்கு நீதிமன்றங்கள், அலுவலகங்கள் ஆகியவற்றின் அமைப்பு.

6. குற்ற வழக்கு நீதிமன்றங்களின் வகைகள்.
7. மண்டலப் பிரிவுகள்.
8. பெருநகர்ப் பகுதிகள்.
9. செஷன்ஸ் நீதிமன்றம்.
10. உதவி செஷன்ஸ் நீதிபதிகள் கீழ்ப்பட்டிருத்தல்.
11. நீதித் துறை நடுவர்களின் நீதிமன்றங்கள்.
12. தலைமை நீதித்துறை நடுவர், கூட்டுத்தலைமை நீதித்துறை நடுவர் முதலியோர்.
13. சிறப்பு நீதித்துறை நடுவர்கள்.
14. நீதித்துறை நடுவர்களுக்குள்ள வட்டார அதிகார வரம்பு.
15. நீதித்துறை நடுவர்கள் கீழ்ப்பட்டிருத்தல்.
16. பெருநகர் நடுவர்களின் நீதிமன்றங்கள்.
17. பெருநகர்த் தலைமை நடுவரும் பெருநகர் கூட்டுத் தலைமை நடுவரும்.
18. பெருநகர் சிறப்பு நடுவர்கள்.
19. பெருநகர் நடுவர்கள் கீழ்ப்பட்டிருத்தல்.
20. நிருவாகத் துறை நடுவர்கள்.
21. நிருவாகத் துறைச் சிறப்பு நடுவர்கள்.

பிரிவுகள்—

22. திருவாகத் துறை நடுவர்களின் வட்டார அதிகார வரம்பு.
23. திருவாகத் துறை நடுவர்கள் நீற்பட்டிருத்தல்.
24. ஆசு குற்றத் துறை வழக்குரைஞர்கள்.
25. ஆசு குற்றம் துறை உதவி வழக்குரைஞர்கள்.

அத்தியாயம் III.

நீதிமன்றங்களின் அதிகாரம்.

26. குற்றங்கள் எந்த நீதிமன்றங்களால் விசாரிக்கத்தக்கன என்பது.
27. இளங்குற்றவாளிகளைப் பொறுத்து (நீதிமன்றங்களின்) அதிகார வரம்பு.
28. உயர் நீதிமன்றங்களும் செஷன்ஸ் நீதிபதிகளும் பிறப்பிக்கக்கூடிய தண்டனைகள்.
29. நடுவர்கள் விதிக்கலாகும் தண்டனைகள்.
30. அபராதம் செலுத்தத் தவறினால் காவல் தண்டனை.
31. ஒரே விசாரணையில் பல்வேறு குற்றங்களுக்குத் தண்டனைத் தீர்ப்பளிக்கும்போது உள்ள தண்டனை பற்றி.
32. அதிகாரங்களை வழங்குகின்ற முறை.
33. நியமனஞ் செய்யப்பட்ட அலுவலர்களுக்குள்ள அதிகாரங்கள்.
34. அதிகாரங்களைத் திரும்பப் பெறுதல்.
35. நீதிபதிகள் மற்றும் நடுவர்களின் அதிகாரங்களைப் பதவியில் அவர்களை அடுத்து வருவோர் செலுத்துகை பற்றி.

அத்தியாயம் IV.

அ. மேல்நிலைக் காவல் அலுவலர்களின் அதிகாரங்கள்.

36. மேல்நிலைக் காவல் அலுவலர்களின் அதிகாரங்கள்.

ஆ. நடுவர்களுக்கும் காவல் துறையினருக்கும் உதவுதல்.

37. பொதுமக்கள் எப்போது நடுவர்களுக்கும் காவல் துறையினருக்கும் உதவுவது என்பது.
38. பிடிகட்டளையை நிறைவேற்றுகின்ற காவல் அலுவலரல்லாத பிற ஒருவருக்கு உதவுதல்.
39. சில குற்றங்களைக் குறித்துப் பொதுமக்கள் தகவல் கொடுக்க வேண்டுமென்பது.
40. அறிவிப்புச் செய்வதற்குக் கிராம விவகாரங்கள் சம்பந்தமாக வேலை யிலமர்ந்துள்ள அலுவலர்களுக்குள்ள கடமை.

பிரிவுகள்—

அத்தியாயம் V.

ஆட்களைக் கைது செய்தல்.

41. காவல் அலுவலர் எப்போது பிடிகட்டளையின்றிக் கைது செய்யலாம் என்பது.

42. பெயரையும் இருப்பிடத்தையும் தெரிவிக்க மறுத்தால், கைது செய்யலாம் என்பது.

43. தனிப்பட்டவரால் கைது செய்யப்படுதலும் அதன் மீதான நடைமுறையும்.

44. நடுவரால் கைது செய்யப்படுதல்.

45. ஆயுதப்படைகளின் உறுப்பினர்களுக்கு, கைது செய்யப்படுவதிலிருந்து பாதுகாப்பு அளித்தல்.

46. கைது செய்தல் எவ்வாறு என்பது.

47. கைது செய்வதற்காக நாடப்படுகிறவர் புகுந்துள்ள இடத்தைச் சோதனையிடுதல்.

48. குற்றவாளிகளை மற்ற அதிகார எல்லைகளுக்குள் துரத்திச் செல்லுதல்.

49. அனுவசியமான தடங்கல் கூடாது என்பது பற்றி.

50. கைது செய்யப்பட்டவருக்கு, கைது செய்தலுக்கான காரணங்களையும் ஜாமீனில் போவதற்குள்ள உரிமையையும் பற்றி தெரிவித்தல்.

51. கைது செய்யப்பட்டவரைச் சோதனையிடுதல்.

52. சில குறிகளைக் கைப்பற்றுவதற்கான அதிகாரம்.

53. காவல் அலுவலரின் வேண்டுகோளின்பேரில் குற்றஞ்சாட்டப்பட்டவரை மருத்துவர் ஒருவர் பரிசோதனை செய்தல்.

54. கைது செய்யப்பட்டவரின் வேண்டுகோளின்மீது அவரை மருத்துவர் பரிசோதனை செய்தல்.

55. காவல் அலுவலர் பிடிகட்டளையின்றிக் கைது செய்ய, தமக்குக் கீழ் நிலையிலுள்ளவரை அனுப்பிவைக்கும்போது நடைமுறை என்ன என்பது.

56. கைது செய்யப்பட்ட ஒருவரை நடுவர் முன்போ காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் முன்போ கொண்டு செல்லுதல்.

57. கைது செய்யப்பட்ட ஒருவரை இருபத்துநான்கு மணி நேரத்திற்கு மேல் காவலில் வைத்திருத்தல் கூடாது.

58. காவல் துறையினர் கைது செய்தது குறித்து அறிவித்தல்.

59. கைது செய்யப்பட்டவர் விடுவிக்கப்படுதல்.

60. தப்பித்துச்சென்றதன் பேரில் துரத்திச் சென்று மீண்டும் பிடிப்பதற்குள்ள அதிகாரம்.

பிரிவுகள்—

அத்தியாயம் VI.

ஜாமீனைக் கட்டாயப்படுத்தும் நீதிமன்றக் கட்டளைகள்.

அ. ஜாமீன் கட்டளை.

61. ஜாமீன் கட்டளையின் வடிவம்.
62. ஜாமீன் கட்டளையைச் சார்வு செய்தல் எவ்வாறு என்பது.
63. கூட்டு நிறுவனங்கள் அல்லது சங்கங்களுக்கு ஜாமீன் கட்டளையைச் சார்வு செய்தல்.
64. ஜாமீனாகும்படிக் கட்டளையிடப்பட்டவர்களைக் கண்டுபிடிக்க முடியாதபோது சார்வு செய்வது எவ்வாறு என்பது.
65. முன்னுல் வகைசெய்யப்பட்டவாறு சார்வு செய்ய முடியாதபோது நடைமுறை என்ன என்பது.
66. அரசு ஊழியருக்குச் சார்வு செய்தல்.
67. வட்டார எல்லைகளுக்கு வெளியே ஜாமீன் கட்டளையைச் சார்வு செய்தல்.
68. மேற்சொன்ன சந்தர்ப்பங்களிலும் சார்வு செய்கின்ற அலுவலர் வராதபோதும் சார்வானதற்கான நிரூபணம்.
69. சாட்சிக்கு அஞ்சல் மூலமாக ஜாமீன் கட்டளையைச் சார்வு செய்தல்.

ஆ. பிடிகட்டளை.

70. பிடிகட்டளையின் வடிவமும் கால அளவும்.
71. ஜாமீன் வாங்க வேண்டுமென உத்தரவிடுவதற்குள்ள அதிகாரம்.
72. பிடிகட்டளை எவருக்குக் குறிப்பிட்டனுப்ப வேண்டும் என்பது.
73. பிடிகட்டளையை எவருக்கும் குறிப்பிட்டனுப்பலாம் என்பது.
74. பிடிகட்டளையை ஒரு காவல் அலுவலருக்குக் குறிப்பிட்டனுப்புதல்.
75. பிடிகட்டளையின் சாரத்தை அறிவித்தல்.
76. கைது செய்யப்பட்டவர் தாமதமின்றி நீதிமன்றத்தின் முன் கொண்டு வரப்படுதல்.
77. எவ்விடத்தில் பிடிகட்டளையை நிறைவேற்றலாம் என்பது.
78. நிறைவேற்றுவதற்காகப் பிடிகட்டளையை அதிகார எல்லைக்கு வெளியே அனுப்புதல்.
79. அதிகார வரம்புக்கு வெளியே நிறைவேற்றப்படுவதற்காகப் பிடிகட்டளையைக் காவல் அலுவலருக்குக் குறிப்பிட்டனுப்புதல்.
80. எவருக்காகப் பிடிகட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதோ அவரைக் கைது செய்தபின் நடைமுறை என்ன என்பது.
81. கைது செய்யப்பட்டவர் எந்த நடுவர் முன்பு கொணரப்படுகிறாரோ அவர் மேற்கொள்ள வேண்டிய நடைமுறை.

பிரிவுகள்—

இ. பகிரங்க அறிவிப்பும் ஜப்தியும்.

82. நலிமறைவாகியுள்ள ஆளைப் பற்றிய பகிரங்க அறிவிப்பு.
83. நலிமறைவாகியுள்ள ஆளின் சொத்தினை ஜப்தி செய்தல்.
84. சொத்துக்கு உரிமை கொண்டாடுதலும் ஜப்திக்கு ஆட்சேபனையும்.
85. ஜப்தி செய்யப்பட்ட சொத்தினை விடுவித்தல், விற்பனை செய்தல், மற்றும் திரும்ப ஒப்படைத்தல்.
86. ஜப்தி செய்யப்பட்ட சொத்தினைத் திரும்ப ஒப்படைப்பதற்கான விண்ணப்பத்தை நிராகரிப்பு செய்கின்ற கட்டளையிலிருந்து மேல்முறையீடு.

ஈ. நீதிமுறைக் கட்டளைகள் சம்பந்தமான பிற விதிகள்.

87. ஆஜர் கட்டளைக்குப் பதிலாக அல்லது அதனோடுகூட பிடிகட்டளையைப் பிறப்பித்தல்.
88. ஆஜராவதற்காகப் பத்திரம் வாங்குவதற்குள்ள அதிகாரம்.
89. ஆஜராவதற்கான பத்திரத்தை மீறுங்கால் கைது செய்தல்.
90. இந்த அத்தியாயத்தின் விதிகள் பொதுவாகவே ஆஜர் கட்டளைகளின்மீதும் பிடிகட்டளைகளின்மீதும் இயங்கத்தக்கன என்பது.

அத்தியாயம் VII.

பொருள்களைத் தாக்கல் செய்வதைக் கட்டாயப்படுத்தும் நீதிமுறைக் கட்டளைகள்.

அ. தாக்கல் செய்வதற்கான ஆஜர் கட்டளை.

91. பத்திரத்தையோ வேறு பொருளையோ தாக்கல் செய்வதற்கான ஆஜர் கட்டளை.
92. கடிதங்கள் மற்றும் தந்திகள் பற்றிய நடைமுறை.

ஆ. சோதனைக் கட்டளைகள்.

93. சோதனைக் கட்டளை எப்போது பிறப்பிக்கப்படலாம் என்பது.
94. திருட்டுப்பொருள், சிருஷ்டனைப் பத்திரங்கள் முதலியவை இருப்பதாகச் சந்தேகிக்கப்படும் இடத்தைச் சோதனையிடுதல்.
95. சில வெளியீடுகள், தண்டனைமுப்பாயின என விளம்புவதற்கும் அவற்றிற்காகச் சோதனைக் கட்டளைகளைப் பிறப்பிப்பதற்குமுள்ள அதிகாரம்.
96. பதிமுதல் விளம்புகையை நீக்கிவிடுவதற்கு உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பம்.
97. சட்டவிரோதமாகக் கட்டுப்படுத்தப்பட்ட ஆட்களுக்காகச் சோதனையிடுதல்.
98. கடத்தப்பட்ட பெண்களைத் திரும்ப ஒப்படைப்பதைக் கட்டாயப்படுத்துவதற்குள்ள அதிகாரம்.

பிரிவுகள்—

இ. சோதனைகள் சம்பந்தமான பொது விதிகள்.

99. சோதனைக் கட்டளைகளைக் குறிப்பிட்டனுப்புதல் முதலியவை.

100. முடப்பட்டுள்ள இடத்தின் பொறுப்பினைக் கொண்டுள்ள ஆட்கள் சோதனைக்கு அனுமதித்தல் வேண்டும்.

101. அதிகார வரம்புக்கு அப்பால் இடப்பட்ட சோதனையில் காணப்பட்ட பொருள்களை என்ன செய்யவேண்டுமென்பது.

ஈ. பலதிறப்பட்டவை.

102. சில பொருள்களைக் கைப்பற்ற காவல் அலுவலருக்குள்ள அதிகாரம்.

103. தடுவர் தம் முன்னிலையில் சோதனை செய்ய உத்தரவிடலாம்.

104. தாக்கல் செய்யப்பட்ட பத்திரம் முதலியவற்றைப் பற்றுகை செய்வதற்கான அதிகாரம்.

105. நீதிமுறைக் கட்டளைகள் சம்பந்தமான பரம்பர ஏற்பாடுகள்.

அத்தியாயம் VIII.

அமைதி பேணுவதற்கும் நன்னடத்தைக்குமான ஜாமீன்.

106. தண்டனைத் தீர்ப்புக் காலத்தில் அமைதி பேணுவதற்கான ஜாமீன் வாங்குதல் பற்றி.

107. மற்ற சந்தர்ப்பங்களில் அமைதி பேணுவதற்கான ஜாமீன் வாங்குதல் பற்றி.

108. ஆட்சிக்குத் துரோகமாகக் கிளர்ச்சி செய்யும் விஷயங்களைப் பரப்புகின்றவர்களிடமிருந்து நன்னடத்தைக்கான ஜாமீன்.

109. சந்தேகிக்கப்படும் ஆட்களிடமிருந்து நன்னடத்தைக்கான ஜாமீன்.

110. வாடிக்கைக் குற்றவாளிகளிடமிருந்து நன்னடத்தைக்கான ஜாமீன்.

111. உத்தரவு பிறப்பிக்கப்படுதல்.

112. நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள ஆளைப் பொறுத்த நடைமுறை என்ன என்பது.

113. அவ்வாறு ஆள் ஆஜராகாதபோது ஆஜர் கட்டளை அல்லது பிடிகட்டளை பிறப்பிக்கப்படுதல்.

114. உத்தரவின் தகலொன்றை ஆஜர் கட்டளை அல்லது பிடிகட்டளையுடன் சேர்த்தனுப்புதல்.

115. நேர்முகமாக ஆஜராவதைத் தவிர்ப்பதற்குள்ள அதிகாரம்.

116. தகவல் உண்மையானதா என்பதை விசாரணை செய்தல்.

117. ஜாமீன் தருமாறு கட்டளை பிறப்பித்தல்.

118. எவருக்கு எதிராகத் தகவல் தெரிவிக்கப்பட்டதோ அவரை விட்டு விடுதல்.

119. ஜாமீன் கோரப்படும் கால அளவின் தொடக்கம்.

பிரிவுகள்—

120. பத்திரத்தின் உள்ளடக்கம்.

121. ஜாமீன்தார்களை நியமிப்பதற்கான அதிகாரம்.

122. ஜாமீன் தாக் தவறியதற்காகச் சிறைவைத்தல்.

123. ஜாமீன் தவறியதற்காகச் சிறை வைக்கப்பட்டவர்களை விடுவிப்பதற்குள்ள அதிகாரம்.

124. பத்திரத்தின் எஞ்சியுள்ள காலப் பகுதிக்கு ஜாமீன்.

அத்தியாயம் IX.

மனைவியர், குழந்தைகள் மற்றும் பெற்றோர்களின் ஜீவனாம்சத்திற்கான கட்டளை.

125. மனைவியர், குழந்தைகள் மற்றும் பெற்றோர்களின் ஜீவனாம்சத்திற்கான கட்டளை.

126. நடைமுறை.

127. படித்தொகையை மாற்றியமைத்தல்.

128. ஜீவனாம்சக் கட்டளையை நிறைவேற்றுதல்.

அத்தியாயம் X.

பொது ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டுதல்.

அ. சட்ட விரோதமான கும்பல்கள்.

129. குடிமுறைப் படையைப் பயன்படுத்திக் கும்பலைக் கலைத்தல்.

130. கும்பலைக் கலைக்க ஆயுதப் படைகளைப் பயன்படுத்துதல்.

131. கும்பலைக் கலைப்பதற்குச் சில ஆயுதப்படை அலுவலர்களுக்குள்ள அதிகாரம்.

132. முன்சென்ற பிரிவுகளின்படி செய்யப்பட்ட செய்கைகளுக்காகக் குற்றவழக்குத் தொடரப்படாமலிருப்பதற்குப் பாதுகாப்பு.

ஆ. பொதுத் தொல்லைகள்.

133. தொல்லையை நீக்குவதற்கான நிபந்தனைக் கட்டளை.

134. கட்டளையைச் சார்வு செய்தல் அல்லது அறிவித்தல்.

135. யாருக்குக் கட்டளை குறிப்பிட்டனுப்பப்படுகிறதோ அவர் கீழ்ப்படியவோ காரணங் காட்டவோ வேண்டுமென்பது.

136. அவர் அவ்வாறு செய்யத் தவறுவதால் ஏற்படும் விளைவுகள்.

137. பொது உரிமை இருப்பதை மறுக்குமிடத்து நடைமுறை என்ன என்பது.

138. காரணங்காட்ட அவர் வந்திருக்கும்போது நடைமுறை என்ன என்பது.

பிரிவுகள்—

139. தல விசாரணை செய்யவும் வல்லுநரை விசாரிக்கவும் உத்தரவிட நடுவருக்குள்ள அதிகாரம்.

140. எழுத்து மூலமான அறிவுறுத்தல்கள் முதலியவற்றை அளிக்க நடுவருக்குள்ள அதிகாரம்.

141. கட்டளை உறுதி செய்யப்படுவதன்பேரில் நடைமுறை என்ன என்பதும், அதற்குக் கீழ்ப்படியாமையின் விளைவுகளும்.

142. விசாரணை நடப்பிலிருக்கும்போது வலியுறுத்து கட்டளை பிறப்பித்தல்.

143. பொதுத் தொல்லை மீண்டும் செய்யப்படுவதை அல்லது தொடர்ந்து செய்யப்படுவதை நடுவர் தடை செய்யலாம்.

இ. தொல்லை அல்லது எதிர்பார்க்கப்படுகிற அபாயம் ஆகிய அவசர நிலைகள்.

144. தொல்லை அல்லது எதிர்பார்க்கப்படுகிற அபாயம் ஆகிய அவசர நிலைகளில் உத்தரவு பிறப்பிப்பதற்குள்ள அதிகாரம்.

ஈ. அசையாப் பொருள் பற்றிய தாவாக்கள்.

145. நிலம் அல்லது நீர் சம்பந்தப்பட்ட தகராறு அமைதிக்குலைவை உண்டாக்கக்கூடியதாக இருக்குமிடத்து நடைமுறை என்ன என்பது.

146. தாவாச் சொத்தை ஜப்தி செய்வதற்கும் பாதுகாவலரை (ரிசீவர்) நியமனஞ் செய்வதற்குமான அதிகாரம்.

147. நிலம் அல்லது நீரைப் புழங்கும் உரிமை பற்றி ஏற்படும் தாவா.

148. தல விசாரணை.

அத்தியாயம் XI.

காவல் துறையினரின் தடுப்பு நடவடிக்கை.

149. கைது செய்தற்குரிய குற்றங்களைக் காவல் துறையினர் தடுக்க வேண்டும் என்பது.

150. கைது செய்தற்குரிய குற்றங்களைச் செய்வதற்கான திட்டம் பற்றிய தகவல்.

151. கைது செய்தற்குரிய குற்றங்கள் செய்யப்படுவதைத் தடுப்பதற்காகக் கைதுசெய்தல்.

152. பொதுச் சொத்துக்குக் கேடு விளைவிப்பதைத் தடுத்தல்.

153. எடைகளையும் அளவைகளையும் ஆய்வு செய்தல்.

பிரிவுகள்—

அத்தியாயம் XII.

காவல் துறையினருக்குத் தகவல் கொடுத்தலும் புலனுய்வு செய்வதற்கு அவர்களுக்குள்ள அதிகாரங்களும்.

154. கைது செய்தற்குரிய வழக்குகளில் தகவல் கொடுத்தல்.

155. கைது செய்தற்குரியதல்லாத வழக்குகள் பற்றித் தகவல் கொடுத்தலும் அத்தகைய வழக்குகளைப் புலனுய்வு செய்தலும்.

156. கைது செய்தற்குரிய வழக்கைப் புலனுய்வு செய்வதற்குக் காவல் அலுவலருக்குள்ள அதிகாரம்.

157. புலனுய்வுக்கான நடைமுறை.

158. அறிக்கையை எவ்வாறு பணிந்தனுப்புவது என்பது.

159. புலனுய்வு அல்லது முதல்நிலை விசாரணை செய்வதற்கான அதிகாரம்.

160. சாட்சிகள் வருவதைக் கோருவதற்குக் காவல் அலுவலருக்குள்ள அதிகாரம்.

161. சாட்சிகளைக் காவல் துறையினர் விசாரித்தல்.

162. காவல் துறையினரிடம் கொடுக்கப்படும் வாக்குமூலங்களுக்குக் கையொப்பமிடுதல் ஆகாது.

163. தூண்டுதல் எதையும் செய்ய முற்படுதல் ஆகாது.

164. ஒப்புதல் வாக்குமூலங்களையும், வாக்குமூலங்களையும் பதிவு செய்தல்.

165. காவல் அலுவலர் சோதனையிடுதல்.

166. காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் மற்றொருவரை எப்போது சோதனை கட்டளை பிறப்பிக்குமாறு கோரலாம் என்பது.

167. புலனுய்வை இருபத்துநான்கு மணி நேரத்துக்குள் முடிக்க முடியாத போது நடைமுறை என்ன என்பது.

168. கீழ்நிலையிலுள்ள காவல் அலுவலர் செய்யும் புலனுய்வு பற்றிய அறிக்கை.

169. சாட்சியம் குறைவுள்ளதாக இருக்கும்போது எதிரியை விடுவித்தல்.

170. சாட்சியம் போதுமானதாக இருக்கும்போது வழக்குகளை நடுவரிடம் அனுப்ப வேண்டும் என்பது.

171. முறையிடுபவரையும் சாட்சிகளையும் காவல் அலுவலருடன் செல்லுமாறு கோருதலும் அவர்களைத் தடைகளுக்கு உட்படுத்துதலும் ஆகாது என்பது பற்றி.

172. புலனுய்வில் எடுக்கும் நடவடிக்கைகளின் நாட்குறிப்பு.

173. புலனுய்வை முடித்ததன்பேரில் காவல் அலுவலர் அறிக்கை அனுப்ப வேண்டுமென்பது.

174. தற்கொலை முதலியவற்றைக் காவல் துறையினர் விசாரித்து அறிக்கை இடுவது பற்றி.

175. ஆட்கள் ஆஜர் ஆவதற்குக் கட்டளை பிறப்பிப்பதற்கான அதிகாரம்.

176. மரணத்தின் காரணத்தைக் குறித்து நடுவர் விசாரணை செய்தல்.

பிரிவுகள்—

அத்தியாயம் XIII.

பரிசிலனைகளிலும் விசாரணைகளிலும் குற்ற வழக்கு நீதிமன்றங்களுக்குள்ள அதிகார எல்லை.

177. சாதாரணமாகப் பரிசிலனைக்கும் விசாரணைக்குமான இடம்.

178. பரிசிலனை அல்லது விசாரணைக்கான இடம்.

179. செய்கை எதொன்றும் செய்யப்படுமிடத்து, அல்லது பின் விளைவு அடுத்து நிகழுமிடத்து குற்றம் விசாரணை செய்யத்தக்கது.

180. வேறு குற்றத்தோடு உள்ள தொடர்பு காரணமாகச் செய்கை ஒன்று குற்றமாக இருக்குமிடத்து விசாரணை.

181. சில குறிப்பிட்ட குற்றங்களைப் பொறுத்த மட்டில் விசாரணை நடத்துவதற்கான இடம்.

182. கடிதங்கள் முதலியவை மூலமாகச் செய்யப்படும் குற்றங்கள்.

183. பயணம் அல்லது கடற்பயணத்தின்போது செய்யப்பட்ட குற்றம்.

184. சேர்ந்தரணையாக விசாரிக்கத்தக்க குற்றங்களை விசாரணை செய்வதற்கான இடம்.

185. வழக்குகள் வெவ்வேறு செஷன்ஸ் பிரிவுகளில் விசாரணை செய்யப்படுவதற்கு உத்தரவிடும் அதிகாரம்.

186. சந்தேகம் ஏற்படும்போது எந்த மாவட்டத்தில் பரிசிலனையோகாக ஆஜர் கட்டளை அல்லது பிடிகட்டளை பிறப்பிப்பதற்கான அதிகாரம்.

187. வட்டார அதிகார வரம்புக்கு அப்பால் செய்யப்பட்ட குற்றத்திற்காக ஆஜர் கட்டளை அல்லது பிடிகட்டளை பிறப்பிப்பதற்கான அதிகாரம்.

188. இந்தியாவிற்கு வெளியே செய்யப்பட்ட குற்றம்.

189. இந்தியாவிற்கு வெளியே செய்யப்பட்ட குற்றங்கள் தொடர்பாகச் சாட்சியத்தைப் பெற்றுக்கொள்ளுதல்.

அத்தியாயம் XIV.

நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு முன் தேவைப்படும் நிபந்தனைகள்.

190. குற்றங்களை நடுவர்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல்.

191. எதிரியின் விண்ணப்பத்தின்பேரில் மாற்றுதல்.

192. வழக்குகளை நடுவர்களிடம் மாற்றி வைத்தல்.

193. செஷன்ஸ் நீதிமன்றங்கள் குற்றங்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல்.

194. கூட்டு, மற்றும் உதவி செஷன்ஸ் நீதிபதிகள், தங்களிடம் மாற்றி வைக்கப்பட்ட வழக்குகளை விசாரணை செய்தல்.

பிரிவுகள்—

195. பொது வழியாட்களின் சட்டபூர்வமான அதிகாரத்தை அமைதிந்த தற்காகவும், பொது நீதிக்கு விரோதமான குற்றங்களுக்காக வும், சாட்சியத்தில் தாப்படும் பத்திரங்கள் தொடர்பான குற்றங்களுக்காகவும் வழக்குத் தொடர்தல்.

196. அரசுக்கு விரோதமான குற்றங்களுக்காகவும் அத்தகைய குற்றத் தைச் செய்வதற்கான எதிர்குற்றத்திற்காகவும் வழக்குத் தொடர்தல்.

197. நீதிபதிகள் மற்றும் பொது வழியாட்களின்பேரில் வழக்குத் தொடர்தல்.

198. மணவாழ்விற்கு இடர் விளைக்கும் குற்றங்களுக்காக வழக்குத் தொடர்தல்.

199. அவதூறுக்காக வழக்குத் தொடர்தல்.

அத்தியாயம் XV.

நடுவர்களிடம் (மாஜிஸ்ட்ரேட்) முறையிடுகள் செய்து கொள்ளுதல்.

200. முறையிடுபவரை விசாரித்தல்.

201. வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் தகுதி பெற்றிராத நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) பின்பற்றவேண்டிய நடைமுறை என்ன என்பது.

202. நீதிமுறைக் கட்டளை பிறப்பிப்பதைத் தள்ளிப் போடுதல்.

203. முறையீட்டைத் தள்ளுபடி செய்தல்.

அத்தியாயம் XVI.

நடுவர்கள் (மாஜிஸ்ட்ரேட்) முன்பு நடவடிக்கைகளைத் தொடங்குதல்.

204. நீதிமுறைக் கட்டளை பிறப்பித்தல்.

205. எதிரி நேர்முகமாக வருவதை நடுவர் தவிர்க்கலாம் என்பது.

206. சில்லறை வழக்குகளில் தனிப்பட்ட ஆஜர் கட்டளை.

207. காவலறிக்கை மற்றும் வேறு பத்திரங்கள் ஆங்கிலத்தின் நகலில் எதிரிக்கு வழங்குதல்.

208. செஷன்ஸ் நீதிமன்றத்தால் விசாரணை செய்யத்தக்க வேறு வழக்குகளில் வாக்குமூலங்கள் மற்றும் பத்திரங்களின் நகல்களை வழங்குதல்.

209. குற்றமானது செஷன்ஸ் நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யதக்கதாயிருக்கும்போது, வழக்கை அந்த நீதிமன்றத் திடம் மேல் விசாரணைக்கு அனுப்புதல்.

210. ஒரே குற்றத்தைப் பொறுத்து முறையிட்டு வழக்கு ஒன்றும் காவல் துறைப் புலனாய்வும் இருக்கும்போது, பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை.

பிரிவுகள்—

அத்தியாயம் XVII.

குற்றச்சாட்டு.

அ. குற்றச்சாட்டுகளின் படிவம்.

211. குற்றச்சாட்டின் உள்ளடக்கம்.

212. காலம், இடம் மற்றும் ஆளைப் பற்றிய விவரங்கள்.

213. குற்றம் எந்த முறையில் செய்யப்பட்டதென்பதை எப்போது உரைத்தல் வேண்டும்.

214. குற்றச்சாட்டிலுள்ள சொற்களை எந்தச் சட்டத்தின்படி குற்றம் கண்டிப்பதற்குரியதோ அந்தச் சட்டத்தின் பொருளில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்பது.

215. பிழைகளின் விளைவு.

216. நீதிமன்றம் குற்றச்சாட்டில் மாறுதல் செய்யலாம்.

217. குற்றச்சாட்டில் மாற்றம் செய்யப்படும்போது சாட்சிகளை மீண்டும் கூப்பிடுதல்.

218. தனிப்பட்ட குற்றங்களுக்குத் தனித்தனியான குற்றச்சாட்டுகள்.

219. ஒரே ஆண்டிற்குள் செய்யப்பட்ட ஒரே இனத்தைச்சேர்ந்த மூன்று குற்றங்களைக் குற்றச்சாட்டில் ஒன்றுசேர்க்கலாம் என்பது.

220. ஒன்றுக்கு மேற்பட்ட குற்றங்களுக்கான விசாரணை.

221. எந்தக் குற்றம் செய்யப்பட்டிருக்கிறது என்பது பற்றிச் சந்தேகமாக இருக்குமிடத்து.

222. சாட்டப்பட்ட குற்றத்தில் நிரூபிக்கப்பட்ட குற்றம் உள்ளடங்கியிருக்கும்போது.

223. யார் எவர் சேர்ந்தாணையாகக் குற்றஞ்சாட்டப்படலாம் என்பது.

224. பல்வேறு குற்றச்சாட்டுகளில் ஒரு குற்றச்சாட்டுக்காகத் தண்டிக்கப்படும்போது, எஞ்சியுள்ள குற்றச்சாட்டுகளைத் திரும்பப் பெறுதல்.

அத்தியாயம் XVIII.

செஷன்ஸ் நீதிமன்றத்தின்முன் விசாரணை.

225. விசாரணை, அரசு குற்றத்துறை வழக்குரைஞரால் நடத்தப்பட வேண்டுமென்பது.

226. வாதி தரப்பு வழக்குரை தொடங்கல்.

227. விடுவித்தல்.

228. குற்றச்சாட்டை வகுத்தல்.

பிரிவுகள்—

229. குற்றம் செய்ததாக ஒப்புக்கொள்வதல் பேரில் தண்டிக்கப்படுதல்.
230. வாதி தரப்பு சாட்சியத்திற்கான தேதி.
231. வாதி தரப்புக்கான சாட்சியம்.
232. விடுதலை.
233. எதிர்வாதஞ் செய்யத் தவறப்படுதல்.
234. வாதங்கள்.
235. விடுதலைத் தீர்ப்பு அல்லது தண்டனைத் தீர்ப்பு.
236. முந்திய தண்டனை பற்றி.
237. 199 (2) ஆவது பிரிவின்படி தொடரப்பட்ட வழக்குகளில் நடை முறை என்ன என்பது.

அத்தியாயம் XIX.

பிடிகட்டளை வழக்குகளை நடுவர்கள் விசாரணை செய்தல்.

அ. காவலறிக்கையின் பேரில் தொடரப்பட்ட வழக்குகள்.

238. 207 ஆவது பிரிவுக்கு இணங்கல்.
239. எதிரி எப்போது விடுவிக்கப்பட வேண்டும் என்பது.
240. குற்றச்சாட்டை வாசித்தல்.
241. குற்றம் செய்ததாக ஒப்புக்கொண்டதன் பேரில் தண்டித்தல்.
242 வாதி தரப்புக்கான சாட்சியம்.
243. எதிர் தரப்புக்கான சாட்சியம்.

ஆ. காவலறிக்கையின் பேரில்லாமல் வேறுவிதமாகத் தொடரப்பட்ட வழக்குகள்.

244. வாதி தரப்புக்கான சாட்சியம்.
245. எதிரி எப்போது விடுவிக்கப்படவேண்டும் என்பது.
246. எதிரி விடுவிக்கப்படாதவிடத்து நடைமுறை என்ன என்பது.
247. எதிர் தரப்புக்கான சாட்சியம்.
248. விடுதலை அல்லது தண்டனை.
249. முறையிடுவோர் வராமை.
250. நியாயமான காரணமின்றி, குற்றஞ் சுமத்தியதற்காக நஷ்ட ஈடு.

அத்தியாயம் XX.

ஆஜர் கட்டளை வழக்குகளை நடுவர்கள் விசாரணை செய்தல்.

251. குற்றஞ் சுமத்தப்படுவதன் சாரத்தை உரைத்தல்.
252. குற்றம் செய்ததாக ஒப்புக்கொள்வதன் பேரில் தண்டிக்கப்படுதல்.

பிரிவுகள்—

253. சில்லறை வழக்குகளில் எதிரி வராதபோது ஒப்புதல் உரையின் பேரில் தண்டித்தல்.

254. தண்டிக்கப்படாதபோது நடைமுறை என்ன என்பது.

255. விடுதலை அல்லது தண்டனைத் தீர்ப்பு.

256. முறையிடுபவர் வாமை அல்லது அவரது மரணம்.

257. முறையீட்டைத் திரும்பப் பெறுதல்.

258. குறிப்பிட்ட வழக்குகளில் நடவடிக்கைகளை நிறுத்துவதற்கான அதிகாரம்.

259. ஆஜர் கட்டளை வழக்குகளைப் பிடிகட்டளை வழக்குகளாக மாற்ற நீதிமன்றத்துக்குள்ள அதிகாரம்.

அத்தியாயம் XXI.

சுருக்கு விசாரணைகள்.

260. சுருக்கு விசாரணை செய்வதற்கான அதிகாரம்.

261. இரண்டாவது வகுப்பு நடுவர் சுருக்கு விசாரணை செய்தல்.

262. சுருக்கு விசாரணைகளுக்கான நடைமுறை.

263. சுருக்கு விசாரணைகளில் பதிவு.

264. சுருக்கு விசாரணை செய்யப்பட்ட வழக்குகளில் தீர்ப்பு.

265. பதிவுமொழியும் தீர்ப்புமொழியும்.

அத்தியாயம் XXII.

சிறைச்சாலைகளில் சிறை வைக்கப்பட்டவர்கள் அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்களை ஆஜர்படுத்துதல்.

266. இலக்கணங்கள்.

267. கைதிகள் ஆஜராவதைக் கோரும் அதிகாரம்.

268. சிலர்மீது 267 ஆவது பிரிவு இயங்காமல் இருக்கச் செய்வதற்கு மாநில அரசுக்குள்ள அதிகாரம்.

269. சிறைச்சாலைப் பொறுப்பு அலுவலர் சில எதிர்பாரா நிகழ்ச்சிகளின்போது கட்டளையை நிறைவேற்றுமளிருத்தல்.

270. கைதிகள் காவலுடன் நீதிமன்றத்திற்குக் கொண்டு வரப்படுதல்.

271. சிறையில் சாட்சியை விசாரணை செய்வதற்காக ஆணை பிறப்பிக்கும் அதிகாரம்.

பிரிவுகள்—

அத்தியாயம் XXIII.

பரிசீலனைகளிலும் விசாரணைகளிலும் சாட்சியம்.

அ. சாட்சியத்தை எடுப்பதற்கும் பதிவு செய்வதற்குமான முறை.

272. நீதிமன்ற மொழி.
273. சாட்சியம் எதிரியின் முன்னிலையில் எடுக்கப்பட வேண்டும் என்பது.
274. ஆஜர் கட்டளை வழக்குகளிலும் பரிசீலனைகளிலும் பதிவு.
275. பிடிகட்டளை வழக்குகளில் பதிவு.
276. செஷன்ஸ் நீதிமன்றத்தின் முன் நடக்கும் விசாரணையில் பதிவு.
277. சாட்சியத்தைப் பதிவு செய்வதற்கான மொழி.
278. அத்தகைய சாட்சியம் எடுக்கப்பட்டு முடிவடைந்ததும் அதைப் பொறுத்த நடைமுறை.
279. எதிரிக்கு அல்லது அவரது வாதுரைஞருக்கு மொழிபெயர்த்துச் சொல்லுதல்.
280. சாட்சியின் நடை உடை பாவனை பொறுத்த மேல்முறை.
281. எதிரியை விசாரணை செய்வதைப் பதிவு செய்தல்.
282. மொழிபெயர்ப்பாளர் உண்மையாக மொழிபெயர்க்கக் கட்டுப்பட்டவராதல்.
283. உயர் நீதிமன்றத்தில் பதிவு.

ஆ. சாட்சிகளை விசாரிப்பதற்கான ஆணைகள்.

284. சாட்சி ஆஜராவதை எப்போது தவிர்த்து ஆணை பிறப்பிக்கப் படலாம் என்பது.
285. எவருக்கு ஆணை பிறப்பிக்கப்பட வேண்டும் என்பது.
286. ஆணைகளை நிறைவேற்றுதல்.
287. தரப்பினர்கள், சாட்சிகளை விசாரிக்கலாம் என்பது.
288. ஆணையைத் திருப்பியனுப்புதல்.
289. நடவடிக்கையை ஒத்திவைத்தல்.
290. அயல்நாட்டு ஆணைகளை நிறைவேற்றுதல்.
291. மருத்துவ சாட்சிகளின் வாக்குமூலம்.
292. நாணயம் அச்சடிக்குஞ்சாலை அலுவலர்களின் சாட்சியம்.
293. குறிப்பிட்ட அரசாங்க அறிவியல் வல்லுநர்களின் அறிக்கைகள்.
294. சில பத்திரங்களை முறையாக நிரூபிக்கத் தேவையில்லை என்பது.
295. பொது ஊழியர்களின் நடத்தையை நிரூபிக்கப் பிரமாணப் பத்திரம்.

பிரிவுகள்—

296. மூறைக்காகக் கொடுக்கவேண்டிய சாட்சியத்தைப் பிரமாணப் பத்திரத்தின்பேரில் கொடுத்தல்.

297. பிரமாணப் பத்திரங்கள், எந்த அதிகாரிகள் முன்னர் பிரமாணஞ் செய்யப்பட வேண்டுமென்பது.

298. முந்திய தண்டனை அல்லது விடுதலையை எவ்வாறு நிரூபிப்பது என்பது.

299. எதிரி இல்லாதபோது சாட்சியத்தின் பதிவு.

அத்தியாயம் XXIV.

பரிசிலனைகள் மற்றும் விசாரணைகள் பற்றிய பொது வகைமுறைகள்.

300. ஒரு முறை தண்டிக்கப்பட்டவர் அல்லது விடுதலை செய்யப்பட்டவர் அதே குற்றத்திற்காக மீண்டும் விசாரணை செய்யப்படுதல் ஆகாது.

301. அரசு குற்றத்துறை வழக்குரைஞர்கள் ஆஜராதல்.

302. குற்ற வழக்கை நடத்துவதற்கு அனுமதி.

303. எவர்மீது நடவடிக்கைகள் தொடரப்பட்டுள்ளனவோ அவர் எதிர்வாதஞ்செய்வதற்கு உள்ள உரிமை.

304. சில வழக்குகளில் அரசாங்கச் செலவில் எதிரிக்குச் சட்ட உதவி.

305. கூட்டு நிறுவனமோ பதிவு செய்த சங்கமோ எதிரியாக இருக்கும் போது நடைமுறை என்ன என்பது.

306. கூட்டுக் குற்றவாளிக்கு மன்னிப்பு அளித்தல்.

307. மன்னிப்பு அளிப்பதற்காக உத்தரவிடும் அதிகாரம்.

308. மன்னிப்புக்கான நிபந்தனைகளை நிறைவேற்றுதவரை விசாரணை செய்தல்.

309. நடவடிக்கைகளைத் தள்ளிவைப்பதற்கு அல்லது ஒத்திவைப்பதற்கான அதிகாரம்.

310. தல விசாரணை.

311. முக்கியமான சாட்சிக்கு ஆஜர் கட்டளை பிறப்பிக்க அல்லது ஆஜராகியுள்ளவரை விசாரிப்பதற்கான அதிகாரம்.

312. முறையிடுபவர்கள், சாட்சிகள் ஆகியோரின் செலவுகள்.

313. எதிரியை விசாரிப்பதற்கான அதிகாரம்.

314. வாய்மொழி வாதங்களும், வாதங்களின் குறிப்பும்.

315. எதிரி சாட்சி சொல்வதற்குத் தகுதியுடையவர் என்பது.

316. தெரிந்ததைச் சொல்லுமாறு தூண்டுவதற்குச் செல்வாக்கு எதையும் பயன்படுத்தக்கூடாது.

317. குறிப்பிட்ட வழக்குகளில் எதிரி ஆஜராகாதபோது பரிசிலனையும் விசாரணையும் நடத்துவதற்கான வகைமுறை.

பிரிவுகள் —

318. எதிரி நடவடிக்கைகளைப் புரிந்துகொள்ளாதவிடத்து நடைமுறை என்ன என்பது.

319. குற்றவாளிகளாகத் தோன்றுகிற வேறு ஆட்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம்.

320. குற்றங்களைச் சட்டப்படி சமரசமாகத் தீர்த்துக்கொள்ளுதல்.

321. தொடர்ந்த குற்ற வழக்கைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுதல்.

322. நடுவர் மூடிவெடுக்கக்கூடாத வழக்குகளில் நடைமுறை.

323. பரிசிலனை அல்லது விசாரணை துவங்கியதற்குப் பின்பு, வழக்கு மேல்விசாரணைக்கனுப்பப்படவேண்டும் என்ற முடிவுக்கு நடுவர் வரும்போது நடைமுறை.

324. நாணயம் அடித்தல், முத்திரைச் சட்டம் அல்லது சொத்து சம்பந்தமாகச் செய்யப்பட்ட குற்றங்களுக்காத் தண்டிக்கப்பட்டவர்களை விசாரணை செய்தல்.

325. போதுமான அளவு கடுமையான தண்டனையை நடுவர் பிறப்பிக்க முடியாதபோது நடைமுறை.

326. ஒரு பகுதி ஒரு நடுவராலும் மற்றொரு பகுதி மற்றொரு நடுவராலும் பதிவு செய்யப்பட்ட சாட்சியத்தின் பேரில் தண்டித்தல் அல்லது மேல்விசாரணைக்கனுப்புதல்.

327. நீதிமன்றம் திறந்த மன்றமாக இருத்தல்.

அத்தியாயம் XXV.

புத்தி சுவாதீனம் இல்லாத எதிரிகள் பற்றிய வகைமுறைகள்.

328. எதிரி பித்தராக இருக்கும் சந்தர்ப்பத்தில் நடைமுறை என்ன என்பது.

329. நீதிமன்றத்தின் முன் விசாரணை செய்யப்படுபவர் புத்தி சுவாதீன மற்றவராயிருக்கும் சந்தர்ப்பத்தில் நடைமுறை என்ன என்பது.

330. புலனுய்வு அல்லது விசாரணை நடந்துகொண்டிருக்கும்போது பித்தரை விடுவித்தல்.

331. பரிசிலனை அல்லது விசாரணை மீண்டும் தொடர்தல்.

332. நடுவர் அல்லது நீதிமன்றத்தின் முன் எதிரி ஆஜராகும்போது நடைமுறை.

333. எதிரி புத்தி சுவாதீனமுடையவராயிருந்திருப்பதாகத் தோன்றும் போது.

334. புத்தி சுவாதீனமின்மை என்னும் காரணத்தின்பேரில் விடுதலைத் தீர்ப்பு.

335. அத்தகைய காரணத்தின்பேரில் விடுதலை செய்யப்பட்டவர் பத்திரமான காவலில் வைக்கப்படுதல்.

பிரிவுகள்—

336. (கடமைகளை) ஆற்றிவர, பொறுப்பு அலுவலருக்கு அதிகாரமளிப்பதற்கு, மாநில அரசுக்குள்ள அதிகாரம்.

337. பித்தராயுள்ள கைதி தம் எதிர்வாதத்தைச் செய்யும் திறனுடையவரென்று அறிக்கை செய்யப்படும்போது நடைமுறை என்ன என்பது.

338. பாதுகாவலில் வைக்கப்பட்டுள்ள பித்தர் விடுவிக்கப்படத்தக்கவர் என்று விளம்பப்படுமிடத்து நடைமுறை என்ன என்பது.

339. பித்தரை உறவினர் அல்லது நண்பரின் கவனிப்பில் ஒப்படைத்தல்.

அத்தியாயம் XXVI.

நீதி நிர்வாகத்தைப் பாதிக்கும் குற்றங்கள் பற்றிய வகைமுறைகள்.

340. 195 ஆவது பிரிவில் சொல்லப்பட்ட சந்தர்ப்பங்களில் நடைமுறை என்ன என்பது.

341. மேல்முறையீடு.

342. செலவுத் தொகைக்குக் கட்டளையிடுவதற்கான அதிகாரம்.

343. விசாரணைக்கெடுத்துக்கொள்கின்ற நடுவர் மேற்கொள்ள வேண்டிய நடைமுறை.

344. பொய்ச்சாட்சி தந்ததற்கான விசாரணைக்கான சுருக்கு நடைமுறை.

345. அவமதிப்பு வழக்குகள் சிலவற்றில் நடைமுறை என்ன என்பது.

346. வழக்கை, 345 ஆவது பிரிவின்படி நடத்தக்கூடாது என்று நீதி மன்றம் எண்ணுமிடத்து நடைமுறை.

347. பதிவாளர் அல்லது துணைப் பதிவாளர் எப்போது உரிமை வழக்கு நீதிமன்றமாகக் கொள்ளப்படவேண்டும் என்பது.

348. மன்னிப்புக் கோரலின் பேரில் குற்றவாளியை விடுவித்தல்.

349. பதில் சொல்லவோ பத்திரத்தைத் தாக்கல் செய்யவோ மறுக்கின்ற வரைச் சிறையிலடைத்தல் அல்லது மேல்விசாரணைக்கனுப்புதல்.

350. ஆஜர் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து சாட்சி ஒருவர் வராமைக்காகத் தண்டிப்பதற்கான சுருக்கு நடைமுறை.

351. 344, 345, 349 அல்லது 350 ஆவது பிரிவுகளின்படி அளிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புகளிலிருந்து மேல்முறையீடுகள்.

352. சில நீதிபதிகளும், நடுவர்களும் சில குற்றங்கள் தங்கள் முன் செய்யப்படும்போது அவற்றை விசாரணை செய்தல் கூடாது.

அத்தியாயம் XXVII.

353. தீர்ப்பு.

354. தீர்ப்பின் மொழியும் உள்ளடக்கமும்.

355. பெருநகர் நடுவரின் தீர்ப்பு.

356. முந்தியே தண்டிக்கப்பட்ட குற்றவாளியின் முகவரியை அறிவிப்பதற்கான கட்டளை.

பிரிவுகள்—

357. நஷ்ட ஈடு செலுத்துவதற்கான கட்டளை.

358. ஆதாரமின்றிக் கைது செய்யப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு.

359. கைது செய்தற்குரியதல்லாத வழக்குகளில் செலவுத் தொகைகளைச் செலுத்துவதற்குக் கட்டளையிடுதல்.

360. நன்னடத்தை கண்காணிப்பின்பேரிலோ கண்டிந்துவிடலுக்குப் பின்போ விடுவிப்புக்குக் கட்டளையிடுதல்.

361. குறிப்பிட்ட வழக்குகளில் சிறப்புக் காரணங்கள் பதிவு செய்யப்படுதல்.

362. நீதிமன்றம் தீர்ப்பை மாற்றுதல் கூடாது என்பது.

363. தீர்ப்பின் நகல் எதிரிக்கும் மற்றவர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்பது.

364. தீர்ப்பு எப்போது மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்பது.

365. செஷன்ஸ் நீதிமன்றம் மூடிவை மற்றும் தண்டனையின் நகலொன்றை மாவட்ட நடுவருக்கு அனுப்புதல்.

அத்தியாயம் XXVIII.

மரண தண்டனைகளை உறுதிப்படுத்துவதற்காகப் பணித்தனுப்புதல்.

366. உறுதிப்படுத்துவதற்காக மரண தண்டனை செஷன்ஸ் நீதிமன்றத்தால் பணித்தனுப்பப்படுதல்.

367. மேற்கொண்டு பரிசீலனை செய்யப்படுவதற்கு அல்லது மேற்கொண்டு சாட்சியம் எடுக்கப்படுவதற்கு உத்தரவிடும் அதிகாரம்.

368. தண்டனையை உறுதிப்படுத்த அல்லது தண்டனைத் தீர்ப்பை ரத்து செய்ய உயர் நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்.

369. உறுதிப்படுத்துகையோ புதிய தண்டனையோ இரண்டு நீதிபதிகளால் கையொப்பமிடப்பட வேண்டும் என்பது.

370. கருத்து வேறுபாடு ஏற்படும் சந்தர்ப்பத்தில் நடைமுறை என்ன என்பது.

371. உறுதிப்படுத்துவதற்காக உயர் நீதிமன்றத்திற்குப் பணித்தனுப்பப் பட்ட வழக்குகளில் நடைமுறை என்ன என்பது.

அத்தியாயம் XXIX.

மேல்முறையீடுகள்.

372. வேறுவிதமாக வகை செய்யப்பட்டிருந்தாலன்றி மேல்முறையீடு எதுவும் செய்தல் ஆகாது.

373. ஜாமீன் கோருகின்ற அல்லது அமைதி பேணுவதற்காக அல்லது நன்னடத்தைக்காகத் தரப்பட்ட ஜாமீன்தாரை ஏற்க மறுக்கின்ற அல்லது நிராகரிக்கின்ற கட்டளைகளிலிருந்து மேல் முறையீடு.

பிரிவுகள்—

374. தண்டனைத் தீர்ப்புகளிலிருந்து மேல்முறையீடுகள்.

375. குறிப்பிட்ட வழக்குகளில் எதிரி குற்றஞ் செய்ததாக ஒப்புக் கொள்ளும்போது மேல்முறையீடு எதுவும் செய்தல் ஆகாது.

376. சில்லறை வழக்குகளில் மேல்முறையீடு இடையாது என்பது.

377. தண்டனைக்கெதிராக மாதிரி அரசு முறையீடு.

378. விடுதலையின்பேரில் மேல்முறையீடு.

379. உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பின் பேரில் சில வழக்குகளில் மேல்முறையீடு.

380. சில வழக்குகளில் மேல்முறையீட்டுக்குச் சிறப்பு உரிமை.

381. செஷன்ஸ் நீதிமன்றத்திடம் செய்யப்படும் மேல்முறையீடு எவ்வாறு கேட்கப்பட வேண்டும் என்பது.

382. மேல்முறையீட்டு மனு.

383. மேல்முறையீட்டாளர் சிறையிலிருக்கும்போது நடைமுறை என்ன என்பது.

384. மேல்முறையீட்டை உடனடியாகத் தள்ளுபடி செய்தல்.

385. உடனடியாகத் தள்ளுபடி செய்யப்படாத மேல்முறையீடுகளைக் கேட்பதற்கான நடைமுறை.

386. மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் அதிகாரங்கள்.

387. கீழ்நிலை மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்புகள்.

388. மேல்முறையீட்டின்பேரில் உயர் நீதிமன்றம் பிறப்பிக்கும் கட்டளை கீழ் நீதிமன்றத்திற்கு உறுதிச் சான்றளித்து அனுப்பப்படுதல்.

389. மேல்முறையீடு நடப்பிலிருக்கையில் தண்டனையை நிறுத்திவைத்தல்; ஜாமீன்பேரில் மேல்முறையீட்டாளரை விடுவித்தல்.

390. விடுதலையிலிருந்து செய்யப்படும் மேல்முறையீட்டில் எதிரியைக் கைது செய்தல்.

391. மேல்முறையீட்டு நீதிமன்றம் மேற்கொண்டு சாட்சியத்தை எடுக்கலாம் அல்லது அதை எடுக்கும்படி உத்தரவிடலாம்.

392. கருத்து வேறுபடும் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளின் எண்ணிக்கை சரிசமமாயிருக்குமிடத்து நடைமுறை.

393. மேல்முறையீட்டின் பேரில் பிறப்பிக்கப்படும் தீர்ப்பு மற்றும் கட்டளைகளின் முடிபான தன்மை.

394. மேல்முறையீடுகள் அற்றுப் போதல்.

அத்தியாயம் XXX.

மேல் முடிவுக்கு அனுப்புதலும் மேலாய்வும்.

395. உயர் நீதிமன்றத்தின் மேல்முடிவுக்கு அனுப்பிவைத்தல்.

396. உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தின்படி வழக்கை முடிவு செய்தல்.

397. மேலாய்வு அதிகாரங்களைச் செலுத்துவதற்காகப் பதிவுக்கட்டுகளை அனுப்பக் கோருதல்.

பிரிவுகள்—
398. பரிசிலனை செய்யக் கட்டளையிடுவதற்குள்ள அதிகாரம்.
399. செஷன்ஸ் நீதிபதியின் மேலாய்வு அதிகாரங்கள்.
400. கூட்டு செஷன்ஸ் நீதிபதியின் அதிகாரம்.
401. உயர் நீதிமன்றத்தின் மேலாய்வு அதிகாரங்கள்.
402. மேலாய்வு வழக்குகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்கோ மாற்றுவதற்கோ உயர் நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்.
403. தரப்பினர்களைக் கேட்பது நீதிமன்றத்தின் யுக்தத்தைப் பொறுத்தது என்பது.
404. தம் நிர்மானத்திற்கான ஆதாரங்களைக் குறித்துப் பெருநகர் நடுவர் தரும் உரையை உயர் நீதிமன்றத்தால் பரிசிலனை செய்தல்.
405. உயர் நீதிமன்றத்தின் கட்டளை, கீழ் நீதிமன்றத்திற்கு உறுதிச் சான்றளித்து அனுப்பப்படுதல்.

அத்தியாயம் XXXI.

குற்ற வழக்குகளை மாற்றுதல்.

406. வழக்குகளையும் மேல்முறையீடுகளையும் மாற்றுவதற்கு உச்ச நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்.
407. வழக்குகளையும் மேல்முறையீடுகளையும் மாற்றுவதற்கு உயர் நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்.
408. வழக்குகளையும் மேல்முறையீடுகளையும் மாற்றுவதற்கு செஷன்ஸ் நீதிபதிக்குள்ள அதிகாரம்.
409. வழக்குகள் மற்றும் மேல்முறையீடுகளை செஷன்ஸ் நீதிபதிகள் திரும்பப் பெற்றுக்கொள்ளுதல்.
410. நீதித்துறை நடுவர்கள் வழக்குகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுதல்.
411. நிருவாகத் துறை நடுவர்கள் வழக்குகளை மாற்றி வைத்தல் அல்லது திரும்பப் பெற்றுக்கொள்ளுதல்.
412. காரணங்கள் பதிவு செய்யப்படுதல்.

அத்தியாயம் XXXII.

தண்டனைகளை நிறைவேற்றுதல், தற்காலிகமாக நிறுத்திவைத்தல், குறைத்தல், மாற்றுதல்.

அ. மரண தண்டனைகள்.

413. பிரிவு 368 இன்கீழ் வழங்கப்பட்ட கட்டளையை நிறைவேற்றுதல்.
414. உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட மரண தண்டனையை நிறைவேற்றுதல்.
415. உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்யப்பட்ட வழக்கில் மரண தண்டனை நிறைவேற்றுதலை ஒத்திப்போடுதல்.
416. கருவுற்றிருக்கின்ற பெண்ணின் மரண தண்டனையை ஒத்திப் போடுதல்.

பிரிவுகள்

ஆ. சிறைத் தண்டனை.

417. சிறை வைக்கும் இடத்தை நிர்ணயிக்கும் அதிகாரம்.

418. சிறைத் தண்டனையை நிறைவேற்றுதல்.

419. நிறைவேற்றுவதற்காகக் கட்டளையைக் குறித்தனுப்புதல்.

420. கட்டளையை எவரிடம் சேர்ப்பிக்கவேண்டும்.

இ. அபராதம் வசூலித்தல்.

421. அபராதம் வசூலிக்கக் கட்டளை.

422. அந்தகைய கட்டளையை நிறைவேற்றுதல்.

423. இந்தச் சட்டம் இயங்காத எந்த மண்டலத்தின் ஒரு நீதிமன்றத் தாலும் அபராதத்தை வசூலிப்பதற்காகப் பிறப்பிக்கப்படும் ஒரு கட்டளை.

424. சிறைத் தண்டனையை நிறைவேற்றுவதை நிறுத்திவைத்தல்.

ஈ. நிறைவேற்றுதல் பற்றிய பொது வகைமுறைகள்.

425. கட்டளையைப் பிறப்பிக்கக்கூடியவர் யார் என்பது.

426. தப்பியோடிய கைதியின் மீதுள்ள தண்டனை எப்போது அமலுக்கு வரும் என்பது.

427. ஏற்கனவே மற்றொரு குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்ட குற்றவாளி மீது தண்டனை.

428. குற்றவாளி காவலில் இருந்த காலத்தைச் சிறைத் தண்டனைக் காலத்திலிருந்து கழிக்க வேண்டும் என்பது.

429. காப்பு.

430. தண்டனையை நிறைவேற்றிய பிறகு கட்டளையைத் திருப்பி யனுப்புதல்.

431. செலுத்தும்படி கட்டளையிடப்பட்ட பணம் அபராதம் போன்று வசூலிக்கப்படக்கூடியது என்பது.

உ. தண்டனைகளை நிறுத்திவைத்தல், தள்ளுபடி, மாற்றுதல்.

432. தண்டனைகளை நிறுத்தி வைக்கவோ தள்ளுபடி செய்யவோ உள்ள அதிகாரம்.

433. தண்டனையை மாற்றும் அதிகாரம்.

434. மரண தண்டனைகளில் மத்திய அரசின் ஒருங்கமை அதிகாரம்.

435. ஒரு சில வழக்குகளில் மாநில அரசு மத்திய அரசுடன் ஆலோசனை செய்த பின்னர் இசயல்படுதல்.

பிரிவுகள்—

அத்தியாயம் XXXIII.

ஜாமீன்கள் மற்றும் பத்திரங்கள் பற்றிய வகைமுறைகள்.

436. எந்த வழக்குகளில் ஜாமீன் வாங்கப்பட வேண்டும் என்பது.

437. ஜாமீனில் விடாக்குற்றம் சம்பந்தமாக எப்போது ஜாமீன் எடுப்பது என்பது.

438. கைது செய்யப்படுவதை அச்சத்தோடு எதிர்நோக்குகிறவரை ஜாமீனில் விடுவதற்கு உத்தரவிடுதல்.

439. ஜாமீன் குறித்து உயர் நீதிமன்றம் அல்லது செஷன்ஸ் நீதிமன்றத்திற்குள்ள சிறப்பு அதிகாரங்கள்.

440. ஜாமீன் தொகையும் அதைக் குறைத்தலும்.

441. எதிரி, ஜாமீன்தார்கள் ஆகியோரின் பத்திரம்.

442. காவலிலிருந்து விட்டுவிடுதல்.

443. முதலாவதாக வாங்கப்பட்டது போதாமையாக இருக்கும்போது, போதுமான ஜாமீன் கொடுக்கக் கட்டளையிடுவதற்குள்ள அதிகாரம்.

444. ஜாமீன்தார்களை விட்டுவிடுதல்.

445. உத்தரவாதத்திற்குப் பதிலாக வைப்பீடு செலுத்துதல்.

446. பத்திரமானது தண்ட இழப்பாகியிருக்கும்போது நடைமுறை.

447. ஜாமீன்தாரின் நொடிப்புநிலை அல்லது மரணத்தின்போது அல்லது பத்திரமொன்று தண்ட இழப்பாகும்போது நடைமுறை.

448. பத்திரம் வயது வராதவரிடமிருந்து கோரப்படுதல்.

449. 446 ஆவது பிரிவின்படியுள்ள கட்டளைகளிலிருந்து மேல்முறையீடு.

450. சில ஜாமீன்களின்பேரில் கொடுபடவேண்டிய தொகையை வசூலிப்பதற்கு உத்தரவிடுவதற்கான அதிகாரம்.

அத்தியாயம் XXXIV.

சொத்துக்கு வகை செய்தல்.

451. சில வழக்குகளில் விசாரணை நடப்பிலிருக்கையில் சொத்தின் பாதுகாப்புக்கும் அதற்கு வகை செய்வதற்குமாகக் கட்டளையிடுதல்.

452. விசாரணையின் முடிவில் சொத்துக்கு வகை செய்வதற்குக் கட்டளையிடுதல்.

453. கள்ளமில்லாமல் வாங்கியவருக்கு எதிரியிடம் காணப்படும் பணத்திலிருந்து கொடுத்தல்.

454. 452 ஆவது பிரிவு அல்லது 453 ஆவது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளுக்கெதிராக மேல் முறையீடு.

பிரிவுகள்—

455. எழுத்துவழி அவனுருன விஷயத்தையும் மற்ற விஷயத்தையும் அழித்துவிடுதல்.

456. அசையாப் பொருளின் அனுபோகத்தைத் திரும்ப ஒப்படைப்பதற்கான அதிகாரம்.

457. சொத்து கைப்பற்றப்படுவதன்பேரில் காவல் துறை மேற்கொள்ளும் நடைமுறை.

458. பாத்தியதாரர் ஆறு மாதங்களுக்குள் வாதவிடந்து நடைமுறை.

459. அழிந்துபோகக்கூடிய சொத்தை விற்பனை செய்வதற்குள்ள அதிகாரம்.

அத்தியாயம் XXXV.

முறைகேடான நடவடிக்கைகள்.

460. நடவடிக்கைகளை விழலாக்காத முறைகேடுகள்.

461. நடவடிக்கைகளை விழலாக்கும் முறைகேடுகள்.

462. தவருன இடத்தில் நடந்த நடவடிக்கைகள்.

463. 164 ஆவது பிரிவு அல்லது 281 ஆவது பிரிவின் வகைமுறைகளுக்கு இணங்காமை.

464. குற்றச்சாட்டை வனைய விட்டுவிடுதலால் அல்லது குற்றச்சாட்டு இல்லாமையால் அல்லது குற்றச்சாட்டிலுள்ள பிழையால் ஏற்படும் விளைவு.

465. முடிவு அல்லது தண்டனையானது பிழை, விடுதல் அல்லது முறை கேட்டின் காரணமாக எப்போது எதிர்மாறுக்கப்படலாம் என்பது.

466. குறைபாடு அல்லது பிழையானது ஐப்தியைச் சட்டவிரோதமாக்கல் ஆகாது.

அத்தியாயம் XXXVI.

சில குற்றங்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கான காலவரம்பு.

467. இலக்கணங்கள்.

468. காலாவதியான பின்பு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுவதற்குத் தடை.

469. காலவரையறையின் துவக்கம்.

470. சில வழக்குகளில் காலக்கழிவு செய்தல்.

471. நீதிமன்றம் மூடப்பட்டிருக்கிற தேதியைக் கழிவு செய்தல்.

472. தொடர்ந்து இருக்கும் குற்றம்.

473. சில சந்தர்ப்பங்களில் காலவரையறையை நீடித்தல்.

பிரிவுகள்—

அத்தியாயம் XXXVII.

பலவகைப்பட்டவை.

474. உயர் நீதிமன்றங்களின்முன் நடக்கும் விசாரணைகள்.

475. படை நீதி மன்றத்தால் விசாரணை செய்யப்படுவதற்கு உட்பட்டவர்களைப் படைத்தலைவர்களிடம் ஒப்படைத்தல்.

476. படிவங்கள்.

477. விதிகளைச் செய்வதற்கு உயர் நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்.

478. குறிப்பிட்ட தருணங்களில் நீதித்துறை மற்றும் நிருவாகத் துறை நடுவர்களுக்குக் குறித்தளிக்கப்பட்ட கடமைகளை மாற்றுவதற்குள்ள அதிகாரம்.

479. நீதிபதி அல்லது நடுவர் சொந்த அக்கறை கொண்டுள்ள வழக்கு.

480. தொழில் புரிகின்ற வாதுரைஞர் சில நீதிமன்றங்களில் நடுவராக அமர்தல் கூடாது.

481. விற்பனையில் சம்பந்தப்பட்டுள்ள பொது ஊழியர் சொத்தை வாங்குவதோ ஏலங்கேட்பதோ ஆகாது.

482. உயர் நீதிமன்றத்தின் உள்ளுறை அதிகாரங்களுக்குக் காப்பு.

483. நீதித்துறை நடுவர்களின் நீதிமன்றங்களைத் தொடர்ந்து கண்காணித்து வருவதற்கு உயர் நீதிமன்றத்திற்குள்ள கடமை.

484. ரத்து செய்தலும் காப்புகளும்.

முதல் இணைப்புப் பட்டியல்—குற்றப் பகுப்பு.
இரண்டாம் இணைப்புப் பட்டியல்—படிவங்கள்.

1973 ஆம் ஆண்டு
குற்ற விசாரணைமுறைச் சட்டம்

குற்ற விசாரணைமுறை பற்றிய சட்டத்தை ஒருங்கிணைத்துத் திருத்தியமைப்பதற்கான சட்டம்.

இந்தியக் குடியாசின் இருபத்து நான்காவது ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டம் இயற்றப்படுவதாகுக :—

அத்தியாயம் I.

முன்னுரையாக.

குறுந்தலைப்பு, அளாவுகை, தொடக்கம்

1. (1) இந்தச் சட்டம் 1973 ஆம் ஆண்டு குற்ற விசாரணைமுறைச் சட்டம் என்று வழங்கப்படும்.

(2) இது ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியா முழுவதும் அளாவி நிற்கும்.

எனினும், இந்தச் சட்டத்தின் VIII, X, XI ஆம் அத்தியாயங்களிலுள்ளவற்றைத் தவிர, இந்தச் சட்டத்தின் வகைமுறைகள்—

(அ) நாகாலாந்து மாநிலத்தின்மீதோ,

(ஆ) பழங்குடியினர் வாழும் பகுதிகள்மீதோ இயங்கா.

ஆனல் சம்பந்தப்பட்ட மாநில அரசு, அறிவிக்கை வாயிலாக, அதில் குறிப்பிடப்படும், குறையை நிறைவு செய்கிற, அல்லது இடைவிளைவாக எழுகிற, அல்லது பின்விளைவாக எழுகிற மாறுதல்களுடன், மேற்சொன்ன வகைமுறைகளை அல்லது அவற்றில் எதையேனும், நிலவரத்திற்கேற்ப, நாகாலாந்து மாநிலம் முழுவதுமோ அதன் பகுதியின்மீதோ, பழங்குடியினர் வாழும் பகுதிகள்மீதோ இயங்கச் செய்யலாம்.

விளக்கம்.—இந்தப் பிரிவில் "பழங்குடியினர் வாழும் பகுதிகள்" என்பது ஷில்லாங் நகராட்சியின் வட்டார எல்லைகளுக்குள் அடங்கிய மண்டலங்கள் நீங்கலாக,

அரசமைப்பின் ஆறுவது இணைப்புப் பட்டியலின் 20 ஆவது பத்தியில் குறிப்பிட்டவாறு 1972 ஜனவரி 21 ஆம் நாளை அடுத்து முந்திய காலத்தில் அஸ்ஸாமின் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் உள்ளடங்கியிருந்த மண்டலங்கள் என்று பொருள்படும்.

(3) இது 1974 ஏப்ரல் முதல் நாளன்று அமலுக்கு வருதல் ஆகும்.

இலக்கணங்கள்

2. சூழ்நிலை வேறுபொருள் குறித்தாலன்றி, இந்தச் சட்டத்தில்,—

(அ) "ஜாமீனில் விடுங்குற்றம்" என்பது முதலாவது இணைப்புப் பட்டியலில், ஜாமீனில் விடக்கூடியதாகக் காட்டப்பட்டுள்ள அல்லது அவ்வப்போது நடைமுறையிலிருக்கும் வேறு எந்தச் சட்டத்திலும் ஜாமீனில் விடுங்குற்றமாக ஆக்கப்பட்டுள்ள குற்றம் என்று பொருள்படும்; வேறு எந்தக் குற்றமும் "ஜாமீனில் விடாக் குற்றம்" எனப்படும்;

(ஆ) "குற்றச்சாட்டு".—ஒரு குற்றச்சாட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட தலைப்புகள் அடங்கியிருக்கும்போது, அத்தலைப்புகளில் எதனையும் அக்குற்றச்சாட்டு உள்ளடக்கும்;

(இ) "கைது செய்தற்குரிய குற்றம்" என்பதும் "கைது செய்தற்குரிய வழக்கு" என்பதும் காவல் அலுவலர் ஒருவர் முதலாவது இணைப்புப் பட்டியலின் படியோ அவ்வப்போது அமலிலுள்ள வேறெந்தச் சட்டத்தின்படியோ பிடிகட்டளையின்றிக் கைது செய்யலாம் என்பதாகவுள்ள குற்றம் என்றும் வழக்கு என்றும் முறையே பொருள்படும்;

(ஈ) "முறையீடு" என்பது தெரிந்த அல்லது தெரியாத ஒருவர் குற்றமொன்றைச் செய்திருக்கிறார் என்பதாக, இந்தச் சட்டத்தின்படி நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) ஒருவர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, அவரிடம் வாய்மொழியாகவோ எழுத்துமூலமாகவோ செய்து கொள்ளப்படும் கூற்று எதுவும் என்று பொருள்படும்; ஆனால் காவலறிக்கை அதில் அடங்காது.

விளக்கம்.—ஒரு வழக்கில் காவல் அலுவலர் ஓர் அறிக்கையைத் தாக்கல் செய்த பின்பு நடத்திய புலனாய்விலிருந்து கைது செய்தற்குரியதல்லாத ஒரு குற்றம்

செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருமிடத்து, அந்த அறிக்கையை ஒரு முறையீடாகக் கொள்ளுதல் வேண்டும்; மற்றும் அவ்வறிக்கையைத் தாக்கல் செய்கிற காவல் அலுவலர் முறையிடுபவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(உ) "உயர் நீதிமன்றம்" என்பது,—

(i) ஒரு மாநிலத்தைப் பொறுத்த மட்டில், அந்த மாநிலத்திற்கான உயர் நீதிமன்றம் என்றும்;

(ii) ஓர் ஒன்றியத்து மண்டலத்தைப் பொறுத்த மட்டில், ஒரு மாநில உயர் நீதிமன்றத்தின் அதிகார வரம்பு, சட்டத்தின் மூலம் அந்த மண்டலத்திற்கு அளாவும்படி செய்யப்பட்டிருந்தால், அந்த உயர் நீதிமன்றம் என்றும்;

(iii) வேறெந்த ஒன்றியத்து மண்டலத்தைப் பொறுத்தமட்டிலும், இந்தியாவின் உச்ச நீதிமன்றம் அல்லாத, அந்த மண்டலத்திற்கான குற்ற வழக்கு மேல் முறையீட்டுக்கான மிக உயர்ந்த நீதிமன்றம் என்றும் பொருள்படும்.

(ஊ) "இந்தியா" என்பது, இந்தச் சட்டம் அளாவி நிற்கும் மண்டலங்கள் என்று பொருள்படும்.

(எ) "பரிசீலனை".—இந்தச் சட்டத்தின்படி ஒரு நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) அல்லது நீதிமன்றம் நடத்தும் விசாரணை அல்லாத மற்ற ஒவ்வொரு பரிசீலனையும் "பரிசீலனை" என்று பொருள்படும்;

(ஏ) "புலனுய்வு".—சாட்சியம் திரட்டுவதற்காக இந்தச் சட்டத்தின்படி ஒரு காவல் அலுவலரோ இதன் பொருட்டு ஒரு நடுவரிடமிருந்து (மாஜிஸ்ட்ரேட்) அதிகாரம் பெற்றுள்ள, ஆனால் ஒரு நடுவரல்லாத வேறெவருமோ, நடத்தும் நடவடிக்கைகள் அனைத்தும் "புலனுய்வு" என்பதில் உள்ளடங்கும்;

(ஐ) "நீதி நடவடிக்கை".—எந்த நடவடிக்கை நடக்கின்றபோது சட்டப்படி சாட்சியமானது பிரமாணத்தின்பேரில் எடுக்கப்படுகிறதோ, அல்லது எடுக்கப்படக்கூடுமோ அது "நீதி நடவடிக்கை" என்பதில் உள்ளடங்கும்;

(ஒ) "வட்டார அதிகாரவரம்பு".—ஒரு நீதிமன்றம் அல்லது நடுவரைப் பொறுத்தமட்டில் "வட்டார அதிகார வரம்பு" என்பது எந்த வட்டாரப் பகுதிக்குள் அந்த நீதிமன்றம் அல்லது நடுவர், இந்தச் சட்டத்தின்படி தமக்குள்ள அதிகாரங்கள் அனைத்தையும் அல்லது எதையும் செலுத்தக்கூடுமோ அந்த வட்டாரப் பகுதி என்று பொருள்படும்;

(ஓ) "பெருநகர்ப் பகுதி" என்பது, 8 ஆவது பிரிவின்படி ஒரு பெருநகர்ப் பகுதியென விளம்பப் பட்டுள்ள, அல்லது விளம்பியதாகக் கொள்ளப்பட்டுள்ள பகுதி என்று பொருள்படும்;

(ஔ) "கைது செய்தற்குரியதல்லாத குற்றம்" என்பதும் "கைது செய்தற்குரியதல்லாத வழக்கு" என்பதும், காவல் அலுவலர் ஒருவருக்கு அதில் பிடிகட்டனையின்றிக் கைதுசெய்ய அதிகாரம் இல்லை என்பதாகவுள்ள குற்றம் என்றும் வழக்கு என்றும் முறையே பொருள்படும்;

(அஅ) "அறிவிக்கை" என்பது, அதிகாரபூர்வமான அரசிதழில் வெளியிடப்படும் ஓர் அறிவிக்கை என்று பொருள்படும்;

(அஆ) "குற்றம்" என்பது அவ்வப்போது அமலிலுள்ள சட்டத்தின்படி தண்டிப்பதற்குரிய எந்தச் செய்கையும் அல்லது செய்யாமையும் என்று பொருள்படும்; மற்றும் 1/1871 1871 ஆம் ஆண்டு கால்நடை அத்துமீறல் சட்டத்தின் 20 ஆவது பிரிவின்படி முறையீடு செய்துகொள்ளக்கூடிய எந்தச் செயலும் அதில் அடங்கும்;

(அஇ) "ஒரு காவல் நிலையப் பொறுப்பு அலுவலர்" என்பது, அக் காவல் நிலையத்தின் பொறுப்பை உடைய அலுவலர் காவல் நிலையத்தில் இல்லாதபோது, அல்லது நோயினாலோ வேறு காரணத்தாலோ தம் கடமைகளைச் செய்ய இயலாதபோது, அவ்வலுவலருக்கு அடுத்தபடியிலுள்ளவரும் காவலர்நிலைக்கு மேல்படியிலுள்ள வருமான அக் காவல் நிலையத்தில் உள்ள காவல் அலுவலரையோ, மாநில அரசு அவ்வாறு உத்தரவிட்டால், அங்குள்ள வேறெந்தக் காவல் அலுவலரையுமோ உள்ளடக்கும்;

(அஈ) "இடம்" என்பதில் வீடு, கட்டிடம், கூடாரம், வாகனம் மற்றும் கலம் ஆகியவை உள்ளடங்கும்;

(அஉ) "வாதுரைஞர்" (Pleader).—"வாதுரைஞர்" என்பது, நீதிமன்றம் ஒன்றில் நடக்கும் நடவடிக்கை எதனையும் குறித்துப் பயன்படுத்தும்போது, அம் மன்றத்தில் தொழில் புரிய, அவ்வப்போது அமலிலுள்ள சட்டத்தினால் அல்லது சட்டத்தின்படி அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒருவர் என்று பொருள்படும்; மற்றும் அத்தகைய நடவடிக்கையில் செயல்புரிய நீதிமன்றத்தின் அனுமதியுடன் அமர்த்தப் பட்டுள்ள எவரையும் அது உள்ளடக்கும்;

(அஊ) "காவலறிக்கை" என்பது, 173 ஆவது பிரிவின் (2) ஆவது உட்பிரிவின்படி நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) ஒருவருக்கு, காவல் அலுவலர் அனுப்பும் ஓர் அறிக்கை என்று பொருள்படும்;

(அஎ) "காவல் நிலையம்" என்பது மாநில அரசால் பொதுவாக அல்லது சிறப்பாக ஒரு காவல் நிலையமென விளம்பப்படும் சாவடி அல்லது இடம் எதுவும் என்று பொருள்படும்; மற்றும் மாநில அரசால் இதன் பொருட்டுக் குறிப்பிடப்படும் வட்டாரப் பகுதி எதுவும் அதில் உள்ளடங்கும்;

(அஏ) "விதிக்கப்பட்டது" என்பது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளால் விதிக்கப்பட்டது என்று பொருள்படும்;

(அஐ) "அரசு குற்றத் துறை வழக்குரைஞர்" (Public Prosecutor) என்பது 24 ஆவது பிரிவின்படி நியமனஞ்செய்யப்பட்ட எவரும் என்று பொருள்படும்; மற்றும் அரசு குற்றத்துறை வழக்குரைஞர் ஒருவரின் ஏவலின்படி செயற்படுகின்ற எவரையும் அது உள்ளடக்கும்;

(அஒ) "உட்கோட்டம்" என்பது ஒரு மாவட்டத்தின் உட்கோட்டம் என்று பொருள்படும்;

(அஓ) "ஆஜர் கட்டளை வழக்கு" என்பது பிடிகட்டளை வழக்கு அல்லாத ஒரு குற்றத்தைப் பொறுத்த வழக்கு என்று பொருள்படும்;

(அஒள) "பிடிகட்டனை வழக்கு" என்பது, மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை அல்லது இரண்டாண்டுக்கு மேற்பட்ட சிறைத் தண்டனைக்குரிய குற்றத்தைப் பொறுத்த ஒரு வழக்கு என்று பொருள்படும்;

45/1860 (ஆஅ) இதில் பயன்படுத்தப்படுபவையும் இலக்கணம் கூறப்படாதவையும், ஆனால் இந்திய தண்டனைச் சட்டத்தில் இலக்கணம் கூறப்பட்டுள்ளவையுமான சொற்களும் சொற்றொடர்களும், முறையே அந்தச் சட்டத்தில் அவற்றிற்கு அளிக்கப்பட்டுள்ள அர்த்தங்களைக் கொண்டிருக்கும்.

சுட்டப்படுவதை எப்படிப் பொருள் கொள்வது என்பது.

3. (1) இந்தச் சட்டத்தில்,—

(அ) நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) ஒருவரை, அடை மொழிச் சொற்கள் எவையுமின்றிச் சுட்டினால், சூழ்நிலை வேறு பொருள் குறித்தாலன்றி,—

(i) ஒரு பெருநகர்ப் பகுதிக்கு வெளியேயுள்ள ஒரு பகுதியைப் பொறுத்தமட்டில், நீதித்துறை நடுவரைச் சுட்டுவதாகவும்;

(ii) ஒரு பெருநகர்ப் பகுதியைப் பொறுத்தமட்டில், ஒரு பெருநகர் நடுவரைச் சுட்டுவதாகவும் பொருள்கொள்ள வேண்டும்;

(ஆ) இரண்டாவது வகுப்பு நடுவரைச் சுட்டினால், ஒரு பெருநகர்ப் பகுதிக்கு வெளியேயுள்ள ஒரு பகுதியைப் பொறுத்தமட்டில், நீதித்துறை இரண்டாவது வகுப்பு நடுவரைச் சுட்டுவதாகவும், ஒரு பெருநகர்ப் பகுதியைப் பொறுத்தமட்டில், ஒரு பெருநகர் நடுவரைச் சுட்டுவதாகவும் பொருள்கொள்ள வேண்டும்;

(இ) முதல் வகுப்பு நடுவரைச் சுட்டினால்,—

(i) ஒரு பெருநகர்ப் பகுதியைப் பொறுத்தமட்டில், அந்தப் பகுதியில் அதிகாரத்தைச் செலுத்தி வருகிற ஒரு பெருநகர் நடுவரைச் சுட்டுவதாகவும்,

(ii) வேறெந்தப் பகுதியைப் பொறுத்தமட்டிலும், அந்தப் பகுதியில் அதிகாரத்தைச் செலுத்தி வருகிற நீதித் துறை முதல் வகுப்பு நடுவரைச் சுட்டுவதாகவும் பொருள் கொள்ள வேண்டும்;

(ஈ) தலைமை நீதித் துறை நடுவரைச் சுட்டினால், ஒரு பெருநகர்ப் பகுதியைப் பொறுத்தமட்டில், அந்தப் பகுதியில் அதிகாரத்தைச் செலுத்தி வருகிற பெருநகர்த் தலைமை நடுவரைச் சுட்டுவதாகப் பொருள்கொள்ள வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தில், சூழ்நிலை வேறு பொருள் குறித்தாலன்றி, நீதித் துறை நடுவரின் நீதிமன்றத்தைச் சுட்டினால், ஒரு பெருநகர்ப் பகுதியைப் பொறுத்தமட்டில், அந்தப் பகுதிக்கான பெருநகர் நடுவரின் நீதிமன்றத்தைச் சுட்டுவதாகப் பொருள்கொள்ள வேண்டும்.

(3) சூழ்நிலை வேறு பொருள் குறித்தாலன்றி, இந்தச் சட்டம் தொடங்குவதற்கு முன்னர் இயற்றப்பட்ட எந்தச் சட்டத்திலும்,—

(அ) முதல் வகுப்பு நடுவரைச் (மாஜிஸ்ட்ரேட்) சுட்டினால், நீதித் துறை முதல் வகுப்பு நடுவரைச் சுட்டுவதாகப் பொருள் கொள்ள வேண்டும்.

(ஆ) இரண்டாவது வகுப்பு அல்லது மூன்றுவது வகுப்பு நடுவரைச் சுட்டினால், நீதித் துறை இரண்டாவது வகுப்பு நடுவரைச் சுட்டுவதாகப் பொருள்கொள்ள வேண்டும்;

(இ) மாகாண நடுவர் அல்லது மாகாணத் தலைமை நடுவரைச் சுட்டினால், முறையே பெருநகர் நடுவர் அல்லது பெருநகர் தலைமை நடுவரைச் சுட்டுவதாகப் பொருள் கொள்ள வேண்டும்;

(ஈ) ஒரு பெருநகர்ப் பகுதியில் உள்ளடங்கிய பகுதி எதையும் சுட்டினால், அத்தகைய பெருநகர்ப் பகுதியைச் சுட்டுவதாகவும், அந்தப் பகுதியைப் பொறுத்தமட்டில் முதல் வகுப்பு அல்லது இரண்டாவது வகுப்பு நடுவரைச் சுட்டினால், அந்தப் பகுதியில் அதிகாரத்தைச் செலுத்தி வருகிற பெருநகர் நடுவரைச் சுட்டுவதாகவும் பொருள் கொள்ள வேண்டும்.

(4) இந்தச் சட்டம் அல்லாத வேறெந்தச் சட்டத்தின் படியும் நடுவர் ஒருவர் ஆற்றிவரத்தக்க கடமைகள்—

(அ) சாட்சியத்தை ஆராய்தல் அல்லது தெளித்தெடுத்தல் அல்லது எவரையேனும் தண்டனைக்கு, தண்டத்திற்கு அல்லது புலனுய்வோ பரிசிலனையோ

விசாரணையோ நடந்துகொண்டிருக்கையில், காவல் சிறையில் இருப்பதற்கு ஆளாக்குகிற, அல்லது ஒரு நீதிமன்றத்தின்முன் விசாரணைக்கு அவரை அனுப்பி வைக்கும்படியான முடிபை உருவாக்குதல் ஆகிய விஷயங் களுக்குத் தொடர்பாயிருக்குமிடத்து, அக் கடமைகள் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குட்பட்டு, நீதித் துறை நடுவர் ஒருவரால் ஆற்றிவரத்தக்கனவாகும்; அல்லது

(ஆ) உரிமம் அளித்தல், அதைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் அல்லது ரத்து செய்தல், குற்ற வழக்குத் தொடர்வதற்கு ஒப்பளிப்பு அளித்தல் அல்லது குற்ற வழக்குத் தொடர்வதினின்றும் விலகிக் கொள்ளுதல் போன்ற நிருவாக அல்லது செயலாட்சித் துறையின் தன்மையினவான விஷயங்களுக்குத் தொடர்பாயிருக்குமிடத்து, அக் கடமைகள் மேற்சொன்ன கட்டுப்பாட்டிற்குட்பட்டு, நிருவாகத் துறையைச் சேர்ந்த நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) ஒருவரால் ஆற்றிவரத்தக்கனவாகும்.

இந்திய தண்டனைச் சட்டம் 45/1860 மற்றும் பிற சட்டங்களின் படி உள்ள குற்றங்களை விசாரணை செய்தல்.

4. (1) இதன்பின் சொல்லப்பட்ட வகைமுறைகளுக் கிணங்க இந்தியத் தண்டனைச் சட்டத்தின்படியான எல்லாக் குற்றங்களையும் புலனுய்வு, பரிசீலனை, விசாரணை செய்தலும், மற்றபடி அவற்றிற்குரிய நடவடிக்கைகளை எடுத்தலும் வேண்டும்.

(2) வேறெந்தச் சட்டத்தின்படியான எல்லாக் குற்றங்களையும் அதே வகைமுறைகளுக்கிணங்க புலனுய்வு, பரிசீலனை, விசாரணை செய்தலும் மற்றப்படியான நடவடிக்கைகளை எடுத்தலும் வேண்டும்; ஆனல் அந்த நடவடிக்கைகள், அக்குற்றங்களைப் புலனுய்வு, பரிசீலனை, விசாரணை செய்யும் அல்லது பிற நடவடிக்கைகளை எடுக்கும் முறை அல்லது இடத்தை நிர்ணயிப்பதாகவும் அவ்வப்போது அமலிலுள்ள சட்டம் எதற்கும் உட்பட்டிருக்க வேண்டும்.

காப்பு

5. இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், குறிப்பிட்ட வகைமுறை எதுவும் இதற்கு எதிர்மாறாக இல்லாதபோது, அவ்வப்போது அமலிலுள்ள சிறப்பு அல்லது வட்டாரச் சட்டம் எதையும், அல்லது அவ்வப்போது அமலிலுள்ள வேறெந்தச் சட்டத்தினாலும் அளிக்கப்பட்ட சிறப்பு அதிகார வரம்பையோ, அதிகாரம் எதையுமோ, சிறப்பு நடைமுறை வகை எதையுமோ பாதித்தல் ஆகாது.

அத்தியாயம் II.

குற்ற வழக்கு நீதிமன்றங்கள், அலுவலகங்கள் ஆகியவற்றின் அமைப்பு.

குற்ற வழக்கு நீதிமன்றங்களின் வகைகள்.

6. உயர் நீதிமன்றங்கள், மற்றும் இந்தச் சட்டம் அல்லாத வேறு எந்தச் சட்டத்தின்படியும் அமைக்கப்பட்ட நீதிமன்றங்கள் ஆகியவற்றுடன், ஒவ்வொரு மாநிலத்திலும், கீழ்க்கண்ட குற்ற வழக்கு நீதிமன்ற வகைகளும் இருத்தல் வேண்டும், அதாவது—

(i) செஷன்ஸ் நீதிமன்றங்கள்;

(ii) நீதித் துறை முதல் வகுப்பு நடுவர்களும், பெருநகர்ப் பகுதியில் பெருநகர் நடுவர்களும்;

(iii) நீதித் துறை இரண்டாவது வகுப்பு நடுவர்கள்; மற்றும்

(iv) நிருவாகத் துறை நடுவர்கள்.

மண்டலப் பிரிவுகள்.

7. (1) ஒவ்வொரு மாநிலமும் ஒரு செஷன்ஸ் பிரிவாகவோ செஷன்ஸ் பிரிவுகளைக் கொண்டதாகவோ இருத்தல் வேண்டும்; மற்றும் இந்தச் சட்டத்தின் நோக்கங்களைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு செஷன்ஸ் பிரிவும், ஒரு மாவட்டமாக அல்லது மாவட்டங்கள் கொண்டதாக இருத்தல் வேண்டும்:

ஆனால், ஒவ்வொரு பெருநகர்ப் பகுதியும் மேற்சொன்ன நோக்கங்களைப் பொறுத்தமட்டில், தனித்த ஒரு செஷன்ஸ் பிரிவாகவும் மாவட்டமாகவும் இருத்தல் வேண்டும்.

(2) மாநில அரசு, உயர் நீதிமன்றத்துடன் ஆலோசனை செய்த பின்பு, அத்தகைய பிரிவுகள் மற்றும் மாவட்டங்களின் எல்லைகளில் அல்லது எண்ணிக்கையில் மாறுதல் செய்யலாம்.

(3) மாநில அரசு, உயர் நீதிமன்றத்துடன் ஆலோசனை செய்த பின்பு, மாவட்டம் எதையும் உட்பிரிவுகளாகப் பிரிக்கலாம்; மற்றும் அத்தகைய உட்பிரிவுகளின் எல்லைகளில் அல்லது எண்ணிக்கையில் மாறுதல் செய்யலாம்.

(4) இந்தச் சட்டம் தொடங்கும் காலத்தில் இருக்கும் செஷன்ஸ் பிரிவுகளையும் மாவட்டங்களையும் உட்பிரிவுகளையும் இந்தப் பிரிவின்படி அமைக்கப்பட்டிருப்பனவாகக் கொள்ளுதல் வேண்டும்.

பெருநகர்ப் பகுதிகள்.

8. (1) மாநில அரசு, பத்து லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட மாநகர் அல்லது நகரைக் கொண்டிருக்கின்ற அம் மாநிலத்திலுள்ள பகுதி எதையும், அறிவிக்கை மூலமாக, அதில் குறிக்கப்படும் தேதியிலிருந்து, இந்தச் சட்டத்தின் நோக்கங்களைப் பொறுத்தமட்டில், ஒரு பெருநகராக இருந்துவரவேண்டுமென விளம்பலாம்.

(2) பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய மாகாண நகரங்கள் ஒவ்வொன்றையும் அகமதாபாத் மாநகரையும் இந்தச் சட்டத்தின் தொடக்கத்திலிருந்தே, ஒரு பெருநகரென (1) ஆவது உட்பிரிவின்கீழ் விளம்பப்பட்டிருப்பதாகக் கொள்ளுதல் வேண்டும்.

(3) மாநில அரசு, அறிவிக்கை மூலமாக, ஒரு பெருநகர்ப் பகுதியின் எல்லைகளை விரிவுபடுத்தவோ, குறைக்கவோ, மாற்றவோ செய்யலாம்; ஆனால், அந்தப் பகுதியின் மக்கள் தொகையைப் பத்து லட்சத்திற்குக் கீழ்ப்படும் அளவிற்குக் குறைக்கவோ மாற்றவோ கூடாது.

(4) ஒரு பகுதியானது ஒரு பெருநகர்ப் பகுதியென விளம்பப்பட்ட பின்பு அல்லது விளம்பியதாகக் கொள்ளப்பட்ட பின்பு, அப் பகுதியின் மக்கள் தொகை பத்து லட்சத்திற்கும் கீழ்ப்படுமிடத்து, அந்தப் பகுதியானது, மாநில அரசு அறிவிக்கை மூலமாக, இதன் பொருட்டுக் குறிப்பிடும் தேதியன்றும், அது முதற்கொண்டும் ஒரு பெருநகர்ப் பகுதியாக இருந்த நிலை அற்றுப் போகும். ஆனால், அவ்வாறு அற்றுப்போனபோதிலும், அந்நிலை ஏற்படாதது போன்றே, அந்தப் பகுதியிலுள்ள நீதிமன்றம் அல்லது நடுவர் எவர் முன்னிலையிலும், அவ்வாறு அற்றுப்போகும் நிலைக்கு அடுத்த முந்திய காலத்தில் நடந்துகொண்டிருந்த பரிசீலனை, விசாரணை அல்லது மேல்முறையீடு எதுவும், இந்தச் சட்டத்தின்படி தொடர்ந்து நடத்தப்பெறுதல் வேண்டும்.

(5) மாநில அரசு, எந்தப் பெருநகர்ப் பகுதியின் எல்லைகளையேனும் (3) ஆவது உட்பிரிவின்படி குறைக்கவோ மாற்றவோ செய்யுமிடத்து, அவ்வாறு குறைப்பதற்கோ

மாற்றுதற்கோ அடுத்து மூந்திய காலத்தில், நீதிமன்றம் அல்லது நடுவர் எவரின் முன்னிலையிலும் நடந்து கொண்டிருந்த பரிசிலனை, விசாரணை அல்லது மேல்முறையீடு எதையும் பாதித்தல் கூடாது; மற்றும் அத்தகைய பரிசிலனை, விசாரணை அல்லது மேல்முறையீடு ஒவ்வொன்றும், அவ்வாறான குறைத்தலோ மாறுதலோ ஏற்படாதது போன்றே, இந்தச் சட்டத்தின்படி தொடர்ந்து நடத்தப்பெறுதல் வேண்டும்.

விளக்கம்.—இந்தப் பிரிவில், 'மக்கள் தொகை' என்னும் சொற்றொடர், சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்கள் வெளியிடப் பட்டுள்ள அடுத்து மூந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் நிர்ணயிக்கப்பட்ட மக்கள் தொகை என்று பொருள்படும்.

செஷன்ஸ் நீதி மன்றம்.

9. (1) மாநில அரசு ஒவ்வொரு செஷன்ஸ் பிரிவுக்கும் செஷன்ஸ் நீதிமன்றம் ஒன்றை நிறுவுதல் வேண்டும்.

(2) ஒவ்வொரு செஷன்ஸ் நீதிமன்றத்திற்கும் உயர் நீதிமன்றத்தால் நியமிக்கப்படும் நீதிபதி ஒருவர் தலைமை வகித்தல் வேண்டும்.

(3) உயர் நீதிமன்றம் செஷன்ஸ் நீதிமன்றமொன்றில் அதிகாரம் செலுத்துவதற்கென்று கூட்டு செஷன்ஸ் நீதிபதிகளையும் உதவி செஷன்ஸ் நீதிபதிகளையும் நியமிக்கவும் செய்யலாம்.

(4) ஒரு செஷன்ஸ் பிரிவின் செஷன்ஸ் நீதிபதியை மற்றொரு பிரிவின் கூட்டு செஷன்ஸ் நீதிபதியாகவும் உயர் நீதிமன்றம் நியமிக்கலாம்; அவ்வாறு நியமித்தால், அந்தப் பிரிவில் அவ்வுயர்நீதிமன்றம் உத்தரவிடுகிற இடம் அல்லது இடங்களில் வழக்குகளைத் தீர்க்க அவர் அமரலாம்.

(5) செஷன்ஸ் நீதிபதியின் பதவி காலியாக இருக்குமிடத்து, அத்தகைய செஷன்ஸ் நீதிமன்றத்தின் முன்னிலையில் செய்யப்படுகிற அல்லது செய்யக்கூடிய, அல்லது நடப்பிலிருக்கும் அல்லது நடப்பிலிருக்கக்கூடிய அவசர விண்ணப்பம் எதையும், ஒரு கூட்டு அல்லது உதவி செஷன்ஸ் நீதிபதியோ, அவ்வாறு கூட்டு அல்லது உதவி செஷன்ஸ் நீதிபதி இல்லையெனில் அந்த செஷன்ஸ் பிரிவிலுள்ள நீதித் துறை தலைமை நடுவரோ தீர்த்து வைக்க உயர் நீதிமன்றம் ஏற்பாடுகள் செய்யலாம்; மற்றும்

அத்தகைய நீதிபதி அல்லது நடுவர் ஒவ்வொருவரும் அத்தகைய விண்ணப்பத்தை எடுத்து மேல் நடத்த அதிகாரம் உடையவராவார்.

(6) உயர் நீதிமன்றம் அறிவிக்கை மூலமாகக் குறிப்பிடலாகும் இடம் அல்லது இடங்களில் சாதாரணமாக செஷன்ஸ் நீதிமன்றம் அமர்ந்து இயங்க வேண்டும்; ஆனால், குறிப்பிட்ட ஒரு வழக்கிற்காக, அந்த செஷன்ஸ் பிரிவில் வேறு எந்த இடத்திலேனும் அமர்ந்தால், அது தரப்பினர்கள், சாட்சிகள் ஆகியோரின் பொது வசதிக்கு ஏற்றது என்பதாகக் கருதுமாயின், அரசு தரப்பு, எதிரி ஆகியோரின் சம்மதத்துடன், அந்நீதிமன்றம் அவ்வழக்கைத் தீர்க்கவோ, அவ்வழக்கிலுள்ள சாட்சி அல்லது சாட்சிகள் எவரையேனும் விசாரிக்கவோ அந்த இடத்தில் அமரலாம்.

விளக்கம்.—ஒன்றியத்தின் அல்லது ஒரு மாநிலத்தின் காரியங்கள் சம்பந்தமான ஊழியம் அல்லது பதவி எதற்கும், ஒருவரை முதலில் நியமனஞ்செய்தலோ, அமர்த்துதலோ, அவருக்குப் பதவி உயர்வு அளித்தலோ எந்தச் சட்டத்தின்படியேனும் அரசினால் செய்யப்பட வேண்டியதாயிருக்குமிடத்து, அந்தகைய நியமனம், அமர்த்துதல் அல்லது பதவி உயர்வு எதுவும் இந்தச் சட்டத்தின் நோக்கங்களைப் பொறுத்தமட்டில், "நியமனம்" என்பதில் உள்ளடங்காது.

உதவி செஷன்ஸ் நீதிபதிகள் கீழ்ப் பட்டிருத்தல்.

10. (1) எல்லா உதவி செஷன்ஸ் நீதிபதிகளும், எந்த செஷன்ஸ் நீதிபதியின் நீதிமன்றத்தில் தாங்கள் அதிகாரத்தைச் செலுத்தி வருகின்றனரோ அந்த செஷன்ஸ் நீதிபதிக்குக் கீழ்ப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய உதவி செஷன்ஸ் நீதிபதிகளுக் கிடையே அலுவலைப் பகிர்ந்தளிப்பது பற்றி, செஷன்ஸ் நீதிபதி, இந்தச் சட்டத்திற்கு இசைவான முறையில் விதிகளைச் செய்யலாம்.

(3) செஷன்ஸ் நீதிபதி, தான் இல்லாதபோது அல்லது தான் செயற்பட இயலாதபோது, அவசர விண்ணப்பம் எதையும் ஒரு கூட்டு அல்லது உதவி செஷன்ஸ் நீதிபதியோ, அத்தகையவர் எவரும் இல்லையெனில், நீதித் துறை தலைமை நடுவரோ தீர்த்து வைப்பதற்கான ஏற்பாட்டையும் செய்யலாம்; மற்றும் அத்தகைய நீதிபதி அல்லது நடுவர்

ஒவ்வொருவரும் அத்தகைய விண்ணப்பம் எதையும் மேல் நடத்தும் அதிகாரம் உள்ளவராகக் கொள்ளப்பட வேண்டும்.

நீதித்துறை நடுவர்களின் நீதிமன்றங்கள்.

11. (1) (ஒரு பெருநகர்ப் பகுதியல்லாத) ஒவ்வொரு மாவட்டத்திலும், மாநில அரசு, உயர் நீதிமன்றத்துடன் ஆலோசனை செய்த பின்பு, எத்தனை முதல் வகுப்பு, இரண்டாவது வகுப்பு நீதித் துறை நடுவர் நீதிமன்றங்களை அறிவிக்கை மூலமாகக் குறிப்பிடலாகுமோ அத்தனை நீதிமன்றங்கள் அவ்வறிவிக்கையில் குறிப்பிடலாகும் இடங்களில் நிறுவப் படுதல் வேண்டும்.

(2) அத்தகைய நீதிமன்றங்களில் தலைமை வகிக்கின்ற அலுவலர்கள் உயர் நீதிமன்றத்தால் நியமனஞ் செய்யப் படுதல் வேண்டும்.

(3) உயர் நீதிமன்றம், நலமென அல்லது அவசியமெனத் தனக்குத் தோன்றும்போதெல்லாம், முதல் வகுப்பு அல்லது இரண்டாவது வகுப்பு நீதித் துறை நடுவரின் அதிகாரங்களை, ஓர் உரிமை வழக்கு நீதிமன்றத்தில் நீதிபதியாகப் பணியாற்றுகின்ற, மாநில நீதித் துறை ஊழிய உறுப்பினர் எவருக்கும் வழங்கலாம்.

தலைமை நீதித்துறை நடுவர், கூட்டுத் தலைமை நீதித்துறை நடுவர் முதலியோர்.

12. (1) (ஒரு பெருநகர்ப் பகுதியல்லாத) ஒவ்வொரு மாவட்டத்திலும், முதல் வகுப்பு நீதித் துறை நடுவர் ஒருவரை, தலைமை நீதித் துறை நடுவராக உயர் நீதிமன்றம் நியமனஞ்செய்தல் வேண்டும்.

(2) முதல் வகுப்பு நீதித் துறை நடுவர் எவரையும் கூட்டுத் தலைமை நீதித் துறை நடுவராக உயர் நீதிமன்றம் நியமனம் செய்யலாம்; மற்றும் அத்தகைய நடுவர், உயர் நீதிமன்றம் உத்தரவிடுகிறவாறு இந்தச் சட்டத்தின்படியோ, அவ்வப்போது அமலிலுள்ள வேறெந்தச் சட்டத்தின்படியோ நீதித் துறை தலைமை நடுவருக்குள்ள அதிகாரங்கள் அனைத்தையும் அல்லது எதையும் உடையவராவார்.

(3) (அ) உயர் நீதிமன்றம் எந்த உட்கோட்டத்திலுள்ள முதல் வகுப்பு நீதித் துறை நடுவர் எவரையும், உட்கோட்ட நீதித் துறை நடுவரென நியமனஞ் செய்யவும், நிலவரத்திற்கேற்ப, இந்தப் பிரிவில் குறிப்பிடப்பட்ட பொறுப்புக்களிலிருந்து அவரை விடுவிக்கவும் செய்யலாம்.

(ஆ) நீதித் துறைத் தலைமை நடுவரின் பொதுப் படையான கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு, ஒவ்வொரு உட்கோட்ட நீதித் துறை நடுவரும், அந்த உட்கோட்டத்திலுள்ள கூட்டு நீதித் துறைத் தலைமை நடுவரல்லாத மற்ற நீதித் துறை நடுவர்களின் வேலையை, உயர் நீதிமன்றம், பொது அல்லது சிறப்புக் கட்டளை வாயிலாக, இதன்பொருட்டுக் குறிப்பிடுகிறபடியான மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு செய்யும் அதிகாரங்களைக் கொண்டு அவற்றைச் செலுத்திவர வேண்டும்.

சிறப்பு நீதித் துறை நடுவர்கள்.

13. (1) ஒரு பெருநகர்ப் பகுதியல்லாத மாவட்டம் ஏதொன்றிலும் உள்ள குறிப்பிட்ட வழக்குகள், அல்லது குறிப்பிட்ட வழக்கு வகைகள், அல்லது பொதுவாகவே வழக்குகள் எல்லாவற்றையும் பொறுத்து, இந்தச் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்படி இரண்டாவது வகுப்பு நீதித் துறை நடுவர் ஒருவருக்கு வழங்கப்பட்ட அல்லது வழங்கத்தக்க அதிகாரங்கள் அனைத்தையும் அல்லது எதையும் அரசின்கீழ் யாதொரு பதவியையும் வகிக்கிற அல்லது வகித்திருக்கிற எவருக்கும் வழங்குமாறு, மத்திய அரசோ மாநில அரசோ வேண்டிக்கொள்ளுமாறால், உயர் நீதிமன்றம் அவ்வாறே வழங்கலாம்:

ஆனால், அத்தகைய அதிகாரம் எதையும், உயர் நீதிமன்றம் விதிகள் மூலமாகக் குறிப்பிடுகிறபடி சட்ட விவகாரங்கள் தொடர்பான தகுதி அல்லது அனுபவத்தை ஒருவர் பெற்றிருந்தாலன்றி, அவருக்கு வழங்குதல் ஆகாது.

(2) அத்தகைய நடுவர்கள் நீதித் துறை சிறப்பு நடுவர்கள் என்று வழங்கப்படுவார்கள்; மற்றும் ஒரு தடவைக்கு ஓராண்டு காலத்திற்கு மேற்படாமல் உயர் நீதிமன்றம் பொது அல்லது சிறப்புக் கட்டளை மூலமாக உத்தரவிடும் கால அளவிற்கு அவர்கள் நியமனஞ் செய்யப்படுதல் வேண்டும்.

நீதித்துறை நடுவர்களுக்குள்ள வட்டார அதிகார வரம்பு.

14. (1) 11 ஆவது பிரிவின்படி அல்லது 13 ஆவது பிரிவின்படி நியமனஞ்செய்யப்பட்ட நடுவர்கள் முறையே இந்தச் சட்டத்தின்படி தங்களுக்கு அளிக்கப்படும் அதிகாரங்கள் அனைத்தையும் அல்லது எதையும் செலுத்திவரலாகும் பகுதிகளின் வட்டார எல்லைகளை, நீதித் துறைத் தலைமை நடுவர் உயர் நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு, அவ்வப்போது வரையறுக்கலாம்.

(2) அவ்வாறு வேறுவிதமாக வரையறை செய்திருந்தாலன்றி, அத்தகைய நடுவர் ஒவ்வொருவரின் அதிகார வரம்பும் அதிகாரங்களும் அம் மாவட்டம் முழுவதும் பரந்து நிற்கும்.

நீதித்துறை நடுவர்கள் மேற்பட்டிருத்தல்.

15. (1) நீதித் துறைத் தலைமை நடுவர் ஒவ்வொருவரும் செஷன்ஸ் நீதிபதிக்குக் கீழ்ப்பட்டிருத்தல் வேண்டும்; மற்றும் பிற நீதித் துறை நடுவர் ஒவ்வொருவரும், செஷன்ஸ் நீதிபதியின் பொதுப்படையான கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு, நீதித் துறைத் தலைமை நடுவருக்குக் கீழ்ப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) நீதித் துறைத் தலைமை நடுவர், தமக்குக் கீழ்ப்பட்ட நீதித் துறை நடுவர்களுக்கிடையே அலுவல்களைப் பகிர்ந்தளிப்பது பற்றி, இந்தச் சட்டத்திற்கு இசைவான முறையில், அவ்வப்போது விதிகளைச் செய்யலாம்; அல்லது சிறப்புக் கட்டளைகளை இடலாம்.

பெருநகர் நடுவர்களின் நீதிமன்றங்கள்.

16. (1) மாநில அரசு, உயர் நீதிமன்றத்துடன் ஆலோசனை செய்த பின்பு, எத்தனை பெருநகர் நடுவர் நீதிமன்றங்களை அறிவிக்கை மூலமாகக் குறிப்பிடலாகுமோ அத்தனை பெருநகர் நடுவர்களின் நீதிமன்றங்கள், அவ்வறிவிக்கையில் குறிப்பிடலாகும் இடங்களில் ஒவ்வொரு பெருநகர்ப் பகுதியிலும் நிறுவப்படுதல் வேண்டும்.

(2) அந் நீதிமன்றங்களில் தலைமை வகிக்கின்ற அலுவலர்கள் உயர் நீதிமன்றத்தால் நியமனஞ்செய்யப்பட வேண்டும்.

(3) ஒவ்வொரு பெருநகர் நடுவரின் அதிகார எல்லையும் அதிகாரங்களும் அப் பெருநகர்ப் பகுதி முழுவதும் பரந்து நிற்கும்.

பெருநகர்த் தலைமை நடுவரும் பெருநகர் கூட்டுத் தலைமை நடுவரும்.

17. (1) உயர் நீதிமன்றம், தன் வட்டார அதிகார வரம்புக்குட்பட்ட ஒவ்வொரு பெருநகர்ப் பகுதியைப் பொறுத்தும், பெருநகர் நடுவர் ஒருவரை அப் பகுதிக்கான பெருநகர்த் தலைமை நடுவரென நியமனஞ் செய்தல் வேண்டும்.

(2) உயர் நீதிமன்றம், பெருநகர் நடுவர் எவரையும் பெருநகர் கூட்டுத் தலைமை நடுவராக நியமனஞ் செய்யலாம்; மற்றும் அத்தகைய நடுவர் உயர் நீதிமன்றம்

உத்தரவிடுகிறவாறு இந்தச் சட்டத்தின்படியோ, அவ்வப்போது அமலிலுள்ள வேறெந்தச் சட்டத்தின்படியோ பெருநகர்த் தலைமை நடுவருக்குள்ள அதிகாரங்கள் அனைத்தையும் அல்லது எதனையும் உடையவராவார்.

பெருநகர் சிறப்பு நடுவர்கள்.

18. (1) உயர் நீதிமன்றம் தன் வட்டார அதிகார வரம்புக்குட்பட்ட பெருநகர்ப் பகுதி எதனிலும் உள்ள, குறிப்பிட்ட வழக்குகள், அல்லது குறிப்பிட்ட வழக்கு வகைகள், அல்லது பொதுவாகவே வழக்குகள் எல்லாவற்றையும் பொறுத்து, இந்தச் சட்டத்திலுள் அல்லது சட்டத்தின்படி ஒரு பெருநகர் நடுவருக்கு வழங்கப்பட்ட அல்லது வழங்கத்தக்க அதிகாரங்கள் அனைத்தையும் அல்லது எதையும், அரசின் கீழ் யாதொரு பதவியையும் வகிக்கிற அல்லது வகித்திருக்கிற எவருக்கும் வழங்குமாறு மத்திய அரசோ மாநில அரசோ வேண்டிக் கொள்ளுமாறல், அவ்வாறே உயர் நீதிமன்றம் வழங்கலாம்:

ஆனால், அத்தகைய அதிகாரம் எதையும் உயர் நீதி மன்றம், விதிகள் மூலமாகக் குறிப்பிடுகிறபடி சட்ட விவ காரங்கள் தொடர்பான தகுதி அல்லது அனுபவத்தை ஒருவர் பெற்றிருந்தாலன்றி, அவருக்கு வழங்குதல் ஆகாது.

(2) அத்தகைய நடுவர்கள் பெருநகர்ச் சிறப்பு நடுவர்கள் என்று வழங்குப்படுவார்கள்; மற்றும் ஒரு தடவைக்கு ஓராண்டு காலத்திற்கு மேற்படாமல் உயர் நீதிமன்றம், பொது அல்லது சிறப்புக் கட்டளை மூலமாக, உத்தரவிடுகிற கால அளவிற்கு அவர்கள் நியமனஞ்செய்யப் படுதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தில் வேறு எந்த இடத்திலும் எது கண்டிருந்தபோதிலும், இரண்டாவது வகுப்பு நீதித்துறை நடுவர் ஒருவர் பெருநகர்ப் பகுதிக்கு வெளியே விதிப்பதற்கு அதிகாரம் பெற்றிராத ஒரு தண்டனையைப் பெருநகர்ச் சிறப்பு நடுவர் ஒருவர் விதித்தல் ஆகாது.

பெருநகர் நடுவர்கள் கீழ்ப்பட்டிருத்தல்.

19. (1) பெருநகர்த் தலைமை நடுவரும் பெருநகர் கூட்டுத் தலைமை நடுவர் ஒவ்வொருவரும் செஷன்ஸ் நீதிபதிக்குக் கீழ்ப்பட்டிருத்தல் வேண்டும்; மற்றும் பிற ஒவ்வொரு பெரு நகர் நடுவரும், செஷன்ஸ் நீதிபதியின் பொதுப்படையான கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு, பெருநகர்த் தலைமை நடுவ ருக்குக் கீழ்ப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு, பெருநகர் கூட்டுத் தலைமை நடுவர்கள் பெருநகர்த் தலைமை நடுவருக்குக் கீழ்ப்பட்டிருக்கவேண்டுமானால், அது எந்த அளவிற்கு என்பதை உயர் நீதிமன்றம் வரையறுக்கலாம்.

(3) பெருநகர் நடுவர்களுக்கிடையே அலுவலைப் பகிர்ந்தளிப்பது பற்றியும், பெருநகர் கூட்டுத் தலைமை நடுவருக்கு அலுவலைப் பிரித்துக்கொடுப்பது பற்றியும், பெருநகர்த் தலைமை நடுவர் இந்தச் சட்டத்திற்கு இசைவான முறையில், அவ்வப்போது, விதிகளைச் செய்யலாம், அல்லது சிறப்புக் கட்டளைகளை இடலாம்.

நிருவாகத் துறை நடுவர்கள்.

20. (1) ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு பெருநகர்ப் பகுதியிலும், மாநில அரசு எத்தனை பேர்கள் இருப்பது பொருத்தமெனத் தான் நினைக்கிறதோ, அத்தனை பேர்களை நிருவாகத்துறை நடுவர்களாக நியமனஞ்செய்யலாம்; மற்றும் அவர்களில் ஒருவரை மாவட்ட நடுவரென நியமனஞ் செய்தல் வேண்டும்.

(2) மாநில அரசு, நிருவாகத்துறை நடுவர் எவரையும் மாவட்டக் கூட்டு நடுவராக நியமனஞ்செய்யலாம்; மற்றும் அத்தகைய நடுவர், இந்தச் சட்டத்தின்படியோ அவ்வப்போது அமலிலுள்ள வேறெந்தச் சட்டத்தின்படியோ மாவட்ட நடுவருக்குள்ள அதிகாரங்கள் அனைத்தையும் அல்லது எதனையும் உடையவராவார்.

(3) ஒரு மாவட்ட நடுவரின் பதவி காலியானதன் விளைவாக, அம்மாவட்டத்தின் நிருவாகத்துறைச் செயலாட்சிக்கு அலுவலர் எவரேனும் தற்காலிகமாக அடுத்துப் பதவியேற்கும்போதெல்லாம், மாநில அரசு கட்டளை பிறப்பிக்கும் வரை, அத்தகைய அலுவலர் இந்தச் சட்டத்தினால் முறையே மாவட்ட நடுவருக்கு அளிக்கப்படும் அதிகாரங்கள் அனைத்தையும் செலுத்தியும், விதிக்கப்படும் கடமைகளை ஆற்றியும் வருதல் வேண்டும்.

(4) மாநில அரசு, ஓர் உட்கோட்டத்தை நிருவாகத் துறை நடுவர் ஒருவரின் பொறுப்பில் விடவும் அப்பொறுப்பிலிருந்து சந்தர்ப்பத்திற்கேற்ப அவரை விடுவிக்கவும் செய்யலாம்; மற்றும் அவ்வாறு ஓர் உட்கோட்டத்தின் பொறுப்பைக்கொண்டுள்ள நடுவர், உட்கோட்ட நடுவர் என்று வழங்கப்படுவார்.

(5) மாநில அரசு, ஒரு பெருநகர்ப் பகுதியைப் பொறுத்தமட்டில், காவல் ஆணையர் ஒருவருக்கு நிருவாகத் துறை நடுவருக்குள்ள அதிகாரங்கள் அனைத்தையும் அல்லது எதையும், அவ்வப்போது அமலிலுள்ள எந்தச் சட்டத்தின் படியும் வழங்குவதற்கு இந்தப் பிரிவிலுள்ள எதுவும் தடை யாக நிற்காது.

நிருவாகத் துறைச் சிறப்பு நடுவர்கள்.

21. மாநில அரசு, குறிப்பிட்ட பகுதிகளுக்கோ குறிப் பிட்ட காரியங்களைப் புரிவதற்கோ நிருவாகத்துறை நடுவர்களை, தான் பொருத்தமெனக் கருதக்கூடிய ஒரு கால அளவிற்கு நியமனஞ்செய்யலாம்; அவர்கள் நிருவாகத் துறை சிறப்பு நடுவர்கள் என வழங்கப்படுவர்; மற்றும் இந்தச் சட்டத்தின்படி நிருவாகத்துறை நடுவர்களுக்கு வழங்கத்தக்கனவற்றில், மாநில அரசு, தான் பொருத்த மெனக் கருதக்கூடிய அதிகாரங்களை அவர்களுக்கு வழங்கலாம்.

நிருவாகத் துறை நடுவர் களின் வட் டார அதி கார வரம்பு.

22. (1) நிருவாகத்துறை நடுவர்கள் இந்தச் சட்டத்தின் படி தங்களுக்கு அளிக்கப்படும் அதிகாரங்கள் அனைத்தையும் அல்லது எதையும் செலுத்திவருகிற வட்டார எல்லைகளை, மாவட்ட நடுவர், மாநில அரசின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு, அவ்வப்போது, வரையறுக்கலாம்.

(2) அந்தகைய வரையறையின் மூலம் வேறுவிதமாக வகை செய்திருந்தாலல்லாமல், அந்தகைய ஒவ்வொரு நடுவரின் அதிகார வரம்பும் அதிகாரங்களும் அம்மாவட்டம் முழுவதும் பரந்து நிற்கும்.

நிருவாகத் துறை நடுவர் களின் கீழ்ப் பட்டிருத்தல்.

23. (1) மாவட்டக் கூட்டு நடுவரல்லாத, எல்லா நிருவாகத் துறை நடுவர்களும் மாவட்ட நடுவருக்குக் கீழ்ப்பட்டிருத்தல் வேண்டும்; மற்றும் உட்கோட்டமொன்றில் அதிகாரங்களைச் செலுத்தி வருகிற (உட்கோட்ட நடுவர் அல்லாத) ஒவ்வொரு நிருவாகத்துறை நடுவரும், மாவட்ட நடுவரின் பொதுப்படை யான கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு உட்கோட்ட நடுவருக்குக் கீழ்ப்பட்டு இருத்தலும் வேண்டும்.

(2) மாவட்ட நடுவர், தமக்குக் கீழ்ப்பட்டுள்ள நிருவாகத்துறை நடுவர்களுக்கிடையே அலுவலைப் பகிர்ந் தளிப்பது பற்றியும், மாவட்டக் கூட்டு நடுவருக்கு அலுவலைப் பிரித்துக் கொடுப்பது பற்றியும், இந்தச் சட்டத்திற்கு இசைவான முறையில், அவ்வப்போது விதிகளைச் செய்யலாம்; அல்லது சிறப்புக் கட்டளைகளை இடலாம்.

அரசு குற்றத் துறை வழக்குரைஞர்கள்.

24. (1) ஒவ்வொரு உயர்நீதிமன்றத்திற்குமென, மத்திய அரசு அல்லது மாநில அரசு, அவ்வுயர்நீதிமன்றத்துடன் ஆலோசனை செய்த பின்பு, அந்நிறுவன நீதிமன்றத்தில் குற்ற வழக்கு மேல்முறையீடு அல்லது பிற நடவடிக்கையை, நிலவரத்திற்கேற்ப, மத்திய அல்லது மாநில அரசின் சார்பில் நடத்துவதற்காக, அரசு குற்றத்துறை வழக்குரைஞர் ஒருவரை நியமனஞ்செய்தல் வேண்டும்.

(2) ஒவ்வொரு மாவட்டத்திற்குமென, மாநில அரசு, அரசு குற்றத்துறை வழக்குரைஞர் ஒருவரை நியமனஞ் செய்தல் வேண்டும்; மற்றும் அம்மாவட்டத்திற்கென அரசு குற்றத்துறைக் கூட்டு வழக்குரைஞர் ஒருவர் அல்லது ஒருவருக்கு மேற்பட்டவரையும் நியமனஞ்செய்யலாம்.

(3) மாவட்ட நடுவர், செஷன்ஸ் நீதிபதியுடன் ஆலோசனை செய்து, அம்மாவட்டத்திற்கென அரசு குற்றத் துறை வழக்குரைஞர் அல்லது அரசு குற்றத்துறை கூட்டு வழக்குரைஞராக நியமனஞ்செய்வதற்குப் பொருத்த மானவர்களெனத் தாம் கருதுகிறவர்களின் பெயர்ப் பட்டியலொன்றைத் தயாரித்தல் வேண்டும்.

(4). (3) ஆவது உட்பிரிவின்படி மாவட்ட நடுவரால் தயாரிக்கப்பட்ட பெயர்ப்பட்டியலில் கண்டிருந்தாலன்றி, மாவட்டத்திற்கான அரசு குற்றத்துறை வழக்குரைஞராகவோ அரசு குற்றத்துறைக் கூட்டு வழக்குரைஞராகவோ எவரையும், மாநில அரசு நியமனஞ்செய்தல் கூடாது.

(5) ஒருவர் ஏழாண்டுகளுக்குக் குறையாமல் ஒரு வழக்குரைஞராகத் தொழில் நடத்தி இருந்தால் மட்டுமே அவர் (1) ஆவது உட்பிரிவு அல்லது (2) ஆவது உட்பிரிவின் படி அரசு குற்றத்துறை வழக்குரைஞராகவோ அரசு குற்றத்துறைக் கூட்டு வழக்குரைஞராகவோ நியமனஞ் செய்யப்படுவதற்குத் தகுதியுள்ளவராவார்.

(6) ஏதாவதொரு வழக்கு, அல்லது வழக்குகளின் வகை சம்பந்தமாக, பத்து ஆண்டுகளுக்குக் குறையாமல் தொழில் நடத்தி வந்திருக்கின்ற வழக்குரைஞர் ஒருவரை, அரசு குற்றத்துறை சிறப்பு வழக்குரைஞராக மத்திய அரசோ மாநில அரசோ நியமனம் செய்யலாம்.

அரசு குற்றத் துறை உதவி வழக்குரைஞர்கள்.

25. (1) நடுவர்களின் நீதிமன்றங்களில் குற்றவழக்குகளை நடத்துவதற்காக, ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு குற்றத் துறை உதவி வழக்குரைஞர் ஒருவரையோ ஒருவருக்கு மேற்பட்டவர்களையோ மாநில அரசு நியமனஞ்செய்தல் வேண்டும்.

(2). (3) ஆவது உட்பிரிவில் வகை செய்யப்பட்டதற்கு பாதகமல்லியில், காவல் அலுவலர் எவரும், அரசு குற்றத் துறை உதவி வழக்குரைஞராக நியமனஞ் செய்யப் படுவதற்குத் தகுதியுள்ளவராகார்.

(3) குறிப்பிட்ட வழக்கை நடத்துவதற்காக அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் எவரும் கிடைக்காத போது, அந்த வழக்கிற்குப் பொறுப்பாக வேறெவரையும் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞராக மாவட்ட நடுவர் நியமனஞ் செய்யலாம்:

எனினும் காவல் அலுவலர் எவரையும் –

(அ) அவர் எந்தக் குற்றத்தைப் பொறுத்து எதிரி மீது வழக்கு தொடரப்படுகிறதோ அதைப் புலனாய்வு செய்வதில் பங்கெடுத்துக் கொண்டிருப்பாராயின்; அல்லது

(ஆ) அவர் ஆய்வாளர் பதவிக்குக் கீழ்ப்படியிலுள்ளவராயின், அவ்வாறு நியமனஞ் செய்தல் ஆகாது.

அத்தியாயம் III.

நீதிமன்றங்களின் அதிகாரம்.

26. இந்தச் சட்டத்தின் பிற விதிகளுக்குட்பட்டு,—

குற்றவாளி எந்த நீதிமன்றங்களால் விசாரிக்கத் தக்கவன் என்பது.

(அ) இந்தியத் தண்டனைச் சட்டத்தின்படியான குற்றம் எதுவெனில்—

(i) உயர்நீதிமன்றத்தால், அல்லது

(ii) செஷன்ஸ் நீதிமன்றத்தால், அல்லது

(iii) அக்குற்றம் வேறு எந்த நீதிமன்றத்தால் விசாரிக்கத்தக்கதாக முதலாவது இணைப்புப் பட்டியலில் காட்டப்பட்டுள்ளதோ அந்த நீதிமன்றத்தால்,

விசாரணை செய்யப்படலாம்;

(ஆ) வேறெந்தச் சட்டத்தின்படியான குற்றம் எதுவும் அச் சட்டத்தில் இதன் பொருட்டு எந்த நீதிமன்றமேனும் குறிப்பிடப்பட்டிருக்கும்போது, அந்த நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் நீதிமன்றம் எதுவும் அவ்வாறு குறிப்பிடப்படாதபோது,—

(i) உயர் நீதிமன்றத்தால், அல்லது

(ii) அக் குற்றம் வேறு எந்த நீதிமன்றத்தால் விசாரிக்கத்தக்கதாக முதலாவது இணைப்புப்பட்டியலில் காட்டப்பட்டுள்ளதோ அந்த நீதிமன்றத்தால்,

விசாரணை செய்யப்படலாம்.

இளங்குற்றவாளிகளைப் பொறுத்து (நீதிமன்றங்களின்) அதிகார வரம்பு. 60/1960.

27. மரணம் அல்லது ஆயுள் தண்டனைக்குரியதல்லாததும் நீதிமன்றத்தின்முன் வருகிற அல்லது கொண்டுவரப்படுகிற தேதியன்று பதினாறு வயதிற்குட்பட்டுள்ள எவரேனும் செய்ததாமான குற்றம் எதுவும், நீதித்துறைத் தலைமை நடுவரின் நீதிமன்றத்தால், அல்லது 1960 ஆம் ஆண்டு குழந்தைகள் சட்டத்தின்படியோ, இளங்குற்றவாளிகளை வழிப்படுத்துவதற்கும் அவர்களின் பயிற்சிக்கும் புனர் வாழ்வுக்கும் ஏற்பாடு செய்கின்ற அவ்வப்போது அமலிலுள்ள வேறெந்தச் சட்டத்தின்படியோ சிறப்பாக அதிகாரமளிக்கப் பட்டுள்ள எந்த நீதிமன்றத்தாலும் விசாரணை செய்யப் படலாம்.

உயர்நிதி மன்றங்களும் செஷன்ஸ் நீதிபதிகளும் பிறப்பிக்கக் கூடிய தண்டனைகள்.

28. (1) ஓர் உயர் நீதிமன்றம், சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தத் தண்டனையையும் விதிக்கலாம்.

(2) ஒரு செஷன்ஸ் நீதிபதி அல்லது செஷன்ஸ் கூட்டு நீதிபதி, சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தத் தண்டனையையும் விதிக்கலாம்; ஆனால், அத்தகைய நீதிபதியால் விதிக்கப்பட்ட மரண தண்டனை, உயர் நீதிமன்றத்தின் உறுதிக்கு உட்பட்டதாகும்.

(3) ஓர் உதவி செஷன்ஸ் நீதிபதி, மரண தண்டனை, அல்லது ஆயுள் தண்டனை அல்லது பத்தாண்டு காலத்திற்கு மேற்பட்ட காவல் தண்டனை தவிர, சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தத் தண்டனையையும் விதிக்கலாம்.

நடுவர்கள் விதிக்கலாகும் தண்டனைகள்.

29. (1) நீதித்துறைத் தலைமை நடுவரின் நீதிமன்றம், மரண தண்டனை, அல்லது ஆயுள் தண்டனை அல்லது ஏழாண்டு காலத்திற்கு மேற்பட்ட காவல் தண்டனை தவிர, சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தத் தண்டனையையும் விதிக்கலாம்.

(2) முதல் வகுப்பு நடுவரின் நீதிமன்றம், மூன்றாண்டு காலத்திற்கு மேற்படாத காவல் தண்டனையோ, ஐயாயிரம் ரூபாய்க்கு மேற்படாத அபராதமோ, அல்லது இரண்டையுமோ விதிக்கலாம்.

(3) இரண்டாவது வகுப்பு நடுவரின் நீதிமன்றம், ஓராண்டு காலத்திற்கு மேற்படாத காவல் தண்டனையோ, ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாத அபராதமோ, அல்லது இரண்டையுமோ விதிக்கலாம்.

(4) பெருநகரத் தலைமை நடுவரின் நீதிமன்றம், நீதித்துறைத் தலைமை நடுவரின் நீதிமன்றத்துக்குள்ள அதிகாரங்களையும், ஒரு பெருநகர் நடுவரின் நீதிமன்றம், முதல் வகுப்பு நடுவர் நீதிமன்றத்தின் அதிகாரங்களையும் உடையதாயிருக்கும்.

அபராதம் செலுத்தத் தவறினால் காவல் தண்டனை.

30. (1) அபராதம் செலுத்தத் தவறினால், சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கால அளவிற்கான காவல் தண்டனையை நடுவர் நீதிமன்றம் அளிக்கலாம்:

ஆனால் அந்தக் கால அளவு—

(அ) 29 ஆவது பிரிவின்படி நடுவருக்குள்ள அதிகாரங்களுக்கு மிகைப்பட்டதாக இருத்தல் கூடாது;

(ஆ) காவல் தண்டனையானது தனித்தியங்கும் தண்டனையின் ஒரு பகுதியாக அளிக்கப்பட்டிருக்குமிடத்து, அபராதம் செலுத்தத் தவறியதற்காக விதிப்பதற்கு நடுவருக்கு அதிகாரமுள்ள காவல் தண்டனையாக அல்லாமல், குற்றத்திற்காக எவ்வளவு காலம் அவரால் காவல் தண்டனை விதிக்க முடியுமோ அதில் நாலிலொரு பங்கிற்கு மேற்படக்கூடாது.

(2) இந்தப் பிரிவின்படி அளிக்கப்படும் காவல் தண்டனையானது, 29 ஆவது பிரிவின்படி நடுவர் அளிக்கக் கூடிய அதிகபட்ச கால அளவிற்கான தனித்தியங்கும் காவல் தண்டனையோடு கூடியதாகவும் இருக்கலாம்.

ஒரே விசாரணையில் பல வேறு குற்றங்களுக்குத் தண்டனைத் தீர்ப்பளிக்கும்போது உள்ள தண்டனை பற்றி.
45/1860.

31. (1) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குற்றங்களுக்காக ஒரே விசாரணையில் ஒருவருக்குத் தண்டனைத் தீர்ப்பு அளிக்கும்போது, நீதிமன்றம், அக் குற்றங்களுக்கென விதிக்கப்பட்டவையும் தான் விதிக்கத் தகுதி பெற்றுள்ளவையுமான பல்வேறு தண்டனைகளை இத்தியத் தண்டனைச் சட்டத்தின் 71 ஆவது பிரிவின் விதிகளுக்குட்பட்டு, அக் குற்றங்களுக்காக அவருக்கு விதிக்கலாம். அத்தகைய தண்டனைகளில் காவல் தண்டனைகளும் இருக்குமேயானால், அவற்றை ஏக காலத்தில் அனுபவிக்கவேண்டுமென அந்நீதிமன்றம் உத்தரவிட்டாலன்றி, அத்தண்டனைகள் நீதிமன்றம் உத்தரவிடுகிற வரிசையில் ஒன்று கழிந்தபின் மற்றொன்று தொடங்குதல் வேண்டும்.

(2) தொடர் தண்டனைகளைப் பொறுத்தமட்டில், பல்வேறு குற்றங்களுக்கான மொத்த தண்டனையானது, தனியொரு குற்றத்திற்காக நீதிமன்றம் விதிக்கத் தகுதி பெற்றுள்ள தண்டனையைக் காட்டிலும் மிகுதியாக இருக்கிறது என்ற காரணத்தினால் மட்டுமே, அந்த நீதிமன்றம், அக் குற்றவாளியை விசாரணைக்காக ஒரு மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பவேண்டிய கட்டாயமில்லை:

ஆனால்—

(அ) எந்த ஒரு வழக்கிலும், அத்தகையவருக்குப் பதினான்கு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காவல் தண்டனை விதித்தல் ஆகாது;

(ஆ) அந்த மொத்த தண்டனையானது, தனியொரு குற்றத்திற்காக அந்த நீதிமன்றம் விதிக்கத் தகுதிபெற்றுள்ள தண்டனையில் அளவிற்கு இரு மடங்கிற்கு மேற்படுதல் ஆகாது.

(3) தண்டிக்கப்பட்ட ஒரு குற்றவாளியின் மேல் முறையீட்டைப் பொறுத்தமட்டில், அவர்மீது இந்தப் பிரிவின்படி விதிக்கப்பட்ட தொடர் தண்டனைகளின் மொத்தத்தை ஒரே தண்டனையாகக் கொள்ளுதல் வேண்டும்.

அதிகாரங்களை வழங்குகின்ற முறை.

32. (1) இந்தச் சட்டத்தின்படி அதிகாரங்களை வழங்குவதில், நிலவரத்திற்கேற்ப, உயர் நீதிமன்றம் அல்லது மாநில அரசு, கட்டளை மூலமாக, ஆட்களுக்குச் சிறப்பு வகையில் பெயர் குறிப்பிட்டோ, அவர்களது பதவிகளை முன்னிட்டோ, அல்லது பொதுவாக அலுவலர் வகைகளுக்கு அவர்களது பதவிப பெயர்களின் அடிப்படையிலோ அதிகாரமளிக்கலாம்.

(2) அத்தகைய ஒவ்வொரு கட்டளையும், அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்டவருக்கு அது தெரிவிக்கப்படுகிற தேதியிலிருந்து அமலுக்கு வரும்.

நியமனஞ் செய்யப்பட்ட அலுவலர்களுக்குள்ள அதிகாரங்கள்.

33. இந்தச் சட்டத்தின்படி ஒரு வட்டாரப் பகுதி முழுமைக்குமாக, உயர் நீதிமன்றத்தால் அல்லது மாநில அரசால் அதிகாரங்கள் எவையேனும் சூட்டப்பட்டுள்ள வரும், அரசு ஊழியத்தில் பதவி ஒன்றை வகிக்கின்ற வருமான எவரேனும், அதே மாநில அரசின்கீழ் அதே போன்றதொரு வட்டாரப் பகுதிக்குள், அதே தன்மையினதான சம அல்லது உயர் பதவியொன்றுக்கு நியமனஞ் செய்யப்படும்போதெல்லாம், நிலவரத்திற்கேற்ப, உயர் நீதிமன்றமோ மாநில அரசோ வேறுவிதமாக உத்தரவிடுகிறது, அல்லது வேறுவிதமாக உத்தரவிட்டிருக்கிறது என்றாலன்றி, அவர் அவ்வாறு நியமனஞ்செய்யப்பட்டுள்ள வட்டாரப் பகுதிக்குள் அதே அதிகாரங்களைச் செலுத்தி வருதல் வேண்டும்.

அதிகாரங்களைத் திரும்பப் பெறுதல்.

34. (1) நிலவரத்திற்கேற்ப, உயர் நீதிமன்றமோ மாநில அரசோ, எவருக்கேனும் தன்னால் இந்தச் சட்டத்தின்படி, அல்லது தனக்குக் கீழ்ப்பட்டுள்ள அலுவலர் எவராலேனும் வழங்கப்பட்ட அதிகாரங்கள் அனைத்தையும் அல்லது எதையும் திரும்பப்பெறலாம்.

(2) நீதித்துறை தலைமை நடுவரால் அல்லது மாவட்ட நடுவரால் வழங்கப்பட்ட அதிகாரங்கள் எவையும் முறையே அந்த நடுவர்களால் திரும்பப் பெற்றுக்கொள்ளப்படலாம்.

35. (1) இந்தச் சட்டத்தின் மற்ற விதிகளுக்குட்பட்டு, ஒரு நீதிபதி அல்லது நடுவரின் அதிகாரங்களையும் கடமைகளையும், பதவியில் அவரை அடுத்து வருபவர் செலுத்தவோ புரியவோ செய்யலாம்.

நீதிபதிகள் மற்றும் நடுவர்களின் அதிகாரங்களைப் பதவியில் அவர்களை அடுத்து வருவோர் செலுத்துகை பற்றி.

(2) கூட்டு அல்லது உதவி செஷன்ஸ் நீதிபதி ஒருவரின் பதவிக்கு அடுத்து வருபவர் யார் என்பது குறித்து ஐயம் ஏதேனும் எழும்போது, இந்தச் சட்டத்தை அல்லது இச் சட்டத்தின்படி நடக்கும் நடவடிக்கைகள் அல்லது பிறப்பிக்கப்படும் கட்டளைகளைப் பொறுத்த மட்டில், அத்தகைய கூட்டு அல்லது உதவி செஷன்ஸ் நீதிபதியின் பதவிக்கு அடுத்து வருபவராக எந்த நீதிபதியைக் கொள்ளுதல் வேண்டும் என்பதை, செஷன்ஸ் நீதிபதி எழுத்து மூலமான கட்டளை வாயிலாகத் தீர்மானித்தல் வேண்டும்.

(3) நடுவர் ஒருவரின் பதவிக்கு அடுத்து வருபவர் யார் என்பது குறித்து ஐயம் ஏதேனும் எழும்போது, இந்தச் சட்டத்தைப் பொறுத்தமட்டில், அல்லது இச் சட்டத்தின்படி நடக்கும் நடவடிக்கைகள் அல்லது பிறப்பிக்கப்படும் கட்டளைகளைப் பொறுத்தமட்டில், அத்தகைய நடுவரின் பதவிக்கு அடுத்து வருபவராக எந்த நடுவரைக் கொள்ளுதல் வேண்டும் என்பதை அந்தந்த நிலவரத்திற்கேற்ப, நீதித் துறைத் தலைமை நடுவரோ மாவட்ட நடுவரோ எழுத்து ஒவ்வொருவரையும் அல்லது வேறொருவரையும் உள்ளடக்கும்.

அத்தியாயம் IV.

அ. மேல்நிலைக் காவல் அலுவலர்களின் அதிகாரங்கள்.

மேல்நிலைக் காவல் அலுவலர்களின அதிகாரங்கள்.

36. ஒரு காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் தம் நிலையத்தின் எல்லைகளுக்குள் செலுத்திவரலாகும் அதே அதிகாரங்களை, அவருக்கு மேல்நிலையிலுள்ள காவல் அலுவலர்கள் எந்த வட்டாரப் பகுதிக்கு நியமனஞ்செய்யப் பட்டுள்ளார்களோ அப்பகுதி முழுவதும் செலுத்திவரலாம்.

ஆ. நடுவர்களுக்கும் காவல்துறையினருக்கும் உதவுதல்.

பொது மக்கள் எப்போது நடுவர்களுக்கும் காவல் துறையினருக்கும் உதவுவது என்பது.

37. பொதுமக்களில் ஒவ்வொருவரும், பின்வருவனவற்றிற்காகத் தம் உதவியை நியாயமான முறையில் கோருகின்ற ஒரு நடுவர் அல்லது காவல் அலுவலருக்குத் துணை புரியக் கட்டுப்பட்டவராவார்:—

(அ) அந் நடுவர் அல்லது காவல் அலுவலருக்கு எவரைக் கைது செய்வதற்கு அதிகாரமிருக்கிறதோ அவரைப் பிடிப்பதற்கு, அல்லது அவர் தப்பித்துக்கொள்ளுவதைத் தடுப்பதற்கு, அல்லது

(ஆ) அமைதிக் குலைவைத் தடுப்பதற்கு அல்லது ஒடுக்குவதற்கு; அல்லது

(இ) இருப்புப்பாதை, கால்வாய், தந்தி அல்லது பொதுச் சொத்து எதற்கேனும் எந்தச் சேதத்தையும் இழைக்கும் முயற்சியைத் தடுப்பதற்கு.

பிடி கட்டளையை நிறைவேற்றுகின்ற காவல் அலுவலல்லாத பிறர் ஒருவருக்கு உதவுதல்.

38. பிடிகட்டளையொன்று காவல் அலுவலல்லாத ஒருவருக்குக் குறிப்பிட்டனுப்பப்பட்டிருக்கும்போது, அவர் அருகிலிருந்துகொண்டும் அப்பிடிகட்டளையை நிறைவேற்றுவதில் செயற்பட்டுக்கொண்டுமிருந்தால், வேறெவரும் அப்பிடிகட்டளையை நிறைவேற்றுவதில் உதவி செய்யலாம்.

45/1860. சில குற்றங்களைக் குறித்துப் பொது மக்கள் தகவல் கொடுக்க வேண்டுமென்பது.

39. (1) இந்தியத் தண்டனைச் சட்டத்தில் வரும் கீழ்க்கண்ட பிரிவுகளில் யாதொன்றின்படியும் தண்டிப்பதற்குரிய குற்றம் எதுவும் செய்யப்பட்டுள்ளதைப் பற்றி, அல்லது அத்தகைய குற்றம் எதையும் வேறெவரேனும் செய்ய எண்ணியிருப்பதைப்பற்றித் தெரிந்த ஒவ்வொருவரும், நியாயமான காரணம் எதுவுமில்லாதபோது—அந்தக்

காரணத்தை மெய்ப்பிக்கும் பொறுப்பு அவரையே சார்ந்தது—அச் செயலையோ, செய்ய இருக்கும் அவ்வெண்ணத்தையோ குறித்து, மிக அண்மையிலுள்ள நடுவர் அல்லது காவல் அலுவலருக்கு உடனடியாகத் தகவல் கொடுத்தல் வேண்டும்;

(i) 121 ஆவது பிரிவு முதல், 126 ஆவது பிரிவுவரை, இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக, மற்றும் 130 ஆவது பிரிவு (அதாவது, மேற்சொன்ன சட்டத்தின் VI ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, அரசுக்கு விரோதமான குற்றங்கள்);

(ii) 143, 144, 145, 147 மற்றும் 148 ஆவது பிரிவுகள் (அதாவது, மேற்சொன்ன சட்டத்தின் VIII ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, பொது அமைதிக்கு விரோதமான குற்றங்கள்);

(iii) 161 ஆவது பிரிவு முதல், 165 அ பிரிவு வரை இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக (அதாவது, சட்ட விரோதமான கைக்கூலி தொடர்பான குற்றங்கள்);

(iv) 272 ஆவது பிரிவு முதல் 278 ஆவது பிரிவு வரை, இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக (அதாவது, உணவு மற்றும் மருந்துகளின் கலப்படம் முதலியவை தொடர்பான குற்றங்கள்);

(v) 302, 303 மற்றும் 304 ஆவது பிரிவுகள் (அதாவது உயிரைப் பாதிக்கின்ற குற்றங்கள்);

(vi) 382 ஆவது பிரிவு (அதாவது, களவு செய்யும் நோக்கத்தோடு மரணம், காயம் அல்லது தடைசெய்தலில் விளைவிப்பதற்கான முன்னேற்பாட்டைச் செய்தபின்பு, களவு செய்யும் குற்றம்);

(vii) 392 ஆவது பிரிவு முதல் 399 ஆவது பிரிவு வரை, இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக; மற்றும் 402 ஆவது பிரிவு (அதாவது, கொள்ளையடித்தல், கூட்டுக்கொள்ளை ஆகிய குற்றங்கள்);

(viii) 409 ஆவது பிரிவு (அதாவது, பொது ஊழியர் செய்யும் நம்பிக்கை மோசடிக் குற்றம் முதலியன);

(ix) 431 ஆவது பிரிவு முதல் 439 ஆவது பிரிவு வரை, இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக (அதாவது சொத்தழிப்புக் குற்றங்கள்) ;

(x) 449 ஆவது பிரிவும் 450 ஆவது பிரிவும் (வீட்டிற்குள் அத்துமீறி நுழையுங் குற்றம்) ;

(xi) 456 ஆவது பிரிவு முதல் 460 ஆவது பிரிவு வரை, இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக (அதாவது, வீட்டிற்குள் பதுங்கலாக அத்துமீறி நுழையும் குற்றங்கள்) ; மற்றும்

(xii) 489-அ பிரிவு முதல் 489-உ பிரிவு வரை, இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக (அதாவது, ரூபாய்த் தாள்கள் மற்றும் வங்கித் தாள்கள் தொடர்பான குற்றங்கள்).

(2) இந்தியாவிற்கு வெளியில் எவ்விடத்திலேனும் செய்யப்பட்ட எந்தச் செயலும் இந்தியாவிற்குள் செய்யப் பட்டால் ஒரு குற்றமாக அமையுமாயின், அது இந்தப் பிரிவைப் பொறுத்த மட்டில், "குற்றம்" என்னும் பதத்தில் உள்ளடங்கும்.

அறிவிப்புச் செய்வதற்குக் கிராம விவகாரங்கள் சம்பந்தமாக வேலையிலமர்ந்துள்ள அலுவலர்களுக்குள்ள கடமை.

40. (1) கிராம விவகாரங்கள் சம்பந்தமாக வேலையிலமர்ந்துள்ள ஒவ்வொரு அலுவலரும், மற்றும் கிராமத்தில் குடியிருக்கின்ற ஒவ்வொருவரும், பின்வருவன வற்றைப் பற்றித் தம்மிடம் இருக்கும் தகவல் எதையும், மிக்க அருகிலுள்ள நடுவர் அல்லது மிக்க அருகிலுள்ள காவல் நிலையத்தின் பொறுப்பு அலுவலர், இவர்களில் எவர் மிகவும் அருகிலுள்ளாரோ அவருக்கு உடனடியாகத் தெரிவித்தல் வேண்டும் :—

(அ) அத்தகைய கிராமத்தில் அல்லது அதற்கருகில், திருட்டுப் பொருளைப் பெறுவதிலோ விற்பதிலோ பேர்போனவருடைய நிலையான அல்லது தற்காலிகமான இருப்பிடம் பற்றி ;

(ஆ) கொலைக் கூட்டத்தைச் சேர்ந்தவனென்றோ, கொள்ளைக்காரனென்றோ, தப்பியோடிய குற்றவாளியென்றோ அல்லது விளம்பரப்படுத்தப்பட்ட குற்றவாளியென்றோ தமக்குத் தெரிந்த, அல்லது தாம் நியாயமாகச் சந்தேகிக்கிற எவரொருவரும், அந்தக் கிராமத்திற்குள் வந்து போகிறார், அல்லது அதன் வழியாகப் போகிறார் என்பது பற்றி ;

(இ) ஜாமீனில் விடாக் குற்றம் எதுவும், அல்லது இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 143 ஆவது பிரிவு, 144 ஆவது பிரிவு, 145 ஆவது பிரிவு, 147 ஆவது பிரிவு அல்லது 148 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரிய குற்றம் எதுவும், அத்தகைய கிராமத்தில், அல்லது அதற்கருகில் செய்யப்பட்டிருப்பது, அல்லது செய்ய எண்ணியிருப்பது பற்றி ;

(ஈ) அத்தகைய கிராமத்தில், அல்லது அதற்கருகில் திடீர் மரணமோ இயற்கைக்கு மாறான மரணமோ ஏற்பட்டிருப்பது, அல்லது சந்தேகத்திற்குரிய சூழ்நிலைகளில் மரணமெதுவும் ஏற்பட்டிருப்பது, அல்லது அத்தகைய மரணம் நேர்ந்திருப்பதாக நியாயமான ஐயத்தை உண்டாக்கும் சூழ்நிலைகளில், அந்தக் கிராமம் அல்லது அதற்கருகில் பிணமோ பிணத்தின் பகுதியோ கண்டுபிடிக்கப் பட்டிருப்பது, அல்லது ஜாமீனில் விடாக் குற்றமொன்று ஒருவர் சம்பந்தமாகச் செய்யப்பட்டிருக்கிறது என்ற நியாயமான ஐயத்தை உண்டாக்கும் சூழ்நிலைகளில் அவர் அத்தகைய கிராமத்திலிருந்து மறைந்திருந்தால், அந்த மறைவு பற்றி ;

(உ) எந்தச் செய்கை இந்தியாவிற்குள் செய்யப் பட்டால், இந்தியத் தண்டனைச் சட்டத்தின் கீழ்க்கண்ட, அதாவது 231 முதல் 238 வரை (இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக), 302, 304, 382, 392 முதல் 399 (இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக), 402, 435, 436, 449, 450, 457 முதல் 460 (இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக), 489 அ, 489 ஆ, 489 இ, மற்றும் 489 ஈ ஆகிய பிரிவுகளில் எதன்படியும் தண்டிப்பதற்குரிய குற்றமாக இருக்குமோ, அந்தச் செய்கை எதுவும் அத்தகைய கிராமத்திற்கருகில், ஆனால் இந்தியாவிற்கு வெளியேயுள்ள எந்த இடத்திலேனும் செய்யப்பட்டிருப்பது, அல்லது செய்ய எண்ணியிருப்பது பற்றி ; 45/1860.

(ஊ) ஒழுங்கை நிலைநாட்டுதல், அல்லது குற்றந் தடுத்தல் அல்லது ஆள் அல்லது சொத்து பாதுகாவல் இவற்றில் எதையேனும் பாதிக்கக்கூடியதாயுள்ள எந்த விஷயத்தைப் பற்றித் தகவல் தெரிவிக்குமாறு தமக்கு, மாநில அரசின் முன்அனுமதியுடன் பிறப்பிக்கும் பொது

அல்லது சிறப்புக் கட்டளை மூலமாக மாவட்ட நடுவர் உந்தரவிட்டிருக்கின்றாரோ, அந்த விஷயம் எதையும் பற்றி.

(2) இந்தப் பிரிவில்,—

(i) "கிராமம்" என்பது கிராம நிலங்கள் உள்ளடங்கியது ;

(ii) இந்தச் சட்டம் அளாவிநிற்கும் மண்டலங்களில் எந்தச் செயல் செய்யப்பட்டால், அது இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பின்வரும் பிரிவுகள், அதாவது 302, 304, 382, 392 முதல் 399 வரை (இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக), 402, 435, 436, 449, 450 மற்றும் 457 முதல் 460 வரை (இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக), இவற்றில் எதன்படியும் தண்டிப்பதற்குரிய ஒரு குற்றமாக ஆகுமோ, அந்தச் செய்கையைப் பொறுத்து, இந்தியாவில் இந்தச் சட்டம் அளாவிநில்லாத எந்த மண்டலத்திலேனுமுள்ள நீதிமன்றம் அல்லது அதிகாரியால் ஒரு குற்றவாளியென விளம்பரப்படுத்தப்பட்டுள்ள எவரையும் "விளம்பரப்படுத்தப் பட்ட குற்றவாளி" என்னும் சொற்றொடர் உள்ளடக்கும். 45/1860.

(iii) "கிராம விவகாரங்கள் சம்பந்தமாக வேலையிலமர்த்துள்ள அலுவலர்" என்னும் சொற்கள், அந்தக் கிராமத்தின் பஞ்சாயத்து உறுப்பினர் ஒருவர் என்பது பொருள்படும் ; மற்றும் அது கிராமத் தலைவரையும் அந்தக் கிராமத்தின் நிருவாக சம்பந்தமான காரியம் எதனையும் புரிந்துவர நியமனஞ் செய்யப்பட்ட அலுவலர் ஒவ்வொருவரையும் அல்லது வேறெவரையும் உள்ளடக்கும்.

அத்தியாயம் V.

ஆட்களைக் கைது செய்தல்.

காவல் துறை யினர்எப்போது பிடிவட்டனை யினறிக் கைது செய்யலாம் எனபது.

41. (1) காவல் அலுவலர் எவரும், ஒரு நடுவரிடமிருந்து கட்டளையில்லாமலும், பிடிகட்டளையில்லாமலும் பின்வரும் எவரையும் கைது செய்யலாம் :—

(அ) கைது செய்தற்குரிய குற்றம் எதிலும் சம்பந்தப் பட்டிருக்கின்றவரை, அல்லது அவ்வாறு சம்பந்தப் பட்டிருப்பதாக எவர்பேரில் நியாயமான முறையிடொன்று செய்யப்பட்டிருக்கிறதோ, அல்லது நம்பகமான தகவல் வந்திருக்கிறதோ, அல்லது நியாயமான சந்தேகம் இருந்து வருகிறதோ அத்தகையவரை; அல்லது

(ஆ) சட்டபூர்வமான காரணமின்றி (அக்காரணத்தை மெய்ப்பிக்கும் சுமை அவரையே சார்ந்தது) தம் கைவசத்தில் கன்னமிடுவதற்கான கருவி எதையும் வைத்திருக்கின்றவரை ;

(இ) இந்தச் சட்டத்தின்படி அல்லது மாநில அரசின் கட்டளை மூலம்ாக, குற்றவாளியென விளம்பாப்படுத்தப் பட்டுள்ளவரை ; அல்லது

(ஈ) திருடப்பட்டதென நியாயமாகச் சந்தேகிக்க லாகும் பொருள் எதுவும் எவரது கைவசத்தில் காணப்படுகிறதோ, மற்றும் அத்தகைய பொருளைப் பொறுத்து ஒரு குற்றத்தைச் செய்திருப்பதாக எவர்பேரில் நியாயமாகச் சந்தேகம் எழுகிறதோ அவரை ;

(உ) ஒரு காவல் அலுவலர் தம் கடமையை நிறைவேற்றுங்கால் அவரைத் தடை செய்கிறவரை ; அல்லது சட்டபூர்வமான காவலில் இருந்து தப்பித்துக் கொண்டவர், அல்லது தப்பித்துக் கொள்ள முயற்சி செய்கிறவரை ; அல்லது

(ஊ) ஒன்றியத்து ஆயுதப் படைகள் எதிலிருந்தும் தம் பொறுப்பை விட்டு ஓடி வந்தவரென நியாயமாகச் சந்தேகிக்கப்படுகிறவரை ; அல்லது

(எ) எந்தச் செய்கை இந்தியாவில் செய்யப்பட்டால், தண்டிப்பதற்குரிய குற்றமாக இருந்திருக்குமோ, மற்றும் எந்தச் செய்கைக்காக, உரிய நாட்டிடம் குற்றவாளியை ஒப்படைத்தல் தொடர்பான ஒரு சட்டத்தின்படியோ, வேறு

விதமாகவோ, இந்தியாவில் கைது செய்யப்படுவதற்கு அல்லது காவலில் வைக்கப்படுவதற்கு ஒருவர் உட்பட்டவரோ, அந்தச் செய்கையை இந்தியாவிற்கு வெளியே எந்த இடத்திலேனும் செய்வதில் சம்பந்தப் பட்டிருக்கின்றவர்; அல்லது அச் செய்கையில் சம்பந்தப் பட்டிருப்பதாக எவர்பேரில் நியாயமான முறையீடொன்று செய்யப்பட்டிருக்கிறதோ, அல்லது நம்பகமான தகவல் வந்திருக்கிறதோ அல்லது நியாயமான சந்தேகம் இருந்து வருகிறதோ அவரை; அல்லது

(ஏ) விடுவிக்கப்பட்ட குற்றவாளியாக இருந்து, 356 ஆவது பிரிவின் (5) ஆவது உட்பிரிவின்படி செய்யப்பட்ட விதி எதனையும் மீறுகிறவரை; அல்லது

(ஐ) எவரைக் கைது செய்வதற்காக, வேண்டுகோள் எதுவும், எழுத்து மூலமாயினும் வாய்மொழியிலாயினும், மற்றொரு காவல் அலுவலரிடமிருந்து வந்துள்ளதோ அவரை;

ஆனால், அவ் வேண்டுகோள் கைது செய்யப்பட வேண்டியவர் யார் என்பதையும் எந்தக் குற்றத்திற்காக அல்லது பிற காரணத்திற்காக அவ்வாறு கைது செய்யப்பட வேண்டியுள்ளது என்பதையும் குறிப்பிட வேண்டும்; மற்றும் அவ் வேண்டுகோளைப் பிறப்பித்த அலுவலால் பிடிகட்டளையின்றி அவர் சட்டப்படி கைது செய்யப்படலாம் என்பதும் அதிலிருந்து தோன்ற வேண்டும்.

(2) ஒரு காவல் நிலையப் பொறுப்பு அலுவலர், அதே முறையில், 109 ஆவது பிரிவில் அல்லது 110 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வர்க்கங்களில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவைகளைச் சேர்ந்த எவரையும் கைது செய்யலாம் அல்லது செய்விக்கலாம்.

பெயரையும் இருப்பிடத்தையும் தெரிவிக்க மறுத்தால், கைது செய்யலாம் என்பது.

42. (1) கைது செய்தற்குரியதல்லாத குற்றமொன்றை ஒரு காவல் அலுவலரின் முன்னிலையில் செய்திருக்கிற அல்லது செய்திருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள எவரேனும், அவ்வலுவலர் கோரியதன்பேரில், தம் பெயரையும் இருப்பிடத்தையும் தெரிவிக்க மறுக்கும்போது, அல்லது பொய்யானதென அத்தகைய அலுவலர் நம்புவதற்குக் காரணமுள்ள ஒரு பெயரையும் இருப்பிடத்தையும் தெரிவிக்கும்போது, அவரது பெயரையும் இருப்பிடத்தையும் உறுதியாகத் தெரிந்து கொள்வதற்காக அவரை அவ்வலுவலர் கைது செய்யலாம்.

(2) அத்தகையவரின் உண்மையான பெயரையும் இருப்பிடத்தையும் உறுதி செய்த பின்பு, ஒரு நடுவர் முன்னிலையில், கோரப்பட்டால், ஆஜராவதாக ஜாமீன் பத்திரம் ஒன்றை ஜாமீன்தார்களுடனே இல்லாமலோ, அவர் எழுதிக் கொடுத்தால், அவர் விடுவிக்கப்படுதல் வேண்டும்.

ஆனால் அத்தகையவர் இந்தியாவில் குடியிருப்பவராக இல்லையெனில், அந்த ஜாமீன் பத்திரத்திற்கு இந்தியாவில் குடியிருக்கின்ற ஒரு ஜாமீன்தார் அல்லது ஜாமீன்தார்கள் ஜாமீன் கொடுத்தல் வேண்டும்.

(3) கைது செய்யப்பட்ட நேரத்திலிருந்து இருபத்து நான்கு மணி நேரத்திற்குள் அத்தகையவரின் உண்மையான பெயரையும் இருப்பிடத்தையும் உறுதியாகத் தெரிந்துகொள்ள முடியவில்லையெனில், அல்லது அவர் ஜாமீன் பத்திரத்தை எழுதிக் கொடுக்கத் தவறினால், அல்லது அவ்வாறு கோரப்படும்போது, போதுமான ஜாமீன்தார்களை அளிக்கத் தவறினால், அவரை உடனடியாக அதிகார வரம்புடையவரும் மிக்க அருகிலுள்ளவருமான நடுவரிடம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தனிப்பட்ட வரால் கைது செய்யப்படு தலும் அதன் மீதான நடை முறையும்.

43. (1) ஜாமீனில் விடக்கூடாததும் கைது செய்தற் குரியதுமான ஒரு குற்றத்தைத் தம் முன்னிலையில் செய்கின்ற எவரையும், அல்லது விளம்பரப்படுத்தப்பட்ட குற்றவாளி எவரையும் தனிப்பட்டவர் எவரும் கைது செய்யலாம் அல்லது செய்விக்கலாம்; மற்றும் அனுவரியமான நாமதமின்றி, அவ்வாறு கைது செய்யப் பட்ட எவரையும், ஒரு காவல் அலுவலரிடம் ஒப்படைத்தல் அல்லது ஒப்படைக்கச் செய்தல்வேண்டும்; அல்லது ஒரு காவல் அலுவலர் இல்லாதபோது, அவரைக் கட்டுக் காவலில் இட்டு, மிக்க அருகிலுள்ள காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்லுதலோ, கொண்டு செல்லச் செய்வித்தலோ வேண்டும்.

(2) அத்தகையவர் 41 ஆவது பிரிவின் விதிகளுக்குட் பட்டவர் என்று நம்புவதற்குக் காரணமிருப்பின், ஒரு காவல் அலுவலர் அவரை மீண்டும் கைது செய்தல் வேண்டும்.

(3) கைது செய்வதற்குரியதல்லாத ஒரு குறறத்தை அவர் செய்திருப்பதாக நம்புவதற்குக் காரணமிருந்து, ஒரு காவல் அலுவலர் கோரியதன் பேரில் தம் பெயரையும்

இருப்பிடத்தையும் தெரிவிக்க அவர் மறுப்பாராயின், அல்லது பொய்யானதென அத்தகைய அலுவலர் நம்புவதற்குக் காரணமுள்ள ஒரு பெயரையும் இருப்பிடத்தையும் தெரிவிப்பாராயின், அவர் மீது, 42 ஆவது பிரிவின் விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்; ஆனால், எந்தக் குற்றத்தையும் அவர் செய்திருப்பதாக நம்புவதற்குப் போதுமான காரணமில்லையாயின், அவர் உடனடியாக விடுவிக்கப்படுதல் வேண்டும்.

நடுவரால் கைது செய்யப்படுதல்.

44. (1) ஒரு நடுவரின் முன்னிலையில், அவர் நிருவாகத் துறை நடுவராயினும் நீதித் துறை நடுவராயினும், அவரது வட்டார அதிகார வரம்புக்குள் குற்றம் ஏதேனும் செய்யப்படும்போது, அவர் அக் குற்றவாளியைத் தாமே கைது செய்யலாம், அல்லது கைது செய்யுமாறு எவருக்கும் கட்டளையிடலாம்; மற்றும் அதன்பின் ஜாமீனைப் பற்றி இதில் அடங்கியுள்ள விதிகளுக்குட்பட்டு, அக் குற்றவாளியை அவர் காவலுக்கு அனுப்பிவைக்கலாம்.

(2) குறிப்பிட்ட நேரத்திலும் சூழ்நிலைகளிலும் பிடிகட்டளை பிறப்பித்து ஒருவரைக் கைது செய்ய அதிகாரம் கொண்டுள்ள நடுவர் எவரும், அவர் நிருவாகத் துறை நடுவராயினும் நீதித் துறை நடுவராயினும், தம் வட்டார அதிகார வரம்புக்குள் அத்தகைய எவரையும் எந்த நேரத்திலும் கைது செய்யலாம் அல்லது தம் முன்னிலையில் கைது செய்விக்கக் கட்டளையிடலாம்.

ஆயுதப்படைகளின் உறுப்பினர்களுக்குக் கைது செய்யப்படுவதிலிருந்து பாதுகாப்பு அளித்தல்.

45. (1) 41 முதல் 44 ஆவது பிரிவு வரை (இரு பிரிவுகளும் உள்ளடங்கலாக) உள்ள பிரிவுகளில் என்ன கண்டிருந்தபோதிலும், ஒன்றியத்து ஆயுதப் படைகளின் உறுப்பினர் எவரையும், தம் அலுவல் முறைக் கடமைகளை ஆற்றுவதில் அவர் செய்த அல்லது செய்ததாகக் கருதப்பட்ட எதற்காகவும், மத்திய அரசின் சம்மதத்தைப் பெற்றதற்குப் பின்பல்லாமல், கைது செய்தல் கூடாது.

(2) பொது ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள படைகளைச் சேர்ந்த உறுப்பினர்களில் தான் அறிவிக்கை மூலமாகக் குறிப்பிடுகிற வகுப்பினர் அல்லது வர்க்கத்தினர் எங்கு ஊழியம் புரிந்து வருவதாயிருந்தாலும், அவர்கள் மீது (1) ஆவது உட்பிரிவின் விதிகள் இயங்க வேண்டுமென மாநில அரசு

கட்டளையிடலாம்; மற்றும் அதன் பேரில், அந்த உட்பிரிவில் வருகின்ற "மத்திய அரசு" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "மாநில அரசு" என்னும் சொற்றொடர் இருந்ததுபோன்று, அந்த உட்பிரிவின் விதிகள் இயங்கும்.

கைது செய்தல் எவ்வாறு என்பது.

46. (1) கைது செய்கையில், காவல் அலுவலரோ அதைச் செய்கின்ற மற்றவரோ கைது செய்யப்பட வேண்டியவர் சொல்லால் அல்லது செயலால் காவலுக்குப் பணிந்து உட்பட்டாலன்றி, அவருடைய உடம்பை நேரடியாகத் தொடவோ, கட்டுக் காவலில் வைக்கவோ வேண்டும்.

(2) அத்தகையவர், தம்மைக் கைது செய்யும் முயற்சியை வன்மையாகத் தடுக்கிறார், அல்லது தாம் கைது செய்யப்படுவதிலிருந்து தந்திரமாகத் தப்பிக்க முயற்சி செய்கிறார் எனில், அத்தகைய காவல் அலுவலரோ மற்றவரோ கைது செய்வதை நிறைவேற்ற அவசியமான எல்லா உபாயங்களையும் மேற்கொள்ளலாம்.

(3) இந்தப் பிரிவிலுள்ள எதுவும், மரண அல்லது ஆயுள் தண்டனைக்குரிய குற்றம் சாட்டப்படாத ஒருவரது மரணத்தை விளைவிப்பதற்கான உரிமையை அளிக்கவில்லை.

நாடப்படுபவர் புகுந்துள்ள இடத்தைச் சோதனையிடுதல்.

47. (1) கைது செய்யப்பட வேண்டியவர் ஏதாவது ஓர் இடத்திற்குள் புகுந்திருக்கிறார் என்றோ, அந்த இடத்திற்குள் இருக்கின்றார் என்றோ ஒரு பிடிகட்டளையின்படி செயற்படுகின்ற எவரேனும், அல்லது கைது செய்ய அதிகாரம் கொண்டுள்ள காவல் அலுவலர் எவரேனும் நம்புவதற்குக் காரணமிருப்பின், அந்த இடத்தில் குடியிருக்கின்ற அல்லது அந்த இடத்தின் பொறுப்பினை உடைய எவரும், மேற்சொன்னவாறு செயற்படுகின்றவரோ அத்தகைய காவல் அலுவலரோ கோரியதன் பேரில், அவ்விடத்திற்குள் தடையின்றி நுழைவதற்கு அவரை விடுவதுடன், அதில் சோதனையிடுவதற்காக நியாயமான எல்லா வசதிகளையும் அளித்தலும் வேண்டும்.

(2) (1) ஆவது உட்பிரிவின்படி அத்தகைய இடத்திற்குள் நுழைய முடியவில்லையாயின், ஒரு பிடிகட்டளையை நிறைவேற்றும் சந்தர்ப்பத்தில், அத்தகைய இடத்திற்குள் நுழைந்து அதில் சோதனையிடுவது எவருக்கும் சிட்டபூர்வ

மானதாகும்; மற்றும் ஒரு பிடிகட்டளையைப் பெறலாம் என்றாலும், கைது செய்யப்பட வேண்டியவருக்குத் தப்பித்துச் செல்லும் வாய்ப்பினைக் கொடுக்காமல் அந்தப் பிடிகட்டளையைப் பெற முடியாத சந்தர்ப்பத்தில் ஒரு காவல் அலுவலர் அவ்வாறு செய்வதும் சட்டபூர்வமானதாகும்; மற்றும் அத்தகைய இடத்திற்குள் புகுவதற்காக, மேற்சொன்ன எவரும் தமக்குள்ள அதிகாரத்தையும் நோக்கத்தையும் அறிவித்தும், நுழைவை உரியவாறு கோரியதற்கும் பின்பு, அவரால் புக முடியவில்லையாயின், வீடு அல்லது இடம் எதிலும் அது கைது செய்யப்பட வேண்டியவருடையதாயினும், வேறெவருடையதாயினும், அதன் வெளிக்கதவு அல்லது உட்கதவையோ ஜன்னலையோ உடைத்துத் திறத்தல் சட்டபூர்வமானதாகும்.

ஆனால் அத்தகைய இடம் எதுவும், வழக்கத்தின்படி வெளியில் முகங்காட்டாத (கைது செய்யப்பட வேண்டியவரல்லாத) ஒரு பெண்ணின் நேரடி அலுபோகத்திலுள்ள அறையாயின், அத்தகைய ஆளோ, காவல் அலுவலரோ அந்த அறையில் நுழைவதற்கு முன்பு, அப்பெண் அவ்விடத்தை விட்டகல சுதந்திரமுண்டு என்பதாக அறிவித்து, அவ்வாறு விட்டகல்வதற்குத் தகுந்த எல்லா வசதிகளையும் அவருக்கு அளித்தல் வேண்டும்; அதற்குப் பின்பு அந்த அறையை உடைத்துத் திறந்து அதற்குள் நுழையலாம்.

(3) காவல் அலுவலர் எவரும் அல்லது கைது செய்ய அதிகாரமளிக்கப்பட்டுள்ள வேறெவரும், கைது செய்கின்ற நோக்கத்திற்காக, வீடு அல்லது இடமொன்றில் சட்டபூர்வமாக நுழைந்த பிறகு, அங்கே தடுத்து வைக்கப்பட்டுள்ள தம்மையோ வேறெவரையுமோ விடுவித்துக்கொள்ள வேண்டி, அதன் வெளிக்கதவு அல்லது உட்கதவை அல்லது ஜன்னலை உடைத்துத் திறக்கலாம்.

குற்றவாளி கூட மற்ற அதிகார எல்லைக்குள் தப்பித்துச் செல்லுதல்.

48. ஒரு காவல் அலுவலர், கைது செய்வதற்குத் தமக்கு அதிகாரமுள்ள எவரையும் பிடிகட்டளையின்றிக் கைது செய்யும் நோக்கத்தோடு, இந்தியாவிலுள்ள எந்த இடத்திலுள்ளும் அவரைத் துரத்திச் செல்லலாம்.

அனுகிய மான தடங்கல் கூடாது என்பது பற்றி.

49. கைது செய்யப்பட்டவர் தப்பித்துக் கொள்ளுவதைத் தடுக்க எவ்வளவு அவசியமோ அவ்வளவிற்கு மேற்பட்ட தடங்கலுக்கு அவரை உள்ளாக்குதல் கூடாது.

கைது செய்யப் பட்டவருக்கு, கைது செயவ தற்கான கார ணங்களையும் ஜாமீனில் போவதற் குள்ள உரிமை யையும் பற்றித் தெரிவித்தல்.

50. (1) ஒவ்வொரு காவல் அலுவலரும், அல்லது பிடிகட்டளையின்றி எவரையும் கைது செய்கின்ற வேறெவரும் எந்தக் குற்றத்திற்காக ஒருவர் கைது செய்யப்படுகிறாரோ அந்தக் குற்றத்தின் முழு விவரங்களை, அல்லது அவ்வாறு கைது செய்வதற்கான மற்ற காரணங்களை அவருக்கு உடனடியாகத் தெரிவித்தல் வேண்டும்.

(2) ஜாமீனில் விடாக் குற்றமொன்றைச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டவரல்லாத வேறெவரையும் பிடிகட்டளையின்றி ஒரு காவல் அலுவலர் கைது செய்யுமிடத்து, அக்காவல் அலுவலர், கைது செய்யப்பட்டவருக்கு ஜாமீனில் விடுபட உரிமை உண்டு என்றும், அவர் தம் சார்பாக ஜாமீனுக்கு ஆட்களை ஏற்பாடு செய்யலாம் என்றும் அவரிடம் தெரிவிக்கவேண்டும்.

கைது செய்யப் பட்டவரைச் சோதனையிடுதல்.

51. (1) ஜாமீனில் விடுவதற்கு வகை செய்யாத ஒரு பிடிகட்டளையின்படி ஒருவர் ஒரு காவல் அலுவலரால் கைது செய்யப்படும்போதெல்லாம், அல்லது ஜாமீனில் விடுவதற்கு வகைசெய்கிற ஒரு பிடிகட்டளையின்படி அவ்வாறு காவல் அலுவலரால் கைது செய்யப்பட்டு, ஆனால் கைது செய்யப்பட்டவர் ஜாமீன் கொடுக்க முடியாதிருக்கும் போதெல்லாம், மற்றும்

பிடிகட்டளையில்லாமலோ, ஒரு பிடிகட்டளையின்படி தனிப்பட்ட ஒருவராலோ ஒருவர் கைது செய்யப்பட்டு, கைது செய்யப்பட்டவரைச் சட்டப்படி ஜாமீனில் விடக் கூடாத போதெல்லாம், அல்லது அவர் ஜாமீன் அளிக்க இயலாதபோதெல்லாம்,

கைது செய்கின்ற அலுவலரோ, அல்லது தனிப்பட்ட ஒருவரால் கைது செய்யப்படும்போது அவர் கைது செய்யப்பட்டவரை எவரிடம் ஒப்படைக்கிறாரோ அந்தக் காவல் அலுவலரோ, கைது செய்யப்பட்டவரைச் சோதனை செய்து, அவரிடத்தில் காணப்படும் அவசியமான உடுக்கும்

ஆடைகள் தவிர மற்ற எல்லா உருப்படிகளையும் பாதுகாப்பில் வைக்கலாம்; மற்றும் கைது செய்யப்பட்டவரிடமிருந்து உருப்படி எதேனும் கைப்பற்றப்படுமிடத்து, காவல் அலுவலரால் கைக்கொள்ளப்பட்ட உருப்படிகளைக் குறிப்பிடுகின்ற வரைச்சீட்டு ஒன்று அத்தகையவருக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(2) ஒரு பெண்ணைச் சோதனை செய்விப்பது அவசியமாக இருக்கும்போதெல்லாம், சற்றும் பண்பு குலையாத வகையில் வேறொரு பெண்ணால் அச்சோதனை செய்யப்படுதல் வேண்டும்.

தீங்கு விளைவிக்கும் ஆயுதங்களைக் கைப்பற்றுவதற்கான அதிகாரம்.

52. இந்தச் சட்டத்தின்படி கைதுசெய்கின்ற அலுவலர் அல்லது வேறெவரும், கைதுசெய்யப்பட்டவர் தம்வசம் வைத்திருக்கும் தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் எவற்றையும் அவரிடமிருந்து எடுக்கலாம்; மற்றும் அவ்வலுவலரோ அவ்வாறு கைது செய்கின்றவரோ கைது செய்யப்பட்டவரை, எவரது முன்னிலையில் கொண்டு செல்ல வேண்டுமென்று இந்தச் சட்டத்தால் கோரப்படுகிறதோ, அந்த நீதிமன்றம் அல்லது அலுவலரிடம், அவ்வாறு எடுக்கப்பட்ட எல்லா ஆயுதங்களையும் ஒப்படைத்தல் வேண்டும்.

காவல் அலுவலரின் வேண்டுகோளின் பேரில் குற்றஞ் சாட்டப்பட்டவரை மருத்துவர் ஒருவர் பரிசோதனை செய்தல்.

53. (1) குற்றத்தைச் செய்ததான ஒரு குற்றச்சாட்டின் மீது ஒருவர் கைது செய்யப்படும்போது, அவரது உடம்பைப் பரிசோதனை செய்தால் அக்குற்றம் செய்யப்பட்டது பற்றிய சான்றை அச்சோதனை அளிக்கும் என்று நம்புவதற்கு நியாயமான காரணங்களை அக்குற்றத்தின் தன்மையும் அது செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படும் சூழ்நிலைகளும் அளிக்குமேயானால், அப்போது தூணை ஆய்வாளரின் நிலைக்குக் கீழ்ப்படாத ஒரு காவல் அலுவலரின் வேண்டுகோளின் பேரில் பதிவுபெற்ற ஒரு மருத்துவரும், அவருக்கு உதவியாகவும் அவரது கட்டளையின்படியும் நல்லெண்ணத்துடன் செயற்படுகின்ற எவரும், மேற்சொன்ன சான்றை அளிக்கக்கூடிய விவரங்களை உறுதியாகத் தெரிந்து கொள்வதற்காக நியாயமாக வேண்டிய அளவிற்கு, கைது செய்யப்பட்டவரைப் பரிசோதனை செய்தலும், அந்த நோக்கத்திற்காக நியாயமாக வேண்டிய அளவிற்கு வன்முறையைக் கையாளுதலும் சட்டபூர்வமானதாகும்.

(2) இந்தப் பிரிவின்படி ஒரு பெண்ணின் உடம்பு பரிசோதனை செய்யப்பட வேண்டியதோதெல்லாம், அப் பரிசோதனை பதிவு பெற்ற ஒரு பெண் மருத்துவரால் அல்லது அவரது மேற்பார்வையின்கீழ் மட்டுமே செய்யப்படுதல் வேண்டும்.

விளக்கம்.—இந்தப் பிரிவிலும், 54 ஆவது பிரிவிலும், "பதிவு பெற்ற மருத்துவர்" என்பது, 1956 ஆம் ஆண்டு இந்திய மருத்துவக் கழகச் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (எ) கூறில் வரையறுத்தபடி அங்கீகரிக்கப்பட்ட மருத்துவத் தகுதி எதனையும் பெற்றுள்ளவரும், ஒரு மாநில மருத்துவப் பதிவேட்டில் தம் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளவருமான ஒரு மருத்துவர் என்று பொருள்படும். 102/1956.

கைது செய்யப்பட்டவரின் வேண்டுகோளின் மீது அவரை மருத்துவர் பரிசோதனை செய்தல்.

54. ஒரு குற்றச்சாட்டின்மீதோ வேறுவிதமாகவோ கைது செய்யப்படும் ஒருவர், ஒரு நடுவர் முன் நிறுத்தப்படும்போது அல்லது காவலில் வைக்கப் பட்டிருக்கும்போது எந்த நேரத்திலேனும், தம் உடம்பைப் பரிசோதனை செய்தால், தம்மால் குற்றம் எதுவும் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுவதைப் பொய்ப்பிக்கின்ற அல்லது தம் உடம்புக்கு வேறெவரேனும் செய்த குற்றம் எதையும் மெய்ப்பிக்கின்ற சாட்சியத்தை அளிக்கும் என்று சொல்லித் தம் உடம்பைப் பரிசோதனை செய்யவேண்டும் என்று வேண்டிக்கொள்வாராயின், அந்த வேண்டுகோள் ஆலோசனை செய்வதற்காகவோ, தாமதம் செய்வதற்காகவோ, நீதியின் நோக்கத்தைச் சிதைப்பதற்காகவோ செய்யப் படுகிறது என்று அந் நடுவர் கருதினாலன்றி, பதிவு பெற்ற ஒரு மருத்துவரால் அத்தகையவரின் உடம்பை அவ்வாறு பரிசோதனை செய்வதற்கு அவர் கட்டளையிடவேண்டும்.

காவல் அலுவலர் பிடிகட்டளையின்றிக் கைது செய்ய, தமக்குக்கீழ் நிலையிலுள்ளவரை அனுப்பி வைக்கும்போது நடைமுறை என்ன என்பது.

55. (1) ஒரு காவல் நிலையப் பொறுப்பு அலுவலரோ, XII ஆவது அத்தியாயத்தின்படி புலனாய்வு செய்து வருகின்ற காவல் அலுவலரோ ஒரு பிடிகட்டளையின்றிச் சட்டபூர்வமாகக் கைது செய்யப்படலாகும் எவரையும் பிடிகட்டளையின்றி (தம் முன்னிலையிலல்லாமல் மற்றப்படி) கைது செய்யுமாறு தமக்குக்கீழ் நிலையிலுள்ள அலுவலர் எவரையும் கோரும்போது, அவ்வாறு கோரப்படும் அலுவலருக்கு, கைது செய்யப்படவுள்ளவர் யார் என்பதையும் எந்தக் குற்றத்திற்காக அல்லது வேறு காரணத்திற்காக அவர் கைது செய்யப்பட இருக்கிறார் என்பதையும் குறிப்பிட்டு,

எழுத்து மூலமான கட்டளையொன்றை அவர் கொடுக்க வேண்டும்; மற்றும் அவ்வாறு கோரப்பட்ட அலுவலர், கைது செய்வதற்கு முன்பு, அக் கட்டளையின் சாராம்சத்தைக் கைது செய்யப்பட வேண்டியவருக்கு அறிவிக்க வேண்டும்; மேலும், அத்தகையவரால் வேண்டிக் கொள்ளப்பட்டால், அந்தக் கட்டளையை அவருக்குக் காட்டவும் வேண்டும்.

(2) 41 ஆவது பிரிவின்படி எவரையும் கைது செய்வதற்குக் காவல் அலுவலருக்குள்ள அதிகாரத்தை (1) ஆவது உட்பிரிவிலுள்ள எதுவும் பாதிக்காது.

கைது செய்யப்பட்ட ஒருவரை நடுவர் முன்போ காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் முன்போ கொண்டு செல்லுதல்.

56. பிடிகட்டளையின்றிக் கைது செய்கின்ற ஒரு காவல் அலுவலர், அலுவசியமான தாமதமின்றியும் ஜாமீன் குறித்து இதில் அடங்கியுள்ள விதிகளுக்குட்பட்டும், கைது செய்யப்பட்டவரை, உரிய அதிகார வரம்பு கொண்டுள்ள ஒரு நடுவர் முன்போ, ஒரு காவல் நிலையப் பொறுப்பு அலுவலரின் முன்போ கொண்டுசெல்ல வேண்டும் அல்லது அனுப்பிவைக்க வேண்டும்.

கைது செய்யப்பட்ட ஒருவரை இருபத்து நான்கு மணி நேரத்திற்கு மேல் காவலில் வைத்திருத்தல் கூடாது.

57. பிடிகட்டளையின்றிக் கைது செய்யப்பட்ட ஒருவரை சந்தர்ப்ப சூழ்நிலைகள் எல்லாவற்றையும் கருதும்போது நியாயமெனத் தோன்றும் கால அளவிற்கு மேற்பட்டு காவல் அலுவலர் எவரும், காவலில் வைத்திருத்தல் ஆகாது; மற்றும் 167 ஆவது பிரிவின்படி நடுவர் ஒருவரின் சிறப்புக் கட்டளை இல்லாதபோது, கைது செய்யப்பட்ட இடத்திலிருந்து நடுவரின் நீதிமன்றத்திற்குச் செல்லும் பயணத்திற்கு அவசியமான நேரம் நீங்கலாக, அந்தக் கால அளவானது இருபத்து நான்கு மணி நேரத்திற்கு மேற்படுதல் ஆகாது.

காவல் துறையினர் கைது செய்தது குறித்து அறிவித்தல்.

58. காவல் நிலையங்களின் பொறுப்பு அலுவலர்கள், நகரம் நிலையங்களின் எல்லைகளுக்குள், பிடிகட்டளையின்றிக் கைது செய்யப்பட்டவர்கள் பற்றிய விவரங்களை அத்தகையவர்கள் ஜாமீனில் போக அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இல்லையென்றாலும், மாவட்ட நடுவருக்கோ, அவர் அவ்வாறு கட்டளையிடுவாராயின், உட்கோட்ட நடுவருக்கோ அறிவித்தல் வேண்டும்.

கைது செய்யப்பட்டவர் விடுவிக்கப் படுதல்.

59. ஒரு காவல் அலுவலரால் கைது செய்யப்பட்டுள்ள எவரும் தம் சொந்தப் பத்திரத்தின்மீதோ, ஜாமீன்பேரிலோ, ஒரு நடுவரின் சிறப்பான கட்டளையின்படியோ அல்லாமல், விடுவிக்கப்படுதல் கூடாது.

தப்பித்துச் சென்றதன் பேரில் தொடர்ந்து சென்று மீண்டும் பிடிப்பதற்குள்ள அதிகாரம்.

60. (1) சட்டபூர்வமான காவலிலுள்ள ஒருவர் தப்பித்துக் கொள்வாராயின் அல்லது மீட்கப்படுவாராயின், எவரது காவலிலிருந்து அவர் தப்பித்துக்கொண்டாரோ அல்லது மீட்கப்பட்டாரோ அவர், உடனடியாகத் துரத்திச் சென்று இந்தியாவில் எந்த இடத்திலும் அவரைக் கைது செய்யலாம்.

(2) அவ்வாறு கைது செய்கின்றவர் ஒரு பிடிகட்டளையின்படி செயற்படவில்லையென்றாலும், அவர் கைது செய்யும் அதிகாரத்தைப் பெற்றுள்ள ஒரு காவல் அலுவலராக இல்லை என்றாலும், (1) ஆவது உட்பிரிவின்படி கைது செய்யும் நடவடிக்கைகளின்மீது 47 ஆவது பிரிவின் விதிகள் இயங்க வேண்டும்.

அத்தியாயம் VI.

ஆஜராவதைக் கட்டாயப்படுத்தும் நீதிமுறைக் கட்டளைகள்.

அ. ஆஜர் கட்டளை.

ஆஜர் கட்டளையின் வடிவம்.

61. இந்தச் சட்டத்தின்படி ஒரு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் ஒவ்வோர் ஆஜர் கட்டளையும், எழுத்து வடிவினதாக, இரட்டைப் படிகளில், அந்த நீதிமன்றத்தில் தலைமை வகிக்கின்ற அலுவலராலோ, உயர் நீதிமன்றம், அவ்வப் போது விதி மூலமாக உத்தரவிடலாகும் வேறு அலுவலராலோ கையொப்பமிடப்பட்டு, அந்த நீதிமன்றத்தின் முத்திரையைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

ஆஜர் கட்டளையைச் சார்வு செய்தல் எவ்வாறு என்பது.

62. (1) ஒவ்வொரு ஆஜர் கட்டளையும் ஒரு காவல் அலுவலரால், அல்லது இதன்பொருட்டு மாநில அரசு செய்யலாகும் விதிகளுக்குட்பட்டு, அக் கட்டளையைப் பிறப்பிக்கின்ற நீதிமன்றத்தின் ஓர் அலுவலரால் அல்லது வேறு பொது ஊழியரால் சார்வு செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஆஜர் கட்டளையானது ஆஜராகும்படி கட்டளை யிடப்பட்டவருக்கு அதன் இரட்டைப் படிகளில் ஒன்றை அவருக்குச் சேர்ப்பிப்பதன் மூலமாகவோ அளிக்க முற்படு வதன் மூலமாகவோ, கூடுமானவரை நேர்முகமாகவே சார்வு செய்யப்பட வேண்டும்.

(3) ஆஜர் கட்டளை சார்வு செய்யும் அலுவலர் வேண்டிக் கொண்டால், மற்றொரு இரட்டைப் படியின் பின்பக்கத்தில் அதைப் பெற்றுக் கொண்டதற்கு அவ்வாறு சார்வு செய்யப்படும் ஒவ்வொருவரும் கையொப்பமிடுதல் வேண்டும்.

கூட்டு நிறுவனங்கள் அல்லது சங்கங்களுக்கு ஆஜர் கட்டளையைச் சார்வு செய்தல்.

63. ஒரு கூட்டு நிறுவனத்திற்கான ஆஜர் கட்டளையை அந் நிறுவனத்தின் செயலாளர், வட்டார மேலாளர் அல்லது வேறு முதன்மை அலுவலருக்குச் சார்வு செய்வதன் மூலமாகவோ, இந்தியாவில் உள்ள அக் கூட்டு நிறுவனத்தின் தலைமை அலுவலருக்கு முகவரியிட்டு, பதிவு அஞ்சல் வாயிலாக அனுப்பப்படும் கடிதத்தின் மூலமாகவோ, சார்வு செய்யலாம்; அவ்வாறு கடிதம் அனுப்புவதா யிருந்தால், அக் கடிதம் சாதாரண அஞ்சல் முறையில் எப்போது வந்து சேருமோ அப்போது சார்வு செய்யப் பட்டதாகக் கொள்ளுதல் வேண்டும்.

விளக்கம்.—இந்தப் பிரிவில் "கூட்டு நிறுவனம்" என்பது பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனம் என்றே வேறு கூட்டு நிறுவனம் என்றே பொருளபடும்; மற்றும் 1860 ஆம் 21/1860. ஆண்டு சங்கங்களைப் பதிவு செய்யும் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கத்தையும் உள்ளடக்கும்.

ஆஜராகும்படி கட்டளையிடப்பட்டவரைக் கண்டுபிடிக்க முடியாதபோது சார்வு செய்வது எவ்வாறு என்பது.

64. ஆஜராகும்படி கட்டளையிடப்பட்டவரை, உரிய சிரத்தையோடு முயன்றும் கண்டுபிடிக்க முடியாதபோது, அவருக்கான ஆஜர் கட்டளையின் இரட்டைப் படிகளில் ஒன்றை, அவருடன் குடியிருக்கின்ற அவரது குடும்பத்தைச் சேர்ந்த வயது வந்த ஆண் உறுப்பினர் எவரிடமேனும் கொடுத்துச் சார்வு செய்யலாம்; சார்வு செய்கின்ற அலுவலர் வேண்டினால், அந்த ஆஜர் கட்டளை எவரிடம் அவ்வாறு கொடுக்கப்படுகிறதோ அவர், அதன் மற்றொரு படியின் பின் பக்கத்தில் அதைப் பெற்றுக் கொண்டதற்குக் கையொப்பமிடுதல் வேண்டும்.

விளக்கம்.—இந்தப் பிரிவின் பொருளைப் பொறுத்த மட்டில், ஊழியர் ஒருவர், குடும்பத்தின் உறுப்பினராகார்.

முன்னால் வகை செய்யப்பட்டவாறு சார்வு செய்ய முடியாத போது நடை முறை என்ன என்பது.

65. உரிய சிரத்தையோடு முயன்றும் 62 ஆவது பிரிவு, 63 ஆவது பிரிவு அல்லது 64 ஆவது பிரிவில் வகை செய்யப்பட்டவாறு சார்வு செய்ய முடியவில்லையெனில், சார்வு செய்கின்ற அலுவலர் ஆஜர் கட்டளையின் இரட்டைப் படிகளில் ஒன்றை, ஆஜராகுமாறு கட்டளையிடப்பட்டவர் சாதாரணமாகக் குடியிருக்கும் வீடு அல்லது வீடு சார்ந்த இடத்தின் சுற்றுப்புற ஓர் இடத்தில் ஒட்ட வேண்டும்; மற்றும் அதன் பின்னர் நீதிமன்றம், தான் பொருத்தமெனக் கருதும் பரிசீலனைகளைச் செய்த பின்பு, அந்த ஆஜர் கட்டளை உரிய முறையில் சார்வு செய்யப்பட்டிருப்பதாக விளம்பலாம்; அல்லது தான் எற்றெனக் கருதும் முறையில் மறுபடியும் சார்வு செய்வதற்குக் கட்டளையிடலாம்.

அரசு ஊழிய ருக்குச் சார்வு செய்தல்.

66. (1) ஆஜராகுமாறு கட்டளையிடப்பட்டவர் அரசின் தீவிர ஊழியத்தில் இருப்பாராயின், அந்தக் கட்டளையைப் பிறப்பிக்கின்ற நீதிமன்றம் சாதாரணமாக அத்தகையவர் வேலையிலமர்ந்துள்ள அலுவலகத்தின் தலைவருக்கு இரட்டைப் படிகளில் அதை அனுப்புதல் வேண்டும்; அதன் பின்னர் அத் தலைவர் 62 ஆவது பிரிவில் வகை செய்யப்பட்ட முறையில் அந்த ஆஜர் கட்டளையைச் சார்வு செய்து,

அந்தப் பிரிவில் கோரப்படும் மேற்குறிப்பை எழுதிக் கையொப்பமிட்டு, அதை நீதிமன்றத்திற்குத் திருப்பி யனுப்புதல் வேண்டும்.

(2) அத்தகைய கையொப்பம், உரிய முறையில் சார்வானதற்குச் சான்றாக இருக்கும்.

வட்டார எல்லைக்கு வெளியே ஆஜர் கட்டளையைச் சார்வு செய்தல்.

67. ஒரு நீதிமன்றம் தான் பிறப்பித்த ஆஜர் கட்டளையைத் தன் வட்டார அதிகார வரம்புக்கு வெளியேயுள்ள எந்த இடத்திலேனும் சார்வு செய்ய வேண்டுமென விரும்பும்போது, ஆஜராகுமாறு கட்டளையிடப்பட்டவர் சாதாரணமாக எந்த நடுவரின் வட்டார எல்லைக்குள் குடியிருக்கிறாரோ அல்லது இருக்கிறாரோ அந்த நடுவருக்கு இரட்டைப் படிகளில் அக் கட்டளையை அங்கே சார்வு செய்வதற்காக, அனுப்புதல் வேண்டும்.

மேற்சொன்ன சந்தர்ப்பங்களிலும் சார்வு செய்கின்ற அலுவலர் வராதபோதும் சார்வானதற்கான நிரூபணம்.

68. (1) ஒரு நீதிமன்றம் பிறப்பித்த ஆஜர் கட்டளையை அதன் வட்டார அதிகார வரம்புக்கு வெளியே சார்வு செய்திருக்கும்போதும், ஆஜர் கட்டளையைச் சார்வு செய்துள்ள அலுவலர் வழக்கை விசாரிக்குங்கால் ஆஜராகாத எந்த சந்தர்ப்பத்திலும், அந்த ஆஜர் கட்டளை சார்வாகியுள்ளதென்று ஒரு நடுவர் முன்பு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கின்ற பிரமாணப் பத்திரமும், அந்தக் கட்டளை எவரிடம் கொடுக்கப்பட்டதோ, அளிக்க முனையப்பட்டதோ, விட்டுவரப்பட்டதோ அவர் (62 ஆவது பிரிவினுல் அல்லது 64 ஆவது பிரிவினுல் வகை செய்யப்பட்ட முறையில்) மேற்குறிப்பை எழுதியதாகத் தென்படுகிற அக் கட்டளையின் மற்றொரு படியும் சான்றாக ஏற்கத் தக்கனவையாகும்; மற்றும் அவற்றில் கண்டுள்ள வாசகங்களையே, அவற்றிற்கு எதிர்மறையாக எதுவும் நிரூபிக்கப்பட்டாலன்றியும் நிரூபிக்கப்படும் வரையிலும், சரியானவையெனக் கொள்ளுதல் வேண்டும்.

(2) இந்தப் பிரிவில் சொல்லப்பட்டுள்ள பிரமாணப் பத்திரத்தை ஆஜர் கட்டளையின் இரண்டாவது படியுடன் இணைத்து, நீதிமன்றத்திற்குத் திருப்பியனுப்பலாம்.

சாட்சிக்கு அஞ்சல் மூலமாக ஆஜர் கட்டளையைச் சார்வு செய்தல்.

69. (1) இந்த அத்தியாயத்தில் முன்சென்ற பிரிவுகளில் என்ன கண்டிருந்தபோதிலும், ஒரு சாட்சிக்கு ஆஜர் கட்டளையைப் பிறப்பிக்கின்ற நீதிமன்றம் ஆஜர் கட்டளை அனுப்புவதோடு கூட, அதைப் பிறப்பிக்கும் சமயத்திலேயே

ஆஜர் கட்டளையின் நகலொன்றையும் அந்த சாட்சிக்கு முகவரியிட்டு, பதிவு அஞ்சல் மூலமாக, அவர் சாதாரணமாகக் குடியிருக்கிற அல்லது தொழில் நடத்துகிற அல்லது ஆதாயத்திற்காக நேரடியாக வேலை செய்கிற இடத்தில் சார்வு செய்யுமாறு கட்டளையிடலாம்.

(2) சாட்சியால் கையொப்பமிடப்பட்டதாகப் புலப்படும் ஒப்புதல் குறிப்போ, ஆஜர் கட்டளை கொடுக்கப்பட்டதை அந்த சாட்சி ஏற்க மறுத்துவிட்டாரென அஞ்சல் ஊழியரால் எழுதப்பட்டதாகப் புலப்படும் மேற்குறிப்போ தனக்குக் கிடைத்திருக்கும்போது, ஆஜர் கட்டளையைப் பிறப்பிக்கின்ற நீதிமன்றம் அந்த ஆஜர் கட்டளை உரிய முறையில் சார்வு செய்யப்பட்டிருக்கிறதென்று வினம்பலாம்.

ஆ. பிடிகட்டளை.

பிடிகட்டளையின் வடிவமும் காலஅளவும்.

70. (1) இந்தச் சட்டத்தின்படி ஒரு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு பிடிகட்டளையும் எழுத்து வடிவிலும் அந்த நீதிமன்றத்தில் தலைமை வகிக்கின்ற அலுவலரால் கையொப்பமிடப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்; மற்றும் அந்த நீதிமன்றத்தின் முத்திரையைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய பிடிகட்டளை ஒவ்வொன்றும், அதைப் பிறப்பித்த நீதிமன்றத்தால் ரத்து செய்யப்படும்வரை அல்லது நிறைவேற்றப்படும்வரை அமலில் இருந்துவரும்.

ஜாமீன் வாங்க வேண்டுமென உத்தரவிடுவதற்குள்ள அதிகாரம்.

71. (1) ஒருவரைக் கைது செய்யப் பிடிகட்டளையைப் பிறப்பிக்கின்ற எந்த நீதிமன்றமும், தன் முன்பு அத்தகையவர் ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் வேறு விதமாக தான் கட்டளையிடும் வரையில் அதற்குப் பின்பும் ஆஜராவதாகப் போதுமான ஜாமீன்தார்களுடன் ஜாமீன் பத்திரமொன்றை எழுதிக் கொடுப்பாராயின், எந்த அலுவலருக்கு அப் பிடிகட்டளை குறிப்பிட்டனுப்பப் படுகிறதோ அவர் அந்த ஜாமீனை வாங்கிக்கொண்டு, காவலிலிருந்து அவரை விடுவிக்கவேண்டுமென்று தன் யுக்தம்போல், அப் பிடிகட்டளையின்மீது மேற்குறிப்பெழுதி உத்தரவிடலாம்.

(2) அந்த மேற்குறிப்பு பின்வருவனவற்றைக் காட்ட வேண்டும் :—

(அ) ஜாமீன்தார்களின் எண்ணிக்கை ;

(ஆ) அவர்களும் கைது செய்வதற்காக எவர்மீது பிடிகட்டளை பிறப்பிக்கப்படுகிறதோ அவரும் முறையே எவ்வளவு தொகைக்குக் கட்டுப்பட்டவர்களாயிருக்க வேண்டும் என்பது ;

(இ) அவர் நீதிமன்றத்தின் முன் ஆஜராக வேண்டிய நேரம்.

(3) இந்தப் பிரிவின்படி ஜாமீன் வாங்கப்படும் போதெல்லாம், அப் பிடிகட்டளை எந்த அலுவலருக்குக் குறிப்பிட்டனுப்பப்படுகிறதோ அவர் அப் பத்திரத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

பிடிகட்டளைகள் எவருக்குக் குறிப்பிட்டனுப்பப்பட வேண்டும் என்பது.

72. (1) ஒரு பிடிகட்டளை சாதாரணமாகக் காவல் அலுவலர் ஒருவருக்கோ ஒருவருக்கு மேற்பட்டவர்களுக்கோ குறிப்பிட்டனுப்பப்பட வேண்டும் ; ஆனால் அத்தகைய பிடிகட்டளையைப் பிறப்பிக்கின்ற நீதிமன்றம், அதனை உடனடியாக நிறைவேற்றுவது அவசியமாக இருந்து, காவல் அலுவலர் எவரும் உடனடியாகக் கிடைக்கவில்லையாயின், வேறெந்த ஆளுக்கோ ஆட்களுக்கோ குறிப்பிட்டு அதை அனுப்பலாம் ; அத்தகையவர் அதை நிறைவேற்றுதல் வேண்டும்.

(2) ஒரு பிடிகட்டளை ஒருவருக்கு மேற்பட்ட அலுவலர்கள் அல்லது ஆட்களுக்குக் குறிப்பிட்டனுப்பப்படும்போது, அதை அவர்கள் அனைவருமோ, அவர்களில் எவரேனும் ஒருவரோ ஒருவருக்கு மேற்பட்டவரோ நிறைவேற்றலாம்.

பிடிகட்டளைகள் எவருக்கும் குறிப்பிட்டனுப்பலாம் என்பது.

73. (1) தப்பியோடிய தண்டிக்கப்பட்ட கைதியை அல்லது விளம்பரப்படுத்தப்பட்ட குற்றவாளியை அல்லது ஜாமீனில் விடாக் குற்றமொன்று செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு, கைது செய்வதைத் தந்திரமாய்த் தவிர்த்து வருகிற எவரையும் கைது செய்வதற்காகத் தலைமை நீதித் துறை நடுவரோ முதல் வகுப்பு நடுவரோ தம் வட்டார அதிகார வரம்புக்குள் உள்ள எவருக்கும் ஒரு பிடிகட்டளையைக் குறிப்பிட்டனுப்பலாம்.

(2) அத்தகையவர் அப் பிடிகட்டளையைப் பெற்றுக் கொண்டதற்கு எழுத்து மூலமாக ஒப்புதல் அளிக்க வேண்டும்; மற்றும் தம் பொறுப்பிலுள்ள நிலம் அல்லது வேறு எந்தச் சொத்திலும் எவரைக் கைது செய்வதற்காக அது பிறப்பிக்கப்பட்டதோ அவர் இருந்தாலோ, புகுந்தாலோ அவர்மீது அக் கட்டளையை நிறைவேற்றுதல் வேண்டும்.

(3) எவர்மீது அத்தகைய பிடிகட்டளை பிறப்பிக்கப் படுகிறதோ அவர் கைது செய்யப்படும்போது, அவரை அந்தப் பிடிகட்டளையுடன் மிகவும் அருகிலுள்ள காவல் அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும்; 71 ஆவது பிரிவின்படி ஜாமீன் வாங்கப்பட்டாலன்றி, உரிய அதிகார வரம்பு கொண்டுள்ள நடுவர் முன்பு அந்தக் காவல் அலுவலர் அவரை இட்டுச் செல்லும்படி செய்தல் வேண்டும்.

பிடிகட்டளை ஒரு காவல் அலுவலருக்குக் குறிப்பிடப்படுதல்.

74. காவல் அலுவலருக்கு அனுப்பப்பட்ட ஒரு பிடிகட்டளையானது, அவரோ அதில் மேற்குறிப்பு எழுதப் பட்டவரோ அதன்மீது மேற்குறிப்பாக வேறு எந்தக் காவல் அலுவலர் பெயரை எழுதுகிறாரோ அவராலுங்கூட நிறைவேற்றப்படலாம்.

பிடிகட்டளையின் சாராம்சத்தைத் தெரிவித்தல்.

75. பிடிகட்டளையை நிறைவேற்றுகின்ற காவல் அலுவலரோ வேறெவருமோ, அதன் சாராம்சத்தைக் கைது செய்யப்பட வேண்டியவருக்கு அறிவித்தல் வேண்டும்; வேண்டிக் கொண்டால், அவருக்கு அப் பிடிகட்டளையைக் காட்ட வேண்டும்.

கைதுசெய்யப் பட்டவர் தாமதமின்றி நீதிமன்றத்தின் முன் கொண்டு வரப்படுதல்.

76. பிடிகட்டளையை நிறைவேற்றுகின்ற காவல் அலுவலரோ வேறெவருமோ (ஜாமீன் குறித்து 71 ஆவது பிரிவின் வகைமுறைகளுக்குட்பட்டு) சட்டத்தின்படி எந்த நீதிமன்றத்தின்முன் அத்தகையவரைக் கொண்டுவர வேண்டுமோ அந்த நீதிமன்றத்தின்முன், கைது செய்யப்பட்ட வரை அவையமான தாமதமின்றிக் கொண்டுவந்து நிறுத்த வேண்டும்.

ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும் அத்தகைய தாமதம் கைது செய்யப்பட்ட இடத்திலிருந்து நடுவரின் நீதிமன்றத்திற்குச் செல்வதற்கான பயணத்திற்கு அவசியமாகும் நேரம் நீங்கலாக, 24 மணி நேரத்திற்கு மேற்படுதல் ஆகாது.

எவ்விடத்தில் பிடிகட்டளையை நிறைவேற்றலாம் என்பது.

77. ஒரு பிடிகட்டளையை இந்தியாவில் எந்த இடத்திலும் நிறைவேற்றலாம்.

நிறைவேற்றுவதற்காகப் பிடிகட்டளையை அதிகார வரம்புக்கு வெளியே அனுப்புதல்.

78. (1) ஒரு பிடிகட்டளையைப் பிறப்பிக்கின்ற நீதி மன்றத்தின் வட்டார அதிகார வரம்புக்கு வெளியே அது நிறைவேற்றப்பட வேண்டியபோது, அந்த நீதிமன்றம், தம் அதிகார எல்லைக்குள் உள்ள ஒரு காவல் அலுவலருக்கு அப் பிடிகட்டளையை அனுப்புவதற்குப் பதிலாக, எந்த நிருவாகத் துறை நடுவர், அல்லது மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அல்லது காவல் ஆணையரின் வட்டார எல்லைகளுக்குள் அது நிறைவேற்றப்பட வேண்டுமோ அவருக்கு அதை அஞ்சல் வாயிலாகவோ வேறு விதமாகவோ அனுப்பலாம்; மற்றும் அந்த நிருவாகத் துறை நடுவர் அல்லது மாவட்டக் கண்காணிப்பாளர் அல்லது ஆணையர் தம் பெயரை அதில் மேற்குறித்து எழுதுவதுடன் கூடுமானவரை, இதன்முன் வகை செய்யப்பட்ட முறையில், அதை நிறைவேற்றச் செய்யவும் வேண்டும்.

(2). (1) ஆவது உட்பிரிவின்படி ஒரு பிடிகட்டளையைப் பிறப்பிக்கின்ற நீதிமன்றம் அப் பிடிகட்டளையுடன்கூட, கைது செய்யப்படவேண்டியவரைப் பற்றி பாதகமாக வந்துள்ள தகவலின் சாராம்சத்தையும், அவர் ஜாமீனில் விடப்படவேண்டுமா கூடாதா என்பதை 81 ஆவது பிரிவின்படி செயற்படுகின்ற ஒரு நீதிமன்றம் தீர்மானிப்பதற்குப் போதுமானவையாகவுள்ள பத்திரங்கள் எவையேனுமிருப்பின் அவற்றையும் சேர்த்து அனுப்பி வைத்தல் வேண்டும்.

அதிகார வரம்புக்கு வெளியேநிறை வேற்றப்படுவதற்காகப் பிடிகட்டளையை காவல் அலுவலருக்குக் குறிப்பிட்டனுப்புதல்.

79. (1) ஒரு காவல் அலுவலருக்கு அனுப்பப்பட்ட பிடிகட்டளை, அதைப் பிறப்பிக்கின்ற நீதிமன்றத்தின் அதிகார வரம்புக்கு அப்பால் நிறைவேற்றப்பட வேண்டிய போது, அந்த அலுவலர் சாதாரணமாக, எந்த வட்டார எல்லைக்குள் அப் பிடிகட்டளை நிறைவேற்றப்பட வேண்டுமோ அந்த வட்டார எல்லைக்குள் அதிகாரஞ் செலுத்தி வருகிற நிருவாகத் துறை நடுவரிடமோ காவல் நிலையமொன்றின் பொறுப்பு அலுவலரின் தகுதிக்குக் குறையாத காவல் அலுவலர் ஒருவரிடமோ மேற்குறிப்புப் பெறுவதற்காக அதை எடுத்துச்செல்ல வேண்டும்.

(2) அந்நகைய நடுவர் அல்லது காவல் அலுவலர் தம் பெயரை அதில் மேற்குறித்து எழுத வேண்டும். அப்பிடி கட்டளை அனுப்பப்பட்ட காவல் அலுவலருக்கு அத்தகைய மேற்குறிப்பு, அதை நிறைவேற்றுவதற்குப் போதுமான அதிகாரத்தைக் கொடுப்பதாகும்; மேலும், உள்ளூர்க் காவல் துறையினர், அப்பிடிகட்டளையை நிறைவேற்றுவதில் அந்த அலுவலருக்கு உதவுமாறு கோரப்பட்டால், அவ்வாறே அவர்கள் உதவுதல் வேண்டும்.

(3) எந்த நடுவர் அல்லது காவல் அலுவலரின் வட்டார அதிகார வரம்புக்குள், பிடிகட்டளை நிறைவேற்றப் படவேண்டியதோ அவரது மேற்குறிப்பைப் பெறுவதில் நேரிடும் தாமதமானது அந்தக் கட்டளையை நிறைவேற்றுவதைத் தடை செய்யுமென்று நம்புவதற்குக் காரணமிருந்தும் போதெல்லாம், அத்தகைய மேற்குறிப்பு இல்லாமலேயே அப் பிடிகட்டளை அனுப்பப்பட்ட காவல் அலுவலர், அதைப் பிறப்பித்த நீதிமன்றத்தின் வட்டார அதிகார வரம்புக்கு அப்பால் எந்த இடத்திலும் அதை நிறை வேற்றலாம்.

எவருக்காகப் பிடிகட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளதோ அவரைக் கைது செய்தபின் நடைமுறை என்னவென்பது.

80. பிறப்பிக்கப்பட்ட மாவட்டத்திற்கு வெளியே ஒரு பிடி கட்டளை நிறைவேற்றப்படும்போது, அதைப் பிறப்பித்த நீதிமன்றமானது, கைது செய்த இடத்திலிருந்து முப்பது கிலோ மீட்டருக்குள் இருந்தாலன்றி அல்லது எந்த வட்டார எல்லைக்குள் கைது செய்தல் நடந்ததோ அந்த வட்டார எல்லைக்குள் அதிகாரஞ் செலுத்தும் நிருவாகத் துறை நடுவர் அல்லது மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அல்லது காவல் ஆணையரைக் காட்டிலும் அந்த நீதிமன்றம் அருகில் இருந்தாலன்றி, அல்லது 71 ஆவது பிரிவின்படி ஜாமீன் வாங்கப்பட்டிருந்தாலன்றி, கைது செய்யப்பட்டவரை மேற்சொன்ன நடுவர் அல்லது மாவட்டக் கண்காணிப்பாளர் அல்லது ஆணையர் முன்பாகவே இட்டுச் செல்லுதல் வேண்டும்.

கைது செய்யப் பட்டவர் எந்த நடுவர் முன்பு கொணரப்படுதல் வேண்டுமோ அவர் மேற்கொள்ள வேண்டிய நடைமுறை.

81. (1) பிடிகட்டளையைப் பிறப்பித்த நீதிமன்றம் கருதியிருந்த ஆள்தான் கைது செய்யப்பட்டவர் என்று தோன்றுமானால், நிருவாகத் துறை நடுவர் அல்லது மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அல்லது காவல் ஆணையர், அவரை அந்த நீதிமன்றத்திற்குக் காவலில் கொண்டுபோகும்படி உத்தரவிட வேண்டும்:

ஆனால், குற்றமானது ஜாமீனில் விடுங்குற்றமாக இருந்து, மேற்சொன்ன நடுவருக்கு, மாவட்டக் கண்காணிப்பாளருக்கு, அல்லது ஆணையருக்குத் திருப்தி ஏற்படும் வகையில் அத்தகையவர் ஜாமீன் கொடுக்கத் தயாராகவும் சம்மதமுடையவராகவும் இருந்தால், அல்லது 71 ஆவது பிரிவின்படி உத்தரவொன்று அத்தக் கட்டளையில் மேற்குறிக்கப்பட்டு, அம் மேற்குறிப்பின்படி கோரப்பட்ட ஜாமீனை அத்தகையவர் கொடுக்கத் தயாராகவும் சம்மதமுடையவராகவுமிருந்தால், நடுவர், மாவட்டக் கண்காணிப்பாளர் அல்லது ஆணையர் அந்தந்த நிலைத்திற்கேற்ப, அத்தகைய ஜாமீனையோ, உத்தரவாதத்தையோ வாங்கிக்கொண்டு, பிடிகட்டளையைப் பிறப்பித்த நீதிமன்றத்திற்கு அந்தப் பத்திரத்தை அனுப்பி வைக்க வேண்டும்:

மேலும், குற்றமானது ஜாமீனில் விடாக் குற்றமாக இருப்பின், எந்த மாவட்டத்தில் கைது செய்தல் நடந்ததோ அந்த மாவட்டத்தின் தலைமை நீதித் துறை நடுவரோ (437-ஆவது பிரிவின் விதிகளுக்குட்பட்டு), அல்லது செஷன்ஸ் நீதிபதியோ 78 ஆவது பிரிவின் (2) ஆவது உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட தகவலையும் பத்திரங்களையும் பரிசீலனை செய்த பின்பு, அத்தகையவரைச் சட்டபூர்வமாக ஜாமீனில் விடுவிக்கலாம்.

(2) இந்தப் பிரிவில் உள்ள எதுவும் 71 ஆவது பிரிவின்படி ஒரு காவல் அலுவலர் ஜாமீன் வாங்குவதைத் தடை செய்வதாகக் கொள்ளுதல் ஆகாது.

இ. பகிரங்க அறிவிப்பும் ஜப்தியும்.

தலைமறைவாகியுள்ள ஆளைப் பற்றிய பகிரங்க அறிவிப்பு.

82. (1) தனக்கு எவர்மீது பிடிகட்டளை பிறப்பிக்கப் பட்டுள்ளதோ அவர், அப் பிடிகட்டளையை நிறைவேற்ற முடியாதபடி செய்வதற்காகத் தலைமறைவாகியுள்ளார், அல்லது தம்மையே மறைத்துக் கொண்டிருக்கிறார் என்பதாக (சாட்சியம் எடுத்த பின்போ எடுக்காமலோ) ஒரு நீதி மன்றம் நம்புவதற்குக் காரணமிருப்பின், அந் நீதிமன்றம் ஒரு குறிப்பிட்ட இடத்திலும் அறிக்கையை வெளியிடுகின்ற தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குக் குறையாமல் ஒரு குறிப்பிட்ட நேரத்திலும் ஆஜராகுமாறு கோரி எழுத்து மூலமான ஒரு பகிரங்க அறிக்கையை வெளியிடலாம்.

(2) அந்தப் பகிரங்க அறிக்கை பின்வருமாறு வெளியிடப்பட வேண்டும்:—

(i) (அ) அத்தகையவர் சாதாரணமாகக் குடியிருக்கிற நகரம், அல்லது கிராமத்தின் எடுப்பான ஓரிடத்தில் அது பகிரங்கமாகப் படிக்கப்பட வேண்டும்;

(ஆ) அத்தகையவர் சாதாரணமாகக் குடியிருக்கிற வீடு அல்லது வீடு சார்ந்த இடத்தின் எடுப்பான ஒரு பகுதியிலோ அத்தகைய நகரம் அல்லது கிராமத்தின் எடுப்பான ஓரிடத்திலோ அது ஒட்டப்பட வேண்டும்;

(இ) நீதிமன்ற நிலையத்தின் எடுப்பான ஒரு பகுதியில் அதன் நகலொன்று ஒட்டப்பட வேண்டும்;

(ii) அத்தகையவர் சாதாரணமாகக் குடியிருக்கிற இடத்தில் நிலவும் நினைசரி செய்திதாள் ஒன்றில் அந்தப் பகிரங்க அறிக்கையின் நகல் வெளியிடப்படுவது பொருத்தமென நீதிமன்றம் கருதினால், அது அவ்வாறும் கட்டளையிடலாம்.

(3) அந்தப் பகிரங்க அறிக்கையைப் பிறப்பிக்கின்ற நீதிமன்றம் (2) ஆவது உட்பிரிவின் (1) ஆவது கூறில் குறிப்பிடப்பட்ட முறையில் குறிப்பிட்ட நாளில் அந்த அறிக்கை உரியவாறு வெளியிடப்பட்டது என்று எழுத்துமூலமாகக் கூறுமாறால், அக்கூற்று இந்தப் பிரிவின்படியுள்ள கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டுவிட்டன என்பதற்கும், அந்தப் பகிரங்க அறிக்கை அத்தகைய நாளில் வெளியிடப்பட்டது என்பதற்கும் முடிவான சான்றாகும்.

தலைமறைவாயிருப்பவர் ஆளின் சொத்தினை ஜப்தி செய்தல்.

83. (1) 82 ஆவது பிரிவின்படி பகிரங்க அறிக்கையொன்றைப் பிறப்பிக்கின்ற நீதிமன்றம், அதைப் பிறப்பித்ததற்குப் பின்பு எந்த நேரத்திலும், எழுத்துமூலமாகப் பதிவு செய்யப்பட்ட காரணங்களுக்காக, பகிரங்க அறிக்கையிடப்பட்ட ஆளுக்குச் சொந்தமான சொத்து எதனையும், அது அசையும் பொருளாயினும் அசையாப் பொருளாயினும், அல்லது இரண்டுமே ஆயினும் ஜப்தி செய்யும்படி கட்டளையிடலாம்; ஆனால் எவரைப்பற்றி அந்த பகிரங்க அறிக்கை பிறப்பிக்கப்படவுள்ளதோ அவர்,—

(அ) தம் சொத்து முழுவதையும் அல்லது எந்தப் பகுதியையேனும் விற்கப்போகிறார், அல்லது

(ஆ) நீதிமன்றத்தின் வட்டார அதிகார வரம்புக்குள் விருந்து தம் சொத்து முழுவதையும் அல்லது எந்தப் பகுதியையேனும் அகற்றப்போகிறார்

என்பதாகப் பிரமாணப் பத்திரத்தின் மூலமாகவோ வேறு வகையிலோ அந்த பகிரங்க அறிக்கையைப் பிறப்பிக்கும் காலத்தில் நீதிமன்றத்திற்குத் திருப்தி ஏற்படுமிடத்து, ஜப்தி செய்யவேண்டுமென்றும் அந்த அறிக்கை பிறப்பிக்கப்படும் அதே நேரத்தில் அந்த நீதிமன்றம் கட்டளையிடலாம்.

(2) எந்த மாவட்டத்திற்குள் அத்தகைய கட்டளை பிறப்பிக்கப்படுகிறதோ அந்த மாவட்டத்தில், அந்த ஆளுக்குச் சொந்தமாகவுள்ள சொத்து எதனையும் ஜப்தி செய்வதற்கும் அத்தகைய கட்டளை அதிகாரம் அளித்தல் வேண்டும்; மற்றும் அந்த மாவட்டத்திற்கு வெளியே அந்த ஆளுக்குச் சொந்தமாகவுள்ள சொத்து எதனையும், எந்த மாவட்ட நடுவரின் மாவட்டத்திற்குள் அத்தகைய சொத்து அமைந்திருக்கிறதோ அவரது மேற்குறிப்பின்பேரில் ஜப்தி செய்யும்படி அக்கட்டளை அதிகாரமளித்தல் வேண்டும்.

(3) ஜப்தி செய்யக் கட்டளையிடப்பட்ட சொத்தானது ஒரு கடனுகவோ அல்லது வேறு அசையும் பொருளாகவோ இருப்பின், இந்தப் பிரிவின்படி கீழ்க்கண்டவாறு அது ஜப்தி செய்யப்படவேண்டும்:—

(அ) கைப்பற்றுதல் மூலமாக; அல்லது

(ஆ) பாதுகாவலர் (ரிசீவர்) ஒருவரை நியமிப்பதன் மூலமாக; அல்லது

(இ) அத்தகைய சொத்தினை, பகிரங்க அறிக்கையிடப் பட்டவருக்கோ அவரது சார்பாக வேறெவருக்குமோ ஒப் படைக்கக்கூடாதென்று எழுத்துமூலமாகத் தடைசெய்கிற ஒரு கட்டளை வாயிலாக; அல்லது

(ஈ) நீதிமன்றம் பொருத்தமெனக் கருதுகிறபடி அத்தகைய முறைகள் எல்லாவற்றின் மூலமாக அல்லது அவற்றில் இரண்டின் மூலமாக.

(4) ஜப்தி செய்யக் கட்டளையிடப்பட்ட சொத்தானது அசையாப் பொருளாக இருப்பின், இந்தப் பிரிவின்படியுள்ள ஜப்தியானது, மாநில அரசுக்கு நிலவரி செலுத்துகின்ற நிலத்தைப் பொறுத்தமட்டில், அந்த நிலம் அமைந்துள்ள

மாவட்டத்தின் ஆட்சியர் மூலமாகவும், மற்ற சொத்துக் களைப் பொறுத்த மட்டில், கீழ்க்கண்டவாறும் செய்யப்பட வேண்டும்:—

சொத்தை—

(அ) அனுபோகம் எடுத்துக்கொள்வதன் மூலமாக; அல்லது

(ஆ) பாதுகாவலர் ஒருவரை நியமனஞ் செய்வதன் மூலமாக; அல்லது

(இ) பகிரங்க அறிக்கையிடப்பட்டவருக்கோ அவரது சார்பாக வேறெவருக்குமோ, சொத்து ஒப்படைக்கப்படுங் கால், வாடகை கொடுக்கக்கூடாதென்று எழுத்துமூலமாக நடைசெய்கிற ஒரு கட்டளை வாயிலாக; அல்லது

(ஈ) நீதிமன்றம் பொருத்தமெனக் கருதுகிறபடி அந்தகைய முறைகள் எல்லாவற்றின் மூலமாக அல்லது அவற்றில் இரண்டின் மூலமாக.

(5) ஜப்தி செய்யக் கட்டளையிடப்பட்ட சொத்து காலநடையாகவோ அழியும் நன்மையுடையதாகவோ இருப்பின், நீதிமன்றம் அதை உடனடியாக விற்பனை செய்வது நலமெனக் கருதுமாயின், அவ்வாறே கட்டளையிட லாம்; அவ்வாறாயின், அவ் விற்பனையின் விற்றுமுதல் அந்த நீதி மன்றத்தின் கட்டளையைப் பொறுத்ததாகும்.

(6) இந்தப் பிரிவின்படி நியமனஞ் செய்யப்பட்ட பாதுகாவலர் ஒருவரின் அதிகாரங்களும் கடமைகளும் கடப்பாடுகளும், 1908 ஆம் ஆண்டு உரிமை வழக்கு விசாரணை முறைச் சட்டத்தின்படி நியமனஞ் செய்யப்படும் பாதுகாவலருக்குள்ளவையாகவே இருக்கும். 5/1908.

சொத்துக்கு உரிமை கொண்டாடுதலும் ஜப்திக்கு ஆட்சேபணையும்

84. (1) பகிரங்க அறிக்கையிடப்பட்டவர் அல்லாத வேறெவரேனும் 83 ஆவது பிரிவின்படி ஜப்தி செய்யப்பட்ட சொத்தில் உரிமை கோருபவருக்கோ அல்லது ஜப்திக்கு ஆட்சேபணை செய்பவருக்கோ ஒரு பாத்தியதை இருக்கிறது, மற்றும் அந்தப் பாத்தியதை, 83 ஆவது பிரிவின்படி ஜப்தி செய்யப்படுவதற்கு உட்பட்டதல்ல என்ற காரணத்தின் மீது உரிமைக் கோரிக்கையோ, அந்தச் சொத்தின் ஜப்திக்கு ஆட்சேபணையோ அத்தகைய ஜப்தியின் தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் தாக்கல் செய்தால் அந்த உரிமைக்

கோரிக்கை அல்லது ஆட்சேபணை விசாரணை செய்யப்பட வேண்டும்; அதன்பேரில் அது முழுமையாகவோ பகுதியாகவோ ஏற்றுக் கொள்ளப்படலாம் அல்லது தள்ளுபடி செய்யப்படலாம்;

ஆனால், உரிமை கோருபவர் அல்லது ஆட்சேபணை செய்பவர் மரணமடைந்தால், இந்த உட்பிரிவை அனுமதிக்கும் காலக் கெடுவிற்குள் தாக்கல் செய்யப்படும் உரிமைக் கோரிக்கை அல்லது ஆட்சேபணை எதுவும், அவரது சட்டப்படியான பிரதிநிதியால் தொடர்ந்து நடத்தப்படலாம்.

(2) (1) ஆவது உட்பிரிவின்படியான உரிமைக் கோரிக்கைகளை அல்லது ஆட்சேபணைகளை ஜப்தி கட்டளையைப் பிறப்பித்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம்; அல்லது உரிமைக் கோரிக்கை அல்லது ஆட்சேபணையானது, 83 ஆவது பிரிவின் (2) ஆவது உட்பிரிவின்படி மேற்குறிப்பு எழுதப்பட்ட ஒரு கட்டளையின்படி ஜப்தி செய்யப்பட்ட சொத்தினைப் பொறுத்ததாயின், அது எந்த மாவட்டத்தில் ஜப்தி செய்யப்படுகிறதோ அதன் தலைமை நீதித்துறை நடுவரின் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படலாம்.

(3) அத்தகைய உரிமைக் கோரிக்கை அல்லது ஆட்சேபணை ஒவ்வொன்றும் எந்த நீதிமன்றத்தில் அது தாக்கல் செய்யப்படுகிறதோ அந்த நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்பட வேண்டும்:

ஆனால், அது தலைமை நீதித்துறை நடுவர் ஒருவரின் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுமாயின், அவர் தனக்குக் கீழமைந்துள்ள எந்த நடுவருக்கும் அதைத் தீர்த்துவைப்பதற்காக மாற்றலாம்.

(4) ஒருவருடைய உரிமைக் கோரிக்கை அல்லது ஆட்சேபணை (1) ஆவது உட்பிரிவின்படியான ஒரு கட்டளையில் முழுமையுமோ பகுதியோ தள்ளுபடி செய்யப்பட்டிருந்தால், அவர், அத்தகைய கட்டளைத் தேதியிலிருந்து ஓராண்டு கால வரம்பிற்குள், தாவாச் சொத்தினைப் பொறுத்து, தாம் கொண்டாடுகிற உரிமையை நிலைநாட்ட வழக்கொன்றைத் தொடரலாம்; ஆனால் அத்தகைய உரிமை வழக்கு ஏதேனும் தொடரப்பட்டிருந்தால் அதன் முடிவுக்கு உட்பட்டு, மேற் சொன்ன கட்டளை தீர்ந்த முடிவானதாக இருக்கும்.

ஜப்தி செய்யப்பட்ட சொத்தினை விடுவித்தல், விற்பனை செய்தல், மற்றும் திருப்ப ஒப்படைத்தல்.

85. (1) பகிரங்க அறிக்கையிடப்பட்ட ஆள், அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் ஆஜராவாராஞல், நீதிமன்றம் ஜப்தியிலிருந்து அந்தச் சொத்தினை விடுவித்துக் கட்டளையொன்றைப் பிறப்பித்தல் வேண்டும்

(2) பகிரங்க அறிக்கையிடப்பட்ட ஆள் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் ஆஜராகவில்லையென்றால், ஜப்தி சொத்தானது மாநில அரசின் ஆளுகையில் இருத்தல் வேண்டும்; ஜப்தி செய்யப்பட்ட தேதியிலிருந்து ஆறுமாதங்கள் கழியும் வரையிலும் மற்றும் 84 ஆவது பிரிவின்படி தாக்கல் செய்யப்பட்ட உரிமை மனு அல்லது ஆட்சேபனை எதுவும் அந்தப் பிரிவின்படி முடிவு செய்யப்படும் வரையிலும் அச் சொத்தை விற்பனைசெய்தல் ஆகாது; ஆனால் அது விரைவாகவும் இயல்பாகவும் அழியக் கூடியதாயிருந்தாலோ அதை விற்பனை செய்வது உரியவரின் நன்மைக்கு உகந்ததென்று நீதிமன்றம் கருதினாலோ அத்தகைய நிலைகள் எதிலும் நீதிமன்றம் பொருத்தமெனக் கருதும்போதெல்லாம் அச் சொத்தை விற்பனை செய்விக்கலாம்.

(3) எவருடைய சொத்து (2)ஆவது உட்பிரிவின்படி மாநில அரசின் ஆளுகையில் இருக்கிறதோ அல்லது இருந்திருக்கிறதோ அவர் ஜப்தி செய்யப்பட்ட தேதியிலிருந்து இரண்டாண்டுகளுக்குள் தாமாகவே வந்து, அல்லது கைது செய்யப்பட்டு எந்த நீதிமன்றத்தின் கட்டளையினால் சொத்து ஜப்தி செய்யப்பட்டதோ அதன் முன், அல்லது அது எந்த நீதிமன்றத்திற்குக் கீழ்ப்பட்டதோ அந்த நீதிமன்றத்தின் முன் கொண்டுவரப்பட்டு, பிடிகட்டளை நிறைவேற்றுவதைத் தவிர்க்கின்ற நோக்கத்தோடு தாம் தலைமறைவாகவில்லை அல்லது தம்மையே மறைத்துக்கொள்ளவில்லை என்பதாகவும், பகிரங்க அறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் வருவதற்குத் தமக்குச் சாத்தியப்படும் வகையில் அதைப் பற்றிய அறிவிப்பு தமக்குக் கிடைக்கவில்லை என்பதாகவும், அந்த நீதிமன்றத்திற்குத் திருப்தி ஏற்படும் வகையில் நிரூபிப்பாராஞல், அந்தச் சொத்து, அல்லது அது விற்கப்பட்டிருப்பின் அவ்விற்பனையின் நிகர விற்றுமுதல், அல்லது அதன் பகுதி மட்டுமே விற்கப்பட்டிருப்பின், விற்பனையின் நிகர விற்று முதலும் சொத்தில் மிச்சமும், ஜப்தியின்

வினாவாக ஏற்பட்ட எல்லாச் செலவுத்தொகையையும் அதிலிருந்து அடைந்த பின்பு, அவருக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.

ஒப்படை செய்யப்பட்ட சொத்தினைத் திரும்ப ஒப்படைப்பதற்கான வினாப்பத்தைத் தள்ளுபடிசெய்கின்ற கட்டளையிலிருந்து மேல்முறையீடு.

86. சொத்தினை அல்லது அதன் விற்பனையின் விற்று முதலை ஒப்படைக்க மறுத்ததால் பாதிக்கப்பட்டுள்ளவரும், 85 ஆவது பிரிவின் (3) ஆவது உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட வருமான எவரும், முதலில் சொல்லப்பட்ட நீதிமன்றத்தின் தண்டனைகளிலிருந்து சாதாரணமாக மேல் முறையீடுகள் எந்த நீதிமன்றத்திற்குச் செய்துகொள்ளலேண்டுமோ அந்த நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

ஈ. நீதிமுறைக் கட்டளைகள் சம்பந்தமான பிற விதிகள்.

ஆஜர் கட்டளைக்குப் பதிலாக அல்லது அதனுடைனேகூட பிடிகட்டளையைப் பிறப்பித்தல்.

87. ஒரு நீதிமன்றம், எவரேனும் ஆஜராவதற்கு ஆஜர் கட்டளையொன்று பிறப்பிக்க இந்தச் சட்டத்தின் படி அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள எந்த வழக்கிலும் பின்வரும் சந்தர்ப்பங்களில், அவரைச் கைது செய்வதற்கான பிடிகட்டளையொன்றை, அதற்குரிய காரணங்களை எழுத்து மூலம் பதிவு செய்தபின்பு, பிறப்பிக்கலாம்—

(அ) அத்தகைய ஆஜர் கட்டளையைப் பிறப்பிப் பதற்கு முன்போ, அதைப் பிறப்பித்ததற்குப் பின்னர் ஆனால் அவர் ஆஜராவதற்காகக் குறிப்பிடப்பட்ட நேரத் திற்கு முன்போ அவர் தலைமறைவாகிவிட்டார் என்பதாகவோ ஆஜர் கட்டளைக்கு அவர் கீழ்ப்படிய மாட்டார் என்பதாகவோ நீதிமன்றம் நம்புவதற்குக் காரண மிருக்குமாயின்; அல்லது

(ஆ) அந்த ஆஜர் கட்டளையானது அதில் கண்ட படி அவர் ஆஜராவதற்குச் சாத்தியமாகும் வகையில் உரிய காலத்தில் உரியவாறு சார்வு செய்யப்பட்டதாக நிரூபிக்கப் பட்டிருந்தும், அவ்வாறு குறிப்பிட்ட நேரத்தில் அவர் ஆஜராகத் தவறுவதோடு, அவ்வாறு தவறியதற்கு நியாய மான காரணம் எதுவும் அளிக்கப்படவில்லையாயின்.

ஆஜராவதற்காகப் பத்திரம் வாங்குவதற்குள்ள அதிகாரம்.

88. எவரொருவர் ஆஜராவதற்காக அல்லது எவரொரு வரைக் கைது செய்வதற்காக நீதிமன்றம் ஒன்றில் தலைமை வகிக்கின்ற அலுவலருக்கு ஆஜர் கட்டளை அல்லது பிடி

கட்டளை பிறப்பிக்க அதிகாரமுள்ளதோ அவர், அந்த நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும்போது, அந்தகையவர் அந்த நீதிமன்றத்திலோ விசாரணைக்காக அந்த வழக்கு மாற்றப்படக்கூடிய வேறு எந்த நீதிமன்றத்திலோ தாம் ஆஜராவதாக, பத்திரமொன்றை ஜாமீன்தார்களுடனே, இல்லாமலோ எழுதிக் கொடுக்குமாறு அவரை அந்த அலுவலர் கோரலாம்.

ஆஜராவதற்கான பத்திரத்தை மீறுங்கால் கைதுசெய்தல்.

89. ஒரு நீதிமன்றத்தின் முன் ஆஜராவதாக இந்தச் சட்டத்தின்படி வாங்கப்பட்ட பத்திரத்தின் மூலம் தம்மைக் கட்டுப்படுத்திக்கொண்டுள்ள எவரேனும் அவ்வாறு ஆஜராகாதபோது, அந்த நீதிமன்றத்தில் தலைமை வகிக்கின்ற அலுவலர் அத்தகையவரைக் கைது செய்து தம்முன் கொண்டு வாவேண்டுமென்று உத்தரவிட்டு பிடிகட்டளையொன்றைப் பிறப்பிக்கலாம்.

இந்த அத்தியாயத்தின் விதிகளை போதுவாகவே ஆஜர்கட்டளைகள் மீதும் பிடிகட்டளைகள் மீதும் இயக்குதக்கன எண்பது.

90. ஒரு ஆஜர் கட்டளை மற்றும் ஒரு பிடிகட்டளை சம்பந்தமாகவும், அவற்றைப் பிறப்பித்தல், சார்வு செய்தல், மற்றும் நிறைவேற்றுதல் சம்பந்தமாகவும் இந்த அத்தியாயத்தில் அடங்கியுள்ள விதிகள், இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்படும் ஒவ்வொரு ஆஜர் கட்டளையின் மீதும் ஒவ்வொரு பிடிகட்டளையின்மீதும், எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு இயங்குதல் வேண்டும்.

அத்தியாயம் VII.

பொருள்களைத் தாக்கல் செய்வதைக் கட்டாயப்படுத்தும் நீதிமுறைக் கட்டளைகள்.

அ. தாக்கல் செய்வதற்கான ஆஜர் கட்டளை.

பத்திரத்தையோ வேறு பொருளையோ தாக்கல் செய்வதற்கான ஆஜர் கட்டளை.

91.(1) நீதிமன்றம் எதுவும் அல்லது காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் எவரும் தம்மால் அல்லது தம்முன் விசாரணையில் இந்தச் சட்டத்தின்படி நடத்தப்படும் புலனாய்வு, பரிசீலனை, விசாரணை அல்லது பிற நடவடிக்கையின் பொருட்டு, பத்திரம் அல்லது வேறு பொருள் எதேனும் தாக்கல் செய்யப்படுவது அவசியமானதென்றோ விரும்பத்தக்கதென்றோ கருதும்போதெல்லாம், எவரது அனுபோகம் அல்லது அதிகாரத்தில் அந்தப் பத்திரம் அல்லது பொருளானது இருப்பதாக நம்பப்படுகிறதோ அவரை, ஆஜர் கட்டளை அல்லது உத்தரவில் குறிப்பிடப்பட்ட நேரத்திலும் இடத்திலும் நேரில் வந்து அதைத் தாக்கல் செய்யுமாறு அல்லது அதைத் தாக்கல் செய்யுமாறு மட்டுமே கோரி, அது நீதிமன்றமாயின் ஒரு ஆஜர் கட்டளையும், அவர் மேற்சொன்ன அலுவலராயின் எழுத்து மூலமான ஓர் உத்தரவையும் பிறப்பிக்கலாம்.

(2) ஒரு பத்திரத்தையோ வேறு பொருளையோ தாக்கல் செய்யுமாறு மட்டுமே இந்தப் பிரிவின்படி கோரப்பட்ட எவரும், அதைத் தாக்கல் செய்வதற்காகத் தாமே நேர்முகமாக வருவதற்குப் பதிலாக, அந்தப் பத்திரம் அல்லது பொருளைத் தாக்கல் செய்விப்பாராதல் அந்தக் கோரிக்கையின்படி அவர் நடந்திருப்பதாகக் கொள்ளப்பட வேண்டும்.

(3) இந்தப் பிரிவிலுள்ள எதுவும்,

1/1872 (அ) 1872 ஆம் ஆண்டு இந்திய சாட்சியச் சட்டத்தின் 123 மற்றும் 124 ஆகிய பிரிவுகளை, அல்லது 1891 ஆம் ஆண்டு 13/1891 வங்கியர்களின் கணக்குப் புத்தகங்கள் சாட்சியச் சட்டத்தைப் பாதிப்பதாகவோ, அல்லது

(ஆ) அஞ்சலக அல்லது தந்திக் துறை அதிகாரியின் பாதுகாப்பிலுள்ள கடிதம், அஞ்சல் அட்டை, தந்தி அல்லது வேறு பத்திரம் அல்லது அஞ்சல் கட்டு அல்லது பொருள் எதன்மீதும் இயங்குவதாகவோ—

கொள்ளப்படுதல் ஆகாது.

கடிதங்களை மற்றும் தந்திகளை பற்றிய நடைமுறை

92. (1) அஞ்சலக அல்லது தந்தித் துறை அதிகாரியின் பாதுகாப்பிலுள்ள பத்திரம், அஞ்சல் கட்டு அல்லது பொருள் எதுவும், இந்தச் சட்டத்தின்படியான புலனாய்வு, பரிசீலனை, விசாரணை அல்லது பிற நடவடிக்கையின் பொருட்டுத் தேவைப்படுகிறதென்று மாவட்ட நடுவர், தலைமை நீதித் துறை நடுவர், செஷன்ஸ் நீதிமன்றம் அல்லது உயர்நீதி மன்றம் கருதினால், அத்தகைய நடுவர் அல்லது நீதிமன்றம், தான் உத்தரவிடுகிற ஆளிடம் அந்தப் பத்திரம், அஞ்சல் கட்டு அல்லது பொருளை ஒப்படைக்குமாறு, நிலவரத்திற்கேற்ப, அஞ்சலக அல்லது தந்தித் துறை அதிகாரியைக் கோரலாம்.

(2) அத்தகைய பத்திரம், அஞ்சல் கட்டு அல்லது பொருள் எதுவும், அத்தகைய நோக்கத்திற்காகத் தேவைப் படுகிறதென்று வேறு எந்த நடுவரோ, அவர் நிருவாகத் துறை நடுவராயினும் சரி, நீதித் துறை நடுவராயினும் சரி, அல்லது காவல் ஆணையரோ மாவட்டக் காவல் கண்காணிப்பாளரோ கருதினால், அவர் (1) ஆவது உட்பிரிவின்படி மாவட்ட நடுவர், தலைமை நீதித்துறை நடுவர் அல்லது நீதிபதியின் கட்டளை பிறப்பிக்கப்படும் வரையில், அத்தகைய பத்திரம், அஞ்சல் கட்டு அல்லது பொருளைத் தேடி, நிறுத்தி வைக்கு மாறு, நிலவரத்திற்கேற்ப, அஞ்சலக அல்லது தந்தித் துறை அதிகாரியைக் கோரலாம்.

ஆ. சோதனைக் கட்டளைகள்.

சோதனைக் கட்டளை எப்போது பிறப்பிக்கப்படலாம் என்பது.

93. (1) (அ) 91 ஆவது பிரிவின்படி ஓர் ஆஜர் கட்டளை அல்லது உத்தரவோ அல்லது 92 ஆவது பிரிவின் (1) ஆவது உட்பிரிவின்படி ஒரு கோரிக்கையோ எவருக்கு அனுப்பப்பட்டிருக்கிறதோ அல்லது அனுப்பப்பட்டிருக்குமோ அவர், அத்தகைய ஆஜர் கட்டளை அல்லது கோரிக்கையில் கோரப் பட்டவாறு அந்தப் பத்திரம் அல்லது பொருளைத் தாக்கல் செய்யமாட்டார் அல்லது செய்ய விரும்பார் என்பதாக எந்த நீதிமன்றத்திற்காவது நம்புவதற்குக் காரணமிருந்தால், அல்லது

(ஆ) அத்தகைய பத்திரம் அல்லது பொருளானது எவருடைய கைவசத்தில் இருக்கிறதென்று நீதிமன்றத் திற்குத் தெரியாதிருக்குமானால், அல்லது

(இ) ஒரு பொதுவான சோதனையோ, ஆய்வோ நடத்தினால், அது இந்தச் சட்டத்தின்படியான பரிசீலனை, விசாரணை அல்லது பிற நடவடிக்கையின் நோக்கத்திற்குப் பயன்படும் என்பதாக அந்த நீதிமன்றம் கருதுமாறால்,

அது சோதனைக் கட்டளையொன்றைப் பிறப்பிக்கலாம்; மற்றும் அச்சோதனைக் கட்டளை குறிப்பிட்டளிப்பப் படுபவர், அக்கட்டளைக்கும் இதன்பின் அடங்கியுள்ள விதி களுக்குமேற்ப, சோதனையிடலாம் அல்லது ஆய்வு செய்யலாம்.

(2) நீதிமன்றம்தான் பொருத்தமெனக் கருதினால், எந்த குறிப்பிட்ட இடம் அல்லது அதன் பகுதியை மட்டுமே சோதனை அல்லது ஆய்வு செய்ய வேண்டும் என்பதை அச் சோதனைக் கட்டளையில் குறிப்பிடலாம்; மற்றும் அந்த சோதனைக் கட்டளையை நிறைவேற்றும் பொறுப்புடையவர், அதன்பேரில் அவ்வாறு குறிப்பிடப்பட்ட இடம் அல்லது பகுதியை மட்டுமே சோதனை அல்லது ஆய்வு செய்தல் வேண்டும்.

(3) அஞ்சலக அல்லது தந்தித் துறை அதிகாரியின் கைவசத்திலுள்ள ஒரு பத்திரம், அஞ்சல்கட்டு அல்லது வேறுபொருளைத் தேடுவதற்கான கட்டளையை வழங்க, மாவட்ட நடுவர் அல்லது தலைமை நீதித்துறை நடுவர் தவிர வேறெந்த நடுவருக்கும் இந்தப் பிரிவிலுள்ள எதன்படிக்கும் அதிகாரம் கிடையாது.

திருட்டுப் பொருள், கருவூடனைப் பத்திரங்கள் முதலியவை இருப்பதாகச் சந்தேகிக்கப் படும் இடத்தைச் சோதனையிடுதல்.

94. (1) எந்த இடமேனும் திருட்டுப்பொருளை வைப் பதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு, அல்லது ஆட்சேப காரமானதென்று இந்தப் பிரிவில் குறிப்பிடப்படுகிற உருப்படியை வைப்பதற்கு, விற்பனை செய்வதற்கு அல்லது உண்டாக்குவதற்கு உபயோகப்படுத்தப்படுகிறது என்ப தாகவோ, அல்லது அத்தகைய ஆட்சேபகரமான உருப்படி எந்த இடத்திலேனும் வைக்கப்பட்டுள்ளது என்பதாகவோ ஒரு மாவட்ட நடுவர், அல்லது உட்கோட்ட நடுவர் அல்லது முதல் வகுப்பு நடுவர், கிடைத்த தகவல் பேரிலும் தாம் அவசியமெனக் கருதும் பரிசீலனைக்குப் பின்பும், நம்புவதற்குக் காரணமிருந்தால், அவர் பின்வருவன

வற்றைச் செய்வதற்கு, காவலர் தகுதிக்கு மேல்நிலையிலுள்ள காவல் அலுவலர் எவருக்கும் சோதனைக் கட்டளை மூலமாக அதிகாரமளிக்கலாம் :—

(அ) அத்தகைய இடத்திற்குள் அவசியமாகும் உதவியுடன் புகுவதற்கு,

(ஆ) அதை, அந்தச் சோதனைக் கட்டளையில் குறிப்பிடப்பட்ட முறையில் சோதனையிடுவதற்கு,

(இ) அத்தகைய இடத்தில் காணப்படுவதும், திருட்டுப் பொருளென்றோ ஆட்சேபகரமானது என்று இந்தப் பிரிவில் குறிப்பிடப்படும் உருப்படியென்றோ அவரால் நியாயமாகச் சந்தேகிப்பதும் அந்த இடத்தில் காணப்படுவது மான பொருள் அல்லது உருப்படி எதையும் கைப்பற்றுவதற்கு,

(ஈ) அத்தகைய பொருள் அல்லது உருப்படியை ஒரு நடுவர் முன்பு எடுத்துச் செல்வதற்கு, அல்லது குற்றவாளியை ஒரு நடுவர் முன்பு இட்டுச் செல்லும்வரை அதை அவ்விடத்திலேயே காத்து வருவதற்கு, அல்லது வேறுவிதமாக பாதுகாப்பான ஓரிடத்திற்கு அதை அனுப்பி வைப்பதற்கு,

(உ) நிலவரத்திற்கேற்ப, திருட்டுப் பொருளென்றோ, ஆட்சேபகரமானதென்று இந்தப் பிரிவில் குறிப்பிடப்படும் உருப்படியென்றோ, தெரிந்து, அல்லது அவ்வாறு சந்தேகிக்க நியாயமான காரணமிருந்து, அத்தகைய பொருள் அல்லது உருப்படியை வைப்பதில், விற்பனை செய்வதில், அல்லது உண்டாக்குவதில் உடந்தையெனத் தோன்றுகிறவரும் அத்தகைய இடத்தில் காணப்படுபவருமான ஒவ்வொருவரையும் கைதுசெய்து ஒரு நடுவர் முன்பு கொண்டு வருவதற்கு.

(2) இந்தப் பிரிவு குறிப்பிடும் ஆட்சேபகரமான உருப்படிகளாவன :—

(அ) கள்ள நாணயம்;

(ஆ) 1889 ஆம் ஆண்டு உலோக அடையாள வில்லைகள் சட்டத்தை மீறிச் செய்யப்பட்ட உலோகத் துண்டுகள்; அல்லது 1962 ஆம் ஆண்டு சுங்கச் சட்டத்தின் 11 ஆவது பிரிவின்படி அவ்வப்போது அமலிலுள்ள அறிக்கை எதனையும் மீறி இந்தியாவிற்குள் கொண்டுவரப்பட்ட உலோகத் துண்டுகள்; 1/1889. 52/1962.

(இ) கள்ள ரூபாய்த்தாள் ; கள்ள அஞ்சல் தலைகள் ;

(ஈ) சிருஷ்டனைப் பத்திரங்கள் ;

(உ) போலி முத்திரைகள் ;

(ஊ) இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 292 ஆவது பிரிவில் குறிக்கப்பட்ட ஆபாசப் பொருள்கள் .

(எ) (அ) முதல் (ஊ) வரையிலுள்ள கூறுகளில் சொல்லப்பட்ட உருப்படிகளில் எதையேனும் உற்பத்தி செய்வதற்காக உபயோகப்படுத்தப்படும் கருவிகள் அல்லது பொருள்கள்.

சில வெளியீடுகள் தண்ட இழப்பாயின என விளம்புவதற்கும் அவற்றிற்காகச் சோதனைக் கட்டளை பிறப்பிப்பதற்குமுள்ள அதிகாரம்.

95. (1) எந்த விஷயத்தை வெளியிடுவது இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 124-அ அல்லது 153-அ அல்லது 153-ஆ அல்லது 292 அல்லது 293 அல்லது 295-அ இவற்றில் யாதொரு பிரிவின்படியேனும் தண்டிப்பதற்குரியதோ அந்த விஷயம் எதுவும்,

(அ) ஏதேனும் செய்தித்தாள், அல்லது புத்தகத்தில், அல்லது

(ஆ) ஏதேனும் பத்திரத்தில்,

அது எங்கே அச்சடிக்கப்பட்டதாயினும், அடங்கியுள்ளதாக மாநில அரசுக்குத் தோன்றுமிடத்து, அந்த மாநில அரசு, தன் கருத்திற்கான காரணங்களைச் சொல்லி, அறிவிக்கை மூலமாக, அத்தகைய விஷயம் அடங்கியுள்ள செய்தித்தாளின் இதழின் பிரதி ஒவ்வொன்றும், மற்றும் அத்தகைய புத்தகம் அல்லது வேறு பத்திரத்தின் பிரதி ஒவ்வொன்றும் தண்ட இழப்பாக அரசைச் சேருமென விளம்பலாம். அதன்பேரில், காவல் அலுவலர் எவரும் இந்தியாவில் எந்த இடத்தில் காணப்பட்டாலும் அதைக் கைப்பற்றலாம் ; மேலும், அத்தகைய இதழின் பிரதி, அத்தகைய புத்தகம் அல்லது வேறு பத்திரம் எதுவும் இருக்கக்கூடுமென்றே இருப்பதாகவோ நியாயமாகச் சந்தேகிக்கப்படும் இடத்தில் புகுந்து, அதற்காகச் சோதனையிடுவதற்கு, துணை ஆய்வாளரின் தகுதிக்குக் குறையாத காவல் அலுவலர் எவருக்கும் கட்டளை மூலமாக நடுவர் எவரும் அதிகாரமளிக்கலாம்.

(2) இந்தப் பிரிவிலும் 96 ஆவது பிரிவிலும்,—

(அ) "செய்தித்தாள்" மற்றும் "புத்தகம்" ஆகியவை 1867 ஆம் ஆண்டு அச்சகம் மற்றும் புத்தகங்களைப் பதிவு செய்யும் சட்டத்திலுள்ள அதே அர்த்தத்தைக் கொண்டவை; 25/1867.

(ஆ) "பத்திரம்" என்பது ஓவியம், சித்திரம், அல்லது புகைப்படம் எதையும் அல்லது கண்ணுக்குப் புலனாகும் வேறு உருவப்படைப்பு எதனையும் உள்ளடக்கும்.

(3) இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட உத்தரவு அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதையும், 96 ஆவது பிரிவின் விதிகளின்படி அல்லாமல் வேறுவிதமாக எந்த நீதி மன்றத்திலும் மறுத்துரைத்தல் ஆகாது.

பறிமுதல் விளம்புகைகளை நீக்கி விடுவதற்கு உயர்நீதி மன்றத்திற்கு வினவப்படல்.

96. (1) எதைப் பொறுத்து பறிமுதல் விளம்புகை யொன்று, 95 ஆவது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்டிருக்கின்றதோ, அந்தச் செய்தித்தாள், புத்தகம் அல்லது வேறு பத்திரத்தில் அக்கறை கொண்டுள்ள எவரும், அந்த விளம்புகை அதிகாரபூர்வமான அரசிதழில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள், எதைப் பொறுத்து அந்த விளம்புகை பிறப்பிக்கப்பட்டதோ, அந்தச் செய்தித்தாளின் இதழ், அல்லது புத்தகம் அல்லது வேறு பத்திரத்தில் 95 ஆவது பிரிவின் (1) ஆவது உட்பிரிவில் குறிக்கப்பட்ட விஷயம் எதுவும் அடங்கியிருக்கவில்லை என்னும் காரணத்தின் அடிப்படையில், அந்த விளம்புகையை நீக்கிவிடுமாறு உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

(2) உயர்நீதிமன்றம் மூவர் அல்லது மூவருக்கு மேற்பட்ட நீதிபதிகளைக் கொண்டதாயிருக்குமிடத்து, அத்தகைய ஒவ்வொரு விண்ணப்பத்தையும் மூன்று நீதிபதிகள் அடங்கிய உயர்நீதிமன்றத்துச் சிறப்பு ஆயம் விசாரித்துத் தீர்மானிக்க வேண்டும்; மற்றும் உயர் நீதிமன்றம் மூவருக்குக் குறைவான நீதிபதிகள் கொண்டதாயிருக்குமிடத்து, அந்தச் சிறப்பு ஆயம் அவ்வுயர்நீதிமன்றத்தின் நீதிபதிகள் அனைவரும் அடங்கியதாக இருத்தல் வேண்டும்.

(3) செய்தித்தாள் எதையேனும் குறித்து எந்த விண்ணப்பத்தையும் விசாரிக்கும்போது, பறிமுதல் விளம்புகை பிறப்பிக்கப்பட்ட செய்தித்தாளில் அடங்கியுள்ள

சொற்கள், அடையாளக்குறிகள் அல்லது கண்ணுக்குப் புலனாகும் உருவப் படைப்புகளின் நன்மை அல்லது போக்கினை நிரூபிப்பதற்கு உதவும்பொருட்டு, அத்தகைய செய்திறத்தாளின் பிரதி எதையும் சாட்சியமாகத் தரலாம்.

(4) எதைப் பொறுத்து அந்த விண்ணப்பம் செய்யப் பட்டுள்ளதோ, அந்தச் செய்திறத்தாளின் இதழ், அல்லது புத்தகம் அல்லது வேறு பத்திரத்தில் 95 ஆவது பிரிவின் (1) ஆவது உட்பிரிவில் குறிக்கப்படும் விஷயம் எதுவும் அடங்கியிருப்பதாக உயர்நீதிமன்றத்திற்குத் திருப்தி ஏற்படவில்லையாயின், அது பறிமுதல் விளம்புகையை நீக்குதல் வேண்டும்.

(5) சிறப்பு ஆயமாக அமைகின்ற நீதிபதிகளுக் கிடையே கருத்து வேற்றுமை இருக்குமாயின், தீர்ப்பு அந்த நீதிபதிகளில் பெரும்பான்மையினரின் கருத்துக்கிணங்க இருத்தல் வேண்டும்.

சட்டவிரோதமாகக் கட்டுப்படுத்தப்பட்ட ஆட்களுக்காகச் சோதனையிடுதல்.

97. எந்தச் சூழ்நிலையில் ஒருவரை அடைத்துவைத்தால் அது குற்றமாகுமோ அந்தச் சூழ்நிலையில் அவர் அடைத்து வைக்கப்பட்டுள்ளதாக, மாவட்ட நடுவரோ, உட்கோட்ட நடுவரோ, முதல் வகுப்பு நடுவரோ நம்புவதற்குக் காரண மிருக்குமாயின், அவர் சோதனைக் கட்டளையொன்றை வழங்கலாம்; அக் கட்டளை எவருக்குக் குறிப்பிட்டு அனுப்பப் படுகிறதோ, அவர் மேற்சொன்னவாறு அடைத்து வைக்கப் பட்ட ஆளைத் தேடலாம்; மேலும் அக் கட்டளையில் குறித்தபடி அந்தச் சோதனை நடத்தப்படவேண்டும், அந்த ஆள் கண்டுபிடிக்கப்பட்டால் உடனடியாக ஒரு நடுவர் முன்பு இட்டுச் செல்லப்படவேண்டும். அந்த நடுவர் சூழ்நிலைக்குத் தக்கதெனத் தோன்றும் ஓர் உத்தரவைப் பிறப்பித்தல் வேண்டும்.

கடத்தப்பட்ட பெண்களைத் திரும்ப ஒப்படைப்பதைக் கட்டாயப்படுத்துவதற்குள்ள அதிகாரம்.

98. சட்டத்திற்குப் புறம்பான எந்த நோக்கத்திற் கேனும், ஒரு பெண்ணை அல்லது பதினெட்டு வயதிற்குட் பட்ட ஒரு பெண் குழந்தையைக் கடத்திச் சென்றது பற்றியோ, சட்டத்திற்குப் புறம்பாகக் காவலில் வைத் திருப்பது பற்றியோ பிரமாணத்தின்மீது செய்யப்பட்ட ஒரு முறையீட்டின்பேரில், உடனடியாக அந்தப் பெண்ணுக்குச் சுதந்திரத்தை மீட்டுக் கொடுக்கும்படி அல்லது, அத்தகைய

பெண் குழந்தையை அவளது கணவனிடமோ பெற்றோரிடமோ, பேணுநரிடமோ, அக் குழந்தைக்குச் சட்டபூர்வமான பொறுப்பினைக் கொண்டுள்ள வேறு எவரிடமோ திரும்ப ஒப்படைக்கும்படி உத்தரவொன்றை ஒரு மாவட்ட நடுவர், உட்கோட்ட நடுவர் அல்லது முதல் வகுப்பு நடுவர் பிறப்பிக்கலாம்; மற்றும் அவசியமான அளவிற்கு வன்முறையைப் பயன்படுத்தி, அந்த உத்தரவுக்கு இணங்கி நடக்குமாறு கட்டாயப்படுத்தலாம்.

இ. சோதனைகள் சம்பந்தமான பொது விதிகள்.

சோதனைக் கட்டளைகளைக் குறிப்பிட்டளிப்புதல் முதலியவை.

99. 38, 70, 72, 74, 77, 78 மற்றும் 79 ஆகிய பிரிவுகளின் விதிகள், 93 ஆவது பிரிவு, 94 ஆவது பிரிவு அல்லது 95 ஆவது பிரிவு அல்லது 97 ஆவது பிரிவின்படி பிறப்பிக்கப்படும் எல்லாச் சோதனைக் கட்டளைகளின்மீதும் இயன்ற அளவிற்கு இயங்குதல் வேண்டும்.

மூடப்பட்டுள்ள இடத்தின் பொறுப்பினைக் கொண்டுள்ள ஆட்கள் சோதனைக்கு அனுமதித்தல்.

100. (1) இந்த அத்தியாயத்தின்படி சோதனையோ ஆய்வோ செய்வதற்குட்பட்டுள்ள எந்த இடமெனும் மூடப்பட்டிருக்கும்போதெல்லாம், பிடிகட்டளையை நிறைவேற்றுகின்ற அலுவலரோ வேறு எவருமோ கோரிக்கையிடுவதுடன் பிடிகட்டளையையும் காட்டுவாரானால், அந்த இடத்தில் குடியிருக்கின்ற அல்லது அதன் பொறுப்பினைக் கொண்டுள்ள எவரும், அவரைத் தடையின்றி அந்த இடத்திற்குள் நுழையவிடவேண்டும்; அங்குச் சோதனையிடுவதற்கு நியாயமான வசதிகள் எல்லாவற்றையும் அளித்தலும் வேண்டும்.

(2) மேற்சொன்னவாறு அந்த இடத்திற்குள் நுழைவு கிட்டவில்லையானால், பிடிகட்டளையை நிறைவேற்றுகின்ற அலுவலரோ வேறு எவருமோ 47 ஆவது பிரிவின் (2) ஆவது உட்பிரிவில் வகை செய்யப்பட்ட முறையில் நடவடிக்கை எடுக்கலாம்.

(3) அத்தகைய இடத்தில் அல்லது அதன் சுற்றுப் புறத்தில் எந்த உருப்படிக்காகச் சோதனை செய்ய வேண்டுமோ அந்த உருப்படி எதையும் ஒருவர் தம் உடம்பில் மறைத்து வைத்திருப்பதாக நியாயமான சந்தேகம் எற்படுமிடத்து, அவரைச் சோதனை போடலாம்; அத்தகையவர் ஒரு பெண்ணையிருப்பின், அச்சோதனை, மற்றொரு பெண்ணால் சற்றும் பண்பு குலையாதவகையில் செய்யப்படுதல் வேண்டும்.

(4) இந்த அத்தியாயத்தின்படி சோதனை போடுவதற்கு முன்பு அதைச் செய்யப்போகிற அலுவலரோ வேறு எவருமோ, எந்த வட்டாரத்தில் சோதனையிடப்படவேண்டிய இடம் அமைந்துள்ளதோ அதில் வசிப்பவர்களில் சுயேச்சையான, மதிப்பிற்குரிய இருவர் அல்லது இருவருக்கு மேற்பட்டவர்களை, அல்லது மேற்சொன்ன வட்டாரத்தில் வசிப்பவரில் அத்தகையவர் எவரும் கிடைக்கவில்லை என்றால் அல்லது அச்சோதனைக்கு ஒரு சாட்சியாக இருக்க விரும்பவில்லையென்றால், வேறு எந்த வட்டாரத்திலேனும் வசிப்பவர்களில் அத்தகைய இருவர் அல்லது இருவருக்கு மேற்பட்டவர்களை மேற்படி சோதனைக்கு சாட்சியாக வந்திருக்குமாறு கோரவேண்டும்; மற்றும் அவ்வாறு செய்ய அவர்களுக்கோ அவர்களில் எவருக்குமோ எழுத்து மூலமான உத்தரவொன்றைப் பிறப்பிக்கலாம்.

(5) அந்தச் சோதனை அவர்களது முன்னிலையில் செய்யப்பட வேண்டும்; மற்றும் அத்தகைய சோதனையின் போது கைப்பற்றப்பட்ட எல்லாப் பொருள்களையும் அவை முறையே காணப்பட்ட இடங்களையும் குறிப்பிடுகின்ற பட்டியலொன்று அந்த அலுவலர் அல்லது வேறு ஆளால் தயாரிக்கப்பட்டு அத்தகைய சாட்சிகளால் கையொப்பமிடப்படவேண்டும்; ஆனால் இந்தப் பிரிவின்படி நடத்தப்படும் சோதனைக்குச் சாட்சியாக இருக்கின்ற எவரையும், அச் சோதனைக்குச் சாட்சியாக நீதிமன்றத்தில் ஆஜராயிருக்குமாறு, அதற்கென அந்த நீதிமன்றத்தால் ஆஜர் கட்டளை அனுப்பப்பட்டிருந்தாலன்றி, கோரக்கூடாது.

(6) சோதனையிடப்படும் இடத்தில் வசிப்பவரை, அல்லது அவர் சார்பாக எவரையும், அந்தச் சோதனை நடக்கும் ஒவ்வொரு தடவையிலும் வந்திருப்பதற்கு அனுமதிக்க வேண்டும்; மற்றும் இந்தப் பிரிவின்படி தயாரிக்கப்பட்ட பட்டியலின் நகலொன்று, மேற்சொன்ன சாட்சிகளால் கையொப்பமிடப்பட்டு, அந்த இடத்தில் வசிப்பவருக்கோ அத்தகையவருக்கோ கொடுக்கப்பட வேண்டும்.

(7) ஒருவரை (3) ஆவது உட்பிரிவின்படி சோதனையிடும்போது, கைப்பற்றப்பட்ட எல்லாப் பொருள்களுக்கும் பட்டியலொன்று தயாரிக்கப்படவேண்டும்; மற்றும் அதன் நகலொன்று அத்தகையவருக்குக் கொடுக்கப்படவேண்டும்.

(8) இந்தப் பிரிவின்படி நடக்கும் சோதனைக்குச் சாட்சியாக வந்திருக்கவேண்டுமென்று, தமக்குக் கொடுக்கப் பட்ட அல்லது கொடுக்கப்படுவதற்கு முற்பட்ட எழுத்து மூலமான உத்தரவு மூலமாக ஒருவர் வேண்டப் பட்டிருக்கும் நியாயமான காரணமின்றி அங்ஙனம் செய்ய அவர் மறுப்பாராயின் அல்லது செய்வதைப் புறக்கணிப் பாராயின், அவர் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 187 ஆவது பிரிவின்படி குற்றமொன்றைச் செய்திருப்பதாகக் கருதப்படுவார். 45/1860

அதிகார மும் புகு அப்பால் விடப்பட்ட சோதனையில் காணப்பட்ட பொருள்களை எான செய்ய வேண்டுமென் பது.

101. ஒரு சோதனைக் கட்டளையைப் பிறப்பித்த நீதிமன்றத்தின் எல்லாச அதிகார வரம்புக்கு அப்பாலுள்ள வேறு இடத்திலேனும் அந்தக் கட்டளையை நிறைவேற்று கையில், எந்தப் பொருள்களுக்காகச் சோதனையிடப்படு கிறதோ அவற்றில் எவையேனும் காணப்படும்போது, அந்தமாதிரிப் பொருள்களை, அவற்றைக் குறிப்பிட்டு, இதற்குப் பின் அடங்கியுள்ள விதிகளின்படி தயாரிக்கப்பட்ட பட்டிய லொன்றுடன் சேர்த்து, அக் கட்டளையைப் பிறப்பித்தன்ற நீதிமன்றத்தின் முன்பு, உடனடியாக எடுத்துச் செல்ல வேண்டும். அவ்வாறு சோதனையிடப்பட்ட இடமானது, கட்டளையைப் பிறப்பித்த நீதிமன்றத்தைக் காட்டிலும், அந்த இடத்தில் அதிகார வரம்பு கொண்டுள்ள நடுவர் மிக அருகி லிருந்தால், அவர் முன்பு உடனடியாக, அப் பட்டியலும் பொருள்களும் எடுத்துச் செல்லப்படவேண்டும். இதற்கு மாறாகச் செய்வதற்குத் தக்க காரணமிருந்தாலன்றி, அவற்றை மேற்சொன்ன நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்வதற்கு அதிகாரமளித்து அந்தமாதிரிய நடுவர் உத்தரவொன்றைப் பிறப்பிக்க வேண்டும்.

ஈ. பலதிறப்பட்டவை.

சில பொருள் களைக் கைப் பற்ற காவல் அலுவலருக் குள்ள அதிகா ரம்.

102. (1) திருடப்பட்டிருப்பதாகச் சொல்லப்படும் அல்லது திருடப்பட்டிருப்பதாகச் சந்தேகிக்கப்படும் எந்தப் பொருளையும், அல்லது குற்றம் எதனும் செய்யப்பட்டுள்ள தென்னும் சந்தேகத்தை உண்டாக்கும் சூழ்நிலையில் காண லாரும் எந்தப் பொருளையும் காவல் அலுவலர் எவரும் கைப்பற்றலாம்.

(2) அத்தகைய காவல் அலுவலர் ஒரு காவல் நிலையப் பொறுப்பு அலுவலருக்குக் கீழ்நிலையிலுள்ளவராயிருந்தால், கைப்பற்றியதைக் குறித்து உடனடியாக அந்த அலுவலருக்கு அறிக்கை செய்தல் வேண்டும்.

நடுவர் தம் முன்னிலையில் சோதனை செய்ய உத்தரவிடலாம்.

103. எந்த இடத்தைச் சோதனை செய்வதற்கு சோதனைக் கட்டளையொன்றைப் பிறப்பிக்க ஒரு நடுவருக்கு அதிகாரமுள்ளதோ அந்த இடத்தை, தம் முன்னிலையில் சோதனை செய்வதற்கு அவர் உத்தரவிடலாம்.

தாக்கல் செய்யப்பட்ட பத்திரம் முதலிய வற்றைப் பற்றுகை செய்வதற்கான அதிகாரம்.

104. இந்தச் சட்டத்தின்படி தம் முன்பு கொண்டுவரப்பட்ட பத்திரம் அல்லது பொருள் எதனையும் எந்த நீதிமன்றமும் தான் பொருத்தமெனக் கருதினால் பற்றுகை (impound) செய்து வைக்கலாம்.

நீதிமுறைக் கட்டளைகள் சம்பந்தமான பரந்தர ஏற்பாடுகள்.

105. (1) இந்தச் சட்டம் அளாவிநிற்கிற மண்டலங்களில் (இனி இந்தப் பிரிவில் மேற்சொன்ன மண்டலங்கள் என்று குறிக்கப்படுபவை) உள்ள ஒரு நீதிமன்றம், தன்னால் பிறப்பிக்கப்பட்ட பின்வரும் கட்டளைகளில் எதேனுமொன்று, மேற்சொன்ன மண்டலங்களுக்கு வெளியே இந்தியாவிலுள்ள எந்த மாநிலம் அல்லது பகுதியிலேனும் உள்ள ஒரு நீதிமன்றத்தின் வட்டார அதிகார வரம்புக்குள் உள்ள எந்த இடத்திலேனும் சார்வு செய்யப்பட அல்லது நிறைவேற்றப்பட வேண்டுமென விரும்புமிடத்து, அது அத்தகைய ஆஜர் கட்டளை அல்லது பிடிகட்டளையை இரட்டைப்படிகளில், அஞ்சல் வாயிலாகவோ, வேறுவிதமாகவோ, சார்வு செய்வதற்காக அல்லது நிறைவேற்றுவதற்காக அந்த நீதிமன்றத்தில் தலைமை வகிக்கின்ற அலுவலருக்கு அனுப்பி வைக்கலாம்;

(அ) குற்றஞ்சாட்டப்பட்டவருக்கான ஒரு ஆஜர் கட்டளை, அல்லது

(ஆ) குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரைக் கைது செய்வதற்கான ஒரு பிடி கட்டளை, அல்லது

(இ) ஒரு பத்திரம் அல்லது வேறு பொருளை ஆஜராகித் தாக்கல் செய்யுமாறு, அல்லது அதைத் தாக்கல் செய்யுமாறு கோரி எவருக்கேனும் அனுப்பப்படும் ஒரு ஆஜர் கட்டளை, அல்லது

(ஈ) சோதனைக் கட்டளை.

மற்றும் கூறு (அ) அல்லது கூறு (இ) யில் குறிக்கப்பட்ட ஆஜர் கட்டளை எதேனும் அவ்வாறு சார்வு செய்யப்பட்டிருக்குமிடத்து, எந்த நீதிமன்றத்திற்கு அந்தக் கட்டளை அனுப்பி வைக்கப்படுகிறதோ அந்த நீதிமன்றத்தில் தலைமை

வகிக்கின்ற அலுவலர் மேற்சொன்ன மண்டலங்களில் ஒரு பகுதியாய் இருந்தாற்போன்றே 68 ஆவது பிரிவின் விதிகள் அத்தகைய ஆணைக் கட்டளை சம்பந்தமாக, இயங்குதல் வேண்டும்.

(2) மேற்சொன்ன மண்டலங்களுக்கு வெளியே இந்தியாவிலுள்ள எந்த மாநிலம் அல்லது பகுதியிலேனும் உள்ள ஒரு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட பின்வரும் கட்டளைகளில் ஏதேனும் சார்வு செய்வதற்காக அல்லது நிறைவேற்றுவதற்காக, மேற்சொன்ன மண்டலங்களிலுள்ள ஒரு நீதிமன்றத்திற்கு வந்திருக்குமிடத்து, அது மேற்சொன்ன மண்டலங்களிலுள்ள மற்றொரு நீதிமன்றத்திலிருந்து, தன் வட்டார அதிகார வரம்புக்குள் சார்வு செய்வதற்காகவோ நிறைவேற்றுவதற்காகவோ தனக்குக் கிடைக்கப் பெற்ற ஒரு ஆணைக் கட்டளை அல்லது பிடிகட்டளை போலவே, அதைச் சார்வு செய்வித்தலோ நிறைவேற்றுவித்தலோ வேண்டும்.

(அ) குற்றஞ்சாட்டப்பட்டவருக்கான ஒரு ஆணைக் கட்டளை, அல்லது

(ஆ) குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரைக் கைது செய்வதற்கான ஒரு பிடிகட்டளை, அல்லது

(இ) ஒரு பத்திரம் அல்லது வேறு பொருளை ஆணையாகித் தாக்கல் செய்யுமாறு, அல்லது அதைத் தாக்கல் செய்யுமாறு, கோரி எவருக்கேனும் அனுப்பப்படும் ஓர் ஆணைக் கட்டளை, அல்லது

(ஈ) சோதனைக் கட்டளை;

மற்றும்

(i) பிடிகட்டளையொன்று நிறைவேற்றப்பட்டிருக்குமிடத்து, சாத்தியமாகும் அளவிற்கு 80 மற்றும் 81 ஆகிய பிரிவுகளில் விதிக்கப்பட்ட நடைமுறைக்கேற்ப, கைது செய்யப்பட்டவர் மீது மேல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்;

(ii) சோதனைக் கட்டளையொன்று நிறைவேற்றப் பட்டிருக்குமிடத்து, அச் சோதனையில் காணப்பட்ட பொருள் களைப் பொறுத்து, சாத்தியமாகும் அளவிற்கு, 101 ஆவது பிரிவில் விதிக்கப்பட்ட நடைமுறைக்கேற்ப மேல் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

அத்தியாயம் -VIII.

அமைதி பேணுவதற்கும் நன்னடத்தைக்குமான ஜாமீன்.

நன்னடைத் தீர்ப்புக் காலத்தில் அமைதி பேணுவதற்கான ஜாமீன் வாங்குதல் பற்றி.

106. (1) (2) ஆவது உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட குற்றங்களில் எதையேனும் செய்ததாக அல்லது அத்தகைய குற்றத்திற்கு உடந்தையாக இருந்ததாக ஒருவருக்கு ஒரு செஷன்ஸ் நீதிமன்றமோ முதல் வகுப்பு நடுவர் நீதிமன்றமோ நன்னடைத் தீர்ப்பளித்து, அமைதி பேணுவதற்காக அத்தகையவரிடமிருந்து ஜாமீன் வாங்குவது அவசியமெனக் கருதும்போது, அத் நீதிமன்றம், மூன்றாண்டுகளுக்கு மேற்படாது, தான் பொருத்தமெனக் கருதும் ஒரு கால அளவுக்கு அவர் அமைதியைப் பேணிவர வேண்டுமென்று, பத்திரமொன்றை ஜாமீன்தார்களுடனே இல்லாமலோ எழுதித் தருமாறு, அத்தகையவருக்குத் தண்டனையை விதிக்கும்பொழுது அவருக்கு உத்தரவிடலாம்.

(2) (1) ஆவது உட்பிரிவில் குறிக்கப்பட்ட குற்றங்களாவன:—

1860.

(அ) இந்தியத் தண்டனைச் சட்டத்தின் VIII ஆவது அத்தியாயத்திலுள்ள 153-அ பிரிவு, 153-ஆ பிரிவு அல்லது 154 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரிய குற்றம் எதையும் தவிர, மற்ற குற்றம் எதுவும்;

(ஆ) தாக்குதல், அல்லது வன்முறையை உபயோகித்தல், அல்லது அழிம்பு செய்தல் இவற்றில் ஏதாவதொன்றால் ஆகியதும், அல்லது ஏதாவதொன்றை உள்ளடக்கியதுமான குற்றம் எதுவும்;

(இ) மிரட்டுதல் குற்றம் எதுவும்;

(ஈ) அமைதிக்குலைவை உண்டாக்கிய, அல்லது உண்டாக்கக் கருதிச் செய்யப்பட்ட அல்லது அநேகமாக உண்டாக்குமென்று தெரிந்து செய்யப்பட்ட வேறு குற்றம் எதுவும்.

(3) அத் தண்டனைத் தீர்ப்பானது மேல்முறையீட்டின் மீதோ வேறுவிதமாகவோ நீக்கப்படுமாயின், அவ்வாறு எழுதித் தரப்பட்ட பத்திரம் செல்லாது போய்விடும்.

(4) இந்தப் பிரிவின்படியான ஓர் உத்தரவை, மேல் முறையீட்டு நீதிமன்றமும் அல்லது சாய்வு அதிகாரங்களைச் செலுத்தும் நீதிமன்றமுமன்றி வேறு நீதிமன்றமும் பிறப்பிக்கலாம்.

தற்காப்பு அல்லாத பிறர் சொத்தில் தாமாகவே தடுப்பதற்கு அல்லது தீங்கு விளைவிப்பதற்கு காரணமாகும் செயல்.

107. (1) யாராவது ஒருவர் அநேகமாக அமைதிக்குலைவை உண்டாக்கவோ, அல்லது பொது அமைதிக்குப் பங்கம் விளைவிக்கவோ, அல்லது சட்டத்தை மீறிய எதாவதொரு செயலால் அநேகமாக அமைதிக் குலைவையோ பொது அமைதிக்குப் பங்கத்தையோ விளைவிக்கவோ கூடும் என்பதாகத் தகவல் கிடைத்து, நடவடிக்கை எடுப்பதற்குப் போதுமான காரணமிருப்பதாக நிருவாகத்துறை நடுவர் கருதும்போது, அவர் ஓராண்டு காலத்திற்கு மேற்படாது தாம் தக்கதெனக் கருதும் கால அளவிற்கு, அமைதி பேணுவதற்கான பத்திரமொன்றை எழுதித்தரவேண்டு மென்று ஏன் அத்தகையவருக்கு உத்தரவிடக்கூடாது என்பதற்குக் காரணங்காட்டுமாறு, இதற்குப் பின் கை செய்யப் பட்ட முறையில் அவரைக் கோரலாம்.

(2) அமைதிக்குலைவோ, பங்கமோ ஏற்படக்கூடுமென அஞ்சப்படும் இடமானது நிருவாகத்துறை நடுவர் ஒருவரின் வட்டார எல்லைக்குள் இருக்கும்போதோ, அவரது அதிகார எல்லைக்கு அப்பால் மேற்சொன்னவாறு அநேகமாக அமைதிக் குலைவை உண்டாக்கக்கூடிய, அல்லது பொது அமைதிக்குப் பங்கத்தை உண்டாக்கக்கூடிய, அல்லது சட்டத்தை மீறிய எதாவதொரு செயலைச் செய்யக்கூடிய ஒருவர் அவருடைய அதிகார எல்லைக்குள் இருக்கும்போதோ, இந்தப் பிரிவின் படியுள்ள நடவடிக்கைகள் அந்த நடுவர் முன் எடுக்கப்பட லாம்.

வட்டிக்குத் தீங்கோகமாகக் கொள்ளை செய்யும் விஷயமாகப் பயப்பு வினவுகையில் மிருந்த நன்னடத்தைக் காலமுறை.

108. (1) முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் ஒருவருக்கு, தம் வட்டார அதிகார வரம்புக்குள்ளேயாயினும் வெளியே யாயினும் பின்வருமாறு செய்கிற எவரேனும் தம் வட்டார அதிகார வரம்புக்குள் இருக்கின்றார் என்பதாகத் தகவல் வந்து, மேல் நடவடிக்கை எடுப்பதற்குப் போதுமான காரணம் இருக்கிறது என்பதாகத் தாம் கருதும்போது, அவர் ஓராண்டு காலத்திற்கு மேற்படாது, தாம் தக்கதெனக் கருதும் கால அளவிற்கு, அத்தகையவரின் நன்னடத்தைக்காக பத்திர மொன்றை, ஜாமீன்தார்களுடனே இல்லாமலோ எழுதித் தர

வேண்டுமென்று என் அத்தகையவருக்கு உத்தரவிடக்கூடாது என்பதற்குக் காரணங்காட்டுமாறு, இதற்குப்பின் வகை செய்யப்பட்ட முறையில் அவரைக் கோரலாம் :—

(i) வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ, வேறு எந்த முறையிலேனுமோ—

45/1860. (அ) எந்த விஷயத்தை வெளியிடுவது, இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 124-அ, அல்லது 153-அ அல்லது 153-ஆ அல்லது 295-அ ஆகிய பிரிவுகளில் எதன்படியேனும் தண்டிப்பதற்குரியதோ அவ்விஷயம் எதனையும், அல்லது

45/1860. (ஆ) ஒரு நீதிபதி தம் அலுவல்முறைக் கடமைகளை ஆற்றும்போது அல்லது ஆற்றுவதாகத் தோன்றும்போது, அவரைப் பற்றியதும், இந்தியத் தண்டனைச் சட்டத்தின்படி மிரட்டல் குற்றமாகவோ அவதூறு குற்றமாகவோ ஆகிறதுமான விஷயம் எதனையும்

கருதியே பரப்புகிற, அல்லது பரப்ப முயல்கிற, அல்லது பரப்புவதற்கு உடந்தையாக இருக்கிற எவரும்; அல்லது

45/1860. (ii) இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 292 ஆவது பிரிவில் குறிக்கப்பட்ட ஆபாசமான விஷயம் எதையும் உற்பத்தி செய்கிற, உண்டுபண்ணுகிற, விற்பனைக்காக வெளியிடுகிற அல்லது வைத்திருக்கிற, இறக்குமதி செய்கிற, ஏற்றுமதி செய்கிற, அனுப்பிவைக்கிற, விற்பனை செய்கிற, வாடகைக்கு விடுகிற, விநியோகம் செய்கிற, வெளிப்படையாகக் காட்சிக்கு வைக்கிற, அல்லது வேறு எந்த முறையிலேனும் நிலவச் செய்கிற எவரும்.

25/1867. (2) 1867 ஆம் ஆண்டு அச்சகம் மற்றும் புத்தகங்களைப் பதிவு செய்யும் சட்டத்தின்படி விதிக்கப்பட்ட விதிகளுக்கிணங்க பதிவுசெய்யப்பட்டதும், அவற்றிற்கிணங்கப் பதிப்பிக்கப்பட்டு, அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டதுமான வெளியீடு எதனின் பதிப்பாசிரியர், உரிமையாளர், அச்சிடுபவர் அல்லது வெளியிடுபவர்மீது, அந்த வெளியீட்டில் அடங்கியுள்ள விஷயம் எதனையும் குறித்து, மாநில அரசினால் அல்லது மாநில அரசினால் இதன்பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட பிற அலுவலரால் பிறப்பிக்கப்பட்ட கட்டளையினாலோ அதிகாரத்தின்படியோ தவிர, இந்தப் பிரிவின்படியுள்ள நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படக்கூடாது.

சந்தேகிக்கப் படும் ஒட்கனிட மிருந்து நன னடத்தைக் கான ஜாமீன.

109. முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் ஒருவரின் வட்டார அதிகார வரம்புக்குள் இருந்துகொண்டு தாமிருப்பதை மறைத்துக்கொள்ள முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகளை ஒருவர் செய்துகொண்டிருக்கின்றார் என்பதாகவும், கைது செய்தற்குரிய குற்றம் ஒன்றைச் செய்யும் நோக்கத்துடன் அவர் அவ்வாறு செய்துகொண்டிருக்கிறாரென நம்புவதற்குக் காரணமிருப்பதாகவும் அந்த நடுவருக்குத் தகவல் வரும்போது, அவர் ஓராண்டிற்கு மேற்படாத நாம் தக்கதெனக் கருதும் கால அளவிற்கு நன்னடத்தைக்கான பத்திரமொன்றை ஜாமீன்தார்களுடனே இல்லாமலோ எழுதித் தர வேண்டுமென்று ஏன் அவருக்குக் கட்டளையிடக்கூடாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு, இதன்பின் வகை செய்யப்பட்ட முறையில் அவரைக் கோரலாம்.

வாடிக்கைக குற்றவாளி களிடமிருந்து நன்னடத்தைக் கான ஜாமீன.

110. கீழ்க்கண்டபடி உள்ள ஒருவர் தம் வட்டார அதிகார வரம்புக்குள் இருப்பதாக முதல் வகுப்பு நீதித்துறை நடுவருக்குத் தகவல் வரும்போது, அத்தகைய நடுவர் மூன்றாண்டுகளுக்கு மேற்படாது தாம் தக்கதெனக் கருதும் கால அளவிற்கு நன்னடத்தைக்கான பத்திரமொன்றை ஜாமீன்தார்களுடன் எழுதித்தரவேண்டுமென்று ஏன் அவருக்குக் கட்டளையிடக்கூடாது என்பதற்குக் காரணங் காட்டுமாறு அவரை, இதன்பின் வகை செய்யப்பட்ட முறையில் கோரலாம்:—

(அ) வாடிக்கையாகக் கொள்ளைக்காரனாக, கன்னமிடுபவராக, திருடராக, அல்லது கிருஷ்டனே செய்கிறவராக உள்ளவர்; அல்லது

(ஆ) திருட்டுப்பொருளெனத் தெரிந்தே அதை வாடிக்கையாகப் பெறுபவர்; அல்லது

(இ) வாடிக்கையாகவே திருடர்களுக்குக் காப்பளிக்கின்றவர் அல்லது அவர்களுக்குத் தஞ்சம் கொடுக்கிறவர், அல்லது திருட்டுப்பொருளை மறைத்து வைப்பதற்கு அல்லது பாதீனம் செய்வதற்கு உதவி செய்கின்றவர்; அல்லது

(ஈ) பிள்ளை பிடித்தல், ஆளைக் கடத்துதல், மிரட்டிப் பறித்தல், எமாற்றுதல் அல்லது அழிம்பு செய்தல் அல்லது இந்தியத் தண்டனைச் சட்டத்தின் XII ஆவது அத்தியாயத்தின்படியோ அச்சட்டத்தின் 489-அ, 489-ஆ, 489-இ அல்லது 489-ஈ இவற்றில் எந்தப் பிரிவின்படியோ 45/1860

தண்டிப்பதற்குரிய குற்றம் எதையும் வாடிக்கையாகவே செய்கிறவர், அல்லது செய்ய முயல்கிறவர், அல்லது செய்வதற்கு உடந்தையாக இருக்கிறவர்; அல்லது

(உ) அமைதிக்குலைவை உண்டாக்கக்கூடிய குற்றங்களை வாடிக்கையாகவே செய்கிறவர், அல்லது செய்ய முயல்கிறவர், அல்லது செய்வதற்கு உடந்தையாக இருக்கிறவர்; அல்லது

(ஊ) பின்வரும் குற்றம் எதையும் வாடிக்கையாகவே செய்கிறவர், அல்லது செய்ய முயல்கிறவர், அல்லது செய்வதற்கு உடந்தையாக இருக்கிறவர்:—

(i) பின்வரும் சட்டங்களில், அதாவது—

1940. (அ) 1940 ஆம் ஆண்டு மருந்துச் சரக்குகள் மற்றும் அலங்கார சாதனங்கள் சட்டம்;

7/1947. (ஆ) 1947 ஆம் ஆண்டு அயல்நாட்டு நாணய மாற்றை முறைப்படுத்தும் சட்டம்;

19/1952. (இ) 1952 ஆம் ஆண்டு வேலைபெறுபவர்களின் எதிர்காலக் காப்புநிதிச் சட்டம்;

7/1954. (ஈ) 1954 ஆம் ஆண்டு உணவுக் கலப்படத்தைத் தடைசெய்யும் சட்டம்;

10/1955. (உ) 1955 ஆம் ஆண்டு அத்தியாவசியமான பண்டங்கள் சட்டம்;

22/1955. (ஊ) 1955 ஆம் ஆண்டு தீண்டாமை (குற்றங்கள்) சட்டம்;

62/1962. (எ) 1962 ஆம் ஆண்டு சுங்கச் சட்டம்.

இவற்றில் ஒன்று அல்லது மேற்பட்டதன்படியான குற்றம் எதனையும்—அல்லது

(ii) பதுக்கலை, அல்லது கொள்ளை லாபம் அடிப்பதை, அல்லது, உணவு அல்லது மருந்துச் சரக்குகளின் கலப்படத்தை, அல்லது லஞ்சத்தைத் தடை செய்வதற்கு வகை செய்கின்ற வேறெந்தச் சட்டத்தின்படியேனும் தண்டிப்பதற்குரிய குற்றம் எதனையும்;

(எ) ஜாமீன் வாங்காமல் சுதந்திரமாக விட்டு வைப்பது சமுதாயத்திற்கு அபாயகரமானதென்னும் அளவிற்கு ஒருவர் வெறித்தனங்கொண்டவராகவும் ஆபத்தானவராகவும் இருந்தால் அவர்.

111. 107 ஆவது பிரிவு, 108 ஆவது பிரிவு, 109 ஆவது பிரிவு அல்லது 110 ஆவது பிரிவின்படி செயலாற்றுகின்ற ஒரு நடுவர், அந்தந்தப் பிரிவின்படி காரணங்காட்டுமாறு எவரை யேனும் கோருவது அவசியமெனக் கருதும்போது, அவர் கிடைத்த தகவலின் சாராம்சம், எழுதுவித்தாப்பட வேண்டிய பத்திரத்தின் தொகை, அது நடப்பிலிருக்க வேண்டிய கால அளவு மற்றும் கோரப்படும் ஜாமீன்தார்கள் (எவரேனு மிருப்பின்) அவர்களின் எண்ணிக்கை, தரம் மற்றும் வகை ஆகியவற்றை விவரித்து, எழுத்து மூலமான உத்தர வொன்றைப் பிறப்பிக்க வேண்டும்.

எழுதுவித்தாப்பட வேண்டிய பத்திரம் தொடர்பான உத்தரவு.

112. எவர் சம்பந்தமாக அந்தக் கட்டளை பிறப்பிக்கப் பட்டதோ அவர் நீதிமன்றத்தில் இருக்கும்போது, அது அவருக்குப் படித்துக் காட்டப்பட வேண்டும்; அல்லது அவர் அவ்வாறு விரும்புவாராயின், அதன் சாராம்சம் அவருக்கு விளக்கிச் சொல்லப்படவேண்டும்.

நீதிமன்றத்தில் இருக்கும்போது உத்தரவு அவருக்குப் படித்துக் காட்டப்படல் அல்லது அதன் சாராம்சம் அவருக்கு விளக்கிச் சொல்லப்படல் வேண்டும்.

113. அத்தகையவர் நீதிமன்றத்தில் இல்லாதபோது, அவரை ஆஜராகுமாறு கோருகின்ற ஆஜர் கட்டளை ஒன்றையோ, அத்தகையவர் காவலில் இருப்பாராயின், அவரை நீதிமன்றத்தின் முன்பு கொணருமாறு அவரைக் காவலில் வைத்திருக்கின்ற அலுவலருக்கு உத்தரவிடுகின்ற பிடிகட்டளையையோ நடுவர் பிறப்பிக்க வேண்டும்:—

அத்தகையவர் நீதிமன்றத்தில் இல்லாதபோது ஆஜர் கட்டளை அல்லது பிடிகட்டளை பிறப்பிக்க நடுவர்.

ஆனால் காவல் அலுவலரின் அறிக்கையின்பேரிலோ, பிற தகவலின்பேரிலோ (அவ்வறிக்கை அல்லது தகவலின் சாராம்சத்தை அந்த நடுவர் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும்) அமைதிக்குலைவு ஏற்படுமென அஞ்சுவதற்குக் காரணமிருக்கிறது என்றும், அத்தகையவரை உடனடியாகக் கைது செய்தாலல்லாமல் வேறுவிதமாக அவ்வமைதிக் குலைவைத் தடுக்க முடியாது என்றும் அந்த நடுவருக்குத் தோன்றும்போதெல்லாம், அவர் அந்த ஆளைக் கைது செய்வதற்கு எந்த நேரத்திலும் பிடிகட்டளையொன்றைப் பிறப்பிக்கலாம்.

114. 113 ஆவது பிரிவின்படி பிறப்பிக்கப்படும் ஆஜர் கட்டளை அல்லது பிடிகட்டளை ஒவ்வொன்றும், 111 ஆவது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட கட்டளையின் நகலுடன் சேர்த்தனுப்பப்பட வேண்டும்; மற்றும் அந்த ஆஜர் கட்டளையைச் சார்வு செய்கின்ற அல்லது பிடிகட்டளையை நிறைவேற்றுகின்ற அலுவலர், அந்த ஆஜர் கட்டளை

உத்தரவின் நகலோடன்றை ஆஜர் கட்டளை அல்லது பிடிகட்டளையுடனை சேர்த்தனுப்புதல்.

சார்வு செய்யப்படும் அல்லது அப் பிடிக்கட்டளையின்படி கைது செய்யப்படும் ஆளுக்கு அத்தகைய நகலைக் கொடுத்தல் வேண்டும்.

நேர்முகமாக ஆஜராவதை வேண்டாமென விடுவதற்கான அதிகாரம்.

115. அமைதி பேணுவதற்காக அல்லது நன்னடத்தைக்கான பத்திரமொன்றை எழுதித் தரவேண்டுமென்று ஏவற் கட்டளையிடப்படக்கூடாது என்பதற்குக் காரணங்காட்டுமாறு கோரப்பட்டுள்ளவர் நேர்முகமாக ஆஜராவதை நடுவர், போதுமான காரணம் இருப்பின் வேண்டாமென்று விட்டு விடலாம்; மற்றும் அவர் சார்பாக வாதாடுநர் ஒருவர் ஆஜராவதை அனுமதிக்கலாம்.

தகவல் உண்மையானதா என்பதை விசாரணை செய்தல்.

116. (1) பிரிவு 111 இன்படி பிறப்பிக்கப்பட்ட உத்தரவு, நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள ஒருவருக்கு பிரிவு 112 இன்படி படித்து அல்லது விளக்கிச் சொல்லப்பட்டிருக்கும்போது, அல்லது பிரிவு 113 இன்படி பிறப்பிக்கப்பட்ட ஆஜர் கட்டளைக்கிணங்கியோ, பிடிகட்டளையை நிறைவேற்றியதன் காரணமாகவோ எவரேனும் நடுவர் முன்பு வரும்போது அல்லது கொணரப்படும்போது, எந்தத் தகவலின்பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றதோ அது உண்மையா என்பதை விசாரிப்பதற்கும் மேற்கொண்டு அவசியமெனத் தோன்றலாகும் சாட்சியத்தை எடுப்பதற்குமாக அந்த நடுவர், மேல்நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(2) மேற்சொன்ன விசாரணையானது, நடைமுறையில் எவ்வளவு சாத்தியமோ அந்த அளவிற்கு ஆஜர் கட்டளை வழக்குகளில் விசாரணை நடத்துவதற்கும் சாட்சியத்தைப் பதிவு செய்வதற்குமாக இதன்பின் விதிக்கப்பட்ட நடைமுறையின்படி செய்யப்பட வேண்டும்.

(3) (1) ஆவது உட்பிரிவின்படியான விசாரணை தொடங்கியதற்குப் பின்பும், அது முடிவடைவதற்கு முன்பும் அமைதிக்குலைவையோ, பொது அமைதி பங்கத்தையோ, குற்றம் ஏதேனும் செய்யப்படுவதையோ தடை செய்வதற்காக, அல்லது பொதுப் பாதுகாப்புக்காக உடனடியான முன்னடி நடவடிக்கைகள் எடுக்கப்படுவது அவசியமென்பதாக அந்நடுவர் கருதுவாராயின் அவர் எழுத்துமூலம் குறிக்கும் காரணங்களுக்காக, 111 ஆவது பிரிவின்படி உத்தரவிடப்பட்டிருக்கிற ஆளை, அவ்விசாரணை முடிவடையும்வரை அமைதி பேணுவதற்காக அல்லது நன்னடத்தையைப் பேணிவருவதற்காகப் பத்திரமொன்றை ஜாமீன்தார்களுடனே இல்லாமலோ

எழுதித்தருமாறு உத்தரவிடலாம்; மற்றும் அந்தப் பத்திரம் எழுதித்தரப்படும் வரை அல்லது எழுதித்தரத் தவறினால், அவ்விசாரணை முடிவடையும் வரை அவரைக் காவலில் வைக்கலாம்.

ஆனால்—

(அ) 108 ஆவது பிரிவு, 109 ஆவது பிரிவு அல்லது 110 ஆவது பிரிவின்படி நடவடிக்கைகள் எடுக்கப்படாத எவரையும் நன்னடத்தை ஜாமீன் பத்திரமொன்றை எழுதித் தருமாறு கட்டளையிடுதல் கூடாது.

(ஆ) அந்தப் பத்திரத்தின் நிபந்தனைகள், பத்திரத்தின் தொகையைப் பற்றியவையாயினும் அல்லது ஜாமீன்தாரர்கள், அல்லது அவர்களின் எண்ணிக்கை அல்லது அவர்களது கடப்பாட்டின் பண வரம்பு ஆகியவற்றில் எதற்கேனும் வகை செய்வது பற்றியவையாயினும், 111 ஆவது பிரிவின்படியான உத்தரவில் குறிப்பிடப்படுபவற்றைவிட அதிக பளுவுடையவனவாக இருத்தல் கூடாது.

(4) இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, பொறுத்தமட்டில் ஒருவர் வாடிக்கையான குற்றவாளியாக அல்லது அவர் ஜாமீனின்றி சுதந்திரமாக வெளியே இருப்பது சமுதாயத்திற்கு அபாயகரமானதாகும் அளவுக்கு வெறித்தனம் கொண்டவராகவும் ஆபத்தானவராகவும் இருக்கின்றார் என்னும் விஷயத்தை, அவரைப்பற்றிய, பொது மதிப்பீடு என்ன என்பதற்கான சாட்சியத்தின் மூலமாகவோ வேறுவிதமாகவோ நிரூபிக்கலாம்.

(5) எந்த விஷயத்தைப்பற்றி விசாரணை நடக்கிறதோ அந்த விஷயத்தில் இருவரோ இருவருக்கு மேற்பட்டவர்களோ கூட்டாளிகளாக இருந்திருக்குமிடத்து, நடுவர் எது நீதியெனக் கருதுகிறாரோ அதன்படி ஒரே விசாரணையிலோ தனித்தனி விசாரணைகளிலோ அவர்கள்மீது நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

(6) இந்தப் பிரிவின்படியான விசாரணையை அது தொடங்கிய தேதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் முடித்துவிட வேண்டும்; மற்றும் அத்தகைய விசாரணை அவ்வாறு முடிக்கப்படவில்லையாயின், சிறப்பான காரணங்களை எழுத்து மூலம் குறிப்பிட்டு நடுவர் வேறுவிதமாக உத்தரவிட்டாலன்றி இந்த அத்தியாயத்தின்படியான நடவடிக்கைகள் மேற்சொன்ன கால அளவு கழிந்ததும் முற்றுப் பெற்றவையாகி விடும்.

ஆனால், அவ்விசாரணை நடந்து கொண்டிருக்கும்போது எவரேனும் காவலில் வைக்கப்பட்டிருப்பின், அவர்மீதுள்ள நடவடிக்கையானது, முன்னமேயே முடிவடைந்திருந்த காலமுழுவ, அவ்வாறு காவலில் வைக்கப்பட்டதிலிருந்து அதுமாதகாலம் அளவு கழிந்ததும் முடிவடைந்ததாகிவிடும்.

(1) நடவடிக்கைகள் தொடர்ந்து நடப்பதை அனுமதித்து, (6) ஆவது உட்பிரிவின்படி உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்படுமிடத்து, பாதிக்கப்பட்ட தரப்பினர் செஷன்ஸ் நீதிபதியிடம் செய்துகொண்ட விண்ணப்பத்தின் மீது அந்த உத்தரவுக்கு அடிப்படையாய் சிறப்புக் காரணம் ஏன்றுமில்லை என்றோ அது ஏறக்குமாறுனதென்றோ அந்த நீதிபதி திருப்திப்படுவாராயின், அவர் அந்த உத்தரவை காலி செய்து விடலாம்.

ஜாமீன் தருமாறு கட்டளை பிறப்பித்தல்.

117. எவரைப்பொறுத்து விசாரணை செய்யப்படுகிறதோ அவர் அந்தந்த நிலவரத்திற்கேற்றவாறு அமைதி பேணுவதற்காக, அல்லது நன்னடத்தையோடு இருந்து வருவதற்காக, பத்திரமொன்றை ஜாமீன்தார்களுடனே இல்லாமலோ எழுதிக்தரவேண்டியது அவசியமென்பதாக அவ்விசாரணையின் போரில் நிரூபிக்கப்படுமாயின், நடுவர் அவ்வாறே கட்டளையொன்றைப் பிறப்பிக்க வேண்டும்.

ஆனால்—

(அ) 111 ஆவது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட கட்டளையில் குறிப்பிடப்பட்ட ஜாமீனிலிருந்து, நன்னடையில் வேறுபட்டதான, அல்லது தொகையில் மிகுந்ததான அல்லது காலஅளவில் நீடித்ததான ஜாமீன் கொடுக்குமாறு எவருக்கும் கட்டளையிடுதல் கூடாது;

(ஆ) பத்திரம் ஒவ்வொன்றின் தொகையும், அந்தந்தச் சூழ்நிலைக்குத் தக்கவாறு நிர்ணயிக்கப்பட வேண்டும்; மற்றும் அது மிகைப்பட்டதாக இருத்தல் கூடாது;

(இ) எவரைப் பொறுத்து விசாரணை செய்யப்படுகிறதோ அவர் வயது வராதவராயிருக்கும்போது, அந்தப் பத்திரம் அவரது ஜாமீன்தார்களால் மட்டுமே எழுதி வைக்கப்பட வேண்டும்.

எவரைப்பொறுத்து விசாரணை செய்யப்பட்டு வருகிறதோ அவர் அந்தந்த நிலவரத்திற்கேற்றவாறு அமைதி பேணுவதற்காகவோ, நன்னடத்தையோடு இருந்து வருவதற்காகவோ பத்திரமொன்றை எழுதி வைக்க வேண்டியது அவசியமென்பதாக 116 ஆவது பிரிவின்படி நடக்கும் பரிசீலனையில் திருப்திக்கப்படவில்லையாயின், அவ்வாறே திருப்திக்கப்படவில்லை என்று பதிவேட்டில் நடுவர் குறிப்பெழுதி வைக்க வேண்டும்; மற்றும் அத்தகையவர் அவ்விசாரணைக்காக மட்டுமே காவலில் வைக்கப்பட்டிருப்பாராயின், அவரை விடுவிக்க வேண்டும்; அல்லது அவர் காவலில் இல்லையாயின் அவரை விட்டுவிடுதல் வேண்டும்.

எவரைப்பற்றி விசாரணை செய்யப்படுகிறதோ அவர் விடுவிக்கப்படுதல்.

119. (1) எவரைப்பொறுத்து 106 ஆவது பிரிவு அல்லது 117 ஆவது பிரிவின்படி ஜாமீன் கோரி உத்தரவொன்று பிறப்பிக்கப்படுகின்றதோ அவர், அவ்வுத்தரவு பிறப்பிக்கப்படும்போது, சிறைத் தண்டனையனுபவிக்கப்படுவாராயின் அல்லது சிறைத் தண்டனையை அனுபவித்து வருவாராயின், அந்த ஜாமீன் கோரப்படும் கால அளவானது அத் தண்டனை முடிவடைந்ததும் தொடங்க வேண்டும்.

ஜாமீன் கோரப்படும் காலம் எப்பொழுது தொடங்கும்.

(2) பிற சந்தர்ப்பங்களில் நடுவர் போதுமான காரணத்திற்காக அதற்குப் பிற்பட்ட தேதியொன்றைக் குறிப்பிட்டாலன்றி, அக் காலஅளவு அத்தகைய உத்தரவின் தேதியன்றே தொடங்க வேண்டும்.

120. அந்தந்த நிலவரத்திற்கேற்ப அமைதி பேணுவதற்கோ நன்னடத்தையோடிருக்கவோ அத்தகையவரால் எழுதிவைக்கப்படவேண்டிய பத்திரம் அவரைக் கட்டுப்படுத்தல் வேண்டும்; பின்னால் சொல்லப்பட்ட விஷயத்தில் சிறைத் தண்டனைக்குரிய குற்றம் எதையேனும் செய்வதோ, செய்வதற்கு முயற்சிப்பதோ, அதற்கு உடந்தையாக இருப்பதோ இவற்றில் எது எங்கே செய்யப்படுமாயினும் அப்பத்திரத்தை மீறுவதாகும்.

பத்திரத்தின் உள்ளடக்கம்.

121. (1) நடுவர் ஒருவர், ஜாமீன்தாராக ஏற்கப்பட்ட எவரையும் நிராகரிக்கலாம். அல்லது இந்த அத்தியாயத்தின்படி தம்மாலோ தமக்கு முன்னவராலோ முன்பு ஏற்றுக் கொள்ளப்பட்ட ஜாமீன்தார் எவரையும் பத்திரத்திற்கான நோக்கத்தைப் பொறுத்தமட்டில் அந்த ஜாமீன்தார் தகுதியற்ற ஓர் ஆள் என்னும் காரணத்தின்மீது நிராகரிக்கலாம்.

ஜாமீன்தார் ஏற்கப்படுதல் நிராகரிப்பதற்கான அதிகாரம்.

ஆனால், ஜாமீன்தார் எவரையேனும் அவ்வாறு ஏற்றுக் கொள்ள மறுப்பதற்கு முன்பு அல்லது நிராகரிப்பதற்கு முன்பு அந்த நடுவர் அந்த ஜாமீன்தாரின் தகுதி பற்றி, தாமே பிரமாண விசாரணை நடத்தவோ, தமக்குக் கீழ்நிலையிலுள்ள நடுவர் ஒருவர் விசாரணை நடத்தி அதன்மீது அறிக்கை அனுப்பும்படி செய்வித்தலோ வேண்டும்.

(2) அத்தகைய நடுவர் அவ்விசாரணையை நடத்து வதற்கு முன்பு ஜாமீன்தாருக்கும் அவரை அளித்தவருக்கும், நியாயமான முன்னறிவிப்புக் கொடுத்தல் வேண்டும். மற்றும் அவ்விசாரணையை நடத்தும்போது, தம் முன்னிலை யில் கொடுக்கப்பட்ட சாட்சியத்தின் சாராம்சத்தைக் குறித்து வைக்க வேண்டும்.

(3) நடுவர் ஒருவரின் முன்னிலையிலோ, (1) ஆவது உட்பிரிவின்படி சார்பதிகாரம் பெற்ற நடுவரின் முன்னிலை யிலோ அவ்வாறு கொடுக்கப்பட்ட சாட்சியத்தையும், அந்த நடுவரின் அறிக்கை (ஏதேனுமிருப்பின்) அதையும் பரிசீலனை செய்ததற்குப் பின்பு, அந்த ஜாமீன்தார் பத்திரத்திற்கான நோக்கங்களைப் பொறுத்தமட்டில் தகுதியற்ற ஒருவர் என்று நடுவருக்குத் திருப்தி ஏற்படுமாயின், அந்தந்த நிலவரத்திற்கேற்ப அந்த ஜாமீன்தாரை ஏற்றுக் கொள்ள மறுத்தும், அல்லது ஜாமீன்தாரை நிராகரித்தும் அவ்வாறு செய்வதற்கான காரணங்களை எழுதி வைத்தும் உத்தர வொன்றைப் பிறப்பிக்க வேண்டும்:

ஆனால், முன்னமே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற ஜாமீன்தார் எவரையும் நிராகரிக்கும் உத்தரவு ஒன்றைப் பிறப்பிப்பதற்கு முன்பு நடுவர் தாம் தக்கதெனக் கருது கிறபடி ஆஜர் கட்டளையோ பிடிகட்டளையோ பிறப்பித்து, ஜாமீன்தார் எவருக்காகத் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டாரோ அவரைத் தம் முன்பு வருமாறே கொண்டு வந்து நிறுத்தப்படுமாறே செய்தல் வேண்டும்.

ஜாமீன் தவறியதற்காகச் சிறை வைத்தல்.

122. (1) (அ) 106 ஆவது பிரிவு அல்லது 117 ஆவது பிரிவின்படி ஜாமீன் தருமாறு கட்டளையிடப்பட்ட எவரும், ஜாமீன் தருவதற்கான காலஅளவு தொடங்குகிற தேதி யன்றே அதற்கு முன்போ அத்தகைய ஜாமீனைத் தரவில்லை யானால், அவர் இதையடுத்துக் குறிப்பிடப்படும் சந்தர்ப்பத்தில் தவிர, சிறையில் இடப்படுதல் வேண்டும். அவர் ஏற்கனவே சிறையிலிருந்தால் அத்தகைய கால அளவு முடியும்வரை, அல்லது ஜாமீன் கோரும் கட்டளையைப் பிறப்பித்த நீதி

மன்றத்திற்கு அல்லது நடுவருக்கு அத்தகைய கால எல்லைக் குள்ளாக அவர் ஜாமீன் தருகின்றவரை சிறையில் இருத்தி வைக்கப்பட வேண்டும்.

(ஆ) எவரேனும், 117 ஆவது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட நடுவரின் உத்தரவைத் தொடர்ந்து அமைதி பேணுவதற்காக ஜாமீன்தார்களின்றிப் பத்திரமொன்றை எழுதி வைத்ததற்குப்பின்பு, அவர் அந்தப் பத்திரத்தை மீறி நடந்திருப்பதாக அத்தகைய நடுவருக்கோ பதவியில் அவருக்குப் பின்னவருக்கோ திருப்தி ஏற்படும் வகையில் நிரூபிக்கப்படுமாயின், அந்த நடுவரோ பதவியில் அவருக்குப் பின்னவரோ அத்தகைய நிரூபணத்திற்குரிய காரணங்களை எழுத்துமூலம் பதிவு செய்த பின்பு, அத்தகையவரைக் கைது செய்து அந்தப் பத்திரத்தின் கால அளவு முடியும் வரை சிறையில் இருத்தி வைக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடலாம்; மேற்சொன்னவர் சட்டத்தின்படி வேறு எந்தத் தண்டனைக்கு அல்லது தண்ட இழப்புக்கு உட்படலாகுமோ அதற்குப் பாதகமன்னியில் அத்தகைய உத்தரவு இயற்றுதல் வேண்டும்.

(2) அத்தகையவர் ஓராண்டிற்கு மேற்படும் கால அளவிற்கு ஜாமீன் தருமாறு நடுவரால் கட்டளையிடப்பட்டிருக்கும்போது, மேற்சொன்னவாறு அந்த ஜாமீனை அவர் தரவில்லையாயின் செஷன்ஸ் நீதிபதி கட்டளை பிறப்பிக்கும் வரை அவரைச் சிறையில் இருத்தி வைக்க உத்தரவிட்டுப் பிடிகட்டளை ஒன்றை அந்த நடுவர் பிறப்பிக்க வேண்டும். மேலும் வசதிக்கேற்ப கூடியவிரைவில் அந்த நடவடிக்கைக் குறிப்புகளை அத்தகைய நீதி மன்றத்தின் முன்பு சமர்ப்பிக்க வேண்டும்.

(3) அத்தகைய நீதிமன்றம் மேற்சொன்ன நடவடிக்கைக் குறிப்புகளைப் பரிசீலனை செய்து மேற்கொண்டு தான் அவசியமெனக் கருதும் தகவல் அல்லது சாட்சியத்தை அந்த நடுவரிடமிருந்து கேட்டுப் பெற்ற பின்பும், சம்பந்தப்பட்டவருக்கு அவருடைய கட்சி கேட்கப்படுவதற்கு நியாயமான வாய்ப்பினை அளித்ததற்குப் பின்பும், அவ்வழக்கில் தாம் தக்கதெனக் கருதுகிற உத்தரவைப் பிறப்பிக்கலாம்.

ஆனால், ஜாமீன் தரத் தவறியதற்காக எவரேனும் சிறையில் வைக்கப்பட்டால், அவ்வாறு வைக்கப்படும் காலம் அறுவானது மூன்றாண்டுகளுக்கு மேற்படக்கூடாது.

(4) ஒரே நடவடிக்கையில் இருவர் அல்லது இருவருக்கு மேற்பட்டவர்களிடமிருந்து ஜாமீன் கோரப்பட்டிருக்குமாயின், அவர்களில் எவரேனும் ஒருவரைப் பொறுத்த நடவடிக்கைகள் (2) ஆவது உட்பிரிவின்படி செஷன்ஸ் நீதிபதிக்குச் சாட்டியனுப்பப்படும்போது, அவர்களில் வேறு எவரேனும் ஜாமீன் தருமாறு கட்டளையிடப்பட்டிருந்தால் அவையும் அது உள்ளடக்க வேண்டும்; மற்றும் அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில், அத்தகையவரின்மீதும் (2) மற்றும் (3) ஆவது உட்பிரிவுகளின் விதிகள் இயங்க வேண்டும்; ஆனால் அவர் சிறையில் வைக்கப்பட்டால் அவ்வாறு வைக்கப்படும் கால அளவானது (ஏதேனுமிருப்பின்), எவ்வளவு காலத்திற்கு ஜாமீன் தருமாறு அவர் உத்தரவிடப்பட்டாரோ அதற்கு மேற்படக்கூடாது.

(5) செஷன்ஸ் நீதிபதி (2) ஆவது உட்பிரிவு அல்லது (4) ஆவது உட்பிரிவின்படி தம்முன் சமர்ப்பிக்கப்பட்ட நடவடிக்கைகள் எவற்றையும் தம் முடிவுக்குமுன் கூட்டு செஷன்ஸ் நீதிபதி அல்லது உதவி செஷன்ஸ் நீதிபதி ஒருவருக்கு மாற்றலாம்; அவ்வாறு மாற்றப்பட்ட பின்னர் அத்தகைய கூட்டு செஷன்ஸ் நீதிபதி அலலது உதவி செஷன்ஸ் நீதிபதி, அந்த நடவடிக்கைகளைப் பொறுத்த மட்டில் இந்தப் பிரிவின்படி செஷன்ஸ் நீதிபதிக்குள்ள அதிகாரங்களைச் செலுத்தி வரலாம்.

(6) சிறைச்சாலைப் பொறுப்பு அலுவலரிடம் ஜாமீன் கொடுக்கப்படுமாயின், அவர் அந்த உத்தரவைப் பிறப்பித்த நீதிமன்றத்திடம் அல்லது நடுவரிடம் அவ்விஷயத்தை உடனடியாகத் தெரியப்படுத்தி, அந்த நீதிமன்றம் அல்லது நடுவரின் கட்டளைக்காகக் காத்திருத்தல் வேண்டும்.

(7) அமைதி பேணுவதற்கு ஜாமீன் தரத் தவறியதற்காக விதிக்கப்படும் தண்டனையானது மெய்க்காவல் தண்டனையாக இருக்க வேண்டும்.

(8) நன்னடத்தை ஜாமீன் தரத் தவறியதற்கு விதிக்கப்படும் சிறைத் தண்டனையானது 108 ஆவது பிரிவின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றபோது, மெய்க்காவல் தண்டனையாகவும், 109 ஆவது பிரிவு அல்லது 110 ஆவது பிரிவின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றபோது, நீதிபதி அல்லது நடுவர் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உத்தரவிடுகிறவாறு கடுங்காவலாகவோ மெய்க்காவல் தண்டனையாகவோ இருத்தல் வேண்டும்.

ஜாமீன் தரத் தவறியதற்காகச் சிறை வைக்கப் பட்டவர்களை விடுவிப்பதற்குள்ள அதிகாரம்.

123. (1) இந்த அத்தியாயத்தின்படி ஜாமீன் தரத் தவறியதற்காகச் சிறை வைக்கப்பட்ட எவரும் சமுதாயத்திற்கோ வேறு எவருக்குமோ அபாயம் இல்லாமல் விடுவிக்கப்படலாமென்று தலைமை நீதித்துறை நடுவர் கருதும்போதெல்லாம், அவர் அந்தகையவரை விட்டுவிட உத்தரவிடலாம்.

(2) இந்த அத்தியாயத்தின்படி ஜாமீன் தரத் தவறியதற்காக எவரேனும் சிறை வைக்கப்பட்டிருக்கும்போதெல்லாம், உயர் நீதிமன்றமோ, செஷன்ஸ் நீதிமன்றமோ, வேறு நீதிமன்றத்தால் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்குமிடத்து, தலைமை நீதித்துறை நடுவரோ ஜாமீனில் கோரப்பட்டிருக்கிற தொகை, ஜாமீன்தார்களின் எண்ணிக்கை அல்லது கால அளவைக் குறைத்து உத்தரவொன்றைப் பிறப்பிக்கலாம்.

(3) (1) ஆவது உட்பிரிவின்படி பிறப்பிக்கப்படும் கட்டளையானது அத்தகையவரை நிபந்தனையில்லாமலோ, அவர் ஒத்துக்கொள்ளும் நிபந்தனைகளின்பேரிலோ அவரை விட்டுவிடுமாறு உத்தரவிடலாம்.

ஆனால், அத்தகையவர் எவ்வளவு கால அளவிற்கு உத்தரவாதம் தரவேண்டுமென்று உத்தரவிடப்பட்டாரோ அந்தக் கால அளவு முடிவடையும்போது, விதிக்கப்பட்ட எந்த நிபந்தனையும் செயற்படாது போகும்.

(4) எந்த நிபந்தனைகளின்பேரில் நிபந்தனை விடுதலை செய்யலாம் என்பதை மாநில அரசு நிர்ணயிக்கலாம்.

(5) நிபந்தனையின்பேரில் விடுதலை செய்யப்பட்ட எவரும் எந்த நிபந்தனையையேனும் நிறைவேற்றவில்லையென்று விடுதலை உத்தரவைப் பிறப்பித்த தலைமை நீதித்துறை நடுவர் அல்லது அவருக்குப் பின்னவர் கருதுவாராயின், அவர் அந்த விடுதலை உத்தரவை ரத்து செய்யலாம்.

(6) நிபந்தனை விடுதலை உத்தரவு (5) ஆவது உட்பிரிவின்படி ரத்து செய்யப்பட்டிருக்கும்போது, அத்தகையவரைப் பிடிகட்டளையில்லாமல் காவல் அலுவலர் எவரும் கைது செய்யலாம்; அதன்பின் அவரை, தலைமை நீதித்துறை நடுவர் முன் ஆஜர்படுத்த வேண்டும்.

(7) ஆதியில் அத்தகையவர் எந்தக் கால அளவிற்குச் சிறையில் இடப்பட்டாரோ அல்லது காவலில் இருக்கும்படி உத்தரவிடப்பட்டாரோ அந்தக் கால அளவில் இன்னும் எஞ்சி

யுள்ள பகுதிக்கு அவர், மூல உத்தரவின் நிபந்தனைகளுக் கிணங்க ஜாமீன் தந்தாலன்றி, தலைமை நீதித்துறை நடுவர் அவரை எஞ்சியுள்ள காலத்திற்கும் சிறைத்தண்டனை அனுபவிக்க மறுபடியும் சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கலாம்; (விடுதலை நிபந்தனைகளை மீறிய தேதிக்கும், அவ்வாறு நிபந்தனை விடுதலை அளிக்கப்படாதிருந்தால், எந்தத் தேதியில் விடுதலை செய்யப்பட உரிமையுடையவராயிருந்திருப்பாரோ அந்தத் தேதிக்கும் இடையே உள்ள கால அளவிற்குச் சமமானதொரு கால அளவாக மேற்படி எஞ்சியுள்ள பகுதியைக் கொள்ளவேண்டும்).

(8) (7) ஆவது உட்பிரிவின்படி மறுபடியும் சிறைச் சாலைக்கு அனுப்பப்பட்ட ஒருவர் மேற்சொன்னவாறு இன்னும் எஞ்சியுள்ள பகுதிக்கு மூல உத்தரவின் நிபந்தனைகளின்படி, அவ்வுத்தரவைப் பிறப்பித்த நீதிமன்றத்திற்கோ நடுவருக்கோ அல்லது அதன் அல்லது அவரது பின்னவருக்கோ ஜாமீன் தருவாராயின், அவர் எந்த நேரத்திலும் 122 ஆவது பிரிவின் விதிகளுக்குட்பட்டு, விடுவிக்கப்படவேண்டும்.

(9) இந்த அத்தியாயத்தின்படி அமைதி பேணுவதற்கோ நன்னடத்தைக்காகவோ எழுதித் தரப்பட்ட ஜாமீன் பத்திரம் எதனையும் உயர் நீதிமன்றம் அல்லது செஷன்ஸ் நீதிமன்றம், எழுத்துமூலம் பதிவு செய்யும் போதிய காரணங்களுக்காக, எந்த நேரத்திலும் கட்டளை மூலம் ரத்து செய்யலாம்; தலைமை நீதித்துறை நடுவரோ தம் கட்டளையின்படி அல்லது தம் மாவட்டத்திலுள்ள வேறு எந்த நீதிமன்றத்தின் கட்டளையின் படி எழுதித் தரப்பட்ட பத்திரத்தை அவ்வாறே ரத்து செய்யலாம்.

(10) வேறொருவரின் அமைதியான நடத்தைக்காக அல்லது நன்னடத்தைக்காக இந்த அத்தியாயத்தின்படி ஜாமீன் பத்திரம் ஒன்றை எழுதி வைக்குமாறு கட்டளையிடப் பட்ட ஜாமீன்தார் எவரும், அப்பத்திரத்தை ரத்து செய்யுமாறு அக்கட்டளையைப் பிறப்பித்த நீதிமன்றத்திற்கு எந்த நேரத்திலும் விண்ணப்பித்துக்கொள்ளலாம்; மற்றும் அத்தகைய விண்ணப்பத்தின்பேரில் அந்த நீதிமன்றம், அந்த ஜாமீன்தார் எவருக்காகத் தம்மைக் கட்டுப்படுத்திக்கொண்டாரோ அவரை, தன்முன் வருமாறு அல்லது கொண்டு வந்து நிறுத்தப்படுமாறு கோரி, தான் பொருத்தமெனக் கருதுகிறபடி ஆஜர் கட்டளையோ பிடிகட்டளையோ பிறப்பிக்க வேண்டும்.

பத்திரத்தின் எஞ்சியுள்ள காலப்பகுதிக்கு ஜாமீன்.

124. (1) எவர் ஆஜராவதற்காக 121 ஆவது பிரிவின் (3) ஆவது உட்பிரிவுக்கான விலக்கின்படி அல்லது 123 ஆவது பிரிவின் (10) ஆவது உட்பிரிவின்படி ஆஜர் கட்டளை அல்லது பிடிகட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கிறதோ, அவர் நடுவர் அல்லது நீதிமன்றத்தின் முன் வரும்போது அல்லது கொண்டுவந்து நிறுத்தப்படும்போது, அந்த நடுவர் அல்லது நீதிமன்றம் அத்தகையவர் எழுதித்தந்த பத்திரத்தை ரத்து செய்தல் வேண்டும்; மற்றும் அந்தப் பத்திரத்தில் குறிப்பிடப் பட்ட கால அளவில் எஞ்சியுள்ள பகுதிக்கு மூலப்பத்திரத்தின் தன்மையைக் கொண்ட புதிய ஜாமீன் ஒன்றைக் கொடுக்கு மாறு அவருக்குக் கட்டளையிடவேண்டும்.

(2) அத்தகைய கட்டளை ஒவ்வொன்றையும் 120 முதல் 123 வரையுள்ள (இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக) பிரிவுகளின் நோக்கங்களைப் பொறுத்த மட்டில், நிலவரத்திற் கேற்றவாறு, 106 ஆவது பிரிவின்படியோ 117 ஆவது பிரிவின் படியோ பிறப்பிக்கப்பட்ட ஒரு கட்டளையாகக் கொள்ளுதல் வேண்டும்.

அத்தியாயம் IX

மனைவியர், குழந்தைகள் மற்றும் பெற்றோர்களின் ஜீவனாம்சத்திற்கான கட்டளை.

மனைவியர், குழந்தைகள் மற்றும் பெற்றோர்களின் ஜீவனாம்சத்திற்கான கட்டளை

125. (1) போதுமான வசதியுள்ள எவரும் பின்வரும் எவரையேனும் பராமரிக்கப் புறக்கணிப்பாராலல் அல்லது மறுப்பாராலல், அவ்வாறு புறக்கணிப்பதாக அல்லது மறுப்பதாக திருப்திக்கப்படும் பட்சத்தில், அத்தகையவரின் மனைவி அல்லது குழந்தை, தந்தை அல்லது தாயின் பராமரிப்புக்காக, மாத விகிதம் மொத்தத்தில் ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படாமல் ஒரு முதல் வகுப்பு நடுவர் தக்கதெனக் கருதுகிற மாதப்படித்தொகையை அவர் கொடுக்குமாறும் அந்த நடுவர் அவ்வப்போது உத்தரவிடக்கூடியவருக்கு அதை அவர் செலுத்துமாறும் அந்த நடுவர் கட்டளையிடலாம்—

(அ) தன்னைத்தானே பராமரித்துக்கொள்ள இயலாத அவரது மனைவியை; அல்லது

(ஆ) தன்னைத்தானே பராமரித்துக்கொள்ள இயலாத, முறைப்படியோ அல்லது முறை தவறியோ பிறந்த அவரது வயது வராத குழந்தையை அதற்குத் திருமணமாகியிருந்தாலும் இல்லையென்றாலும்; அல்லது

(இ) வயது வந்துள்ள (திருமணமாகியுள்ள மகள் அல்லாத) முறைப்படி பிறந்த அவரது குழந்தையை அல்லது முறைதவறிப் பிறந்த அவரது குழந்தையை, உடலுக்கோ உள்ளத்துக்கோ ஏற்பட்ட ஊனம் அல்லது கேட்டின் காரணமாக அத்தகைய குழந்தை தன்னைத்தானே பராமரித்துக் கொள்ள இயலாதவிடத்து; அல்லது

(ஈ) தன்னைத்தானே பராமரித்துக்கொள்ள இயலாத அவரது தந்தையை அல்லது தாயை;

ஆனால், (ஆ) கூறில் குறிக்கப்பட்ட வயது வராத பெண் குழந்தைக்குத் திருமணமாகியிருந்து, அக் குழந்தையின் கணவன் போதுமான வசதி உடையவனாக இல்லை என்று நடுவருக்குத் திருப்திகரமாகத் தெரியுமாலல், அப் பெண் குழந்தை வயதெய்தும்வரை, அத்தகைய படித்தொகையைக் கொடுத்துவருமாறு அக் குழந்தையின் தந்தைக்கு அந்த நடுவர் கட்டளையிடலாம்.

விளக்கம்.—இந்த அத்தியாயத்தின் நோக்கங்களைப் பொறுத்தமட்டில்,—

(அ) "வயது வராதவர்" என்பது 1875ஆம் ஆண்டு இந்திய வயதுவந்தநிலைச் சட்டத்தின் வகைமுறைகளின்படி வயதுவந்தநிலையை எய்திடாதவராகக் கொள்ளப்படுவர் என்று பொருள்படும். 9/1875.

(ஆ) "மனைவி" என்பது தன் கணவனால் விவாகத்து செய்யப்பட்டிருப்பவரும், அல்லது அவரிடமிருந்து விவாகத்து பெற்றுக்கொண்டவரும் மறுமணம் செய்துகொண்டிராதவருமான ஒரு பெண்ணை உள்ளடக்கும்.

(2) அத்தகைய படித்தொகையானது கட்டளையின் தேதியிலிருந்தோ, அல்லது கட்டளையிடப்படுமானால், ஜீவனம் சம்பந்தமான விசாரணையின் தேதியிலிருந்தோ செலுத்தப்படவேண்டும்.

(3) அவ்வாறு கட்டளையிடப்பட்ட எவரேனும் போதுமான காரணமில்லாமல் அக் கட்டளைக்கிணங்கி நடக்கத் தவறுவாரானால், அக் கட்டளையை மீறிய ஒவ்வொரு தடவைக்கும் கொடுபட வேண்டிய தொகையை அபராதங்கள் விதிப்பதற்கு வகை செய்யப்பட்டுள்ள முறையில் வசூலிப்பதற்காகப் பிடி கட்டளையொன்றை அத்தகைய நடுவர் பிறப்பிக்கலாம். மற்றும் அப் பிடிகட்டளையை நிறைவேற்றியதற்குப்பின் செலுத்தப்படாதுள்ள ஒவ்வொரு மாதத்திற்குமுரிய படித் தொகை முழுவதற்குமாக அல்லது பகுதிக்காக, ஒரு மாத காலம் வரை அல்லது அதற்கு முன்னரே தொகை செலுத்தப் படுமானால் அதுவரை அத்தகையவருக்குச் சிறைத் தண்டனை விதிக்கலாம்.

ஆனால், இத்தப் பிரிவின்படி கொடுபடவேண்டிய தொகையை, அது கொடுபடவேண்டிய தேதியிலிருந்து ஓராண்டுக் கால அளவிற்குள் வசூலிக்குமாறு நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்டிருந்தாலன்றி, அத் தொகையை வசூலிப்பதற்காகப் பிடிகட்டளை எதுவும் பிறப் பிக்கப்படுதல் ஆகாது.

மேலும், அத்தகையவர் தம்முடன் வாழ்க்கை நடத்த வேண்டும் என்கின்ற நிபந்தனையின்பேரில் தம் மனைவியைப் பராமரிப்பதாக முன்வந்தும், அம் மனைவி அவருடன் வாழ மறுப்பாரானால், அத்தகைய நடுவர் அம் மனைவியால் சொல்லப் பட்ட மறுப்புக்கான காரணங்கள் எவற்றையும் பரிசீலனை

செய்து, அவ்வாறு மறுப்பதற்கு நியாயமான காரணம் இருக்கிறது என்று அவருக்குத் திருப்திகரமாகத் தெரியுமானால், கணவன் தொடர்ந்திருந்தபோதிலுங்கூட, இந்தப் பிரிவின்படி கட்டளையொன்றைப் பிறப்பிக்கலாம்.

விளக்கம்.—கணவர் மற்றொரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டிருந்தால் அல்லது வைப்பாட்டி ஒருத்தியை வைத்திருப்பாரானால், அவருடன் வாழ்வதற்கு அவரது மனைவி மறுப்பதற்கான நியாயமான காரணமாக அதைக் கருதவேண்டும்.

(4) மனைவி எவரேனும் கற்பு பிறழ்ந்த நிலையில் வாழ்ந்து வருவாரானால் அல்லது, போதுமான காரணமின்றி, தமது கணவருடன் வாழ மறுப்பாரானால், அல்லது பரஸ்பர இசைவின்மூலம் தனித்தனியாக அவர்கள் வாழ்ந்து வருவார்களானால் அம் மனைவிக்கு இந்தப் பிரிவின்படி தம் கணவரிடமிருந்து படிதொகையைப் பெறுவதற்கு உரிமை கிடையாது.

(5) இந்தப் பிரிவின்படி தமக்கு அனுகூலமான கட்டளையொன்று பிறப்பிக்கப் பெற்றுள்ள மனைவி எவரும் கற்புப் பிறழ்ந்த நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறார், அல்லது போதுமான காரணமின்றி, தம் கணவருடன் வாழ மறுக்கிறார், அல்லது பரஸ்பர இசைவின்மூலம் அவர்கள் தனித்தனியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று நிரூபிக்கப்பட்டதன்பேரில், நடுவர் அக் கட்டளையை ரத்து செய்தல் வேண்டும்.

நடைமுறை.

126. (1) 125 ஆவது பிரிவின்படியான நடவடிக்கைகள் எவ்வீதும்,—

(அ) அவர் இருக்கின்ற, அல்லது

(ஆ) அவர் அல்லது அவரது மனைவி குடியிருக்கின்ற, அல்லது

(இ) அவர் தம் மனைவியுடன் அல்லது நிலவரத்திற் கேற்ப, முறைதவறிப் பிறந்த குழந்தையின் தாயுடன் கடைசியாகக் குடியிருந்த மாவட்டம் எதிலும் எடுக்கப்படலாம்.

(2) ஜீவனாம்சம் செலுத்துமாறு எவருக்குக் கட்டளை யொன்று பிறப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதோ அவர் முன்னிலையிலோ, அவருடைய நேர்முக வருகை தவிர்க்கப்பட்டிருக்கும்போது அவரது வாதுரைஞர் முன்னிலையிலோ மேற்

சொன்ன நடவடிக்கைகளில் சாட்சியம் முழுவதும் எடுக்கப் படவேண்டும்; மற்றும் அது ஆஜர் கட்டளை வழக்குகளுக் கென விதிக்கப்பட்ட முறையில் பதிவு செய்யப்பட வேண்டும்.

ஆனால், ஜீவனாம்சம் செலுத்துமாறு எவருக்குக் கட்டளை யொன்று பிறப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதோ அவர் சார்வாவதை வேண்டுமென்றே தவிர்க்கிறார் என்றோ, நீதிமன் றந்திற்கு வருவதை வேண்டுமென்றே புறக்கணிக்கிறார் என்றோ, நடுவருக்குத் திருப்திகரமாகத் தெரியுமானால், அவர் அவ்வழக்கை எதிர்தரப்பில்லாமலேயே விசாரிக்க முற்பட்டு, நிர்மானிக்கவுஞ் செய்யலாம்; மற்றும், அது பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் செய்துகொள்ளப் படும் ஒரு விண்ணப்பத்தின்பேரில் தகுந்த காரணம் காட்டப் படுமானால், எதிர்தரப்புக்குச் செலவுத் தொகையைச் செலுத்து வது பற்றிய நிபந்தனைகள் உள்ளடங்கலாக நியாயமான வையென்றும் ஏற்றவையென்றும் நடுவர் கருதும் நிபந்தனை களுக்குட்பட்டு மேற்சொன்னவாறு பிறப்பிக்கப்பட்ட கட்டளை எதுவும் நீக்கப்படலாம்.

(3) 125 ஆவது பிரிவின்படியான விண்ணப்பங்கள்மீது நீதிமன்றம் நடவடிக்கை எடுக்கும்போது, செலவுத் தொகை சம்பந்தமாக நியாயமான எந்தக் கட்டளையையும் பிறப்பிக்க அது அதிகாரம் கொண்டிருக்கும்.

படித்தொகை யை மாற்றி யமைத்தல்.

127. (1) 125 ஆவது பிரிவின்படி மாதப் படித்தொகை பெற்றுவருகின்ற ஒருவரின், அல்லது அதே பிரிவின்படி நிலவாத்திற்கேற்ப, அவரது மனைவி, குழந்தை, தந்தை அல்லது தாய்க்கு மாதப் படித்தொகை செலுத்துமாறு கட்டளையிடப்பட்ட ஒருவரின் சூழ்நிலைகளில் மாறுதல் எதுவும் ஏற்பட்டிருப்பதாக நிரூபிக்கப்பட்டதன்பேரில், நடுவர் அந்தப் படித்தொகையைத் தாம் தக்கதெனக் கருது கிறபடி மாற்றியமைக்கலாம்:

ஆனால், அவர் அந்தப் படித்தொகையை அதிகப்படுத்து வாராயின், அது மொத்த மாத விகிதமான ஐந்நூறு ரூபாய்க்கு மேற்படுதல் ஆகாது.

(2) அதிகாரமுடைய ஓர் உரிமை வழக்கு நீதிமன்றத்தின் முடிவு எதனின் விளைவாகவும், 125 ஆவது பிரிவின்படி பிறப் பிக்கப்பட்ட கட்டளை ஏதேனும் ரத்து செய்யப்படவேண்டும் அல்லது மாறுதல் செய்யப்பட வேண்டும் என்று நடுவருக்குத்

தோன்றுமிடத்து, அதன்படியே அவர் அக் கட்டளையை, நிலவ ரத்திற்கேற்ப, ரத்து செய்தலோ மாறுதல் செய்தலோ வேண்டும்.

(3) தம் கணவனால் விவாகரத்து செய்யப்பட்டுள்ள அல்லது அவரிடமிருந்து விவாகரத்து பெற்றுள்ள ஒரு பெண் ணுக்கு அனுகூலமாக, 125 ஆவது பிரிவின்படி கட்டளை ஏதேனும் பிறப்பிக்கப்பட்டிருக்குமிடத்து,

(அ) அத்தகைய விவாகரத்து தேதிக்குப் பின்பு, அப் பெண் மறுமணம் செய்துகொண்டிருப்பதாக நடுவருக்குத் திருப்திகரமாகத் தெரியுமானால், அவர் அந்தப் பெண்ணின் மறுமணத்தேதியிலிருந்தே அக் கட்டளையை ரத்து செய்தல் வேண்டும்;

(ஆ) அப் பெண் தம் கணவரால் விவாகரத்து செய்யப்பட்டிருக்கின்றார் என்பதாகவும் தாய்பினர்கள்மீது இயங்கும் வழக்காற்றுச் சட்டம் அல்லது ஆளுரிமைச் சட்டம் எதன்படியும் அத்தகைய விவாகரத்தின்பேரில் செலுத்தவேண்டிய தொகை முழுவதையும் மேற்சொன்ன கட்டளைத் தேதிக்கு முன்பாயினும் பின்பாயினும் அப் பெண் பெற்றுக்கொண்டிருக்கிறார் என்பதாகவும் நடுவருக்குத் திருப்திகரமாகத் தெரியுமானால், அவர் அத்தகைய கட்டளையை—

(i) அந்தத் தொகை அக் கட்டளைக்கு முன்பே செலுத்தப்பட்டிருந்தால், அத்தகைய கட்டளை பிறப்பிக்கப் பட்ட தேதியிலிருந்தும்,

(ii) வேறு சந்தர்ப்பம் எதிலும், கணவனால் எந்தக் கால அளவிற்கு அப் பெண்ணுக்கு உள்ளவாறே ஜீவனம்சம் செலுத்தப்பட்டிருக்கிறதோ அந்தக் கால அளவு முடிவடையும் தேதியிலிருந்தும் ரத்து செய்தல் வேண்டும்;

(இ) அப் பெண் தம் கணவரிடமிருந்து விவாகரத்து பெற்றிருக்கின்றார் என்பதாகவும், தம் விவாகரத்துக்குப் பின்பு, ஜீவனம்சத்திற்குத் தமக்குள்ள உரிமைகளைத் தன்னிச்சையாகவே விட்டுவிட்டார் என்பதாகவும் நடுவருக்குத் திருப்திகரமாகத் தெரியுமானால், அவர் அந்தத் தேதியிலிருந்தே அக் கட்டளையை ரத்து செய்தல் வேண்டும்.

(4) 125 ஆவது பிரிவின்படி மாதப் படித்தொகை எவருக்குச் செலுத்த வேண்டுமென்று கட்டளையிடப் பட்டுள்ளதோ அவருக்கு, உரிமை வழக்கு நீதிமன்றம் ஜீவனாம்சத் தொகையை அல்லது நிலுவைத்தை வசூலிப்பதற்காகத் தீர்ப்பாணை எதனையும் பிறப்பிக்கின்ற காலத்தில் உரிமை வழக்கு நீதிமன்றம் மேற்சொன்ன கட்டளையின்படி மாதப்படித் தொகையாக அத்தகையவருக்குச் செலுத்தப் பட்டுள்ள அல்லது அத்தகையவரால் வசூலிக்கப்பட்டுள்ள தொகையைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஜீவனாம்சக் கட்டளை நிறைவேற்று தல்.

128. ஜீவனாம்சக் கட்டளையின் நகலொன்று, அது எவருக்கு அனுகூலமாகப் பிறப்பிக்கப்பட்டுள்ளதோ அவருக்கு, அல்லது அவரது காப்பாளர் எவரேனுமிருப்பின் அவருக்கு, அல்லது படித்தொகை செலுத்தப்பட வேண்டிய வருக்கு கட்டணம் இல்லாமல் கொடுக்கப்படவேண்டும். மற்றும் எவருக்குப் பாதகமாக அக் கட்டளை பிறப்பிக்கப்படு கிறதோ அவர் இருக்கக்கூடிய எந்த இடத்திலும் உள்ள நடுவருக்கு காப்பினர்களின் அடையாளம் பற்றியும், கொடுபடவேண்டிய படித்தொகை செலுத்தப்படாமை பற்றியும் திருப்தி ஏற்படுமானால், அவர் அத்தகைய கட்டளையை நிறைவேற்றலாம்.

அத்தியாயம் X

பொது ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டுதல்.

அ. சட்ட விரோதமான கும்பல்கள்.

குடிமுறைப் படையைப் பயன்படுத்திக் கும்பலைக் கலைத்தல்.

129. (1) நிருவாகத்துறை நடுவர், அல்லது காவல் நிலையப் பொறுப்பு அலுவலர், அல்லது அத்தகைய பொறுப்பு அலுவலர் இல்லாதபோது, துணை ஆய்வாளரின் நிலைக்குக் கீழ்ப்படாத காவல் அலுவலர் எவரும், சட்டத்திற்கு விரோதமான கும்பல் எதையும், அல்லது பொது அமைதிக்கு பங்கத்தை விளைவிக்கக்கூடியதான ஐந்து அல்லது ஐந்துக்கு மேற்பட்டவர்களின் கும்பல் எதையும் கலைந்து செல்லுமாறு ஆணையிடலாம்; அதன்பேரில் அவ்வாறே கலைந்து செல்லவேண்டியது அத்தகைய கும்பலைச் சேர்ந்த உறுப்பினர்களின் கடமையாகும்.

(2) அவ்வாறு ஆணையிடப்பட்டும், அத்தகைய கும்பல் எதுவும் கலைந்து செல்லவில்லையானால், அல்லது, அவ்வாறு ஆணையிடப்படாமலிருக்கும்போது, கலைந்து செல்லப் போவதில்லை என்னும் உறுதிப்பாட்டைக் காட்டுகிற முறையில் அக் கும்பல் நடந்துகொள்ளுமானால், (1) ஆவது உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட நிருவாகத்துறை நடுவரோ, காவல் அலுவலரோ, வன்முறை மூலமாக அத்தகைய கும்பலைக் கலைக்க முற்படலாம்; மற்றும் அத்தகைய கும்பலைக் கலைப்பதற்கும், அவ்வாறு கும்பலைக் கலைப்பதற்காகவோ, அதைச் சேர்ந்தவர்களைச் சட்டப்படி தண்டிப்பதற்காகவோ, அவசியமானால் அவர்களைக் கைதுசெய்து சிறைப்படுத்துவதற்குமாக ஆயுதப்படைகளின் அலுவலராகவோ உறுப்பினராகவோ, அவ்வாறு செயற்படுகின்றவராகவோ இல்லாத ஆடவர் ஒருவரின் உதவியை அவர் கோரலாம்.

கும்பலைக் கலைக்க ஆயுதப் படைகளைப் பயன்படுத்துதல்.

130. (1) அத்தகைய கும்பல் எதையும் வேறுவிதமாகக் கலைக்க முடியாமலிருந்து, பொதுப் பாதுகாப்புக்காக அது கலைக்கப்பட்டாகவேண்டும் என்பது அவசியமாகவும் இருந்தால், உடனிருக்கிற மிக உயர்ந்த படியிலுள்ள நிருவாகத்துறை நடுவர் அக் கும்பலை ஆயுதப் படைகளைக் கொண்டு கலைக்கச் செய்விக்கலாம்.

(2) ஆயுதப் படைகளைச் சேர்ந்தவர்களின் பிரிவு ஒன்றின் தலைமையைக் கொண்டுள்ள அலுவலர் எவரையும், அவரது தலைமையின் கீழுள்ள ஆயுதப்படைகளின் உதவியுடன் அந்தக் கும்பலைக் கலைக்குமாறு அத்தகைய நடுவர் கோரலாம்; மற்றும் அத்தகைய நடுவர் உத்தரவிடுகிறவாறு, அக் கும்பலைச் சேர்ந்தவர்களைக் கைதுசெய்து அடைத்து வைக்குமாறு அல்லது அந்தக் கும்பலைக் கலைப்பதற்காகவோ சட்டத்தின்படி அவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கவோ அவசியமானால் அவர்களைக் கைது செய்து அடைத்து வைக்குமாறு அந்த நடுவர் கோலலாம்.

(3) அத்தகைய ஆயுதப்படைகளின் அலுவலர் ஒவ்வொருவரும் தாம் தக்கதெனக் கருதும் முறையில் அத்தகைய கோரிக்கைக்குக் கீழ்ப்படிதல் வேண்டும்; ஆனால் அவ்வாறு செய்யும்போது அந்தக் கும்பலைக் கலைப்பதற்கும் அத்தகையவர்களைக் கைது செய்து காவலில் வைப்பதற்கும் ஒத்தமுறையில், எவ்வளவு குறைந்த அளவுக்கு வன் முறையைப் பயன்படுத்த வேண்டுமோ, அவ்வளவுக்கும் சொத்துக்கும் எவ்வளவு குறைந்த கேடு விளைவிக்க வேண்டுமோ, அந்த அளவுக்குப் பயன்படுத்தவும் விளைவிக்கவும் வேண்டும்.

கும்பலைக் கலைப்பதற்குச் சில ஆயுதப் படை அலுவலர்களுக்குள்ள அதிகாரம்.

131. பொதுப் பாதுகாப்புக்கு அத்தகைய கும்பலால் ஆபத்து ஏற்படுகிறது என்று வெளிப்படையாகத் தெரியும் போதும், நிருவாகத்துறை நடுவர் எவருடனும் தொடர்பு கொள்ள முடியாதபோதும், ஆயுதப் படைகளின் ஆணை பெற்ற அலுவலர் அல்லது அரசிதழ்ப் பதிவுபெற்ற அலுவலர், தம் தலைமையின் கீழுள்ள ஆயுதப் படைகளின் உதவியுடன் அக் கும்பலைக் கலைக்கலாம்; மற்றும் அத்தகைய கும்பலைக் கலைப்பதற்காகவோ சட்டத்தின்படி அவர்கள் தண்டிக்கப்படுவதற்காகவோ அக் கும்பலைச் சேர்ந்தவர்கள் எவரையும் கைதுசெய்து அடைத்துவைக்கலாம்; ஆனால் அவர், இந்தப் பிரிவின்படி செயற்படுகின்றபோது, நிருவாகத் துறை நடுவர் ஒருவருடன் தொடர்பு கொள்வது தமக்குச் சாத்தியமாகும்போது, அவர் அவ்வாறே செய்தல் வேண்டும்; அதன்மேற்கொண்டு தாம் அவ்வாறு அத்தகைய செயலைத் தொடர்தல் வேண்டுமா வேண்டாமா என்பது பற்றி நடுவர் தரும் உத்தரவுக்குக் கீழ்ப்படிதல் வேண்டும்.

முன்சென்ற பிரிவுகளின் படிச் செய்யப்பட்ட செய்கைகளுக்காகக் குற்ற வழக்குத் தொடரப்படாமலிருப்பதற்குப் பாதுகாப்பு.

132. (1) 129 ஆவது பிரிவு, அல்லது 130 ஆவது பிரிவு அல்லது 131 ஆவது பிரிவின்படி செய்யப்பட்டதாகத் தென்படுகிற எந்தச் செய்கைக்காகவும் எவர்மீதும் குற்ற வழக்கு எதையும்—

(அ) அத்தகையவர் ஆயுதப்படைகளின் அலுவலராக அல்லது உறுப்பினராக இருக்குமிடத்து, மத்திய அரசின் ஒப்பளிப்போடல்லாமல்;

(ஆ) வேறு எந்தச் சந்தர்ப்பத்திலும், மாநில அரசின் ஒப்பளிப்போடல்லாமல்—

குற்றவழக்கு நீதிமன்றம் எதிலும் தொடருதல் ஆகாது.

(2) (அ) மேற்சொன்ன பிரிவுகளில் எதன்படியேனும் நல்லெண்ணத்துடன் செயற்படுகின்ற நிருவாகத்துறை நடுவர் அல்லது காவல் அலுவலர் எவரும்;

(ஆ) 129 ஆவது பிரிவு அல்லது 130 ஆவது பிரிவின் படியான கோரிக்கைக்கு இணங்கி நல்லெண்ணத்துடன் செய்கை எதனையும் செய்கின்றவர் எவரும்;

(இ) 131 ஆவது பிரிவின்படி நல்லெண்ணத்துடன் செயற்படுகின்ற ஆயுதப் படைகளின் அலுவலர் எவரும்;

(ஈ) தாம் கீழ்ப்படியக் கட்டுப்பட்டுள்ள கட்டளை எதற்கும் கீழ்ப்படிந்து செய்கை எதனையும் செய்கின்ற, ஆயுதப்படைகளின் உறுப்பினர் எவரும்—

அவ்வாறு செய்வதன்மூலம் குற்றமொன்றைச் செய்திருப்பதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

(3) இந்தப் பிரிவிலும் இந்த அத்தியாயத்தின் முன்சென்ற பிரிவுகளிலும்,—

(அ) "ஆயுதப் படைகள்" என்னும் சொற்றொடர், நிலப்படைகளாக இயங்குகின்ற தரை, கடல் மற்றும் வான் படைகள் என்று பொருள்படும்; மற்றும், அவ்வாறு இயங்குகின்ற ஒன்றியத்துப் பிற ஆயுதப் படைகளையும் உள்ளடக்கும்;

(ஆ) "அலுவலர்": ஆயுதப்படைகளின் தொடர்பாக, "அலுவலர்" என்பது, ஆணை பெற்றுள்ள, பதிவு பெற்றுள்ள, அல்லது ஆயுதப் படைகளின் ஓர் அலுவலராக சம்பளத்திலுள்ளவர் என்று பொருள்படும்; மற்றும் ஆணைபெற்ற

இளநிலை அதிகாரி, கட்டளை அதிகாரி, கிழ்நிலை அதிகாரி, ஆணைபெறுத அலுவலர் மற்றும் பதிவுபெறுத அலுவலர் ஆகியோரை உள்ளடக்கும்;

(இ) "உறுப்பினர்": ஆயுதப்படைகளின் தொடர்பாக "உறுப்பினர்" என்பது, ஆயுதப்படைகளிலுள்ள அலுவலரல்லாத வேறொருவர் என்று பொருள்படும்.

ஆ. பொதுத் தொல்லைகள்.

தொல்லையை நீக்குவதற்கான நிபந்தனைக் கட்டளை.

133. (1) மாவட்ட நடுவரோ உட்கோட்ட நடுவரோ மாநில அரசால் இதற்கெனச் சிறப்பு வகையில் அதிகாரமளிக்கப்பட்ட நிருவாகத்துறை நடுவர் வேறெவருமோ, காவல் அலுவலர் ஒருவரின் அறிக்கை அல்லது வேறு தகவல் கிடைக்கப் பெற்றும், நாம் தக்கதெனை நினைக்கும் சாட்சியம் ஏதேனும் இருந்தால் அதை எடுத்ததன்பேரிலும்.

(அ) பொது மக்களால் சட்டபூர்வமாகப் பயன்படுத்தப்படும் அல்லது பயன்படுத்தப்படக்கூடிய எந்தப் பொது இடத்திலிருந்தேனும் அல்லது வழி, ஆறு அல்லது கால்வாய் எதிலிருந்தேனும் சட்ட விரோதமான இடையூறு அல்லது தொல்லை எதுவும் நீக்கப்படவேண்டும் என்பதாக; அல்லது

(ஆ) எதேனுமொரு வணிகம் அல்லது தொழிலை நடத்துவதோ, எதாவது சாமான்களை அல்லது வாணிபச் சரக்குகளை வைத்திருப்பதோ சமூகத்தின் ஆரோக்கியத்திற்கு அல்லது உடல்நலத்திற்குக் கேடு விளைவிப்பதாக இருக்கிறது என்பதாகவும், அதன் விளைவாக அத்தகைய வணிகம் அல்லது தொழில் தடை செய்யப்பட வேண்டும் அல்லது முறைப்படுத்தப்பட வேண்டும் அல்லது அத்தகைய சாமான்கள் அல்லது வாணிபச் சரக்குகள் அப்புறப்படுத்தப் படவேண்டும் அல்லது அவற்றை வைத்திருக்கும் முறையை ஒழுங்குபடுத்த வேண்டும் என்பதாக; அல்லது

(இ) எதாவது கட்டிடத்தைக் கட்டும்போது அல்லது பொருள் எதையேனும் அப்புறப்படுத்தும்போது பெருந்தீ அல்லது வெடித்தல் ஏற்படக்கூடுமானால், அவ்வாறு கட்டுவதை அல்லது அப்புறப்படுத்துவதைத் தடுக்க வேண்டும் அல்லது நிறுத்த வேண்டும் என்பதாக; அல்லது

(ஈ) கட்டிடம், கூடாரம், கட்டுமானம் அல்லது மரம் எதுவும் அது விழக்கூடியதாகவும் அதன்மூலமாக அண்டை யிடத்தில் வாழ்கின்ற அல்லது தொழில் நடத்துகின்றவர் களுக்கு அல்லது அவ்வழியே செல்கின்றவர்களுக்குக் கேடு விளைவிக்கக்கூடிய நிலையில் உள்ளது என்பதாகவும், அதன் காரணமாக அத்தகைய கட்டிடம், கூடாரம் அல்லது கட்டு மானத்தை அப்புறப்படுத்தலோ, பழுதுபார்த்தலோ அதற்கு மூட்டுக்கொடுத்தலோ, அல்லது அத்தகைய மரத்தை அப் புறப்படுத்தலோ அதற்கு மூட்டுக்கொடுத்தலோ அவசியமாக வுள்ளது என்பதாக ; அல்லது

(உ) பொதுமக்களுக்கு எழுகின்ற ஆபத்தைத் தடுக்கும் வகையில் அத்தகைய வழி அல்லது பொது இடத்திற்கு அருகிலுள்ள குளம், கிணறு அல்லது வெட்டுப் பள்ளத்திற்கு வேலியிடவேண்டும் என்பதாக ; அல்லது

(ஊ) அபாயகரமான விலங்கு எதையும் அழிக்க வேண்டும், அல்லது அடைத்து வைக்கவேண்டும் அல்லது வேறுவிதமாக அப்புறப்படுத்திவிடவேண்டும் என்பதாக— எண்ணும்போதெல்லாம், அத்தகைய இடையூறு அல்லது தொல்லையை விளைவிக்கின்ற, அல்லது அத்தகைய வணிகம் அல்லது தொழிலை நடத்திவருகின்ற, அல்லது அத்தகைய சாமான்கள் அல்லது வாணிபச் சரக்குகளை வைத்திருக் கின்ற, அல்லது அத்தகைய கட்டிடம், கூடாரம், கட்டுமானம், பொருள், குளம், கிணறு அல்லது வெட்டுப்பள்ளத்தைச் சொந்தமாகவோ அனுபோகத்திலோ ஆளுகையிலோ வைத்துள்ள, அல்லது அத்தகைய விலங்கு அல்லது மரத்தைச் சொந்தமாகவோ தம்வசத்திலோ வைத்துள்ள வரை, கட்டளையில் நிர்ணயிக்கப்படும் காலத்திற்குள்—

(i) அத்தகைய இடையூறு அல்லது தொல்லையை நீக்குமாறு ; அல்லது

(ii) அத்தகைய வணிகம் அல்லது தொழிலை நடத்தி வருவதை நிறுத்திக்கொள்ளுமாறு, அல்லது அதை அப்புறப் படுத்துமாறு அல்லது முறைப்படுத்துமாறு, அல்லது உத்தர விடுகிறபடி அத்தகைய பொருள்கள் அல்லது வாணிபச் சரக்குகளை அப்புறப்படுத்துமாறு, அல்லது அவற்றை வைத் திருக்கும் முறையை ஒழுங்குபடுத்துமாறு ; அல்லது

(iii) அத்தகைய கட்டிடத்தைக் கட்டுவதைத் தடுக்குமாறு அல்லது நிறுத்துமாறு, அல்லது அத்தகைய பொருளை அப்புறப்படுத்தும் முறையை மாற்றிக்கொள்ளுமாறு; அல்லது

(iv) அத்தகைய கட்டிடம், கூடாரம் அல்லது கட்டுமானத்தை அப்புறப்படுத்துமாறு, பழுதுபார்க்குமாறு அல்லது அதற்கு முட்டுக்கொடுக்குமாறு அல்லது அத்தகைய மாங்களை அகற்றுமாறு அல்லது அவற்றிற்கு முட்டுக் கொடுக்குமாறு; அல்லது

(v) அத்தகைய குளம், கிணறு அல்லது வெட்டுப் பள்ளத்திற்கு வேலியிடுமாறு; அல்லது

(vi) அத்தகைய அபாயகரமான விலங்கைக் கட்டளையில் விதிக்கப்பட்ட முறையில் அழிக்குமாறு, அடைத்துவைக்குமாறு அல்லது அப்புறப்படுத்தினிடுமாறு கோரியும்;

அல்லது அவ்வாறு செய்ய அவர் ஆட்சேபிப்பாராயின் கட்டளையில் நிர்ணயிக்கப்படவுள்ள நேரத்திலும் இடத்திலும் தம் முன்போ தமக்குக் கீழமைந்துள்ள நிருவாகத்துறை நடுவர் வேறெவரின் முன்போ ஆஜராகி கட்டளையை ஏன் உறுதிப்படுத்தக்கூடாது என்பதற்கு இதற்குப்பின் வகை செய்யப்பட்ட முறையில் காரணம் சொல்லுமாறும் கோருகின்ற நிபந்தனைக் கட்டளையொன்றை அந்தகைய நடுவர் பிறப்பிக்கலாம்.

(2) இந்தப் பிரிவின்படி நடுவர் ஒருவரால் உரியவாறு பிறப்பிக்கப்பட்ட கட்டளை எதையும் உரிமை வழக்கு நீதிமன்றம் எதிலும் மறுத்துரைத்தல் ஆகாது.

விளக்கம்.—"பொது இடம்" என்பது, அரசுக்குச் சொந்தமான சொத்தையும், முகாம் செய்வதற்கான மனைகளையும் தூப்புரவுக்காகவோ பொழுதுபோக்குக்காகவோ காலியாக விடப்பட்டுள்ள மனைகளையும்கூட உள்ளடக்கும்.

கட்டளையைச் சார்வு செய்தல் அல்லது அறிவித்தல்.

134. (1) அந்த கட்டளையானது, ஆஜர் கட்டளை சார்வுக்காக இதில் வகை செய்யப்பட்டுள்ள முறையில், சாத்தியமானால் எவருக்குப் பாதகமாக அது பிறப்பிக்கப்பட்டுள்ளதோ அவருக்குச் சார்வு செய்யப்பட வேண்டும்.

(2) அத்தகைய கட்டளையை அவ்வாறு சார்வு செய்ய முடியவில்லையானால், பகிரங்க அறிக்கை மூலமாக அது

அறிவிக்கப்படுதல் வேண்டும்; அந்தப் பகிரங்க அறிக்கை மாநில அரசு விதிகள் மூலம் உத்தரவிடலாகும் முறையில் பிரசுரிக்கப்படவேண்டும்; மற்றும் அத்தச் செய்தியை அத்தகையவருக்குத் தெரியப்படுத்துவதற்குப் பொருத்தம் மிக்க இடம் அல்லது இடங்களில் அதன் நகலொன்று ஒட்டப் படுதல் வேண்டும்.

யாருக்குக் கட்டளை குறிப் பிட்டனுப்பப்படு கிறதோ அவர் கீழ்ப்படியவோ காரணங் காட் டவோ வேண்டு மென்பது.

135. எவருக்குப் பாதகமாக அத்தகைய கட்டளை பிறப் பிக்கப்பட்டுள்ளதோ அவர்—

(அ) அந்தக் கட்டளையில் குறிப்பிடப்பட்ட காலத்திற் குள்ளும் குறிப்பிடப்பட்ட முறையிலும் அதன்மூலம் கட்டளையிடப்பட்ட செயலைப் புரிதல் வேண்டும்; அல்லது

(ஆ) அத்தகைய கட்டளையின்படி ஆஜராகி, அதை எதிர்த்து காரணஞ்சொல்லுதல் வேண்டும்.

அவர் அவ் வாறு செய்யத் தவறுவதால் ஏற்படும் விளை வுகள் 45/1860.

136. அத்தகையவர் அந்தச் செயலைப் புரியவில்லையானால் அல்லது ஆஜராகி காரணங்காட்டவில்லையானால், அவர் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 188 ஆவது பிரிவில் அதற்கென விதிக்கப்பட்ட தண்டனைக்கு ஆளாவார்; அந்தக் கட்டளையும் உறுதி செய்யப்படுதல் வேண்டும்.

பொது உரிமை இருப்பதை மறுக்குமிடத்து நடைமுறை என்ன என்பது.

137. (1) வழி, ஆறு, வாய்க்கால் அல்லது இடம் எதையும் பயன்படுத்துவதில் பொது மக்களுக்குள்ள இடையூறு, தொல்லை அல்லது அபாயத்தைத் தடுப்பதற்காக 133 ஆவது பிரிவின்படி கட்டளையொன்று பிறப் பிக்கப்படுமிடத்து, எவருக்குப் பாதகமாக அந்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்டதோ அவர் நடுவர் முன் ஆஜரானதன் பேரில் அத்தகைய வழி, ஆறு, வாய்க்கால் அல்லது இடத்தைப் பொறுத்து பொது உரிமை ஏதேனும் இருப்பதை அவர் மறுதலிக்கிறாரா என்பது பற்றி அவரை அந்த நடுவர் கேட்கவேண்டும்; அவர் அவ்வாறு மறுதலிப்பாரானால், அந்த நடுவர் 138 ஆவது பிரிவின்படி நடவடிக்கை எடுப்பதற்கு முன்பு அந்த விஷயத்தைக் குறித்து விசாரணை செய்தல் வேண்டும்.

(2) அந்த விசாரணையில் அத்தகைய மறுதலிப்புக்கு ஆதாரவாக நம்பத்தக்க சாட்சியம் ஏதேனுமிருப்பதாக நடுவருக்குப் புலப்பட்டால், அவர், அத்தகைய உரிமை இருக்கிறதா என்பதை, அதிகாரம்பெற்ற ஒரு நீதிமன்றம்

தீர்மானிக்கும் வரை, அந்த நடவடிக்கைகளை நிறுத்திவைக்க வேண்டும்; மற்றும் அந்தகைய சாட்சியம் எதுவும் இல்லை யென்பதாக அவருக்குப் புலப்பட்டால், அவர் 138 ஆவது பிரிவில் விதிக்கப்பட்டவாறு மேல்நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(3) (1) ஆவது உட்பிரிவின்படி, நடுவரால் கேட்கப் பட்டதன் பேரில், அதில் குறிப்பிடப்பட்ட தன்மையதான பொது உரிமை இருப்பதை மறுதலிக்கத் தவறிய ஒருவர், அல்லது, அவ்வாறு மறுதலித்த போதிலும், அதற்கு ஆதாரவாக நம்பத்தக்க சாட்சியத்தைக் கொடுக்கத் தவறிய ஒருவர், பிந்திய நடவடிக்கைகளில் அவ்வாறு மறுதலிப்பதற்கு அனுமதிக்கப்படுதல் ஆகாது.

காரணங் காட்டுவதற்கு அவர் ஆஜராகி இருக்கும் போது நடை முறை என்ன என்பது.

138. (1) 133 ஆவது பிரிவின்படி பாதகமாகக் கட்டளை யொன்று பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருவர் ஆஜராகி, கட்டளையை எதிர்த்துக் காரணஞ்சொல்வாரானால், நடுவர் அந்த விஷயத்தில் ஆஜர் கட்டளை வழங்கியுள்ளது போன்றே சாட்சியம் எடுத்தல் வேண்டும்.

(2) அந்த கட்டளையானது ஆதியில் பிறப்பிக்கப்பட்ட வாறுயினும் சரி, அல்லது நடுவர் அவசியமென எண்ணும் மாறுதலுக்குட்பட்டவாறுயினும் சரி, நியாயமானதாகவும் ஏற்றதாகவும் உள்ளது என்று நடுவருக்குத் திருப்திகர மாகத் தெரியுமானால், அந்தக் கட்டளை மாறுதலில்லாமலோ, நிலவரத்திற்கேற்ப, அத்தகைய மாறுதலுடனே உறுதி செய்யப்படுதல் வேண்டும்.

(3) நடுவருக்கு அவ்வாறு திருப்தி ஏற்படவில்லை யானால், அந்த வழக்கில் மேற்கொண்டு நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படுதல் ஆகாது.

தல விசாரணை செய்யவும் வல்லுநரை விசாரிக்கவும் உத்தரவிட நடுவருக்குள்ள அதிகாரம்.

139. நடுவர், 137 ஆவது பிரிவு அல்லது 138 ஆவது பிரிவின்படியான விசாரணைக்காக—

(அ) தாம் தக்கதெனக் கருதுபவரால் தல விசாரணை செய்யப்படுவதற்கு உத்தரவிடலாம்; அல்லது

(ஆ) வல்லுநர் ஒருவரைத் தருவித்து விசாரிக்கலாம்.

எழுத்து மூல மான அறிவு றுத்தல்கள் மூதலிய வற்றை அவிக்க நடுவருக்குள்ள அதிகாரம்.

140. (1) நடுவர், 139 ஆவது பிரிவின்படி தல விசாரணை செய்ய ஒருவருக்கு உத்தரவிடுமிடத்து, அந்த நடுவர்—

(அ) அவருக்கு வழிகாட்டுதலாக இருப்பதற்கு அவசியமெனத் தோன்றக்கூடிய எழுத்துமூலமான அறிவுறுத்தல்களை அவருக்கு அளிக்கலாம்;

(ஆ) தல விசாரணைக்கு அவசியமாகும் செலவுகள் முழுவதும் அல்லது அதன் ஒரு பகுதி எவரால் செலுத்தப் படவேண்டும் என்பதை விளம்பலாம்.

(2) அத்தகையவரின் அறிக்கையை அந்த வழக்கில் சாட்சியமாகப் பயன்படுத்தலாம்.

(3) நடுவர் 139 ஆவது பிரிவின்படி வல்லுநர் ஒருவரைத் தருவித்து விசாரிக்குமிடத்து, அவ்வாறு தருவிப்பதற்கும் விசாரிப்பதற்குமான செலவுத் தொகை எவரால் செலுத்தப் படவேண்டுமென்பது பற்றி உத்தரவிடலாம்.

கட்டளை உறுதி செய்யப்படு வதன் பேரில் நடை முறை என்ன என்பதும், அதற்குக் கீழ்ப்படியாமை யின் விளைவு களும்.

141. (1) கட்டளையொன்று 136 ஆவது பிரிவு அல்லது 138 ஆவது பிரிவின்படி உறுதிசெய்யப்பட்டிருக்கின்றபோது, எவருக்குப் பாதகமாக அந்தக் கட்டளை பிறப்பிக்கப் பட்டதோ அவருக்கு அதைப் பற்றி நடுவர் அறிவிப்பு கொடுத்தல் வேண்டும்; மற்றும் அந்த அறிவிப்பில் நிர்ண யிக்கப்படும் காலத்திற்குள் அக் கட்டளையில் உத்தரவிடப் படும் செயலைச் செய்யுமாறு அவரைக் கோருதல் வேண்டும்; மேலும் கீழ்ப்படியாவிட்டால், அவர் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 188 ஆவது பிரிவில் வகை செய்யப்பட்ட தண்டத்திற்கு ஆளாவார் என்பதாகத் தெரிவித்தலும் வேண்டும்.

45/1860.

(2) அத்தகைய செயல் குறிப்பிடப்பட்ட கெடுவுக்குள் செய்யப்படவில்லையானால், நடுவர் அதைச் செய்விப்பதுடன், அதைச் செய்வதற்கான செலவுத் தொகையை கட்டிடம், சாமான்கள் அல்லது அவரது கட்டளையால் அகற்றப்பட்ட பிற சொத்தினை விற்பதன் மூலமாகவோ, அல்லது அந்தகைய நடுவரின் வட்டார அதிகார வரம்புக்குள்ளே அல்லது வெளியே அத்தகையவருக்குள்ள வேறெந்த அசையும் பொருளையும் சட்டப்படி கைப்பற்றி விற்பதன் மூலமாகவோ அவர் வசூலிக்கலாம்; மற்றும் அத்தகைய வேறு சொத்தானது

அந்த அதிகார வரம்புக்கு வெளியே இருக்குமானால், எந்த நடுவரது வட்டார அதிகார வரம்புக்குள் ஜப்தி செய்யப்பட வேண்டிய சொத்து காணப்படுகிறதோ அந்த நடுவரின் மேற் குறிப்பின்பேரில் அந்தச் சொத்து ஜப்தி செய்யப்பட்டு விற்கப் படலாமென்று அந்தக் கட்டளை அதிகாரம் அளித்தல் வேண்டும்.

(3) இந்தப் பிரிவின்படி நல்லெண்ணத்துடன் செய்யப் பட்ட எதைப் பொறுத்தும் வழக்குத் தொடர்தல் ஆகாது.

விசாரணை நடப்பிலிருக்கும்போது வலியுறுத்துக் கட்டளை பிறப்பித்தல்.

142. (1) 133ஆவது பிரிவின்படி கட்டளையொன்றைப் பிறப்பிக்கின்ற நடுவர், பொதுமக்களுக்கு உடனடியாக நேர விருக்கும் அபாயத்தை அல்லது கடுமையான கேட்டைத் தடை செய்ய உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டு மென்பதாக என்னுவாரானால், அவர், அவ்விஷயம் தீர்மானிக்கப்படும்வரை, முதலில் சொன்ன கட்டளை எவருக் கெதிராகப் பிறப்பிக்கப்பட்டதோ அவருக்கு அத்தகைய அபாயம் அல்லது கேட்டை தவிர்ப்பதற்கு அல்லது தடுப் பதற்கு தேவைப்படுவதாயுள்ள கட்டளையொன்றை இடலாம்.

(2) அத்தகைய வலியுறுத்துக் கட்டளைக்கு அத்தகை யவர் உடனடியாகக் கீழ்ப்படியத் தவறினால், அந்த நடுவர் அத்தகைய அபாயத்தைத் தவிர்ப்பதற்கோ அத்தகைய கேட்டைத் தடுப்பதற்கோ நாம் தக்கதெனக் கருதும் வழி வகைகளைத் தாமே பயன்படுத்தலாம்; அல்லது பயன்படுத்தும் படி செய்யலாம்.

(3) இந்தப் பிரிவின்படி நல்லெண்ணத்துடன் ஒரு நடு வரால் செய்யப்பட்ட எச்செயலையும் பொறுத்து யாதொரு வழக்கும் தொடுத்தல் ஆகாது.

பொதுத் தொல்லை மீண்டும் செய்யப்படுவதை அல்லது தொடர்ந்து செய்யப்படுவதை நடுவர் தடை செய்யலாம்.

143. மாவட்ட நடுவரோ, உட்கோட்ட நடுவரோ மாநில அரசால் அல்லது மாவட்ட நடுவரால் இதற்கென அதிகார மளிக்கப்பட்ட நிருவாகத் துறை நடுவர் வேறெவருமோ, இந்தியத் தண்டனைச் சட்டத்தில், அல்லது சிறப்பு அல்லது வட்டாரச் சட்டம் எதிலேனும் வரையறுக்கப்பட்ட ஒரு பொதுத் தொல்லையை மீண்டும் செய்யக்கூடாதென்றோ தொடர்ந்து செய்யக்கூடாதென்றோ எவருக்கும் உத்தரவிட லாம்.

இ. தொல்லை அல்லது எதிர்பார்க்கப்படுகிற அபாயம் ஆகிய அவசர நிலைகள்.

தொல்லை அல்லது எதிர் பார்க்கப்படுகிற அபாயம் ஆகிய அவசர நிலை களில் உத்தரவு பிறப்பிப்பதற் குள்ள அதி காரம்.

144. (1) மாவட்ட நடுவர் (டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட்) உட்கோட்ட நடுவர் (ஸப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்) அல்லது மாநில அரசால் இதற்கெனச் சிறப்பு வகையில் அதிகாரமளிக்கப்பட்ட வேறெந்த நிருவாகத்துறை நடுவரின் (எக்ஸிகுடிவ் மாஜிஸ்ட்ரேட்) கருத்தின்படி, இந்தப் பிரிவின்கீழ் நடவடிக்கை மேற்கொள்வதற்குப் போதுமான காரணம் இருந்து, உடனடியான தடையோ, விரைவான பரிகாரமோ விரும்பத் தக்கதாகவுள்ள நிலைகளில் அத்தகைய நடுவர் (மாஜிஸ்ட்ரேட்), வழக்கிற்கு முக்கியமானவையாக உள்ள சங்கதிகளைக் குறிப்பிட்டு 134 ஆவது பிரிவின்படி சார்வு செய்யப்படும் எழுத்து வடிவத்திலான ஒரு கட்டளை மூலமாக, ஒருவரது அனுபோகத்தில் அல்லது அவரது ஆளுகையில் உள்ள குறிப்பிட்ட சொத்தைப் பொறுத்து குறிப்பிட்ட ஒரு செயலைச் செய்வதைத் தவிர்க்குமாறு, அல்லது குறிப்பிட்ட உத்தரவைப் பெற்றுக்கொள்ளுமாறு அவருக்கு உத்தரவிடுவதானது, சட்டபூர்வமாக வேலைசெய்து வருகிற எவருக்கும் ஏற்படும் இடையூறு, தொந்தரவு அல்லது கேட்டையோ, மனித உயிர், ஆரோக்கியம் அல்லது பாது காப்புக்கு ஏற்படும் அபாயத்தையோ, பொது அமைதிக்கு ஏற்படும் பங்கம், அல்லது கலகம், அல்லது சச்சரவையோ தடுக்கக் கூடும் அல்லது தடுக்க முனையும் என்று எண்ணுவா ராஞல் அத்தகைய நடுவர் அவ்வாறே அத்தகையவருக்கு உத்தரவிடலாம்.

(2) இந்தப் பிரிவின்படியான கட்டளை ஒன்று, நெருக்கடி நிலைகளிலும், அல்லது எவருக்கெதிராகக் கட்டளை குறிப்பிட்டனுப்பப்படுகிறதோ அவருக்கு முன்னறிவிப்பை, உரிய காலத்தில் சார்வு செய்வதற்குச் சூழ்நிலைகள் இடங்கொடுக்காத சந்தர்ப்பங்களிலும் அவர் இல்லாமலேயே பிறப்பிக்கப்படலாம்.

(3) இந்தப் பிரிவின்படியான கட்டளையொன்று, குறிப்பிட்ட ஒருவருக்கு, அல்லது குறிப்பிட்ட இடம் அல்லது பகுதியில் குடியிருக்கின்றவர்களுக்கு, அல்லது ஒரு குறிப்பிட்ட இடம் அல்லது பகுதியில் அடிக்கடி வந்துபோகிற அல்லது பார்க்க வருகிற பொது மக்களுக்குப் பொதுவாகவே குறிப்பிட்டனுப்பப்படலாம்.

(4) இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட கட்டளை யெதுவும் அதனைப் பிறப்பித்ததிலிருந்து இரண்டு மாதங்களுக்குமேல் அமலில் இருத்தல் ஆகாது.

ஆனால், மனித உயிருக்கோ ஆரோக்கியத்திற்கோ பாது காப்புக்கோ ஏற்படும் அபாயத்தைத் தடுப்பதற்காகவோ, கலகம் அல்லது சச்சரவு எதையும் தடுப்பதற்காகவோ அவ் வாறு செய்வது அவசியமென மாநில அரசு என்னுமானால், அது, அறிவிக்கை மூலமாக, இந்தப் பிரிவின்படி நடுவரால் (மாஜிஸ்ட்ரேட்) பிறப்பிக்கப்பட்ட ஒரு கட்டளையானது, மாநில அரசின் கட்டளையில்லாதிருப்பின் எந்தத் தேதியில் முடிவடைந்திருக்குமோ அந்தத் தேதியிலிருந்து ஆறு மாதங் களுக்கு மேற்படாது மேற்சொன்ன அறிவிக்கையில் அரசு குறிப்பிடலாகும் கால அளவுக்கு, அந்தக் கட்டளை அமலில் இருக்கவேண்டும் என்று உத்தரவிடலாம்.

(5) நடுவர் எவரும், தம்மாலோ தமக்குக் கீழமைந் துள்ள நடுவராலோ, பதவியில் தமக்கு முன்னவராலோ இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட கட்டளை எதையும், தாமே முற்பட்டோ குறையுற்றவரின் விண்ணப்பத்தின்பேரிலோ ரத்து செய்யலாம் அல்லது மாற்றலாம்.

(6) மாநில அரசு, (4) ஆவது உட்பிரிவின் விலக்கின்படி, தான் பிறப்பித்த கட்டளை எதையும், தானே முற்பட்டோ குறையுற்றவரின் விண்ணப்பத்தின்பேரிலோ ரத்து செய்ய லாம் அல்லது மாற்றலாம்.

(7) (5) ஆவது உட்பிரிவு அல்லது (6) ஆவது உட் பிரிவின்படி விண்ணப்பமொன்று கிடைக்கப்பெற்றதும், நில வரத்திற்கேற்ப, நடுவரோ மாநில அரசோ, தன்முன் நேர் முகமாக அல்லது வாதுரைஞர் மூலமாக ஆஜராகி, அந்தக் கட்டளையை எதிர்த்துக் காரணஞ் சொல்லுவதற்கு வாய்ப் பினை விண்ணப்பதாருக்குக் கூடிய விரைவில் அளித்தல் வேண்டும்; மற்றும் நிலவரத்திற்கேற்ப, நடுவரோ, மாநில அரசோ அவ்விண்ணப்பத்தை முழுவதையுமோ ஒரு பகுதி யையோ நிராகரிப்பரானால், அவர் அல்லது அது அவ்வாறு செய்வதற்கான காரணங்களை எழுத்துமூலம் பதிவு செய்தல் வேண்டும்.

ஈ. அசையாப் பொருள் பற்றிய தாவாக்கள்.

நிலம் அல்லது நீர் சம்பந்தப் பட்ட தாவா அமைதிக் குலைவை உண்டாக்கக் கூடியதாக இருக்கும்பொழுது நடைமுறை என்ன என்பது.

145. (1) நிலம் அல்லது நீர் அல்லது அதன் எல்லைகள் சம்பந்தமாக அமைதிக் குலைவை உண்டாக்கக்கூடிய தாவா ஒன்று தம் வட்டார எல்லைக்குள் ஏற்பட்டிருப்பதாக காவல் அலுவலரின் அறிக்கையிலிருந்தோ, பிற தகவலின் பேரிலோ,

நிருவாகத்துறை நடுவொருவருக்குத் திருப்திகரமாகத் தெரியும்போதெல்லாம், அவர், தமக்கு அவ்வாறு திருப்திகரமாகத் தெரிவதற்கான காரணங்களைக் குறிப்பிட்டும் குறிப்பிட்ட ஒரு தேதியிலும் நேரத்திலும் நேர்முகமாகவோ வழக்குரைஞர் மூலமாகவோ தம் நீதிமன்றத்தில் வந்து, தாவாச் சொத்து உள்ளபடியே எவரது அனுபோகத்தில் இருக்கிறது என்பது பற்றி அவரவர் கொண்டாடும் உரிமைகளைக் குறித்து எழுத்து மூலமான வழக்குரைகளைத் தாக்கல் செய்யுமாறும் அத்தகைய தாவாவில் சம்பந்தப்பட்டுள்ள தரப்பினர்களைக் கோரியும் எழுத்துமூலமான கட்டளையொன்றைப் பிறப்பிக்க வேண்டும்.

(2) இந்தப் பிரிவின் நோக்கங்களைப் பொறுத்தமட்டில் "நிலம் அல்லது நீர்" என்னும் சொற்றொடரில், கட்டிடங்கள், சந்தைகள், மீன்பிடிக்கும் உரிமை, பயிர்கள் அல்லது நிலத்தின் பிற விளைபொருள் மற்றும் அத்தகைய சொத்திலிருந்து கிடைக்கும் வாடகைகள் அல்லது ஆதாயங்கள் உள்ளடங்கும்.

(3) அத்தகைய கட்டளையின் நகலொன்று, ஆஜர் கட்டளை சார்வுக்காக இந்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்ட முறையில், நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) உத்தரவிடும் ஆள் அல்லது ஆட்களுக்குச் சார்வு செய்யப்படவேண்டும்; மற்றும் குறைந்தது ஒரு நகலேனும் தாவாச் சொத்து இருக்குமிடத்திலோ அதற்கருகிலோ எடுப்பான ஓரிடத்தில் ஒட்டப்பட்டுப் பிரசுரம் செய்யப்பட வேண்டும்.

(4) அதன்பேரில் நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) தாவாச் சொத்து அனுபோகத்திற்கு தரப்பினர்கள் கொண்டாடும் உரிமைகளையோ அல்லது தகுதிகளையோ கவனிக்காமல், அவ்வாறு கொடுக்கப்பட்ட எழுத்து மூலமான வழக்குரைகளைப் பார்வையிட்டு, தரப்பினர்களை அதன்பேரில் கேட்டு, அவர்கள் தாக்கல் செய்யக்கூடிய சாட்சியம் அனைத்தையும் பெற்றுக் கொண்டு, மேற்கொண்டு தாம் அவசியமென நினைக்கும் சாட்சியம் ஏதேனுமிருப்பின் அதையும் எடுத்துக்கொண்டு, கூடுமானால் (1) ஆவது உட்பிரிவின்படி தாம் பிறப்பித்த கட்டளைத் தேதியன்று, தரப்பினர்களில் எவரேனும் தாவாச் சொத்தின் அனுபோகத்தைக் கொண்டிருந்தாரா என்பதையும் அவர் எந்தத் தரப்பினர் என்பதையும் தீர்மானித்தல் வேண்டும்:

ஆனால், நடுவருக்குக் காவல் அலுவலரின் அறிக்கையோ பிற தகவலோ கிடைத்த நேரத்திற்கு அடுத்து மூன்றிய இரண்டு மாதங்களுக்குள், அல்லது அந்தச் நேரத்திற்குப் பின்பும் (1) ஆவது உட்பிரிவின்படியான அவரது கட்டளைச் நேரத்திற்கு முன்பும் தாம்பினர் எவரேனும் பலவந்தமாகவும் சட்ட விரோதமாகவும் அப்புறப்படுத்தப்பட்டிருக்கிறார் என்பதாக அந்த நடுவருக்குத் தோன்றுமானால், அவர் (1) ஆவது உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட தமது கட்டளையின் நேரத்தியன்று அவ்வாறு அப்புறப்படுத்தப்பட்டுள்ள தரப்பினரே, சுவாதீனத்தில் இருந்ததாகப் பாவிக்கலாம்.

(5) அவ்வாறு ஆஜராகும்படி கோரப்பட்ட தரப்பினர் எவரும் அல்லது அக்கறை கொண்டுள்ள வேறு எவரும் மேற் சொன்னவாறான தாவா எதுவும் இல்லையென்றே இருந்தது இல்லையென்றே காட்டுவதற்கு இந்தப் பிரிவிலுள்ள எதுவும், தடையாயிருத்தல் ஆகாது; அந்தகைய சந்தர்ப்பத்தில் நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) மேற்சொன்ன தம் கட்டளையை ரத்து செய்தல் வேண்டும்; அதன்பின்னர் மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் அனைத்தையும் நிறுத்திவைத்தல் வேண்டும்; ஆனால், அவ்வாறு ரத்து செய்யப்பட்டதற்குட்பட்டு, (1) ஆவது உட்பிரிவின்படியான நடுவரின் (மாஜிஸ்ட்ரேட்) கட்டளை முடிவானதாக இருக்கும்

(6) (அ) மேற்சொன்ன சொத்து, தரப்பினர்களில் ஒருவரின் சுவாதீனத்தில் இருந்ததாகவோ (4) ஆவது உட்பிரிவின் விலக்கின்படி அவரது சுவாதீனத்தில் இருந்ததாகக் கொள்ளப்பட வேண்டுமென்பதாகவோ நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) தீர்மானிப்பாரானால், அவர், கிரமமான சட்ட நடவடிக்கை மூலம் அதிலிருந்து வெளியேற்றப்படும்வரை அத்தகைய தரப்பினர் அந்தச் சொத்தின் சுவாதீனத்திற்குத் தகுதியுடையவரென விளம்பியும், அவ்வாறு வெளியேற்றப்படும்வரை அத்தகைய சுவாதீனத்தில் யாதொரு விதமான குலைவும் ஏற்படாமல் தடுத்தும் கட்டளையொன்றைப் பிறப்பிக்க வேண்டும்; மற்றும் (4) ஆவது உட்பிரிவின் விலக்கின்படி தாம் மேல்நடவடிக்கை எடுக்கும்போது, பலவந்தமாகவும் சட்டவிரோதமாகவும் அப்புறப்படுத்தப்பட்ட தரப்பினருக்கு சுவாதீனத்தை மீட்டுத் தரலாம்.

(ஆ) இந்த உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட கட்டளையானது (3) ஆவது உட்பிரிவில் விதிக்கப்பட்ட முறையில் சார்வு செய்து பிரசுரிக்கப்படவேண்டும்.

(7) அத்தகைய நடவடிக்கைக்கான தரப்பினர் எவரேனும் மரணமடையும்போது, மரணமடைந்த தரப்பினரின் சட்டப்படியான பிரதிநிதியை அந்த நடவடிக்கைக்குரிய தரப்பினராக இருக்கும்படி நடுவர் செய்விக்கலாம்; அதன் பேரில் விசாரணையைத் தொடர்ந்து நடத்தல் வேண்டும்; மற்றும், அத்தகைய நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில் மரணமடைந்த தரப்பினரின் சட்டப்படியான பிரதிநிதி யார் என்பது பற்றி கேள்வி ஏதேனும் எழுமானால், மரண மடைந்த தரப்பினரின் பிரதிநிதிகளாக பாத்தியதை கொண்டாடுகிறவர்கள் அனைவரையும் அதற்குத் தரப்பினர் களாக ஆக்குதல் வேண்டும்.

(8) நடுவர் தம் முன்னிலையில் நடப்பிலிருக்கின்ற இந்தப் பிரிவின்படியான நடவடிக்கையொன்றில் தாவாச்சொத்தாக வுள்ள பயிரோ சொத்தின் பிற விளைபொருளோ விரைவாக வும் இயல்பாகவும் அழியக்கூடியதென்று கருதுவாரானால், அவர், அத்தகைய பொருளைத் தக்கவாறு காப்பதற்கு அல்லது விற்பதற்குக் கட்டளையொன்றைப் பிறப்பிக்கலாம்; மற்றும் அந்த விசாரணை முடிவடைந்ததன்பேரில் அத்தகைய பொருள் அல்லது அதன் விற்றுமுதலை வகைசெய்வது பற்றி தாம் தக்கதெனக் கருதும் கட்டளையைப் பிறப்பித்தல் வேண்டும்.

(9) நடுவர், தாம் தக்கதென நினைத்தால், இந்தப் பிரி வின் படியான நடவடிக்கைகளில் எந்தக் கட்டத்திலும், தரப் பினரில் எவரது விண்ணப்பத்தின்பேரிலும், சாட்சி எவரையும் ஆஜராகுமாறு, அல்லது பத்திரம் அல்லது பொருளைத் தாக்கல் செய்யுமாறு உத்தரவிடுகிற ஆஜர் கட்டளையொன்றைப் பிறப்பிக்கலாம்.

(10) இந்தப் பிரிவிலுள்ள எதுவும், 107 ஆவது பிரிவின் படி மேல் நடவடிக்கை எடுப்பதற்கு, நடுவருக்குள்ள அதி காரங்களைப் பாதிப்பதாகக் கருதுதல் ஆகாது.

தாவா சொத்தை ஜப்தி செய்வ தற்கும் பாது காவலரை நியமனஞ் செய்வதற்கு மான அதி காரம்.

146. (1) நடுவர் 145 ஆவது பிரிவின் (1) ஆவது உட்பிரிவின் படி கட்டளையைப் பிறப்பித்ததற்குப் பின்பு எக்காலத் திலேனும், அந்த தாவா உடனடியான கவனத்திற்குரிய ஒரு தாவா என எண்ணுவாரானால், அல்லது தரப்பினர்களில் எவருக்கும் 145 ஆவது பிரிவில் எந்த சுவாதீனம் குறிப்பிடப் படுகிறதோ அந்த சுவாதீனம் அப்போது இல்லை என்பதாகத் தீர்மானிப்பாரானால், அல்லது தாவா சொத்தின் அத்தகைய

சுவாதீனம் அப்போது அவர்களில் எவரிடம் இருந்தது என்பது பற்றி, தாம் திருப்திகொள்ள முடியவில்லையானால், தாவா சொத்தின் சுவாதீனத்திற்குப் பாத்தியதை உடையவர் யார் என்பதைப் பொறுத்து தாவாவுக்குரிய தரப்பினர்களின் உரிமைகளை அதிகாரம் பெற்ற ஒரு தீர்ப்பளிப்பு முடிவுசெய்யும் வரை அவர் அந்தச் சொத்தை ஜப்தியில் வைக்கலாம்;

ஆனால், தாவா சொத்தைப் பொறுத்து அமைதிக் குலைவை உண்டாக்கக்கூடியதில்லை இனிமேல் இல்லை என்று அத்தகைய நடுவருக்குத் திருப்தியேற்படுமானால், அதை ஜப்தியிலிருந்து எந்த நேரத்திலும் விடுவித்துவிடலாம்.

(2) நடுவர் தாவா சொத்தை ஜப்தி செய்கிறபோது, அத்தகைய தாவா சொத்தின் தொடர்பாக உரிமைவழக்கு நீதிமன்றம் பாதுகாவலர் (ரிசீவர்) எவரையும் நியமனஞ் செய்திருக்கவில்லையானால், அந்தச் சொத்தைக் கவனித்து வருவதற்காகத் தாம் ஏற்றதெனக் கருதுகிற ஏற்பாடுகளைச் செய்யலாம், அல்லது தாம் பொருத்தமென நினைத்தால் அதற்குப் பாதுகாவலர் ஒருவரை நியமனம் செய்யலாம்: அந்தப் பாதுகாவலர் நடுவரின் கட்டுப்பாட்டிற்குட்பட்டு 1908 ஆம் ஆண்டு உரிமை வழக்கு நடைமுறைச் சட்டத்தின் படி நியமனஞ் செய்யப்பட்ட பாதுகாவலரின் (ரிசீவர்) அதிகாரங்கள் அனைத்தையும் உடையவராயிருப்பார்;

ஆனால், தாவா சொத்தின் தொடர்பாகப் பாதுகாவலர் ஒருவரை உரிமை வழக்கு நீதிமன்றம் பின்னர் நியமனஞ் செய்யுங்கால், நடுவர்—

(அ) உரிமைவழக்கு நீதிமன்றத்தால் நியமனஞ் செய்யப்பட்ட பாதுகாவலருக்கு (ரிசீவர்) தாவா சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்குமாறு தம்மால் நியமனஞ் செய்யப்பட்ட பாதுகாவலருக்குக் கட்டளையிடுதல் வேண்டும்; அதற்குப் பின் தம்மால் நியமனஞ் செய்யப்பட்ட பாதுகாவலரை (ரிசீவர்) விடுவித்தல் வேண்டும்.

(ஆ) இடைவினைவாகவோ பின்வினைவாகவோ நியாயமாகப் பிறப்பிக்கவேண்டிய வேறு கட்டளைகளையும் பிறப்பிக்கலாம்.

நிலம் அல்லது நீரைப் புழங்கும் உரிமை பற்றி எற்படும் தாவா.

147. (1) நிருவாகத்துறை நடுவர் ஒருவரின் வட்டார அதிகார வரம்புக்குள் நிலம் அல்லது நீர் குறித்து இருப்பதாகச் சொல்லப்படும் புழக்க உரிமை சம்பந்தமாக அது வசதி உரிமையாகவோ வேறுவித உரிமையாகவோ கொண்டாடப்

பட்டாலும், அமைதிக் குலைவை உண்டாக்கக்கூடிய தாவா ஒன்று இருக்கிறது என்பதாகக் காவல் அலுவலரின் அறிக்கையிலிருந்தோ வேறு தகவலின்பேரிலோ அந்த நடுவருக்குத் திருப்திகரமாகத் தெரியும்போதெல்லாம், தமக்கு அவ்வாறு திருப்திகரமாகத் தெரிந்ததற்கான காரணங்களைக் குறிப்பிட்டும், அத்தகைய தாவாவில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களைத் தம் நீதிமன்றத்தில் நேர்முகமாகவோ வாதுரைஞர் மூலமாகவோ குறிப்பிட்ட தேதியிலும் நேரத்திலும் ஆஜராகி, முறையே தத்தம் பாத்தியதைகளுக்கு எழுத்துமூலமான வழக்குரைகளைக் கொடுக்குமாறு கோரியும் எழுத்து மூலமான கட்டளையொன்றைப் பிறப்பித்தல் வேண்டும்.

விளக்கம்.—"நிலம் அல்லது நீர்" என்னும் சொற்றொடர் அதற்கு 145 ஆவது பிரிவின் (2) ஆவது உட்பிரிவில் தரப்பட்டுள்ள பொருளைக் கொண்டுள்ளதாகும்.

(2) அதற்குப்பின் நடுவர் அவ்வாறு கொடுக்கப்பட்ட வழக்குரைகளைப் பார்வையிட்டு, தாப்பினர்களைக் கேட்டு, அந்தந்த தரப்பினர்கள் முறையே தாக்கல் செய்யும் சாட்சியம் அனைத்தையும் பெற்றுக்கொண்டு, அத்தகைய சாட்சியத்தின் பயனை ஆராய்ந்து, மேற்கொண்டும் தாம் அவசியமென நினைக்கும் சாட்சியம் ஏதேனுமிருப்பின் அதையும் எடுத்துக் கொண்டு அத்தகைய உரிமை இருக்கிறதா என்பதை, கூடுமானால், தீர்மானிக்கவும் வேண்டும்; மற்றும் அத்தகைய விசாரணையின்மீது கூடுமானவரையில் 145 ஆவது பிரிவின் விதிகள் இயங்குதல் வேண்டும்.

(3) அத்தகைய உரிமைகள் இருக்கின்றன என்பதாக அந்த நடுவருக்குத் தோன்றுமானால், அத்தகைய உரிமை யினைக் கொண்டாடி வருவதில் தவறியிடாமல் தடை செய்கின்ற கட்டளையொன்றை அவர் பிறப்பிக்கலாம்; அதில், எற்றகொரு சந்தர்ப்பத்தில், அத்தகைய உரிமையைக் கொண்டாடி வருவதில் உள்ள இடையூறு எதையும் அகற்றுவதற்கான ஒரு கட்டளையும் உள்ளடங்கியிருக்கலாம்:

ஆனால், அந்த உரிமையானது ஆண்டின் எல்லாக் காலங்களிலும் கொண்டாடி வரத்தக்கதாக இருக்குமிடத்து, காவல் அலுவலரின் அறிக்கையோ விசாரணையைத் தொடர்வதற்குக் கொண்டு செல்லும் பிற தகவலோ (1) ஆவது உட்பிரிவின்படி கிடைத்ததற்கு அடுத்து முந்திய மூன்று மாதங்களுக்குள்

அத்தகைய உரிமை கொண்டாடி வரப்பட்டுள்ளது என்ப லன்றி அல்லது அந்த உரிமையானது குறிப்பிட்ட பருவங் களிலோ, குறிப்பிட்ட சமயங்களிலோ மட்டுமே கொண்டாடி வரத்தக்கதாயிருக்குமிடத்து, அவ்வாறு அறிக்கை அல்லது தகவல் கிடைப்பதற்கு முன்பு அத்தகைய பருவங்களின் கடைசிப் பருவத்தின்போது அல்லது அத்தகைய சமயங் களில் கடைசி சமயத்தில் கொண்டாடப்பட்டு வந்திருக் கிறது என்றலன்றி, மேற்சொன்ன கட்டளை எதுவும் பிறப் பிக்கப்படுதல் ஆகாது.

(4) தாவாவானது நிலம் அல்லது நீர் குறித்து இருப்ப தாகச் சொல்லப்படும் புழக்க உரிமை பற்றியதாக இருக் கிறது என்று 145 ஆவது பிரிவின் (1) ஆவது உட்பிரிவின்படி தொடங்கப்பட்ட நடவடிக்கைகள் எவற்றிலேனும் நடுவருக்குப் புலப்படும்போது, அவர், தம் காரணங்களைப் பதிவு செய்த தற்குப் பின்பு, அந்த நடவடிக்கைகள் (1) ஆவது உட்பிரிவின் படி தொடங்கப்பட்டவையே போன்று அவற்றைத் தொடர்ந்து நடத்தலாம்;

மற்றும் தாவா குறித்து 145 ஆவது பிரிவின்படி மேல் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று (1) ஆவது உட் பிரிவின்படி தொடங்கப்பட்ட நடவடிக்கைகள் எவற்றிலேனும் நடுவருக்குப் புலப்படும்போது, அவர் தம் காரணங்களைப் பதிவு செய்ததற்குப் பின்பு, அந்த நடவடிக்கைகள் 145 ஆவது பிரிவின் (1) ஆவது உட்பிரிவின்படி தொடங்கப்பட்டவையே போன்று அவற்றைத் தொடர்ந்து நடத்தலாம்.

148. (1) 145 ஆவது பிரிவு, 146 ஆவது பிரிவு அல்லது 147 ஆவது பிரிவின் நோக்கங்களுக்காகத் தல விசாரணை செய் வது அவசியமாக இருக்கும்போதெல்லாம் மாவட்ட நடுவரோ, உட்கோட்ட நடுவரோ தமக்குக் கீழ்ப்பட்ட நடுவர் எவரை யும் தம் சார்பாக விசாரணை செய்ய அனுப்பி வைக்கலாம்; மற்றும் அவருக்கு உதவியாக இருப்பதற்கு அவசியமெனத் தோன்றக்கூடிய எழுத்துமூலமான அறிவுறுத்தல்களையும் அளிக்கலாம்; மேலும் அந்த விசாரணைக்கு அவசியமாகும் செலவுகள் முழுவதையும் அல்லது ஏதேனும் ஒரு பகுதியை அவர் செலுத்த வேண்டும் என்றும் விளம்பலாம். தல விசாரணை.

(2) அவ்வாறு அனுப்பிவைக்கப்பட்டவரின் அறிக்கையை, வழக்கில் சாட்சியமாகப் பயன்படுத்தலாம்.

(3) 145 ஆவது பிரிவு, 146 ஆவது பிரிவு அல்லது 147 ஆவது பிரிவின்படியான நடவடிக்கையிலுள்ள தரப்பினர் எவரேனும், தொகை எதேனும் செலவழித்திருக்கும்போது நிர்ப்பனிக்கிற நடுவர், அத்தகைய செலவுத் தொகையை அத்தகைய தரப்பினர் அல்லது நடவடிக்கைக்குரிய வேறு தரப்பினர் இவர்களில் எவர் செலுத்த வேண்டும் என்பதையும், முழுவதுமா அல்லது அதன் ஒரு பகுதியா அல்லது விகிதத்திலா என்பதையும், மற்றும் சாட்சிகளைப் பொறுத்தும், வாதுரைஞர் ஊதியங்களைப் பொறுத்தும் நியாயமானதென நீதிமன்றம் கருதும் செலவுகளும், அத்தகைய செலவுத் தொகையில் அடங்கியதா என்பதையும் பற்றிக் கட்டளையிடலாம்.

அத்தியாயம் XI.

காவல் துறையினரின் தடுப்பு நடவடிக்கை.

கைது செய்தற்குரிய குற்றங்களைக் காவல் துறையினர் தடுக்க வேண்டும் என்பது.

149. கைது செய்தற்குரிய குற்றம் எதுவும் செய்யப்படுவதைத் தடுப்பதற்காகக் காவல் அலுவலர் ஒவ்வொருவரும் குறுக்கிடலாம்; மேலும் தம் திறமை முழுவதையும் இயன்ற வரை பயன்படுத்தி அவர் அதைத் தடுத்தலும் வேண்டும்.

கைது செய்தற்குரிய குற்றம் தடுக்கச் செய்வதற்கான திட்டம் பற்றிய தகவல்.

150. கைது செய்தற்குரிய குற்றம் எதையேனும் செய்வதற்கான திட்டம் பற்றிய தகவல் கிடைக்கப்பெறும் காவல் அலுவலர் ஒவ்வொருவரும், எந்தக் காவல் அலுவலருக்குத் தாம் கீழ்ப்பட்டவரோ அவருக்கும், அந்தகைய குற்றம் எதுவும் செய்யப்படுவதைத் தடுப்பதை அல்லது அதை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதைக் கடமையாகக் கொண்டுள்ள வேறெந்த அலுவலருக்கும் அந்தகைய தகவலைத் தெரிவித்தல் வேண்டும்.

கைது செய்தற்குரிய குற்றங்கள் செய்யப்படுவதைத் தடுப்பதற்காகக் கைது செய்தல்.

151. (1) கைது செய்தற்குரிய குற்றம் எதையேனும் செய்வதற்கான ஒரு திட்டத்தைப் பற்றி தெரிய வந்ததும் ஒரு காவல் அலுவலர், அந்தக் குற்றம் செய்யப்படுவதை வேறு விதமாகத் தடுக்க முடியாதென்று தமக்குத் தோன்றுமானால், நடுவரொருவரிடமிருந்து கட்டளையின்றியும், பிடிகட்டளை இல்லாமலும், அவ்வாறு திட்டமிடுகின்றவரைக் கைது செய்யலாம்.

(2). (1) ஆவது உட்பிரிவின்படி கைது செய்யப்பட்ட எவரையும் அவரைக் கைதுசெய்த நேரத்திலிருந்து இருபத்து நான்கு மணி நேரத்திற்கு மேற்பட்ட கால அளவிற்குக் காவலில் வைத்திருக்குமாறு இந்தச் சட்டத்தின் வேறு வகைமுறைகளின்படியேனும் அல்லது அவ்வப்போது அமலில் உள்ள வேறெந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எவற்றின்படியேனும் கோரப்பட்டிருந்தாலன்றி அல்லது அதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்தாலன்றி, அவரை அந்தக் கால அளவிற்கு மேற்கொண்டு காவலில் வைத்திருத்தல் ஆகாது.

பொதுச் சொத்துக்குக் கேடு விளைவிப்பதைத் தடுத்தல்.

152. ஒரு காவல் அலுவலர் தம் பார்வையில், அசையும் அல்லது அசையாப் பொதுச் சொத்து எதற்கும் கேடு விளைக்க முயற்சிப்பதையோ, பொது நில எல்லைக்குறி அல்லது நீர்ப்பயணத்தில் பயன்படுத்தப்படும் மிதவை அல்லது பிற குறி எதையும் அகற்றுவதையோ, அதற்குக் கேடு விளைவிப்பதையோ தடுப்பதற்காகத் தம் அதிகாரத்தைக் கொண்டே குறுக்கிடலாம்.

எடைகளையும், அளவைகளையும் ஆய்வு செய்தல்.

153. (1) காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் எவரும், அத்தகைய நிலையத்தின் அதிகார எல்லைக்குள் உள்ள எந்த இடத்திலேனும் கள்ளத்தனமான எடைகள், அளவைகள் அல்லது எடை போடுவதற்கான கருவிகள் எவையேனும் இருக்கின்றன என்பதாகத் தாம் நம்புவதற்குக் காரண மிருக்கும் போதெல்லாம் அங்கு பயன்படுத்தப்படும் அல்லது வைத்திருக்கப்படும் எடைகள் அல்லது அளவைகள் அல்லது எடை போடுவதற்கான கருவிகள் எவற்றையேனும் ஆய்வு செய்வதற்காக அல்லது சோதனையிடுவதற்காக அத்தகைய இடம் எதற்குள்ளும் கட்டளையில்லாமல் புகலாம்.

(2) அவர் அத்தகைய இடத்தில் கள்ளத்தனமான எடைகள், அளவைகள், அல்லது எடை போடுவதற்கான கருவிகள் எவற்றையேனும் காண்பாராயின், அவற்றைக் கைப்பற்றலாம்; மற்றும் அவர் அவ்வாறு கைப்பற்றியதைப் பற்றி, அதிகாரம் கொண்டுள்ள ஒரு நடுவருக்கு உடனடி யாகத் தகவல் கொடுத்தல் வேண்டும்.

அத்தியாயம் XII.

காவல் துறையினருக்குத் தகவல் கொடுத்தலும், புலனுய்வு செய்வதற்கு அவர்களுக்குள்ள அதிகாரங்களும்.

கைது செய்தற்குரிய வழக்குகளின் தகவல் கொடுத்தல்.

154. (1) கைது செய்தற்குரிய குற்றமொன்று செய்யப்பட்டிருப்பது பற்றிய ஒவ்வொரு தகவலும் காவல் நிலையப் பொறுப்பு அலுவலருக்கு வாய்மொழியாகக் கொடுக்கப்படுமானால், அது அவராலோ அவரது உத்தரவின்படியோ எழுதப்படுதல் வேண்டும்; மற்றும் தகவல் கொடுத்தவருக்கு அது படித்துக் காட்டப்படவும் வேண்டும்; மேலும் அத்தகைய ஒவ்வொரு தகவலும் எழுத்து மூலமாகக் கொடுக்கப்பட்டதாயினும், அல்லது மேற்சொன்னவாறு எழுதப்பட்டதாயினும், அதைக் கொடுக்கின்றவரால் கையொப்பமிடப்பட வேண்டும்; மேலும் மாநில அரசு இதற்கெனக் குறிப்பிடலாகும் படிவத்தில் அத்தகைய அலுவலர் வைத்து வர வேண்டிய ஒரு குறிப்பேட்டில் அத்தகவலின் சாராம்சம் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(2). (1) ஆவது உட்பிரிவின்படி பதிவு செய்யப்பட்ட வாய்மொழி தகவலின் நகலொன்று, தகவல் கொடுத்தவருக்குக் கட்டணமின்றி உடனடியாகக் கொடுக்கப்பட வேண்டும்.

(3). (1) ஆவது உட்பிரிவில் குறிப்பிட்ட தகவலைப் பதிவு செய்ய காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் மறுத்ததால் குறையுற்ற எவரும், அத்தகைய தகவலின் சாராம்சத்தை சம்பந்தப்பட்ட காவல் கண்காணிப்பாளருக்கு எழுத்தில் அஞ்சல் மூலமாக அனுப்பலாம்; அவருக்கு அத்தகைய தகவல், கைது செய்தற்குரிய குற்றமொன்று செய்யப்பட்டிருப்பதைப் புலப்படுத்துகிறது என்று திருப்தியேற்பட்டால், இந்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்ட முறையில் தாமே அவ்வழக்கைப் புலனுய்வு செய்தல் வேண்டும்; அல்லது தமக்குக் கீழ்ப்பட்ட காவல் அலுவலர் எவரேனும், புலனுய்வு செய்வதற்கு உத்தரவிட வேண்டும்; மற்றும் அத்தகைய அலுவலர் அந்தக் குற்றத்தைப் பொறுத்தமட்டில் காவல் நிலையப் பொறுப்பு அலுவலருக்குள்ள அதிகாரங்கள் அனைத்தையும் உடையவராயிருப்பார்.

கைது செய்தற்குரியதல்லாத வழக்குகள் பற்றித் தகவல் கொடுத்தலும்.

155. (1) காவல் நிலையப் பொறுப்பு அலுவலரின் அதிகார எல்லைக்குள் கைது செய்தற்குரியதல்லாத குற்றமொன்று செய்யப்பட்டிருப்பது பற்றி அவருக்குத் தகவல் கொடுக்கப்படும்போது, அவர் அந்தத் தகவலின் சாராம்சத்தை மாநில

அத்தகைய வழக்குகளைப் புலனுய்வு செய்ததும்.

அரசு இதற்கென நிர்ணயிக்கலாகும் படிவத்தில் தாம் வைத்து வரவேண்டிய ஒரு குறிப்பேட்டில், பதிவு செய்து அல்லது செய்வித்து, தகவல் கொடுத்தவரை நடுவரிடம் சாட்டிவிட வேண்டும்.

(2) கைது செய்தற்குரியதல்லாத வழக்கொன்றை விசாரணை செய்யவோ, அவ்வழக்கை மேல்விசாரணைக்கனுப்பி வைக்கவோ அதிகாரம் கொண்டுள்ள நடுவரொருவரின் கட்டளையின்றி, காவல் அலுவலர் எவரும் அத்தகைய வழக்கைப் புலனுய்வு செய்தல் ஆகாது.

(3) அத்தகைய கட்டளையைப் பெறுகின்ற காவல் அலுவலர் எவரும், புலனுய்வு சம்பந்தமாக, காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் ஒருவர் கைது செய்தற்குரிய வழக்கில் செலுத்தக்கூடிய (பிடிகட்டளையில்லாமல் கைது செய்யும் அதிகாரம் தவிர) அதே அதிகாரங்களைச் செலுத்தலாம்.

(4) ஒரு வழக்கு, இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட குற்றங்களைப் பற்றியதாயிருந்து, அவற்றில் குறைந்தது ஒன்றேனும் கைது செய்தற்குரிய குற்றமாக இருக்குமிடத்து, பிற குற்றங்கள் கைது செய்தற்குரியதல்லாத குற்றங்களாக இருந்தாலுங்கூட அவ்வழக்கு கைது செய்தற் குரிய வழக்காகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

கைது செய்தற் குரிய வழக்கைப்புலனுய்வு செய்வதற்குக் காவல் அலுவலருக்குள்ள அதிகாரம்.

156. (1) கைது செய்தற்குரிய எந்த வழக்கை XIII ஆவது அத்தியாயத்தின் வகைமுறைகளின்படி பரிசீலனை செய்யவோ விசாரணை செய்யவோ ஒரு காவல் நிலையத்தின் அதிகார எல்லைக்குள் அமைந்த வட்டாரப் பகுதியில் உள்ள நீதி மன்றத்திற்கு அதிகாரமிருக்கிறதோ, அந்த வழக்கை அந்தக் காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் எவரும், நடுவரொருவரின் கட்டளையில்லாமலே புலனுய்வு செய்யலாம்.

(2) இந்தப் பிரிவின்படி புலனுய்வு செய்வதற்கு அதிகாரம் கொடுக்கப்பெற்றிராத ஒரு அலுவலால் வழக்கு புலனுய்வு செய்யப்பட்டது என்னும் காரணத்தின்பேரில் அத்தகைய வழக்கில் அத்தகைய காவல் அலுவலர் எடுத்த நடவடிக்கை எதையும் எந்தக் கட்டத்திலும் ஆட்சேபித்தல் ஆகாது.

(3) 190 ஆவது பிரிவின்படி அதிகாரமளிக்கப்பட்ட நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) எவரும், மேலே சொன்னவாறு புலனுய்வு செய்வதற்கு உத்தரவிடலாம்.

புலனுய்வுக்கான நடைமுறை

157. (1) கிடைத்த தகவலிலிருந்தோ வேறுவிதமாகவோ காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் ஒருவர் 156 ஆவது பிரிவின்படி எந்தக் குற்றத்தைப் புலனுய்வு செய்ய தாம் அதிகாரமளிக்கப்பட்டுள்ளாரோ அந்தக் குற்றம் எதுவும் செய்யப்பட்டிருப்பதாகச் சந்தேகிக்கக் காரணமிருக்கு மானால், அவர், காவலறிக்கையின்பேரில் அத்தகைய குற்றத்தை விசாரணை செய்வதற்கு அதிகாரமளிக்கப் பட்டுள்ள நடுவருக்கு அதைக் குறித்து உடனடியாக அறிக்கை செய்தல் வேண்டும்; மற்றும் வழக்கின் சங்கதிகளையும் சூழ்நிலை களையும் புலனுய்வு செய்வதற்கும், அவசியமானால், குற்றவாளியைக் கண்டுபிடித்துக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்குமாக, இடத்திற்கே நேர்முக மாகச் செல்லுதல் வேண்டும்; அல்லது மாநில அரசு, பொது அல்லது சிறப்புக் கட்டளை மூலமாக, இதற்கென நிர்ணயிக்கும் பதவிநிலைக்குக் கீழ்ப்படாதவரும் தமக்குக் கீழ்ப்பட்டுள்ள வருமான அலுவலர்களில் ஒருவரைத் தம் சார்பாகச் செல்ல அனுப்பிவைக்க வேண்டும்;

ஆனால், (அ) அத்தகைய குற்றம் எதையாவது செய்ததாக ஒருவருக்கு விரோதமாக அவரது பெயரைக் குறித்துத் தகவல் கொடுக்கப்படும்போதும், அந்தக் குற்றத்தின் தன்மை கடுமையானதாக இல்லாதபோதும், ஒரு காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் அந்த இடத்திலேயே புலனுய்வு செய்வதற்காக நேர்முகமாகச் செல்வதோ, கீழ்ப்பட்ட அலுவலர் ஒருவரைத் தம் சார்பாக அனுப்புவதோ தேவையில்லை;

(ஆ) புலனுய்வு செய்ய தலைப்படுவதற்குப் போதுமான காரணம் ஏதுமில்லை என்பதாக ஒரு காவல் நிலையப் பொறுப்பு அலுவலருக்குத் தோன்றுமானால், அவர் அந்த வழக்கைப் புலனுய்வு செய்தல் ஆகாது.

(2). (1) ஆவது உட்பிரிவிற்கான விலக்கின் (அ) மற்றும் (ஆ) கூறுகளில் சொல்லப்பட்ட சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிலும், காவல் நிலையப் பொறுப்பு அலுவலர், தாம் அந்த உட்பிரிவின் கோரிக்கைகளுக்கு முழுமையாக இணங்கி நடக்காமைக்கான காரணங்களைத் தமது அறிக்கையில் உரைத்தல் வேண்டும்; மற்றும் மேற்சொன்ன விலக்கின் (ஆ) கூறில் சொல்லப்பட்ட சந்தர்ப்பத்தில், அந்த அலுவலர் தாம் அவ்வழக்கைப் புலனுய்வு செய்வதாக இல்லை அல்லது

செய்விப்பதாக இல்லை என்ற சங்கதியை, தகவல் கொடுத்தவர் எனேனுமிருப்பின் அவருக்கு மாநில அரசு விதிக்கலாகும் முறையில் உடனடியாக அறிவிக்க வேண்டும்.

அறிக்கையை எவ்வாறு பணிந்தனுப்புவது என்பது.

158. (1) 157 ஆவது பிரிவின்படி நடுவரொருவருக்கு அனுப்பப்பட்ட ஒவ்வொரு அறிக்கையும், மாநில அரசு அவ்வாறு உத்தரவிடுமாலல், அந்த அரசு பொது அல்லது சிறப்புக் கட்டளை மூலமாக அதற்கென அமர்த்தும் மேல்நிலைக் காவல் அலுவலர் மூலமாகப் பணிந்தனுப்பப்பட வேண்டும்.

(2) அத்தகைய மேல்நிலை அலுவலர் தாம் பொருத்தமெனக் கருதும் அறிவுறுத்தல்களைக் காவல் நிலையப் பொறுப்பு அலுவலருக்குத் தரலாம்; மற்றும் அந்த அறிக்கையில் அத்தகைய அறிவுறுத்தல்களைப் பதிவு செய்ததற்குப் பின்பு காமதமின்றி அதை நடுவருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

புலனாய்வு அல்லது முதல் நிலை விசாரணை செய்வதற்கான அதிகாரம்.

159. அத்தகைய நடுவர், அந்த அறிக்கை கிடைத்ததன் பேரில் புலனாய்வு செய்ய உத்தரவிடலாம்; அல்லது தாம் பொருந்தமென நினைத்தால் இந்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்ட முறையில் அவ்வழக்கை முதல்நிலை விசாரணை செய்யவோ, வேறுவிதமாக முடிவு செய்யவோ, உடனடியாக முற்படலாம்; அல்லது தமக்குக் கீழ்ப்பட்ட நடுவர் எவரையும் அவ்வாறு செய்ய தம் சார்பாக அனுப்பி வைக்கலாம்.

சாட்சிகள் ஆஜராவதைக் கோருவதற்குக் காவல் அலுவலருக்குள்ள அதிகாரம்.

160. (1) கொடுக்கப்பட்ட தகவலிலிருந்தோ வேறு விதமாகவோ வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளுடன் பரிச்சயம் உள்ளவராகத் தோன்றுகிறவர் எவரேனும் தம் அதிகார எல்லைக்குள் அல்லது அடுத்துள்ள நிலையத்தின் அதிகார எல்லைக்குள் இருப்பாராலல், அவரைத் தம் முன் ஆஜராகுமாறு இந்த அத்தியாயத்தின்படி புலனாய்வு செய்கிற காவல் அலுவலர் எவரும் எழுத்து மூலமாக உத்தரவிட்டுக் கோரலாம்; மற்றும் அத்தகையவரும் அவ்வாறு கோரப்பட்ட படியே ஆஜராதல் வேண்டும்:

ஆனல், ஒரு பெண்ணையோ பதினைந்து வயதிற்குக் கீழ்ப்பட்ட ஓர் ஆணையோ அந்தப் பெண் அல்லது ஆண் குடியிருக்கும் இடமல்லாத வேறெந்த இடத்திற்கும் ஆஜராகுமாறு கோருதல் ஆகாது.

(2) தம் குடியிருப்பிடமல்லாத வேறெந்த இடத்திலேனும் (1) ஆவது உட்பிரிவின்படி ஆஜராகிற ஒவ்வொருவருக்கும் ஏற்படும் நியாயமான செலவுகளைத் காவல் அலுவலர் கொடுப்பதற்கு மாநில அரசு இதற்கெனச் செய்யப்பெறும் விதிகள் மூலமாக வகை செய்யலாம்.

சாட்சிகளைக் காவல துறை யினர் விசாரித் தல்.

161. (1) இந்த அத்தியாயத்தின்படி புலனாய்வு செய்கிற காவல் அலுவலர் எவரும், அல்லது மாநில அரசு பொது அல்லது பிறப்புக் கட்டளை மூலமாக இதற்கென நிர்ணயிக்கும் பதவிநிலைக்குக் கீழ்ப்படாதவராகவும், அத்தகைய அலுவலரின் கோரிக்கையின்பேரில் செயலாற்றுகின்றவருமான காவல் அலுவலர் எவரும், வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளுடன் பரிச்சயம் உள்ளவராக அனுமானிக்கப்படும் எவரையும் வாய்மொழியாக விசாரிக்கலாம்.

(2) அத்தகையவர் எந்தக் கேள்விகளுக்குப் பதிலளித்தால் அந்தப் பதில்கள் ஒரு குற்றச்சாட்டுக்கோ தண்டத்திற்கோ தண்ட இழப்புக்கோ அவரை ஆளாக்கும் முனைப்பைக்கொண்டிருக்குமோ அந்தக் கேள்விகளைத் தவிர, அத்தகைய வழக்கின் தொடர்பாக வேறு கேள்விகளை அந்த அலுவலர் கேட்பாராஞல், அவை அனைத்திற்கும் அவர் உண்மையுடன் பதிலளிக்கக் கட்டுப்பட்டவராவார்.

(3) இந்தப் பிரிவின்படி செய்யப்படும் விசாரணையின் போது காவல் அலுவலரிடம் கொடுக்கப்படும் வாக்குமூலம் எதையும் அவர் எழுதிக்கொள்ளலாம்; அவர் அவ்வாறு எழுதுவாராஞல், அவர் எவரெவரின் வாக்குமூலத்தைத் தாம் பதிவு செய்கிறாரோ அவர் ஒவ்வொருவரின் வாக்குமூலத்தையும் தனித்தனியாகவும் சரியாகவும் பதிவு செய்தல் வேண்டும்.

காவல் துறை யினரிடம் கொடுக்கப்படும் வாக்குமூலங் களுக்கும் கை யொப்பமிடுதல் ஆகாது. சாட்சியத்தில் வாக்கு மூலங் களைப் பயன் படுத்துதல்.

162. (1) இந்த அத்தியாயத்தின்படி நடக்கும் புலனாய்வின் போது காவல் அலுவலரிடம் கொடுக்கப்படும் வாக்குமூலம் எதுவும், அது எழுத்தில் வடிக்கப்படுமானால், வாக்குமூலத்தைக் கொடுக்கின்றவர் அதில் கையொப்பமிடுதல் ஆகாது; அவ்வாறே அத்தகைய வாக்குமூலமோ அதன் பதிவுக் குறிப்போ அது காவல் குறிப்பேட்டிலிருந்தாலும் சரி வேறுவிதமாகயிருந்தாலும் சரி, அல்லது அத்தகைய வாக்குமூலம் அல்லது அதன் பதிவுக்குறிப்பின் பகுதியோ, அந்த வாக்குமூலம் கொடுக்கப்பட்ட காலத்தில் புலனாய்வினிருந்த குற்றம் எதனையும் பற்றிய விசாரணையில் அல்லது

விசாரணையில் இதற்குப் பின் வகை செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் தவிர, எந்தக் காரணத்திற்காகவும் பயன்படுத்தப் படுதல் ஆகாது :

ஆனால், எந்தச் சாட்சியின் வாக்குமூலம் மேற் சொன்னவாறு எழுத்தில் வடிக்கப்பட்டுள்ளதோ அந்தச் சாட்சி அத்தகைய பரிசீலனை அல்லது விசாரணையில் வாதி தரப்பில் அழைக்கப்படும்போது, அவரது வாக்குமூலத்தின் எந்தப் பகுதியேனும் முறைப்படி நிரூபிக்கப்படுமானால், எதிரியும், நீதிமன்றத்தின் அனுமதியுடன், அரசு தரப்பும், 1/1872. 1872 ஆம் ஆண்டு இந்தியச் சாட்சியச் சட்டத்தின் 145 வது பிரிவில் வகை செய்யப்பட்ட முறையில் அத்தகைய சாட்சியின் வாக்குமூலத்தை மறுப்பதற்காக அதைப் பயன் படுத்தலாம்; மற்றும், அத்தகைய வாக்குமூலத்தின் எந்தப் பகுதியேனும் அவ்வாறு பயன்படுத்தப்படும்போது, அதன் பகுதி எதையும் அத்தகைய சாட்சியின் மறுவிசாரணையிலும் கூடப் பயன்படுத்தலாம்; ஆனால் அவரது குறுக்கு விசாரணையில் குறிப்பிடப்பட்ட விஷயம் எதனையும் விளக்கு கின்ற நோக்கத்திற்காக மட்டுமே அவ்வாறு பயன்படுத்தலாம்.

1/1872. (2) இந்தப் பிரிவிலுள்ள எதுவும் 1872 ஆம் ஆண்டு இந்தியச் சாட்சியச் சட்டத்தின் 32 ஆவது பிரிவின் (1) ஆவது கூறின் வகைமுறைகளுக்குள் வருகின்ற வாக்குமூலமெதனின் மீதும் இயங்குவதாகவோ, அந்தச் சட்டத்தின் 27 ஆவது பிரிவின் வகைமுறைகளைப் பாதிப்பதாகவோ கொள்ளுதல் ஆகாது.

விளக்கம்.—(1) ஆவது உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட வாக்குமூலத்தில் ஒரு சங்கதி அல்லது சூழ்நிலை சொல்லாமல் விடப்பட்டிருந்தால், எந்தச் சந்தர்ப்பத்தில் அவ்வாறு விடப் பட்டது என்பதைக் கவனத்தில் கொண்டு பார்க்கும்போது, அவ்வாறு விட்ட செயலானது பொருள் பொதிந்ததாகவும் மற்றபடி தொடர்புடையதாகவும் தோன்றுமானால், அது ஒரு முரண்பாடு ஆகலாம்; மற்றும் அவ்வாறு விட்ட செயல் எதுவும், குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் ஒரு முரண்பாடு ஆகிறதா என்பது சங்கதி பற்றிய பிரச்சினையாகும்.

1/1872. தூண்டுதல் எதையும் செய்ய முந் படுதல் ஆகாது. 163. (1) காவல் அலுவலரோ அதிகாரத்திலுள்ள வேறெவருமோ 1872 ஆம் ஆண்டு இந்தியச் சாட்சியச் சட்டத்தின் 24 ஆவது பிரிவில் சொல்லப்பட்டுள்ளபடியான

தூண்டுதல், வெருட்டுதல் அல்லது வாக்குக்கொடுத்தல் எதையும் செய்ய முற்படுதலோ, செய்தலோ, செய்விக்க முற்படுதலோ, செய்வித்தலோ ஆகாது.

(2) ஆனால் இந்த அத்தியாயத்தின்படி நடக்கும் புலனுய்வின்போது தம் இச்சையாகவே ஒருவர் வாக்குமூலம் கொடுக்க முனைந்தால், அவ்வாறு கொடுப்பதைக் காவல் அலுவலர் அல்லது வேறெவரும் எச்சரிக்கை மூலமாகவோ வேறுவிதமாகவோ தடுத்தல் ஆகாது :

ஆனால், இந்தப் பிரிவிலுள்ள எதுவும் 164 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் வகைமுறைகளைப் பாதித்தல் ஆகாது.

ஒப்புதல்வாக்கு மூலங்களையும், வாக்கு மூலங்களையும் பதிவு செய்தல்.

164. (1) பெருநகர் நடுவர் அல்லது நிதித்துறை நடுவர் எவரும், வழக்கை நடத்தத் தமக்கு அதிகாரமிருந்தாலும் இல்லையென்றாலும், அந்த அத்தியாயத்தின்படியோ அல்லது அமலிலுள்ள வேறெந்தச் சட்டத்தின்படியோ நடக்கும் புலனுய்வின்போது, அல்லது அதற்குப் பின்பும் பரிசிலனை அல்லது விசாரணை தொடங்குவதற்கு முன்புமான எந்தக் காலத்திலும் தம்மிடம் கொடுக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் அல்லது வாக்குமூலம் எதையும் பதிவு செய்யலாம் :

ஆனால், அவ்வப்போது அமலிலுள்ள சட்டத்தின்படி நடுவருக்குள்ள அதிகாரம் எதுவும் வழங்கப்பட்டுள்ள காவல் அலுவலர் ஒருவர் ஒப்புதல் வாக்குமூலம் எதையும் பதிவு செய்தல் ஆகாது.

(2) நடுவர் (மாஜிஸ்ட்ரேட்), அத்தகைய ஒப்புதல் வாக்குமூலம் எதையும் பதிவு செய்வதற்கு முன்பு, அதைக் கொடுக்கின்றவருக்கு அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கக் கட்டுப்பட்டவரல்ல என்றும், அவர் அவ்வாறு கொடுப்பாராஞல், அவருக்கு விரோதமாக அது சாட்சியமாகப் பயன்படுத்தப்படலாம் என்றும் விளக்குதல் வேண்டும்; மற்றும் அத்தகைய ஒப்புதல் வாக்குமூலம் எதையும் கொடுக்கின்றவரை வினவுவதன்மூலம் அது தம்மிச்சையாகவே கொடுக்கப்படுகிறது என்பதாகத் தாம் நம்புவதற்குக் காரணமிருந்தாலல்லாமல், நடுவர் அதைப் பதிவு செய்தல் ஆகாது.

(3) ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்படுவதற்கு முன்பு எக்காலத்திலேனும் நடுவர் முன் ஆஜராகிற ஒருவர் ஒப்புதல் வாக்குமூலத்தைத் தாம் கொடுக்க விரும்பவில்லை யென்று உரைப்பாராஞல், நடுவர் அவரைக் காவல் துறையின் பாதுகாவலில் வைத்திருப்பதற்கு அதிகாரமளித்தல் ஆகாது.

(4) அத்தகைய ஒப்புதல் வாக்குமூலம் எதையும், எதிரியின் விசாரணையைப் பதிவு செய்வதற்காக, 281 ஆவது பிரிவில் வகைசெய்யப்பட்ட முறையில் பதிவு செய்தல் வேண்டும்; மற்றும் அது அந்த வாக்குமூலத்தைக் கொடுக் கின்றவரால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்; நடுவர், அப் பதிவுக்குறிப்பின் அடியில் பின்வரும்படிக்குக் குறிப் பொன்றை எழுதுதல் வேண்டும்:—

"(பெயர்) என்பவருக்கு, அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கக் கட்டுப்பட்டவரல்ல என்றும் அவர் அவ்வாறு கொடுப்பாராஞல், அவர் கொடுக்கக்கூடிய ஒப்புதல் வாக்கு மூலம் எதுவும் அவருக்கு விரோதமான சாட்சியமாகப் பயன் படுத்தப்படலாம் என்றும் நான் விளக்கியுரைத்துள்ளேன்; மற்றும் இந்த ஒப்புதல் வாக்குமூலம் தம்மிச்சையாகவே கொடுக்கப்பட்டது என்றும் நான் நம்புகிறேன். அது என் முன்னிலையிலும் நான் கேட்கும்படியாகவும் எடுக்கப்பட்டது; அதைக் கொடுக்கின்றவருக்குப் படித்துக் காட்டப்பட்டு, சரியாக இருப்பதாக அவரால் ஒத்துக்கொள்ளப்பட்டது; மேலும் அவரால் கொடுக்கப்பட்ட வாக்குமூலத்தின் முழுமை யானதும் உண்மையானதுமான விவரம் அதில் அடங்கி யுள்ளது.

(ஒப்பம்) அ. ஆ.
நடுவர்."

(5). (1) ஆவது உட்பிரிவின்படி கொடுக்கப்பட்ட (ஒப்புதல் வாக்குமூலம் அல்லாத) வாக்குமூலம் எதுவும், சாட்சியத்தைப் பதிவு செய்வதற்காக இதற்குப் பின் வகை செய்யப்பட்டதும், நடுவரது கருத்தின்படி அந்தச் சூழ்நிலை களுக்குப் பொருத்தம் மிக்கதாகவுள்ளதுமான முறையில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் எவரது வாக்கு மூலம் அவ்வாறு பதிவு செய்யப்படுகிறதோ அவருக்கு, நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) பிரமாணம் செய்துவைக்கும் அதிகாரத்தைக் கொண்டிருப்பார்.

(6) இந்தப் பிரிவின்படி ஒப்புதல் வாக்குமூலம் அல்லது வாக்குமூலத்தைப் பதிவு செய்கின்ற நடுவர், எந்த நடுவரால் அவ் வழக்கு பரிசீலனை அல்லது விசாரணை செய்யப்பட வேண்டுமோ அவருக்கு அதை அனுப்பிவைத்தல் வேண்டும்.

காவல் அலுவலர் சோதனை யிடுதல்.

165. (1) புலனாய்வைச் செய்கின்ற காவல் நிலையப் பொறுப்பதிகாரியோ காவல் அலுவலரோ, எந்தக் குற்றத்தைப் புலனாய்வு செய்யத் தமக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அதைப் புலனாய்வு செய்வதற்கு அவசியமாக இருக்கும் எதுவும், தாம் பொறுப்பு கொண்டுள்ள அல்லது தாம் நியமிக்கப்பட்டுள்ள காவல் நிலையத்தின் எல்லைக்குள் இருக்கின்ற எந்த இடத்திலேனும் காணப்படக்கூடும் என்றும், தம் கருத்தின்படி அப் பொருளை மிகையான தாமதமின்றி வேறுவிதமாகப் பெற முடியாது என்றும் தாம் நம்புவதற்கு நியாயமான காரணம் பெற்றிருக்கும்போதெல்லாம், அத்தகைய அலுவலர் தம் நம்பிக்கைக்கான ஆதாரங்களை எழுத்து மூலம் பதிவு செய்து, கூடுமானவரை சோதனை யிடப்படவேண்டிய பொருளை அத்தகைய எழுத்து மூலம் குறிப்பிட்டதற்குப் பின்பு அந்தகைய நிலையத்தின் எல்லைக்குள் இருக்கின்ற எந்த இடத்திலும் அப்பொருளுக்காகச் சோதனையிடலாம் அல்லது சோதனையிடும்படி செய்யலாம்.

(2) (1) ஆவது உட்பிரிவின்படி நடவடிக்கை எடுக்கின்ற காவல் அலுவலர் ஒருவர், சாத்தியமானால், அந்தச் சோதனையைத் தாமே நடத்துதல் வேண்டும்.

(3) அவர் அந்தச் சோதனையைத் தாமே நடத்த இயலாமலும், அந்த நேரத்தில் சோதனை போடுவதற்குத் தகுதி வாய்ந்த வேறெவரும் அங்கு இல்லாமலும் இருந்தால், அவர் தாம் அவ்வாறு செய்வதற்கான காரணங்களை எழுத்து மூலமாகப் பதிவு செய்ததற்குப் பின்பு, தமக்குக் கீழ்ப்பட்ட எந்த அலுவலரையும் சோதனை போடும்படி கோரலாம்; மற்றும் சோதனை போடவேண்டிய இடத்தையும், இயன்ற வரை எந்தப் பொருளுக்காகச் சோதனை போடவேண்டியிருக்கிறதோ அந்தப் பொருளையும் குறிப்பிட்டு, அத்தகைய கீழ்நிலை அலுவலருக்கு எழுத்து மூலமான உத்தரவொன்றை அவர் கொடுத்தல் வேண்டும்; மற்றும் அதன்பேரில் அத்தகைய கீழ்நிலை அலுவலர் அந்த இடத்தில் அத்தகைய பொருளுக்காகச் சோதனை போடலாம்.

(4) சோதனைக் கட்டளைகள் பற்றி இச்சட்டத்திலுள்ள வகைமுறைகளும் சோதனை பற்றி 100 ஆவது பிரிவில் அடங்கியுள்ள பொது வகைமுறைகளும் கூடுமானவரை இந்தப் பிரிவின்படிச் செய்யப்படும் சோதனையின்மீது இயங்குதல் வேண்டும்.

(5). (1) ஆவது உட்பிரிவு அல்லது (3) ஆவது உட்பிரிவின்படி செய்யப்பட்ட பதிவுக்குறிப்பின் நகல்கள், குற்றத்தை விசாரணை செய்ய அதிகாரமளிக்கப்பட்டுள்ள மிகவும் அருகிலுள்ள நடுவருக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்பட வேண்டும்; மற்றும், சோதனையிடப்பட்ட இடத்தின் உரிமையாளர் அல்லது அனுபோகதாரின் விண்ணப்பத்தின்பேரில் நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) அதன் நகலொன்றை அவருக்குக் கட்டணமின்றி அளித்தல் வேண்டும்.

காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் மற்றொருவரை எப்போது சோதனைக் கட்டளை பிறப்பிக்குமாறு கோரலாம் என்பது.

166. (1) புலனுய்வைச் செய்கிற காவல் நிலையப் பொறுப்பு அலுவலரோ, துணை ஆய்வாளரின் நிலைக்குக் கீழ்ப்படாத ஒரு காவல் அலுவலரோ, எந்த நிலையில் தம் நிலையத்தின் எல்லைக்குள்ளேயே தாம் சோதனை போடச் செய்வித்திருக்கக்கூடுமோ அந்த நிலை எதிலும், அதே மாவட்டத்தில் அல்லது வேறு மாவட்டத்திலுள்ள மற்றொரு காவல் நிலையத்தின் பொறுப்பு அலுவலரை எந்த இடத்திலும் சோதனை போடச் செய்விக்குமாறு கோரலாம்.

(2) அத்தகைய அலுவலர், அவ்வாறு கோரப்பட்டதன் பேரில், 165 ஆவது பிரிவின் வகைமுறைகளின்படி நடவடிக்கை எடுக்கமுற்பட்டு, காணப்பட்ட பொருள் எதேனுமிருப்பின், அதை எந்த அலுவலரின் கோரிக்கையின் பேரில் சோதனை போடப்பட்டதோ அவருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

(3). (1) ஆவது உட்பிரிவின்படி சோதனை போடச் செய்விக்க, மற்றொரு காவல் நிலையப் பொறுப்பு அலுவலரைக் கோருவதால் எற்படும் தாமதத்தின் விளைவாகக் குற்றம் ஒன்று செய்யப்பட்டதற்கான சாட்சியம் மறைக்கப்படும் அல்லது அழிக்கப்படும் என்று நம்புவதற்குக் காரணமிருக்கும்போதெல்லாம் இந்த அத்தியாயத்தின்படி புலனுய்வு எதையேனும் செய்கிற காவல் நிலையப் பொறுப்பு அலுவலர், அல்லது காவல் அலுவலர், 165 ஆவது பிரிவின் வகைமுறைகளுக்கிணங்க மற்றொரு காவல் நிலையத்தின் எல்லைக்குள்

உள்ள இடம் எதனையும், அந்த இடத்தும் காவல் நிலையத்தின் எல்லைக்குள் உள்ளது போன்றே சோதனை போடுதலோ சோதனை போடும்படி செய்தலோ சட்டபூர்வமானதாகும்.

(4). (3) ஆவது உட்பிரிவின்படி சோதனை நடத்துகிற அலுவலர் எவரும், எந்தக் காவல் நிலையத்தின் எல்லைக்குள் அந்த இடம் அமைந்துள்ளதோ அதன் பொறுப்பு அலுவலருக்கு அச்சோதனை பற்றிய அறிவிப்பை உடனடியாக அனுப்புதல் வேண்டும்; மற்றும் அந்தகைய அறிவிப்புடன், 100 ஆவது பிரிவின்படி தயாரிக்கப்பட்ட பட்டியலின் (எதேனுமிருப்பின்) நகலொன்றையும், கூட அனுப்புதல் வேண்டும்; மேலும் 165 ஆவது பிரிவின் (1) மற்றும் (3) ஆகிய உட்பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட பத்திரங்களின் நகல்களையும் அக் குற்றத்தை விசாரணை செய்ய அதிகாரமளிக்கப்பட்டுள்ள மிகவும் அருகிலுள்ள நடுவருக்கு அனுப்புதல் வேண்டும்.

(5). (4) ஆவது உட்பிரிவின்படி நடுவருக்கு (மாஜிஸ்ட்ரேட்) அனுப்பப்பட்ட பத்திரத்தின் நகலொன்றை சோதனையிடப்படும் இடத்தின் உரிமையாளர் அல்லது அனுபோகதாருக்கு விண்ணப்பத்தின் பேரில் கட்டணமின்றி அளித்தல் வேண்டும்.

புலனுய்வை இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் முடிக்க முடியாதபோது நடைமுறை என்ன என்பது.

167. (1) எவரேனும் கைது செய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டிருந்து, 57 ஆவது பிரிவில் நிர்ணயிக்கப்பட்ட இருபத்துநான்கு மணி நேர கால அளவிற்குள் புலனுய்வு முடிக்கப்பட முடியாது எனத் தோன்றுவதுடன், குற்றஞ் சுமத்துதலோ அல்லது அதைப்பற்றிய தகவலோ சரியான அடிப்படை மீதே அமைந்துள்ளது என்பதாக நம்புவதற்கு ஆதாரங்களும் இருக்கின்ற பொதெல்லாம் புலனுய்வைச் செய்கிற காவல் நிலையப் பொறுப்பு அலுவலரோ, காவல் அலுவலரோ துணை ஆய்வாளரின் நிலைக்குக் கீழ்ப்பட்டவராக இல்லையானால் அவர் அவ் வழக்கின் சம்பந்தமாக இதற்குப் பின் குறிப்பிடப்படும் குறிப்பேட்டிலுள்ள குறிப்புகளின் நகலொன்றை மிகவும் அருகிலுள்ள நீதித்துறை நடுவருக்கு உடனடியாக அனுப்புவதுடன், அதே நேரத்தில் எதிரியை அத்தகைய நடுவரிடம் (மாஜிஸ்ட்ரேட்) அனுப்பிவைத்தலும் வேண்டும்.

(2) எதிரி ஒருவர் இந்தப் பிரிவின்படி எந்த நடுவரிடம் அனுப்பிவைக்கப்படுகிறாரோ அந்த நடுவர் அந்த வழக்கை விசாரிக்கத் தமக்கு அதிகாரமிருந்தாலும் இல்லையென்றாலும், தாம் பொருத்தமென நினைக்கும் வகையில் அவ்வப்போது

மொத்தத்தில் பதினைந்து நாட்களுக்கு மேற்படாத ஒரு கால அளவிற்கு எதிரியைக் காவலில் வைப்பதற்கு அதிகாரமளிக்கலாம்; மற்றும் அவ் வழக்கை விசாரிக்கவோ அதை மேல் விசாரணைக்காக அனுப்பவோ தமக்கு அதிகாரம் இல்லை என்பதுடன், மேற்கொண்டு காவலில் வைத்திருப்பது அவசியமில்லை என்றும் நாம் எண்ணுவாராஞல், அத்தகைய அதிகாரம் கொண்டுள்ள நடுவரிடம் எதிரியை அனுப்பி வைப்பதற்கு அவர் கட்டளையிடலாம்.

ஆனல்—

(அ) எதிரியைக் காவல் துறையினரின் பாதுகாவலில் அல்லாமல் பேரவிதமாகப் பதினைந்து நாள் கால அளவிற்கு அப்பாலும் காவலில் வைப்பதற்குப் போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன என்பதாக அந்த நடுவருக்குத் (மாஜிஸ்ட் ரேட்) திருப்திகரமாகத் தெரியுமாஞல், அவர் அவ்வாறே செய்வதற்கு அதிகாரமளிக்கலாம்; ஆனல் எந்த நடுவரும் எதிரியை மொத்தம் அறுபது நாட்களுக்கு மேற்படும் ஒரு கால அளவிற்கு இந்தப் பிரிவின்படி காவலில் வைப்பதற்கு அதிகாரமளித்தல் ஆகாது; மற்றும் மேற்சொன்ன அறுபது நாள் கால அளவு முடிவடைத்ததன் பேரில், எதிரி, ஜாமீன்கொடுக்க விருப்பமுள்ளவராக இருந்து அதைக் கொடுக்கவும் செய்வாராஞல், அவர் ஜாமீன் பேரில் விடுவிக்கப்படவேண்டும்; மேலும் இந்தப் பிரிவின்படி, ஜாமீன்பேரில் விடுவிக்கப்பட்ட ஒவ்வொருவரும் XXXIII ஆவது அத்தியாயத்தின் வகைமுறைகளின்படி அந்த அத்தியாயத்தின் நோக்கங்களைப் பொறுத்தமட்டில் அவ்வாறு விடுவிக்கப்பட்டதாகக் கொள்ளப்படவேண்டும்.

(ஆ) எந்த நடுவரும், எதிரி தம் முன் கொண்டுவரப் பட்டாலன்றி இந்தப் பிரிவின்படி எந்த விதத்திலும் காவலில் வைப்பதற்கு அதிகாரமளித்தல் ஆகாது;

(இ) உயர் நீதி மன்றத்தினுல் இதற்கென சிறப்பு வகையில் அதிகாரமளிக்கப்படாத, இரண்டாவது வகுப்பு நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) எவரும், காவல் துறையினரின் பாதுகாவலில் வைப்பதற்கு அதிகாரமளித்தல் ஆகாது.

விளக்கம்.—(ஆ) பத்தியின்படி கோரப்பட்டவாறு ஒரு நடுவர் முன் எதிரி கொண்டுவரப்பட்டாரா என்பது குறித்து கேள்வி ஏதேனும் எழுமாஞல், காவலில் வைப்பதற்கு

அதிகாரமளிக்கின்ற கட்டளையில்பேரில் அவர் கையொப்பம் இட்டிருப்பதைத் கொண்டு அந்த எதிரி, கொண்டுவரப்பட்டார் என்பதை நிரூபிக்கலாம்.

(3) காவல்துறையினரின் பாதுகாவலில் வைப்பதற்கு இந்தப் பிரிவின்படி அதிகாரமளிக்கிற நடுவர் ஒருவர் தாம் அவ்வாறு செய்வதற்கான காரணங்களைப் பதிவு செய்தல் வேண்டும்.

(4) அத்தகைய கட்டளையைப் பிறப்பிக்கின்ற தலைமை நீதித்துறை நடுவர் அல்லாத வேறெந்த நடுவரும், தம் கட்டளையின் நகலொன்றை, தாம் அதைப் பிறப்பித்ததற்கான காரணங்களுடன், தலைமை நீதித்துறை நடுவருக்கு அனுப்புதல் வேண்டும்.

(5) ஆஜர் கட்டளை வழக்காக நடுவர் ஒருவரால் விசாரிக்கத் தக்கதாய் வழக்கு எதிலும், எதிரி கைது செய்யப் பட்ட தேதியிலிருந்து ஆறு மாத கால அளவிற்குள் புலனாய்வு முடிக்கப்படவில்லையானால் புலனாய்வு செய்கிற அலுவலர், ஆறுமாத கால அளவிற்கு அப்பாலும் புலனாய்வைத் தொடர்ந்து நடத்துவது சிறப்புக் காரணங் களுக்காகவும், நீதியின் நலத்திற்காகவும் அவசியமாக இருக்கிறது என்பதாக நடுவர் திருப்திப்படும்படி செய்தா லன்றி அந்த நடுவர் அக் குற்றத்தை மேற்கொண்டும் புலனாய்வு செய்வதை நிறுத்தி வைக்கும்படி கட்டளையிடவேண்டும்.

(6) குற்றமொன்றை மேற்கொண்டு புலனாய்வு செய்வதை நிறுத்தி வைக்கும் கட்டளை ஏதேனும் (5) ஆவது உட்பிரிவின் படி பிறப்பிக்கப்பட்டிருக்குமிடத்து, செஷன்ஸ் நீதிபதிக்கு, தம்மிடம் செய்துகொள்ளப்பட்ட விண்ணப்பத்தின் பேரிலோ, வேறுவிதமாகவோ, அக் குற்றத்தை மேற்கொண்டும் புலனாய்வு செய்தல் வேண்டும் என்று திருப்தி ஏற்படுமானால், அவர் (5) ஆவது உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட கட்டளையைக் காலி செய்யலாம்; மற்றும் ஜாமீனைப் பற்றியும் பிற விஷயங்களைப் பற்றியும் தாம் குறிப்பிடலாகும் உத்தரவுகளுக்குட்பட்டு, அக் குற்றத்தை மேற்கொண்டு புலனாய்வு செய்வதற்கு அவர் கட்டளையிடலாம்.

மேற்கூறிய காவல் அலுவலர் செய்யும் புலனாய்வு பற்றிய அறிக்கை.

168. கீழ்நிலையிலுள்ள காவல் அலுவலர் எவரேனும் இந்த அத்தியாயத்தின்படி புலனாய்வு ஏதேனும் செய்திருக்கிற போது, அவர் அத்தகைய புலனாய்வின் முடிவு பற்றி, காவல் நிலையப் பொறுப்பு அலுவலருக்கு அறிக்கை செய்தல் வேண்டும்.

சாட்சியம் முன்பு உள்ளதாக இருக்கும்போது எதிரியை விடுவித்தல்.

169. எதிரியை நடுவரிடம் அனுப்பி வைப்பதை நியாயமென நிரூபிக்கப் போதுமான சாட்சியமோ நியாயமான சந்தேகத்திற்கான ஆதாரமோ இல்லை என்பதாக இந்த அத்தியாயத்தின்படி நடத்திய புலனுய்வின்பேரில், காவல் நிலையப் பொறுப்பு அலுவலருக்குத் தோன்றுமானால், அத்தகையவர் காவலில் இருப்பாராஞல், அவரை அந்த அலுவலர் காவல் அறிக்கையின்பேரில் குற்றத்தை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவும் எதிரியை விசாரிக்க அல்லது மேல்விசாரணைக்காக அனுப்பவும் அதிகாரமளிக்கப் பட்டுள்ள நடுவர் முன், கோரப்பட்டால் அல்லது கோரப்படும் போது ஆஜராவதற்கு அந்த அலுவலர் உத்தரவிடுகிறபடி ஜாமீன்தார்களுடனே இல்லாமலோ பத்திரமொன்றை எழுதி வைப்பதன்பேரில் அவரை விடுவித்தல் வேண்டும்.

சாட்சியம் போதுமானதாக இருக்கும் போது வழக்கு கூட நடுவரிடம் அனுப்பவேண்டும் என்பது.

170. (1) மேற்சொன்னபடி போதுமான சாட்சியமோ நியாயமான ஆதாரமோ இருக்கிறது என்பதாக இந்த அத்தியாயத்தின்படி நடத்திய புலனுய்வின்பேரில் காவல் நிலையப் பொறுப்பு அலுவலருக்குத் தோன்றுமானால் காவலில் உள்ள எதிரியை, அத்தகைய அலுவலர் காவல் அறிக்கையின் பேரில் குற்றத்தை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளவும் எதிரியை விசாரிக்க அல்லது அவரை மேல் விசாரணைக்காக அனுப்பவும் அதிகாரமளிக்கப்பட்டுள்ள நடுவரிடம் அனுப்பி வைத்தல் வேண்டும்; அல்லது அக் குற்றமானது ஜாமீனில் விடுங்குற்றமாக இருந்து எதிரியும் ஜாமீன் கொடுக்க இயலுமானால், நிர்ணயிக்கப்பட்ட ஒரு நாளில் அத்தகைய நடுவர்முன் ஆஜராவதற்கும் வேறுவிதமாக உத்தரவிடப்படும் வரை அந்த நடுவர் முன் நாள் தவருமல் அவர் ஆஜராவ தற்குமாக அவரிடமிருந்து ஜாமீன் வாங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

(2) காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் இந்தப் பிரிவின்படி எதிரியை ஒரு நடுவரிடம் அனுப்பிவைக்கும் போது அல்லது நடுவர் முன் அவர் ஆஜராவதற்கான ஜாமீன் வாங்கிக் கொள்ளும்போது, அந்த நடுவர் முன் தாக்கல் செய்வதற்கு அவசியமாகும் ஆயுதம் அல்லது பிற உருப்படி எதையும் அவருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்; மற்றும் முறையிடுபவரையும் (எவரேனுமிருப்பின்) அவ் வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளுடன் பரிச்சயம் கொண்டுள்ள வர்களாக அத்தகைய அலுவலருக்குத் தோன்றுகிறவர்களில் அவர் அவசியமென நினைக்கக்கூடிய அத்தனை பேர்களையும்

அதில் உத்தரவிட்டபடி அந்த நடுவர் முன் ஆஜராகி எதிரிக்கு விரோதமாக உள்ள குற்றச்சாட்டின் விஷயத்தில் வழக்குத் தொடர்வதாக அல்லது (நிலவரத்திற்கேற்ப) சாட்சியம் அளிப்பதாக ஒரு பத்திரத்தை எழுதிக் கொடுக்குமாறு கோர வேண்டும்.

(3) அந்தப் பத்திரத்தில் தலைமை நீதித்துறை நடுவரின் நீதிமன்றம் குறிப்பிடப்பட்டிருக்குமானால், பரிசீலனைக் காகவோ விசாரணைக்காகவோ அவ் வழக்கை அத்தகைய நடுவர் எந்த நீதிமன்றத்திற்குச் சாட்டிவிடக்கூடுமோ அந்த நீதிமன்றம் எதுவும் மேற்சொன்ன நீதிமன்றத்தில் உள்ளடங்கியதாகக் கொள்ளப்பட வேண்டும்; அதால் அவ்வாறு கொள்ளப்படுவதற்கு அத்தகைய சாட்டுதல் பற்றி நியாயமான அறிவிப்பு, முறையிடுபவருக்கோ அத்தகையவர் களுக்கோ கொடுக்கப்படுதல் வேண்டும்.

(4) எந்த அலுவலரின் முன்னிலையில் அந்தப் பத்திரம் எழுதிக் கொடுக்கப்படுகிறதோ அந்த அலுவலர், அதை எழுதிக் கொடுத்தவர்களில் ஒருவருக்கு அதன் நகலொன்றைக் கொடுத்தல் வேண்டும்; மற்றும் அதன்பின், மூலத்தை தம் அறிக்கையுடன் நடுவருக்கு அனுப்புதல் வேண்டும்.

முறையிடுபவரையும் சாட்சிகளையும் காவல் அலுவலருடன் செல்லுமாறு கோருதலும், அவர்களது தலைகளுக்கு உப்பதேதும் தரும் ஆகாது என்பது பற்றி.

171. முறையிடுபவர் அல்லது சாட்சி எவரும் நீதி மன்றத்திற்குத் தாம் செல்லும் வழியில் ஒரு காவல் அலுவலரோடு கூடச் செல்லுமாறு கோரப்படுதலோ அனுவியமான தடை அல்லது வசதிக்குறைவுக்கு உட்படுத் தப்படுதலோ, ஆஜராவதற்குத் தமது ஜாமீன்பேரில்லாமல் வேறுவிதமாக ஜாமீன் எதையும் தருமாறு கோரப்படுதலோ ஆகாது :

ஆனால், முறையிடுபவர் அல்லது சாட்சி எவரேனும் 170 ஆவது பிரிவில் உத்தரவிடப்பட்டவாறு ஆஜராகவோ பத்திரமொன்றை எழுதிக் கொடுக்கவோ மறுப்பாரானால், காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் அவரைக் காவலில் இட்டு நடுவரிடம் அனுப்பி வைக்கலாம்; அந்த நடுவர் அந்தகைய பத்திரத்தை அவர் எழுதிக் கொடுக்கும்வரை, அல்லது வழக்கின் விசாரணை முடிவடையும்வரை அவரைக் காவலில் வைத்திருக்கலாம்.

புலனாய்வில் எடுக்கும் நடவடிக்கைகளின் நாட்குறிப்பு.

172. (1) இந்த அத்தியாயத்தின்படி புலனாய்வு செய்கிற காவல் அலுவலர் ஒவ்வொருவரும், புலனாய்வில் தாம் எடுக்கும் நடவடிக்கைகளை ஒரு நாட்குறிப்பில் அந்தந்த நாளில், தமக்கு வந்து சேர்ந்த நேரம், தம் புலனாய்வைத் தாம் ஆரம்பித்த நேரம், முடித்த நேரம், தாம் பார்வையிட்ட இடம் அல்லது இடங்கள் மற்றும் தம் புலனாய்வின் மூலம் நிச்சயிக்கப்பட்ட விவரங்களைப் பற்றிய குறிப்பு ஆகியவற்றைப் பதிவு செய்து வருதல் வேண்டும்.

(2) குற்றவழக்கு நீதிமன்றம் எதுவும், அந்த நீதிமன்றத்தில் பரிசீலனை அல்லது, விசாரணையிலுள்ள வழக்கு சம்பந்தமான காவல் நாட்குறிப்புகளைத் தருவிக்கலாம்; மற்றும் அத்தகைய நாட்குறிப்புகளை அவ் வழக்கில் சாட்சியமாக அல்லாமல், ஆனால் அத்தகைய பரிசீலனை அல்லது விசாரணையில் அந் நீதிமன்றத்திற்கு உதவும் வகையில் பயன்படுத்தலாம்.

(3) எதிரிக்கோ அவரது முகவர்களுக்கோ (ஏஜண்ட்) அத்தகைய நாட்குறிப்புகளை வரவழைக்கும் உரிமை கிடையாது; அவற்றை நீதிமன்றம் பார்வையிட்டிருக்கிறது என்ற காரணத்தால் மட்டுமே அவற்றைப் பார்ப்பதற்கும் அவருக்கோ அவர்களுக்கோ உரிமை கிடையாது; ஆனால் அவற்றை எழுதிய காவல் அலுவலர் நினைவுபடுத்திக் கொள்வதற்காக அவற்றைப் பயன்படுத்துவாரானால், அல்லது அத்தகைய காவல் அலுவலரின் கூற்றை மறுப்படுத்தும் நோக்கத்திற்காக நீதிமன்றம் அவற்றைப் பயன்படுத்துமானால், 1872 ஆம் ஆண்டு இந்தியச் சாட்சியச் சட்டத்தின் 161 ஆவது பிரிவு அல்லது 145 ஆவது பிரிவின் வகைமுறைகள் நிலவரத்திற்கேற்ப, இயங்குதல் வேண்டும். 1/1872.

புலனாய்வை முடித்ததன் பேரில் காவல் அலுவலர் அறிக்கை அனுப்ப வேண்டும் என்பது.

173. (1) இந்த அத்தியாயத்தின்படி செய்யப்படும் புலனாய்வு ஒவ்வொன்றும் அவசியமான தாமதமின்றி முடிக்கப்படவேண்டும்.

(2). (i) அது முடிக்கப்பட்ட உடனேயே, காவல் அறிக்கையின் பேரில் குற்றத்தை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள அதிகாரமளிக்கப்பட்டுள்ள நடுவருக்கு, பின்வரும் விவரங்களைச் சொல்லி, மாநில அரசால் நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் அறிக்கையொன்றை காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் அனுப்பிவைத்தல் வேண்டும்—

(அ) தரப்பினர்களின் பெயர்கள்;

(ஆ) தகவலின் தன்மை;

(இ) வழக்கு விவரங்களைத் தெரிந்தவர்களாகத் தோன்றுகிறவர்களின் பெயர்கள்;

(ஈ) குற்றம் எதேனும் செய்யப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறதா, அவ்வாறாயின், அது எவரால்;

(உ) எதிரி, கைதுசெய்யப்பட்டுள்ளாரா;

(ஊ) அவர் நமது ஜாமீன் பத்திரத்தின் பேரில் விடுவிக்கப்பட்டிருக்கிறாரா, அவ்வாறாயின், அது ஜாமீன்தார்களுடனா இல்லாமலா;

(எ) அவர் 170 ஆவது பிரிவின்படி காவலில் இட்டு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறாரா;

(ii) அவ்வழவலர், குற்றம் செய்யப்பட்டது சம்பந்தமான நகவலை முதலில் கொடுத்தவர் எவரேனுமிருப்பின் அவருக்கு, தாம் எடுத்த நடவடிக்கை பற்றி மாநில அரசால் விதிக்கப்படக்கூடிய முறையில் தெரியப்படுத்தவும் வேண்டும்.

(3) மேல்நிலைக் காவல் அனுவலர் ஒருவர் 158 ஆவது பிரிவின்படி நியமனஞ்செய்யப்பட்டிருக்குமிடத்து, அந்த அறிக்கையானது மாநில அரசு பொது அல்லது சிறப்புக் கட்டளை மூலமாக அவ்வாறு உத்தரவிடுகிற சந்தர்ப்பம் எதிலும், அந்த அனுவலர் மூலமாகப் பணிந்தனுப்பப்பட வேண்டும்; மற்றும் நடுவர் கட்டளை பிறப்பிக்கும்வரை, மேற்கொண்டு புலனுய்வு செய்யுமாறு காவல்நிலையப் பொறுப்பு அனுவலருக்கு அவர் உத்தரவிடலாம்.

(4) எதிரி தமது ஜாமீன் பத்திரத்தின்பேரில் விடுவிக்கப் பட்டிருக்கிறார் என்பதாக இந்தப் பிரிவின்படி அனுப்பிவைக் கப்பட்ட ஓர் அறிக்கையிலிருந்து தோன்றும்போதெல்லாம், நடுவர் அந்தப் பத்திரம் தீர்ந்துபோய்விட்டதென்றோ அல்லது மற்றப்படியோ தாம் பொருத்தமென எண்ணுகிறபடியான கட்டளையைப் பிறப்பிக்கவேண்டும்.

(5) அத்தகைய அறிக்கை 170 ஆவது பிரிவு இயங்குகிற ஒரு வழக்கினைப் பற்றியதாயிருக்கும்போது, காவல்

அலுவலர் அந்த அறிக்கையுடன் பின்வருவனவற்றையும் நடுவருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்—

(அ) புலனுய்வின்போது நடுவருக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டவை போக அரசு தரப்பு ஆதாரமாகக் கொள்ள உத்தேசித்துள்ள பத்திரங்கள் அனைத்தும் அல்லது தொடர்புற்ற அவற்றின் எடு குறிப்புகளும்;

(ஆ) 161 ஆவது பிரிவின்படி பதிவு செய்யப்பட்ட, அரசு தரப்பு தம் சாட்சிகளாக விசாரணை செய்ய உத்தேசித்துள்ள அனைவருடைய வாக்குமூலங்களும்.

(6) அத்தகைய வாக்குமூலத்தின் எந்தப் பகுதியேனும் நடவடிக்கைக்குரிய விஷயத்திற்குத் தொடர்பற்றது என்பதாகவோ, எதிரிக்கு அதை வெளிப்படுத்துவது, நீதியின் நலத்திற்கு அத்தியாவசியமானதன்று என்பதுடன், பொது நலனுக்கும் உகந்ததன்று என்பதாகவோ காவல் அலுவலர் எண்ணுவாராஞல், அவர் அவ் வாக்குமூலத்தின் அந்தப் பகுதியைக் குறிப்பிட்டுக் காட்டுவதுடன், எதிரிக்கு அளிக்கப் படவுள்ள நகல்களிலிருந்து அந்தப் பகுதியை நீக்கிவிடுமாறு நடுவரைக் கேட்டுக்கொண்டும், அவ்வாறு தாம் கேட்டுக் கொள்வதற்கான காரணங்களை விளக்கியுரைத்தும் குறிப் பொன்றை இணைத்தனுப்ப வேண்டும்.

(7) வழக்கைப் புலனுய்வு செய்கிற காவல் அலுவலர் (5) ஆவது உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட பத்திரங்கள் அனைத்தின் அல்லது ஏதேனுமொன்றின் நகல்களை எதிரிக்கு அனுப்புவது வசதிப்படுமெனத் தமக்குத் தோன்றினால், அவர் அவ்வாறே செய்யலாம்.

(8) இந்தப் பிரிவிலுள்ள எதுவும், (2) ஆவது உட் பிரிவின்படி அறிக்கையொன்று நடுவருக்கு அனுப்பப்பட்ட தற்குப் பின்பு, குற்றமொன்றைப் பற்றி மேற்கொண்டு புலனுய்வு செய்வதைத் தடைசெய்வதாகக் கொள்ளுதல் ஆகாது; மற்றும் அத்தகைய புலனுய்வின்போரில், காவல் நீலையப் ப்பாறுப்பு அலுவலர், மேற்கொண்டு, வாய்மொழி யான அல்லது பத்திரமூலமான சாட்சியத்தைப் பெற்றுக் கொள்ளுமிடத்து, அவர் அத்தகைய சாட்சியத்தைப் பற்றி மேற்கொண்டு ஓர் அறிக்கை அல்லது அறிக்கைகளை நிர்ணயிக் கப்பட்ட படிவத்தில் நடுவருக்கு அனுப்பி வைக்கவேண்டும்; மேலும் (2) முதல் (6) வரையிலான உட்பிரிவுகளின் வகை முறைகள் (2) ஆவது உட்பிரிவின்படி அனுப்பிவைக்கப்பட்ட

அறிக்கை சம்பந்தமாக இயங்குவதைபோன்றே, அந்தவகைய அறிக்கை அல்லது அறிக்கைகள் சம்பந்தமாகவும் இயலுமானவிற்று இயங்குதல் வேண்டும்.

174. (1) ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார், அல்லது மற்றொருவரால், விலங்கினால், இயந்திரத்தால், ஒரு விபத்தால் கொல்லப்பட்டிருக்கிறார், அல்லது வேறொருவர் குற்றமொன்றைச் செய்திருக்கிறார் என்னும் நியாயமான சந்தேகத்தை எழுப்புகிற சூழ்நிலைகளில் அவர் இறந்திருக்கிறார் என்பதாகக் காவல் நிலையப் பொறுப்பதிகாரி ருக்கோ மாநில அரசால் அதற்கெனச் சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள வேறொரு காவல் அதிகாரிக்கோ தகவல் கிடைக்கும்போது, அவர் அது பற்றிய தகவலைப் பெற்ற விசாரணை நடத்த அதிகாரமளிக்கப்பட்டுள்ளாரானும், மிகமும் அருகிலுள்ளவருமான நிருவாகத்துறை நடுவருக்கு உடனடியாகத் தெரிவித்தல் வேண்டும்; மற்றும் மாநில அரசால் விதிக்கப்பட்ட விதி எதொன்றின் மூலமாகவோ மாவட்ட அல்லது உட்கோட்ட நடுவரின் பொது அல்லது சிறப்பு உத்தரவு எதொன்றின் மூலமாகவோ வேறுவிதமாக உத்தரவிடப்பட்டிருந்தாலன்றி, அவ்வாறு மரணமடைந்தவரின் உடல் இருக்கின்ற இடத்திற்குச் சென்று, அங்கே, அண்டையில் குடியிருப்பவர்களில் மதிக்கத்தக்க இருவர் அல்லது மேற்பட்டவர்களின் முன்னிலையில் புலனய்வைச் செய்து, அந்த உடலின்மீது காணலாகும் காயங்கள், எலும்பு முறிவுகள், கன்றிப்போன காயங்கள் மற்றும் வேறு காயக் குறிகள் ஆகியவற்றை விவரித்தும், எந்த விதத்தில், அல்லது எந்த ஆயுதத்தால் அல்லது கருவியால் (ஏதேனுமிருப்பின்) அத்தகைய காயக்குறிகள் உண்டாக்கப்பட்டதாகத் தோன்றுகின்றன என்பதை உரைத்தும், மரணமுண்டானதற்குத் தோற்றுகிற காரணத்தைத் தெரிவிக்கும் அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டும். எந்தவொரு குறிப்பிட்ட வழக்கு தொடர்பாக மாநில அரசினால் விதிக்கப்படும் அறிக்கை இவ்வாறு பற்றி.

(2) அந்த அறிக்கை அத்தகைய காவல் அலுவலராலும் வேறு ஆட்களாலும் அல்லது அவர்களில் எத்தனை பேர்கள் அதற்கு உடன்படுகிறார்களோ அத்தனை பேர்களாலும் கையொப்பமிடப்படவேண்டும்; மற்றும் அது மாவட்ட நடுவருக்கு அல்லது உட்கோட்ட நடுவருக்கு உடனடியாக அனுப்பிவைக்கப்படவேண்டும்.

(3) மரணத்திற்கான காரணம் பற்றி சந்தேகம் எதேனும் இருக்கும்போதோ வேறு எந்தக் காரணத்திற்காகவோ, காவல் அலுவலர் அவ்வாறு செய்வது நலமென எண்ணுவதானால், அவர் மாநில அரசு இதற்கென விதிக்கலாகும் விதிகளுக்கு உட்பட்டு, அந்த உடலில் அது சோதனை செய்யப்படுவதற்காக வேண்டி, அத்தகைய சோதனையைப் பயனற்றதாக்கிவிடக்கூடிய அளவிற்கு செல்லும் வழியில் அழுகிவிடும் ஆபத்தில்லாமல் அனுப்புவதற்கு வாகனமும் தூரமும் இடங் கொடுக்குமானால் மிகவும் அருகிலுள்ள குடிஇயல் அறுவை மருத்துவரிடமோ, மாநில அரசால் இதற்கென நியமனஞ் செய்யப்பட்ட தகுதிப்பாடுடைய வேறு மருத்துவரிடமோ அவ்வாறே அனுப்புதல் வேண்டும்.

(4) பின்வரும் நடுவர்கள் பிரேத விசாரணையை நடத்த அதிகாரமளிக்கப்படுகின்றனர்; அதாவது, மாவட்ட நடுவர் அல்லது உட்கோட்ட நடுவரும் மாநில அரசால் அல்லது மாவட்ட நடுவரால் இதற்கெனச் சிறப்பாக அதிகாரமளிக்கப் பட்ட வேறெந்த நிருவாகத்துறை நடுவரும்.

ஆட்கள் ஆஜராவதற்குக் கட்டளை பிறப்பிப்பதற்கான அதிகாரம்.

175. (1) 174 ஆவது பிரிவின்படி செயலாற்றுகின்ற காவல் அலுவலர் ஒருவர், மேற்சொன்னபடியான இருவர் அல்லது மேற்பட்டவர்களையும், வழக்கின் சங்கதிகளுடன் பரிச்சயங் கொண்டுள்ளவராகத் தோன்றுகிற வேறெவரையும் மேற்படி புலனாய்வுக்காக எழுந்துமூலமாக உத்தரவிட்டு வரவழைக்கலாம்; மற்றும் அவ்வாறு ஆஜராகும்படி உத்தரவிடப்பட்ட ஒவ்வொருவரும் ஆஜராகி எந்தக் கேள்விகளுக்குப் பதிலளித்தால், அந்தப் பதில்கள் அவரை ஒரு குற்றச் சாட்டுக்கோ தண்டனைக்கோ தண்ட இழப்புக்கோ ஆளாக்க முனையுமோ, அந்தக் கேள்விகளைத் தவிர மற்ற எல்லாக் கேள்விகளுக்கும் உண்மையோடு பதில் சொல்வதற்குக் கட்டுப்பட்டவராவார்.

(2) சங்கதிகளிலிருந்து, கைது செய்தற்குரிய எந்தக் குற்றத்தின்மீது 170 ஆவது பிரிவு இயங்குமோ அந்தக் குற்றம் செய்யப்பட்டதாக வெளிப்படவில்லையானால், நடுவரின் நீதி மன்றத்திற்கு ஆஜராகுமாறு அத்தகையவர்களைக் காவல் அலுவலர் கோருதல் ஆகாது.

மரணத்தின் காரணத்தைக் குறித்து நடுவர் விசாரணை செய்தல்.

176. (1) எவரேனும் காவல்துறையினரின் பாதுகாவலில் இருக்கும்போது மரணமடைந்தால், பிரேத விசாரணை நடத்த அதிகாரமளிக்கப்பட்டுள்ள மிகவும் அருகிலுள்ள நடுவரும், 174 ஆவது பிரிவின் (1) ஆவது உட்பிரிவில் சொல்லப்பட்ட

வேறொருத்தர் சாந்தர்ப்பத்திலும் அவ்வாறு அதிகாரமளிக்கப் பட்ட எந்த நடுவரும், காவல் அலுவலரால் நடத்தப்பட்ட புலனுய்வுக்குப் பதிலாகவோ, அதற்குக் கூடுதலாகவோ மரணத்தின் காரணத்தைக் குறித்து விசாரணை நடத்துதல் வேண்டும்; மற்றும் அவர் அவ்வாறு செய்வாராஞல், குற்ற மொன்றைக் குறித்து விசாரணை செய்வதில் தாம் கொண் டிருக்கக்கூடிய அதிகாரங்கள் அனைத்தையும், அதை நடத்து வதிலும் கொண்டிருப்பார்.

(2) அத்தகைய விசாரணை நடத்துகிற நடுவர் அதற்குச் சம்பந்தப்பட்டதாகத் தம்மால் எடுக்கப்பட்ட சாட்சியத்தை, வழக்கின் சூழ்நிலைகளுக்கிணைக்க, இதற்குப்பின் விதிக்கப் பட்ட எந்த முறையிலேனும் பதிவு செய்தல் வேண்டும்.

(3) ஒருவரது மரணத்திற்கான காரணத்தைக் கண்டு பிடிப்பதற்காக ஏற்கனவே அடக்கஞ் செய்யப்பட்டிருக்கிற அவரது சடலத்தைச் சோதனை செய்வது நலமென அத்தகைய நடுவர் எண்ணும்போதெல்லாம், அவர் அச் சடலத்தைத் தோண்டியெடுத்து சோதனையிடும்படி செய்ய லாம்.

(4) இந்தப் பிரிவின்படி விசாரணை நடத்தப்படவிருக்கு மிடத்து, நடுவர், சாத்தியப்படும்போதெல்லாம், பெயர்களும் முகவரிகளும் தெரிந்துள்ள இறந்தவரது உறவினர்களுக்குத் தெரிவித்து, அந்த விசாரணையின்போது அவர்கள் உடனிருப் பதற்கு அனுமதித்தல் வேண்டும்.

விளக்கம்.—இந்தப் பிரிவில் "உறவினர்" என்னும் சொல், பெற்றோர்கள், குழந்தைகள், சகோதரிகள், சகோதரர்கள் மற்றும் வாழ்க்கைத் துணை என்று பொருள்படும்.

அத்தியாயம் XIII.

பரிசிலனைகளிலும் விசாரணைகளிலும் குற்றவழக்கு நீதிமன்றங்களுக்குள்ள அதிகார எல்லை.

சாதாரணமாக பரிசீலனைக்கும் விசாரணைக்குமான இடம்.

177. குற்றம் ஒவ்வொன்றும் அது எந்த நீதிமன்றத்தின் வட்டார அதிகார வரம்புக்குள் செய்யப்பட்டதோ அந்த நீதிமன்றத்தால் சாதாரணமாக பரிசிலனையும் விசாரணையும் செய்யப்பட வேண்டும்.

பரிசிலனை அல்லது விசாரணைகளுக்கான இடம்.

178. (அ) பல்வேறு வட்டாரப் பகுதிகளில் எந்தப் பகுதியில் குற்றமொன்று செய்யப்பட்டது என்பது நிச்சயமில்லாதபோது, அல்லது

(ஆ) குற்றத்தின் ஒரு பகுதி ஒரு வட்டார எல்லைக்குள்ளும், மற்றொன்று இன்னொன்றிலும் செய்யப்படுமிடத்து, அல்லது

(இ) குற்றமொன்று தொடர்ச்சியான குற்றமாக இருந்து, ஒன்றுக்கு மேற்பட்ட வட்டாரப் பகுதிகளில் தொடர்ந்து செய்யப்படுமிடத்து, அல்லது

(ஈ) அது வெவ்வேறு வட்டாரப் பகுதிகளில் செய்யப்பட்ட பல செய்கைகள் கொண்டதாக இருக்குமிடத்து, அது அத்தகைய வட்டாரப் பகுதிகளில் எதனின் மீதும் அதிகாரங் கொண்டுள்ள ஒரு நீதிமன்றத்தால் பரிசிலனை அல்லது விசாரணை செய்யப்படலாம்.

செய்கை எதொன்றும் செய்யப்படுமிடத்து, அல்லது பின்விளைவு அடுத்து நிகழுமிடத்து குற்றம் விசாரணை செய்யத் தக்கது என்பது.

179. ஏதேனுமொன்று செய்யப்பட்டு அதற்குப் பின்விளைவாக ஏதேனும் நிகழ்ந்திருக்கிறது என்ற காரணத்தால் ஒரு செய்கை குற்றம் ஆகுமேயானால், எந்த நீதிமன்றத்தின் வட்டார அதிகார வரம்புக்குள் அத்தகைய செய்கை செய்யப்பட்டிருக்கிறதோ அல்லது அத்தகைய பின்விளைவு நிகழ்ந்திருக்கிறதோ அந்த நீதிமன்றத்தால், அந்தக் குற்றம் பரிசிலனை அல்லது விசாரணை செய்யப்படலாம்.

வேறு குற்றத்தோடு உள்ள தொடர்பு காரணமாகச் செய்கை ஒன்று குற்றமாக இருக்குமிடத்து விசாரணை.

180. ஒரு செய்கையானது குற்றமாகவும் இருக்கிற வேறொரு செய்கையோடு உள்ள தொடர்பு காரணமாகவோ, அல்லது செய்பவர் குற்றமொன்றைச் செய்யும் சட்டத்தகுதியுடையவராயிருந்திருப்பின் ஒரு குற்றமாகக் கருதப்படும் வேறொரு செய்கையோடு உள்ள தொடர்பு காரணமாகவோ குற்றம் ஆகுமேயானால் அந்தக் குற்றமானது எந்த நீதி

மன்றத்தின் வட்டார அதிகார வரம்புக்குள் அவ்விரு செயல்களில் எதேனும் ஒன்று செய்யப்பட்டதோ அந்த நீதி மன்றத்தால் பரிசீலனை அல்லது விசாரணை செய்யப்படலாம்.

குழப்பிட்ட குற்றங்களைப் பொறுத்த மட்டில் விசாரணை நடத்துவதற்கான இடம்.

181. (1) கொலைகாரக் கூட்டத்தைச் சேர்ந்த தக்கராக (thug) இருப்பது, அல்லது அத்தகையவரால் செய்யப்பட்ட கொலைகூட்டுக்கொள்ளை, கொலையுடன் செய்யப்பட்ட கூட்டுக் கொள்ளை, கூட்டுக் கொள்ளைக்காரர்களின் கும்பலைச் சேர்ந்திருப்பது, அல்லது காவலிலிருந்து தப்பியோடுவது ஆகிய குற்றங்களில் எதுவும், எந்த நீதிமன்றத்தின் வட்டார அதிகார வரம்புக்குள் அக்குற்றம் செய்யப்பட்டதோ, அல்லது எதிரி காணப்படுகிறாரோ அந்த நீதிமன்றத்தால் பரிசீலனை அல்லது விசாரணை செய்யப்படலாம்.

(2) பிள்ளை பிடித்தல், அல்லது ஆள் கடத்துதல் ஆகிய குற்றங்களில் எதுவும், அவ்வாறு பிடிக்கப்பட்டவர் அல்லது கடத்தப்பட்டவர் எந்த நீதிமன்றத்தின் வட்டார அதிகார வரம்புக்குள் இட்டுச் செல்லப்பட்டாரோ அல்லது மறைத்து வைக்கப்பட்டாரோ அல்லது அடைத்துவைக்கப்பட்டாரோ அந்த நீதிமன்றத்தால் பரிசீலனை அல்லது விசாரணை செய்யப்படலாம்.

(3) திருட்டு, மிரட்டிப்பறித்தல், அல்லது கொள்ளை ஆகிய குற்றங்களில் எதுவும், எந்த நீதிமன்றத்தின் வட்டார அதிகார வரம்புக்குள் அக் குற்றம் செய்யப்பட்டதோ அல்லது குற்றத்திற்குரிய பொருளாக உள்ள திருட்டுப் பொருளானது குற்றத்தைச் செய்தவரின் அல்லது திருட்டுப் பொருளெனத் தெரிந்தே அல்லது நம்புவதற்குக் காரணமிருந்தே அத்தகைய பொருளைப் பெற்ற அல்லது தொடர்ந்து வைத்திருந்த ஏதாவதொருவரின் கைவசத்திலேனும் இருந்ததோ, அந்த நீதிமன்றத்தால் பரிசீலனை அல்லது விசாரணை செய்யப்படலாம்.

(4) கையாடல் குற்றம் அல்லது நம்பிக்கை மோசடிக் குற்றம் ஆகிய குற்றங்களில் எதுவும், எந்த நீதிமன்றத்தின் வட்டார அதிகார வரம்புக்குள் அக் குற்றம் செய்யப்பட்டதோ, அல்லது குற்றத்திற்குரிய பொருளாகவுள்ள சொத்தின் பகுதி எதேனும் எதிரியால் பெறப்பட்டதோ, அல்லது தொடர்ந்து வைத்திருக்கப்பட்டதோ அல்லது திருப்பியனுப்புமாறு அல்லது கணக்குக் காட்டுமாறு கோரப்பட்டதோ அந்த நீதி மன்றத்தால் பரிசீலனை அல்லது விசாரணை செய்யப்படலாம்.

(5) திருட்டுப்பொருளைக் கைவசத்தில் வைத்திருப்பது உள்ளடங்கலான குற்றம் எதுவும், எந்த நீதிமன்றத்தின் வட்டார அதிகாரவரம்புக்குள் அக் குற்றம் செய்யப்பட்டதோ, அல்லது திருட்டுப்பொருளெனத் தெரிந்தே அல்லது அவ்வாறு நம்புவதற்குக் காரணங்களிலிருந்தே அதைப் பெற்ற அல்லது தொடர்ந்து வைத்திருந்த ஒருவரின் கைவசத்தில் அத் திருட்டுப்பொருள் இருந்ததோ, அந்த நீதிமன்றத்தால் பரிசீலனை அல்லது விசாரணை செய்யப்படலாம்.

கடிதங்கள் முதலியவை மூலமாகச் செய்யப்படும் குற்றங்கள்.

182. (1) ஏமாற்றுதல் உள்ளடங்கலான குற்றம் எதுவும், அந்த ஏமாற்று முறையானது, கடிதங்கள் அல்லது தொலைத் தொடர்புச் சாதனங்கள் வழியாக வரும் செய்திகள் மூலமாகச் செய்யப்படுமானால், எந்த நீதிமன்றத்தின் வட்டார அதிகார வரம்புக்குள் அத்தகைய கடிதங்கள் அல்லது செய்திகள் அனுப்பப்பட்டனவோ, பெறப்பட்டனவோ அந்த நீதிமன்றத்தால் பரிசீலனை அல்லது விசாரணை செய்யப்படலாம்; மற்றும் ஏமாற்றிச் சொத்தை ஒப்படைக்கும்படி நேர்மையற்ற வகையில் தூண்டும் குற்றம் எதுவும் எந்த நீதிமன்றத்தின் வட்டார அதிகாரவரம்புக்குள் அந்தச் சொத்தானது ஏமாற்றப்பட்டவரால் ஒப்படைக்கப்பட்டதோ அல்லது எதிரியால் பெற்றுக்கொள்ளப்பட்டதோ அந்த நீதிமன்றத்தால் பரிசீலனை அல்லது விசாரணை செய்யப்படலாம்.

45 1860.

(2) இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 494 ஆவது பிரிவு அல்லது 495 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரிய குற்றம் எதுவும், எந்த நீதிமன்றத்தின் வட்டார அதிகாரவரம்புக்குள், அக்குற்றம் செய்யப்பட்டதோ அல்லது குற்றவாளி மூதல் திருமணத்தின் மூலம் தமது வாழ்க்கைத் துணையாகக் கொண்டவருடன் கடைசியாகக் குடியிருந்தாரோ அந்த நீதிமன்றத்தால் பரிசீலனை அல்லது விசாரணை செய்யப்படலாம்.

பயணம் அல்லது கடற் பயணத்தின்போது செய்யப்பட்ட குற்றம்.

183. எவரால் அல்லது எவருக்கெதிராக அல்லது எந்தப் பொருளைப் பொறுத்து குற்றமொன்று அவர் அல்லது அந்தப் பொருளானது பயணத்தில் அல்லது கடற்பயணத்தில் இருக்குங்கால் செய்யப்படும்போது, எந்த நீதிமன்றத்தின் வட்டார அதிகாரவரம்பு மூலமாக அல்லது எல்லைக்குள், அந்தப் பயணம் அல்லது கடற்பயணத்தின்போது அந்த ஆள் கடந்து சென்றாரோ அல்லது அப் பொருள் கடந்து சென்றதோ அந்த நீதிமன்றத்தால் பரிசீலனை அல்லது விசாரணை செய்யப்படலாம்.

சேர்ந்தரணை யாக விசாரிக்கத் தக்க குற்றங் களை விசாரணை செய்வதற்கான இடம்.

184. (அ) ஒருவரால் செய்யப்பட்ட குற்றங்களானவை, 219 ஆவது பிரிவு, 220 ஆவது பிரிவு அல்லது 221 ஆவது பிரிவிலுள்ள வகைமுறைகளின்படி அக்ககைய குற்றம் ஒவ்வொன்றுக்குமாக அவர் குற்றஞ்சாட்டப்பட்டு ஒரே விசாரணையில் விசாரிக்கப்படலாம் என்னும் தன்மையினவாக இருக்குமிடத்து, அல்லது

(ஆ) பல ஆட்களால் செய்யப்பட்ட குற்றம் அல்லது குற்றங்கள், 223 ஆவது பிரிவிலுள்ள வகைமுறைகளின்படி சேர்ந்தரணையாக அவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டு விசாரிக்கப் படலாம் என்னும் தன்மையினவாக இருக்குமிடத்து,— அந்தக் குற்றங்களில் ஏதாவதொன்றை எந்த நீதிமன்றம் பரிசீலனையோ விசாரணையோ செய்யத் தகுதிவாய்ந்து உள்ளதோ அந்த நீதிமன்றம் அந்தக் குற்றங்களைப் பரிசீலனை அல்லது விசாரணை செய்யலாம்.

வழக்கு கள் வெவ் வேறு செஷன்ஸ் பிரிவுகளில் விசாரணை செய்யப்படு வதற்கு உத்தர விடும் அதி காரம்.

185. இந்த அத்தியாயத்தில் மேற்சொன்ன வகை முறைகளில் என்ன கண்டிருந்தபோதிலும், மாவட்டம் எதிலும் மேல் விசாரணைக்காக அனுப்பப்பட்ட வழக்குகள் அல்லது வழக்கு வகைகள் எந்த செஷன்ஸ் பிரிவிலேனும் விசாரணை செய்யப்படலாம் என்பதாக மாநில அரசு உத்தரவிடலாம்:

ஆனால், அத்தகைய உத்தரவானது, அரசமைப்பின் படியோ, இந்தச் சட்டத்தின் அல்லது அவ்வப்போது அமலிலுள்ள வேறெந்தச் சட்டத்தின்படியோ, உயர்நீதி மன்றத்தால் அல்லது உச்ச நீதிமன்றத்தால் முன்னமே பிறப் பிக்கப்பட்ட உத்தரவு எதற்கும் மாறுகை இருத்தல் ஆகாது.

சந்தேகம் எற்படும்போது எந்த மாவட்டத்தில் பரிசீலனையோ விசாரணையோ நடைபெற வேண்டும் என்பதை உயர் நீதிமன்றம் தீர்மானித்தல்.

186. இரண்டு அல்லது மேற்பட்ட நீதிமன்றங்கள் ஒரே குற்றத்தை எடுத்து, அவைகளில் எது அந்தக் குற்றத்தை தொடர்ந்து முற்பட்டு பரிசீலனை அல்லது விசாரணை செய்தல் வேண்டும் என்ற கேள்வி எழும்போது, அந்தக் கேள்வியானது—

(அ) அந்த நீதிமன்றங்கள் ஒரே உயர்நீதிமன்றத்திற்குக் கீழமைந்தனவாயின், அந்த உயர் நீதிமன்றத்தால்;

(ஆ) அந்த நீதிமன்றங்கள் ஒரே உயர் நீதிமன்றத்திற் குக் கீழமைந்தனவல்லாயின், எந்த உயர் நீதிமன்றத்தின் மேல் முறையீட்டுக் குற்றவழக்கு அதிகாரவரம்புக்குள் அந்த

நடவடிக்கைகள் முதலில் தொடங்கப்பட்டனவோ அந்த உயர் நீதிமன்றத்தால் நீர்மானிக்கப்படவேண்டும்; அதன்பேரில் அந்தக் குற்றத்தைப் பொறுத்த வேறு நடவடிக்கைகள் அனைத்தும் நிறுத்தப்படுதல் வேண்டும்.

வட்டார அதிகார வரம்புக்கு அப்பால் செய்யப்பட்ட குற்றத்திற்காக ஆஜர் கட்டனை அல்லது பிடிகட்டனை பிறப்பிப்பதற்கான அதிகாரம்.

187. (1) நம் வட்டார அதிகார வரம்புக்குள் உள்ள எவ்விடமும், அந்தகைய அதிகார வரம்புக்கு வெளியே (இந்தியாவிற்குள்ளேயாயினும் வெளியேயாயினும்) 177 ஆவது பிரிவு முதல் 185 ஆவது பிரிவு வரை (இரு பிரிவுகளும் உள்ளடங்கலாக) அவ்வப்போது அமலிலுள்ள வேறெந்தச் சட்டத்தின் படியோ அத்தகைய அதிகார வரம்புக்குள் பரிசீலனையோ விசாரணையோ செய்யப்பட முடியாததாக உள்ளதும், ஆனால் அவ்வப்போது அமலிலுள்ள வேறெந்தச் சட்டத்தின்படியேனும் இந்தியாவில் விசாரிக்கத்தக்கதாகவுள்ள ஒரு குற்றத்தைச் செய்திருக்கிறார் என்பதாக ஒரு முதல் வகுப்பு நடுவர் நம்புவதற்குக் காரணமிருக்கும்போது, அவர், அக் குற்றம் அந்தகைய வட்டார அதிகார வரம்புக்குள்ளேயே செய்யப்பட்டது போன்று அதை விசாரித்து இதற்குமுன் வகைசெய்யப்பட்ட முறையில் தம்முன் ஆஜராகுமாறு அத் தகையவரைக் கட்டாயப்படுத்தலாம்; மற்றும் அந்தகைய குற்றத்தைப் பரிசீலனையோ விசாரணையோ செய்ய அதிகாரம் கொண்டுள்ள நடுவரிடம் அத்தகையவரை அனுப்பலாம்; அல்லது அத்தகைய குற்றமானது மரணதண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதித்துத் தண்டிப்பதற்குரியதல்லாததாக இருந்து, இந்தப் பிரிவின்படி செயலாற்றுகின்ற நடுவருக்கு நிருப்தி தரும் வகையில் ஜாமீன் கொடுக்க அத்தகையவர் தயாராகவும் விருப்பமுள்ளவராகவும் இருப்பாரானால், அதிகார வரம்பு கொண்டுள்ள நடுவர் முன் அவர் ஆஜராவதற்காக ஜாமீன்காரர்களுடனே இல்லாமலோ பத்திரமொன்றை வாங்கிக் கொள்ளலாம்.

(2) அத்தகைய அதிகார வரம்பைக் கொண்டுள்ள நடுவர்கள் (மாஜிஸ்ட்ரேட்) ஒருவருக்கு மேற்பட்டவர்களாக இருக்கும்போதும், எந்த நடுவரிடம் (மாஜிஸ்ட்ரேட்) அத்தகையவர் அனுப்பப்படவேண்டும் அல்லது, எந்த நடுவர் முன் அவர் ஆஜராவதற்குக் கட்டுப்பட்டவர் என்பது பற்றி, இந்தப் பிரிவின்படி செயலாற்றுகிற நடுவர் தாமே திருப்திக்கொள்ள இயலாதபோதும், உயர்நீதிமன்றத்தின் உத்தரவுக்காக அவ் வழக்கு தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

188. குற்றமொன்று இந்தியாவிற்கு வெளியே—

இந்தியாவிற்கு வெளியே செய்யப்பட்ட குற்றம்.

(அ) இந்தியாவின் குடிமகன் ஒருவரால், ஆழ்கடல் (High Seas) மீதானாலும் சரி, அல்லது வேறெங்கானாலும் சரி, அல்லது

(ஆ) அத்தகைய குடிமகனாக இல்லாத ஒருவரால், பதிவு செய்யப்பட்ட ஒரு கப்பலிலானாலும் சரி, அல்லது ஆகாய விமானத்திலானாலும் சரி, செய்யப்படும்போது, அந்தக் குற்றமானது இந்தியாவிற்குள் அவர் காணப்படும் எந்த இடத்திலேனும் செய்யப்பட்டதுபோன்றே அக் குற்றம் சம்பந்தமாக அவர்மேல் நடவடிக்கை மேற்கொள்ளலாம்;

ஆனால், இந்த அத்தியாயத்தில் மேற்சொன்ன பிரிவுகளில் எதிலும் என்ன இருந்தபோதிலும், அத்தகைய குற்றம் எதுவும் மத்திய அரசின், முன் ஒப்பளிப்பு இல்லாமல், இந்தியாவில் பரிசீலனையோ விசாரணையோ செய்யப்படுதல் ஆகாது.

189. இந்தியாவிற்கு வெளியேயுள்ள மண்டலமொன்றில் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்ட குற்றம் எதொன்றும், 188 ஆவது பிரிவின் வகைமுறைகளின்படி பரிசீலனையோ விசாரணையோ செய்யப்படும்போது, அந்த மண்டலத்திலுள்ள அல்லது அந்த மண்டலத்திற்கான நீதித் துறை அலுவலர் ஒருவர் முன், அல்லது அந்த மண்டலத்தில் உள்ள அல்லது அந்த மண்டலத்திற்கான இந்தியாவின் தூதர் அல்லது துணைத் தூதர் ஒருவர் முன் தரப்பட்ட வாக்கு மூலங்கள் அல்லது தாக்கல் செய்யப்பட்ட சான்றுப் பத்திரங்களின் நகல்களே, எந்த வழக்கில் பரிசீலனை அல்லது விசாரணையை நடத்துகிற நீதிமன்றம் அத்தகைய வாக்கு மூலங்கள் அல்லது சான்றுப் பத்திரங்கள் சம்பந்தமான விஷயங்கள்பற்றி சாட்சியத்தை எடுப்பதற்கு ஆணை (Commission) ஒன்றைப் பிறப்பிக்கக்கூடுமோ, அந்த வழக்கில் சாட்சியமாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதாக, மத்திய அரசு தான் பொருத்தமென நினைத்தால் உத்தரவிடலாம்.

இந்தியாவிற்கு வெளியே செய்யப்பட்ட குற்றங்கள் தொடர்பாகச் சாட்சியத்தைப் பெற்றுக் கொள்ளுதல்.

அத்தியாயம் XIV.

நடவடிக்கைகளைத் தொடங்குவதற்குமுன் தேவைப்படும் நிபந்தனைகள்.

குற்றங்களை நடுவர்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல்.

190. (1) இந்த அத்தியாயத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, முதல் வகுப்பு நடுவர் எவரும், (2) ஆவது உட்பிரிவின்படி இதற்கெனச் சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள இரண்டாவது வகுப்பு நடுவர் எவரும்,

(அ) எந்தச் சங்கதிகள் ஒருங்கு சேர்ந்தால் ஒரு குற்றமாகுமோ அவற்றைக் குறித்து முறையீடொன்று வரப்பெற்றதன்பேரில்;

(ஆ) அத்தகைய சங்கதிகளைப் பற்றிய காவலறிக்கையின் பேரில்;

(இ) அத்தகைய குற்றம் செய்யப்பட்டிருக்கிறது என்று, காவல் அலுவலரல்லாத வேறு எவரிடமிருந்தேனும் கிடைக்கப்பெற்ற தகவலின்பேரில், அல்லது தாமே சொந்தமாக அறிந்ததன்பேரில் அத்தகைய குற்றம் எதையும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

(2) பரிசீலனை செய்வதற்கோ விசாரணை செய்வதற்கோ ஓர் இரண்டாவது வகுப்பு நடுவருக்கு உண்டான தகுதிக்குட்பட்ட குற்றங்களை, (1) ஆவது உட்பிரிவின்படி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள அவருக்குத் தலைமை நீதித்துறை நடுவர் அதிகாரமளிக்கலாம்.

எதிரியின் விண்ணப்பத்தின் பேரில் மாற்றுதல்.

191. நடுவர் ஒருவர், 190 ஆவது பிரிவின் (1) ஆவது உட்பிரிவின் (இ)-கூறின்படி குற்றமொன்றை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும்போது அவ் வழக்கை வேறொரு நடுவர் பரிசீலனையோ அல்லது விசாரணையோ நடத்தும்படி கேட்பதற்கு எதிரிக்கு உரிமையுண்டு என்பதாக, சாட்சியம் எடுப்பதற்கு முன்பு அவருக்கு அறிவித்தல் வேண்டும்; எதிரியோ, எதிரிகள் ஒருவருக்கு மேற்பட்டவர்களாயிருப்பின், அவர்களில் எவரேனும் ஒருவரோ வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுகிற நடுவர்முன் மேற்கொண்டு நடவடிக்கைகள் நடைபெறுவதற்கு ஆட்சேபணை சொல்வாராஞல், அவ் வழக்கு இதற்கென தலைமை நீதித்துறை நடுவரால் குறிப்பிடப்படும் வேறு நடுவருக்கு மாற்றப்படுதல் வேண்டும்.

192. (1) தலைமை நீதித்துறை நடுவர் எவரும், குற்றமொன்றை விசாரணைக்கு எடுத்துக்கொண்டதற்குப் பின்பு வழக்கை, தகுதி பெற்றுள்ள தமக்குக் கீழமைந்துள்ள நடுவர் எவரிடமும் பரிசீலனைக்காகவோ விசாரணைக்காகவோ மாற்றி வைக்கலாம். வழக்குகளை நடுவர்களிடம் மாற்றி வைத்தல்.

(2) தலைமை நீதித்துறை நடுவரால் (சீஃப் ஜூடிஷியல் மாஜிஸ்ட்ரேட்) இதற்கென அதிகாரமளிக்கப்பட்டுள்ள முதல் வகுப்பு நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) எவரும், குற்றமொன்றை விசாரணைக்கு எடுத்துக்கொண்டதற்குப் பின்பு, தலைமை நீதித்துறை நடுவர் பொது அல்லது சிறப்புக் கட்டளை மூலமாகக் குறிப்பிடும் தகுதி பெற்றுள்ள வேறெந்த நடுவரிடமும் (மாஜிஸ்ட்ரேட்) அவ் வழக்கை பரிசீலனைக்காக அல்லது விசாரணைக்காக மாற்றி வைக்கலாம்; அதன்பேரில் அத்தகைய நடுவர் பரிசீலனை அல்லது விசாரணையை நடத்தலாம்.

193. இந்தச் சட்டத்தாலோ, அவ்வப்போது அமலிலுள்ள வேறெந்தச் சட்டத்தாலோ வேறுவிதமாக வெளிப்படையாக வகை செய்யப்பட்டிருந்தாலன்றி, செஷன்ஸ் நீதிமன்றம் எதுவும், தன்னிடம் அவ் வழக்கு இந்தச் சட்டத்தின்படி நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) ஒருவரால் மேல் விசாரணைக்காக அனுப்பப்பட்டிருந்தாலல்லாமல் குற்றம் எதையும் அசல் அதிகாரங்கொண்ட நீதிமன்றமாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல் ஆகாது. செஷன்ஸ் நீதிமன்றங்கள் குற்றங்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல்.

194. கூட்டு செஷன்ஸ் நீதிபதி அல்லது உதவி செஷன்ஸ் நீதிபதி ஒருவர், தமக்கு செஷன்ஸ் பிரிவு நீதிபதி பொது அல்லது சிறப்புக் கட்டளை மூலமாக மாற்றிவைக்கக்கூடிய வழக்குகளை, அல்லது உயர் நீதிமன்றம் சிறப்புக் கட்டளை மூலமாக விசாரணை செய்யுமாறு தமக்கு உத்தரவிடும் வழக்குகளை விசாரணை செய்தல் வேண்டும். கூட்டு மற்றும் உதவி செஷன்ஸ் நீதிபதிகள், தங்களிடம் மாற்றி வைக்கப்பட்ட வழக்குகளை விசாரணை செய்தல்.

195. (1) நீதிமன்றம் எதுவும்,—

(அ) (i) இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 172 முதல் 188 (இரு பிரிவுகளும் உள்ளடங்கலாக) வரையிலான பிரிவுகளின்படி தண்டிப்பதற்குரிய குற்றம் எதையும், அல்லது 45/1860 பொதுஊழியர்களின் சட்டபூர்வமான அதிகாரத்தை அவமதித்தற்காகவும், பொது நீதிக்கு விரோதமான குற்றங்களுக்காகவும்.

(ii) அத்தகைய குற்றத்திற்கு உடந்தையாக இருப்பது அல்லது அதைச் செய்வதற்கான முயற்சி எதையும், அல்லது

சாட்சியத்தில் தாக்கப்படும் பத்திரங்கள் தொடர்பான குற்றங்களுக்காகவும் வழக்குத் தொடர்தல்.

(iii) அத்தகைய குற்றத்தைச் செய்வதற்கான சதிக் குற்றம் எதையும் சம்பந்தப்பட்ட பொது ஊழியரின், அல்லது வேறெந்தப் பொது ஊழியருக்கு நிருவாக ரீதியில் அவர் கீழுள்ளவரோ அந்த ஊழியரின் எழுத்துமூலமான முறையீட்டின் பேரில் அல்லாமல், விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல் ஆகாது.

(ஆ) (i) இந்திய தண்டனைச் சட்டத்தின் 193 முதல் 196 வரை (இரு பிரிவுகளும் உள்ளடங்கலாக), 199, 200, 205 முதல் 211 வரை (இரு பிரிவுகளும் உள்ளடங்கலாக) மற்றும் 228 ஆவது பிரிவு ஆகியவற்றில் ஏதேனுமொன்றின்படி தண்டிப்பதற்குரிய குற்றம் எதுவும் எதாவதொரு நீதி மன்றத்தின் நடவடிக்கையிலேனும் செய்யப்பட்டிருப்பதாக அல்லது அந்த நடவடிக்கைக்குத் தொடர்புடையதாகச் சொல்லப்படும்போது அத்தகைய குற்றம் எதையும், அல்லது

(ii) மேற்சொன்ன சட்டத்தின் 463 ஆவது பிரிவில் விவரிக்கப்பட்ட குற்றம் எதுவும், அல்லது 471 ஆவது பிரிவு 475 ஆவது பிரிவு அல்லது 476 ஆவது பிரிவின் தண்டிப்பதற்குரிய குற்றம் எதுவும் எதாவதொரு நீதிமன்றத்தின் நடவடிக்கையில் தாக்கல் செய்யப்பட்ட அல்லது சாட்சியமாகத் தாக்கப்பட்ட பத்திரம் ஒன்றைப் பொறுத்துச் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படும்போது அத்தகைய குற்றம் எதையும்,

(iii) (i) ஆவது உட்கூறு அல்லது (ii) ஆவது உட்கூறில் குறிப்பிடப்பட்ட குற்றம் எதையேனும் செய்வதற்கான சதிக் குற்றத்தை அல்லது அதற்கான முயற்சியை, அல்லது அதற்கு உடந்தையாய் இருத்தலை; அந்த நீதி மன்றத்தின், அல்லது வேறெந்த நீதிமன்றத்திற்குக் கீழமைந் துள்ளதோ அந்த நீதிமன்றத்தின் எழுத்துமூலமான முறை யீட்டின் பேரில்லாமல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல் ஆகாது.

(2) (1) ஆவது உட்பிரிவின் (அ) கூறின்படி ஒரு பொது ஊழியரால் முறையீடொன்று செய்துகொள்ளப் பட்டிருக்குமிடத்து, எந்த அதிகாரிக்கு நிருவாக ரீதியில் அவர் கீழுள்ளவரோ அந்த அதிகாரி அம்முறையீட்டைத் திரும்பப் பெறுவதற்கு உத்தரவிட்டு, அத்தகைய உத்தரவின் நகலொன்றை நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கலாம்; அது நீதிமன்றத்திற்கு வந்ததன்பேரில், அம் முறையீட்டின்மீது மேற்கொண்டு எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படுதல் ஆகாது;

ஆனால், முதற்கேள்வி நீதிமன்றத்தில் விசாரணை முடிவடைந்திருக்குமானால், அவ்வாறு நிருபணம் பெறுவதற்கு உத்தரவிடுதல் ஆகாது.

(3) (1) ஆவது உட்பிரிவின் (அ) கூறில் "நீதிமன்றம்" என்னும் சொல், உரிமை வழக்கு, நில வருவாய்த்துறை அல்லது குற்றவழக்கு நீதிமன்றம் என்று பொருள்படுவதுடன், அதில், மத்திய, மாகாண அல்லது மாநில சட்டத்தாலோ அதன்படியோ அமைக்கப்பட்ட தீர்ப்பு மன்றம் (Tirubunal) இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக அதை ஒரு நீதிமன்றமென அந்தச் சட்டம் விளம்புமானால் அதுவும் உள்ளடங்கும்.

(4) (1) ஆவது உட்பிரிவின் (அ) கூறின் நோக்கங்களைப் பொறுத்தமட்டில், ஒரு நீதிமன்றம் பிறப்பித்த மேல்முறையீடு செய்யத்தக்க தீர்ப்பாணைகள் அல்லது தீர்ப்புக் கண்டனைகளிலிருந்து மேல்முறையீடுகள் சாதாரணமாக எந்த நீதிமன்றத்திற்குச் செய்துகொள்ளப்படவேண்டுமோ அந்த நீதிமன்றத்திற்கு முதலில் சொன்ன நீதிமன்றம் கீழமைந்ததாகக் கொள்ளப்படவேண்டும்; அல்லது தீர்ப்பாணைகளிலிருந்து மேல்முறையீடு எதுவும் சாதாரணமாக செய்யமுடியாதென்றால், அந்த நீதிமன்றத்தைப் பொறுத்தமட்டில் சாதாரண அரசல் உரிமை வழக்கு அதிகாரங்கொண்டுள்ள எந்த முதன்மை நீதிமன்றத்தின் வட்டார அதிகார வரம்புக்குள் அத்தகைய உரிமை வழக்கு நீதிமன்றம் அமைந்துள்ளதோ அந்த நீதிமன்றத்திற்குக் கீழமைந்ததாகக் கொள்ளப்பட வேண்டும்.

ஆனால்,—

(அ) மேல்முறையீடுகள் ஒன்றுக்கு மேற்பட்ட நீதிமன்றங்களுக்குச் செய்துகொள்ளக் கூடுமானால், கீழ்நிலை அதிகாரங்கொண்ட நீதிமன்றமே மேல்முறையீட்டு நீதிமன்றங்களில் எந்த நீதிமன்றத்திற்கு அத்தகைய நீதிமன்றம் கீழமைந்ததாகக் கொள்ளப்படவேண்டுமோ அந்த நீதிமன்றமாக இருக்கும்.

(ஆ) மேல்முறையீடுகள் ஓர் உரிமை வழக்கு நீதிமன்றத்திற்கும், அதோடு நிலவருவாய்த்துறை நீதிமன்றத்திற்கும் செய்துகொள்ளக்கூடியதாக இருக்குமிடத்து, வழக்கின் தன்மையைப் பொறுத்தோ, எந்த நடவடிக்கை சம்பந்தப்பட்டு அக்குற்றம் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதோ, அந்த நடவடிக்கையின் தன்மையைப் பொறுத்தோ உரிமை வழக்கு அல்லது நிலவருவாய்த்துறை நீதிமன்றத்திற்குக் கீழமைந்ததாகக் கொள்ளப்படவேண்டும்.

196. (1) நீதிமன்றம் எதுவும்—

45/1860 அரசுக்கு விரோதமான குற்றங்களுக்காகவும் அத்தகைய குற்றத்தைச்செய்வதற்கான சதிக் குற்றத்திற்காகவும் வழக்குத் தொடர்தல்.

(அ) இந்தியத் தண்டனைச் சட்டத்தின் VI ஆவது அத்தியாயத்தின்படியோ, 153-கா பிரிவு, 153-ஙா பிரிவு, 295-கா பிரிவு, அல்லது 505 ஆவது பிரிவின்படியோ தண்டிப்பதற்குரிய குற்றம் எதையும், அல்லது

(ஆ) அத்தகைய குற்றத்தைச் செய்வதற்கான சதிக் குற்றத்தை, அல்லது

(இ) இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 108 கா பிரிவில் விவரிக்கப்பட்டுள்ளபடியாகவுள்ள உடந்தைக் குற்றம் எதையும், மத்திய அரசின் அல்லது மாநில அரசின், முன் ஒப்பளிப்புடன் அல்லாமல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல் ஆகாது.

(2) மரண தண்டனை, ஆயுள் தண்டனை அல்லது இரண்டாண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்திற்கான கடுங்காவல் தண்டனை விதித்துத் தண்டிப்பதற்குரியதான கைது செய்தற்குரிய குற்றமொன்றைச் செய்வதற்கான சதிக்குற்றமல்லாததும், இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 120 ஙா பிரிவின்படி தண்டிப்பதற்குரியதுமான சதிக்குற்றம் எதையும், மாநில அரசோ, மாவட்ட நடுவரோ (மாஜிஸ்ட்ரேட்) நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு எழுத்து மூலம் இசைவு தந்திருந்தாலன்றி, நீதிமன்றம் எதுவும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல் ஆகாது :

ஆனால், 195 ஆவது பிரிவின் வகைமுறைகள் இயங்குகிற ஒரு சதிக்குற்றமாக அது இருக்குமிடத்து, அத்தகைய இசைவு எதுவும் அவசியமானதாகாது.

(3) மத்திய அரசு அல்லது மாநில அரசாக இருந்தால் (1) ஆவது உட்பிரிவின்படி ஒப்பளிப்பு வழங்குவதற்கு முன்பும், மாநில அரசு அல்லது மாவட்ட நடுவராக (மாஜிஸ்ட்ரேட்) இருந்தால் (2) ஆவது உட்பிரிவின்படி இசைவைத் தருவதற்கு முன்பும், ஆய்வாளரின் நிலைக்குக் கீழ்ப்படாத காவல் அலுவலர் ஒருவரால் முதல்நிலைப் புலனாய்வு செய்யப்படுவதற்குக் கட்டளையிடலாம் ; அந்தச் சந்தர்ப்பத்தில் அத்தகைய காவல் அலுவலர் 155 ஆவது பிரிவின் (3) ஆவது உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட அதிகாரங்களைக் கொண்டிருப்பார்.

நீதிபதிகள் மற்றும் பொது ஊழியர்களின் பேரில் வழக்குத் தொடராதல்.

197. (1) அரசின் ஒப்பளிப்பாலோ ஒப்பளிப்புடனேயே அல்லாமல் தம் பதவியிலிருந்து நீக்கப்படத் தக்கவராலாத ஒரு நீதிபதியாக, அல்லது நடுவராக (மாஜிஸ்ட்ரேட்) அல்லது ஒரு பொது ஊழியராக இருக்கிற அல்லது இருந்த எவரேனும் அவரது அலுவல்முறைக் கடமையை ஆற்றிவரும் போது அல்லது ஆற்றிவருவதாகப் புலப்படும்போது அவரால் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படும் குற்றம் ஏதேனும் அவர்பேரில் சாட்டப்படும்போது நீதிமன்றம் எதுவும்—

(அ) ஒன்றியத்து விவகாரங்கள் சம்பந்தமாக வேலையில் அமர்ந்துள்ள, அல்லது நிலவாத்திற்கேற்ப, சொல்லப்பட்ட குற்றம் செய்யப்பட்ட காலத்தில் ஒன்றியத்து விவகாரங்கள் சம்பந்தமாக வேலையில் அமர்ந்திருந்த ஒருவரைப் பொறுத்த மட்டில், மத்திய அரசின் முன் ஒப்பளிப்புடன் அல்லாமல்,

(ஆ) மாநிலமொன்றின் விவகாரங்கள் சம்பந்தமாக வேலையில் அமர்ந்துள்ள, அல்லது நிலவரத்திற்கேற்ப சொல்லப்பட்ட குற்றம் செய்யப்பட்ட காலத்தில் மாநில விவகாரங்கள் சம்பந்தமாக வேலையில் அமர்ந்திருந்த ஒருவரைப் பொறுத்த மட்டில், அந்த மாநில அரசின் முன் ஒப்பளிப்புடன் அல்லாமல்,

அத்தகைய குற்றத்தை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல் ஆகாது.

(2) ஒன்றியத்து ஆயுதப் படைகளின் உறுப்பினர் எவரேனும் தம் அலுவல் முறைக் கடமையினை ஆற்றிவரும் போது அல்லது ஆற்றிவருவதாகப் புலப்படும்போது, அவரால் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்ட குற்றம் எதையும், மத்திய அரசின் முன் ஒப்பளிப்புடன் அல்லாமல், நீதிமன்றம் எதுவும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல் ஆகாது.

(3) மாநில அரசு, அறிவிக்கை மூலமாக பொது ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள ஆயுதப் படைகளைச் சேர்ந்த உறுப்பினர்களில், அவ்வறிவிக்கையில் குறிப்பிடும் வகுப்பினர் அல்லது வர்க்கத்தினர் எங்கு ஊழியம் புரிந்து வருவதாயிருந்தாலும் அவர்கள்மீது (2) ஆவது உட்பிரிவின் வகைமுறைகள் இயங்கும் என்பதாக உத்தரவிடலாம்; அதன்பேரில் அந்த உட்பிரிவின் வகைமுறைகள் உரில் வருகின்ற "மத்திய அரசு" என்னும் சொற்றொடருக்கு பதிலாக, "மாநில அரசு" என்னும் சொற்றொடர் இருந்ததே போன்று இயங்கும்.

(4) அத்தகைய நீதிபதி, நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) அல்லது பொது ஊழியர்மீது எவர், எந்த முறையில், எந்தக் குற்றம் அல்லது குற்றங்களுக்காக, வழக்குத் தொடர வேண்டும் என்பதை, நிலவரத்திற்கேற்ப, மத்திய அரசு, அல்லது மாநில அரசு நிர்மானித்து, எந்த நீதிமன்றத்தின் முன் அவ்விசாரணை நடத்தப்படவேண்டும் என்பதையும் குறிப்பிடலாம்.

மணவாழ்விற்கு இடர் விளைக்கும் குற்றங்களுக்காக வழக்குத் தொடர்தல்

198 (1) நீதிமன்றம் எதுவும் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் XX ஆவது அத்தியாயத்தின்படி தண்டிப்பதற்குரிய குற்றமொன்றை, அக் குற்றத்தால் குறையுற்றவர் செய்து கொண்ட முறையீட்டின்பேரில் அல்லாமல், விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல் ஆகாது;

ஆனால்,—

(அ) அத்தகையவர் பதினெட்டு வயதிற்குக் கீழ்ப்பட்டவராகவோ, அறிவிலி அல்லது பித்தராகவோ, நோய் அல்லது தளர்ச்சி நிலையால் முறையிடு செய்துகொள்ள இயலாதவராகவோ, வட்டாரப் பழக்கவழக்கங்களின்படி, வெளியில் முகம் காட்டுமாறு கட்டாயப்படுத்தப்படக்கூடாத ஒரு பெண்ணாகவோ இருக்குமிடத்து, அவர் சார்பாக, வேறெவரேனும், நீதிமன்றத்தின் அனுமதியுடன் முறையீடொன்றைச் செய்யலாம்.

(ஆ) அத்தகையவர் கணவராயிருப்பதுடன் ஒன்றியத்து ஆயுதப்படைகளில் ஏதேனுமொன்றில் ஊழியராயுமிருந்து தாமே முறையிடொன்றைச் செய்யத் தமக்கு இயலும் வகையில் விடுப்பு பெறுவதற்கு நிலவரங்கள் தடையாக உள்ளன என்று தம் படைத்தலைவரால் சான்றிடப்பட்டாரேயானால், (4) ஆவது உட்பிரிவின் வகை முறைகளுக்கிணங்க, அக் கணவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அவரது சார்பாக முறையிடொன்றைச் செய்யலாம்;

(இ) இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 494 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரிய குற்றமொன்றினால் குறையுற்றவர், மனைவியாக இருக்குமிடத்து, முறையீடானது அவரது சார்பாக அவரது தந்தை, தாய், சகோதரன், சகோதரி, மகன் அல்லது மகளாலோ அவரது தந்தையின் அல்லது தாயின் சகோதரன் அல்லது சகோதரியாலோ செய்துகொள்ளப்படலாம்.

(2) (1) ஆவது உட்பிரிவின் நோக்கங்களைப் பொறுத்த மட்டில், அப் பெண்ணின் கணவரல்லாத வேறெவரும் மேற் சொன்ன சட்டத்தின் 497 ஆவது பிரிவின்படி அல்லது 498 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரிய குற்றம் வேறொன்றினாலும் குறையுற்றவராகக் கொள்ளப்படுதல் ஆகாது ;

ஆனால், அத்தகைய குற்றம் செய்யப்பட்ட காலத்தில், எவரது கவனிப்பில் அப் பெண் இருந்தாரோ அவர், கணவர் இல்லாதபோது, அக் கணவரின் சார்பாக, நீதிமன்றத்தின் அனுமதியுடன் முறையீடொன்றைச் செய்யலாம்.

(3) (1) ஆவது உட்பிரிவுக்கான விலக்கின் (அ) கூறின் கீழ் வருகிற சந்தர்ப்பம் எதிலும், பதினெட்டு வயதிற்குக் கீழ்ப்பட்டவரின் சார்பாகவோ, பித்தரின் சார்பாகவோ, வயதுவராத அத்தகையவருக்கு அல்லது அத்தகைய பித்தருக்குக் காப்பாளரெனத் தகுதி பெற்றுள்ள அதிகாரியால் நியமனஞ் செய்யப்பட்டிராத அல்லது விளம்பப்பட்டிராத ஒருவர் முறையீடு செய்துகொள்ள முற்படும்போதும், அவ்வாறு நியமனஞ்செய்யப்பட்ட அல்லது விளம்பப்பட்ட காப்பாளர் ஒருவர் இருக்கிறார் என்பதாக நீதிமன்றத்திற்குத் திருப்தி ஏற்படும்போதும், அந்த நீதிமன்றம், அனுமதிக்கான விண்ணப்பத்தை அனுகூலம் செய்வதற்கு முன்பு அத்தகைய காப்பாளருக்கு அறிவிப்புக் கொடுக்கும்படி செய்வித்து, அவருடைய கட்சி கேட்கப்படுவதற்கு நியாயமான ஒரு வாய்ப்பினை அவருக்கு அளித்தல் வேண்டும்.

(4) (1) ஆவது உட்பிரிவுக்கான விலக்கின் (ஆ) கூறில் குறிப்பிட்டவாறு அதிகாரமளித்தலானது, எழுத்து வடிவில் இருத்தல் வேண்டும்; மற்றும் கணவரால் கையொப்பமிடப் பட்டவோ மற்றபடி சான்றொப்பமிடப்படவோ வேண்டும். சொல்லப்படும் எந்த விஷயங்களை அந்த முறையீடு அடிப் படையாகக் கொண்டிருக்குமோ அந்த விஷயங்கள் அவருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளன என்னும்படிக்கான வாசகம் ஒன்றும் அதில் அடங்கியிருக்க வேண்டும். மேலும், அவரது படைத்தலைவரால் அது மேலொப்பமிடப்படுதல் வேண்டும்; மேலும் நேர்முகமாக முறையீடொன்றைச் செய்து கொள்வதற்காக அவருக்கு அப்போதைக்கு விடுப்பு அளிக்கப் படுவதற்கில்லை என்னும்படிக்கு அந்த அலுவலரால் ஒப்பமிடப்பட்ட உறுதிச்சான்றும் அதனுடன் சேர்த்தனுப்பப்பட வேண்டும்.

(5) அவ்வாறு அதிகாரமளித்தலாகப் புலப்படுவதும், (4)ஆவது உட்பிரிவின் வகைமுறைகளுக்கிணங்கி உள்ளது மான பத்திரம் எதுவும், அதே உட்பிரிவில் கோரப்படும் ஓர் உறுதிச்சான்றுகப் புலப்படும் பத்திரம் எதுவும், எதிர் மறையாக நிரூபணஞ் செய்தாலன்றி, உண்மையானதென்று அனுமானிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது சாட்சியமாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(6) ஒருவர் பதினேந்து வயதிற்குக் கீழ்ப்பட்டவராயுள்ள தம் சொந்த மனைவியுடன் கொண்ட உடல் உறவானது இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 376 ஆவது பிரிவின் படியான குற்றத்தில் அடங்கியிருந்து, அது செய்யப்பட்ட தேதியிலிருந்து ஓராண்டுக்கும் மேற்பட்ட காலம் கடந்து விட்டிருக்குமானால், நீதிமன்றம் எதுவும் அத்தகைய குற்றத்தை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல் ஆகாது.

45/1 860 அவதூறுக் காக வழக்குத் தொடாதல்.

(7) இந்தப் பிரிவின் வகைமுறைகள், குற்றமொன்றின் மீது இயங்குவனபோன்றே அக் குற்றத்திற்கு உடந்தையாக இருக்கும் குற்றத்தின்மீதோ அதைச் செய்ய முயற்சிக்கும் குற்றத்தின்மீதோ இயங்குவனவாகும்.

199. நீதிமன்றம் எதுவும், இந்தியத் தண்டனைச் சட்டத்தின் I ஆவது அத்தியாயத்தின்படி தண்டிப்பதற்குரிய குற்றம் ஒன்றை, அக் குற்றத்தால் குறையுற்றுள்ள எவரேனும் செய்துகொள்ளும் முறையீடொன்றின் பேரிலல்லாமல், விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல் ஆகாது;

ஆனால், அத்தகையவர் பதினெட்டு வயதிற்குக் கீழ்ப்பட்ட வராகவோ, அறிவிலியாக அல்லது பித்தராகவோ, நோய் அல்லது தளர்ச்சி நிலையால் முறையீடு செய்து கொள்ள இயலாதவராகவோ, வட்டாரப் பழக்க வழக்கங்களின்படி வெளியில் முகங்காட்டுமாறு கட்டாயப்படுத்தப்படக்கூடாத ஒரு பெண்ணாகவோ இருக்குமிடத்து, அவர் சார்பாக, வேறெவரேனும், நீதிமன்றத்தின் அனுமதியுடன் முறையீடொன்றைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்த போதிலும், குற்றம் செய்ததாகச் சொல்லப்படும் சமயத்தில், இந்தியாவின் குடியரசுத் தலைவராகவோ, இந்தியாவின் குடியரசுத் துணைத்தலைவராகவோ, மாநிலம் ஒன்றின்

ஆளுநராகவோ, ஒன்றியத்து மண்டலம் ஒன்றின் ஆட்சியாளராக அல்லது ஒன்றியத்தின் அல்லது ஒரு மாநிலத்தின் அல்லது ஒன்றியத்து மண்டலமொன்றின் அமைச்சராகவோ, ஒன்றியத்தின் அல்லது மாநிலமொன்றின் விவகாரங்கள் சம்பந்தமாக வேலையிலமர்ந்துள்ள வேறெந்தப் பொது ஊழியராகவோ உள்ள ஒருவர், தம் பொதுப்பணிகளை ஆற்றும்போது அவரது நடத்தையைப்பற்றி, அவருக்கெதிராக இந்தியத் தண்டனைச் சட்டத்தின் XXI ஆவது அத்தியாயத்தில் வருகின்ற குற்றம் எதேனும் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படும்போது, ஒரு செஷன்ஸ் நீதிமன்றம், தன்னிடம் அவ்வழக்கு மேல் விசாரணைக்காக அனுப்பப்படாமலேயே, அரசு குற்றத்துறை வழக்குரைஞர் எழுத்து மூலமாகச் செய்து கொண்ட ஒரு முறையீட்டின்பேரில் அத்தகைய குற்றத்தை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

(3) எந்தச் சங்கதிகள் ஒருங்கிணைந்தால் சொல்லப்பட்ட குற்றமாக அமையுமோ அந்தச் சங்கதிகளையும், அக்குற்றத்தின் தன்மையையும், எதிரியால் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படும் குற்றத்தைக் குறித்து அவருக்கு அறிவிப்புக் கொடுப்பதற்கு நியாயமான அளவில் போதுமானதாக இருக்கும் வேறு விவரங்களையும் (2) ஆவது உட்பிரிவில் குறிப்பிடப்படும் முறையீடு ஒவ்வொன்றும் விவரிக்க வேண்டும்.

(4) அரசு குற்றத்துறை வழக்குரைஞர் (2) ஆவது உட்பிரிவின்படியான முறையீடு எதையும்—

(அ) ஒரு மாநிலத்தில் ஆளுநராக அல்லது ஓர் அரசின் அமைச்சராக இருக்கிற அல்லது இருந்துள்ள ஒருவரைப் பொறுத்தமட்டில், அந்த மாநில அரசின் முன் ஒப்பளிப்புடன் அல்லாமலும்,

(ஆ) மாநிலத்தின் விவகாரங்கள் சம்பந்தமாக வேலையிலமர்ந்துள்ள வேறெந்தப் பொது ஊழியரையும் பொறுத்தமட்டில் அந்த மாநில அரசின் முன் ஒப்பளிப்புடன் அல்லாமலும்,

(இ) வேறெந்தச் சந்தர்ப்பத்திலும், மத்திய அரசின் முன் ஒப்பளிப்புடன் அல்லாமலும்

செய்து கொள்ளுதல் ஆகாது.

(5) (2) ஆவது உட்பிரிவின்படியான குற்றமொன்று செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படும் தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் முறையீடு செய்துகொள்ளப்பட்டால் அன்றி, செஷன்ஸ் நீதிமன்றம் எதுவும் அத்தகைய குற்றத்தை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல் ஆகாது.

(6) இந்தப் பிரிவிலுள்ள எதுவும், எவருக்கெதிராக அக் குற்றம் செய்யப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறதோ அவர், அந்தக் குற்றத்தைப் பொறுத்த ஒரு முறையீட்டை அதிகாரங்கொண்டுள்ள ஒரு நடுவர் முன் (மாஜிஸ்ட்ரேட்) செய்து கொள்வதற்குள்ள உரிமையை, அத்தகைய முறை யீட்டின்பேரில், அக்குற்றத்தை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு அத்தகைய நடுவருக்குள்ள அதிகாரத்தைப் பாதித்தல் ஆகாது.

அத்தியாயம் XV

நடுவர்களிடம் (மாஜிஸ்ட்ரேட்) முறையீடுகள் செய்து கொள்ளுதல்.

முறையீடு எவை கொள்ளத்தக்கன.

200. முறையீட்டின் பேரில் குற்றமொன்றை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுகிற ஒரு நடுவர், முறையிடுபவரையும் சாட்சிகள் எவரேனும் வந்திருந்தால் அவர்களையும் பிரமாணத்தின்பேரில் விசாரித்தல் வேண்டும்; அத்தகைய விசாரணையின் சாராம்சம், எழுத்திலமைக்கப்பட்டு முறையிடுபவராலும் சாட்சிகளாலும் அதோடு நடுவராலும் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

ஆனால், முறையீடு எழுத்து மூலமாகச் செய்யப்படும் போது,—

(அ) ஒரு பொது ஊழியர் தம் அலுவல் முறைக் கடமைகளை ஆற்றிவரும்போது அல்லது அவ்வாறு ஆற்றி வருவதாகப் பாவிக்கப்படும்போது அவராலோ அல்லது ஒரு நீதிமன்றத்தாலோ அந்த முறையீடு செய்யப் பட்டிருக்குமானால், அல்லது

(ஆ) அந்த நடுவர், பரிசீலனைக்காகவோ, விசாரணைக் காகவோ 192 ஆவது பிரிவின்படி வேறொரு நடுவருக்கு (மாஜிஸ்ட்ரேட்) அந்த வழக்கை மாற்றி வைப்பாரானால், நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) முறையிடுபவரையும் சாட்சிகளையும் விசாரிக்கத் தேவையில்லை.

மேலும், அந்த நடுவர் முறையிடுபவரையும் சாட்சிகளையும் விசாரித்ததற்குப் பின்பு, 192 ஆவது பிரிவின்படி வேறொரு நடுவருக்கு (மாஜிஸ்ட்ரேட்) அந்த வழக்கை மாற்றி வைப்பாரானால், பின்சொன்ன நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) அவர்களை மறு விசாரணை செய்யத் தேவையில்லை.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளத் தகுதி பெற்றிராத நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) பின்பற்ற வேண்டிய நடைமுறை என்ன என்பது.

201. குற்றத்தை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் தகுதி பெற்றிராத நடுவர் ஒருவரிடம் முறையீடு செய்யப்படுமானால், அவர்—

(அ) அந்த முறையீடு எழுத்து மூலம் செய்யப் பட்டிருக்குமானால், அதை உரிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்காக மேற்குறிப்பொன்றை அந்தப் படிக்கு எழுதி அதைத் திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.

(ஆ) அந்த முறையீடு எழுத்து மூலமாகச் செய்யப்படவில்லையானால், முறையிடுபவரை உயர் நீதிமன்றத்திற்குச் செல்லுமாறு சொல்லுதல் வேண்டும்.

நீதிமுறைக் கட்டளை பிறப்பிப்பதைத் தள்ளிப் போடுதல்.

203. (1) நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) எவரும், எந்தக் குற்றத்தை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தாம் அதிகாரமளிக்கப்பட்டுள்ளாரோ அந்தக் குற்றத்தைப் பற்றி முறையீடொன்று, அல்லது 192 ஆவது பிரிவின்படி தமக்கு மாற்றி வைக்கப்பட்டுள்ளதோ அந்தக் குற்றம் பற்றிய முறையீடு ஒன்று பெறப்பெற்றதன் பேரில், தாம் பொருத்தமென நினைத்தால், எதிரிக்கு நீதிமுறைக் கட்டளை பிறப்பிப்பதைத் தள்ளிப்போட்டு, நடவடிக்கை எடுப்பதற்குப் போதுமான ஆதாரம் இருக்கிறதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் பொருட்டு, தாமே அந்த வழக்கை பரிசீலனை செய்யலாம், அல்லது காவல் அலுவலராலோ தாம் பொருத்தமென நினைக்கும் வேறெவராலுமோ புலனாய்வு செய்யப்படுவதற்கு உத்தரவிடலாம்:

ஆனால்,

(அ) முறையீடு செய்யப்பட்டுள்ள குற்றமானது செஷன்ஸ் நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யத் தக்கதென்று நடுவருக்குத் தோன்றுமிடத்து; அல்லது

(ஆ) அந்த முறையீடு ஒரு நீதிமன்றத்தால் செய்யப்பட்டிராதவிடத்து, முறையிடுபவரையும் சாட்சிகள் (எவரேனும்) ஆஜராகியிருந்தால் அவர்களையும் 200 ஆவது பிரிவின்படி பிரமாணத்தின்பேரில் விசாரணை செய்திருந்தாலன்றி,

மேற்சொன்னவாறு புலனாய்வு செய்வதற்கான உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(2) (1) ஆவது உட்பிரிவின்படியான ஒரு பரிசீலனையில், நடுவர், தாம் பொருத்தமென நினைத்தால், சாட்சிகளின் சாட்சியத்தை பிரமாணத்தின் பேரில் எடுத்துக் கொள்ளலாம்;

ஆனால், முறையீடு செய்து கொள்ளப்பட்டுள்ள குற்றமானது செஷன்ஸ் நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யத் தக்கதென்று அந்த நடுவருக்குத் தோன்றுமானால்,

அவர் முறையிடுபவரை அவரது சாட்சிகள் அனைவரையும் கொண்டுவருமாறு கோருவதுடன், அவர்களைப் பிரமாணத்தின்பேரில் விசாரணை செய்தலும் வேண்டும்.

(3).(1) ஆவது உட்பிரிவின்படியான ஒரு புலனாய்வு, காவல் அலுவலரல்லாத வேறு ஒருவரால் செய்யப்படும்போது, பிடிகட்டளையின்றிக் கைது செய்யும் அதிகாரத்தைத் தவிர, காவல்நிலையப் பொறுப்பு அலுவலருக்கு இந்தச் சட்டத்தால் வழங்கப்பட்ட அதிகாரங்கள் அனைத்தையும் அவர் அந்தப் புலனாய்வுக்காகக் கொண்டவராயிருப்பார்.

முறையீட்டைத் தள்ளுபடி செய்தல்.

203. முறையிடுபவர், சாட்சிகள் ஆகியோர் பிரமாணத்தின் பேரில் கொடுத்த வாக்குமூலங்களையும் (எவையேனுமிருப்பின்), சாட்சிகளின் வாக்குமூலங்களையும், 202 ஆவது பிரிவின்படி நடத்தப்பட்ட பரிசிலனை அல்லது புலனாய்வு (எதேனுமிருப்பின்) அதன் விளைவையும் ஆராய்ந்த பின்பு, மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்குப் போதுமான ஆதாரம் இல்லை என்பதாக நடுவர் கருதுவாராயின், அவர் அந்த முறையீட்டைத் தள்ளுபடி செய்தல் வேண்டும்; அத்தகைய ஒவ்வொரு வழக்கிலும் தாம் அவ்வாறு செய்வதற்கான காரணங்களை அவர் சுருக்கமாகப் பதிவு செய்தல் வேண்டும்.

அத்தியாயம் XVI.

நடுவர்கள் (மாஜிஸ்ட்ரேட்) முன் நடவடிக்கைகளைத் தொடங்குதல்.

நீதிமுறைக் கட்டளை பிறப்பித்தல்.

204. (1) குற்றமொன்றை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளும் நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) ஒருவர் கருத்தின்படி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்போதுமான ஆதாரம் இருந்து,

(அ) வழக்கானது, ஆஜர் கட்டளை வழக்காகத் தோன்றுமாறால், அவர் எதிரி ஆஜராவதற்காக ஆஜர் கட்டளையைப் பிறப்பித்தல் வேண்டும்; அல்லது

(ஆ) வழக்கானது பிடிகட்டளை வழக்காகத் தோன்றுமாறால், அவர், தம் முன்போ (தமக்கு அதிகாரமில்லையாறால்) உரிய அதிகாரங்கொண்டுள்ள வேறெந்த நடுவர் முன்போ ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எதிரியைக் கொண்டுவரும்படியோ, எதிரி வரும்படியோ செய்வதற்குப் பிடிகட்டளை ஒன்றை, அல்லது தாம் பொருத்தமென நினைத்தால் ஆஜர் கட்டளையொன்றைப் பிறப்பிக்கலாம்.

(2) அரசு தரப்புச் சாட்சிகளின் பட்டியலொன்று தாக்கல் செய்யப்படும்வரை (1) ஆவது உட்பிரிவின்படி எதிரிக்கு ஆஜர் கட்டளை அல்லது பிடிகட்டளை எதுவும் பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(3) எழுத்துமூலமாகச் செய்யப்பட்ட முறையீடு ஒன்றின்பேரில் தொடரப்பட்ட ஒரு நடவடிக்கையில், (1) ஆவது உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆஜர் கட்டளை அல்லது பிடிகட்டளை ஒவ்வொன்றும், அம்முறையீட்டின் நகலொன்றுடன் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும்.

(4) அவ்வப்போது அமலிலுள்ள எந்தச் சட்டத்தின்படியேனும் நீதிமுறைக் கட்டளைக் கட்டணங்களோ வேறு கட்டணங்களோ செலுத்தத் தக்கனவாக இருக்கும்போது, அக் கட்டணங்கள் செலுத்தப்படும்வரை நீதிமுறைக் கட்டளை எதுவும் அனுப்பப்படுதல் ஆகாது; மற்றும், அக் கட்டணங்கள் நியாயமான கால அளவிற்குள் செலுத்தப்படவில்லையாறால், நடுவர் அம்முறையீட்டைத் தள்ளுபடி செய்யலாம்.

(5) இந்தப் பிரிவிலுள்ள எதுவும், 87 ஆவது பிரிவின் வகைமுறைகளைப் பாதிப்பதாகக் கொள்ளுதல் ஆகாது.

எதிர் நேர் முகமாக ஆஜராவதை நடுவர் தவிர்க்கலாம் என்பது.

205. (1) நடுவர் ஒருவர் ஆஜர் கட்டளையைப் பிறப்பிக்கும்போதெல்லாம், தாம் அவ்வாறு செய்வதற்குக் காரணம் இருக்குமானால், எதிரி நேர்முகமாக ஆஜராவதைத் தவிர்த்து, அவருக்காக அவரது வாதுரைஞர் ஆஜராவதை அனுமதிக்கலாம்.

(2) ஆனால் அவ் வழக்கைப் பரிசீலனை அல்லது விசாரணை செய்கிற நடுவர் (மாஜிஸ்ட்ரேட்), தம் புக்தம்போல், நடவடிக்கையின் எந்தக் கட்டத்திலும் எதிரி நேர்முகமாக ஆஜராவதற்கு உத்தரவிடலாம்; மற்றும் அவசியமானால், இதற்குமுன் வகை செய்யப்பட்ட முறையில் அவ்வாறு ஆஜராவதைக் கட்டாயப்படுத்தலாம்.

சில்லறை வழக்குகளில் தனிப்பட்ட ஆஜர் கட்டளை

206. (1) சில்லறைக் குற்றமொன்றை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுகிற நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) ஒருவரின் கருத்தின்படி, அவ் வழக்கானது 260 ஆவது பிரிவின்படி சுருக்கு விசாரணை செய்து முடிவு செய்யக்கூடியதானால், அந்த நடுவர் குறிப்பிட்ட ஒரு தேதியில் தம்முன் நேர்முகமாக அல்லது வாதுரைஞர் மூலமாக ஆஜராகுமாறே, அல்லது தம் முன் ஆஜராகாமலேயே குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ள அவர் விரும்புவாரானால், எழுத்துவடிவிலான அந்த வாதுரையையும் ஆஜர் கட்டளையில் குறிப்பிடப்பட்ட அபராதத் தொகையையும், குறிப்பிட்ட தேதிக்கு முன்பு, அஞ்சல் மூலமாக அல்லது தூதுவர் மூலமாகத் தம்மிடம் அனுப்புமாறே, அல்லது அவருக்காக அவரது வாதுரைஞர் ஆஜராகி அவ் வாதுரைஞர் மூலமாகவே குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள விரும்புவாரானால், அவரது சார்பாகக் குற்றச்சாட்டுக்கு வாதுரை செய்ய அவ் வாதுரைஞருக்கு, எழுத்து வடிவில், அதிகாரமளிக்குமாறும், அவ்வாதுரைஞர் மூலமாக அபராதத்தைச் செலுத்துமாறும் எதிரியைக் கோரும் ஆஜர் கட்டளையை அதற்கு மாறுகச் செய்வதற்குத் தாம் கருத்துக்கொண்டிருந்தாலன்றி, பிறப்பிக்க வேண்டும்; அவ்வாறு மாறுன கருத்துக்கொண்டிருந்தால், அதற்குரிய காரணங்களை எழுத்துமூலம் பதிவு செய்தல் வேண்டும்.

ஆனால், அத்தகைய ஆஜர் கட்டளையில் குறிப்பிடப்பட்ட அபராதத் தொகை ஐநூறு ரூபாய்க்கு மேற்படுதல் ஆகாது.

(2) இந்தப் பிரிவின் நோக்கங்களைப் பொறுத்த மட்டில், "சில்லறைக் குற்றம்" என்பது ஆயிரம் ரூபாய்க்கு மேற் படாத அபராதம் மட்டுமே விதித்துத் தண்டிப்பதற்குரிய குற்றம் எதுவும் என்று பொருள்படும்; ஆனால் 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின்படியோ (Motor Vehicles Act, 1939) எதிரியை அவர் இல்லாத நிலையில் குற்றம் செய்ததாக ஒப்புக்கொண்டதன்பேரில் தண்டனைத் தீர்ப்பு உரைப்பதற்கு வகைசெய்கிற வேறெந்தச் சட்டத்தின் படியோ அவ்வாறு தண்டிப்பதற்குரியதான குற்றம் எதையும் உள்ளடக்காது.

காவலறிக்கை மற்றும் வேறு பதிவேடுகளின் நகலை எதிரிக்கு வழங்குதல்.

207. காவலறிக்கையின்பேரில் நடவடிக்கை தொடரப்பட்டிருக்கிற வழக்கு எதிலும், நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) பின்வருவனவற்றில் ஒவ்வொன்றின் நகலையும், கட்டணமின்றி, எதிரிக்குக் காமதமின்றி அளித்தல் வேண்டும் :—

(i) காவலறிக்கை;

(ii) 154 ஆவது பிரிவின்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை;

(iii) அரசு தரப்பு, தன் சாட்சிகளாக விசாரிக்க உத்தேசித்துள்ள அனைவராலும் தரப்பட்டவையும், 161 ஆவது பிரிவின் (3) ஆவது உட்பிரிவின்படி பதிவு செய்யப்பட்டவையுமான வாக்குமூலங்களிலிருந்து, எந்தப் பகுதியை நீக்குவதற்காக 173 ஆவது பிரிவின் (6) ஆவது உட்பிரிவின்படி காவல் அலுவலர் கேட்டுக்கொண்டுள்ளாரோ அந்தப் பகுதியை நீக்கிவிட்டு, மீதியுள்ள வாக்குமூலங்கள்;

(iv) 164 ஆவது பிரிவின்படி பதிவு செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள், மற்றும் வாக்குமூலங்கள், எவையேனுமிருப்பின், அவை;

(v) 173 ஆவது பிரிவின் (5) ஆவது உட்பிரிவின்படி காவலறிக்கையுடன் நடுவருக்கு (மாஜிஸ்ட்ரேட்) அனுப்பப்பட்ட வேறெந்தப் பத்திரமும் அல்லது தொடர்புற்ற அவற்றின் எடுகுறிப்பும்;

ஆனால், நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) (iii) ஆவது கூறில் குறிப்பிடப்பட்ட வாக்குமூலத்தின் பகுதி எதையேனும் பார்த்த பிறகும், அவ்வாறு கேட்டுக்கொள்வதற்குக் காவல் அலுவலர் தந்த காரணங்களைக் கவனித்த பிறகும், அவ்

வாக்குமூலத்தில் அந்தப் பகுதியின் அல்லது அந்தப் பகுதியில் அந்த நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) தக்கதென நினைக்கும் அதன் பாகத்தில் தகலொன்று எதிரிக்கு அளிக்கப்பட வேண்டுமென்று உத்தரவிடலாம்:

மேலும், (v) ஆவது கூறில் குறிப்பிடப்பட்ட எந்தப் பத்திரமேனும் அளவில் மிகுந்து இருக்கிறதென்பதாக நடுவருக்குத் (மாஜிஸ்ட்ரேட்) திருப்தி ஏற்படுமாயின், அவர் அதன் நகலொன்றை எதிரிக்கு அளிப்பதற்குப் பதிலாக, அதை அவர் நேர்முகமாகவோ வாதுரைஞர் மூலமாகவோ நீதிமன்றத்தில் பார்வையிட மட்டுமே அனுமதிக்கப்படுவார் என்பதாக உத்தரவிடுதல் வேண்டும்.

செஷன்ஸ் நீதிமன்றத்தால் விசாரணை செய்யத்தக்க வேறு வழக்குகளில் வாக்குமூலங்கள் மற்றும் பத்திரங்களின் நகல்களை வழங்குதல்.

208. ஒரு காவலறிக்கையின் பேரில்லாமல் வேறுவிதமாகத் தொடரப்பட்ட வழக்கொன்றில், 241 ஆவது பிரிவின்படி நீதிமுறைக் கட்டளையைப் பிறப்பிக்கிற நடுவருக்கு (மாஜிஸ்ட்ரேட்) அக்குற்றமானது செஷன்ஸ் நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யத்தக்கதென்பதாகத் தோன்றுமிடத்து, அந்த நடுவர் (மாஜிஸ்ட்ரேட்), பின்வருவனவற்றில் ஒவ்வொன்றின் நகலையும், தாமதமின்றி, எதிரிக்கு கட்டணமில்லாமல் அளித்தல் வேண்டும்:—

(i) நடுவரால் விசாரிக்கப்பட்டு 200 ஆவது பிரிவு அல்லது 202 ஆவது பிரிவின்படி பதிவு செய்யப்பட்ட அனைவருடைய வாக்குமூலங்களும்;

(ii) 161 ஆவது பிரிவு அல்லது 164 ஆவது பிரிவின்படி பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் மற்றும் ஒப்புதல் வாக்குமூலங்கள் எவையேனுமிருப்பின், அவை;

(iii) நடுவர் முன் (மாஜிஸ்ட்ரேட்) தாக்கல் செய்யப்பட்டவையும், வாதி தரப்பு ஆதாரமாகக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டவையுமான பத்திரங்கள் எவையும்;

ஆனால், அத்தகைய பத்திரம் எதுவும் அளவில் மிகுந்ததாக இருக்கிறது என்பதாக நடுவருக்குத் (மாஜிஸ்ட்ரேட்) திருப்திகரமாகத் தெரியுமாயின், அவர், அதன் நகலொன்றை எதிரிக்கு அளிப்பதற்குப் பதிலாக, அதை நேர்முகமாகவோ வாதுரைஞர் மூலமாகவோ நீதிமன்றத்தில் பார்வையிடுவதற்கு மட்டுமே எதிரி அனுமதிக்கப்படுவார் என்பதாக உத்தரவிடுதல் வேண்டும்.

குற்றமானது செஷன்ஸ் நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யத்தக்கதாயிருக்கும் போது, வழக்கை அந்த நீதிமன்றத்திடம் மேல் விசாரணைக்கு அனுப்புதல்.

209. ஒரு காவலறிக்கையின் பேரிலோ வேறுவிதமாகவோ தொடரப்பட்ட வழக்கொன்றில், எதிரி, நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) முன் ஆஜராகும்போதும் அல்லது ஆஜர்படுத்தப்படும் போதும், அக் குற்றமானது செஷன்ஸ் நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யத்தக்கது என்பதாக நடுவருக்குத் (மாஜிஸ்ட்ரேட்) தோன்றும்போதும், அவர்—

(அ) அந்த வழக்கை செஷன்ஸ் நீதிமன்றத்திடம் மேல் விசாரணைக்காக அனுப்புதல் வேண்டும்;

(ஆ) ஜாமீன் தொடர்பாக இந்தச் சட்டத்தில் உள்ள வகைமுறைகளுக்கு உட்பட்டு, விசாரணையின்போதும், அது முடிவடையும்வரையிலும், எதிரியைக் காவலில் வைக்கக் கட்டளையிடவேண்டும்;

(இ) அவ் வழக்கின் பதிவுக்கட்டையும் சாட்சியத்தில் தாக்கல் செய்யப்படவேண்டிய பத்திரங்கள் மற்றும் உருப்படிகள் எவையேனுமிருப்பின், அவற்றையும் அந்த நீதிமன்றத்திற்கு அனுப்புதல் வேண்டும்;

(ஈ) செஷன்ஸ் நீதிமன்றத்திடம் அவ் வழக்கை மேல் விசாரணைக்காக அனுப்பப்பட்டதைக் குறித்து, அரசு குற்றத் துறை வழக்குரைஞருக்கு அறிவித்தல் வேண்டும்.

ஒரே குற்றத்தைப் பொறுத்த முறையீட்டு வழக்கு ஒன்றும் காவல் துறை புலனாய்வும் இருக்கும் போது, பின் பற்றப்பட வேண்டிய நடைமுறை.

210. (1) ஒரு காவலறிக்கையின்பேரில்லாமல் வேறுவிதமாகத் தொடரப்பட்ட வழக்கொன்றில் (இதற்குப் பின் முறையீட்டு வழக்கென்று குறிப்பிடப்படுவது) நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) தம்மால் நடத்தப்படும் பரிசீலனை அல்லது விசாரணையின்போது, அந்தப் பரிசீலனை அல்லது விசாரணைக்குரிய விஷயமாக இருக்கின்ற குற்றத்தின் தொடர்பாகக் காவல்துறையின் புலனாய்வு நடந்துகொண்டிருக்கிறது என்பதாகத் தமக்குத் தெரிவிக்கப்படும்போது, அவர் அத்தகைய பரிசீலனை அல்லது விசாரணையின் நடவடிக்கைகளை நிறுத்தி வைத்தல் வேண்டும்; மற்றும் புலனாய்வை நடத்துகிற காவல் அலுவலரிடமிருந்து அவ் விஷயத்தைக் குறித்து அறிக்கை யொன்றை அனுப்புமாறு கேட்கவேண்டும்.

(2) புலனாய்வு செய்கிற காவல் அலுவலரால் 173 ஆவது பிரிவின்படி அறிக்கையொன்று தரப்பட்டு, அந்த அறிக்கையின்பேரில் முறையீட்டு வழக்கில் எதிரியாக உள்ள ஒருவர் மீது, நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) குற்றம் எதையேனும்

விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுவாராஞல், அந்த நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) அம்முறையீட்டு வழக்கையும், காவலறிக்கையிலிருந்து எழுகிற வழக்கையும் அவ் வழக்குகள் இரண்டுமே ஒரு காவல் அறிக்கையின்பேரில் தொடரப்பட்டவைபோன்று, சேர்ந்தாணையாகப் பரிசீலனையோ விசாரணையோ செய்தல் வேண்டும்.

(3) அந்தக் காவலறிக்கையானது முறையீட்டு வழக்கில் எதிரியாக உள்ள எவருக்கும் சம்பந்தம் இல்லாததாக இருந்தாலும், அல்லது நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) காவலறிக்கையின்பேரில் குற்றம் எதையும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமல் இருந்தாலும், அவர் தம்மால் நிறுத்திவைக்கப்பட்ட பரிசீலனை அல்லது விசாரணையை, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கிணங்க, மேற்கொண்டு நடத்துதல் வேண்டும்.

அத்தியாயம் XVII.

குற்றச்சாட்டு.

அ. குற்றச்சாட்டுகளின் படிவம்.

குற்றசாட்டின உள்ளடக்கம்.

211. (1) இந்தச் சட்டத்தின்படியுள்ள ஒவ்வொரு குற்றச் சாட்டும், எந்தக் குற்றம் செய்ததாக எதிரி குற்றஞ்சாட்டப் படுகிறார் என்பதை உரைத்தல் வேண்டும்.

(2) குற்றமொன்றை எற்படுத்துகிற சட்டம் அதற்குக் குறிப்பான பெயர் எதையேனும் வழங்குமானால், அந்தக் குற்றச்சாட்டில் அக் குற்றம் அந்தப் பெயரால் மட்டுமே விவரிக்கப்படல் ஆகும்.

(3) குற்றமொன்றை எற்படுத்துகிற சட்டம் அதற்குக் குறிப்பான பெயர் எதையும் வழங்கவில்லையானால், எந்த அளவிற்கு அக் குற்றத்திற்குரிய இலக்கணத்தை உரைத்தால், குற்றஞ்சாட்டப்பட்டுள்ள விஷயத்தைப்பற்றி எதிரிக்கு அறிவிப்பதாகுமோ, அந்த அளவிற்கு அதை உரைத்தல் வேண்டும்.

(4) எந்தச் சட்டம் அல்லது சட்டத்தின் பிரிவுக்கு விரோதமாக அந்தக் குற்றம் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதோ, அந்தச் சட்டமும் அச் சட்டத்தின் பிரிவும் அந்தக் குற்றச்சாட்டில் சொல்லப்படுதல் வேண்டும்.

(5) குற்றச்சாட்டு செய்யப்பட்டுள்ளது என்பது சாட்டப் பட்ட குற்றமாக உருவாவதற்குச் சட்டத்தின்படி தேவையான சட்ட நிபந்தனை ஒவ்வொன்றும் குறிப்பிட்ட வழக்கில் நிறை வேற்றப்பட்டுள்ளது என்று சொல்வதற்குச் சமானமாகும்.

(6) குற்றச்சாட்டு நீதிமன்ற மொழியில் எழுதப்படுதல் வேண்டும்.

(7) முன்னமேயே ஏதேனுமொரு குற்றத்திற்காகத் தண்டனைத் தீர்ப்பு அளிக்கப்பட்டுள்ள எதிரியானவர், அத்தகைய முந்திய தண்டனைத் தீர்ப்பின் காரணத்தால், பிந்திய ஒரு குற்றத்திற்காக அதிகப்படியான தண்டனைக்கோ, வேறு வகையான தண்டனைக்கோ உள்ளாவாராலுலும் பிந்திய குற்றத்திற்காக அளிக்கத்தக்கது என்று நீதிமன்றம் நினைக்கும் தண்டனையைப் பாதிக்கச் செய்வதன்பொருட்டு, அத்தகைய முந்திய தண்டனைத் தீர்ப்பு நிரூபிக்கப்பட

வேண்டுமென்று கருதப்படுமாறும், முன்னமேயே ஆண்டனைத் தீர்ப்பு அளிக்கப்பட்டதா என்ற சங்கதியும் அளிக்கப்பட்ட தேதியும் இடமும் அந்தக் குற்றச்சாட்டில் குறிக்கப்படுதல் வேண்டும்; அந்தமாதிரியான குறிப்பு விடப்பட்டிருக்குமாயல், நீதிமன்றம், தீர்ப்புத் தவறானது பிறப்பிக்கப்படுவதற்கு முன்பு எப்போதாகிலும் அதைச் சேர்த்துக் கொள்ளலாம்.

எடுத்துக்காட்டுகள்.

(அ) "ஆ" வைக் கொலை செய்ததாக "அ" குற்றஞ் சாட்டப்படுகிறார். இவ்வாறு சொல்வது இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 299 மற்றும் 300 ஆகிய பிரிவுகளில் கொலைக் குற்றத்திற்குத் தரப்பட்ட இலக்கணத்திற்குள் "அ" வின் செயல் அமைந்தது என்பதாகவும், மேற்சொன்ன சட்டத்தின் பொதுவிதி விலக்குகளில் எதற்குள்ளும் அது அமையவில்லை என்பதாகவும், 300 ஆவது பிரிவின் ஐந்து விதிவிலக்குகளில் எதற்குள்ளும் அது அமையவில்லை என்பதாகவும் அல்லது, (1) ஆவது விதி விலக்கினுள் அமைந்ததாயின், அந்த விதிவிலக்குக்கான மூன்று நிலக்குகளில் ஒன்றோ மற்றொன்றோ அதன்மீது இயங்கியது என்பதாகவும் சொல்லுவதை ஒக்கும்.

(ஆ) சுடுவதற்கான கருவியொன்றின் மூலமாக "ஆ" வுக்கு கயேச்சையாகக் கொடுங்காயம் விளைவித்ததாக இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 326 ஆவது பிரிவின்படி "அ" குற்றஞ் சாட்டப்படுகிறார். இவ்வாறு சொல்வது, இப்படிப்பட்ட குற்றத்திற்கு மேற்சொன்ன சட்டத்தின் 335 ஆவது பிரிவில் வகை செய்யப்படவில்லை என்றும், பொது விதி விலக்குகள் அதன்மீது இயங்கவில்லை என்றும் சொல்லுவதை ஒக்கும்.

(இ) கொலை, ஏமாற்றுதல், திருட்டு, மிரட்டிப் பறித்தல், முறை பிறழ்ந்த புணர்ச்சி, அல்லது மிரட்டல் குற்றம், அல்லது போலி சொத்தடையாளக் குறியை உபயோகித்தல் ஆகிய குற்றங்களில் எதையேனும் செய்ததாக "அ" குற்றஞ் சாட்டப்படுகிறார். "அ" கொலை அல்லது ஏமாற்றுதல் அல்லது திருட்டு அல்லது மிரட்டிப் பறித்தல் அல்லது முறை பிறழ்ந்த புணர்ச்சி அல்லது மிரட்டல் ஆகிய குற்றங்களில் எதையேனும் செய்தார் என்பதாகவோ, அவர் போலி சொத்தடையாளக் குறியை உபயோகப்படுத்தினார் என்பதாகவோ, குற்றச்சாட்டானது இந்தியத் தண்டனைச் சட்டத்தில் அடங்கியுள்ள அக் குற்றங்களுக்கான

இலக்கணத்தை குறிக்காமலேயே சொல்லலாம். ஆனால் ஒவ்வொரு இனத்தைக் குறிக்கும்போதும், எந்தப் பிரிவுகளின்படி அந்தந்தக் குற்றம் தண்டிக்கப்படுவதற்குரியதோ அந்தந்தப் பிரிவுகளைக் குற்றச்சாட்டில் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஈ) ஒரு பொது ஊழியரின் சட்டபூர்வமான அதிகாரத்தின்பேரில் ஒரு சொத்தை விற்க முற்படும்போது, அந்த விற்பனைக்கு வேண்டுமென்றே இடையூறு செய்ததாக, இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 184 ஆவது பிரிவின்படி "அ" குற்றஞ்சாட்டப்படுகிறார். குற்றச்சாட்டும் அதே சொற்களில் அமைதல் வேண்டும்.

காலம், இடம் மற்றும் ஆளைப் பற்றிய விவரங்கள்.

212. (1) எந்த விஷயத்தைக் குறித்து எதிரி குற்றஞ் சாட்டப்படுகிறாரோ அந்த விஷயத்தைக் குறித்து அவருக்குத் தெரிவிப்பதற்கு நியாயமானபடி போதுமான அளவிற்குச் சொல்லப்படும் குற்றம் நிகழ்ந்த காலம், இடம் ஆகியவற்றைப் பற்றியும், எவருக்கெதிராக அல்லது எதைப்பொறுத்து அக் குற்றம் செய்யப்பட்டதோ அவர் (எவரேனுமிருப்பின்) அவரைப் பற்றியும்; அல்லது அப் பொருள் (ஏதேனுமிருப்பின்) அதைப் பற்றியுமான விவரங்கள் குற்றச்சாட்டில் அடங்கியிருத்தல் வேண்டும்

(2) நம்பிக்கை மோசடிக் குற்றமோ, பணம் அல்லது வேறு அசையும் பொருளை நேர்மையற்ற வகையில் கையாடிய குற்றமோ செய்ததாக எதிரி குற்றஞ்சாட்டப்படும்போது, குறிப்பிட்ட இனங்களையோ, சரியான தேதிகளை சுட்டிக்காட்டாமலேயே, எந்த மொத்தத் தொகையைப் பொறுத்து அல்லது எந்த அசையும் பொருளைப் பொறுத்து அக் குற்றம் செய்ததாகச் சொல்லப்படுகிறதோ, நிலவாத்திற் கேற்ப, அந்த மொத்தத் தொகையைக் குறிப்பிடுவதும் அல்லது அந்த அசையும் பொருளை விவரிப்பதும், எந்தத் தேதிகளுக்கிடையே அக் குற்றம் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதோ அந்தத் தேதிகளைக் குறிப்பிடுவதும் போதுமானதாகும்; அவ்வாறு வினையப்பட்ட குற்றச்சாட்டு 219 ஆவது பிரிவின் பொருளின்படி, ஒரு குற்றத்தைக் கொண்ட குற்றச்சாட்டாகவே கொள்ளப்படுதல் வேண்டும்:

ஆனால், அத்தகைய தேதிகளில் முதலாவதற்கும் கடைசியானதற்கும் இடையில் உள்ள காலம், ஓராண்டுக்கு மேற்படுதல் ஆகாது.

213. 211 மற்றும் 212 ஆகிய பிரிவுகளில் சொல்லப்பட்ட விவரங்கள், எதிரி குற்றஞ்சாட்டப்பட்டுள்ள விஷயத்தைக் குறித்து அவருக்குப் போதுமான தகவல் தெரிவிக்கவில்லை என்பதாக வழக்கில் தன்மை இருக்கும்போது, அக்குற்றச் சாட்டானது அந்த நோக்கத்திற்குப் போதுமான அளவில், சொல்லப்பட்ட குற்றம் எந்த முறையில் செய்யப்பட்டது என்பது பற்றிய விவரங்கள் அடங்கியதாயும் இருத்தல் வேண்டும். குற்றம் எந்த முறையில் செய்யப்பட்டதென்பதை எப்போது உரைத்தல் வேண்டும்.

எடுத்துக்காட்டுகள்.

(அ) குறிப்பிட்ட நேரத்திலும் இடத்திலும் குறிப்பிட்ட ஒரு பொருளைத் திருடியதாக "அ" குற்றஞ் சாட்டப் படுகிறார். அந்தத் திருட்டுக் குற்றம் எந்த முறையில் செய்யப்பட்டது என்பதை அக் குற்றச்சாட்டு விவரிக்கத் தேவையில்லை.

(ஆ) குறித்த நேரத்திலும் இடத்திலும் "ஆ" வை ஏமாற்றியதாக "அ" குற்றஞ்சாட்டப்படுகிறார். "ஆ" வை எந்த முறையில் "அ" ஏமாற்றினர் என்பதை அக் குற்றச் சாட்டு விவரித்தல் வேண்டும்.

(இ) குறித்த நேரத்திலும் இடத்திலும் பொய்ச்சாட்சி கந்ததாக "அ" குற்றஞ் சாட்டப்படுகிறார். "அ" விஸ்தரப்பட்ட சாட்சியத்தில் எந்தப் பகுதி பொய்யானதெனச் சொல்லப்படுகிறதோ அந்தப் பகுதியின் விவரங்களை அக் குற்றச்சாட்டு குறிப்பிடுதல் வேண்டும்.

(ஈ) பொது ஊழியரான "ஆ" குறித்த நேரத்திலும் இடத்திலும் தம் பொதுப் பணிகளை ஆற்றிவரும்போது, அவருக்கு இடையூறு விளைவித்ததாகக் "அ" குற்றஞ்சாட்டப் படுகிறார். "ஆ" தம் பணிகளை ஆற்றும்போது அவருக்கு எந்த முறையில் "அ" இடையூறு விளைவித்தார் என்பதை அக் குற்றச்சாட்டு விவரித்தல் வேண்டும்.

(உ) குறித்த நேரத்திலும் இடத்திலும் "ஆ" வைக் கொலை செய்ததாக "அ" குற்றஞ் சாட்டப்படுகிறார். எந்த முறையில் "ஆ" வைக் "அ" கொலை செய்தார் என்பதை அக் குற்றச்சாட்டு குறிப்பிடத் தேவையில்லை.

(ஊ) தண்டனையிலிருந்து "ஆ" வைத் தப்புவிக்கக் கருதி, சட்டத்தின்படியான உத்தரவொன்றிற்கு கீழ்ப்படிய வில்லையென்று "அ" குற்றஞ்சாட்டப்படுகிறார். குற்றச் சாட்டுக்குள்ளான கீழ்ப்படியாமையையும், மீறப்பட்ட சட்டத்தையும் அக் குற்றச்சாட்டு விவரித்தல் வேண்டும்.

குற்றச்சாட்டிலுள்ள சொற்களோ எந்தச் சட்டத்தின்படி குற்றம் தண்டிப்பதற்குரியதோ அந்தச் சட்டத்தின் பொருளில் எடுத்துக் கொள்ளவேண்டுமென்பது.

214. ஒவ்வொரு குற்றச்சாட்டிலும் குற்றத்தை விவரிப்பதற்குப் பயன்படுத்துகிற சொற்களை அக் குற்றம் எந்தச் சட்டத்தின்படி தண்டிப்பதற்குரியதோ அந்தச் சட்டம் அவற்றிற்குத் தருகிற பொருளில் பயன்படுத்தியிருப்பதாகக் கொள்ளுதல் வேண்டும்.

பிழைகளின் விளைவு.

215. குற்றத்தையோ சொல்லப்படவேண்டியுள்ள விவரங்களையோ குற்றச்சாட்டில் குறிப்பிடுவதில் ஏற்பட்ட பிழை எதுவும், அக் குற்றத்தை அல்லது அந்த விவரங்களைக் குறிப்பிடாமல் விட்டுவிடுதல் எதுவும், அத்தகைய பிழையினாலோ விடுதலாலோ உள்ளபடியே எதிரி திசை திருப்பப்பட்டதோடு நீதியும் தவறியிருக்கிறது என்முலன்றி, வழக்கின் எந்தக் கட்டத்திலும் சாரமுள்ளவையாகக் கருதப்படுதல் ஆகாது.

எடுத்துக்காட்டுகள்.

(அ) "தம் வசத்தில் வரும்போதே அது கள்ள நாணயம் எனத் தெரிந்து அதைத் தம் வசத்தில் வைத்திருந்ததாக", இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 242 ஆவது பிரிவின்படி "அ" குற்றஞ்சாட்டப்படுகிறார்; அக் குற்றச்சாட்டில், "மோசடியாக" என்னுஞ் சொல் விட்டுவிடப்படுகிறது. இந்த விடுதலால் உள்ளபடியே "அ" தவற்றுக்கு உள்ளாக்கப் பட்டார் என்பதாகத் தோன்றினாலன்றி, அந்தப் பிழை சார முள்ளதாகக் கருதப்படுதல் ஆகாது. 45/1860.

(ஆ) "ஆ" வை ஏமாற்றியதாக "அ" குற்றஞ்சாட்டப் படுகிறார். அவர் "ஆ" வை ஏமாற்றிய முறையைப் பற்றி அக் குற்றச்சாட்டில் விவரிக்கப்படவில்லை; அல்லது தப்பாக விவரிக்கப்படுகிறது. "அ" தாமே எதிர்வாதஞ் செய்து சாட்சிகளை விசாரித்து அந்த நிகழ்ச்சி நடந்த முறையைப் பற்றி, தம் சொந்த விவரணத்தைக் கூறுகிறார். ஏமாற்றிய முறையை விவரிக்க விடுதலானது சாரமானதன்று என்பதாக இதிலிருந்து நீதிமன்றம் ஊகிக்கலாம்.

(இ) "ஆ" வை ஏமாற்றியதாக "அ" குற்றஞ் சாட்டப்படுகிறார். அவர் "ஆ" வை ஏமாற்றிய முறையைப் பற்றி அக் குற்றச்சாட்டில் விவரிக்கப்படவில்லை. "அ" வுக்கும் "ஆ" வுக்குமிடையே பல நடவடிக்கைகள் இருந்தன. அவற்றுள் எதை அந்தக் குற்றச்சாட்டு குறிப்பிடுகிறது என்பதை "அ" அறிவதற்கு வழியில்லை என்பதுடன், அவர் எதிர்வாதம் செய்யவும் முற்படவில்லை. ஏமாற்றிய முறையை

விவரிக்காமல் விடுதலானது, இந்த வழக்கில், ஒரு சாரமுள்ள பிழையே என்பதாக இத்தகைய சங்கதிகளிலிருந்து நீதி மன்றம் ஊகிக்கலாம்.

(ஈ) கோடா பக்ஷி என்பவரை 1882 ஆம் ஆண்டு ஜூலைவரி 21 ஆம் நாளன்று கொலை செய்ததாக "அ" குற்றஞ் சாட்டப்படுகிறார். உள்ளபடியே கொலை செய்யப்பட்ட ஆளின் பெயர் ஹைதர் பக்ஷி என்பதாகும்; கொலை நடந்த தேதியோ 1882 ஆம் ஆண்டு ஜூலைவரி 20 ஆம் நாளாகும். ஒரே ஒரு கொலையைத் தவிர வேறு எந்தக் கொலையையும் செய்ததாக "அ" எப்போதுமே குற்றஞ் சாட்டப்படவில்லை. மற்றும் அவர், ஹைதர் பக்ஷி கொலையை மட்டுமே நேரிற்பார்த்து, நடுவர் முன் நடந்த விசாரணையில் உடனிருந்து கேட்டுள்ளார். இந்தச் சங்கதிகளிலிருந்து "அ" தவற்றுக்கு உள்ளாக்கப் படவில்லை என்பதாகவும் குற்றச்சாட்டிலுள்ள பிழை சார மற்றது என்பதாகவும் நீதிமன்றம் ஊகிக்கலாம்.

(உ) 1882 ஆம் ஆண்டு ஜூலைவரி 20 ஆம் நாளன்று ஹைதர் பக்ஷையும் 1882 ஆம் ஆண்டு ஜூலைவரி 21 ஆம் நாளன்று (அந்தக் கொலைக்காகத் தம்மைக் கைது செய்ய முயன்ற) கோடா பக்ஷையும் கொலை செய்ததாக "அ" குற்றஞ்சாட்டப்பட்டார். ஹைதர் பக்ஷின் கொலைக்காகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தபோது, கோடா பக்ஷின் கொலைக்காக அவர் விசாரணை செய்யப்பட்டார். அவரது எதிர்வாதத்திற்கு ஆதாரவாக ஆஜராகியிருந்த சாட்சிகள் ஹைதர் பக்ஷின் வழக்கிற்குரிய சாட்சிகள்; இதிலிருந்து "அ" தவற்றுக்கு உள்ளாக்கப்பட்டார் என்பதாகவும், பிழை சாரமானது என்பதாகவும் நீதிமன்றம் ஊகிக்கலாம்.

நீதிமன்றம் குற்றச்சாட்டில் மாறுதல் செய்யலாம்.

216. (1) நீதிமன்றம் எதுவும் தீர்ப்புப் பகருவதற்கு முன்பு எந்த வேளையிலும், எந்தக் குற்றச்சாட்டையும் மாற்றவோ, கூட்டவோ செய்யலாம்.

(2) அத்தகைய மாற்றல் அல்லது கூட்டல் ஒவ்வொன்றும் எதிரிக்குப் படித்துக்காட்டப்படவும் விளக்கப் படவும் வேண்டும்.

(3) குற்றச்சாட்டு ஒன்றில் செய்யப்படும் மாற்றல் அல்லது கூட்டலின் தன்மையானது விசாரணையை உடனடியாக நடத்துவது எதிர்வாதம் புரிவதற்கு எதிரிக்கோ, வழக்கை மேல் நடத்துவதற்கு அரசுத் தரப்புக்கோ பாதகம் விளைவிக்கக் கூடியதாக இல்லை என்று நீதிமன்றம் கருது

மானால், அது தன் முந்தம்போல் அத்தகைய மாற்றல் அல்லது கூட்டலுக்குப் பின்பு, மாற்றல் செய்யப்பட்ட அல்லது கூட்டப்பட்ட குற்றச்சாட்டே மூலக் குற்றச்சாட்டாக இருந்தது போன்று, விசாரணையை மேற்கொண்டு நடத்தலாம்.

(4) அந்த மாற்றல் அல்லது கூட்டலின் தன்மையானது விசாரணையை உடனடியாக மேற்கொண்டு நடத்துவது, மேற்சொல்லவாறு எதிரிக்கோ அரசுத் தரப்புக்கோ பாதகம் விளைவிக்கக்கூடும் என்பதாக நீதிமன்றம் கருதுமானால், அது புதிய விசாரணை ஒன்றை நடத்த உத்தரவிடலாம்; அல்லது அவசியப்படும் கால அளவிற்கு விசாரணையை ஒத்திப் போடலாம்.

(5) மாற்றல் செய்யப்பட்ட அல்லது கூட்டப்பட்ட குற்றச்சாட்டில் சொல்லப்பட்ட குற்றமானது, அதற்காக வழக்குத் தொடர்வதற்கு முன் ஒப்பளிப்பு அவசியமாக இருக்கிற ஒரு குற்றமாக இருக்குமானால், எந்தச் சங்கதிகளின் பேரில் மாற்றல் செய்யப்பட்ட அல்லது கூட்டப்பட்ட அக் குற்றச்சாட்டு அமைந்திருக்கிறதோ, அதே சங்கதிகளின் பேரில் வழக்குத் தொடர்வதற்காக ஏற்கனவே ஒப்பளிப்பைப் பெற்றிருந்தாலன்றி, அந்த வழக்கானது, அத்தகைய ஒப்பளிப்பு பெறும்வரை மேல் நடத்தப்படுதல் ஆகாது.

குற்றச்சாட்டில் மாற்றல் செய்யப்படும் போது சாட்சி தன்னை மீண்டும் கூப்பிடுதல்.

217. விசாரணை தொடங்கியதற்குப் பின்பு, நீதிமன்றத்தால் ஒரு குற்றச்சாட்டு மாற்றல் செய்யப்படும்போதெல்லாம் அல்லது கூட்டப்படும்போதெல்லாம்—

(அ) அலைக்கழிக்கும் பொருட்டு அல்லது தாமதப் படுத்தும் பொருட்டு அல்லது நீதியின் நோக்கத்தைக் குலைப் பதற்காக, நிலவரத்திற்கேற்ப, அரசு வழக்குரைஞரோ, எதிரியோ, விசாரிக்கப்பட்டிருக்கக்கூடிய சாட்சியை மீண்டும் கூப்பிட அல்லது மறுவிசாரணை செய்ய விரும்புகிறார் என்பதாக நீதிமன்றம் எழுத்து வடிவில் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காகக் கருதினாலன்றி, அத்தகைய சாட்சி எவரையும் மீண்டும் கூப்பிட்டு, அல்லது அவருக்கு மீண்டும் ஆஜர் கட்டளை பிறப்பித்து, அத்தகைய மாற்றல் அல்லது கூட்டல் குறித்து விசாரணை செய்வதற்கு அரசு வழக்குரைஞரும் எதிரியும் அனுமதிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) மேற்கொண்டு சாட்சி எவரையும் கூப்பிடுவதற்கும் கூட அரசு வழக்குரைஞரும் எதிரியும் அந்தச் சாட்சி முக்கிய மானவர் என்று நீதிமன்றம் கருதுமானால் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

ஆ. குற்றச் சாட்டுகளை இணைத்தல்.

தனிப்பட்ட குற்றங்களுக்குத் தனித் தனியான குற்றச்சாட்டு.

218. (1) ஒருவர்மீது சாட்டப்பட்டுள்ள தனிப்பட்ட குற்றம் ஒவ்வொன்றுக்குமாக தனித்தனியான குற்றச்சாட்டு ஒன்று இருத்தல் வேண்டும்; மற்றும் அத்தகைய குற்றச் சாட்டு ஒவ்வொன்றும் தனித்தனியாகவே விசாரணை செய்யப் படுதல் வேண்டும்.

ஆனால், எதிரி எழுத்து வடிவிலான விண்ணப்பம் மூலமாக, அவ்வாறு விரும்புவாராயின், அத்தகையவருக்குச் சேர்ந்தாரணையான விசாரணையால் பாதகம் ஏற்படக்கூடியதாக இல்லை என்று நடுவர் கருதுவாராயினும், அத்தகையவருக்கெதிராக வரையப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தையும், அல்லது அவற்றில் எத்தனையையேனும் ஒன்று சேர்த்து விசாரிக்கலாம்.

(2). (1) ஆவது உட்பிரிவில் உள்ள எதுவும் 219, 220, 221 மற்றும் 223 ஆகிய பிரிவுகளிலுள்ள வகைமுறைகள் செயற் படுவதைப் பாதித்தல் ஆகாது.

எடுத்துக்காட்டு.

ஒரு சமயத்தில் திருடியதாகவும், வேறொரு சமயத்தில் கொடுங்காயம் விளைவித்ததாகவும் "அ" குற்றஞ்சுமத்தப் படுகிறார். திருட்டுக் குற்றத்திற்காகவும் கொடுங்காயம் விளைவித்ததற்காகவும் "அ" தனித்தனியாகக் குற்றஞ் சுமத்தப்பட்டு, தனித்தனியாக விசாரணை செய்யப்படுதல் வேண்டும்.

ஒரே ஆண்டிற்குள் செய்யப்பட்ட ஒரே இனத்தைச் சேர்ந்தமூன்று குற்றங்களைக் குற்றச்சாட்டில் ஒன்று சேர்க்கலாம் என்பது

219. (1) ஒருவர் ஒரே இனத்தைச் சேர்ந்த ஒன்றுக்கு மேற்பட்ட குற்றங்களை, அவைகளின் முதல் குற்றத்திலிருந்து கடைசிக் குற்றம் வரை பன்னிரண்டு மாத கால இடை வெளிக்குள் செய்ததாகக் குற்றஞ் சாட்டப்படும்போது, அக் குற்றங்கள் ஒரே ஆளைப் பொறுத்தவையாயினும் அல்லவாயினும் அவர் அக் குற்றங்களில் மூன்றுக்கு மேற்படாது எத்தனை குற்றங்களையும் செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு, அவற்றிற்காக ஒரே விசாரணையில் விசாரிக்கப்படலாம்.

45/1860.

(2) குற்றங்கள் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் அல்லது சிறப்பு அல்லது வட்டாரச் சட்டத்தின் ஒரே பிரிவின்படி ஒரே அளவு தண்டனை விதிப்பதற்குரியனவாக இருக்கும்போது, அவை ஒரே இனத்தைச் சேர்ந்தவையாகும்;

45/1860

ஆனால், இந்தப் பிரிவின் நோக்கத்தைப் பொறுத்த மட்டில், இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 379 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரிய ஒரு குற்றமானது, அந்தச் சட்டத்தின் 380 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரிய ஒரு குற்றம் எந்த இனத்தைச் சேர்ந்ததோ அதே இனத்தைச் சேர்ந்ததாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் மேற் சொன்ன சட்டத்தின், அல்லது சிறப்பு அல்லது வட்டாரச் சட்டத்தின் எந்தப் பிரிவின்படியேனும் தண்டிப்பதற்குரிய ஒரு குற்றமானது அத்தகைய குற்றத்தைச் செய்வதற்கான முயற்சியும் ஒரு குற்றமாக இருக்கும்போது, அத்தகைய முயற்சி எந்த இனத்தைச் சேர்ந்ததோ அதே இனத்தைச் சேர்ந்த ஒரு குற்றமாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட குற்றங்களுக்கான விசாரணை.

220. (1) ஒரு செய்கைத் தொடரிலுள்ள செய்கைகள் ஒரே நடவடிக்கை உருவாகுமளவிற்கு ஒன்றோடொன்று இணைந்திருந்து அப்படிப்பட்ட தொடரில் ஒரே ஆளால் ஒன்றுக்கு மேற்பட்ட குற்றங்கள் செய்யப்படுமாறால், அவர் அத்தகைய குற்றம் ஒவ்வொன்றுக்காகவும் குற்றஞ் சாட்டப்பட்டு, ஒரே விசாரணையில் விசாரணை செய்யப் படலாம்.

(2) 212 ஆவது பிரிவின் (2) ஆவது உட்பிரிவில் அல்லது 219 ஆவது பிரிவின் (1) ஆவது உட்பிரிவில் வகை செய்யப் பட்ட நம்பிக்கை மோசடி அல்லது நேர்மையற்ற சொத்துக் கையாடல் ஆகிய குற்றங்களில் ஒன்றையோ மேற்பட்ட வற்றையோ செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர், அத்தக் குற்றம் அல்லது குற்றங்களைச் செய்வதை எளிதாக்கும் பொருட்டு அல்லது அதை அல்லது அவற்றைச் செய்வதை மறைக்கும் பொருட்டு, பொய்க்கணக்கு எழுதுதல் குற்றம் ஒன்றையோ ஒன்றுக்கு மேற்பட்டவற்றையோ செய்ததாகக் குற்றஞ் சாட்டப்படும்போது, அவர் அத்தகைய குற்றம் ஒவ்வொன்றுக்குமாகக் குற்றஞ் சாட்டப்பட்டு, ஒரே விசாரணையில் விசாரணை செய்யப்படலாம்.

(3) சொல்லப்பட்ட செய்கைகள் ஒரு குற்றமாக அமைந்து, அந்தக் குற்றமானது குற்றங்களை வரையறை செய்தும் அல்லது தண்டனை விதித்தும் அவ்வப்போது அமலி லுள்ள ஏதேனுமொரு சட்டத்தின் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தனித்தனி இலக்கணங்களுக்குள் அமையுமானால், அவற்றைச் செய்ததாகக் குற்றஞ் சுமத்தப்

பட்டவர் அத்தகைய குற்றங்களில் ஒவ்வொன்றுக்குமாக ஒரே விசாரணையில் குற்றஞ்சாட்டப்பட்டு, விசாரணை செய்யப் படலாம்.

(4) பல்வேறு செய்கைகளில் ஒன்றோ, ஒன்றுக்கு மேற் பட்டவையோ அதுவே அல்லது அவையே ஒரு குற்றமாக அமைவதாக இருந்து, அவை இணைக்கப்படும்போது வேறொரு குற்றம் உருவாகுமானால், அச் செய்கைகளைச் செய்ததாகக் குற்றஞ்சுமத்தப்பட்டவர் அச் செய்கைகளின் தொகுப்பில் உருவான குற்றத்திற்காகவும், அத்தகைய செய்கைகளில் எதேனுமொன்றால் அல்லது மேற்பட்டவற்றால் அமைந்த குற்றம் எதொன்றிற்காகவும், ஒரே விசாரணையில் குற்றஞ் சாட்டப்பட்டு விசாரணை செய்யப்படலாம்.

(5) இந்தப் பிரிவில் அடங்கியுள்ள எதுவும் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 71 ஆவது பிரிவைப் பாதிப்ப தாகாது. 45/1860.

(1) ஆவது உட்பிரிவுக்கு எடுத்துக்காட்டுகள்.

(அ) சட்டபூர்வமான காவலிலுள்ள "ஆ" வை "அ" விடுவிக்கிறார்; அவ்வாறு செய்யும்போது, எந்தக் காவலரது காவலில் "ஆ" இருந்தாரோ அந்தக் காவலரான "இ" என்பவருக்குக் கொடுங்காயம் விளைவிக்கிறார். இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 225 மற்றும் 333 ஆகிய பிரிவுகளின் படியுள்ள குற்றங்களைச் செய்ததாகக் "அ" குற்றஞ்சாட்டப் பட்டு, தண்டிக்கப்படலாம். 45/1860.

(ஆ) முறை பிறழ்ந்த புணர்ச்சி செய்யும் நோக்கத் தோடு பகலில் கன்னமிடுங்குற்றத்தை "அ" செய்கிறார்; அத்துடன், அவ்வாறு புகுந்த வீட்டில், "ஆ" வின் மனைவி யிடம் முறை பிறழ்ந்த புணர்ச்சி செய்கிறார். இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 454 மற்றும் 497 ஆகிய பிரிவுகளின் படியுள்ள குற்றங்களைச் செய்ததாக "அ" தனித்தனியாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, தண்டிக்கப்படலாம். 45/1860

(இ) "இ" என்பவரின் மனைவியான "ஆ" விடம் முறை பிறழ்ந்த புணர்ச்சி செய்யும் நோக்கத்தோடு "இ" என்பவரிடமிருந்து, "ஆ" வை "அ" பசப்பிக் கடத்திச் செல்கிறார்; அதன்பின் அவரிடம் முறை பிறழ்ந்த புணர்ச்சி செய்கிறார். இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 498 மற்றும் 497 ஆகிய பிரிவுகளின்படியுள்ள குற்றங்களைச் செய்ததாக "அ" தனித்தனியாகக் குற்றஞ் சாட்டப்பட்டு, தண்டிக்கப் படலாம். 45/1860.

(ஈ) போலி முத்திரைகள் என்று தெரிந்தும், இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 466 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரிய பல்வேறு திருத்தங்களைச் செய்யும் பொருட்டு அவற்றைப் பயன்படுத்தும் நோக்கத்தோடும் பல்வேறு முத்திரைகளை "அ" தம் கைவசம் வைத்திருக்கிறார். இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 473 ஆவது பிரிவின்படி தம் கைவசம் வைத்திருக்கிற ஒவ்வொரு முத்திரை சம்பந்தமாகவும் "அ" தனித்தனியாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, தண்டிக்கப்படலாம். 45/1860.

(உ) "ஆ" வைக் கேடு விளைவிக்கும் நோக்கத்தோடு, அவர் மீது குற்ற வழக்கு நடவடிக்கையொன்றை, அந்த நடவடிக்கைக்கு நியாயமான அல்லது சட்டபூர்வமான ஆதாரம் எதுவுமில்லை என்று தெரிந்து, "அ" தொடர்கிறார்; மற்றும் குற்றமொன்றை "ஆ" செய்திருப்பதாகக் குற்றஞ் சாட்டுவதற்கு நியாயமான அல்லது சட்டபூர்வமாக அதிகாரம் எதுவுமில்லை என்று தெரிந்தே பொய்யாகக் குற்றஞ் சாட்டுகிறார். இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 211 ஆவது பிரிவின்படி, இரண்டு குற்றங்களைச் செய்ததாகத் தனித் தனியாக "அ" குற்றஞ்சாட்டப்பட்டு, தண்டிக்கப்படலாம். 45/1860.

(ஊ) "ஆ" வைக் கேடு விளைவிக்கும் நோக்கத்தோடு, குற்றமொன்றை அவர் செய்திருப்பதாக, குற்றச்சாட்டுக்கு நியாயமான அல்லது சட்டபூர்வமான ஆதாரம் எதுவுமில்லை என்று தெரிந்தே "அ" பொய்யாக "ஆ" மீது குற்றஞ் சுமத்துகிறார். விசாரணையில் "ஆ" வைக் மரணதண்டனை தீர்ப்புக் கிடைக்கும்படி செய்யும் நோக்கத்தோடு, அவருக்கெதிராக "அ" பொய்ச் சாட்சி சொல்கிறார். இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 211 மற்றும் 194 ஆகிய பிரிவுகளின்படி குற்றங்களைச் செய்ததாகக் "அ" தனித்தனியாகக் குற்றஞ் சாட்டப்பட்டு, தண்டிக்கப்படலாம். 45/1860

(எ) கலகம் செய்யும் குற்றம், கொடுங்காயம் விளைவிக்கும் குற்றம், மற்றும் கலகத்தை ஒடுக்கும் கடமையை உடைய ஒரு பொது ஊழியர் அக் கடமையை ஆற்றும் வகையில் அக் கலகத்தை ஒடுக்க முனையும்போது அவரைத் தாக்கிய குற்றம் ஆகியவற்றை "அ" என்பவர் வேறு ஆறு பேர்களுடன் சேர்ந்து செய்கிறார். இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 147, 325 மற்றும் 152 ஆகிய பிரிவுகளின்படி குற்றங்களைச் செய்ததாக "அ" தனித்தனியாகக் குற்றஞ் சாட்டப்பட்டு, தண்டிக்கப்படலாம். 45/1860.

(எ) "அ", "இ" மற்றும் "உ" ஆகியவர்களுக்குப் பீதி உண்டாக்கும் நோக்கத்தோடு அவர்களது உடல்களுக்குக் கேடு விளைவிப்பதாக, எக காலத்தில் அவர்களை "அ" அச்சுறுத்துகிறார். இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 506 ஆவது பிரிவின்படி மூன்று குற்றங்களைச் செய்ததாக ஒவ்வொரு குற்றத்திற்கும் "அ" குற்றஞ்சாட்டப்பட்டுத் தண்டிக்கப்படலாம். 46 1360.

(ஐ) முதல் (ந) வரையுள்ள எடுத்துக்காட்டுகளில் குறிப்பிடப்படும் தனித்தனியான குற்றச்சாட்டுகளை எக காலத்தில் விசாரணை செய்யலாம்.

(ஒ) "அ", பிரம்பால் "ஆ" வை சட்ட விரோதமான முறையில் அடிக்கிறார். இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 352 மற்றும் 323 ஆகிய பிரிவுகளின்படி குற்றங்களைச் செய்ததாக "அ" தனித்தனியாகக் குற்றஞ்சாட்டப்பட்டுத் தண்டிக்கப்படலாம். 45 1860.

(ஓ) நிருபப்பட்ட பல்வேறு தானிய சாக்குமூட்டைகளைத் திருட்டுப் பொருளைத் தெரிந்து வைத்துள்ள "அ" விடமும், "ஆ" விடமும் மறைந்துவைக்கும் பொருட்டு அவை ஒப்படைக்கப்படுகின்றன. அதன்பேரில், தானியக் கிடங்கின் அடியில் அந்தச் சாக்குமூடைகளை மறைத்துவைக்க "அ" வும் "ஆ" வும் சுயேச்சையாக ஒருவருக்கொருவர் உதவுகின்றனர். "அ", "ஆ" வும் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 411 மற்றும் 414 ஆகிய பிரிவுகளின்படி குற்றங்களைச் செய்ததாகத் தனித்தனியாகக் குற்றஞ்சாட்டப்பட்டுத் தண்டிக்கப்படலாம்.

(ஔ) "அ" தன் குழந்தைக்கு மரணம் விளையக்கூடும் என்பதைந் தெரிந்தே, அதைக் காப்பற்ற நிலையில் விட்டுச் செல்கிறார். அவ்வாறு காப்பற்ற நிலையில் விட்டுச் சென்றதன் விளைவாக அக் குழந்தை இறந்துவிடுகிறது. இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 317 மற்றும் 304 ஆகிய பிரிவுகளின்படி குற்றங்களைச் செய்ததாக "அ" தனித்தனியாகக் குற்றஞ் சாட்டப்பட்டுத் தண்டிக்கப்படலாம். 45 1860.

(அஅ) இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 167 ஆவது பிரிவின்படி பொது ஊழியரான "ஆ" வைத் தண்டனைக்கு உட்படுத்துவதற்காக சிருஷ்டனை செய்யப்பட்ட பத்திரமொன்றை உண்மையான சாட்சியாக "அ" நேர்மை

யற்ற வகையில் உபயோகப்படுத்துகிறார். "அ" அத்தச் சட்டத்தின் 466 ஆவது பிரிவுடன் இணைத்து பார்க்க வேண்டிய 471 ஆவது பிரிவு, மற்றும் 196 ஆவது பிரிவு ஆகியவற்றின்படி குற்றங்களைச் செய்ததாகத் தனித்தனியாகக் குற்றஞ்சாட்டப் பட்டுத் தண்டிக்கப்படலாம்.

45/1860.

(4) ஆவது உட்பிரிவுக்கு எடுத்துக்காட்டுகள்.

(அஆ) "ஆ" வை "அ" கொன்றை அடிக்கிறார். அவ்வாறு செய்யும்போது, சுயேச்சையாக அவருக்குக் காயத்தை விளைவிக்கிறார். இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 323, 302 மற்றும் 304 ஆகிய பிரிவுகளின்படி குற்றங்களைச் செய்ததாக "அ" தனித்தனியாகக் குற்றஞ்சாட்டப்பட்டுத் தண்டிக்கப்படலாம்.

45/1860.

எந்தக் குற்றம் செய்யப்பட்டிருக்கிறது என்பது பற்றிச் சந்தேகமாக இருக்கும்விடத்து.

221. (1) பல்வேறு குற்றங்களில் எந்தக் குற்றமாக, நிரூபிக்கப்படக்கூடிய சங்கதிகள் ஆகும் என்பது சந்தேகத்திற்குரியதாக இருக்குமளவிற்கு, தனியொரு செய்கையின் தன்மையோ, செய்கைகளின் தொடர் ஒன்றின் தன்மையோ இருக்குமானால், எதிரி அத்தகைய குற்றங்கள் அனைத்தையுமோ ஏதேனுமொன்றையோ செய்திருப்பதாகக் குற்றஞ் சாட்டப்படலாம்; மற்றும் அத்தகைய குற்றச்சாட்டுகளில் எத்தனை குற்றச்சாட்டுகளையும் ஒரே சமயத்தில் விசாரணை செய்யலாம்; அல்லது மாற்றாக மேற்சொன்ன குற்றங்களில் ஏதோ ஒன்றைச் செய்திருப்பதாக அவர் குற்றஞ்சாட்டப் படலாம்.

(2) அத்தகைய ஒரு வழக்கில், எதிரி ஒரு குற்றத்தைச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, ஆனால் சாட்சியத்திலிருந்து (1) ஆவது உட்பிரிவின் வகைமுறைகளின்படி சாட்டப்படக்கூடிய வேறொரு குற்றத்தை அவர் செய்திருக்கிறார் என்று தோன்றுமானால், அதற்காக அவர் குற்றஞ் சாட்டப்படவில்லையென்றாலுங்கூட, அவர் செய்திருப்பதாக நிரூபிக்கப்பட்ட குற்றத்திற்காக அவரைத் தண்டிக்கலாம்.

எடுத்துக்காட்டுகள்

(அ) திருட்டு அல்லது திருட்டுப்பொருளைப் பெற்றுக் கொள்ளுதல், அல்லது நம்பிக்கை மோசடிக் குற்றம் அல்லது ஏமாற்றுதல் இவற்றில் ஏதேனுமொன்றாக ஆகக்கூடிய செய்கையொன்றைச் செய்ததாக "அ" குற்றஞ்சுமத்தப்

படுகிறார். அவர் திருட்டுக் குற்றத்தையும், திருட்டுப் பொருளைப் பெற்றுக்கொண்ட குற்றத்தையும், நம்பிக்கை மோசடிக் குற்றத்தையும் ஏமாற்றுதல் குற்றத்தையும் செய்ததாகக் குற்றஞ் சாட்டப்படலாம்; அல்லது அவர் திருட்டுக் குற்றத்தை அல்லது திருட்டுப் பொருளைப் பெற்றுக் கொண்ட குற்றத்தை, அல்லது நம்பிக்கை மோசடிக் குற்றத்தை, அல்லது ஏமாற்றுதல் குற்றத்தைச் செய்திருப்பதாகக் குற்றஞ்சாட்டப்படலாம்.

(ஆ) மேற்சொன்ன எடுத்துக்காட்டில், திருட்டுக் குற்றத்தை மட்டுமே செய்ததாக "அ" குற்றஞ்சாட்டப் படுகிறார். அவர் நம்பிக்கை மோசடி என்னும் குற்றத்தை அல்லது திருட்டுப் பொருளைப் பெற்றுக்கொண்ட குற்றத்தைச் செய்தார் என்பதாகத் தெரியவருகிறது. அத்தகைய குற்றங்கள் சம்பந்தமாக அவர் குற்றஞ்சாட்டப் படவில்லையென்றாலும், (நிலவரத்திற்கேற்ப) நம்பிக்கை மோசடிக் குற்றத்தையோ திருட்டுப் பொருளைப் பெற்றுக் கொண்ட குற்றத்தையோ செய்ததாக, அவர் தண்டிக்கப் படலாம்.

(இ) "இ" என்பவரைத் தடியால் "ஆ" அடித்ததைத் தாம் பார்த்ததாக நடுவர் முன் பிரமாணத்தின் பேரில் "அ" வாக்குமூலம் கொடுக்கிறார். "இ" என்பவரை "ஆ" ஒரு போதும் அடிக்கவேயில்லை என்பதாக செஷன்ஸ் நீதி மன்றத்தின் முன் "அ" பிரமாணத்தின்பேரில் வாக்குமூலம் கொடுக்கிறார். இந்த முரண்பட்ட வாக்குமூலங்களில் எது பொய்யானதென்பது நிரூபிக்கப்பட முடியாது என்றாலுங் கூட, இரண்டில் ஏதாவதொன்றைச் செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு "அ" கருதியே பொய்ச்சாட்சி சொன்னதாகத் தண்டிக்கப்படலாம்.

சாட்டப்பட்ட குற்றத்தில் நிரூபிக்கப்பட்ட குற்றம் உள்ளடங்கியிருக்கும்போது.

222. (1) பல்வேறு கூறுகள் அடங்கியுள்ள குற்றமொன்றைச் செய்ததாக ஒருவர் குற்றஞ்சாட்டப்பட்டு, அவற்றில் ஒரு சில மட்டுமே இணையும்போது முழுமையான ஒரு சிறு குற்றமாக அமையுமானால், அத்தகைய இணைப்பு நிரூபிக்கப்பட்டு, ஆனால் எஞ்சிய கூறுகள் நிரூபிக்கப்படாத போது, அவர் அச் சிறு குற்றத்தைச் செய்ததாகக் குற்றஞ் சாட்டப்படவில்லையென்றாலுங்கூட அந்தச் சிறு குற்றத்திற் காகத் தண்டிக்கப்படலாம்.

(2) குற்றமொன்றைச் செய்ததாக ஒருவர் குற்றஞ் சாட்டப்பட்டு, நிரூபிக்கப்பட்ட சங்கதிகள் அதனிலும் ஒரு சிறு குற்றமாக அதை ஆக்கும்போது, அவர் அச் சிறு குற்றத்தைச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்படவில்லை யென்றாலுங்கூட, அந்தச் சிறு குற்றத்திற்காகத் தண்டிக்கப் படலாம்.

(3) குற்றமொன்றைச் செய்ததாக ஒருவர் குற்றஞ் சாட்டப்படும்போது, அவர் அத்தகைய குற்றத்தைச் செய்ய முயற்சி செய்ததாக, அந்த முயற்சிக்காகத் தனித்துக் குற்றஞ்சாட்டப்படவில்லை என்றாலுங்கூட, அவர் தண்டிக்கப் படலாம்.

(4) சிறு குற்றம் எதையும் பொறுத்த நடவடிக கைகளைத் தொடங்குவதற்கு வேண்டிய நிபந்தனைகள் நிறை வேறுமளிருக்குமிடத்து அக் குற்றத்தைத் தண்டிப்பதற்கு இந்தப் பிரிவிலுள்ள எதுவும் அதிகாரமளிப்பதாகக் கொள்ளுதல் ஆகாது.

எடுத்துக்காட்டுகள்.

(அ) கொண்டு செல்பவர் என்னும் வகையில் தம்மிடம் ஒப்படைக்கபட்ட பொருளைப் பொறுத்து நம்பிக்கை மோசடிக் குற்றம் செய்ததாக இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 325 ஆவது பிரிவின்படி "அ" குற்றஞ்சாட்டப்படுகிறார். அவர் அந்தப் பொருளைப் பொறுத்து அந்தச் சட்டத்தின் 406 ஆவது பிரிவின்படி நம்பிக்கை மோசடிக் குற்றத்தைச் செய்ததாகவும், ஆனால் அப்பொருள் அவரிடம் கொண்டு செல்பவர் என்னும் வகையில் ஒப்படைக்கப்படவில்லை என்பதாகவும் தோன்று கிறது. மேற்சொன்ன 406 ஆவது பிரிவின்படி நம்பிக்கை மோசடிக் குற்றம் செய்ததாக அவர் தண்டிக்கப்படலாம்.

(ஆ) கொடுங்காயம் விளைவித்ததாக, இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 407 ஆவது பிரிவின்படி, "அ" குற்றஞ் சாட்டப்படுகிறார். கடுமையான திடீர்த் தூண்டுதலால் நாம் அவ்வாறு செயற்பட்டதாக அவர் நிரூபிக்கிறார். அவரை அந்தச் சட்டத்தின் 335 ஆவது பிரிவின்படி தண்டிக்கலாம்.

யார் எவர் சேர்ந்தரணையாக குற்றஞ் சாட்டப்படலாம் என்பது.

223. பின்வருபவர்கள் சேர்ந்தரணையாகக் குற்றஞ் சாட்டப்பட்டு விசாரணை செய்யப்படலாம், அதாவது :—

(அ) ஒரே சம்பவம் நடைபெறும்போது ஒரே குற்றத்தைச் செய்ததாகக் குற்றஞ்சுமத்தப்பட்டவர்கள்;

(ஆ) ஒரு குற்றத்தைச் செய்ததாகக் குற்றஞ்சுமத்தப் பட்டவர்களும் அத்தகைய குற்றத்திற்கு உடந்தையாக இருந்ததற்காக அல்லது அதைச் செய்ய முயற்சி செய்ததற் காகக் குற்றஞ்சுமத்தப்பட்டவர்களும்;

(இ) 219 ஆவது பிரிவின் பொருளின்படி அமைகிற ஒரே வகையான ஒன்றுக்கு மேற்பட்ட குற்றங்களைப் பன்னிரண்டு மாத கால அளவிற்குள் கூட்டாகச் சேர்ந்து செய்ததாகக் குற்றஞ்சுமத்தப்பட்டவர்கள்;

(ஈ) ஒரே சம்பவம் நடைபெறும்போது வெவ்வேறு குற்றங்களைச் செய்ததாகக் குற்றஞ்சுமத்தப்பட்டவர்கள்;

(உ) திருட்டு, பிரட்டிப் பறித்தல், ஏமாற்றுதல் அல்லது கையாடல் குற்றம் இவற்றுள் ஏதேனுமொன்று உள்ளடங்கிய குற்றமொன்றைச் செய்ததாகக் குற்றஞ் சுமத்தப்பட்டவர்களும், எந்தப் பொருளின் அனுபோக மானது மேற்சொன்னவர்களாலே செய்யப்பட்ட அத்தகைய குற்றம் எதொன்றினாலும் மாற்றல் செய்யப்பட்டிருப்ப தாகச் சொல்லப்படுகிறதோ, அந்தப் பொருளை பெற்றுக் கொண்டிருந்ததாக அல்லது தொடர்ந்து வைத்துக்கொண் டிருந்ததாக அல்லது அதைப் பராதீனம் செய்வதிலோ மறைத்துவைப்பதிலோ உதவி செய்ததாக அல்லது பின்ன தாகச் சொல்லப்பட்ட குற்றம் எதற்கும் உடந்தையாக இருந்ததாக அல்லது அதைச் செய்ய முயற்சித்ததாகக் குற்றஞ் சுமத்தப்பட்டவர்களும்;

(ஊ) எந்தத் திருட்டுப் பொருளின் அனுபோகம் ஒரு குற்றத்தினால் மாற்றல் செய்யப்பட்டிருக்கிறதோ, அந்தத் திருட்டுப் பொருளைப் பொறுத்து, இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 411 மற்றும் 414 ஆகிய பிரிவுகளின்படி அல்லது அப் பிரிவுகளில் ஏதேனுமொன்றின்படி குற்றங்களைச் செய்த தாகக் குற்றஞ் சுமத்தப்பட்டவர்கள்; 45/1860

(எ) கள்ள நாணயம் சம்பந்தமாக இந்தியத் தண்டனைச் சட்டத்தின் XII ஆவது அத்தியாயத்தின்படி குற்றமொன்றைச் செய்ததாகக் குற்றஞ்சுமத்தப்பட்டவர் 45/1860

களும், அதே நாணயம் சம்பந்தமாக மேற்சொன்ன அந்நியாயத்தின்படியுள்ள வேறெந்தக் குற்றத்தையேனும் செய்ததாகவோ, அத்தகைய குற்றம் எதற்கும் உடந்தையாக இருந்ததாகவோ, அத்தகைய குற்றம் எதையும் செய்ய முயற்சித்ததாகவோ குற்றஞ் சுமத்தப்பட்டவர்களுக்கும், மற்றும் இந்த அந்நியாயத்தின் முன் பகுதியில் அடங்கியுள்ள வகைமுறைகள், கூடுமான அளவுக்கு, அத்தகைய குற்றச்சாட்டுகள் அனைத்தின் மீதும் இயங்குதல் வேண்டும்.

ஆனால், தனித்தனிக் குற்றங்கள் செய்ததாகப் பலர் குற்றஞ்சாட்டப்பட்டு, அத்தகையவர்கள் இந்தப் பிரிவில் குறிப்பிடப்பட்ட இனங்களில் எதனிலும் சேராதவிடத்து, அத்தகையவர்கள் எழுத்து வடிவிலான விண்ணப்பம் ஒன்றின் மூலமாக அவ்வாறு விரும்புவார்களானாலும், அதனால் அத்தகையவர்களுக்குப் பாதகம் ஏற்படாது என்றும், அவ்வாறு செய்வது உகந்ததென்றும் நடுவருக்குத் திருப்தி ஏற்படுமானாலும், நடுவர் அத்தகையவர்கள் அனைவரையும் சேர்ந்தாணையாக விசாரணை செய்யலாம்.

பல்வேறு குற்றச் சாட்டுகளில் ஒரு குற்றச்சாட்டுக் காகத் தண்டிக்கப் படும்போது, எஞ்சியுள்ள குற்றச்சாட்டுகளைத் திரும்பப் பெறுதல்.

224. ஒன்றுக்கு மேற்பட்ட தலைப்புகள் அடங்கியுள்ள குற்றச்சாட்டு ஒன்று, ஒரே ஆளுக்கெதிராகச் சாட்டப்படும் போதும், அவைகளில் ஒன்று அல்லது மேற்பட்டவற்றிற் காக அவர் தண்டிக்கப்படும்போதும், முறையிடுபவரோ குற்ற வழக்கை நடத்துகிற அலுவலரோ எஞ்சியுள்ள குற்றச்சாட்டு அல்லது குற்றச்சாட்டுகளை நீதிமன்றத்தின் இசைவுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்; அல்லது நீதிமன்றம் தானாகவே அத்தகைய குற்றச்சாட்டு அல்லது குற்றச்சாட்டுகளைப் பரிசீலனை செய்வதையோ விசாரணை செய்வதையோ நிறுத்திவைக்கலாம்; மற்றும் அந்தத் தண்டனைத் தீர்ப்பு நீக்கப்பட்டாலன்றி, அவ்வாறு திரும்பப் பெறுவதன் விளைவானது, அக் குற்றச்சாட்டு அல்லது குற்றச் சாட்டுகளின்பேரில் விடுதலை செய்ததாகும். அவ்வாறு நீக்கும் சந்தர்ப்பத்தில், மேற்சொன்ன நீதிமன்றம் (தண்டனைத் தீர்ப்பை நீக்குகிற நீதிமன்றத்தின் கட்டளைக் குட்பட்டு) அவ்வாறு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்ட குற்றச்சாட்டு அல்லது குற்றச் சாட்டுகளைப் பற்றிய பரிசீலனையை அல்லது விசாரணையைத் தொடர்ந்து நடத்தலாம்.

அத்தியாயம் XVIII.

செஷன்ஸ் நீதிமன்றத்தின் முன் விசாரணை

விசாரணை அரசு குற்றத்துறை வழக்குரைஞரால் நடத்தப்படவேண்டுமென்பது.

225. ஒரு செஷன்ஸ் நீதிமன்றத்தின் முன் நடக்கும் விசாரணை ஒன்றிலும், வாதி தரப்பில் அரசு குற்றத்துறை வழக்குரைஞர் வழக்கை நடத்துதல் வேண்டும்.

வாதி தரப்பு வழக்குரை தொடங்கல்.

226. 209 ஆவது பிரிவின்படி வழக்கு மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்டதைத் தொடர்ந்து, எதிரி நீதிமன்றத்தின் முன் வருகிறபோது அல்லது கொண்டு வரப்படும்போது, எதிரி மீது கொண்டுவரப்படும் குற்றச்சாட்டை விவரித்தும், எந்தச் சாட்சியத்தைக்கொண்டு எதிரி குற்றவாளியென்பதைத் தாம் நிரூபிக்க உத்தேசித்துள்ளார் என்பதை உரைத்தும், அரசு குற்றத்துறை வழக்குரைஞர் தம் வழக்கைத் தொடங்கிவைத்தல் வேண்டும்.

விடுவித்தல்.

227. வழக்கின் பதிவுகளையும் அதனுடன் பணிந்தனுப்பப்பட்ட பத்திரங்களையும் பரிசிலனை செய்ததன் பேரிலும், எதிரியும் வாதி தரப்பினரும் வழக்கு சம்பந்தமாகச் செய்யும் வழக்குரைகளைக் கேட்டதற்குப் பின்பும், எதிரி மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்குப் போதுமான ஆதாரம் இல்லை என்பதாக நீதிபதி எண்ணுவாரானால், அவர் எதிரியை விடுவித்தல் வேண்டும்; மற்றும் அவ்வாறு செய்வதற்கான காரணங்களைப் பதிவு செய்தல் வேண்டும்.

குற்றச்சாட்டை வகுத்தல்.

228. (1) அத்தகைய பரிசிலனைக்குப் பின்னரும், மேற் சொன்ன கேள்விக்குப் பின்னரும், எதிரி பின்வரும் குற்றம் ஒன்றைச் செய்திருக்கிறார் என்று அனுமானிப்பதற்கு ஆதாரம் இருக்கிறது என்பதாக நீதிபதி கருதுவாரானால்,

(அ) அந்தக் குற்றம் செஷன்ஸ் நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யத்தக்கதல்லதாயின், அவர் எதிரி மீது குற்றச்சாட்டொன்றை வகுப்பதுடன், விசாரணைக்காக அவ் வழக்கைத் தலைமை நீதித்துறை நடுவருக்கு, உத்தரவு மூலமாக மாற்றிவிடலாம்; அதன்பேரில் தலைமை நீதித்துறை நடுவர், காவலறிக்கையின்பேரில் தொடரப்பட்ட பிடி

கட்டளை வழக்குகளின் விசாரணைக்கான நடைமுறைக் கிணங்க அந்தக் குற்றத்தை விசாரணை செய்தல் வேண்டும்.

(ஆ) அந்தக் குற்றம் அந்த நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யத்தக்கதாயில், அவர் எதிரி மீது குற்றச் சாட்டொன்றை எழுத்துமூலம் வகைதல் வேண்டும்.

(2) நீதிபதி (1) ஆவது உட்பிரிவின் (ஆ) கூறின்படி குற்றச்சாட்டு எதையேனும் வகையுமிடத்து, அக் குற்றச் சாட்டு எதிரிக்குப் படித்துக்காட்டப்பட்டு, விளக்கப்படுதல் வேண்டும்; மற்றும் சாட்டப்பட்ட குற்றத்தைச் செய்ததாக ஒப்புக் கொள்கிறாரா அல்லது விசாரணை செய்யப்பட வேண்டு மென்று கோருகிறாரா என்று எதிரியைக் கேட்கவேண்டும்.

குற்றம் செய்ததாக ஒப்புக் கொள்வதன் பேரில் தண்டிக்கப் படுதல்.

229. எதிரி குற்றம் செய்ததாக ஒப்புக்கொள்வாராயில், நீதிபதி அந்த ஒப்புதல் உரையைப் பதிவு செய்தல் வேண்டும்; மற்றும், தம் யுக்தம் போல் அந்த ஒப்புதல் உரையின்பேரில் அவரைத் தண்டிக்கலாம்.

வாதி தரப்பு சாட்சியத்திற் கான தேதி.

230. எதிரி வாதுரை செய்ய மறுப்பாராயினும், அல்லது வாதுரை செய்யாதிருந்தாராயினும், அல்லது விசாரணை செய்யப்பட வேண்டுமென்று கோருவாராயினும், அல்லது 229 ஆவது பிரிவின்படி தண்டிக்கப்படவில்லையாயினும், நீதிபதி, சாட்சிகளை விசாரிப்பதற்காகத் தேதியொன்றை நிர்ணயித்தல் வேண்டும்; மற்றும் வாதி தரப்பின் விண்ணப் பத்தின் பேரில் சாட்சி எவரேனும் ஆஜராவதைக் கட்டாயப் படுத்தியோ பத்திரம் அல்லது வேறு பொருள் எதையேனும் தாக்கல் செய்வதைக் கட்டாயப்படுத்தியோ நீதிமுறைக் கட்டளை எதையும் பிறப்பிக்கலாம்.

வாதி தரப்புச் சாட்சியம்.

231. (1) அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று, நீதிபதி, வாதி தரப்புக்கு ஆதரவாகத் தாக்கல் செய்யப்படக் கூடிய சாட்சியம் அனைத்தையும் எடுத்துக்கொள்ள மேற்படுதல் வேண்டும்.

(2) நீதிபதி நம் யுக்தம் போல் எந்தச் சாட்சியை யேனும் குறுக்கு விசாரணை செய்வதை வேறெந்தச் சாட்சி அல்லது சாட்சிகளின் விசாரணை முடியும் வரை ஒத்திப் போட அனுமதிக்கலாம்; அல்லது மேற்கொண்டு குறுக்கு விசாரணைக்காகச் சாட்சி எவரையும் மீண்டும் கூப்பிடலாம்.

விடுதலை.

232. வாதி தரப்பு சாட்சியத்தை எடுத்துக்கொண்ட பிறகும், எதிரியை விசாரணை செய்த பிறகும், விஷயத்தைப் பற்றி வாதி தரப்பையும் எதிர் தரப்பையும் கேட்டதற்குப் பிறகும் எதிரி அக் குற்றத்தைச் செய்தார் என்பதற்குச் சாட்சியம் எதுவும் இல்லை என்பதாக நீதிபதி கருதுவாரானால், அவர் விடுதலை செய்து, தர் உத்தரவைப் பதிவு செய்தல் வேண்டும்.

எதிர்வாதம் செய்யத் தூண்டுதல்.

233. (1) எதிரி, 232 ஆவது பிரிவின்படி விடுதலை செய்யப் படாதவிடத்து, அவர் தம்முடைய எதிர்வாதத்தைச் செய்யத் தூண்டப்படுமாறும், அதற்கு ஆதரவாகத் தம் வசமிருக்கக்கூடிய சாட்சியம் எதையும் அளிக்குமாறும் கோரப் படுதல் வேண்டும்.

(2) எதிரி எழுத்துமூலமான எதிர்வாதுரை எதையேனும் தாக்கல் செய்வாரானால், நீதிபதி அதைப் பதிவுக் கட்டோடு சேர்த்து வைத்தல் வேண்டும்.

(3) சாட்சி எவரேனும் ஆஜராவதைக் கட்டாயப் படுத்துவதற்கோ, பத்திரம் அல்லது வேறு பொருள் எதையேனும் தாக்கல் செய்வதைக் கட்டாயப்படுத்து வதற்கோ நீதிமுறைக் கட்டளை ஒன்றைப் பிறப்பிக்க வேண்டுமென்று எதிரி விண்ணப்பித்துக்கொள்வாரானால், அலைக்கழிக்கும் பொருட்டோ, காலதாமதம் செய்யும் பொருட்டோ, அல்லது நீதியின் குறிக்கோளைச் சிதைக்கும் பொருட்டோ, அந்த விண்ணப்பம் செய்யப்பட்டிருக்கிறது என்று எழுத்து மூலமாகப் பதிவு செய்யப்படவேண்டிய காரணங்களுக்காக அந்த விண்ணப்பத்தை மறுக்க வேண்டு மென்று நாம் எண்ணினாலன்றி, நீதிபதி அந்த நீதிமுறைக் கட்டளையைப் பிறப்பித்தல் வேண்டும்.

வாதங்கள்.

234. எதிர் தரப்புக்கான சாட்சிகள் எவரேனுமிருப்பின் அவர்களது விசாரணை முடிந்ததும், அரசு குற்றத்துறை வழக்குரைஞர் தமது வழக்கைத் தொகுத்துரைக்க வேண்டும்; மற்றும் எதிரி அல்லது அவரது வாதுரைஞர் அதற்குப் பதிலுரை செய்ய உரிமையுடையவராவார்.

ஆனால், சட்டப் பிரச்சினை ஏதேனும் எதிரியால் அல்லது அவரது வாதுரைஞரால் எழுப்பப்படுமிடத்து, நீதிபதியின் அனுமதியுடன், அத்தகைய சட்டப் பிரச்சினை குறித்து வாதி தரப்பு தம் வாதங்களைப் பணித்துரைக்கலாம்.

விடுதலைத் தீர்ப்பு அல்லது தண்டனைத் தீர்ப்பு.

235. (1) வாதங்களையும் சட்டப் பிரச்சினைகள் எவையேனுமிருப்பின் அவற்றையும் கேட்டதற்குப் பின்பு, நீதிபதி வழக்கில் தீர்ப்பினை வழங்குதல் வேண்டும்.

(2) எதிரி தண்டிக்கப்படுவாராயின், நீதிபதி 360 ஆவது பிரிவின் வகைமுறைகளுக்கிணங்க மேற்கொண்டு தாம் நடவடிக்கை எடுப்பதாயிருந்தாலன்றி, தண்டனை சம்பந்தமாக எதிரி தரப்பைக் கேட்டு, அதன்பின் சட்டத்தின்படி அவருக்குத் தீர்ப்புத் தண்டனை பிறப்பித்தல் வேண்டும்.

முந்திய தண்டனை பற்றி.

236. முந்திய தண்டனை பற்றி 211 ஆவது பிரிவின் (7) ஆவது உட்பிரிவின் வகைமுறைகளின்படி குற்றஞ்சாட்டப்பட்டு, அக் குற்றச்சாட்டில் சொல்லப்பட்டவாறு தாம் முந்தியே தண்டிக்கப்பட்டிருப்பதை எதிரி ஒப்புக் கொள்ளாத ஒரு வழக்கில், நீதிபதி, 229 ஆவது பிரிவு அல்லது 235 ஆவது பிரிவின்படி மேற்சொன்ன எதிரிக்குத் தாம் தண்டனைத் தீர்ப்பு அளித்ததற்குப் பின்பு, சொல்லப்பட்ட முந்திய தண்டனையைப் பொறுத்துச் சாட்சியம் எடுக்கலாம்; மற்றும் அதன் பேரில் அவருடைய முடிபைப் பதிவு செய்தல் வேண்டும்:

ஆனால், 229 ஆவது பிரிவு அல்லது 235 ஆவது பிரிவின்படி எதிரி தண்டனைத் தீர்ப்பு அளிக்கப்பட்டாலன்றியும், அளிக்கப்படும் வரையிலும், அத்தகைய குற்றச்சாட்டு எதுவும் நீதிபதியால் படித்துக்காட்டப்படுதலோ, அதை ஒப்புக்கொள்ளுமாறு எதிரி கேட்கப்படுதலோ, முந்திய தண்டனை பற்றி வாதி தரப்பால் அல்லது வாதி தரப்பில் அளிக்கப்பட்ட சாட்சியத்தில் குறிப்பிடப்படுதலோ ஆகாது.

199 (2) ஆவது பிரிவின்படி தொடரப்பட்ட வழக்குகளின் நடைமுறை என்ன என்பது.

237. (1) 199 ஆவது பிரிவின் (2) ஆவது உட்பிரிவின்படி குற்றமொன்றை விசாரணைக்கு எடுத்துக்கொள்கிற செஷன்ஸ் நீதிமன்றம், காவலறிக்கையின் பேரில்லாமல் வேறுவிதமாக ஒரு நடுவர் நீதிமன்றத்தின்முன் தொடரப்பட்ட பிடிகட்டளை வழக்குகளின் விசாரணைக்கான நடைமுறைக்கினங்க அந்த வழக்கை விசாரணை செய்தல் வேண்டும்.

ஆனால், செஷன்ஸ் நீதிமன்றம் பதிவு செய்யும் காரணங் களுக்காக வேறுவிதமாக உத்தரவிட்டாலன்றி, அந்தக் குற்றம் எவருக்கெதிராகச் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதோ அவர் வாதி தரப்பு சாட்சியாக விசாரிக்கப்படுதல் வேண்டும்.

(2) இந்தப் பிரிவின்படியான விசாரணை ஒவ்வொன்றும், தரப்பினரில் எவரேனும் அவ்வாறு விரும்புவாரானால், அல்லது அவ்வாறு செய்வது பொருத்தமென நீதிமன்றம் நினைக்குமானால், அந்தரங்கமாக நடத்தப்படுதல் வேண்டும்.

(3) அத்தகைய வழக்கு எதிலேனும் எதிரிகள் அனை வரையும் அல்லது அவர்களில் எவரையேனும் நீதிமன்றம் விடுவிப்பதோடு, அல்லது விடுதலை செய்வதோடு, அவர்களின் மீதோ அவர்களில் எவரேனுமொருவரின் மீதோ குற்றம் சாட்டுவதற்கு நியாயமான காரணம் எதுவுமில்லை என்ப தாகக் கருதுமானால் (குடியரசுத் தலைவரோ, குடியரசுத் தலைவரோ, மாநிலமொன்றின் ஆளுநரோ, ஒன்றி யத்து மண்டலமொன்றின் ஆட்சியாளரோ நீங்கலாக), எவருக்கெதிராகக் குற்றம் செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டதோ, அவரை அத்தகைய எதிரிக்கு அல்லது அத்தகைய எதிரிகள் ஒருவருக்கு மேற்பட்டவராக இருக் கும்போது, அவர்கள் ஒவ்வொருவருக்கும் அல்லது அவர் களில் எவருக்கேனும் அவர் என் நஷ்டஈடு செலுத்தக் கூடாது என்பதற்குக் காரணங் காட்டுமாறு, நீதிமன்றம் தன் விடுவிப்பு அல்லது விடுதலைத் தீர்ப்பு உத்தரவு மூல மாகக் கட்டளையிடலாம்.

(4) அவ்வாறு உத்தரவிடப்பட்டவரால் காட்டப்படக் கூடிய காரணம் எதையும் நீதிமன்றம் பதிவு செய்து பரி சீலித்தல் வேண்டும்; மேலும் குற்றஞ்சாட்டுவதற்கு நியாய மான காரணம் எதுவுமில்லை என்பதாக நீதிமன்றத்திற்குத் திருப்தி ஏற்படுமானால், ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாது, அது நிர்ணயிக்கலாகும் ஒரு தொகையை நஷ்ட ஈடாக எதிரிக்கு அல்லது எதிரிகள் ஒவ்வொருவருக்கும் அல்லது அவர்களில் எவரேனுமொருவருக்கு அத்தகையவர் செலுத்த வேண்டும் என்பதாக அதற்குரிய காரணங்களைப் பதிவு செய்து உத்தரவொன்றை அது பிறப்பிக்கலாம்.

(5). (4) ஆவது உட்பிரிவின்படி அளிக்கப்பட்ட நஷ்டஈடு, நடுவரால் போடப்பட்ட அபராதம் போலவே வசூலிக்கப்பட வேண்டும்.

(6) (4) ஆவது உட்பிரிவின்படி நஷ்டஈடு செலுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ள எவரும், அந்தகைய கட்டளையின் காரணமாக இந்தப் பிரிவின்படி செய்யப்பட்ட முறையீடு சம்பந்தமாக உரிமை வழக்குக் கடப்பாடு அல்லது குற்ற வழக்குக் கடப்பாடு எதிலிருந்தும் விலக்களிக்கப்பட மாட்டார் :

ஆனால், எதிரி ஒருவருக்கு இந்தப் பிரிவின்படி செலுத்தப்பட்ட தொகை எதுவும், அதே விஷயம் தொடர்பாக பிந்திய உரிமை வழக்கு எதிலேனும் அந்தகையவருக்கு நஷ்ட ஈடு அளிக்கும்போது கணக்கிலெடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(7) நஷ்ட ஈடு செலுத்துமாறு (4) ஆவது உட்பிரிவின்படி கட்டளையிடப்பட்டுள்ளவர், நஷ்ட ஈடு செலுத்துவது சம்பந்தப்பட்ட மட்டில் அந்தக் கட்டளையிலிருந்து மட்டும் உயர் நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

(8) எதிரி ஒருவருக்கு நஷ்ட ஈடு செலுத்துவதற்கான கட்டளையொன்று பிறப்பிக்கப்படும்போது, மேல்முறையீடு நாக்கல் செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட கால அளவு முடிவடைவதற்கு முன்பு, அல்லது மேல்முறையீடொன்று தாக்கல் செய்யப்படுமானால், அந்த மேல்முறையீடு தீர்மானிக்கப்படுவதற்கு முன்பு அவருக்கு நஷ்ட ஈடு செலுத்தப்படுதல் ஆகாது.

அத்தியாயம் XIX.

பிடிகட்டளை வழக்குகளை நடுவர்கள் விசாரணை செய்தல்.

அ. காவலறிக்கையின் பேரில் தொடரப்பட்ட வழக்குகள்.

207 ஆவது பிரிவுக்கு இணங்கல்.

238. காவலறிக்கையின்பேரில் தொடரப்பட்ட பிடிகட்டளை வழக்கு எதிலேனும், விசாரணையின் துவக்கத்தில், நடுவர் முன் எதிரி வருகிறபோது அல்லது கொண்டுவரப்படும் போது, நடுவர் 207 ஆவது பிரிவின் வகைமுறைகளுக்கு இணங்கத் தாம் நடந்திருக்கிறார் என்பது பற்றி திருப்தி செய்து கொள்ள வேண்டும்.

எதிரி எப்போது விடுவிக்கப்பட வேண்டும் என்பது.

239. காவலறிக்கையையும் அதனுடன் 173 ஆவது பிரிவின் படி அனுப்பப்பட்ட பத்திரங்களைப் பரிசீலனை செய்ததன் பேரிலும், எதிரியை எந்த அளவிற்கு விசாரணை செய்வது நடுவர் அவசியமென நினைக்கிறாரோ அந்த அளவிற்கு விசாரணை ஏதேனுமிருப்பின் அதைச் செய்ததன் பேரிலும், வாதி தரப்பும் எதிரியும் கேட்கப்படுவதற்கு வாய்ப்பளித்த பின்பும், எதிரியின் மீதுள்ள குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்பதாக நடுவர் எண்ணுவாரானால், அவர் எதிரியை விடுவித்தல் வேண்டும்; மற்றும் அவ்வாறு செய்வதற்கான காரணங்களைப் பதிவு செய்தலும் வேண்டும்.

குற்றச்சாட்டை வினைதல்.

240. (1) அத்தகைய பரிசீலனையின் பேரிலும் விசாரணை ஏதேனுமிருப்பின் அதன் பேரிலும், கேள்வியின் (Hearing) பேரிலும், நடுவர் விசாரணை செய்வதற்குத் தமக்குத் தகுதியுள்ளதும், தம் கருத்தின்படி, தம்மால் போதிய தண்டனை விதிக்கக்கூடியதும், இந்த அத்தியாயத்தின்படி விசாரணை செய்யத்தக்கதுமான குற்றமொன்றை எதிரி செய்திருக்கிறார் என்று அனுமானிப்பதற்கு ஆதாரமிருக்கிறது என்பதாகக் கருதுவாரானால், அவர் எதிரிமீது குற்றச்சாட்டொன்றை எழுத்து மூலமாக வினைதல் வேண்டும்.

(2) அதன்பின்பு அக் குற்றச்சாட்டு எதிரிக்குப் படித்துக்காட்டப்பட்டு விளக்கப்படுதல் வேண்டும்; மற்றும், அவர் சாட்டப்பட்ட குற்றத்தைச் செய்ததாக ஒப்புக்கொள்கிறாரா அல்லது விசாரணை செய்யப்பட வேண்டுமென்று கோருகிறாரா என்று அவர் கேட்கப்படுதலும் வேண்டும்.

குற்றம் செய்ததாக ஒப்புக் கொண்டதன் பேரில் தண்டித்தல்.

241. எதிரி குற்றஞ்செய்ததாக ஒப்புக்கொள்வாராயின், நடுவர் அந்த ஒப்புதலை உரையைப் பதிவு செய்தல் வேண்டும்; மற்றும், அவர் தம் யுக்தம் போல் அந்த ஒப்புதல் உரையின் பேரில் அவரைத் தண்டிக்கலாம்.

வாதி தரப்புச் சாட்சி.

242. (1) எதிரி வாதுரை செய்ய மறுத்தாலும், அல்லது வாதுரை செய்யாவிட்டாலும் அல்லது விசாரணை செய்யப்பட வேண்டுமென்று கோரினாலும், அல்லது நடுவர் எதிரியை 241 ஆவது பிரிவின்படி தண்டிக்கவில்லையாயினும், நடுவர் சாட்சிகளை விசாரிப்பதற்காகத் தேதியொன்றை நிர்ணயித்தல் வேண்டும்.

(2) நடுவர், வாதி தரப்பின் விண்ணப்பத்தின் பேரில், அத் தரப்பின் சாட்சிகளில் எவருக்கேனும், அவரை ஆஜராகுமாறே பந்திரம் அல்லது வேறு பொருள் எதையேனும் தாக்கல் செய்யுமாறே உத்தரவிட்டு ஆஜர் கட்டளை ஒன்றைப் பிறப்பிக்கலாம்.

(3) அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட தேதியன்று, நடுவர், வாதி தரப்புக்கு ஆதரவாகத் தாக்கல் செய்யப்படவேண்டிய சாட்சியம் அனைத்தையும் எடுக்க முற்படுதல் வேண்டும்:

ஆனால், நடுவர், சாட்சி எவரையேனும் குறுக்கு விசாரணை செய்வதை வேறு சாட்சி அல்லது சாட்சிகளின் விசாரணை முடியும்வரை ஒத்திப்போடுவதற்கு அனுமதியளிக்கலாம்; அல்லது மேற்கொண்டு குறுக்கு விசாரணைக் காகச் சாட்சி எவரையேனும் மீண்டும் கூப்பிடலாம்.

எதிர் தரப்புச் சாட்சியம்.

243. (1) பிறகு, எதிரி தம்முடைய எதிர்வாதத்தைச் செய்யத் தலைப்படுமாறும், தம் சாட்சியத்தைத் தாக்கல் செய்யுமாறும் கோரப்பட வேண்டும்; மற்றும் எதிரி எழுத்து மூலமான வாதுரை எதையேனும் கொடுப்பாராயின், நடுவர் அதைப் பதிவுக்கட்டோடு சேர்த்து வைத்துக் கொள்ளல் வேண்டும்.

(2) எதிரி, தம்முடைய எதிர்வாதத்தைச் செய்ய தலைப்பட்டதற்குப் பின்பு, விசாரணையின் பொருட்டோ குறுக்கு விசாரணையின் பொருட்டோ சாட்சி எவரையேனும் ஆஜராகுமாறு கட்டாயப்படுத்துவதற்காக அல்லது பத்திரம் அல்லது வேறு பொருளைத் தாக்கல் செய்யக் கட்டாயப்

படுத்துவதற்காக நீதிமுறைக் கட்டளை எதையேனும் பிறப்பிக்குமாறு நடுவருக்கு விண்ணப்பித்துக்கொள்வாரானால், அலைக்கழிக்கும் பொருட்டோ, காமதம் செய்யும் பொருட்டோ, அல்லது நீதியின் குறிக்கோளைச் சிதைக்கும் பொருட்டோ அந்த விண்ணப்பம் செய்யப்பட்டிருக்கிறது என்ற காரணத்திற்காக அந்த விண்ணப்பத்தை நிராகரிக்க வேண்டுமென்று நாம் எண்ணினாலன்றி, நடுவர் அந்தகைய நீதிமுறைக் கட்டளையைப் பிறப்பித்தல் வேண்டும்; மற்றும் அந்தகைய காரணம் எழுத்து மூலமாக அவரால் பதிவு செய்யப்படுதல் வேண்டும்:

ஆனால், எதிரி நம்முடைய எதிர்வாதத்தைச் செய்யத் தவிப்படுவதற்கு முன்பு, சாட்சி எவரையேனும் குறுக்கு விசாரணை செய்துவிட்டாரானால், அல்லது குறுக்கு விசாரணை செய்கிற வாய்ப்பினைப் பெற்றிருந்தாரானால், அந்தகைய சாட்சி ஆஜராவதை அது நீதியின் குறிக்கோளுக்கு அவசியமாக இருக்கிறது என்று நடுவருக்குத் திருப்தி ஏற்பட்டாலன்றி, இந்தப் பிரிவின்படி கட்டாயப் படுத்துதல் ஆகாது.

(3). (2) ஆவது உட்பிரிவின்படி விண்ணப்பம் ஒன்றின் பேரில் சாட்சி எவருக்கேனும் ஆஜர் கட்டளை அனுப்புவதற்கு முன்பு விசாரணையின் பொருட்டு ஆஜராவதற்குச் சாட்சிக்கு எற்படக்கூடிய நியாயமான செலவுகளை நீதிமன்றத்தில் செலுத்திவைக்க வேண்டும் என்று நடுவர் கோரலாம்.

ஆ. காவலறிக்கையின்பேரில்லாமல் வேறுவிதமாகத் தொடரப்பட்ட வழக்குகள்.

வாதி தரப்புக் காவாசாட்சியம்.

244. (1) காவலறிக்கையின் பேரில்லாமல் வேறுவிதமாகத் தொடரப்பட்ட பிடிகட்டளை வழக்கு எதிலேனும், எதிரி, நடுவர் முன் ஆஜராகும்போது அல்லது ஆஜர் படுத்தப் படும்போது அந்த நடுவர் வாதி தரப்பைக் கேட்க முற்பட வேண்டும்; மற்றும் வாதி தரப்புக்கு ஆதரவாக முன்னிடலாகும் சாட்சியம் அனைத்தையும் எடுக்க முற்படுதல் வேண்டும்.

(2) நடுவர், வாதி தரப்பின் விண்ணப்பத்தின் பேரில், அத் தரப்பின் சாட்சிகளில் எவரையேனும் ஆஜராகுமாறு அல்லது பத்திரம் அல்லது வேறு பொருள் எதையேனும் தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டு, அவருக்கு ஆஜர் கட்டளை ஒன்றைப் பிறப்பிக்கலாம்.

எதிரி எப் போது விடுவிக் கப்பட வேண்டும் என்பது.

245. (1) 244 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்ட சாட்சியம் அனைத்தையும் எடுத்ததன்பேரில், எதிரியின் பேரிலுள்ள வழக்கு மறுதலிக்கப்படவில்லையென்றால், அதை நிலைநாட்டி அவரைத் தண்டிப்பதற்கு அது போதுமானதாக இல்லை என்று நடுவர் எண்ணுவாரானால், அதற்குரிய காரணங்களைப் பதிவு செய்து அவர் எதிரியை விடுவித்தல் வேண்டும்.

(2) பதிவு செய்யப்படவேண்டிய காரணங்களுக்காக அந்தக் குற்றச்சாட்டு ஆதாரமற்றது என்பதாக நடுவர் எண்ணுவாரானால், அவர் வழக்கின் முந்திய கட்டம் எதிலும் எதிரியை விடுவிப்பதை இந்தப் பிரிவில் உள்ள எதுவும் தடை செய்வதாகக் கொள்ளுதல் ஆகாது.

எதிரி விடுவிக் கப்படாத விடத்து நடைமுறை என்ன என்பது.

246. (1) அத்தகைய சாட்சியம் எடுக்கப்பட்டபின்பாவது அல்லது வழக்கின் முந்திய கட்டம் எதிலேனுமாவது, நடுவர் விசாரணை செய்யத் தமக்குத் தகுதியுள்ளதும், தம் கருத்தின்படி தம்மால் போதுமான தண்டனை விதிக்கக்கூடியதும், இந்த அத்தியாயத்தின்படி விசாரணை செய்யத்தக்கதுமான குற்றமொன்றை எதிரி செய்திருப்பதாக அனுமானிப்பதற்கு ஆதாரம் இருக்கிறது என்று கருதுவாரானால், அவர் எதிரி மீது குற்றச்சாட்டொன்றை எழுத்து மூலமாக வகுத்தல் வேண்டும்.

(2) அதன் பின்பு அக் குற்றச்சாட்டு எதிரிக்குப் படித்துக் காட்டப்பட்டு விளக்கப்படுதல் வேண்டும்; மற்றும் குற்றத்தைச் செய்ததாக ஒப்புக்கொள்கிறாரா அல்லது எதிர் வாதம் எதும் செய்யப்போகிறாரா என்று அவர் கேட்கப்பட வேண்டும்.

(3) எதிரி குற்றஞ் செய்ததாக ஒப்புக்கொள்வாரானால், நடுவர் அந்த உரையைப் பதிவு செய்தல் வேண்டும்; மற்றும், அவர் தம் யுக்தம் போல் அந்த ஒப்புதல் உரையின் பேரில் அவரைத் தண்டிக்கலாம்.

(4) எதிரி வாதுரை செய்ய மறுப்பாராயின், அல்லது வாதுரை செய்யவில்லையாயின், அல்லது விசாரணை செய்யப்பட வேண்டுமென்று கோருவாராயின், அல்லது (3) ஆவது உட்பிரிவின்படி எதிரி தண்டிக்கப்படவில்லையாயின், வழக்கின் அடுத்த வாய்தாவின் தொடக்கத்திலோ, நடுவர் எழுந்துமூலம் பதிவு செய்யும் காரணங்களுக்காகப் பொருத்தமென நினைப்பாராயின், உடனடியாகவோ அவர் சாட்சியம் எடுக்கப்பட்ட வாதி தரப்பு சாட்சிகளில் எவரை யாவது குறுக்கு விசாரணை செய்ய விரும்புகிறாரா என்றும் அவ்வாறாயின், அவர்களில் எவரை அவ்வாறு விசாரணை செய்ய விரும்புகிறார் என்றும் உரைக்குமாறு அவர் கோரப்படுதல் வேண்டும்.

(5) அவர், தாம் அவ்வாறு விசாரணை செய்ய விரும்புவதாகச் சொல்வாராயின், அவரால் குறிப்பிடப்படும் சாட்சிகளை மீண்டும் கூப்பிட்டு, குறுக்கு விசாரணைக்குப் பின்பும் மறுவிசாரணை (ஏதேனுமிருப்பின்) அதற்குப் பின்பும் அவர்கள் விடுவிக்கப்படவேண்டும்.

(6) அடுத்து, எஞ்சியுள்ள வாதி தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தை எடுத்தல் வேண்டும்; அவர்களும், குறுக்கு விசாரணைக்கும் மறுவிசாரணை (ஏதேனுமிருப்பின்) அதற்குப் பின்பும் விடுவிக்கப்பட வேண்டும்.

எதிர் தரப்புச் சாட்சி.

247. அதன்பின்பு எதிரி தம்முடைய எதிர்வாதத்தைச் செய்ய நேர்ப்படுமாறும், தம் சாட்சியத்தைத் கொண்டு வருமாறும் கோரப்பட வேண்டும்; மற்றும் 243 ஆவது பிரிவின் வகைமுறைகள் இந்த நடவடிக்கைமீது இயங்குதல் வேண்டும்.

இ. விசாரணையின் முடிவு.

விடுதலை அல்லது தண்டனை.

248. (1) குற்றச்சாட்டொன்று வினையப்பட்டுள்ள இந்த அத்தியாயத்தின்படியான வழக்கு எதிலேனும் எதிரி குற்றவாளியல்லவென்ற முடிவுக்கு நடுவர் வந்தால், அவர் எழுத்து வடிவில் விடுதலை உத்தரவொன்றைப் பிறப்பிக்க வேண்டும்.

(2) இந்த அத்தியாயத்தின்படியான வழக்கு எதிலேனும் எதிரி குற்றவாளிதான் என்ற முடிவுக்கு நடுவர் வந்தும், ஆனால் 325 ஆவது பிரிவு அல்லது 360 ஆவது பிரிவின் வகைமுறைகளுக்கிணங்க அவர் மேல் நடவடிக்கை எடுக்காத

விடத்து, தண்டனை சம்பந்தமாக எதிரியைக் கேட்டதற்குப் பின்பு, சட்டப்படி அவர்பேரில் தண்டனை பிறப்பித்தல் வேண்டும்.

(3) இந்த அத்தியாயத்தின்படியான வழக்கு எதிலேனும், முந்திய தண்டனை சம்பந்தமாக 211 ஆவது பிரிவின் (7) ஆவது உட்பிரிவின் வகைமுறைகளின்படி குற்றஞ் சாட்டப்பட்டு, அக் குற்றச்சாட்டில் சொல்லப்பட்டவாறு, முந்தி தாம் தண்டிக்கப்பட்டுள்ளதை எதிரி ஒப்புக்கொள்ளாதவிடத்து, நடுவர், மேற்சொன்ன எதிரிக்குத் தண்டனைத் தீர்ப்பு அறிவித்ததற்குப் பின்பு சொல்லப்பட்ட முந்திய தண்டனையைப் பொறுத்து, சாட்சியம் எடுக்கலாம்; மற்றும் அதன்பேரில் அவரது முடிவைப் பதிவு செய்தல் வேண்டும்:

ஆனால், (2) ஆவது உட்பிரிவின்படி எதிரி குற்றவாளியென்று தீர்ப்பு அளிக்கப்பட்டிருந்தாலன்றியும் அளிக்கப்படும் வரையிலும், அந்தகைய குற்றச்சாட்டு எதுவும் நடுவரால் படித்துக்காட்டப்படுதலோ, அதை ஒப்புக்கொள்ளுமாறு எதிரி கேட்கப்படுதலோ, வாதி தரப்பிலோ வாதி தரப்பால் அளிக்கப்பட்ட சாட்சியத்திலோ முந்திய தண்டனை குறிப்பிடப்படுதலோ ஆகாது.

முறையிடுபவர் வராமை.

249. முறையீட்டின்பேரில் நடவடிக்கைகள் தொடரப்பட்டிருந்து, வழக்கை விசாரிப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட எந்தத் தேதியிலேனும் முறையிடுபவர் வராதபோதும், அந்தக் குற்றமானது சட்டப்படி சமரசமாகத் தீர்த்துக்கொள்ளக் கூடியதாக இருக்கும்போதும், அல்லது அது கைது செய்தற் குரிய குற்றமாக இல்லாதபோதும். இதற்கு முன் இதில் என்ன கண்டிருந்தபோதிலும், குற்றச்சாட்டு வாசிக்கப்படுவதற்கு முன்பு எந்தக் காலத்திலும், நடுவர் நம் முக்தம் போல் எதிரியை விடுவிக்கலாம்.

நியாயமான காரணமின்றி குற்றம் சுமத்தியதற்காக நஷ்டஈடு.

250. (1) முறையீட்டின்பேரிலோ, காவல் அலுவலர் அல்லது நடுவருக்குத் தரப்பட்ட தகவலின்பேரிலோ தொடரப்பட்ட வழக்கு எதிலும், நடுவொருவரால் விசாரணை செய்யத்தக்க குற்றம் எதையேனும் செய்ததாக ஒருவர் அல்லது ஒருவருக்கு மேற்பட்டவர்கள் குற்றஞ் சுமத்தப்பட்டு அவ் வழக்கைக் கேட்கும் நடுவர், எதிரிகள்

அனைவரையும் அல்லது அவர்களில் எவரையேனும் விடுவிப்பதற்கு, அல்லது விடுதலை செய்வதற்கு, அவர்கள் மீது அல்லது அவர்களில் எவர்மீதும் குற்றஞ்சாட்டுவதற்கு நியாயமான ஆதாரம் எதுமில்லை என்பதாகத் தாம் கருதுவாராயின், அவர் தம் விடுவிப்பு அல்லது விடுதலை உத்தரவு மூலமாக, எவரது முறையீடு அல்லது சுகவலின் பேரில் குற்றம் சாட்டப்பட்டதோ அவர் ஆஜராகியிருப்பாராயின் அவர் அத்தகைய எதிரிக்கு அல்லது ஒருவருக்கு மேற்பட்டவர்கள் எதிரிகளாயிருக்கும்போது அவர்கள் ஒவ்வொருவருக்கும் அல்லது அவர்களில் எவருக்கேனும் ஏன் நஷ்ட ஈடு செலுத்தக்கூடாது என்பதற்கு உடனடியாகக் காரணம் காட்டுமாறு அவரைக் கேட்கலாம்; அல்லது அத்தகையவர் ஆஜராகவில்லையாயின், மேற்சொன்னவாறு ஆஜராகிக் காரணம் காட்டுவதற்கு அவருக்கு ஆஜர் கட்டளை பிறப்பிக்குமாறு உத்தரவிடலாம்.

(2) அத்தகைய முறையிடுபவரோ தகவல் கொடுப்பவரோ காட்டும் காரணம் எதையும் நடுவர் பதிவு செய்து, பரிசீலித்தல் வேண்டும்; மற்றும், குற்றஞ் சாட்டுவதற்கு நியாயமான ஆதாரம் எதுமில்லை என்பதாகத் தமக்குத் திருப்தி ஏற்படுமாயின் அவர், விடுப்பதற்குத் தமக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அபராதத் தொகைக்கு மேற்படாது, தாம் நிர்ணயிக்கலாகும் தொகையை நஷ்ட ஈடாக அத்தகைய முறையிடுபவர் அல்லது தகவல் கொடுத்தவர் எதிரிக்கோ அவர்களில் ஒவ்வொருவருக்கும் அல்லது எவருக்கேனுமோ செலுத்த வேண்டும் என்பதாகப் பதிவு செய்யப்படவேண்டிய காரணங்களுக்காக உத்தரவொன்றைப் பிறப்பிக்கலாம்.

(3) நடுவர் (2) ஆவது உட்பிரிவின்படி நஷ்ட ஈடு செலுத்துவதற்கு உத்தரவிடுகிற கட்டளை மூலமாகவே, அத்தகைய நஷ்ட ஈடு செலுத்த உத்தரவிடப்பட்டவர், அவ்வாறு செலுத்தத் தவறுகையில் முப்பது நாட்களுக்கு மேற்படாத கால அளவுக்கு மெய்காவல் சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிடலாம்.

(4) எவரேனும் (3) ஆவது உட்பிரிவின்படி சிறை வைக்கப்படும்போது இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 68 மற்றும் 69 ஆகிய பிரிவுகளின் வகைமுறைகள் கூடுமான அளவிற்கு இயங்குதல் வேண்டும். 45/1860.

(5) இந்தப் பிரிவின்படி நஷ்டஈடு செலுத்த உத்தரவிடப்பட்டுள்ள எவரும், அத்தகைய உத்தரவின் காரணமாக, அவரால் செய்யப்பட்ட முறையீடு அல்லது தரப்பட்ட தகவல் சம்பந்தமான உரிமை வழக்குக் கட்டப்பாடு அல்லது குற்ற வழக்குக் கட்டப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்படுதல் ஆகாது:

ஆனால், எதிரிக்கு இந்தப் பிரிவின்படி செலுத்தப்பட்ட தொகை எதையும், அதே விஷயம் தொடர்பான பிந்திய உரிமை வழக்கு எதிலும் அத்தகையவருக்கு நஷ்டஈடு அளிக்கும்போது கணக்கிலெடுத்துக்கொள்ள வேண்டும்.

(6) நூறு ரூபாய்க்கு மேற்பட்டு நஷ்ட ஈடு செலுத்துமாறு இரண்டாவது வகுப்பு நடுவரால் (2) ஆவது உட்பிரிவின்படி உத்தரவிடப்பட்டுள்ள ஒரு முறையீடுபவரோ தகவல் கொடுப்பவரோ அத்தகைய நடுவரால் நடத்தப்பட்ட விசாரணையின்பேரில் தாம் தண்டிக்கப்பட்டது போன்றே அந்த உத்தரவின் பேரில் மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

(7) எதிரி ஒருவருக்கு நஷ்ட ஈடு செலுத்துவதற்கான உத்தரவானது (6) ஆவது உட்பிரிவின்படி மேல்முறையீட்டிற்கு உட்பட்டுள்ள ஒரு வழக்கில் பிறப்பிக்கப்படும்போது அந்த மேல்முறையீட்டைத் தாக்கல் செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட கால அளவு முடிவடைவதற்கு முன்பு, அல்லது மேல்முறையீடொன்று தாக்கல் செய்யப்படுமானால், அந்த மேல்முறையீடு தீர்மானிக்கப்படுவதற்கு முன்பு, அந்த நஷ்ட ஈடு அவருக்குச் செலுத்தப்படுதல் ஆகாது; மற்றும் அத்தகைய உத்தரவானது அவ்வாறு மேல்முறையீட்டிற்கு உட்பட்டதாக ஒரு வழக்கில் பிறப்பிக்கப்படும்பட்சத்து, அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாதம் முடிவடைவதற்கு முன்பு அந்த நஷ்ட ஈடு செலுத்தப்படுதல் ஆகாது.

(8) இந்தப் பிரிவின் வகைமுறைகள் ஆஜர் கட்டளை வழக்குகள் மீதும், பிடி கட்டளை வழக்குகள் மீதும் இயங்கும்.

அத்தியாயம்-XX.

ஆஜர் கட்டனை வழக்குகளை நடுவர்கள் விசாரணை செய்தல்.

நடுவர் எதிரி முன்னிலையில் வரும்போது குற்றச்சாட்டை உரைத்தல்.

251. ஒரு ஆஜர் கட்டனை வழக்கில், எதிரி நடுவர்முன் வரும்போது அல்லது கொண்டுவரப்படும்போது, அவர் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்படும் குற்றத்தின் விவரங்கள் அவருக்கு உரைக்கப்படவேண்டும்; மற்றும் அவர் குற்றஞ் செய்ததாக ஒப்புக் கொள்கிறாரா அல்லது எதிர்வாதஞ் செய்யப் போகிறாரா என்று கேட்கப்பட வேண்டும்; ஆனால் குற்றச்சாட்டொன்றை முறைக்காக வேண்டியது அவசியமில்லை.

குற்றம் செய்ததாக ஒப்புக் கொள்வதன் பேரில் தண்டிக்கப் படுதல்.

252. எதிரி குற்றஞ்செய்ததாக ஒப்புக் கொள்வாராயின், நடுவர் சாத்தியமாகும் அளவுக்கு எதிரி பயன்படுத்திய சொற்களிலேயே அந்த உரையைப் பதிவு செய்தல் வேண்டும்; மற்றும் தம் யுக்தம்போல் அவரை அதன்பேரில் தண்டிக்கலாம்.

குற்றத்தை ஒப்புக் கொள்ளாதிருத்தல், விசாரணை வழக்குகளில் எதிரி வராதபொழுது, தண்டித்தல்.

253. (1) 206 ஆவது பிரிவின்படி ஆஜர் கட்டனை ஒன்று பிறப்பிக்கப்பட்டு, எதிரி நடுவர் முன் ஆஜராகாமலேயே குற்றஞ்செய்ததாக ஒப்புக்கொள்ள விரும்புமிடத்து, அவர் தம் உரை அடங்கிய கடிதத்தையும், ஆஜர் கட்டனையில் குறிப்பிடப்பட்ட அபராதத் தொகையையும் அஞ்சல் மூலமாகவோ, தூதுவர் மூலமாகவோ நடுவருக்கு அனுப்புதல் வேண்டும்.

(2) நடுவர், எதிரி வராதபோது, அவர் குற்றஞ்தை ஒப்புக் கொண்டதன்பேரில், தம் யுக்தம் போல், தண்டனைத்தீர்ப் புரைத்து, ஆஜர் கட்டனையில் குறிப்பிடப்பட்ட அபராதத்தைச் செலுத்துமாறு அவருக்குத் தண்டனையும் விதிக்கலாம்; மற்றும் எதிரியால் அனுப்பப்பட்ட தொகையை அந்த அபராதத்திற்கு ஈடு செய்தல் வேண்டும், அல்லது எதிரியால் இதன் பொருட்டு அதிகாரமளிக்கப்பட்ட வாதுரைஞர் ஒருவர் எதிரியின் சார்பாக உரை செய்யுமிடத்து, நடுவர், எவ்வளவு சாத்தியமாகுமோ அந்த அளவுக்கு, வாதுரைஞர் பயன்படுத்திய சொற்களிலேயே அந்த உரையைப் பதிவு செய்தல் வேண்டும்; மேலும், தம் யுக்தம் போல் அந்த உரையின் பேரில் அத்தகைய எதிரிக்குத் தண்டனைத் தீர்ப்பு அளித்து, மேற் சொன்னவாறு அவருக்குத் தண்டனையும் விதிக்கலாம்.

தண்டிக்கப் படாதபோது நடைமுறை எங்ஙனம் என்பது.

254. (1) நடுவர், 252 ஆவது பிரிவு அல்லது 253 ஆவது பிரிவின்படி எதிரியைத் தண்டிக்கவில்லையெனில், அவர் வாதி தரப்பினைக் கேட்க முற்பட்டும் வாதி தரப்புக்கு ஆதரவாகத் தாக்கல் செய்யப்படலாகும் சாட்சியம் அனைத்தையும் எடுக்கவும் வேண்டும்; அத்துடன் எதிரியையும் கேட்டு, தமது எதிர் வழக்கிற்காக அவர் தாக்கல் செய்யும் சாட்சி அனைத்தையும் எடுக்கவும் வேண்டும்.

(2) வாதி தரப்பின் அல்லது எதிரியின் விண்ணப்பத்தின் பேரில், நடுவர், தாம் பொருத்தமென நினைத்தால், சாட்சி எவரையும் ஆஜராகுமாறே பத்திரம் அல்லது வேறு பொருள் எதையேனும் தாக்கல் செய்யுமாறே உத்தரவிட்டு ஆஜர் கட்டளையொன்றைப் பிறப்பிக்கலாம்.

(3) நடுவர், அத்தகைய விண்ணப்பத்தின் பேரில் சாட்சி எவருக்கேனும் ஆஜர் கட்டளையிடுவதற்கு முன்பு, விசாரணையின் பொருட்டு ஆஜராவதற்கு சாட்சிக்கு ஏற்படக்கூடிய நியாயமான செலவுகளை நீதிமன்றத்தில் செலுத்திவைக்க வேண்டும் என்று கோரலாம்.

விடுதலை அல்லது தண்டனைத் தீர்ப்பு.

255. (1) நடுவர், 254 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்ட சாட்சியத்தையும், தாமாகவே மேற்கொண்டு தாக்கல் செய்யப்பட செய்விக்கும் சாட்சியம் ஏதேனுமிருப்பின் அனைத்தும் எடுத்ததன் பேரில் எதிரி குற்றவாளியல்ல என்ற முடிவுக்கு வந்தால், அவர் எழுத்து வடிவில் விடுதலை உத்தரவொன்றைப் பிறப்பிக்க வேண்டும்.

(2) நடுவர் 325 ஆவது பிரிவு அல்லது 360 ஆவது பிரிவின் வகைமுறைகளின்படி மேல்நடவடிக்கை எடுக்காதபோது, எதிரி குற்றவாளிதான் என்ற முடிவுக்கு அவர் வந்தால், அவர் சட்டப்படி அவர் பேரில் தண்டனை விதித்தல் வேண்டும்.

(3) முறையீடு அல்லது ஆஜர் கட்டளையின் தன்மை எதுவாயிருந்தாலும், ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது நிரூபிக்கப்பட்ட சங்கதிகளிலிருந்து, எதிரி செய்திருப்பதாகத் தோன்றுவதும், இந்த அத்தியாயத்தின்படி விசாரணை செய்யத்தக்கதுமான குற்றம் எதையேனும் எதிரி செய்ததற்காக நடுவர் 252 ஆவது பிரிவு அல்லது 255 ஆவது பிரிவின்படி, தண்டிப்பதால் எதிரிக்குப் பாதகம் ஏற்படாது என்று நடுவருக்குத் திருப்தி ஏற்படுமானால் அவர் எதிரியை அவ்வாறே தண்டிக்கலாம்.

முறையீட்டில் வாய்மை அல்லது அலாத மரணம்.

256. (1) முறையீட்டின் பேரில் ஆஜர் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்து, எதிரி ஆஜராவதற்காகக் குறிப்பிடப்பட்ட தேதியன்றே, விசாரணை ஒத்தி வைக்கப்படலாகும். அதற்குப் பிந்திய ஏதேனும் ஒரு தேதியன்றே முறையிடுபவர் ஆஜராகவில்லையானால், நடுவர், இதற்கு முன் இதில் என்ன கண்டிருந்தபோதிலும் விசாரணையை வேறொரு நாளுக்கு ஒத்திவைப்பது அல்லது எதேனுமொரு பார்த்திற்காகத் தீர்ப்பை நிறுத்தாலன்றி எதிரியை விடுதலை செய்தல் வேண்டும்:

ஆனால், சாதுரைஞர் நாயகமோ குற்ற வழக்கை நடத்துகிற அதிகாரியோ முறையிடுபவரின் பிரதிநிதியாக ஆஜராகியிருக்குமிடத்து, அல்லது முறையிடுபவர் நேர்மூகமாக ஆஜராவது தேவையில்லை என்பதாக நடுவர் கருதுமிடத்து, அந்த நடுவர், அவர் வருவதைத் தவிர்த்து வழக்கை மேல் நடத்தலாம்.

(2) மரணமடைந்ததன் காரணமாக முறையிடுபவர் சென்று முடியாத வழக்குகள் மீதும், (1) ஆவது உட்பிரிவின் வகைமுறைகள் கூடுமான அளவிற்கு இயங்குதல் ஆகும்.

முறையீட்டைத் திரும்பப் பெறுதல்.

257. இந்த அத்தியாயத்தின்படி நடக்கும் வழக்கு எதிலும், முடிவான உத்தரவு ஒன்று பிறப்பிக்கப்படுவதற்கு முன்பு எந்தக் காலத்திலேனும், எதிரி மீதோ எதிரிகள் ஒருவருக்கு மேற்பட்டவர்களாயிருந்தால், அவர்கள் அனைவரின் மீதோ, அல்லது எவரேனும் ஒருவரின் மீதோ முறையிடுபவர் செய்திருந்த முறையீட்டை அவர் திரும்பப் பெற்றுக்கொள்ள அனுமதி அளிப்பதற்குப் போதுமான ஆதாரங்களிருக்கின்றன என்பதாக முறையிடுபவர் நடுவரைத் திருப்தி கொள்ளச் செய்வாரானால், அதைத் திரும்பப் பெற்றுக்கொள்ள அவருக்கு அந்த நடுவர் அனுமதி அளிக்கலாம்; அதன்பேரில் எந்த எதிரியின் மீதான முறையீடு அவ்வாறு திரும்பப் பெற்றுக்கொள்ளப் படுகிறதோ அந்த எதிரி விடுதலை செய்யப்படுதல் வேண்டும்.

குறிப்பிட்ட வழக்குகளில் நடவடிக்கை கைவிடுதற்கு நீதிமன்ற நடவடிக்கை கைவிடுதல்

258. முறையீட்டின் பேரில்லாமல் வேறுவிதமாகத் தொடரப்பட்ட ஆஜர் கட்டளை வழக்கு எதிலும், முதல் வகுப்பு நடுவரோ, தலைமை நீதித் துறை நடுவரின் முன் ஒப்பளிப்புடன் நீதித் துறை நடுவர் வேறெவருமோ

நிர்ப்புரை பகராமலேயே பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக எந்தக் கட்டத்திலும் நடவடிக்கைகளை நிறுத்தலாம்; மற்றும் முதன்மைச் சாட்சிகளின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டதற்குப் பின்பு அந்தகைய நடவடிக்கைகள் நிறுத்தப்படுமிடத்து, விடுதலைத் தீர்ப்பினைப் பகரலாம்; மேலும் வேறெந்தச் சந்தர்ப்பத்திலும் எதிரியை விட்டுவிடலாம்; அவ்வாறு விட்டுவிடுவது அவரை விடுவிப்பதற்குச் சமானமாகும்.

ஆஜர் கட்டளை வழக்கு மீது பிடிகட்டளை வழக்குகளாக மாற்ற நீதிமன்றத்துக்குள்ள அதிகாரம்.

259. ஆறுமாதங்களுக்கு மேற்பட்ட காலத்திற்குச் சிறைத் தண்டனை விதிப்பதற்குரிய ஒரு குற்றம் சம்பந்தப்பட்ட ஆஜர் கட்டளை வழக்கின் விசாரணையின்போது, நீதியின் நலத்திற்காக, அக் குற்றமானது பிடிகட்டளை வழக்குகளின் விசாரணைக்கான நடைமுறைக்கிணங்க விசாரணை செய்யப்பட வேண்டும் என்று நடுவருக்குத் தோன்றும் போது, அத்தகைய நடுவர் பிடிகட்டளை வழக்குகளின் விசாரணைக்காக இந்தச் சட்டத்தால் வகை செய்யப்பட்ட முறையில் அவ் வழக்கை மீண்டும் கேட்க முற்பட்டு, விசாரிக்கப்பட்டிருக்கக்கூடிய சாட்சிகள் எவரையும் மீண்டும் கூப்பிடலாம்.

அத்தியாயம் XXI.

சுருக்கு விசாரணைகள்.

சுருக்கு விசாரணை செய்ய நகர அதிகாரம்.

260. (1) இந்தச் சட்டந்தில் என்ன அடங்கியிருந்த போதிலும்—

(அ) தலைமை நீதித் துறை நடுவர் எவரும் ;

(ஆ) பெருநகர் நடுவர் எவரும் ;

(இ) உயர் நீதிமன்றத்தால் இதற்கெனச் சிறப்பாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள முதல் வகுப்பு நடுவர் எவரும்,

தாம் பொருத்தமென நினைத்தால், பின்வரும் குற்றங்கள் அனைத்தையும் அல்லது எதையேனும் சுருக்கு முறையில் விசாரணை செய்யலாம் :—

(i) மரண தண்டனையோ, ஆயுள் தண்டனையோ, இரண்டாண்டுகளுக்கு மேற்பட்ட காலத்திற்குச் சிறைத் தண்டனையோ விதிப்பதற்குரியதல்லாத குற்றங்கள் ;

(ii) இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 379 ஆவது பிரிவு, 380 ஆவது பிரிவு, அல்லது 381 ஆவது பிரிவின் படியுள்ள திருட்டுக் குற்றம், திருடப்பட்ட சொத்தின் மதிப்பு, இருநூறு ரூபாய்க்கு மேற்படாதிருக்குமிடத்து ; 45/1860

(iii) இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 411 ஆவது பிரிவின்படியுள்ள திருட்டுப் பொருளைப் பெற்றுக்கொள்கிற அல்லது தொடர்ந்து வைத்துக்கொள்கிற குற்றம், அந்தப் பொருளின் மதிப்பு இருநூறு ரூபாய்க்கு மேற்படாதிருக்குமிடத்து ; 45/1860

(iv) இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 414 ஆவது பிரிவின்படி திருட்டுப் பொருளை மறைத்து வைப்பதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு உதவும் குற்றம், அத்தகைய பொருளின் மதிப்பு இருநூறு ரூபாய்க்கு மேற்படாதிருக்குமிடத்து ; 45/1860

(v) இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 454 மற்றும் 456 ஆகிய பிரிவுகளின்படியுள்ள குற்றங்கள் ; 45/1860

45/1860

(vi) இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 504 ஆவது பிரிவின்படியுள்ள அமைதிக் குலைவைத் தூண்டிவிடும் கருத்துடன் செய்யப்படும் அமைதித்தல் குற்றம், மற்றும் 506 ஆவது பிரிவின்படியுள்ள மிரட்டல் குற்றம்;

(vii) மேற்சொன்ன குற்றங்களில் எதேனு மொன்றுக்கு உடந்தையாயிருக்கும் குற்றம்;

(viii) மேற்சொன்ன குற்றங்களில் எதேனு மொன்றைச் செய்வதற்காக முயற்சி செய்தல், அத்தகைய முயற்சி ஒரு குற்றமாக இருக்கும்போது;

1/1871

(ix) எந்தச் செய்கையைப் பொறுத்து 1871 ஆம் ஆண்டு கால்நடை அத்துமீறுகை சட்டத்தின் 20 ஆவது பிரிவின்படி முறையீடு ஒன்று செய்துகொள்ளலாகுமோ அந்தச் செய்கையினால் உண்டான எந்தக் குற்றமும்.

(2) சுருக்கு விசாரணையின்போது வழக்கைச் சுருக்கு விசாரணை செய்வது விரும்பத்தக்கதல்ல என்பதாக வழக்கின் தன்மை இருக்கிறதென்று நடுவருக்குத் தோன்றும்போது விசாரிக்கப்பட்டிருக்கக் கூடிய சாட்சிகள் எவரையும் நடுவர் மீண்டும் கூப்பிடலாம்; மற்றும் இந்தச் சட்டத்தால் வகை செய்யப்பட்ட முறையில் அவ் வழக்கை மீண்டும் கேட்க முற்படலாம்.

இரண்டாவது வகுப்பு நடுவர் சுருக்கு விசாரணை செய்தல்.

261. இரண்டாவது வகுப்பு நடுவருக்குண்டான அதிகாரங்கள் சூட்டப்பெற்ற நடுவர் எவருக்கும் அபராதம் மட்டும் விதிப்பதற்குரிய அல்லது அபராதத்துடனே இல்லாமலோ ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலத்துக்குச் சிறைத் தண்டனை விதிப்பதற்குரிய குற்றம் எதையும், அத்தகைய செய்கைக்கு உடந்தையாக இருக்கும் குற்றம் எதையும், அல்லது அதைச் செய்வதற்கான முயற்சிக் குற்றம் எதையும் சுருக்கு விசாரணை செய்வதற்கான அதிகாரத்தை உயர் நீதிமன்றம் வழங்கலாம்.

சுருக்கு விசாரணைகளுக்கான நடைமுறை.

262. (1) இந்த அத்தியாயத்தின்படி நடக்கும் விசாரணைகளில், இதற்குப் பின் சொல்லப்பட்ட விதிவிலக்குகளுக்குட்பட்டு, ஆஜர் கட்டளை வழக்கின் விசாரணைக்காக இந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நடைமுறை பின்பற்றப்படுதல் வேண்டும்.

(2) இந்த அத்தியாயத்தின்படி தண்டனைத் தீர்ப்பு அளிக்கப்படும் சந்தர்ப்பத்தில் மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலத்திற்கான சிறைத் தண்டனை எதுவும் பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

263. சுருக்க முறையில் விசாரணை செய்யப்படும் வழக்கு ஒவ்வொன்றிலும் மாநில அரசு விதிக்கும் படிவத்தில் நடுவர் பின்வரும் விவரங்களைப் பதிவு செய்தல் வேண்டும்; அவையாவன் :— சுருக்கு விசாரணைகளில் பதிவு.

(அ) வழக்கின் வரிசை எண்;

(ஆ) குற்றம் செய்யப்பட்ட தேதி;

(இ) அறிக்கை அல்லது முறையீட்டின் தேதி;

(ஈ) முறையிடுபவர் (எவரேனுமிருப்பின்) அவரது பெயர்;

(உ) எதிரியின் பெயர், பெற்றோர் விவரம், எதிரியின் இருப்பிடம்;

(ஊ) முறையீடு செய்யப்பட்ட குற்றமும் நிரூபிக்கப்பட்ட குற்றமும் (எதேனுமிருப்பின்) மற்றும் 260 ஆவது பிரிவின் (i) ஆவது உட்பிரிவின் (ii), (iii) அல்லது (iv) ஆவது கூறின்கீழ் வருகிற சந்தர்ப்பங்களில் எந்தச் சொற்றைப் பொறுத்து குற்றம் செய்யப்பட்டுள்ளதோ அந்தச் சொற்றின் மதிப்பும்;

(எ) எதிரியின் வாதுரையும் அவை விசாரணை ஏதேனும் செய்திருந்தால் அந்த விசாரணையும்;

(ஏ) முடிபு;

(ஐ) தீர்ப்புத் தண்டனை அல்லது வேறு முடிவான உத்தரவு;

(ஒ) நடவடிக்கைகள் முடிவடைந்த தேதி.

264. எதிரி குற்றஞ்செய்ததாக ஒப்புக்கொள்ளாத சுருக்கு விசாரணை செய்யப்பட்ட வழக்கு ஒவ்வொன்றிலும், சாட்சியத்தில் சாரத்தையும் முடிபுக்கான காரணங்களைச் சுருக்கமாகக் குறிக்கும் தீர்ப்பினையும் நடுவர் எழுத்தில் அமைக்க வேண்டும். சுருக்கு விசாரணை செய்யப்பட்ட வழக்குகளில் தீர்ப்பு.

பதிவு மொழியும் தீர்ப்பு மொழியும்.

265. (1) அத்தகைய ஒவ்வொரு பதிவும் தீர்ப்பும் நீதிமன்ற மொழியில் எழுதப்படுதல் வேண்டும்.

(2) சுருக்க முறையில் குற்றங்களை விசாரணை செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள நடுவர் எவருக்கும் மேற்சொல்லப்பட்ட பதிவு அல்லது தீர்ப்பு அல்லது இரண்டையுமே தலைமை நீதித் துறை நடுவரால் இதற்கென நியமனஞ்செய்யப்பட்ட அலுவலர் ஒருவரைக் கொண்டு தயாரிக்க உயர் நீதிமன்றம் அதிகாரம் அளிக்கலாம்: அவ்வாறு தயாரிக்கப்பட்ட பதிவு அல்லது தீர்ப்பு அத்தகைய நடுவரால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

அத்தியாயம் XXII.

சிறைச் சாலைகளில் சிறை வைக்கப்பட்டவர்கள் அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர்களை ஆஜர்ப்படுத்துதல்.

இலக்கணம்.

266. இந்த அத்தியாயத்தில்—

(அ) "காவலில் வைக்கப்பட்ட" என்பது, தடுப்புக் காவலுக்கு வகை செய்கிற சட்டம் எதேனும் ஒன்றின்படி "காவலில் வைக்கப்பட்ட" என்பதையும் உள்ளடக்கும்;

(ஆ) "சிறைச்சாலை" என்பது,—

(i) இவ்விதச் சிறைச்சாலையென மாநில அரசால் பொது அல்லது சிறப்புக் கட்டளை மூலமாக விளம்பப் பட்டுள்ள எந்த இடத்தையும்;

( ) சீர்திருத்தப் பள்ளி அல்லது இளங்குற்ற வாளிகள் சீர்திருத்தப் பள்ளி ("போர்ஸ்டல்" பள்ளி) அல்லது அதுபோன்ற தன்மை வாய்ந்த வேறு நிறுவனம் எதையும்— உள்ளடக்கும்.

கைதிகள் ஆஜராவதைக் கோரும் அதிகாரம்.

267. (1) இந்தச் சட்டத்தின்படி பரிசீலனை, விசாரணை அல்லது வேறு நடவடிக்கை நடைபெறும்போது,—

(அ) சிறைச்சாலையொன்றில் சிறை வைக்கப் பட்டுள்ள அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஒருவர், குற்றச்சாட்டு ஒன்றுக்கு பதிலளிப்பதற்காகவோ, அவருக்கெதிரான நடவடிக்கைகளின் பொருட்டோ, நீதிமன்றத்தின் முன் கொண்டுவரப்பட வேண்டும் என்பதாக, அல்லது

(ஆ) அத்தகையவரை ஒரு சாட்சியாக விசாரிப்பது நீதியின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அவசியமாக இருக்கிறது என்பதாக குற்ற வழக்கு நீதிமன்றத்திற்குத் தோன்றுகிறபோதெல்லாம், குற்றச்சாட்டுக்குப் பதிலளிப் பதற்காகவோ அத்தகைய நடவடிக்கையின் பொருட்டோ, அல்லது நிலவரத்திற்கேற்ப சாட்சியம் தருவதற்காகவோ நீதிமன்றத்தின் முன் அத்தகையவரைக் கொண்டு வருமாறு சிறைச்சாலையின் பொறுப்பு அலுவலரைக் கோரி கட்டளை யொன்றை அந்த நீதிமன்றம் பிறப்பிக்கலாம்.

(2). (1) ஆவது உட்பிரிவின்படி கட்டளையொன்று இரண்டாவது வகுப்பு நடுவரால் பிறப்பிக்கப்படுமிடத்து, அந்த நடுவர் எந்தத் தலைமை நீதித் துறை நடுவருக்குக் கீழமைந்தவரோ, அந்த நடுவரால் அக் கட்டளை அது மேலொப்பமிடப் பட்டிருந்தாலன்றி, சிறைச்சாலையின் பொறுப்பு அலுவலருக்கு அது அனுப்பி வைக்கப்படுதலோ, அதன் மீது அவர் செயற்படுதலோ ஆகாது.

(3). (2) ஆவது உட்பிரிவின்படி மேலொப்பத்திற்காகப் பணிந்தனுப்பப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும், நடுவரின் கருத்தின்படி, அந்தக் கட்டளை பிறப்பிப்பதற்கு அவசியமாகிறது என்பதைக் காட்டுகிற விவரங்கள் கொண்ட உரையுடன் சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்; மற்றும் அது எந்தத் தலைமை நீதித் துறை நடுவருக்குப் பணிந்தனுப்பப்படுகிறதோ அந்த நடுவர் அத்தகைய உரையைப் பரிசீலனை செய்ததற்குப் பின்பு, அக் கட்டளைக்கு மேலொப்பமிட மறுக்கலாம்.

சில மீது 267 ஆவது பிரிவு இயங்காமல் இருக்கச் செய்வதற்கு மாநில அரசுக்குள்ள அதிகாரம்.

268. (1) மாநில அரசு (2) ஆவது உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட விஷயங்களைக் கவனத்திற்கொண்டு, எவரேனும் அல்லது எந்த வகையினரேனும் சிறையில் வைக்கப்பட்டிருந்தால் அல்லது தடுப்புக் காவலில் வைக்கப் பட்டிருந்தால் அந்தச் சிறையிலிருந்து அவரோ அவர்களோ அகற்றப்படக்கூடாது என்பதாக பொது அல்லது சிறப்புக் கட்டளை மூலமாக எந்த நேரத்திலும் உத்தரவிடலாம்; அதன் பேரில் அந்தக் கட்டளை அமலிலிருக்கும் வரை 267 ஆவது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட கட்டளை எதுவும், அது மாநில அரசின் கட்டளைக்கு முன்பு பிறப்பிக்கப் பட்டதாயினும் பின்பு பிறப்பிக்கப்பட்டதாயினும், அந்தகையவரைப் பொறுத்து அல்லது அந்தகைய வகையினரைப் பொறுத்து செயற்பட்டு வருதல் வேண்டும்.

(2). (1) ஆவது உட்பிரிவின்படி கட்டளையொன்றைப் பிறப்பிப்பதற்கு முன்பு, மாநில அரசு பின்வரும் விஷயங்களைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும், அவையாவன :—

(அ) எந்தக் குற்றத்திற்காக அல்லது எந்த ஆதாரங்களின்பேரில் அத்தகையவர் அல்லது அத்தகைய வகையினர் சிறையில் வைக்கப்பட அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்பட கட்டளையிடப்பட்டிருக்கின்றாரோ அந்தக் குற்றத்தின் தன்மை அல்லது அந்த ஆதாரங்கள்;

(ஆ) அந்நகையவர் அல்லது அத்தகைய வகையினர் சிறைச்சாலையிலிருந்து அகற்றப்பட அனுமதிக்கப் படுவாராயின், பொது ஒழுங்கு குலையக் கூடிய நிலை ;

(இ) மொத்தமாகவே பொது நலம்.

269. பரவைப் பொறுத்து 267 ஆவது பிரிவின்படி கட்டளையொன்று பிறப்பிக்கப்படுகிறதோ, அவர்—

சிறைச்சாலைப் பொறுப்பு அலுவலர் சில எதிர்பாரா நிகழ்ச்சிகளின்போது கட்டளையை நிறைவேற்றுமளிருத்தல்.

(அ) நோய் அல்லது தளர்ச்சி காரணமாக, சிறைச் சாலையிலிருந்து அகற்றத் தகாதவராக இருக்குமிடத்து ; அல்லது

(ஆ) மேல் விசாரணைக்காக அனுப்பப்பட்ட நிலையிலிருக்குமிடத்து, அல்லது விசாரணை அல்லது முதல் நிலைப் புலனாய்வு நடப்பிலிருக்கும் காலத்தில் காவலிலிருக்குமிடத்து : அல்லது

(இ) அந்தக் கட்டளைக்கிணங்க நடப்பதற்கும் அவர் சிறை வைக்கப்பட்டுள்ள அல்லது நடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலைக்கு மீண்டும் அவரை இட்டுச் செல்வதற்கும் நேரைப்படும் காலம் முடிவடைவதற்கு முன்பே கெடு முடிவடையும் கால அளவிற்குப் பாதுகாவலில் இருக்குமிடத்து ; அல்லது

(ஈ) 268 ஆவது பிரிவின்படி மாநில அரசால் பிறப்பிக்கப்பட்ட கட்டளை மீதியங்குகிறவராக இருக்குமிடத்து,

அந்தச் சிறைச்சாலைப் பொறுப்பு அலுவலர் நீதிமன்றத்தின் கட்டளையை நிறைவேற்றுமளிருத்தல் வேண்டும் : மற்றும் அவ்வாறு நிறைவேற்றுமைக்கான காரணங்களைக் கொண்ட உரை ஒன்றை நீதிமன்றத்திற்கு அனுப்புதல் வேண்டும் :

ஆனால் அத்தகையவர் அந்தச் சிறைச்சாலையிலிருந்து இருப்புறைத்து திலோ மீட்டருக்கு மேற்படாத தொலைவிலுள்ள ஓரிடத்தில் சாட்சியம் கொடுப்பதற்காக அழைத்துச்செல்லப்படுமிடத்து, அந்தச் சிறைச்சாலைப் பொறுப்பு அலுவலர் (ஆ) கூறில் சொல்லப்பட்ட காரணத்திற்காக அவ்வாறு நிறைவேற்றுமளிருத்தல் ஆகாது.

மாஜிஸ்திரேட்டுடன் நிகழ்வுறாத நிற்குக் கொண்டு வரப்பற்றல்.

270. 267 ஆவது பிரிவின் (1) ஆவது உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்டு, அவசியமாயிருக்குமிடத்து அதன் (2) ஆவது உட்பிரிவின்படி உரியவாறு மேலொப்பமிடப் பட்ட கட்டளையொன்று ஒப்படைக்கப்பட்டதன்பேரில், 269 ஆவது பிரிவின் வகைமுறைகளுக்குட்பட்டு சிறைச்சாலைப் பொறுப்பு அலுவலர், அந்தக் கட்டளையில் பெயர் குறிப்பிடப் பட்டவர் எந்த நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கோரப்படு கிறதோ அந்த நீதிமன்றத்திற்கு, அந்தக் கட்டளையில் சொல் லப்பட்ட நேரத்தில் அங்கே வரக்கூடிய வகையில் அவரை இட்டுச் செல்லும்படி செய்தல் வேண்டும்; மற்றும் அவர் விசாரிக்கப்படும் வரையில் அல்லது எந்தச் சிறையில் அவர் சிறை வைக்கப்பட்டிருந்தாரோ அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தாரோ அந்தச் சிறைச்சாலைக்கு மீண்டும் இட்டுச் செல்லப்படுவதற்கு அவருக்கு நீதிமன்றம் அதிகாரமளிக்கும் வரையில், அந்த நீதிமன்றத்திலோ அதற்கு அருகிலோ அவரைப் பாதுகாவலில் வைத்திருக்கும்படி செய்தல் வேண்டும்.

சிறையில் சாட்சியை விசாரணை செய்வதற்காக ஆணை பிறப்பிக்கும் அதிகாரம்.

271. இந்த அத்தியாயத்தின் வகைமுறைகள் சிறைச்சாலை ஒன்றில் சிறை வைக்கப்பட்டுள்ள அல்லது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள எவரையும் ஒரு சாட்சியாக விசாரணை செய்வதற்காக, 284 ஆவது பிரிவின்படி ஆணை ஒன்றைப் பிறப்பிப்பதற்கு நீதிமன்றத்திற்குள்ள அதிகாரத்திற்கு பாதகமன்னியில் இருத்தல் வேண்டும்; மற்றும் XXIII - ஆவது அத்தியாயத்தின் 'ஙா' பகுதியின் வகைமுறைகள் வேறெவையேனும் ஆணையின் பேரில் விசாரணை செய்வது சம்பந்தமாக இயங்குவன போன்ற, சிறையில் அத்தகைய எவரையும் ஆணையின்பேரில் விசாரணை செய்வதன் சம்பந்தமாகவும் இயங்கும்.

அத்தியாயம் XXIII.

பரிசீலனைகளிலும் விசாரணைகளிலும் சாட்சியம்.

அ. சாட்சியத்தை எடுப்பதற்கும் பதிவு செய்வதற்குமான முறை.

நீதிமன்ற மொழி.

272. மாநில அரசு இந்தச் சட்டத்தின் நோக்கங்களைப் பொறுத்தமட்டில், அந்த மாநிலத்திற்குள் உள்ள உயர்நீதி மன்றம் அல்லாத நீதிமன்றம் ஒவ்வொன்றின் மொழியும் எது வாக இருத்தல் வேண்டும் என்பதை நிர்ணயிக்கலாம்.

சாட்சியம் எதிரியின் முன்னிலையில் எடுக்கப்பட வேண்டும் என்பது.

273. வேறுவிதமாக வெளிப்படையாக வகைசெய்யப்பட்டிருந்தாலன்றி விசாரணை அல்லது வேறு நடவடிக்கை நடைபெறும்போது எடுக்கப்படும் சாட்சியம் அனைத்தும் எதிரியின் முன்னிலையில், அல்லது அவர் நேர்முகமாக ஆஜராவது தவிர்க்கப்படும்போது, அவரது வாதுரைஞரின் முன்னிலையில் எடுக்கப்பட வேண்டும்.

விளக்கம்.—இந்தப் பிரிவில், "எதிரி" என்பது எவர் தொடர்பாக VIII ஆவது அத்தியாயத்தின்படி எந்த நடவடிக்கையேனும் இந்தச் சட்டத்தின்படி தொடக்கப்பட்டிருக்கின்றதோ அவரை உள்ளடக்கும்.

ஆஜர் கட்டாய வழக்குகளிலும் பரிசீலனைகளிலும் பதிவு.

274. (1) நடுவர் ஒருவர் முன் விசாரணை செய்யப்படும் ஆஜர் கட்டாய வழக்குகள் அனைத்திலும், 145 முதல் 148 வரையிலான (இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக) பிரிவுகளின்படி நடக்கும் பரிசீலனைகள் அனைத்திலும் மற்றும் விசாரணையின்போதல்லாமல் 446 ஆவது பிரிவின்படி நடக்கும் வேறு நடவடிக்கைகள் அனைத்திலும், நடுவர், சாட்சி ஒவ்வொருவரையும் விசாரணை செய்துவரும்போதே, அவரது சாட்சியத்தின் சாரத்தை நீதிமன்ற மொழியில் குறிப்பெடுத்துக் கொள்ளவேண்டும்:

ஆனால், நடுவர் தாமே அவ்வாறு குறிப்பெடுத்துக்கொள்ள இயலவில்லையானால் அவர், தமது இயலாமைக்கான காரணத்தைப் பதிவு செய்ததற்குப் பின்பு, அத்தகைய குறிப்பை எழுத்துமூலமாக நீதிமன்றத்தில் பகிரங்கமாக எழுதுவிக்கவோ தாம் சொல்லச்சொல்ல எழுதும்படி செய்தலோ வேண்டும்.

(2) அத்தகைய குறிப்பு நடுவரால் கையொப்பமிடப் படுதல் வேண்டும்; மற்றும் அது பதிவுக்கட்டின் பகுதியாக அமைதல் வேண்டும்.

பிடிகட்டளை வழக்குகளில் பதிவு.

275. (1) ஒரு நடுவர் முன் விசாரணை செய்யப்படும் பிடி கட்டளை வழக்குகள் அனைத்திலும், சாட்சி ஒவ்வொருவரையும் விசாரணை செய்துவரும்போதே, அவரது சாட்சியம் அந்த நடுவாலேயே எழுத்துமூலமாக எழுதிக் கொள்ளப்பட வேண்டும்; அல்லது நீதிமன்றத்தில் பகிரங்கமாக அவர் சொல்லச் சொல்ல எழுதப்படவேண்டும்; அல்லது உடல் சம்பந்தமான இயலாமை அல்லது வேறு இயலாமை காரண மாக அவர் அவ்வாறு செய்ய முடியாதிருக்குமிடத்து, அவரது மேற்பார்வையிலும் கண்காணிப்பிலும் இதற்கென நீதிமன்றத் தால் நியமனஞ்செய்யப்பட்ட அலுவலரால் எழுதப்படுதல் வேண்டும்.

(2) நடுவர் சாட்சியத்தை எழுதும்படி செய்விக்கு மிடத்து, அவர் (1) ஆவது உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட காரணங்களால் தம்மால் அந்த சாட்சியம் எழுதப்பட முடிய வில்லை என்பதாக ஓர் உறுதிச்சான்றைப் பதிவு செய்தல் வேண்டும்.

(3) அத்தகைய சாட்சியம் சாதாரணமாக வரலாற்று முறையில் எழுதப்படுதல் வேண்டும்; ஆனால் நடுவர், தம் யுக்தம்போல், அத்தகைய சாட்சியத்தின் எந்தப் பகுதியையும் வினா—விடை வடிவத்தில் எழுதிக்கொள்ளலாம்; எழுதும் படிச் செய்விக்கலாம்.

(4) அவ்வாறு எழுதப்பட்ட சாட்சியம் நடுவரால் கையொப்பமிடப்படவேண்டும்; மற்றும் அது பதிவுக் கட்டின் பாகமாக அமைதல் வேண்டும்.

செஷன்ஸ் நீதிமன்றத் தின் முன்நடக் கும் விசாரணை யில் பதிவு.

276. (1) செஷன்ஸ் நீதிமன்றத்தின்முன் நடக்கும் விசாரணைகள் அனைத்திலும், சாட்சி ஒவ்வொருவரையும் விசாரணை செய்துவரும்போதே அவரது சாட்சியம் தலைமை வகிக்கின்ற நீதிபதியாலேயோ அல்லது நீதிமன்றத்தில் பகிரங்கமாக அவர் சொல்லச்சொல்லவோ அல்லது அவரது மேற்பார்வையிலும் கண்காணிப்பிலும் இதற்கென அவரால் நியமனஞ்செய்யப்பட்ட நீதிமன்றத்தின் அலுவலராலோ எழுதப்படுதல் வேண்டும்.

(2) அத்தகைய சாட்சியம், சாதாரணமாக விஞ்—விடை வாசகத்தில் எழுதப்படுதல் வேண்டும். ஆனால் தலைமை வகிக்கின்ற நீதிபதி தம் யுக்தம்போல், அத்தகைய சாட்சியம் முழு வதையும் அல்லது பகுதி எதையேனும் வடிவாற்று முறையில் எழுதலாம், அல்லது எழுதும்படி செய்விக்கலாம்.

(3) அவ்வாறு எழுதப்பட்ட சாட்சியம் தலைமை வகிக்கின்ற நீதிபதியால் கையொப்பமிடப்படவேண்டும்; மற்றும் அது பதிவுக்கட்டின் பாகமாக அமைதல் வேண்டும்.

277. 275 ஆவது பிரிவு அல்லது 276 ஆவது பிரிவின்படி சாட்சியம் எடுக்கப்படும் ஒவ்வொரு வழக்கிலும்,— சாட்சியத்தைப் பதிவு செய்வதற்கான மொழி.

(அ) சாட்சி, நீதிமன்ற மொழியில் சாட்சியம் கொடுப்பாராஞல், அது அந்த மொழியில் எழுதிக் கொள்ளப்பட வேண்டும்;

(ஆ) அவர் வேறெந்த மொழியிலேனும் சாட்சியம் கொடுப்பாராஞல் அது, சாத்தியமாயின், அந்த மொழியில் எழுதிக் கொள்ளப்படலாம்; மற்றும் அவ்வாறு செய்வது சாத்தியமில்லையென்றுல், சாட்சியை விசாரணை செய்யும் போதே, அந்த சாட்சியத்தின் உண்மையான மொழிபெயர்ப்பு நீதிமன்றமொழியில் தயாரிக்கப்பட்டு, நடுவரால் அல்லது தலைமை வகிக்கின்ற நீதிபதியால் ஒப்பமிடப்பட்டு பதிவுக் கட்டின் பாகமாக அமைதல் வேண்டும்.

(இ). (ஆ) கூறின்படி சாட்சியமானது நீதிமன்ற மொழி யல்லாத வேறேரு மொழியில் எழுதிக்கொள்ளப்படுமிடத்து, எவ்வளவு விரைவாக மொழிபெயர்க்கச் சாத்தியப்படுமோ அவ் வளவு விரைவாக, அதன் உண்மையான மொழி பெயர்ப்பு நீதி மன்ற மொழியில் தயாரிக்கப்பட்டு, நடுவரால் அல்லது தலைமை வகிக்கின்ற நீதிபதியால் ஒப்பமிடப்பட்டு பதிவுக்கட்டின் பாக மாக அமைதல் வேண்டும்:

ஆனல், (ஆ) கூறின்படி சாட்சியமானது ஆங்கிலத்தில் எழுதிக் கொள்ளப்பட்டிருந்து நீதிமன்ற மொழியில் அதன் மொழிபெயர்ப்பு நகப்பினர்களில் எவராலேனும் கோரப்படாத போது, அத்தகைய மொழிபெயர்ப்பு செய்வதை நீதிமன்றம் தவிர்த்துவிடலாம்.

அத்தகைய சாட்சியம் எடுக்கப்பட்டு முடிவடைந்தனும் அதைப் பொறுத்த நடைமுறை.

278. (1) 275 ஆவது பிரிவு அல்லது 276 ஆவது பிரிவின்படி எடுக்கப்படும் சாட்சி ஒவ்வொருவரின் சாட்சியமும் முடிவடைந்தும், அது எதிரி ஆஜராயிருந்தால் அவரது முன்னிலையில் அல்லது அவருக்காக வாதுரைஞர் ஆஜராயிருந்தால் அவரது முன்னிலையில் சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு அவசியமானால் திருத்தஞ் செய்யப்படவும் வேண்டும்.

(2) சாட்சியத்தின் எந்தப் பகுதியேனும் சரியாக இல்லையென்று அது சாட்சிக்குப் படித்துக்காட்டப்படும்போது அவர் மறுப்பாரானால், நடுவரோ தலைமை வகிக்கின்ற நீதிபதியோ, சாட்சியத்தைத் திருத்துவதற்குப் பதிலாக அதற்கு அந்த சாட்சி செய்யும் ஆட்சேபனையை அதன்மீது குறிப்பு எழுதலாம்; அதோடு தாம் அவசியமென நினைக்கும் மேலுரையையும் சேர்த்து எழுதுதல் வேண்டும்.

(3) சாட்சியம் பதிவு செய்யப்பட்ட மொழியானது அது கொடுக்கப்பட்ட மொழியிலிருந்து வேறுபட்டிருந்து, அந்த மொழி சாட்சிக்குப் புரியவில்லையென்றால், பதியப்பட்ட சாட்சியம், அது கொடுக்கப்பட்டுள்ள மொழியிலோ அவருக்குப் புரிகிற ஒரு மொழியிலோ மொழிபெயர்த்துச் சொல்லப்படுதல் வேண்டும்.

எதிரிக்கு அல்லது அவரது வாதுரைஞருக்கு மொழி பெயர்த்துச் சொல்லுதல்.

279. (1) சாட்சியமாவது எதிரிக்குப் புரியாத ஒரு மொழியில் கொடுக்கப்பட்டு, அவர் நீதிமன்றத்தில் நேர்முகமாக வந்திருக்கும்போதெல்லாம் அது நீதிமன்றத்தில் பகிரங்கமாக அவருக்குப் புரியும் ஒரு மொழியில், மொழி பெயர்த்துச் சொல்லப்படுதல் வேண்டும்.

(2) அவருக்காக வாதுரைஞர் ஆஜராகியிருந்து சாட்சியமானது வாதுரைஞருக்குப் புரியாத நீதிமன்ற மொழியல்லாத வேறொரு மொழியில் கொடுக்கப்படுமானால், அந்த மொழியில் அது அத்தகைய வாதுரைஞருக்கு மொழிபெயர்த்துச் சொல்லப்படுதல் வேண்டும்.

(3) முறைக்காக நிரூபணம் செய்யும் பொருட்டுப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும்போது, அவற்றில் எவ்வளவு பகுதியை மொழிபெயர்ப்பது அவசியமென்பது நீதிமன்றத்தின் யுக்தத்தைப் பொறுத்ததாய் இருத்தல் வேண்டும்.

சாட்சியின் நடையுடை பாவனை பொறுத்த மேலுரை.

280. நீதிமை வகிக்கின்ற நீதிபதி அல்லது நடுவர் ஒருவர், ஒரு சாட்சியின் சாட்சியத்தைப் பதிவு செய்தபின்பு, அவர் அந்தச் சாட்சி விசாரணை செய்யப்படும்பொழுது அவருடைய நடையுடை பாவனை எப்படியிருந்தது என்பதைப் பொறுத்துத் தாம் முக்கியமாக நினைக்கும் மேலுரை ஏதேனுமிருப்பின் அதைப் பதிவு செய்தலும் வேண்டும்.

எதிரியை விசாரணை செய்ததைப் பதிவு செய்தல்.

281. (1) எதிரி பெருநகர் நடுவரால் விசாரிக்கப்படும் போதெல்லாம், அந்த நடுவர் எதிரியை விசாரணை செய்ததன் சாரத்தைப்பற்றிய குறிப்பொன்றை நீதிமன்ற மொழியில் எழுதுதல் வேண்டும்: அத்தகைய குறிப்பு அந்த நடுவரால் ஒப்பமிடப்பட்டு, பதிவுக்கட்டின் பாகமாக அமைதல் வேண்டும்.

(2) எதிரியைப் பெருநகர் நடுவரல்லாத வேறெந்த நடுவரோ அல்லது ஒரு செஷன்ஸ் நீதிமன்றமோ விசாரிக்கும் போதெல்லாம், அவரிடம் கேட்கப்பட்ட ஒவ்வொன்றும், மற்றும் அவரால் தரப்பட்ட விடை ஒவ்வொன்றும் உள்ளடங்கலாக, அத்தகைய விசாரணை முழுவதும் நிலைமை வகிக்கின்ற நீதிபதியால் அல்லது நடுவரால் அவராலேயோ அல்லது அவரது உடல் சம்பந்தமான வேறு இயலாமை காரணமாக அவ்வாறு செய்யமுடியாதவிடத்து, அவரது மேற்பார்வையிலும் கண்காணிப்பிலும் இதற்கென அவரால் நியமனஞ் செய்யப்பட்ட நீதிமன்ற அலுவலர் ஒருவராலோ முழுமையாகப் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(3) அந்தப் பதிவு, சாத்தியமானால் எதிரி எந்த மொழியில் விசாரிக்கப்படுகிறாரோ அந்த மொழியிலும். அல்லது அது சாத்தியப்படவில்லையானால், நீதிமன்றமொழியிலும் இருத்தல் வேண்டும்.

(4) அந்தப் பதிவு எதிரிக்குக் காட்டப்படவேண்டும் அல்லது படித்துச் சொல்லப்பட வேண்டும்; அல்லது எந்த மொழியில் அது எழுதப்பட்டதோ அந்த மொழி அவருக்குப் புரியவில்லையானால், அவருக்குப் புரிகிற ஒரு மொழியில் அது அவருக்கு மொழி பெயர்த்துச் சொல்லப்பட வேண்டும்; மற்றும் சொன்ன விடைகளுக்கு மேலும் கூட்டிச் சொல்லலோ, விளக்கம் தரவோ, அவர் சுதந்திரமுடையவராயிருப்பார்.

(5) அதற்குப் பின்பு அது எதிரியாலும் நடுவர் அல்லது தலைமை வகிக்கின்ற நீதிபதியாலும் ஒப்பமிடப்படுதல் வேண்டும்; அந்த நடுவர் அல்லது தலைமை வகிக்கின்ற நீதிபதி

தம் முன்னிலையிலும் கேள்வியிலும் அவ் விசாரணை செய்யப் பட்டது என்றும், அத்தப் பதிவில் எதிரியால் கொடுக்கப்பட்ட உரையின் முழுமையானதும், உண்மையானதுமான விவரம் அடங்கியுள்ளது என்றும் தம் கைப்படவே உறுதி சொல்லுதல் வேண்டும்.

(6) இந்தப் பிரிவிலுள்ள எதுவும் சுருக்கு விசாரணை நடைபெறும்போது, எதிரியை விசாரணை செய்வதன்மீது இயங்குவதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

மொழிபெயர்ப் பாளர் உண்மையாக மொழிபெயர்க்கக் கட்டுப்பட்டவராதல்.

282. சாட்சியம் அல்லது உரை எதையேனும் மொழி பெயர்ப்பதற்காக மொழிபெயர்ப்பாளர் ஒருவரின் சேவையை எந்தக் குற்ற வழக்கு நீதிமன்றமேனும் கோரும்போது, அவர் அத்தகைய சாட்சியம் அல்லது உரையை உண்மையாக மொழி பெயர்க்கக் கட்டுப்பட்டவராவார்.

உயர் நீதிமன்றத்தில் பதிவு.

283. ஒவ்வொரு உயர் நீதிமன்றமும் தன்முன் வருகிற வழக்குகளில் சாட்சிகளின் சாட்சியத்தையும் எதிரி விசாரிப்பையும் எந்த முறையில் எழுதிக் கொள்ளப்பட வேண்டுமென்பதை பொதுவிதி மூலமாக நிர்ணயிக்கலாம்; மற்றும், அத்தகைய சாட்சியமும் விசாரிப்பும் அத்தகைய விதிக்கு இணங்க எழுதப்படுதல் வேண்டும்.

ஆ. சாட்சிகளை விசாரிப்பதற்கான ஆணைகள்.

சாட்சி ஆஜராவதை எப்போது தவிர்த்து ஆணை பிறப்பிக்கப்படலாம் என்பது.

284. (1) இந்தச் சட்டத்தின்படி பரிசீலனை, விசாரணை அல்லது வேறு நடவடிக்கை ஏதேனும் நடைபெறுகிறபோது, நீதியின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக, சாட்சி ஒரு வரை விசாரிப்பது அவசியமாக இருக்கிறது என்பதாகவும், வழக்கின் சூழ்நிலைகளைக் கவனிக்கும்போது அத்தகைய சாட்சி நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு ஏற்படும் தாமதமோ, செலவோ, அசௌகரியமோ நியாயமற்றது என்பதாகவும், நீதி மன்றத்திற்கோ நடுவருக்கோ தோன்றும்போதெல்லாம், அந்த நீதிமன்றம் அல்லது நடுவர் அவ்வாறு ஆஜராவதைத் தவிர்த்து, இந்த அத்தியாயத்தின் வகைமுறைகளுக்கிணங்க அந்த சாட்சியை விசாரிப்பதற்காக ஆணை ஒன்றைப் பிறப் பிக்கலாம்:

ஆனால், இந்தியாவில் குடியரசுத் தலைவரையோ, துணைத் தலைவரையோ, மாநிலமொன்றின் ஆளுநரையோ, ஒன்றியத்து மண்டலமொன்றின் ஆட்சியாளரையோ சாட்சியாக விசாரணை

செய்வது நீதியின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அவசிய மாக இருக்குமிடத்து, அந்தகைய ஒரு சாட்சியத்தை விசாரிப் பதற்காக ஆணை ஒன்று பிறப்பிக்கப்படுதல் வேண்டும்.

(2) நீதிமன்றம், வாதி தரப்பு சாட்சி ஒருவரை விசாரிப் பதற்காக ஆணை ஒன்றைப் பிறப்பிக்கும்போது, வாதுரை நூனின் ஊதியங்கள் உள்ளடங்கலாக எதிரிக்கு ஏற்படக்கூடிய செலவுகளைக் கொடுப்பதற்காக நீதிமன்றம் நியாயமானதெனக் கருதும் தொகையை வாதி தரப்பு செலுத்த வேண்டும் என்ப தாக உத்தரவிடலாம்.

285. (1) சாட்சி இந்தச் சட்டம் அளாவும் மண்டலங் களுக்குள் இருப்பாரானால், எந்தத் தலைமைப் பெருநகர் நடுவர் அல்லது தலைமை நீதித்துறை நடுவரின் வட்டார எல்லைக்குள் அந்தச் சாட்சி தென்படுகிறாரோ, நிலவரத்திற் கேற்ப அந்தத் தலைமைப் பெருநகர் நடுவர் அல்லது தலைமை நீதித்துறை நடுவருக்கு அந்த ஆணை குறிப்பிட்டனுப்பப் படுதல் வேண்டும். எவருக்கு ஆணை பிறப்பிக்கப்பட வேண்டுமெனபது.

(2) சாட்சி இந்தியாவிலிருந்து, ஆனால் இந்தச் சட்டம் அளாவி நில்லாத மாநிலம் அல்லது பகுதியொன்றில் இருப்பாரானால், அந்த ஆணையானது, மத்திய அரசு அறிவிக்கை மூலமாக இதற்கெனக் குறிப்பிடலாகும் நீதிமன்றம் அல்லது அலுவலருக்குக் குறிப்பிட்டனுப்பப்படுதல் வேண்டும்.

(3) சாட்சி இந்தியாவிற்கு வெளியேயுள்ள ஒரு நாட்டிலோ இடத்திலோ இருந்து, குற்ற வழக்கு விஷயங்கள் சம்பந்தமாகச் சாட்சிகளின் சாட்சியத்தை எடுப்பதற்காக அத்தகைய நாடு அல்லது இடத்தில் அரசுடன் மத்திய அரசால் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்குமானால், அந்த ஆணையானது மத்திய அரசு அறிவிக்கை மூலமாக, இதற் கென நிர்ணயிக்கும் படிவத்தில் இதற்கென குறிப்பிடலாகும் நீதிமன்றம் அல்லது அலுவலருக்குக் குறிப்பிட்டு, அதை மேலனுப்புவதற்காக இதற்கெனக் குறிப்பிடலாகும் அதிகாரிக்கு அது அனுப்பப்பட வேண்டும்.

286. அந்த ஆணை வந்ததன்பேரில், தலைமைப் பெருநகர் நடுவரோ, தலைமை நீதித்துறை நடுவரோ அல்லது அவர் இதற்கென நியமிக்கலாகும் பெருநகர் அல்லது நீதித்துறை நடுவரோ தம் முன் ஆஜராகுமாறு சாட்சிக்கு கட்டளையிட்டு அல்லது சாட்சி எந்த இடத்தில் இருக்கிறாரோ அந்த ஆணைகளை நிறைவேற்றுதல்.

இடத்திற்குச் சென்று, இந்தச் சட்டத்தின்படி பிடிகட்டளை வழக்குகளுக்கான விசாரணைகளிலுள்ள அதே முறையில், அவரது சாட்சியத்தை எழுதிக்கொள்ளுதல் வேண்டும்; மற்றும் அவர் இதன்பொருட்டு இந்தச் சட்டத்தின்படி பிடிகட்டளை வழக்குகளுக்கான விசாரணைகளிலுள்ள அதே முறையில், அவரது சாட்சியத்தை எழுதிக்கொள்ளுதல் வேண்டும்; மற்றும் அவர் இதன்பொருட்டு இந்தச் சட்டத்தின்படி பிடிகட்டளை வழக்குகளை விசாரணை செய்வதற்குள்ள அதே அதிகாரங்களைச் செலுத்தலாம்.

தரப்பினர்கள், சாட்சிகளை விசாரிக்கலாம் என்பது.

287. (1) இந்தச் சட்டத்தின்படி நடக்கும் நடவடிக்கைகளில் ஆணையொன்று பிறப்பிக்கப்படும்போது, அந்த நடவடிக்கைக்கான தரப்பினர்கள் முறையே அந்த ஆணையைக் குறிப்பிட்டனுப்புகிற நீதிமன்றமோ நடுவரோ வழக்கின் பிரச்சினைக்குத் தொடர்புற்றவையென்று நினைக்கலாகும் விடுவினைக்கள் எவற்றையும் எழுத்து மூலமாக அனுப்பலாம்; மற்றும் எந்த நடுவர், நீதிமன்றம் அல்லது அலுவலருக்கு அந்த ஆணை குறிப்பிட்டனுப்பப்பட்டுள்ளதோ, அல்லது அதை நிறைவேற்றுகிற கடமை அளிக்கப்பட்டுள்ளதோ அந்த நடுவர், நீதிமன்றம் அல்லது அலுவலர், அத்தகைய விடுவினைக்களைக்கொண்டு சாட்சியை விசாரணை செய்வது சட்டபூர்வமானதாகும்.

(2) அத்தகைய நடுவர், நீதிமன்றம் அல்லது அலுவலர் முன் அந்தகைய தரப்பினர் வாதுரைஞர் மூலமாக ஆஜராகலாம் அல்லது அத் தரப்பினர் காவலில் இல்லையாயுல், அவரே நேர்முகமாக ஆஜராகலாம்; மற்றும் (நிலவரத்திற்கேற்ப) அவர் மேற்சொன்ன சாட்சியை விசாரிக்கவும், குறுக்கு விசாரணை செய்யவும், மறுவிசாரணை செய்யவும் செய்யலாம்.

ஆணையைத் திருப்பி யனுப்புதல்.

288. (1) 284 ஆவது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை எதுவும் முறைப்படி நிறைவேற்றப்பட்டதற்குப் பின்பு, அதன்படி விசாரிக்கப்பட்ட சாட்சியின் வாக்குமூலத்துடன் சேர்த்து, ஆணையைப் பிறப்பித்த நீதிமன்றம் அல்லது நடுவருக்கு அதைத் திருப்பியனுப்புதல் வேண்டும்; மற்றும் அந்த ஆணையும், அதைத் திருப்பியனுப்பிய குறிப்பும் அந்த வாக்குமூலமும், நியாயமான எல்லா நேரங்களிலும் தரப்பினர்கள் ஆய்வுக்கு வசதியாக வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் நியாயமான எல்லா விதிவிலக்குகளுக்கும் உட்பட்டு, எந்தத் தரப்பினராலும் அவ் வழக்கில் சாட்சியமாக அவை

பயன்படுத்தப்படலாம்; மற்றும் அவை பதிவுக் கட்டின் பாகமாக அமைதல் வேண்டும்.

(2) அவ்வாறு எடுக்கப்பட்ட வாக்குமூலம் எதுவும், அது 1872 ஆம் ஆண்டு இந்தியச் சாட்சியச் சட்டத்தின் 33 ஆவது பிரிவினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுமானால், வேறொரு நீதிமன்றத்தின் முன் நடக்கும். அதே வழக்கின் பிந்திய கட்டம் எதிலும் சாட்சியமாகப் பெற்றுக்கொள்ளப் படலாம். 1/1872.

289. 284 ஆவது பிரிவின்படி ஆணையொன்று பிறப்பிக்கப் படும் வழக்கு ஒவ்வொன்றிலும், அந்த ஆணை நிறைவேற்றப் பட்டுத் திரும்பி வருவதற்கு நியாயமானபடி போதுமானதாக வுள்ள ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பரிசிலனை, விசாரணை அல்லது வேறு நடவடிக்கையானது ஒத்திவைக்கப்படலாம். நடவடிக்கையை ஒத்தி வைத்தல்.

290. (1) 286 ஆவது பிரிவின் வகைமுறைகளும், 287 மற்றும் 288 ஆகிய பிரிவுகளில் எந்த அளவுப் பகுதி ஆணை யொன்று நிறைவேற்றப்படுவதற்கும், திரும்பி வருவதற்கும் தொடர்புடையதோ அந்த அளவுப் பகுதியும், அவை 284 ஆவது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின்மீது இயங்குவனபோன்றே இதற்குப்பின் சொல்லப்பட்ட நீதி மன்றங்கள், நீதிபதிகள் அல்லது நடுவர்களில் எவராலேனும் பிறப்பிக்கப்பட்ட ஆணைமீதும் இயங்கும். அயல்நாட்டு ஆணைகளை நிறைவேற்றுதல்.

(2). (1) ஆவது உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட நீதி மன்றங்கள், நீதிபதிகள் மற்றும் நடுவர்கள் வருமாறு :—

(அ) இந்தச் சட்டம் அளாவிநில்லாத, இந்தியாவி லுள்ள ஒரு பகுதிக்குள் அதிகாரம் செலுத்தி வருவதும், மத்திய அரசு, அறிவிக்கை மூலமாக, இதற்கெனக் குறிப்பிடக் கூடியதுமான நீதிமன்றம் எதுவும் அல்லது நீதிபதி அல்லது நடுவர் எவரும்;

(ஆ) மத்திய அரசு அறிவிக்கை மூலமாக இதற்கெனக் குறிப்பிடலாகும், இந்தியாவிற்கு வெளியேயுள்ள நாடு அல்லது இடம் ஏதேனுமொன்றில் அதிகாரஞ்செலுத்தி வருவதும், குற்ற வழக்கு விஷயங்கள் சம்பந்தமாகச் சாட்சிகளை விசாரணை செய்ய ஆணைகள் பிறப்பிப்பதற்கு,

அந்த நாட்டிலோ, இடத்திலோ அமலிலுள்ள சட்டத்தின்படி அதிகாரம் கொண்டிருப்பதுமான நீதிமன்றம் எதுவும், அல்லது நீதிபதி அல்லது நடுவர் எவரும்.

மருத்துவ சாட்சிகளின் வாக்குமூலம்.

291. (1) எதிரியின் முன்னிலையில் நடுவர் ஒருவரால் எடுக்கப்பட்டு, சான்றுக் கையொப்பமிடப்பட்ட அல்லது இந்த அத்தியாயத்தின்படி ஆணையின் பேரில் எடுக்கப்பட்ட குடி அறுவை மருத்துவர் ஒருவரின் அல்லது வேறு மருத்துவ சாட்சியின் வாக்குமூலமானது, அவ்வாறு வாக்குமூலம் கொடுத்தவர் ஒரு சாட்சியாகக் கூப்பிடப்படவில்லையென்றாலுங்கூட, இந்தச் சட்டத்தின்படி நடக்கும் பரிசீலனை, விசாரணை அல்லது வேறு நடவடிக்கை எதிலும் சாட்சியமாகக் கொடுக்கப்படலாம்.

(2) நீதிமன்றம், தான் பொருத்தமென நினைக்குமாறால், அவ்வாறு வாக்குமூலங்கொடுத்த எவரையும் அவரது வாக்குமூலத்தில் அடங்கியுள்ள விஷயத்தைப் பற்றி விசாரிக்கலாம்; மற்றும் வாதி தரப்பு அல்லது எதிரி விண்ணப்பித்துக்கொண்டால், அவ்வாறு விசாரணை செய்தல் வேண்டும்.

நாணயம் அச்சடிக்கும் சாலை அலுவலர்களின் சாட்சியம்.

292. (1) மத்திய அரசு, அறிவிக்கை மூலமாக, இதற்கெனக் குறிப்பிடலாகும் (முத்திரைகள் மற்றும் எழுதுபொருள் கட்டுப்பாட்டலுவலரின் அலுவலகம் உள்ளடங்கலாக) நாணயம் அச்சடிக்கும் சாலையின் அல்லது இந்திய செக்யூரிட்டி அச்சகத்தின் (India Security Press) பதிவு பெற்ற அலுவலர், இந்த அத்தியாயத்தின்படி நடக்கும் எந்த நடவடிக்கையின்போதேனும் ஆய்வு செய்து அறிக்கை தருவதற்காகத் தம்மிடம் முறைப்படி பரிந்தனுப்பப்பட்ட பொருள் அல்லது விஷயத்தின் பேரில், தம் கைச்சாத்திட்டுக் கொடுத்த ஓர் அறிக்கையாகப் புலப்படுகிற பத்திரம் எதையும், அத்தகைய அலுவலர் ஒரு சாட்சியாகக் கூப்பிடப்படவில்லையென்றாலுங்கூட, இந்தச் சட்டத்தின்படி நடக்கும் பரிசீலனை, விசாரணை அல்லது வேறு நடவடிக்கை எதிலும் சாட்சியமாகப் பயன்படுத்தலாம்.

(2) நீதிமன்றம், தான் பொருத்தமென நினைக்குமாறால், அத்தகைய அலுவலர் எவருக்கும் ஆஜர் கட்டளை பிறப்பித்து, அவரது அறிக்கையில் அடங்கியுள்ள விஷயத்தைப் பற்றி விசாரணை செய்யலாம்.

ஆனால், அந்த அறிக்கைக்கு ஆதாரமான பதிவுக் கட்டுகள் எவற்றையும் தாக்கல் செய்யுமாறு அத்தகைய அலுவலருக்குக் கட்டளை பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(3) 1872 ஆம் ஆண்டு இந்தியச் சாட்சியச் சட்டத்தின் 123 மற்றும் 124 ஆகிய பிரிவுகளின் வகைமுறைகளுக்குப் பாதகமன்னியில், அத்தகைய அலுவலர் எவரும், நிலவரத்திற் கேற்ப நானையம் அச்சடிக்கும் சாலையின் அல்லது இந்திய செக்யூரிட்டி அச்சகத்தின் தலைவரின் அல்லது முத்திரைகள் மற்றும் எழுதுபொருள்துறைக் கட்டுப்பாட்டலுவலரின் அனுமதியுடன் அல்லாமல், 1/1872.

(அ) அவ்வறிக்கைக்கு ஆதாரமாகவுள்ளதும், வெளியிடப்படாததுமான அலுவலகப் பதிவுக் கட்டுகளிலிருந்து எடுக்கப்பட்ட சாட்சியம் எதையும் தரவோ,

(ஆ) அந்தப் பொருள் அல்லது விஷயத்தை ஆய்வு செய்தபோது அவரால் பரிசோதனை ஏதேனும் பயன்படுத்தப் பட்டிருந்தால், அதன் தன்மை அல்லது விவரங்களை வெளிப் படுத்தவோ,

அனுமதிக்கப்படுதல் ஆகாது.

குறிப்பிட்ட அரசாங்க அறிவியல் வல்லுநர்களின் அறிக்கைகள்.

293. (1) எந்த ஓர் அரசாங்க அறிவியல் வல்லுநர் மீது இந்தப் பிரிவு இயங்குகிறதோ, அந்த அரசாங்க அறிவியல் வல்லுநர் இந்தச் சட்டத்தின்படி நடவடிக்கை ஏதேனும் நடைபெறும்போது, ஆய்வோ பகுப்பாய்வோ செய்து, அறிக்கை தருவதற்காகத் தம்மிடம் முறைப்படி பணித்தனுப்பப்பட்ட பொருள் அல்லது விஷயத்தின்பேரில், தம் கைச் சாத்திட்டுக் கொடுத்த ஓர் அறிக்கையாகப் புலப்படும் பத்திரம் எதையும், இந்தச் சட்டத்தின்படி நடக்கும் பரிசீலனை, விசாரணை அல்லது வேறு நடவடிக்கை எதிலும் சாட்சியமாகப் பயன்படுத்தலாம்.

(2) நீதிமன்றம், தான் பொருத்தமென நினைக்குமானால், அத்தகைய வல்லுநர் எவரையும் ஆஜராகச்செய்து, அவரது அறிக்கையில் அடங்கியுள்ள விஷயத்தைப் பற்றி அவரை விசாரணை செய்யலாம்.

(3) அத்தகைய வல்லுநர் எவருக்கேனும் நீதிமன்றம் ஆஜர்கட்டளை அனுப்பியிருந்து, அவர் நேர்முகமாக ஆஜராக இயலாதவிடத்து, நீதிமன்றம் நேர்முகமாக ஆஜராகுமாறு அவருக்குக் குறிப்பிட்டு உத்தரவிட்டிருந்தாலன்றி, அவர் தம்முடன் பணியாற்றும் பொறுப்புவாய்ந்த அலுவலர் எவரையும், அத்தகைய அலுவலர் வழக்கின் சங்கதிகளை அறிந்தவராக இருந்து, தம் சார்பாகத் திருப்திகரமாக நீதிமன்றத்தில் வாக்குமூலம் கொடுக்க முடியுமானால், நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு சார்பதிகாரம் அளித்து அந்த அலுவலரை அனுப்பி வைக்கலாம்.

(4) இந்தப் பிரிவு பின்வரும் அரசாங்க அறிவியல் வல்லுநர்கள்மீது இயங்கும்; அவர்கள் வருமாறு :—

(அ) அரசாங்க ரசாயன ஆய்வாளர் (Chemical Examiner) அல்லது அரசாங்க உதவி ரசாயன ஆய்வாளர்;

(ஆ) வெடி பொருள்கள் தலைமை ஆய்வாளர் (Chief Inspector of Explosives) ;

(இ) விரல் பதிவு ஆய்வு நிலைய இயக்குநர் (Director of the Finger Print Bureau) ;

(ஈ) இயக்குநர், ஹாஃப்கீன் நிலையம், பம்பாய் ;

(உ) மத்திய சட்டஞ்சார்ந்த மருத்துவ ஆய்வுக்கூடம் (Central Forensic Science Laboratory) அல்லது மாநிலச் சட்டஞ்சார்ந்த மருத்துவ ஆய்வுக் கூடமொன்றின் இயக்குநர் ;

(ஊ) அரசாங்க குருதி நீரியல் ஆய்வாளர் (Serologist).

ஒலை பத்திரங்களை முறையாக நிரூபிக்கத் தேவையில்லை என்பது.

294. (1) பத்திரம் ஏதேனும் வாதி தரப்பாலோ எதிரியாலோ எந்த நீதிமன்றத்தின் முன்னரேனும் தாக்கல் செய்யப்படுமிடத்து, அத்தகைய பத்திரம் ஒவ்வொன்றின் விவரங்களும் ஒரு பட்டியலில் குறிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் நிலவரத்திற்கேற்ப, வாதி தரப்போ, எதிரியோ அல்லது வாதி தரப்புக்கான அல்லது எதிரிக்கான வாதுரைஞர் எவரேனுமிருப்பின் அவரோ, அத்தகைய பத்திரம் ஒவ்வொன்றும் உண்மையானதா என்பதை ஒப்புக்கொள்ளுமாறே மறுக்குமாறே கோரப்படுதல் வேண்டும்.

(2) பத்திரங்களின் பட்டியலானது மாநில அரசு நிர்ணயிக்கலாகும் படிவத்தில் இருத்தல் வேண்டும்.

(3) எந்தப் பத்திரமேனும் உண்மையானதா என்பது பற்றித் தாவா இல்லாதவிடத்து, அந்தப் பத்திரம், எவரால் ஒப்பமிடப்பட்டதாகப் புலப்படுகிறதோ அவரது ஒப்பத்தை நிரூபிக்காமலேயே, இந்தச் சட்டத்தின்படி நடக்கும் பரிசீலனை, விசாரணை அல்லது வேறு நடவடிக்கையில் சாட்சியமாகப் பயன்படுத்தப்படலாம்:

ஆனால், நீதிமன்றம் தன் யுக்தம்போல், அந்த ஒப்பம் நிரூபிக்கப்பட வேண்டுமென்று கோரலாம்.

பொது ஊழியர்களின் நடத்தையை நிரூபிக்கப் பிரமாணப் பத்திரம்.

295. விண்ணப்பம் எதேனும் இந்தச் சட்டத்தின்படி நடக்கும் பரிசீலனை, விசாரணை அல்லது வேறு நடவடிக்கை நடைபெறுகிறபோது நீதிமன்றத்திற்குச் செய்து கொள்ளப்பட்டு, அதில் பொது ஊழியர் எவரைப் பொறுத்தேனும் குறைகூறப்படும்போது, அந்த விண்ணப்பதாரர், அவ்விண்ணப்பத்தில் சொல்லப்பட்ட சங்கதிகள் பற்றிய சாட்சியத்தைப் பிரமாணப் பத்திரத்தின் மூலமாகக் கொடுக்கலாம்; மற்றும் நீதிமன்றம், தான் பொருத்தமென நினைத்தால் அத்தகைய சங்கதிகள் சம்பந்தமான சாட்சியம் அவ்வாறே கொடுக்கப்பட வேண்டுமென்று கட்டளையிடலாம்.

முறைக்காகக் கொடுக்க வேண்டிய சாட்சியத்தைப் பிரமாணப் பத்திரத்தின் பேரில் கொடுத்தல்.

296. (1) எவரது சாட்சியம் முறைக்காகக் கொடுக்கப்பட வேண்டிய தன்மையதாயிருக்கிறதோ அவரது சாட்சியம் பிரமாணப் பத்திரத்தின் மூலமாகக் கொடுக்கப்படுவதுடன், நியாயமான விதி விலக்குகள் அனைத்திற்குமுட்பட்டு, இந்தச் சட்டத்தின்படி நடக்கும் பரிசீலனை, விசாரணை அல்லது வேறு நடவடிக்கை எதிலும் சாட்சியமாகவும் பயன்படுத்தப்படலாம்.

(2) நீதிமன்றம், தான் பொருத்தமென நினைத்தால், அத்தகைய எவரையும் ஆஜர்செய்வித்து, அவரது பிரமாணப் பத்திரத்தில் அடங்கியுள்ள சங்கதிகளைக் குறித்து அவரை விசாரணை செய்யலாம்; மற்றும் வாதி தரப்பு அல்லது எதிரி விண்ணப்பித்துக்கொண்டால், அவ்வாறு செய்தல் வேண்டும்.

பிரமாணப் பத்திரங்கள் எந்த அதிகாரிகள் முன்னர் பிரமாணஞ் செய்யப்பட வேண்டுமென்பது.

297. (1) இந்தச் சட்டத்தின்படி ஏதாவதொரு நீதிமன்றத்தின் முன்னிலையில் பயன்படுத்தப்படவிருக்கும் பிரமாணப் பத்திரங்களுக்கான பிரமாணத்தையோ உறுதியையோ பின்வருபவர்களில் எவர் முன்னிலையிலேனும் செய்யலாம் :—

(அ) நீதிபதி அல்லது நடுவர் எவரும், அல்லது

(ஆ) உயர் நீதிமன்றத்தால் அல்லது செஷன்ஸ் நீதி மன்றத்தால் நியமனஞ்செய்யப்பட்ட பிரமாண ஆணையர் எவரும், அல்லது

53/1952. (இ) 1952 ஆம் ஆண்டு நோட்டரி சட்டத்தின்படி நியமனஞ்செய்யப்பட்ட நோட்டரி எவரும்.

(2) பிரமாணப் பத்திரங்கள், வாக்குமூலம் கொடுப்பவர் தமக்குச் சொந்தமாகத் தெரிந்தநிலிருந்து நிரூபிக்கக்கூடிய சங்கதிகளையும் உண்மையானவையென நம்புவதற்குத் தமக்கு நியாயமான ஆதாரம் உள்ள சங்கதிகளையும் பற்றி மட்டுமே சொல்வதோடு, அத்தகைய சங்கதிகளைத் தனித்தனியாகவும் உரைத்தல் வேண்டும்; மற்றும் நியாயமான ஆதாரமுள்ளது என்று அவர் நம்பும்பொழுது, வாக்குமூலம் கொடுத்தவர் அவ்வாறு நம்புவதற்கான ஆதாரங்களைத் தெளிவாக உரைத்தல் வேண்டும்.

(3) அந்த பிரமாணப் பத்திரத்தில் அவதூறுனனும் தொடர்பற்றதுமான விஷயம் ஏதேனும் இருக்குமாயல் அதை அடித்துவிடுவதற்கு அல்லது திருத்துவதற்கு நீதிமன்றம் கட்டளையிடலாம்.

முந்திய தண்டனை அல்லது விடுதலையை எவ்வாறு நிரூபிப்பது என்பது.

298. இந்தச் சட்டத்தின்படி நடக்கும் பரிசீலனை, விசாரணை அல்லது வேறெந்த நடவடிக்கையிலேனும், முந்திய தண்டனையை அல்லது விடுதலையை, அவ்வப்போது அமலி லுள்ள வேறெந்தச் சட்டத்தாலேனும் வகை செய்யப்பட் டுள்ள வேறெந்த முறையிலும் நிரூபிப்பதோடுங்கூட, பின் வரும் ஏதாவதொரு முறையினாலும் நிரூபிக்கலாம்; அதாவது:—

(அ) எந்த நீதிமன்றத்தில் அத்தகைய தண்டனை அல்லது விடுதலை அளிக்கப்பட்டதோ அந்த நீதிமன்றத்தின் பதிவுக்கட்டுகள் எந்த அலுவலரின் பொறுப்பில் இருக்கின் றனவோ அந்த அலுவலரின் கைப்பட அந்தத் தண்டனை அல்லது கட்டளையின் நகலென்று உறுதிச் சான்றளிக்கப்பட்ட எடுகுறிப்பு (extract) மூலமாகவோ,

(ஆ) தண்டனை கொடுக்கப்பட்டிருந்தால், எந்தச் சிறைச் சாலையில் அந்தத் தண்டனை அல்லது அதன் பகுதி எதேனும் அனுபவிக்கப்பட்டதோ, அந்தச் சிறைச்சாலையின் பொறுப்பு அலுவலரால் கையொப்பமிடப்பட்ட உறுதிச்சான்று மூல மாகவோ, அல்லது எந்தச் சிறைவைப்புக் கட்டளையின்படி அந்தத் தண்டனை அனுபவிக்கப்பட்டதோ அந்தக் கட்டளை யைத் தாக்கல் செய்வதன் மூலமாகவோ, மற்றும்

மேற்சொன்ன சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிலும், அவ்வாறு தண்டிக்கப்பட்டவர் அல்லது விடுதலை செய்யப்பட்டவர் அந்த எதிரிதான் என்று இனங்காட்டுவதற்கான சாட்சியமும் சேர்த்து நிரூபிக்கப்படலாம்.

எதிரி இல்லாத போது சாட்சி பதிவு.

299. (1) எதிரி ஒருவர் சட்டத்திற்குத் தப்பியோடியிருப்பதாகவும், அவரை உடனடியாகக் கைது செய்வதை எதிர்பார்க்க முடியாது என்பதாகவும் நிரூபிக்கப்படுமானால், முறையீடு செய்யப்பட்ட குற்றத்தைச் செய்ததற்காக அத்தகைய வரை விசாரணை செய்யத் தகுதி பெற்றுள்ள நீதிமன்றம், அவர் இல்லாதபோது வாதி தரப்பின் சார்பாகக் கொண்டுவரப்பட்ட சாட்சிகள் எவரேனுமிருப்பின் அவர்களை விசாரித்து, அவர்களது வாக்குமூலங்களைப் பதிவு செய்யலாம்; மற்றும் அவ்வாறு வாக்குமூலம் கொடுத்தவர் மரணமடைந்திருந்தால் அல்லது சாட்சியம் தருவதற்கு இயலாதவராக இருந்தால், அல்லது கண்டுபிடிக்க முடியாமலிருக்குமென்றால், அல்லது வழக்கின் சூழ்நிலைகளைப் பார்க்கும்போது அவரை நீதிமன்றத்தின் முன் கொண்டுவருவதற்கு எற்படும் தாமதமோ, செலவோ அசௌகரியமோ நியாயமானதாக இருக்காது என்பதாக இருந்தால், எந்தக் குற்றம் செய்ததாக எதிரி குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளாரோ, அந்தக் குற்றத்திற்கான பரிசீலனையில் அல்லது விசாரணையில் அவருக்குப் பாதகமாக அந்தகைய வாக்குமூலம் எதிரியைக் கைது செய்ததன் பேரில், சாட்சியமாகக் கொடுக்கப்படலாம்.

(2) மரண தண்டனையோ ஆயுள் தண்டனையோ விதிப்பதற்குரிய குற்றமொன்று, இன்னாரெனத் தெரியாத ஓர் ஆளால் அல்லது ஆட்களால் செய்யப்பட்டிருக்கிறது என்பதாகத் தோன்றுமானால், உயர் நீதிமன்றமோ, செஷன்ஸ் நீதிபதியோ, முதல் வகுப்பு நடுவர் எவரேனும் விசாரணை நடத்த வேண்டுமென்றும் அந்தக் குற்றம் சம்பந்தமாகச் சாட்சியம் கொடுக்கக்கூடிய சாட்சிகள் எவரையேனும் விசாரிக்க வேண்டும் என்றும் உத்தரவிடலாம்; மற்றும் வாக்குமூலம் கொடுத்தவர் மரணமடைந்திருந்தால், அல்லது சாட்சியம் கொடுப்பதற்கு இயலாதவராக இருந்தால், அல்லது இந்தியாவின் எல்லைகளுக்கு அப்பால் இருந்தால், அக்குற்றத்தைச் செய்ததாக அடுத்து குற்றஞ் சுமத்தப்படுகிற எவருக்கும் பாதகமாக அவ்வாறு எடுக்கப்பட்ட வாக்குமூலங்கள் எவையும் சாட்சியமாகக் கொடுக்கப்படலாம்.

அத்தியாயம் XXIV.

பரிசீலனைகள் மற்றும் விசாரணைகள் பற்றிய பொது வகை முறைகள்.

ஒரு முறை தண்டிக்கப் பட்டவர் அல்லது விடுதலை செய்யப்பட்டவர் அதே குற்றத்திற்காக மீண்டும் விசாரணை செய்யப்படுதல் ஆகாது.

300. (1) குற்றமொன்றைச் செய்ததாகத் தகுதி பெற்ற அதிகாரங்கொண்ட ஒரு நீதிமன்றத்தால் ஒருமுறை விசாரணை செய்யப்பட்டு, அக்குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டுள்ள அல்லது விடுதலை செய்யப்பட்டுள்ள ஒருவர், அத்தகைய தண்டனை அல்லது விடுதலைத் தீர்ப்பு அமலிலிருந்து வரும் பொழுது, அதே குற்றத்திற்காக மறுமுறையும் விசாரணைக்கு ஆளாக்கப்படுதல் ஆகாது; அல்லது அவர்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டிலின்றும் வேறான குற்றச்சாட்டு வேறெந்தக் குற்றத்திற்காக, 221 ஆவது பிரிவின் (1) ஆவது உட்பிரிவின் படி சாட்டப்பட்டிருக்கக்கூடுமோ, அல்லது அதே பிரிவின் (2) ஆவது உட்பிரிவின்படி அவர் தண்டிக்கப்பட்டிருக்கக் கூடுமோ அந்தக் குற்றம் எதற்காகவும்கூட மேற்சொன்ன அதே சங்கதிகளின்பேரில், மறுமுறையும் விசாரணைக்கு அவர் ஆளாக்கப்படுதல் ஆகாது;

(2) எந்தக் குற்றத்திலிருந்தேனும் விடுதலை செய்யப் பட்ட அல்லது அதற்காகத் தண்டிக்கப்பட்ட ஒருவர், அதற்குப் பிறகு, எந்த ஒரு தனிப்பட்ட குற்றத்திற்காக 220 ஆவது பிரிவின் (1) ஆவது உட்பிரிவின்படி முன்னைய விசாரணையில் அவர்மீது தனித்த ஒரு குற்றச்சாட்டு சாட்டப் பட்டிருக்கக்கூடுமோ அந்தக் குற்றத்திற்காக, மாநில அரசின் இசைவுடன் விசாரணை செய்யப்படலாம்.

(3) பின்விளைவுகளை ஏற்படுத்துகிற எந்தச் செய்கையினாலேனும் உண்டான குற்றம் எதையேனும் செய்ததாகத் தண்டிக்கப்பட்ட ஒருவர், அந்தப் பின்விளைவுகள் அத்தகைய செய்கையுடன் ஒருங்கு சேர்ந்து, எந்தக் குற்றத்திற்காக அவர் அவ்வாறு தண்டிக்கப்பட்டாரோ அந்தக் குற்றத்திலின்றும் வேறுபட்ட ஒரு குற்றமாக அமையுமாலல், அவர் தண்டிக்கப் பட்ட காலத்தில் அந்தப் பின்விளைவுகள் நிகழவில்லையானாலும், அல்லது நிகழ்ந்திருப்பனவாக நீதிமன்றத்திற்குத் தெரிய வில்லையானாலும், அதற்குப் பிறகு, கடைசியாகச் சொன்ன குற்றத்திற்காக அவர் விசாரணை செய்யப்படலாம்.

(4) எந்தச் செய்கைகளாலேனும் உண்டான குற்றம் எதிலிருந்தேனும் விடுதலை செய்யப்பட்ட, அல்லது அதைச் செய்ததற்காகத் தண்டிக்கப்பட்ட ஒருவர், அத்தகைய விடுதலையோ தண்டனையோ அளிக்கப்பட்டிருந்தபோதிலும்,

அவரை முதன்முதலில் விசாரணை செய்த நீதிமன்றமானது அவர்மீது அடுத்துச் சாட்டப்பட்ட குற்றத்தை விசாரணை செய்யத் தகுதி பெற்றிருக்கவில்லையென்றால், அதே செய்கைகளால் உண்டானதும் அவர் செய்திருக்கக்கூடியதுமான வேறெந்தக் குற்றத்தையேனும் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, விசாரணை செய்யப்படலாம்.

(5) 258 ஆவது பிரிவின்படி விடுவிக்கப்பட்ட ஒருவர், அவரை விடுவித்த நீதிமன்றத்தின் அல்லது அந்த நீதிமன்றம் வேறெந்த நீதிமன்றத்திற்குக் கீழமைந்ததோ அந்த நீதிமன்றத்தின் இசைவுடன் அல்லாமல், மீண்டும் அதே குற்றத்திற்காக விசாரணை செய்யப்படுதல் ஆகாது.

(6) இந்தப் பிரிவிலுள்ள எதுவும் 1897 ஆம் ஆண்டு பொது வகைமுறைகள் சட்டத்தின் 26 ஆவது பிரிவின் அல்லது இந்தச் சட்டத்தின் 188 ஆவது பிரிவின் வகைமுறைகளைப் பாதித்தல் ஆகாது. 10/1897

விளக்கம்.—முறையீடொன்றைத் தள்ளுபடி செய்தலோ, எதிரியை விடுவித்தலோ, இந்தப் பிரிவைப் பொறுத்த மட்டில் விடுதலை ஆகாது.

எடுத்துக்காட்டுகள்.

(அ) "அ" ஒரு வேலைக்காரர் என்ற நிலையில் திருட்டுக் குற்றம் செய்தார் என்னும் குற்றச்சாட்டின் பேரில் விசாரணை செய்யப்பட்டு விடுதலை செய்யப்படுகிறார். அவர் அதற்குப் பிறகு அந்த விடுதலைத் தீர்ப்பு அமலிலிருந்து வரும்பொழுது, ஒரு வேலைக்காரர் என்ற நிலையில் திருட்டுக் குற்றம் செய்ததாகவோ அல்லது அதே சங்கதிகளின்பேரில், வேறும் திருட்டுக் குற்றத்தை அல்லது நம்பிக்கை மோசடிக் குற்றத்தைச் செய்ததாகவோ, குற்றஞ் சாட்டப்பட முடியாது.

(ஆ) "அ" கொடுங்காயம் விளைவித்ததற்காக விசாரணை செய்யப்பட்டுத் தண்டிக்கப்படுகிறார்; காயம் விளைவிக்கப்பட்டவர் அதற்குப்பிறகு மரணமடைகிறார். "அ" மரணம் விளைவிக்குங் குற்றத்தைச் செய்ததற்காக மீண்டும் விசாரணை செய்யப்படலாம்.

(இ) "அ" செஷன்ஸ் நீதிமன்றத்தின் முன் குற்றஞ் சாட்டப்பட்டு "ஆ" வக்கு மரணம் விளைவிக்கும் குற்றம் செய்ததற்காகத் தண்டிக்கப்படுகிறார். அதே சங்கதிகளின் பேரில் "ஆ" வைக் கொலை செய்ததாக, அதற்குப் பிறகு "அ" வை விசாரணை செய்தல் ஆகாது.

(ஈ) "ஆ" வைக்கு சுயேச்சையாகக் காயம் விளைவித்ததாக முதல் வகுப்பு நடுவரால் "அ" குற்றஞ்சாட்டப்பட்டு அதற்காக அவரால் தண்டிக்கப்படுகிறார். இந்த வழக்கானது இந்தப் பிரிவின் (3) ஆவது உட்பிரிவைச் சேர்ந்ததாயிருந்தாலன்றி, அதே சங்கதிகளின்பேரில் "ஆ" வைக்குச் சுயேச்சையாகக் கொடுங்காயம் விளைவித்ததாக அதற்குப் பிறகு "அ" வை விசாரணை செய்தல் ஆகாது.

(உ) "ஆ" வின் உடல் மீதிருந்த பொருளைத் திருடியதாக, இரண்டாவது வகுப்பு நடுவரால் "அ" குற்றஞ் சாட்டப்பட்டு, அதற்காக அவரால் தண்டிக்கப் படுகிறார். அதே சங்கதிகளின்பேரில் கொள்ளைக் குற்றத்தைச் செய்ததாக "அ" அதற்குப் பிறகு குற்றஞ்சாட்டப்பட்டு, விசாரணை செய்யப்படலாம்.

(ஊ) "ஈ" யைக் கொள்ளையடித்ததாக முதல் வகுப்பு நடுவரால் "அ", "ஆ", "இ" ஆகியோர் குற்றஞ் சாட்டப் பட்டு, அதற்காக அவரால் தண்டிக்கப்படுகின்றனர். அதற்குப் பிறகு அதே சங்கதிகளின்பேரில், கூட்டுக் கொள்ளைக் குற்றத்தைச் செய்ததாக "அ", "ஆ", "இ" ஆகியோர் குற்றஞ் சாட்டப்பட்டு, விசாரணை செய்யப்படலாம்.

அரசு குற்றத் துறை வழக்குரைஞர்கள் ஆஜராகல்.

301. (1) ஒரு வழக்கின் பொறுப்பைக் கொண்டுள்ள அரசு குற்றத் துறை வழக்குரைஞர் அல்லது அரசு குற்றத் துறை உதவி வழக்குரைஞர் அந்த வழக்கு எந்த நீதி மன்றத்தில் பரிசீலனையிலோ விசாரணையிலோ மேல்முறை யீட்டிலோ உள்ளதோ, அந்த நீதிமன்றத்தின் முன் எழுத்து மூலமான அதிகாரமின்றியே ஆஜராகி, வாதுரை செய்யலாம்.

(2) அத்தகைய எந்த ஒரு வழக்கிலும் நீதிமன்றம் ஒன்றில் எவர் மீதேனும் குற்றவழக்கை நடத்துமாறு தனிப்பட்ட ஒருவர் வாதுரைஞர் ஒருவரைக் கோருவாராயின், அவ்வழக்கின் பொறுப்பைக் கொண்டுள்ள அரசு உதவி குற்றத்துறை வழக்குரைஞர் அல்லது அரசு குற்றத் துறை வழக்குரைஞரோ அந்தக் குற்றவழக்கை நடத்துதல் வேண்டும்; அவ்வாறு கோரப்பட்ட வாதுரைஞர் அரசு குற்றத்துறை வழக்குரைஞரோ, அல்லது அரசு குற்றத்

துறை உதவி வழக்குரைஞரின் ஏவலின்படி அந்த வழக்கில் செயற்படுதல் வேண்டும்; மற்றும், வழக்கில் சாட்சியம் எடுத்து முடிக்கப்பட்ட பின்பு அவர் நீதிமன்றத்தின் அனுமதியுடன், எழுத்துமூலமான வாதங்களைப் பணித்துரைக்கலாம்.

குற்றவழக்கை நடத்துவதற்கு அதிகாரம்.

302. (1) ஒரு வழக்கைப் பரிசீலனையோ விசாரணையோ செய்கிற நடுவர் எவரும், ஆய்வாளரின் பதவிநிலைக்குக் கீழ்ப்பட்ட காவல் அலுவலரல்லாத வேறெவரையும் குற்ற வழக்கை நடத்துவதற்கு அனுமதியளிக்கலாம்; ஆனால், மாநிலத் தலைமை வழக்குரைஞரோ, அரசாங்க வழக்குரைஞரோ, அரசு குற்றத்துறை வழக்குரைஞரோ, அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞரோ அல்லாத வேறெவரும், அத்தகைய அனுமதியில்லாமல், அவ்வாறு செய்ய உரிமை உடையவர் ஆகார்:

ஆனால், காவல் அலுவலர் எவரும், எதிரிமீது எந்தக் குற்றத்திற்காக வழக்குத் தொடரப்பட்டுள்ளதோ அந்தக் குற்றத்தைப் புலனாய்வு செய்வதில் அவர் பங்கெடுத்தவராய் இருப்பாரேயானால், குற்ற வழக்கை நடத்த அனுமதிக்கப்படுதல் ஆகாது.

(2) குற்ற வழக்கை நடத்துகிற எவரும் தாமே நேர் முகமாகவோ வாதுரைஞர் மூலமாகவோ அவ்வாறு நடத்தலாம்.

எவர்மீது நடவடிக்கைகள் தொடரப்பட்டுள்ளனவோ அவர் எதிர்வாதஞ் செய்வதற்கு உள்ள உரிமை.

303. குற்றமொன்றைச் செய்ததாகக் குற்றவழக்கு நீதிமன்றத்தின்முன் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள, அல்லது இந்தச் சட்டத்தின்படி நடவடிக்கைகள் தொடரப்பட்டுள்ள எவரும், தம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட வாதுரைஞர் ஒருவர் மூலமாக எதிர்வாதஞ் செய்ய உரிமை உடையவராயிருப்பார்.

சில வழக்குகளில் அரசாங்கச் செலவில் எதிரிக்குச் சட்ட உதவி.

304. (1) செஷன்ஸ் நீதிமன்றத்தின்முன் நடக்கும் விசாரணையில், எதிரியின் பிரதிநிதியாக வழக்கு நடத்த வாதுரைஞர் ஒருவர் இல்லாதவிடத்தும், வாதுரைஞர் ஒருவரை அமர்த்திக்கொள்ள எதிரிக்குப் போதுமான வசதி இல்லையென்பதாக நீதிமன்றத்திற்குத் தோன்றுமிடத்தும், நீதிமன்றம் அரசாங்கச் செலவில் அவரது எதிர்வாதத்திற்காக வாதுரைஞர் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

(2) உயர் நீதிமன்றம், மாநில அரசின் முன் ஒப்பளிப்புடன், பின்வருவனவற்றிற்கு வகை செய்கிற விதிகளைச் செய்யலாம்—

(அ) எதிர்வாதஞ் செய்வதற்காக (1) ஆவது உட்பிரிவின்படி வாதுரைஞர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை;

(ஆ) அவ்வாதுரைஞர்களுக்கு நீதிமன்றங்கள் அனுமதிக்க வேண்டிய வசதிகள்;

(இ) அத்தகைய வாதுரைஞர்களுக்கு அரசு செலுத்த வேண்டிய ஊதியங்கள்; மற்றும் பொதுவாகவே (1) ஆவது உட்பிரிவின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு.

(3) மாநில அரசு, அறிவிக்கை மூலமாக, அந்த அறிவிக்கையில் குறிப்பிடலாகும் தேதியிலிருந்து (1) மற்றும் (2) ஆகிய உட்பிரிவுகளின் வகைமுறைகள் செஷன்ஸ் நீதிமன்றங்கள் முன் நடக்கும் விசாரணைகள் சம்பந்தமாக மீறியங்குவனபோன்றே, அந்த வகைமுறைகள் மாநிலத்திலுள்ள வேறு நீதிமன்றங்கள் முன் நடக்கும் எந்த வகை விசாரணைகள் சம்பந்தமாகவும் மீறியங்குதல் வேண்டும் என்பதாக உத்தரவிடலாம்.

கூட்டு நிறுவனமோ பதிவு பெற்ற சங்கமோ எதிரியாக இருக்கும் போது நடைமுறை என்ன என்பது. 21/1860.

305. (1) இந்தப் பிரிவில், "கூட்டு நிறுவனம்" என்பது பதிவு செய்யப்பட்ட கூட்டு நிறுவனம் அல்லது இணைக்கப்பட்ட வேறு கூட்டு நிறுவனம் என்று பொருள்படுவதுடன், அதில் 1860 ஆம் ஆண்டு சங்கங்களைப் பதிவு செய்யும் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட சங்கமும் உள்ளடங்கும்.

(2) ஒரு கூட்டு நிறுவனமானது ஒரு பரிசீலனை அல்லது விசாரணையில் எதிரியாகவோ எதிரிகளில் ஒருவராகவோ இருக்குமிடத்து, அது பரிசீலனை அல்லது விசாரணையின் பொருட்டு பிரதிநிதி ஒருவரை நியமனஞ் செய்யலாம்; அத்தகைய நியமனம் கூட்டு நிறுவனத்தின் முத்திரையிட்டதாக இருக்க வேண்டுமென்ற தேவையில்லை.

(3) ஒரு கூட்டு நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவர் ஆஜராகுமிடத்து, யாதொன்றும் எதிரியின் முன்னிலையில் செய்யப்படவேண்டும் என்பதாக, அல்லது எதிரிக்குப் படித்துக்காட்டப்படவோ உரைக்கப்படவோ விளக்கப்படவோ வேண்டும் என்பதாக இந்தச் சட்டம் கோரும் எதையும் அந்தச் செய்கை அப் பிரதிநிதியின் முன்னிலையில் செய்யப்படவேண்டும் என்று அல்லது அப் பிரதிநிதிக்குப்

படித்துக்காட்டப்படவோ உரைக்கப்படவோ விளக்கப் படவோ வேண்டும் என்று கோருவதாகப் பொருள் கொள்ளுதல் வேண்டும்; மற்றும் எதிரி விசாரணை செய்யப் படவேண்டும் என்று கோரும் எதையும், அந்தப் பிரதிநிதி விசாரணை செய்யப்படவேண்டும் என்று கோருவதாகப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

(4) ஒரு கூட்டுநிறுவனத்தின் பிரதிநிதி ஒருவர் ஆஜரா காதவிடத்து, (3) ஆவது உட்பிரிவில் குறிப்பிடப்பட்டவாறான கோரிக்கை எதுவும் இயங்குதல் ஆகாது.

(5) கூட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநராலோ, கூட்டு நிறுவனத்தின் நடவடிக்கைகளை மேலாள்கை செய்கிற அல்லது அவ்வாறு செய்கிறவர்களில் ஒருவராக இருக்கிற எவராலுமோ (அவர் எந்தப் பெயரால் அழைக்கப் பட்டாலும்) ஒப்பமிடப்பட்டதாகப் புலப்படும் எழுத்து மூலமான உரையொன்றில் பெயர் குறிப்பிடப்பட்டவர், இந்தப் பிரிவின் பொருட்டு அந்தக் கூட்டுநிறுவனத்தின் பிரதிநிதியாக நியமனஞ் செய்யப்பட்டிருக்கிறார் என்பதா யிருந்து, அந்த உரை தாக்கல் செய்யப்படுமிடத்து, அதற்கு எதிர்மறையாக நிரூபிக்கப்பட்டாலன்றி, அத்தகையவர் அவ்வாறு நியமனஞ் செய்யப்பட்டிருப்பதாக நீதிமன்றம் அனுமானித்தல் வேண்டும்.

(6) நீதிமன்றம் ஒன்றின்மூன் நடக்கும் பரிசீலனை அல்லது விசாரணையில் ஒரு கூட்டு நிறுவனத்தின் பிரதிநிதி யாக ஆஜராகிற எவரேனும் அத்தகைய பிரதிநிதிதானு இல்லையா என்பது பற்றி கேள்வி எழுமானால், அந்தக் கேள்வி அந்த நீதிமன்றத்தால் நிர்மானிக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுக் குற்ற வாளிக்கு மன்னிப்பு அளித்தல்.

306. (1) இந்தப் பிரிவு மீதியங்குகிற குற்றமொன்றில் நேரடியாக அல்லது மறைமுகமாகச் சம்பந்தப்பட்டிருப்ப தாகவோ, அதில் பங்கெடுத்துக் கொண்டிருப்பதாகவோ கருதப்படும் எவருடைய சாட்சியமேனும் கிடைக்கும் பொருட்டு, அந்தக் குற்றத்தைப் புலனுய்வு, பரிசீலனை அல்லது விசாரணை செய்யும் எந்தக் கட்டத்திலும், தலைமை நீதித்துறை நடுவர், அல்லது ஒரு பெருநகர் நடுவரும்,

பரிசீலனை அல்லது விசாரணையின் எந்தக் கட்டத்திலும், குற்றத்தைப் பரிசீலனை அல்லது விசாரணை செய்கிற முதல் வகுப்பு நடுவரும் அத்தக் குற்றம் சம்பந்தமாகவும் அதைச் செய்வதில் முதன்மையானவராகவோ உடந்தையாள ராகவோ, சம்பந்தப்பட்டுள்ள வேறு ஒவ்வொருவரைப் பற்றியும் அத்தகையவருக்குத் தெரிந்துள்ள விவரங்கள் முழுவதையும், முழுமையாகவும், உள்ளபடியாகவும் அவர் வெளிப்படுத்த வேண்டுமென்னும் நிபந்தனையின்பேரில் அத்தகையவருக்கு மன்னிப்பை அளிக்கலாம்.

(2) இந்தப் பிரிவு பின்வருவனவற்றின் மீதியங்கும்:—

46/1952 (அ) செஷன்ஸ் நீதிமன்றத்தால் அல்லது 1952 ஆம் ஆண்டு குற்றச் சட்டத்தின் திருத்தச் சட்டத்தின்படி நியமனஞ் செய்யப்பட்ட சிறப்பு நீதிபதியின் நீதிமன்றத் தால் மட்டுமே விசாரணை செய்யத்தக்க குற்றம் எதுவும்;

(ஆ) ஏழாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய சிறைத் தண்டனையாலோ, அதைக் காட்டிலும் கடுமையான தண்டனையாலோ தண்டிக்கப்படக்கூடிய குற்றம் எதுவும்;

(3) (1) ஆவது உட்பிரிவின்படி மன்னிப்பை அளிக்கிற நடுவர் ஒவ்வொருவரும்,—

(அ) தாம் அவ்வாறு செய்வதற்கான காரணங் களையும்;

(ஆ) எவருக்கு அம் மன்னிப்பு அளிக்கப்பட்டதோ அவரால் அது ஏற்றுக்கொள்ளப்பட்டதா இல்லையா என்பதையும் பதிவு செய்தல் வேண்டும்; மற்றும் எதிரியின் விண்ணப்பத்தின்பேரில், அப் பதிவின் நகலொன்று கட்டண மின்றி அவருக்கு அளிக்கப்படுதல் வேண்டும்.

(4) (1) ஆவது உட்பிரிவின்படி அளிக்கப்பட்ட மன்னிப்பை ஏற்றுக்கொள்கிற ஒவ்வொருவரும்—

(அ) அக் குற்றத்தை விசாரணைக்கு எடுத்துக்கொள் கின்ற நடுவரின் நீதிமன்றத்திலும், அடுத்து நடக்கும் விசாரணை, ஏதேனுமிருப்பின், அதிலும் சாட்சியாக விசாரிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) அவர் ஏற்கனவே ஜாமீன் பேரில் விடப் பட்டிருந்தாலன்றி, விசாரணை முடிவடையும்வரை காவலில் அவர் வைக்கப்படுதல் வேண்டும்.

(5) (1) ஆவது உட்பிரிவின்படி அளிக்கப்பட்ட மன்னிப்பை ஏற்றுக்கொண்டிருந்து, (4) ஆவது உட்பிரிவின் படி விசாரிக்கப்பட்டிருக்குமிடத்து, அந்தக் குற்றத்தை விசாரணைக்கு எடுத்துக்கொள்கின்ற நடுவர், வழக்கை மேற் கொண்டு பரிசீலனை செய்யாமலேயே,—

(அ) அதை மேல் விசாரணைக்காக—

(i) அந்தக் குற்றமானது செஷன்ஸ் நீதிமன்றத் தால் மட்டுமே விசாரணை செய்யத்தக்கதாயிருந்தாலும் அல்லது விசாரணைக்கு எடுத்துக் கொள்கிற நடுவர் தலைமை நீதித்துறை நடுவராக இருந்தாலும், செஷன்ஸ் நீதிமன்றத் திற்கும்,

(ii) அந்தக் குற்றம், 1952 ஆம் ஆண்டு குற்றச் சட்டத்தின் திருத்தச் சட்டத்தின்படி நியமனஞ்செய்யப் பட்ட சிறப்பு நீதிபதியின் நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யத்தக்கதாயின், அந்த நீதிமன்றத்திற்கும் அனுப்புதல் வேண்டும்;

(ஆ) வேறெந்தச் சந்தர்ப்பத்திலும், அவ்வழக்கைத் தலைமை நீதித்துறை நடுவருக்கு மாற்றிவைத்தல் வேண்டும்; அவர் அவ்வழக்கைத் தாமே விசாரணை செய்தல் வேண்டும்.

மன்னிப்பு அளிப்பதற்காக உத்தரவிடும் அதிகாரம்.

307. வழக்கொன்றை மேல் விசாரணைக்கனுப்பியதற்குப் பின்பு, ஆனால் தீர்ப்பு பிறப்பிக்கப்படுவதற்கு முன்பு எந்த நேரத்திலும், எந்த நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்காக அனுப்பப்படுகிறதோ அந்த நீதிமன்றம் அந்தக் குற்றத்தில் நேரடியாக அல்லது மறைமுகமாகச் சம்பந்தப்பட்டிருப் பவராகவோ, அதில் பங்கெடுத்துக்கொண்டுள்ளவராகவோ கருதப்படும் எவரது சாட்சியத்தையும் விசாரணையில் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, அத்தகையவருக்கு அதே நிபந்தனையின்பேரில் மன்னிப்பை அளிக்கலாம்.

மன்னிப்புக்கான நிபந்தனைகளை நிறைவேற்றுக ஒருவரை விசாரணை செய்தல்.

308. (1) 306 ஆவது பிரிவு அல்லது 307 ஆவது பிரிவின் படி அளிக்கப்பட்ட மன்னிப்பை ஏற்றுக்கொண்டிருக்கிற ஒருவரைப் பொறுத்து, அரசு குற்றத்துறை வழக்குரைஞர் தம் கருத்தின்படி, அத்தகையவர், சாரமான எதையேனும் வேண்டுமென்றே மறைப்பதன் மூலமாகவோ, பொய்ச்சாட்சி கருவதன் மூலமாகவோ, எந்த நிபந்தனைகளின்பேரில் அந்த மன்னிப்பு அளிக்கப்பட்டதோ அந்த நிபந்தனைகளை

நிறைவேற்றத் தவறிவிட்டார் என்று உறுதிச் சான்றளிக்குமிடத்து, எந்தக் குற்றத்தைப் பொறுத்து அவ்வாறு மன்னிப்பு அளிக்கப்பட்டதோ அந்தக் குற்றத்திற்காகவோ அல்லது அதே விஷயம் சம்பந்தமாக வேறெந்தக் குற்றத்தைச் செய்தவராக அவர் தோன்றுகிறாரோ அந்தக் குற்றம் எதற்காகவும், அதோடுகூட பொய்ச்சாட்சி தந்த குற்றத்திற்காகவும் அத்தகையவர் விசாரணை செய்யப்படலாம்:

ஆனால், அத்தகையவர் குற்றஞ்சுமத்தப்பட்ட வேறு ஆட்களில் எவருடனும் சேர்ந்தாணையாக விசாரணை செய்யப்படுதல் ஆகாது:

மேலும், அத்தகையவர் பொய்ச்சாட்சி தந்ததற்காக உயர் நீதிமன்றத்தின் ஒப்பளிப்புடன் அல்லாமல், விசாரணை செய்யப்படுதல் ஆகாது; மற்றும் 197 ஆவது பிரிவு அல்லது 340 ஆவது பிரிவில் அடங்கியுள்ள எதுவும் அந்தக் குற்றத்தின் மீதியங்காது.

(2) அளிக்கப்பட்ட மன்னிப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, அத்தகையவரால் கொடுக்கப்பட்டதும், 164 ஆவது பிரிவின்படி நடுவரொருவராலோ, 306 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின்படி ஒரு நீதிமன்றத்தாலோ பதிவு செய்யப்பட்டதுமான அவரது வாக்குமூலம் எதுவும், அவருக்கு விரோதமாக அத்தகைய விசாரணையில் சாட்சியமாகக் கொடுக்கப்படலாம்.

(3) அத்தகைய விசாரணையில் அந்த மன்னிப்பு எந்த நிபந்தனையின் பேரில் அளிக்கப்பட்டதோ, அந்த நிபந்தனையைத் தாம் நிறைவேற்றியிருப்பதாக வாதுரை செய்ய எதிரி உரிமையுடையவராவார்; அவ்வாறுயின், அந்த நிபந்தனையை அவர் நிறைவேற்றவில்லை என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பு வாதி தரப்பையே சாரும்.

(4) அத்தகைய விசாரணையில், நீதிமன்றமானது,—

(அ) அது செஷன்ஸ் நீதிமன்றமாயிருந்தால், குற்றச்சாட்டு எதிரிக்குப் படித்துக்காட்டப்பட்டு விளக்கப்படுவதற்கு முன்பும்;

(ஆ) அது நடுவரொருவரின் நீதிமன்றமாயிருந்தால், வாதிதரப்பு சாட்சிகளின் சாட்சியம் எடுக்கப்படுவதற்கு முன்பும், எந்த நிபந்தனையின்பேரில் மன்னிப்பு அளிக்கப்

பட்டாரோ அந்த நிபந்தனையைத் தாம் நிறைவேற்றியிருப்பதாக எதிரி வாதுரை செய்கிறாரா என்று அவரைக் கேட்க வேண்டும்.

(5) எதிரி அவ்வாறு வாதுரை செய்வாராஞல், நீதி மன்றம் அவ் வாதுரையைப் பதிவு செய்து, விசாரணையை மேல்நடத்துதல் வேண்டும்; மற்றும், அவ்வழக்கில் தீர்ப்புப் பிறப்பிப்பதற்கு முன்பு, எதிரி மன்னிப்புக்கான நிபந்தனையை நிறைவேற்றியிருக்கின்றாரா, இல்லையா என்பதைக் குறித்து முடிவு காணல் வேண்டும்; மேலும் அவர் அவ்வாறு நிறைவேற்றியிருக்கின்றார் என்னும் முடிவுக்கு வந்தால், அது, இந்தச் சட்டத்தில் என்ன கண்டிருந்த போதிலும், விடுதலைத் தீர்ப்பினைப் பிறப்பித்தல் வேண்டும்.

நடவடிக்கை களைத் தள்ளி வைப்பதற்கு அல்லது ஒத்தி வைப்பதற்கான அதிகாரம்.

309. (1) பரிசீலனை அல்லது விசாரணை ஒவ்வொன்றிலும், நடவடிக்கைகளை எவ்வளவு விரைவாக நடத்துவது சாத்தியமோ அவ்வளவு விரைவாக அவை நடத்தப்படுதல் வேண்டும்; மற்றும் குறிப்பாக, சாட்சிகள் விசாரணை ஒரு முறை துவங்கிவிட்டதும், அடுத்துவரும் நாளுக்கு அப்பால் அந்த நடவடிக்கைகளை ஒத்திவைப்பது அவசியமாக இருக்கிறது என்பதாகப் பதிவு செய்யப்படவேண்டிய காரணங்களுக்காக நீதிமன்றம் முடிவுக்கு வந்தாலன்றி, ஆஜராகியுள்ள சாட்சிகள் அனைவரையும் விசாரித்துமுடியும்வரை, அன்றுடம் அந்த விசாரணை தொடர்ந்து நடத்தப்படுதல் வேண்டும்.

(2) நீதிமன்றம் குற்றமொன்றை விசாரணைக்கெடுத்துக் கொண்டதற்குப் பின்பு, அல்லது விசாரணை எதையும் துவக்குவதைத் தள்ளி வைப்பதோ ஒத்திவைப்பதோ அவசியமானது அல்லது உசிதமானது என்னும் முடிவுக்கு வருமாஞல், அது, தான் பொருத்தமென நினைக்கும் நிபந்தனைகளின் பேரில், பதிவு செய்யப்படவேண்டிய காரணங்களுக்காக நியாயமானதெனத் தான் எண்ணும் காலத்திற்கு அவ்வப்போது, அந்தப் பரிசீலனை அல்லது விசாரணையைத் தள்ளிவைக்கலாம் அல்லது ஒத்தி வைக்கலாம்; மற்றும் எதிரி காவலிலிருப்பாராஞல் கட்டளை ஒன்றின் மூலமாக மீண்டும் அவரைக் காவலில் வைக்கலாம்:

ஆனால், நடுவர் எவரும் எதிரியை ஒரு சமயத்தில் பதினைந்து நாட்களுக்கு மேற்பட்ட காலத்திற்கு இந்தப் பிரிவின்படி காவலுக்கு அனுப்புதல் ஆகாது;

மேலும், சாட்சிகள் ஆஜராகியிருக்கும்போது, எழுத்து மூலமாகப் பதிவு செய்யப்படவேண்டிய சிறப்புக் காரணங் களுக்காக அல்லாமல், அவர்களை விசாரிக்காமல் ஒத்தி வைப்பதற்கோ தள்ளிவைப்பதற்கோ அனுமதிக்கப்படுதல் ஆகாது.

விளக்கம் 1.—எதிரி குற்றமொன்றைச் செய்திருக்கக்கூடும் என்பதான சந்தேகத்தை எழுப்புவதற்குப் போதுமான சாட்சியம் கிடைத்திருந்து, அவரைக் காவலில் வைப்பதனால் மேற்கொண்டும் சாட்சியம் கிடைக்கலாம் என்பதாகத் தோன்றுமானால், இது மீண்டும் காவலில் வைப்பதற்கு நியாயமான காரணமாகும்.

விளக்கம் 2.—ஒத்திவைக்கும் முன்னே தள்ளிவைக்கும் முன்னே போடப்படும் நிபந்தனைகளில், வாதி தரப்பு அல்லது எதிரி, உரிய சந்தர்ப்பங்களில் செலவுத் தொகையைச் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையும் ஒன்றாகும்.

தல விசாரணை.

310. (1) நீதிபதி அல்லது நடுவர் எவரும், பரிசீலனை, விசாரணை அல்லது வேறு நடவடிக்கையின் எந்தக் கட்டத் திலேனும் தரப்பினர்களுக்கு உரிய அறிவிப்பு கொடுத்த தற்குப் பின்பு, குற்றம் எந்த இடத்தில் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறதோ அந்த இடம் எதையும், அல்லது அத்தகைய பரிசீலனை அல்லது விசாரணையில் கொடுக்கப் பட்ட சாட்சியத்தை சரியானபடி விளங்கிக்கொள்ளும் பொருட்டு பார்க்கவேண்டியது தம் கருத்தின்படி. அவசிய மாக இருக்கிற வேறெந்த இடத்தையும் சென்றுபார்த்து, ஆய்வு செய்யலாம்; மற்றும், அவ்வசியமான தாமதமின்றி அத்தகைய ஆய்வில் புலப்பட்டவையும் தொடர்புற்றவையு மான சங்கதிகளைப் பற்றி குறிப்பு எழுதுதல் வேண்டும்.

(2) அத்தகைய குறிப்பு, அவ் வழக்கின் பதிவுக்கட்டின் பாகமாக அமைதல் வேண்டும்; மற்றும் குற்ற வழக்கு நடத்து கிறவர், முறையிடுபவர் அல்லது எதிரி, அல்லது

வழக்கிலுள்ள வேறெந்தத் தாட்பிணையையும் அவ்வாறு விரும்புவாராயின், அந்தக் குறிப்பின் நகலொன்று அவருக்குக் கட்டணமின்றி அளிக்கப்படுதல் வேண்டும்.

முக்கியமான சாட்சிக்கு ஆஜர்கட்டளை பிறப்பிக்க அல்லது ஆஜராகியுள்ளவரை விசாரிப்பதற்கான அதிகாரம்.

311. நீதிமன்றம் எதுவும், இந்தச் சட்டத்தின்படி நடக்கும் பரிசீலனை, விசாரணை அல்லது வேறு நடவடிக்கையின் எந்தக் கட்டத்திலும், எவரையும் ஒரு சாட்சியாக ஆஜர்செய்யலாம்; அல்லது ஆஜராகியிருக்கும் எவரையும் அவர் ஒரு சாட்சியாக ஆஜர் செய்யப்படவில்லையென்றாலுங் கூட, விசாரிக்கலாம்; அல்லது ஏற்கனவே விசாரிக்கப்பட்ட எவரையும் மீண்டும் கூப்பிட்டு மறு விசாரணை செய்யலாம்; மற்றும் நீதிமன்றம், வழக்கை நியாயமாகத் தீர்மானிப்பதற்கு அத்தகையவரது சாட்சியம் மிக்க அவசியமென்று தோன்றுமாயின், அவரை ஆஜராகச்செய்து விசாரிக்கவோ, மீண்டும் கூப்பிட்டு மறு விசாரணை செய்யவோ வேண்டும்.

முறையிடுபவர்கள், சாட்சிகள் ஆகியோரின் செலவுகள்.

312. மாநில அரசால் செய்யப்படும் விதிகள் எவற்றிற்கேனும் உட்பட்டு, குற்ற வழக்கு நீதிமன்றம் எதுவும், தான் பொருத்தமென நினைத்தால், இந்தச் சட்டத்தின்படி அத்தகைய நீதிமன்றத்தின் முன் நடக்கும் பரிசீலனை, விசாரணை அல்லது வேறு நடவடிக்கையின் பொருட்டு, ஆஜராகி முறையிடுபவர் அல்லது சாட்சி எவருக்கும் ஏற்பட்ட நியாயமான செலவுகளை, அரசாங்கம் செலுத்த வேண்டுமென்று கட்டளையிடலாம்.

எதிரியை விசாரிப்பதற்கான அதிகாரம்.

313. (1) பரிசீலனை அல்லது விசாரணை ஒவ்வொன்றிலும் சாட்சியத்தில் எதிரிக்குப் பாதகமாகத் தோன்றுகிற விவரங்கள் எவற்றையும் அவரே நேர்முகமாக விளக்குவதற்கு இயலும்படி செய்யும் பொருட்டு, நீதிமன்றம்—

(அ) எந்தக் கட்டத்திலும், எதிரியை முன்னதாகவே எச்சரிக்கை செய்யாமலேயே, நீதிமன்றம் அவசியமென எண்ணும் கேள்விகளை அவரிடம் கேட்கலாம்;

(ஆ) வாதி தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டதற்குப் பின்பும், எதிர்வாதம் செய்ய அவரைக் கூப்பிடுவதற்கு முன்பும், வழக்கைப் பொறுத்து பொதுவாகவே அவரை வினவுதல் வேண்டும்;

ஆனால், ஆஜர் கட்டளை வழக்கில், எதிரி நேர் முகமாக ஆஜராவதை நீதிமன்றம் தவிர்த்திருக்குமிடத்து, அது (ஆ) கூறின்படி அவரை விசாரிப்பதையும் தவிர்த்து விடலாம்.

(2) எதிரியை (1) ஆவது உட்பிரிவின்படி விசாரிக்கும் போது, பிரமாணம் எதுவும், அவருக்கு செய்துவைக்கப் படுதல் ஆகாது.

(3) எதிரி அத்தகைய கேள்விகளுக்கு விடையளிக்க மறுப்பதன் காரணமாகவோ, அவைகளுக்குப் பொய்யான விடைகளைத் தருவதன் காரணமாகவோ தண்டனைக்கு ஆளாதல் கூடாது.

(4) எதிரியால் தரப்பட்ட விடைகள் அத்தகைய பரிசீலனை அல்லது விசாரணையில் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படலாம்; மற்றும் அவை, அவர் வேறெந்தக் குற்றத்தையேனும் செய்திருப்பதாகக் காட்டக்கூடிய போக்கில் அமையுமாறல், அது சம்பந்தமாகப் பரிசீலனை அல்லது விசாரணை நடத்தும்போது அதில் அந்த விடைகள் அவருக்குச் சாதகமாகவோ பாதகமாகவோ சாட்சியத்தில் பயன்படுத்தப்படலாம்.

வாய்மொழி வாதங்களும், வாதங்களின் குறிப்பும்.

314. (1) நடவடிக்கைக்கான தரப்பினர் எவரும், அவரது சாட்சியம் முடிவடைந்ததற்குப் பின்பு, கூடியவிரைவில் சுருக்கமான வாய்மொழி வாதங்களை உரைக்கலாம்; மற்றும் அவர் தம் வாய்மொழி வாதங்கள் எவையேனுமிருப்பின் அவற்றை முடிப்பதற்கு முன்பு, தம் வழக்கிற்கு ஆதரவான வாதங்களைச் சுருக்கமாகவும், தனித்த தலைப்புகளின்கீழும் எடுத்தியம்பி, நீதிமன்றத்திற்குக் குறிப்பொன்றைப் பணித் தனுப்பலாம்; மேலும், அத்தகைய குறிப்பு ஒவ்வொன்றும் பதிவுக்கட்டின் பாகமாக அமைதல் வேண்டும்.

(2) அத்தகைய குறிப்பு ஒவ்வொன்றின் நகலும், எதிர் தரப்பினருக்கு ஏககாலத்தில் அளிக்கப்படுதல் வேண்டும்.

(3) எழுதப்பட்ட வாதங்களைத் தாக்கல் செய்வதற்காக நடவடிக்கைகளை ஒத்திவைக்க அனுமதியளிப்பது அவசிய மென்று நீதிமன்றம், பதிவு செய்யப்பட வேண்டிய காரணங் களுக்காக எண்ணினாலன்றி, அவ்வாறு ஒத்திவைப்பதற்கு அனுமதியளிக்கப்படுதல் ஆகாது.

(4) வாய்மொழி வாதங்கள் சுருக்கமாகவோ தொடர் புற்றவையாகவோ இல்லை என்பதாக நீதிமன்றம் கருது மானால், அது அத்தகைய வாதங்களை முறைப்படுத்தலாம்.

எதிரி சாட்சி சொல்லுவதற்குக் தகுதியுடையவர் என்பது.

315. (1) குற்றமொன்றைச் செய்ததாக ஒரு குற்றவழக்கு நீதிமன்றத்தின் முன் குற்றஞ்சுமத்தப்பட்ட எவரும் எதிர் தரப்பில் சாட்சி சொல்வதற்குத் தகுதி உடையவராவார்; மற்றும், தம் பேரிலோ தம்மோடு சேர்த்து ஒரே விசாரணையில் குற்றஞ்சாட்டப்பட்ட எவர் பேரிலோ சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளைப் பொய்ப்பிப்பதற்காக, பிரமாணத்தின்பேரில் அவர் சாட்சியம் கொடுக்கலாம்:

ஆனால்,—

(அ) அவர் எழுத்துமூலமாக வேண்டிக் கொண்டாலன்றி, அவரைச் சாட்சியாகக் கூப்பிடுதல் ஆகாது;

(ஆ) அவர் சாட்சியம் கொடுக்கத் தவறியதை, தரப்பினர்களோ, நீதிமன்றமோ குறைகூறுவதற்குரிய ஒரு பொருளாகக் கொள்ளுதல் ஆகாது; அல்லது அவருக்குப் பாதகமாகவோ, அவருடன் சேர்த்து ஒரே விசாரணையில் குற்றஞ்சாட்டப்பட்ட எவருக்கும் பாதகமாகவோ எதையும் அனுமானித்துக்கொள்வதற்கும் அது இடமளித்தல் ஆகாது.

(2) 98 ஆவது பிரிவு அல்லது 107 ஆவது பிரிவு அல்லது 108 ஆவது பிரிவு அல்லது 109 ஆவது பிரிவு அல்லது 110 ஆவது பிரிவின்படியோ, IX ஆவது அத்தியாயத்தின் படியோ அல்லது X ஆவது அத்தியாயத்தின் "ஆ" பகுதி "இ" பகுதி அல்லது "ஈ" பகுதியின்படியோ குற்ற வழக்கு நீதிமன்றம் எதிலேனும் எவர்மீது நடவடிக்கைகள் தொடரப்பட்டுள்ளனவோ அவர், அத்தகைய நடவடிக்கைகளில் தாமும் ஒரு சாட்சியாக இருப்பதற்கு முன் வரலாம்:

ஆனால், 108 ஆவது பிரிவு, 109 ஆவது பிரிவு அல்லது 110 ஆவது பிரிவின்படி நடக்கும் நடவடிக்கைகளில் அவ்வாறு சாட்சியம் கொடுக்கத் தவறியதை, தரப்பினர்களோ, நீதிமன்றமோ குறை கூறுவதற்குரிய ஒரு பொருளாகக் கொள்ளுதல் ஆகாது; அல்லது அவருக்கு பாதகமாகவோ அவருடன் சேர்த்து ஒரே விசாரணையில் வழக்குத் தொடரப்பெற்ற வேறெவருக்கும் பாதகமாகவோ அனுமானிப்பதற்கு அது இடமளித்தல் ஆகாது.

தெரிந்ததைச் சொல்லுமாறு தூண்டுவதற்குச் செல்வாக்கு எதையும் பயன்படுத்தக் கூடாது.

316. 306 மற்றும் 307 ஆகிய பிரிவுகளில் வகை செய்யப்பட்டுள்ளவாறல்லாமல், எதிரிக்குத் தெரிந்துள்ள விஷயம் எதையும் சொல்லும்படி அல்லது சொல்லாமல் அடக்கி வைத்துக்கொள்ளும்படி அவரைத் தூண்டுவதற்காக வாக்கு கொடுத்தல் அல்லது அச்சுறுத்தல் மூலமாகவோ வேறு விதமாகவோ செல்வாக்கு எதுவும் பயன்படுத்தப்படுதல் ஆகாது.

குறிப்பிட்ட வழக்குகளில் எதிரி ஆஜராகாத போது பரிசீலனைகளையும் விசாரணைகளையும் நடத்துவதற்கான வகை முறை.

317. (1) இந்தச் சட்டத்தின்படி நடக்கும் பரிசீலனை அல்லது விசாரணையின் எந்தக் கட்டத்திலேனும், நீதி மன்றத்தின்முன் எதிரி ஆஜராவது நீதியின் நலத்திற்காக அவசியமில்லை என்பதாகவோ, எதிரி நீதிமன்றத்தில் நடக்கும் நடவடிக்கைகளைப் பிடிவாதமாகத் தொடர்ந்து குலைத்து வருகிறார் என்பதாகவோ, நீதிபதி அல்லது நடுவருக்குத் திருப்திகரமாகத் தெரியுமானால், பதிவு செய்யப்படவேண்டிய காரணங்களுக்காக, அந்த நீதிபதி அல்லது நடுவர், எதிரிக்காக வாதுரைஞர் ஒருவர் பிரதிநிதியாக ஆஜராகியிருந்தால், எதிரி ஆஜராவதைத் தவிர்த்து, அவர் இல்லாமலேயே அத்தகைய பரிசீலனை அல்லது விசாரணையை மேல் நடத்தலாம்; மற்றும் அந்த நடவடிக்கைகளின் பிந்திய கட்டம் எதிலும் அத்தகைய எதிரி நேர்முகமாக ஆஜராவதற்கு உத்தரவிடலாம்.

(2) அத்தகைய வழக்கு எதிலேனும் எதிரிக்காக வாதுரைஞர் எவரும் பிரதிநிதியாக ஆஜராகவில்லையாயினும், அல்லது அவர் நேர்முகமாக ஆஜராவது அவசியமென்று நீதிபதி அல்லது நடுவர் எண்ணுவாராயினும் தாம் பொருத்தமென நினைக்கும்போதும், தம்மால் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காகவும், அவர் அத்தகைய பரிசீலனை அல்லது விசாரணையை ஒத்திவைக்கலாம், அல்லது அத்தகைய எதிரியின் வழக்கு தனியாக எடுத்துக்கொள்ளப்படவோ தனியாக விசாரணை செய்யப்படவோ வேண்டுமென்று கட்டளையிடலாம்.

எதிரி நடவடிக்கைகளைப் புரிந்து கொள்ளாத விடத்து நடைமுறை யாவை என்பது.

318. எதிரி புத்திசுவாதீனமற்றவரல்லவென்றாலும், நடவடிக்கைகளை அவர் புரிந்துகொள்ளும்படி செய்யமுடிய வில்லையென்றால், நீதிமன்றம் பரிசீலனை அல்லது விசாரணையை மேல் நடத்தலாம்; மற்றும் உயர் நீதிமன்றம் அல்லாத வேறொரு நீதிமன்றத்தைப் பொறுத்த மட்டில், அத்தகைய நடவடிக்கைகள் தண்டனையில் முடியுமானால், அந்த நடவடிக்கைகள் வழக்கின் விவரங்களைக் கொண்ட

ஓர் அறிக்கையுடன் உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும்; மேலும் அதன்பேரில் உயர்நீதிமன்றம் தான் பொருத்தமென நினைக்கும் கட்டளையைப் பிறப்பித்தல் வேண்டும்.

குற்றவாளிகளாகத் தோன்றுகிற வேறு ஆட்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம்.

319. (1) குற்றமொன்றுக்கான பரிசிலனை அல்லது விசாரணை நடைபெறும்போது, எதிரியல்லாத வேறெவரேனும் எந்தக் குற்றத்திற்காக எதிரியுடன் சேர்ந்த ரணையாக விசாரணை செய்யப்பட்டிருந்திருக்க முடியுமோ அந்தக் குற்றம் எதையேனும் செய்திருக்கிறார் என்பதாகச் சாட்சியத்திலிருந்து தோன்றுமிடத்து, நீதிமன்றம் அத்தகையவர் செய்திருப்பதாகத் தோன்றுகிற குற்றத்திற்காக அவர் மீது நடவடிக்கை தொடரலாம்.

(2) அத்தகையவர், நீதிமன்றத்தில் ஆஜராகாமலிருக்கும் போது மேற்சொன்ன நோக்கத்திற்காக வழக்கின் சூழ்நிலைகளுக்கேற்ப தேவைப்பட்டால் கைதுசெய்யப்படலாம்; அல்லது அவர் ஆஜர் படுத்தப்படலாம்.

(3) நீதிமன்றத்தில் ஆஜரில் இருக்கும் எவரும், கைது செய்யப்பட்டோ ஆஜர் கட்டளையின் பேரிலோ அவ்வாறு ஆஜராகியிருக்கவில்லையென்றாலும், அவர் செய்திருப்பதாகத் தோன்றுகிற குற்றத்தைப் பரிசிலனையோ விசாரணையோ செய்யும்பொருட்டு, அத்தகைய நீதிமன்றத்தால் காவலில் வைக்கப்படலாம்.

(4) நீதிமன்றம் (1) ஆவது உட்பிரிவின்படி எவர் மீதேனும் நடவடிக்கை எடுக்குமிடத்து, அதுபோது—

(அ) அத்தகையவரைப் பொறுத்து நடவடிக்கைகள் புதியதாகத் துவக்கப்படுதலும், சாட்சிகள் மீண்டும் கேட்கப்படுதலும் வேண்டும்;

(ஆ) எந்தக் குற்றத்தின்பேரில், பரிசிலனை அல்லது விசாரணை துவக்கப்பட்டதோ அந்தக் குற்றத்தை நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக் கொண்டபோது, அத்தகையவர் ஓர் எதிரியாக இருந்தது போன்றே அந்த வழக்கானது (அ) கூறின் வகைமுறைகளுக்குட்பட்டு மேல்நடத்தப் படலாம்.

குற்றங்களைச் சட்டப்படி சமரசமாகத் தீர்த்துக் கொள்ளுதல். 45/1860.

320. (1) அடுத்துப் பின்வரும் அட்டவணையில் முதலிரண்டு பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளவையும், இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவுகளின்படி தண்டிப்பதற்குரிய வையுமான குற்றங்கள் அந்த அட்டவணையின் மூன்றாவது பத்தியில் சொல்லப்பட்டுள்ளவர்களால் சட்டப்படி சமரசமாகத் தீர்த்துக் கொள்ளப்படலாம்:—

குற்றம்.	அட்டவணை. மீதியங்குத் தக்க இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவு.	குற்றம் எவரால் சட்டப்படி சமரசமாகத் தீர்த்துக் கொள்ளப்படலாம் என்பது.
(1)	(2)	(3)
எவரது சமய உணர்வுகளையேனும் வேண்டுமென்றே புண்படுத்தும் உட்கருத்தோடு சொற்களைச் சொல்லுதல் முதலியவை.	298	எவரது சமய உணர்வுகள் புண்பட வேண்டுமென்று கருதப்படுகின்றனவோ அவர்.
காயம் விளைவித்தல்.	323, 334	காயம் விளைவிக்கப் பட்டவர்.
எவரையேனும் சட்ட விரோதமாகத் தடுத்து வைத்தல் அல்லது அடைத்து வைத்தல்.	341, 342	தடுத்து வைக்கப் பட்டவர் அல்லது அடைத்து வைக்கப்பட்டவர்.
தாக்குதல் அல்லது வன்முறைத் தாக்குதல் குற்றம்.	352, 355, 358	தாக்கப்பட்டவர் அல்லது எவர் வன்முறையாகத் தாக்கப்பட்டாரோ அவர்.
சொத்து அழிம்பு, உண்டாக்கப்பட்ட ஒரே நஷ்டம் அல்லது சேதமானது தனிப்பட்ட ஒருவருக்கான நஷ்டம் அல்லது சேதமாக இருக்கும்போது.	426, 427	எவருக்கு நஷ்டம் அல்லது சேதம் உண்டாக்கப்பட்டதோ அவர்.
அத்துமீறுதல் குற்றம்.	447	எந்தச் சொத்தின் பேரில் அத்துமீறுதல் செய்யப்பட்டதோ அந்தச் சொத்தின் அனுபோகத்தைக் கொண்டிருப்பவர்.
வீட்டிற்குள் அத்துமீறி நுழைதல்.	448	மேற்படி

அட்டவணை—தொடர்ச்சி.

(1)	(2)	(3)
ஊழிய ஒப்பந்த மீறுதல் குற்றம்.	491	குற்றவாளி எவருடன் ஒப்பந்தஞ் செய்துகொண்டாரோ அவர்.
முறைபிறழ்ந்த புணர்ச்சி.	497	பெண்ணின் கணவர்.
திருமணமான பெண்ணைக் குற்ற நோக்கத்துடன் பசப்பிக் கடத்துதல் அல்லது இட்டுச் செல்லுதல் அல்லது இருத்தி வைத்தல்.	498	பெண்ணின் கணவர்.
அவதூறு	500	அவதூறு இழைக்கப்பட்டவர்.
ஒரு விஷயத்தை அது அவதூறானது என்று தெரிந்தே அச்சடித்தல் அல்லது செதுக்குதல்.	501	அவதூறு இழைக்கப்பட்டவர்.
அவதூறான விஷயம் அடங்கியுள்ள அச்சடிக்கப்பட்ட அல்லது செதுக்கப்பட்ட பொருளை, அதில் அத்தகைய விஷயம் அடங்கியுள்ளதைத் தெரிந்தே விற்பனை செய்தல்.	502	மேற்படி
அமைதிக் குலைவைத் தூண்டக்கருதி அவமதிப்புச் செய்தல்.	504	அவமதிக்கப்பட்டவர்.

அட்டவணை—தொடர்ச்சி.

(1)	(2)	(3)
மிரட்டல் குற்றம், அது ஏழாண்டு சிறைத் தண்டனை விதித்துத் தண்டிப் பதற்குரியதாக இருக்கும்போது தவிர.	506	மிரட்டப்பட்டவர்.
ஒருவரை அவர் தெய்வத்தின் சினத் திற்கு ஆளாவார் என்பதாக நம்பு மாறு செய்வதன் மூலம் விளைவித்த செய்கை.	508	எவருக்கெதிராக அக் குற்றம் செய்யப் பட்டதோ அவர்.

(2) அடுத்துப் பின்வரும் அட்டவணையின் முதலிரண்டு பத்திகளில் குறிப்பிடப்பட்டவையும் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவுகளின்படி தண்டிப்பதற்குரியவையுமான குற்றங்கள், அத்தகைய குற்றத்திற்கான குற்ற வழக்கு எந்த நீதி மன்றத்தின் முன் நடப்பிலிருக்கிறதோ அந்த நீதி மன்றத்தின் அனுமதியுடன், அந்த அட்டவணையின், மூன்றாவது பத்தியில் சொல்லப்பட்டவர்களால் சட்டப்படி சமரசமாகத் தீர்த்துக்கொள்ளப்படலாம். 45/1806,

அட்டவணை

அபாயகரமான ஆயுதங்களால் அல்லது வழிகளால் சுயேச்சையாக காயம் விளைவித்தல்.	324	காயம் விளைவிக்கப் படுபவர்.
சுயேச்சையாகக் கொடுங்காயம் விளைவித்தல்.	325	ஷை
கடுமையாகவும், திடீரென்றும் ஆத்திரமூட்டப்பட்டதன் பேரில் சுயேச்சையாகக் கொடுங்காயம் விளைவித்தல்.	335	ஷை

அட்டவணை—தொடர்ச்சி.

(1)	(2)	(3)
மற்றவர்களின் உயிருக்கோ, உடற் காப்புக்கோ அபாயம் விளைவிக்கும் வகையில் மூரட்டுத் துணிச்சலுடனும் அசட்டையுடனும் செய்கையொன்றைச் செய்வதன் மூலமாகக் காயம் விளைவித்தல்.	337	காயம் விளைவிக்கப்படுபவர்.
மற்றவர்களின் உயிருக்கோ உடற் காப்புக்கோ அபாயம் விளைவிக்கும் வகையில் மூரட்டுத் துணிச்சலுடனும் அசட்டையுடனும் செய்கையொன்றைச் செய்வதன் மூலமாகக் கொடுங்காயம் விளைவித்தல்.	338	ஷை
மூன்று நாட்களுக்கோ அதற்கு மேற்பட்டோ ஒரு வரைச் சட்ட விரோதமாக அடைத்து வைத்தல்.	343	அடைபட்டவர்.
பத்து நாட்களுக்கோ அதற்கு மேற்பட்டோ சட்ட விரோதமாக அடைத்து வைத்தல்.	344	ஷை

அட்டவணை—தொடர்ச்சி.

(1)	(2)	(3)
ரகசியமாக ஒருவரைச் சட்ட விரோதமாக அடைத்து வைத்தல்.	346	அடைபட்டவர்.
ஒரு பெண்ணை மானபங்கப்படுத்தும் கருத்துடன் தாக்குதல் அல்லது வன்முறையில் தாக்குதல்.	354	தாக்கப்பட்டவர் அல்லது எந்தப் பெண் வன்முறையில் தாக்கப் பட்டாரோ அந்தப் பெண்.
ஒருவரைச் சட்ட விரோதமாக அடைத்துவைக்க முயலுகையில் தாக்குதல் அல்லது வன்முறையில் தாக்குதல்.	357	தாக்கப்பட்டவர் அல்லது வன் முறைக்கு உள் ளானவர்.
திருட்டு, திருடப் பட்ட பொருளின் மதிப்பு இரு நூற்றைம்பது ரூபாய்க்கு மேற் படாதவிடத்து.	379	திருட்டுப் பொருளின் சொந்தக்காரர்.
எஜமானரின் அனு போகத்திலுள்ள பொருளை எழுத் தர் அல்லது வேலைக்காரர் திரு டிய குற்றம், திருடப்பட்ட பொருளின் மதிப்பு இருநூற்றைம்பது ரூபாய்க்கு மேற்படாத விடத்து.	381	ஷை

அட்டவணை—தொடர்ச்சி.

(1)	(2)	(3)
சொத்தை நேர்மையற்ற வகையில் கையாடுதல்.	403	கையாடப்பட்ட சொத்தின் சொந்தக்காரர்.
நம்பிக்கை மோசடிக் குற்றம், சொத்தின் மதிப்பு இருநூற்றைம்பது ரூபாய்க்கு மேற்படாதவிடத்து.	406	எந்தச் சொத்தைப் பொறுத்து நம்பிக்கை மோசடிக் குற்றம் செய்யப்பட்டிருக்கின்றதோ அந்தச் சொத்தின் சொந்தக்காரர்.
கொண்டுசெல்வோர் அல்லது துறைமுகச்சரக்கு மேடைக்குரியவர் முதலியவர்களால் செய்யப்பட்ட நம்பிக்கை மோசடிக் குற்றம் பொருளின் மதிப்பு இருநூற்றைம்பது ரூபாய்க்கு மேற்படாதவிடத்து.	407	ஷை
எழுத்தர் அல்லது வேலைக்காரரால் செய்யப்பட்ட நம்பிக்கை மோசடிக் குற்றம், பொருளின் மதிப்பு இருநூற்றைம்பது ரூபாய்க்கு மேற்படாதவிடத்து.	408	எந்தச் சொத்தைப் பொறுத்து நம்பிக்கை மோசடிக் குற்றம் செய்யப்பட்டிருக்கின்றதோ அந்தச் சொத்தின் சொந்தக்காரர்.

அட்டவணை—தொடர்ச்சி.

(1)	(2)	(3)
திருட்டுப் பொருளை, அது திருடப்பட்டதென்பதைத் தெரிந்தே நேர்மையற்ற வகையில் பெற்றுக் கொள்ளுதல், திருடப்பட்ட பொருளின் மதிப்பு இருநூற்றைம்பது ரூபாய்க்கு மேற்படாதவிடத்து.	411	திருட்டுப்பொருளின் சொந்தக்காரர்.
திருட்டுப்பொருளை, அது திருடப்பட்டதென்பதைத் தெரிந்தே மறைத்து வைக்க அல்லது பராதீனம் செய்ய உதவுதல், திருட்டுப் பொருளின் மதிப்பு இருநூற்றைம்பது ரூபாய்க்கு மேற்படாதவிடத்து.	414	ஷை
ஏமாற்றுதல்.	417	ஏமாற்றப்பட்டவர்.
குற்றவாளி எவரது நலத்தைச் சட்டத்தின் மூலமாகவோ சட்டப்படியான ஒப்பந்தத்தின் மூலமாகவோ காப்பாற்றக் கடமைப்பட்டவராயிருந்தாரோ, அவரை ஏமாற்றுதல்.	418	ஷை

சட்டவிலை—தொடர்ச்சி.

(1)	(2)	(3)
ஆள்மாறாட்டம் செய்து ஏமாற்றுதல்.	419	ஏமாற்றப்பட்டவர்.
ஏமாற்றி நேர்மையற்ற வகையில் பொருளை ஒப்படைக்கத் தூண்டுதல் அல்லது ஒரு பெறுமதிப்பத்திரத்தைச் செய்தல், மாற்றுதல் அல்லது அழித்தல்.	420	ஷை
கடன் கொடுத்தவர்களுக்கிடையே பகிர்ந்து கொள்வதைத் தடுப்பதற்காகப் பொருள் முதலியவற்றை மோசடியாக அகற்றுதல் அல்லது மறைத்தல்.	421	அதனால் பாதிக்கப்பட்டுள்ள, கடன் கொடுத்தவர்கள்.
குற்றவாளிக்குக் கொடுக்கப்படவேண்டிய கடன் அல்லது உரிமைப்பணத்தைத் தமக்குக் கடன் கொடுத்தவர்களுக்குக் கிடைக்காமலிருக்கும்படிக்கு மோசடியாகத் தடுத்தல்.	422	ஷை
மறுபயன் குறித்துப் பொய்யான உரை அடங்கியுள்ள மாற்றல் பத்திரத்தை மோசடியாக எழுதிக்கொடுத்தல்.	423	அதனால் பாதிக்கப்பட்டவர்.

அட்டவணை—தொடர்ச்சி.

(1)	(2)	(3)
பொருளை மோசடியாக அகற்றுதல் அல்லது மறைத்தல்.	424	அதனால் பாதிக்கப்பட்டவர்.
பத்து ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பு வாய்ந்த விலங்கினைக் கொல்லுதல் அல்லது ஊனமாக்குதல் மூலமாக அழிம்பு செய்தல்.	428	விலங்கின் சொந்தக்காரர்.
எந்த மதிப்பு வாய்ந்ததாயிருந்தாலும் கால்நடை முதலியவற்றையோ, ஐம்பது ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பு வாய்ந்த விலங்கையோ கொல்லுதல் அல்லது ஊனமாக்குதல் மூலமாக அழிம்பு செய்தல்.	429	அந்தக் கால்நடை அல்லது விலங்கின் சொந்தக்காரர்.
சட்டவிரோதமாக நீரோட்டத்தைத் திருப்பிவிட்டு நீர்ப்பாசனத்திற்குக் கேடு விளைவிப்பதன் மூலம் அழிம்பு செய்தல், உண்டாக்கிய நஷ்டம் அல்லது சேதம் தனிப்பட்ட ஒருவருக்கான நஷ்டம் அல்லது சேதமாக மட்டுமே இருக்கும் போது.	430	நஷ்டம் அல்லது சேதம் உண்டாக்கப்பட்டவர்.

அட்டவணை—தொடர்ச்சி.

(1)	(2)	(3)
சிறைத்தண்டனை விதிப்பதற்குரிய (திருட்டு அல்லாத) குற்றமொன்றைச் செய்வதற்காக வீட்டிற்குள் அத்துமீறி நுழைதல்.	451	எந்த விட்டின்பேரில் அத்துமீறுதல் செய்யப்பட்டதோ அந்த விட்டின் அனுபோகத்தைக் கொண்டுள்ளவர்.
போலி வாணிக அல்லது சொத்து அடையாளத்தை உபயோகித்தல்.	482	அத்தகைய உபயோகத்தால் எவருக்கு நஷ்டம் அல்லது கேடு விளைவிக்கப்படுகிறதோ அவர்.
மற்றவரால் உபயோகிக்கப்படும் வாணிக அல்லது சொத்து அடையாளத்தைக் கள்ளத் தயாரிப்பு செய்தல்.	483	எவரது வாணிக அல்லது சொத்து அடையாளம் கள்ளத் தயாரிப்பு செய்யப்படுகிறதோ அவர்.
கள்ளத் தயாரிப்பு சொத்து அடையாளத்துடன் கூடிய சரக்குகளைத் தெரிந்தே விற்பனை செய்தல், அல்லது விற்பனை செய்யும் பொருட்டு அல்லது உற்பத்தி செய்யும் பொருட்டு பலர் காண வைத்தல் அல்லது வைத்திருத்தல்.	486	ஷை
கணவன் அல்லது மனைவி உயிருடன் இருக்கும்போது மீண்டும் திருமணஞ்செய்துகொள்ளுதல்.	494	அவ்வாறு திருமணஞ் செய்துகொள்ளுகிறவரின் கணவன் அல்லது மனைவி.

அட்டவணை—தொடர்ச்சி.

(1)	(2)	(3)
குடியரசுத் தலைவர் அல்லது குடியரசுத் துணைத்தலைவர் அல்லது மாநில மொன்றின் ஆளுநர் அல்லது ஒன்றியத்து மண்டலம் ஒன்றின் ஆட்சியாளர் அல்லது அமைச்சர், தம் பொதுப் பணிகளை ஆற்றும்போதுள்ள அவரது நடத்தை பொறுத்து, அவருக்கெதிராகச் செய்யப்பட்ட அவதூறு, அரசு குற்றத்துறை வழக்குரைஞரால் செய்யப்பட்ட முறையீடொன்றின் பேரில் தொடரப்படும்போது.	500	அவதூறு செய்யப்பட்ட நபர்.
பெண் ஒருவரின் மானத்திற்கு பங்கம் விளைவிக்கும் உட்கருத்துடன் சொற்களைச் சொல்லுதல் அல்லது ஒலிகளை எழுப்புதல் அல்லது சைகை காட்டுதல் அல்லது பொருள் எதையும் தெரியக் காட்டுதல் அல்லது பெண்ணின் அந்தரங்கத்தில் தகாத முறையில் தலையிடுதல்.	509	எந்தப் பெண்ணின் மானத்திற்குப் பங்கம் விளைவிக்கக் கருதப்பட்டதோ அல்லது எந்தப் பெண்ணின் அந்தரங்கத்தில் முறைகேடாகத் தலையிடப்பட்டதோ அந்தப் பெண்.

(3) எந்தக் குற்றமேனும் இந்தப் பிரிவின்படி சட்டப்படி சமரசமாகத் தீர்த்துக்கொள்ளத்தக்கதாக இருக்கும் போது, அத்தகைய குற்றத்திற்கு உடந்தையாக இருந்ததையும் அத்தகைய குற்றத்தைச் செய்யும் முயற்சியையும் (அத்தகைய முயற்சியே ஒரு குற்றமாக இருக்கும்போது) அதே முறையில் சட்டப்படி சமரசமாகத் தீர்த்துக்கொள்ளலாம்.

(4). (அ) இந்தப் பிரிவின்படி குற்றமொன்றைச் சட்டப்படி சமரசமாகத் தீர்த்துக்கொள்வதற்கு மற்றப்படி தகுதி வாய்ந்திருப்பவர் பதினெட்டு வயதுக்குக் கீழ்ப் பட்டவராகவோ, அறிவிலியாகவோ, பித்தராகவோ இருக்கும்போது, அவரது சார்பாக ஒப்பந்தஞ்செய்து கொள்ளத் தகுதி வாய்ந்த எவரும், நீதி மன்றத்தின் அனுமதியுடன் அத்தகைய குற்றத்தைச் சட்டப்படி சமரசமாகத் தீர்த்துக்கொள்ளலாம்.

(ஆ) இந்தப் பிரிவின்படி குற்றமொன்றைச் சட்டப்படி சமரசமாகத் தீர்த்துக்கொள்ள மற்றப்படி தகுதி வாய்ந்திருப்பவர் இறந்த பின்னர் 1908 ஆம் ஆண்டு உரிமை வழக்கு விசாரணைமுறைச் சட்டத்தில் சொன்ன இலக்கணத்தின் படியுள்ள அத்தகையவரின் சட்டப்படியான பிரதிநிதி, நீதி மன்றத்தின் இசைவுடன் அந்தக் குற்றத்தைச் சட்டப்படி சமரசமாகத் தீர்த்துக்கொள்ளலாம். 5/1908.

(5) எதிரி மேல் விசாரணைக்கனுப்பப்பட்டிருக்கும் போது, அல்லது அவர் தண்டிக்கப்பட்டு மேல்முறை யீடொன்று நடப்பிலிருக்கும்போது, நிலவரத்திற்கேற்ப, எந்த நீதிமன்றத்திடம் அவர் மேல் விசாரணைக்கனுப்பப் படுகிறாரோ அல்லது எந்த நீதிமன்றத்தின் முன் அந்த மேல் முறையீடு கேட்கப்படவுள்ளதோ அந்த நீதிமன்றத்தின் அனுமதியின்றி, அத்தகைய குற்றத்தைச் சட்டப்படி சமரசமாகத் தீர்த்துக் கொள்வதற்கு அனுமதிக்கப்படுதல் ஆகாது.

(6) 401 ஆவது பிரிவின்படி தன் மேலாய்வு அதிகாரங்களைச் செலுத்திச் செயல்படுகின்ற உயர் நீதி மன்றமோ, செஷன்ஸ் நீதிமன்றமோ எவர் இந்தப் பிரிவின் படி குற்றமொன்றைச் சட்டப்படி சமரசமாகத் தீர்த்துக்

கொள்ளத் தகுதி வாய்ந்தவரோ அவரை அத்தகைய குற்றம் எதையும் சட்டப்படி சமரசமாகத் தீர்த்துக் கொள்வதற்கு அனுமதிக்கலாம்.

(7) ஒரு குற்றத்தைச் செய்த எதிரி முந்திய தண்டனைத் தீர்ப்பின் காரணமாக அதிகப்பட்ட தண்டனைக்கோ, அந்தக் குற்றத்திற்காக வேறு வகைத் தண்டனைக்கோ உட்பட வேண்டியவராயிருந்தால், அத்தகைய குற்றம் எதுவும் சட்டப்படி சமரசமாகத் தீர்த்துக் கொள்ளப்படுதல் ஆகாது.

(8) குற்றமொன்றை இந்தப் பிரிவின்படி சட்டப்படி சமரசமாகத் தீர்த்துக்கொள்வதானது, எந்த எதிரியுடன் அந்தக் குற்றம் சட்டப்படி சமரசமாகத் தீர்த்துக் கொள்ளப் பட்டிருக்கிறதோ, அந்த எதிரியை விடுதலை செய்ததாக ஆகும்.

(9) இந்தப் பிரிவுஙல் வகை செய்யப்பட்டபடியன்றி வேறுவிதமாக எந்தக் குற்றமும் சட்டப்படி சமரசமாகத் தீர்த்துக்கொள்ளப்படுதல் ஆகாது.

தொடர்ந்த குற்ற வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுதல்.

321. வழக்கின் பொறுப்பினைக் கொண்டுள்ள அரசு குற்றத் துறை வழக்குரைஞர் அல்லது அரசு குற்றத் துறை உதவி வழக்குரைஞர், பொதுவாகவோ, அல்லது எந்தக் குற்றம் அல்லது குற்றங்களுக்காக எவர் ஒருவர் விசாரணை செய்யப்படுகிறாரோ அந்தக் குற்றம் ஒன்று அல்லது மேற் பட்டவற்றைப் பொறுத்தோ அத்தகையவர் மீது தொடர்ந்த குற்ற வழக்கை நீதிமன்றத்தின் இசைவுடன் தீர்ப்புப் பகரப் படுவதற்குமுன் எந்த வேளையிலும் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்; அவ்வாறு திரும்பப் பெற்றுக்கொண்டதன் பேரில்—

(அ) அது, குற்றச்சாட்டொன்று வரையப்பட்டிருப் பதற்கு முன்பு செய்யப்படுமாஙல், எதிரி அத்தகைய குற்றம் அல்லது குற்றங்களைப் பொறுத்து விடுவிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) அது, குற்றச்சாட்டொன்று வினையப்பட்டதற்குப் பின்பு செய்யப்படுமானால் அல்லது இந்தச் சட்டத்தின்படி குற்றச்சாட்டு எதுவும் தேவைப்படாதபோது, அத்தகைய குற்றம் அல்லது குற்றங்கள் பொறுத்து, அவர் விடுதலை செய்யப்படுதல் வேண்டும்.

ஆனால், அத்தகைய குற்றமானது—

(i) ஒன்றியத்தின் நிருவாகத் துறை அதிகாரம் அளாவுகிற ஒரு விஷயம் சம்பந்தப்பட்ட சட்டம் எதற்கும் விரோதமானதாக இருந்தவிடத்து, அல்லது

(ii) 1946 ஆம் ஆண்டு டெல்லி சிறப்புக் காவல் துறைப் பணியாளர்த் தொகுதிச் சட்டத்தின்படி டெல்லி சிறப்புக் காவல் துறைப் பணியாளர்த் தொகுதியைச் சேர்ந்தவர்களால் புலனாய்வு செய்யப்பட்டிருந்தவிடத்து, அல்லது 25/1946.

(iii) மத்திய அரசுக்குச் சொந்தமான சொத்தைக் கையாடல் அல்லது அழித்தல் அல்லது அதற்கு இழைக்கப் பட்ட சேதம் அதில் உட்பட்டிருந்தவிடத்து, அல்லது

(iv) மத்திய அரசின் ஊழியத்திலுள்ள ஒருவர் தம் அலுவல் முறைக் கடமையை ஆற்றிச் செயற்படும்போதோ செயற்படுவதாகப் புலப்படும்போதோ, அவரால் செய்யப் பட்டவிடத்தும் அவ் வழக்கின் பொறுப்பினைக் கொண்டுள்ள அரசு குற்றத் துறை வழக்குரைஞரை மத்திய அரசு நியமனஞ் செய்திராவிடத்தும், அவர், அவ்வாறு செய்வதற்கு மத்திய அரசால் நாம் அனுமதிக்கப்பட்டிருந்தாலன்றி, தொடர்ந்த குற்ற வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கு இசைவு தருமாறு நீதிமன்றத்தைக் கேட்டுக் கொள்ளுதல் ஆகாது; மற்றும்; நீதிமன்றம், இசைவு அளிப்பதற்கு முன்பு, தொடர்ந்த குற்ற வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கு மத்திய அரசால் அளிக்கப்பட்ட அனுமதியைத் தன்முன் தாக்கல் செய்யுமாறு அரசு சூற்றத் துறை வழக்குரைஞரை ஏவ வேண்டும்.

நடுவர், முடிவெடுக்கக் கூடாத வழக்குகளில் நடைமுறை.

322. (1) எந்த மாவட்டத்திலேனும் நடுவர் ஒருவர் முன்னிலையில் குற்றமொன்று பற்றிய பரிசீலனை அல்லது விசாரணை நடைபெறும்போது,

(அ) வழக்கை விசாரணை செய்யவோ மேல் விசாரணைக்கு அனுப்பவோ தமக்கு அதிகாரமில்லை என்பதாக, அல்லது

(ஆ) வழக்கானது மாவட்டத்திலுள்ள வேறெந்த நடுவராலேனும் விசாரிக்கப்பட வேண்டிய அல்லது மேல் விசாரணைக்கனுப்பப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது என்பதாக, அல்லது

(இ) வழக்கானது தலைமை நீதித் துறை நடுவரால் விசாரணை செய்யப்பட வேண்டும் என்பதாக அனுமானிப்பதற்குச் சாட்சியத்தில் ஆதாரமிருக்கிறதென்று அவருக்குத் தோன்றுமானால், அவர் அந்த நடவடிக்கைகளை நிறுத்தி வைத்து, வழக்கின் தன்மையை விளக்குகின்ற சுருக்கமான அறிக்கையொன்றுடன் சேர்த்து, தலைமை நீதித் துறை நடுவருக்கோ, தலைமை நீதித் துறை நடுவர் ஏவுகிறவாறு, அதிகாரம் கொண்டுள்ள வேறெந்த நடுவருக்கோ அந்த வழக்கைப் பணிந்தனுப்புதல் வேண்டும்.

(2) அந்த வழக்கு பணிந்தனுப்பப்பெறும் நடுவர் விசாரணை செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்தால், அவ் வழக்கினைத் தாமே விசாரணை செய்யலாம், அல்லது அதிகாரம் கொண்டுள்ளவரும் தமக்குக் கீழ்ப்பட்டவருமான எந்த நடுவருக்கும் சாட்டியனுப்பலாம், அல்லது எதிரியை மேல் விசாரணைக்கு அனுப்பலாம்.

பரிசீலனை அல்லது விசாரணை துவக்கியதற்குப் பின்பு, வழக்கு மேல் விசாரணைக்கனுப்பப்பட வேண்டும்

323. நடுவர் ஒருவர் முன்னிலையில் நடக்கும் குற்றமொன்றிற்கான பரிசீலனை அல்லது விசாரணையில் அவ் வழக்கு செஷன்ஸ் நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்பட வேண்டிய ஒரு வழக்கு என்பதாகத் தீர்ப்புரைக்கு ஒப்பமிடுவதற்கு முன்பு நடவடிக்கைகளின்

எந்தக் கட்டத்திலேனும் அவருக்குத் தோன்றுமானால், அவர் இதற்கு முன் அடங்கியுள்ள வகைமுறைவரன்முறைப்படி அந்த நீதிமன்றத்திற்கு அதை மேல் விசாரணைக்கனுப்புதல் வேண்டும்.

எந்த முடிவுக்கு நடுவர் வரும்போது நடைமுறை.

221. மூன்றாண்டுகள் அல்லது மேற்பட்ட காலத்திற்குச் சிறைத் தண்டனை விதித்து, இந்தியத் தண்டனைச் சட்டத்தின் XII ஆவது அத்தியாயம் அல்லது XVII ஆவது அத்தியாயத்தின்படி தண்டிப்பதற்குரிய குற்றம் ஒன்றைச் செய்ததாகத் தண்டிக்கப்பட்டிருந்து, மேற்படி அத்தியாயங்களில் ஏதேனுமொன்றின்படி மூன்றாண்டுகள் அல்லது மேற்பட்ட காலத்திற்குச் சிறைத் தண்டனை விதிப்பதற்குரிய குற்றம் எதையேனும் செய்ததாக மீண்டும் ஒருவர் குற்றஞ் சுமத்தப்பட்டு அத்தகையவர் அக் குற்றத்தைச் செய்திருக்கிறார் என்று அனுமானிப்பதற்கு ஆதாரம் இருக்கிறது என்று அவ் வழக்கு தம் முன் நடப்பிலிருக்கப்பெற்ற நடுவருக்குத் திருப்தி ஏற்படுமிடத்து அந்த நடுவர் அவ் வழக்கினை விசாரிக்கத் தமக்குத் தகுதியிருந்து எதிரி தண்டிக்கப் படுவாரானால், போதுமான தண்டனையைத் தாமே விதிக்க முடியும் என்பதாகத் தாம் கருதினாலன்றி, அத்தகையவரை விசாரணை செய்வதற்காகத் தலைமை நீதித்துறை நடுவரிடமோ, மேல் விசாரணைக்காக செஷன்ஸ் நீதிமன்றத்திடமோ அனுப்புதல் வேண்டும்.

நான்காம் அத்தியாயம், மூன்றாண்டுக்குக் குறையாத சொற்சுருக்கமான தண்டனை விதிக்கப்பட்ட குற்றங்களுக்காகத் தண்டிக்கப்பட்டவர்களை விசாரணை செய்தல்.

(2) (1) ஆவது உட்பிரிவின்படி எவரேனும் தலைமை நீதித் துறை நடுவரிடம் விசாரணைக்கு அனுப்பப்படும் போது, அல்லது செஷன்ஸ் நீதிமன்றத்திடம் மேல் விசாரணைக்கு அனுப்பப்படும்போது, அதே பரிசிலனை அல்லது விசாரணையில் அவருடன் சேர்ந்தாணையாகக் குற்றஞ் சுமத்தப்பட்ட வேறெவரையும், நிலவரத்திற்கேற்ப, 239 ஆவது பிரிவு அல்லது 245 ஆவது பிரிவின்படி நடுவர் விடுவித்தாலன்றி அவ்வாறே விசாரணைக்காக அல்லது மேல் விசாரணைக்காக அனுப்புதல் வேண்டும்.

325. (1) வாதி தரப்பு மற்றும் எதிரி தரப்பினரின் சாட்சியத்தைக் கேட்டதற்குப் பின்பு, நடுவர் ஒருவர் எதிரி குற்றவாளியென்பதாகவும் அத்தகைய நடுவர் விதிப்பதற்கு

போதுமான அளவு கடுமையான தண்டனையை நடுவர்

வழக்கு முடியாதபோது நடைமுறை.

அதிகாரமளிக்கப்பட்டிருப்பதனின்றும் வேறுபட்ட அல்லது அதனிலும் அதிகக் கடுமையான ஒரு தண்டனையை எதிரி பெறுதல் வேண்டும் என்பதாகவும் கருதும்போதெல்லாம், அல்லது அந்த நடுவர் இரண்டாவது வகுப்பு நடுவராக இருந்து, 106 ஆவது பிரிவின்படி பத்திரமொன்றை எழுதிக் கொடுக்குமாறு எதிரி கோரப்பட வேண்டும் என்பதாகக் கருதும்போதெல்லாம், அவர் அந்தக் கருத்தைப் பதிவு செய்து, நாம் எந்தத் தலைமை நீதித்துறை நடுவருக்குக் கீழமைந்தவரோ அத் தலைமை நீதித்துறை நடுவருக்கு, தம் நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதோடு அவரிடம் எதிரியை அனுப்பி வைக்கலாம்.

(2) ஒருவருக்கு மேற்பட்ட எதிரிகள் சேர்ந்தாயினாக விசாரணை செய்யப்படும்போதும், அத்தகைய எதிரிகளில் எவரைப் பொறுத்தேனும் (1) ஆவது உட்பிரிவின்படி மேல் நடவடிக்கை எடுப்பது அவசியமென்று நடுவர் கருதும் போதும், தம் கருத்தின்படி குற்றவாளிகளாயிருக்கின்ற எதிரிகள் அனைவரையும் தலைமை நீதித்துறை நடுவரிடம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

(3) அந்த நடவடிக்கைகள் பரிந்துரைப்பப் பெறுகின்ற தலைமை நீதித்துறை நடுவர், தாம் பொருத்தமென நினைத்தால், தரப்பினர்களை விசாரணை செய்து, வழக்கில் ஏற்கனவே சாட்சியம் கொடுத்துள்ள சாட்சிகள் எவரையும் மீண்டும் கூப்பிட்டு விசாரிக்கலாம்; மற்றும் மேற்கொண்டு சாட்சியம் எதையும் கொடுக்குமாறு கோரி அதையும் எடுத்துக்கொள்ளலாம்; மேலும் அவர் பொருத்தமென நினைப்பதும் சட்டத்திற்கு உகந்ததுமான தீர்ப்புத் தண்டனை அல்லது கட்டளையைப் பிறப்பித்தல் வேண்டும்.

ஒரு பகுதி ஒரு நடுவராலும் மற்றொரு பகுதி மற்றொரு நடுவராலும் பதிவு செய்யப்பட்ட சாட்சியத்தின் பேரில் தண்டித்தல் அல்லது மேல்விசாரணைக்கனுப்புதல்.

326. (1) பரிசீலனை அல்லது விசாரணையொன்றில் சாட்சியம் முழுவதையும் அல்லது அதன் பகுதி எதையேனும் கேட்டுப் பதிவு செய்ததற்குப் பின்பு, நடுவர் எவரேனும் அந்த வழக்கைப் பொறுத்து அதிகாரம் அற்றுப் போய், மற்றொரு நடுவர் அவருக்கு அடுத்துப் பதவிக்கு வந்து அத்தகைய அதிகாரம் கொண்டு அதைச் செலுத்தி வருகிறபோதெல்லாம், அவ்வாறு அடுத்து வரும் நடுவர் தன் முன்னவரால் பதிவு செய்யப்பட்ட அல்லது ஒரு பகுதி தமக்கு முன்னவராலும் மற்றொரு பகுதி தம்மாலும் பதிவு செய்யப்பட்ட சாட்சியத்தின் பேரில் செயற்படலாம்:

ஆனால், அடுத்து வரும் நடுவர், யாவரது சாட்சியம் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருக்கின்றதோ அந்த சாட்சிகளில் எவரையேனும் மேற்கொண்டு விசாரணை செய்வது நீதியின் நலத்திற்கு அவசியமாக இருக்கிறதென்று எண்ணுவாரானால், அவர் அந்தமைய பாட்டி எவருக்கும் மீண்டும் ஆஜர் கட்டளை பிறப்பித்து நாம் மேற்கொண்டு அனுமதிக்கக்கூடிய விசாரணை, குறுக்கு விசாரணை மற்றும் மறு விசாரணை எதையாவிருப்பின் அதைச் செய்வதற்குப் பின்பு, அந்தச் சாட்சி விடுவிக்கப்படுதல் வேண்டும்.

(2) வழக்கொன்று ஒரு நடுவரிடமிருந்து மற்றொரு நடுவருக்கு இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி மாற்றப்படும்போது, முன்னவருக்கு அது சம்பந்தமான அதிகாரம் அற்றுப் போவதாகவும், பின்னவர் அவருக்கு அடுத்து வருவதாகவும் (1) ஆவது உட்பிரிவின் பொருளின்படி கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) இந்தப் பிரிவிலுள்ள எதுவும், சுருக்கு விசாரணைகள் மீது, அல்லது 322 ஆவது பிரிவின்படி நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்ற அல்லது 325 ஆவது பிரிவின்படி நடவடிக்கைகள் மேல்நிலை நடுவருக்குப் பரிந்துரைப்பப்பட்டிருக்கின்ற வழக்குகள் மீது இயங்காது.

நீதிமன்றம் திறந்த மன்றமாக இருத்தல்.

327. குற்றம் எதையேனும் பரிசீலனை அல்லது விசாரணை செய்யும் பொருட்டு, குற்ற வழக்கு நீதிமன்றம் நடக்கின்ற இடம் எதுவும், எந்த அளவிற்கு, பொது மக்களை வசதியாக அந்த இடம் கொள்ளுமோ அந்த அளவிற்குப் பொதுப்படையாக பொது மக்கள் வந்து போகக் கூடியதாயுள்ள ஒரு திறந்த மன்றமாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

ஆனால், குறிப்பிட்ட வழக்கு எதையும் பரிசீலனை அல்லது விசாரணை செய்கின்ற எந்தக் கட்டத்திலும், சரியென்று தெரிகிற நீதிபதி அல்லது நடுவர் தாம் பொருத்தமென நினைத்தால் பொதுப்படையாக, பொது மக்களோ அல்லது குறிப்பிட்ட எவருமோ நீதிமன்றத்தால் பயன்படுத்தப்படும் அறை அல்லது கட்டிடத்திற்குள் வந்து போவதோ, அங்கு இருத்தலோ, தங்கியிருத்தலோ கூடாது என்பதாக அவர் கட்டளையிடலாம்.

அத்தியாயம் XXV.

புத்தி சுவாதீனம் இல்லாத எதிரிகள் பற்றிய வகைமுறைகள்.

எதிரி பித்தராக இருக்கும் சந்தர்ப்பத்தில் நடைமுறை என்ன என்பது.

328. (1) எவருக்கு எதிராகப் பரிசீலனை நடத்தப் படுகிறதோ அவர் புத்தி சுவாதீனமற்றவர் என்றும், அதன்விளைவாக எதிர்வாதம் செய்யத் திறனற்றவர் என்றும் பரிசீலனை நடத்துகின்ற நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) நம்புவதற்குக் காரணமிருக்கும்போது, அவர் அவ்வாறு புத்தி சுவாதீனமற்றவரா என்னும் சங்கதி குறித்துப் பரிசீலனை நடத்தல் வேண்டும். மற்றும் மாவட்ட குடிஇயல் அறுவை மருத்துவரையோ (சிவில் சர்ஜன்) மாநில அரசு குறிப்பிடும் வேறு எந்த மருத்துவ அலுவலரையோ கொண்டு அத்தகையவரைச் சோதிக்கச் செய்தல் வேண்டும்; மேலும் அதன்பேரில் அத்தகைய அறுவை மருத்துவர் (சர்ஜன்) அல்லது அலுவலர் சாட்சியாக விசாரித்து அந்த விசாரணையை எழுத்தில் அமைத்தல் வேண்டும்.

(2) அத்தகைய விசாரணையும், பரிசீலனையும் நடப்பில் இருக்கும்போது, 330 ஆவது பிரிவின் வகைமுறைகளின்படி அத்தகையவர் மீது நடவடிக்கை எடுக்கலாம்.

(3) (1) ஆவது உட்பிரிவில் குறிப்பிடப்பட்டவர் புத்தி சுவாதீனமற்றவர் என்றும், ஆகையால் தம்முடைய எதிர் வாதத்தைச் செய்யத் திறனற்றவர் என்றும், நடுவர் கருதினால் அவ்வாறான ஒரு முடிவை எழுத்துமூலம் அவர் பதிவு செய்தல் வேண்டும்; மற்றும் வழக்கின் மேல் நடவடிக்கைகளை ஒத்திப்போடுதல் வேண்டும்.

நீதிமன்றத்தின் முன் விசாரணை செய்யப்படுபவர் புத்தி சுவாதீனமற்றவராயிருக்கும் சந்தர்ப்பத்தில் நடைமுறை என்ன என்பது.

329. ஒரு நடுவர் முன் அல்லது செஷன்ஸ் நீதிமன்றத்திற்கு முன், ஒருவர் விசாரிக்கப்படும்போது நடுவருக்கோ (மாஜிஸ்ரேட்) அல்லது நீதிமன்றத்திற்கோ அத்தகையவர் புத்தி சுவாதீனமற்றவர் என்றும், ஆகையால் தம் எதிர் வாதத்தைச் செய்யும் திறனில்லாதவர் என்றும் தோன்றினால், அந்த நடுவர் அல்லது நீதிமன்றம் முதற்படியாக அத்தகைய சுவாதீனமற்ற தன்மையும், திறன் இன்மையும் உண்மையா என்ற சங்கதியை விசாரித்தல் வேண்டும்; மற்றும் அந்த நடுவரோ நீதிமன்றமோ தம்முன் கொண்டுவரலாகும் மருத்துவ மற்றும் பிற சாட்சியத்தையும் ஆராய்ந்த பிறகு அந்தச் சங்கதி உண்மை என்று திருப்தி கொண்டால்,

அவ்வாறான முடிவை அவர் அல்லது அது எழுத்து மூலம் பதிவு செய்து அந்த வழக்கில் மேல்நடவடிக்கைகளை ஒத்திப் போடுதல் வேண்டும்.

(2) எதிரியின் புத்தி சுவாதீனமின்மை, நிறன் இன்மை ஆகிய சந்தர்ப்பத்தைப் பற்றிய விசாரணையானது நடுவர் அல்லது நீதிமன்றத்தின்முன் எதிரி போலீஸ் தடங்கும் விசாரணையின் பகுதியாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

புலனுய்வு அல்லது விசாரணை நடந்துகொண்டிருக்கும்போது பித்தரை விசாரித்தல்.

330. 328 அல்லது 329 ஆவது பிரிவின்படி ஒருவர் புத்திசுவாதீனமற்றவர் என்றும் தம் எதிர்வாதுக்குரைச் செய்யும் நிறனற்றவர் என்றும் முடிவுக்கு வரும்போது, நிலவரத்திற்கேற்ப, நடுவர் அல்லது நீதிமன்றம், அந்த வழக்கு ஜாமீன் வாங்கக்கூடிய வழக்காக இருந்தாலும் அல்லது ஜாமீன் வாங்கக்கூடாத வழக்காக இருந்தாலும் அவர் சுகப்படி பாதுகாக்கப்படுவார் என்றும், தமக்கு அல்லது வேறு ஒருவருக்குக் கேடு செய்யாதபடி தடுக்கப் படுவார் என்றும், நடுவர் அல்லது நீதிமன்றம் அல்லது இதுபற்றி நடுவரோ நீதிமன்றமோ நியமிக்கும் அலுவலர் முன்பு தேவைப்படும்போது நேரில் கொண்டு வரப்படுவார் என்றும் போதுமான ஜாமீன் அளிக்கப்படுவதன் பேரில் அவரை விடுவிக்கலாம்.

(2) நடுவர் அல்லது நீதிமன்றத்தின் கருத்தின்படி அந்த வழக்கு ஜாமீன் வாங்கக்கூடாத வழக்காக இருந்தாலும் அல்லது போதிய ஜாமீன் அளிக்கப்படவில்லை என்றாலும், நிலவரத்திற்கேற்ப நடுவரோ நீதிமன்றமோ எதிரியை அவர் அல்லது அது தக்கது எனக் கருதும் இடத்திலும், முறையிலும் பத்திரமான பாதுகாவலில் வைக்க உத்தரவிடுதல் வேண்டும்; மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி மாநில அரசுக்கு அறிக்கை அனுப்புதல் வேண்டும்;

ஆனால், 1912 ஆம் ஆண்டு இந்தியப் பைத்தியச் சட்டத் திற்கிணங்க மாநில அரசு செய்திருக்கலாகும் விதிகளின்படி அல்லாமல் வேறுவிதமாக எதிரியை ஒரு பித்தர் காப்பகத்தில் காவலில் வைப்பதற்குக் கட்டளை எதுவும் இடுதல் ஆகாது. 4/1912.

பரிசிலனை அல்லது விசாரணை மீண்டும் தொடர்தல்.

331. (1) 328 அல்லது 329 ஆவது பிரிவின்படி ஒரு பரிசிலனை அல்லது விசாரணை ஒத்திவைக்கப்பட்டபோது, நிலவாரந்திற்கேற்ப, நடுவரோ நீதிமன்றமோ சம்பந்தப் பட்டவரின் புத்தி சுவாதீனமின்மை நீங்கிய பின்பு எப்போ தேனும் பரிசிலனையை அல்லது விசாரணையை மீண்டும் தொடர்ந்து, எதிரியை அத்தகைய நடுவர் அல்லது நீதிமன்றத்திற்கு முன்பு வரும்படி அல்லது கொண்டு வரும்படி கட்டளையிடலாம்.

(2) 330 ஆவது பிரிவின்படி எதிரி விடுவிக்கப்பட்டு அவர் ஆஜராவதற்கு ஜாமீன் அளித்த ஜாமீன்தார்கள், நடுவர் அல்லது நீதிமன்றம் இதன்பொருட்டு நியமிக்கும் அலுவலர் முன் அவரைக் கொண்டுவந்து நிறுத்தும்போது எதிரி, நம்முடைய எதிர்வாதத்தை நடத்தத் திறன் பெற்றிருக்கிறார் என்ற அத்தகைய அலுவலர் கொடுத்த உறுதிச் சான்றுரை சாட்சியமாகப் பெற்றுக்கொள்ளத் தக்கதாகும்.

நடுவர் அல்லது நீதிமன்றத்தின் முன் எதிரி ஆஜராகும்போது நடைமுறை.

332. (1) நிலவாரத்திற்கு ஏற்ப, நடுவர் அல்லது நீதிமன்றத்தின் முன் எதிரி ஆஜராகும்போது அல்லது மீண்டும் கொண்டுவந்து நிறுத்தப்படும்போது அவர் தம் எதிர் வாதத்தைத் தாமே செய்யத் திறன் உள்ளவர் என்று நடுவரோ நீதிமன்றமோ கருதினால், பரிசிலனை அல்லது விசாரணை தொடர்ந்து நடைபெறுதல் வேண்டும்.

(2) எதிரி தம்முடைய எதிர்வாதத்தைச் செய்ய இன்னும் திறனற்றவராக இருப்பதாக நடுவரோ நீதிமன்றமோ கருதினால், அந்த நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) அல்லது நீதிமன்றம் நிலவாரத்திற்கேற்ப, 328 ஆவது பிரிவு அல்லது 329 ஆவது பிரிவின் வகைமுறைகளுக்கிணங்க செயல்பட வேண்டும்; மற்றும் எதிரி புத்தி சுவாதீனமற்றவர் என்றும் அதன் விளைவாக தம் எதிர்வாதத்தைச் செய்யத் திறன் அற்றவர் என்றும் காணப்படும்போது அத்தகைய எதிரியின் மீது 330 ஆவது பிரிவின் வகைமுறைகளுக்கிணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

எதிரி புத்தி சுவாதீனமுடையவராயிருந்திருப்பதாகத் தோன்றும்போது.

333. பரிசிலனை அல்லது விசாரணையின்போது எதிரி புத்தி சுவாதீனமுடையவராகத் தோன்றும்போதும் நடுவர் தம்முன் கொடுக்கப்பட்ட சாட்சியத்திலிருந்து எதிரி செய்கையொன்றைச் செய்தார் என்றும் அந்தச் செய்கை யானது புத்தி சுவாதீனத்துடன் இருந்திருந்தால், ஒரு குற்ற

மாக அமையும் என்றும், அச் செய்கையைச் செய்தபோது புத்தி சுவாதீனமில்லாத காரணத்தால், அந்தச் செய்கையின் தன்மையையோ, அது தவறானதென்றே சட்டத்திற்கு விரோதமானதென்றே அறியும் திறன் அற்றவராக இருந்தா ரென்பதை நம்புவதற்குக் காரணமிருந்தால், அந்த நடுவர் வழக்கை மேல் நடத்துதல் வேண்டும்: மற்றும் எதிரி செஷன்ஸ் நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட வேண்டியவரையின், செஷன்ஸ் நீதிமன்றத்திற்கு மேல் விசாரணைக்காக அனுப்புதல் வேண்டும்.

புத்தி சுவாதீனமில்லை என்னும் காரணத்தின் பேரில் விடுதலை செய்தல்.

334. எந்தச் சமயத்தில் ஒருவர் குற்றமொன்றைச் செய்ததாகச் சொல்லப்படுகிறதோ அந்தச் சமயத்தில் அந்தக் குற்றத்தை உண்டாக்கியதாகச் சொல்லப்படும் செய்கையின் தன்மை எப்படிப்பட்டதென்றே அது தவறானதென்றே அல்லது சட்டத்திற்கு விரோதமானதென்றே அந்தக் குற்றத்தைச் செய்தவர் தாம் புத்தி சுவாதீனமில்லாத காரணத்தால் அறிந்து கொள்ளத் திறனற்றவராயிருந்தார் என்னும் அடிப்படையின் பேரில் அவர் விடுதலை செய்யப் படும் போதெல்லாம், அவர் அந்தச் செய்கையைச் செய்தாரா இல்லையா என்ற முடிபு திட்டமாகச் சொல்லப்படுதல் வேண்டும்.

அத்தகைய காரணத்தின் பேரில் விடுதலை செய்யப்பட்டவர் பத்திரமான காவலில் வைக்கப் படுதல்.

335. (1) சாட்டப்பட்ட செய்கையானது எதிரியால் செய்யப்பட்டது என்று முடிபு கூறும்போதெல்லாம், அந்தத் தகைய செய்கையானது, மேற்சொன்ன திறனின்மை இல்லாதிருக்குமேயானால், ஒரு குற்றமாகும் பட்சத்தில், எந்த நடுவர் அல்லது நீதிமன்றத்தின் முன் விசாரணை நடத்தப்பட்டிருக்கிறதோ அந்த நடுவர் அல்லது நீதிமன்றம்,

(அ) நடுவர் அல்லது நீதிமன்றம் பொருத்தமென நினைக்கும் இடத்திலும், வகையிலும் அத்தகையவரை பத்திரமான பாதுகாவலில் வைப்பதற்குக் கட்டளையிடுதல் வேண்டும்; அல்லது

(ஆ) அத்தகையவரை, அத்தகையவரின் உறவினர் அல்லது நண்பர் எவரிடமேனும் ஒப்படைக்கும்படி கட்டளை யிடுதல் வேண்டும்.

(2) 1912 ஆம் ஆண்டு இந்தியப் பைத்தியச் சட்டத்தின் படி மாநில அரசு செய்திருக்கக்கூடிய விதிகளுக்கிணங்க அல்லாமல் மற்றப்படி (1) ஆவது உட்பிரிவின் (அ) கூறின்படி, எதிரியைப் பித்தர் காப்பகத்தில் இருத்தி வைப்பதற்கான கட்டளை எதுவும் பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(3) (1) ஆவது உட்பிரிவின் (ஆ) கூறின்படி, எதிரியை ஓர் உறவினர் அல்லது நண்பரிடம் ஒப்படைப்பதற்கான கட்டளை எதுவும், அத்தகைய உறவினர் அல்லது நண்பரின் விண்ணப்பத்தின் பேரிலும் நடுவர் அல்லது நீதிமன்றத்திற்குத் திருப்தி ஏற்படும் வகையில் பின்வருமாறு அவர் உத்தரவாதம் கொடுப்பதன் பேரிலும் அல்லாமல் பிறப்பிக்கப்படுதல் ஆகாது ;

(அ) ஒப்படைக்கப்பட்டவர் தக்கபடி கவனித்துக் கொள்ளப்படுவதுடன் தமக்கோ வேறெவருக்கோ கேடு விளைவிக்காதபடி தடுக்கப்படவேண்டும் ;

(ஆ) ஒப்படைக்கப்பட்டவர் அத்தகைய அறிவிப்பின் ஆய்க்காகவும் மாநில அரசு உத்தரவிடலாகும் நேரங்களிலும், இடங்களிலும் கொண்டுவந்து நிறுத்தப்பட வேண்டும்.

(4) நடுவர் அல்லது நீதிமன்றம் (1) ஆவது உட்பிரிவின் படி எடுக்கப்பட்ட நடவடிக்கையை மாநில அரசுக்கு அறிக்கை செய்தல் வேண்டும்.

(கடமைகளை) ஆற்றிவரப் பொறுப்பு அலுவலருக்கு அதிகாரமளிப்பதற்கு மாநில அரசுக்குள்ள அதிகாரம்.

336. 337 ஆவது பிரிவு அல்லது 338 ஆவது பிரிவின்படி சிறைத்துறைத் தலைவருக்குள்ள கடமைகள் அனைத்தையும் அல்லது எதையேனும் ஆற்றிவருவதற்கு, 330 ஆவது பிரிவு அல்லது 335 ஆவது பிரிவின் வகைமுறைகளின்படி ஒருவர் அடைத்து வைக்கப்பட்டுள்ள சிறைச்சாலையின் பொறுப்பு அலுவலருக்கு, மாநில அரசு அதிகாரமளிக்கலாம்.

பித்தராயுள்ள கைதி தம் எதிர்வாதத்தைச் செய்யும் திறனுடைய வரென்று அறிக்கை செய்யப்படும்போது நடைமுறை என்ன என்பது.

337. அத்தகையவர் 330 ஆவது பிரிவின் (2) ஆவது உட்பிரிவின் வகைமுறைகளின்படி பாதுகாவலில் வைக்கப்பட்டிருந்தால், சிறையில் வைக்கப்பட்டுள்ள ஒருவரின் விஷயத்தில், சிறைத்துறைத் தலைவரோ, பித்தர் காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ள ஒருவரின் விஷயத்தில், அத்தகைய காப்பகத்தின் பார்வையாளர்களோ அவர்களில் எவரேனும் இருவரோ, தம் கருத்தின்படி, அத்தகையவர் தம் எதிர்வாதத்தைச் செய்யத் திறனுடையவர் என்று உறுதிச் சான்று அளிப்பாராயின் அத்தகையவர் நடுவர் அல்லது நீதிமன்றம் குறிப்பிடும் நேரத்தில், நிலவாதத்திற்கேற்ப, அந்த நடுவர்

அல்லது நீதிமன்றத்தின் முன் இட்டுச் செல்லப்பட வேண்டும்; மற்றும் அந்த நடுவர் அல்லது நீதிமன்றம் 332 ஆவது பிரிவின் வகைமுறைகளின்படி அத்தகையவர்மீது மேல் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்; மேலும் அத்தகைய சிறைத் துறைத் தலைவர் அல்லது மேற்சொன்னபடியான பார்வை யாளர்களின் உறுதிச் சான்று, சாட்சியமாகப் பெற்றுக் கொள்ளத் தக்கதாகும்.

பாதுகாவலில் வைக்கப்பட்டுள்ள பித்தர் விடுவிக்கப்படத் தக்கவர்எனப்படும் விடத்து நடைமுறை என்ன என்பது.

338. (1) அத்தகையவர் 330 ஆவது பிரிவின் (2) ஆவது உட்பிரிவு அல்லது 335 ஆவது பிரிவின் வகைமுறைகளின்படி பாதுகாவலில் வைக்கப்பட்டிருந்து, அத்தகைய சிறைத் துறைத் தலைவர் அல்லது பார்வையாளர்கள் தம்முடைய மதிப்பீட்டின்படி தமக்கோ மற்றவருக்கோ கேடு விளைவிப்பார் என்ற அபாயமில்லை என்று உறுதிச்சான்று அளிப்பாராயின் அதன் பேரில் மாநில அரசு அவரை விடுவிப்பதற்கோ, காவலில் வைப்பதற்கோ அல்லது அவர் ஏற்கனவே ஒரு பொதுப் பித்தர் காப்பகத்திற்கு அனுப்பப்படவில்லை என்றால் அவரை அத்தகைய காப்பகத்திற்கு மாற்றுவதற்கோ கட்டளை யிடலாம்; மற்றும் ஒரு காப்பகத்திற்கு அவரை மாற்றும்படி கட்டளையிடுகிறதென்றால், நீதித்துறை அலுவலர் ஒருவரும் காப்பகத்திற்கு மருத்துவத்துறை அலுவலர்கள் இருவரும் கொண்ட ஒரு ஆணையத்தை நியமிக்கலாம்.

(2) அத்தகைய ஆணையம், அத்தகையவரின் மனநிலை யைக் குறித்து முறையான பரிசீலனை செய்து, அவசியமான சாட்சியத்தை எடுத்து மாநில அரசுக்கு அறிக்கை செய்தல் வேண்டும்; அவ்வரசு தான் பொருத்தமென நினைப்பதற் கேற்ப அவரை விடுவிப்பதற்கோ பாதுகாவலில் வைப்ப தற்கோ கட்டளையிடலாம்.

பித்தரை உறவினர் அல்லது நண்பரின் கவனிப்பில் ஒப்படைத்தல்.

339. (1) 330 ஆவது பிரிவு அல்லது 335 ஆவது பிரிவின் வகைமுறைகளின்படி பாதுகாவலில் வைக்கப்பட்டவ ரொருவரின் உறவினர் அல்லது நண்பர் எவரேனும் தம்முடைய கவனிப்பிலும் பாதுகாவலிலும் இருக்கும் படியாக அவரை ஒப்படைத்தல் வேண்டும் என்று விரும்பு கிறபோதெல்லாம், அத்தகைய உறவினர் அல்லது நண்பரின் விண்ணப்பத்தின் பேரிலும், மாநில அரசுக்குத் திருப்தி ஏற்படும் வகையில் பின்வருமாறு ஜாமீனை அவர்

கொடுப்பதன்பேரிலும் அந்தகைய அரசு அத்தகையவரை, அந்த உறவினர் அல்லது நண்பரிடம் ஒப்படைப்பதற்கு உத்தரவிடலாம்.

(அ) ஒப்படைக்கப்பட்டவர் தக்கவாறு கவனித்துக் கொள்ளப்படுவதுடன் தமக்கோ வேறெவருக்குமோ கேடு விளைவிக்காதபடி தடுக்கப்பட வேண்டும் ;

(ஆ) ஒப்படைக்கப்பட்டவர் மாநில அரசு குறிப்பிடலாகும் அலுவலரின் ஆய்வுக்காகவும் அது குறிப்பிடலாகும் இடங்களிலும், நேரங்களிலும் கொண்டுவந்து நிறுத்தப்பட வேண்டும் ;

(இ) 330 ஆவது பிரிவின் (2) ஆவது உட்பிரிவின்படி பாதுகாவலில் வைக்கப்பட்டுள்ள ஒருவரின் விஷயத்தில், கோரப்படும்போது அவர் அத்தகைய நடுவர் அல்லது நீதிமன்றத்தின் முன் கொண்டுவந்து நிறுத்தப்பட வேண்டும்.

(2) எந்தக் குற்றம் பற்றிய விசாரணையானது அவரது புத்தி சுவாதீனமின்மை காரணமாகவும் தமது எதிர்வாதத்தைச் செய்வதற்கு அவரது திறனின்மை காரணமாகவும் ஒத்திப்போடப்பட்டிருக்கின்றதோ அந்தக் குற்றம் எதையேனும் செய்ததாக அவ்வாறு ஒப்படைக்கப்பட்டவர் குற்றஞ்சுமத்தப்பட்டு, (1) ஆவது உட்பிரிவின் (ஆ) கூறில் குறிப்பிடப்பட்ட ஆய்வு அலுவலர், அத்தகையவர் தம் எதிர்வாதத்தைச் செய்யத் திறனுடையவர் என்பதாக நடுவருக்கோ நீதிமன்றத்திற்கோ எந்தக் காலத்திலேனும் உறுதிச் சான்று அளிப்பாராஞல், அத்தகைய நடுவர் அல்லது நீதிமன்றம், அத்தகைய எதிரி ஒப்படைக்கப்பட்டுள்ள உறவினர் அல்லது நண்பரை, அந்த நடுவர் அல்லது நீதிமன்றத்தின் முன் கொண்டுவந்து நிறுத்துமாறு கோருதல் வேண்டும் : மற்றும் அவ்வாறு கொண்டுவரப்பட்டதன் பேரில், அந்த நடுவர் அல்லது நீதிமன்றம் 332 ஆவது பிரிவின் வகைமுறைகளுக்கிணங்க மேல் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் : மேலும் ஆய்வு அலுவலரின் உறுதிச்சான்று சாட்சியமாகப் பெற்றுக்கொள்ளத்தக்கதாகும்.

அத்தியாயம் XXVI.

நீதிநிர்வாகத்தைப் பாதிக்கும் குற்றங்கள் பற்றிய வகை முறைகள்.

195 ஆவது பிரிவில் சொல்லப்பட்ட சந்தர்ப்பங்களில் நடைமுறை என்ன என்பது.

340. (1) நீதிமன்றம் எதுவும், தன்னிடம் இதன் பொருட்டு செய்துகொள்ளப்பட்ட விண்ணப்பம் ஒன்றின்மீதோ வேறுவிதமாகவோ, நிலவாத்திற்கேற்ப, அந்த நீதிமன்றத்தில் நடக்கும் ஒரு நடவடிக்கையிலோ, அந்த நடவடிக்கை சம்பந்தமாகவோ, அல்லது அந்த நீதிமன்றத்தில் நடக்கும் ஒரு நடவடிக்கையில் சாட்சியமாக முன்னிடப்பட்ட அல்லது கொடுக்கப்பட்ட ஒரு பத்திரம் பொறுத்தோ செய்யப்பட்டிருப்பதாகத் தோன்றுவதும் 195 ஆவது பிரிவின் (1) ஆவது (ஆ) கூறில் குறிக்கப்பட்டதுமான எந்தக் குற்றத்தையேனும் விசாரணை செய்ய வேண்டும் என்பது நீதியின் நலத்திற்கு உகந்தது என்று கருதும்போது, அத்தகைய நீதிமன்றம், தான் அவசியமென நினைக்கும் முதல்நிலை பரிசீலனை ஏதேனும் இருப்பின் அதற்குப் பிறகு, பின்வருமாறு செய்யலாம்:—

(அ) அந்தப்படிக்கு ஒரு முடிபைப் பதிவு செய்யலாம்;

(ஆ) எழுத்து மூலமாக அதைப்பற்றி ஒரு முறையீடு செய்யலாம்;

(இ) அதிகாரம் கொண்டுள்ள ஒரு முதல் வகுப்பு நடுவருக்கு அதை அனுப்பலாம்;

(ஈ) அத்தகைய நடுவர் முன் எதிரி ஆஜராவதற்குப் போதிய ஜாமீன் வாங்கலாம்; அல்லது சொல்லப்பட்ட குற்றம் ஜாமீனில் விடாக்குற்றமாயிருந்து, நீதிமன்றம் அப்படிச் செய்வது அவசியம் என்று நினைக்குமானால், எதிரியை அத்தகைய நடுவரிடம் காவலிலிட்டு அனுப்பலாம்;

மற்றும்,

(உ) அத்தகைய நடுவரின் (மாஜிஸ்ட்ரேட்) முன் வந்து சாட்சியம் கொடுக்குமாறு எவரையும் கட்டுப்படுத்தலாம்.

(2) குற்றமொன்றைப் பொறுத்து (1) ஆவது உட் பிரிவினால் ஒரு நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை அந்த நீதிமன்றம் அந்தக் குற்றத்தைப் பொறுத்து (1) ஆவது உட்பிரிவின்படி முறையீடொன்றைச் செய்யாத போதோ அத்தகைய முறையீட்டைச் செய்வதற்கான விண்ணப்பத்தை நிராகரிக்காதபோதோ 195 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் பொருளின்படி, முன் சொல்லப்பட்ட நீதிமன்றம் எந்த நீதிமன்றத்திற்குக் கீழமைந்ததோ அந்த நீதிமன்றம் செலுத்தலாம்.

(3) இந்தப் பிரிவின்படி செய்யப்பட்ட ஒரு முறையீடு—

(அ) முறையீட்டைச் செய்கின்ற நீதிமன்றம் உயர் நீதிமன்றமாயிருக்குமிடத்து, அந்த நீதிமன்றம் நியமிக்கலாகும் அந்த நீதிமன்றத்தின் அலுவலரால்,

(ஆ) வேறு எந்தச் சந்தர்ப்பத்திலும், அந்த நீதிமன்றத்தில் தலைமை வகிக்கின்ற அலுவலரால்

கையொப்பம் இடப்படுதல் வேண்டும்.

(4) இந்தப் பிரிவில் "நீதிமன்றம்" 195 ஆவது பிரிவில் கொடுக்கப்பட்டுள்ள அதே பொருளைக் கொண்டது.

மேன்முறையீடு

341. (1) எவரது விண்ணப்பத்தின் பேரில் உயர் நீதிமன்றமல்லாத வேறு எந்த நீதிமன்றமேனும் 340 ஆவது பிரிவின் (1) ஆவது உட்பிரிவு அல்லது (2) ஆவது உட்பிரிவின்படி முறையீடு செய்ய மறுத்திருக்கிறதோ, அல்லது எவருக்கு விரோதமாக அத்தகைய நீதிமன்றம் அத்தகைய ஒரு முறையீட்டைச் செய்திருக்கிறதோ அவர் 195 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் பொருளின்படி முன் சொல்லப்பட்ட நீதிமன்றம் எந்த நீதிமன்றத்திற்குக் கீழமைந்ததோ அந்த நீதிமன்றத்துக்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம்; மற்றும் அதன்பேரில் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு அந்த மேல்நீதிமன்றம் அறிவிப்பு (notice) கொடுத்ததற்குப் பின்பு, நிலவாந்திற்கேற்ப, முறையீட்டைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுமாறே 340 ஆவது பிரிவின்படி முன்சொல்லப்பட்ட அத்தகைய நீதிமன்றம் செய்திருக்கக்கூடிய முறையீட்டைச் செய்யும்படியோ உத்தரவிடலாம்; மேலும், அது அத்தகைய முறையீட்டைச் செய்யுமாறு, அந்தப் பிரிவின் வகைமுறைகள் அவ்வாறே இயங்கும்.

(2) இந்தப் பிரிவின்படியான கட்டளை ஒன்றும் அத்தகைய கட்டளை எதற்கும் உட்பட்டு, 340 ஆவது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட கட்டளையொன்றும் முடிந்த முடிவானதாகும்; மற்றும் மேலாய்வுக்கு உட்படுதல் ஆகாது.

செலவுத் தொகைகளுக் கட்டளையிடுவ தற்கான அதிகாரம்.

342. 340 ஆவது பிரிவின்படி முறையீடொன்றைத் தாக்கல் செய்வதற்காகத் தன்னிடம் செய்து கொள்ளப்பட்ட விண்ணப்பத்தையோ 341 ஆவது பிரிவின்படி மேல் முறையீட்டையோ நடத்துகிற எந்த நீதிமன்றமும் செலவுத் தொகையைக் குறித்து நியாயமாக இருக்கக்கூடிய கட்டளையைப் பிறப்பிக்க அதிகாரம் உடையதாயிருக்கும்.

விசாரணைக் கெடுத்துக் கொள்ளுவற்ற நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) மேற் கொள்ள வேண்டிய நடையுறை.

343. (1) 340 ஆவது பிரிவு அல்லது 341 ஆவது பிரிவின்படி முறையீடொன்று எந்த நடுவரிடம் செய்து கொள்ளப்படுகிறதோ அந்த நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) ஆவது அத்தியாயத்தில் என்ன கண்டிருந்தபோதிலும், கூடிய வரையில் அவ் வழக்கை, அது காவலறிக்கையின் பேரில் தொடரப்பட்டது போன்றே மேல் நடத்துதல் வேண்டும்.

(2) அத்தகைய நடுவரின், அல்லது அவ் வழக்கு வேறெந்த நடுவருக்கேனும் மாற்றப்பட்டிருக்கக்கூடுமானால் அந்த நடுவரின் கவனத்திற்கு எந்த நீதிமன்ற நடவடிக்கையிலிருந்து இந்த விஷயம் எழுந்திருக்கிறதோ அந்த நீதிமன்ற நடவடிக்கையில் எந்த முடிவுக்கு வரப்பட்டதோ, அந்த வந்தடைந்த முடிவுக்கு எதிராக மேல்முறையீடொன்று நடப்பிலிருக்கிறது என்பதாக, கொண்டுவரப்படுமிடத்து அவர், தாம் பொருத்தமென நினைத்தால், எந்தக் கட்டத்திலும் வழக்கின் கேள்வியை, அத்தகைய மேல்முறையீடு தீர்மானிக்கப்படும் வரை, தள்ளிவைக்கலாம்.

பொய்ச் சாட்சியம் தந்ததற்கான விசாரணையில் கருக்கு நடைமுறை.

344. (1) நீதி நடவடிக்கை எதையேனும் முடிவு செய்து தீர்ப்பு அல்லது முடிவான கட்டளை எதையேனும் விளம்பும் காலந்தில், அத்தகைய நடவடிக்கையில் ஆஜராகியிருந்த சாட்சி எவரேனும் தெரிந்தே அல்லது வேண்டுமென்றே பொய்ச் சாட்சியம் தந்துள்ளார், அல்லது பொய்ச் சாட்சியம் அத்தகைய நடவடிக்கையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்னும் உட் கருத்தோடு அத்தகைய பொய்ச் சாட்சியத்தைப் புனைந்துள்ளார் என்று செஷன்ஸ் நீதிமன்றமோ முதலாவது வகுப்பு நடுவரோ கருத்துத் தெரிவிப்பாராஞல், அது அல்லது அவர், நிலவரத்திற்கேற்ப, பொய்ச் சாட்சி

யத்தைத் தந்ததற்காக அல்லது புனைந்ததற்காக, அந்தச் சாட்சியைச் சுருக்கு முறையில் விசாரணை செய்ய வேண்டியது நீதியின் நலத்திற்காக அவசியமாகவும் உகந்ததாகவும் இருக்கிறதென்று திருப்தி கொண்டால், அக் குற்றத்தை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளலாம்; மற்றும் அத்தகைய குற்றத்திற்காக குற்றவாளி என் தண்டிக்கப்படக் கூடாது என்பதற்குக் காரணங் காட்டுவதற்கு நியாயமான ஒரு வாய்ப்பினை அவருக்குக் கொடுத்ததற்குப் பின்பு, அத்தகைய குற்றவாளியைச் சுருக்கு முறையில் விசாரணை செய்து, மூன்று மாதங்கள் வரை நீடிக்கலாகும் சிறைத் தண்டனையோ, ஐந்நூறு ரூபாய் வரையிலும் போகக்கூடிய அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்து அவருக்குத் தண்டனை வழங்கலாம்.

(2) அத்தகைய ஒவ்வொரு வழக்கிலும் நீதிமன்றம், எந்த அளவுக்குச் சாத்தியமாகுமோ அந்த அளவுக்கு, சுருக்கு விசாரணைகளுக்காக விதிக்கப்பட்ட நடைமுறையைப் பின் பற்றுதல் வேண்டும்.

(3) நீதிமன்றம் இந்தப் பிரிவின்படி மேல் நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்காதவிடத்து, அக் குற்றத்திற்காக 340 ஆவது பிரிவின்படி முறையீடொன்றைச் செய்து கொள்வதற்கு அதற்குள்ள அதிகாரத்தை இந்தப் பிரிவிலுள்ள எதுவும் பாதித்தல் ஆகாது.

(4) (1) ஆவது உட்பிரிவின்படி நடவடிக்கை ஏதேனும் தொடங்கப்பட்டதற்குப் பின்னர், எந்தத் தீர்ப்பு அல்லது கட்டளையில், அந்த உட்பிரிவில் குறிக்கப்பட்ட கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறதோ அந்தத் தீர்ப்பு அல்லது கட்டளைக் கெதிராக மேல் முறையீடொன்று அல்லது மேலாய்வுக்கான விண்ணப்பமொன்று செய்யப்பட்டிருக்கிறது அல்லது தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்பதாக செஷன்ஸ் நீதிமன்றத்திற்கோ முதல் வகுப்பு நீதிமன்றத்திற்கோ தெரியப்படுத்தப் படுமிடத்து, அது அல்லது அவர், நிலவரத்திற்கேற்ப அந்த மேல் முறையீடோ மேலாய்வுக்கான விண்ணப்பமோ தீர்க்கப் படும் வரையில் மேற்கொண்டு விசாரணையின் நடவடிக்கைகளை நிறுத்திவைத்தல் வேண்டும்: மற்றும் அதன் பேரில் மேற் கொண்டு அவ்விசாரணையின் நடவடிக்கைகள், அம் மேல்முறை யீடு அல்லது மேலாய்வுக்கான விண்ணப்பத்தின் முடிவுகளைப் பொறுத்ததாய் இருக்கும்.

345. (1) இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 175 ஆவது பிரிவு, 178 ஆவது பிரிவு, 179 ஆவது பிரிவு, 180 ஆவது பிரிவு அல்லது 228 ஆவது பிரிவில் விவரிக்கப்பட்டபடியான குற்றம் ஏதேனும், உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது வருவாய்த் துறை வழக்கு நீதிமன்றம் எதனின் பார்வையிலோ முன்னிலையிலோ செய்யப்படும்போது, அந்த நீதிமன்றம் அக்குற்றவாளியைக் காவலில் வைக்கும்படி செய்விக்கலாம்; மற்றும் அதே தாளன்று நீதிமன்றம் கலைவதற்கு முன் எந்த நேரத்திலும், அக் குற்றத்தை விசாரணைக் கெடுத்துக் கொள்ளலாம். மேலும் இந்தப் பிரிவின்படி குற்றவாளி என் தண்டிக்கப்படக்கூடாது என்பதற்கு அவர் காரணங் காட்டுவதற்கு நியாயமான ஒரு வாய்ப்பினைக் கொடுத்ததற்குப் பின்னர், இருநூறு ரூபாய்க்கு மேற்படாமல் அபராதமும் அபராதம் செலுத்தத் தவறுகையில், அத்தகைய அபராதம் முன்னரே செலுத்தப்பட்டாலன்றி, ஒரு மாதம் வரை நீடிக்கலாகும் காலத்திற்கு மெய்க் காவல் கிறை தண்டனையும் விதித்து, அக்குற்றவாளிக்குத் தண்டனை வழங்கலாம். 45/1860 அவமதிப்பு வழக்குகள் சிலவற்றில் நடைமுறை என்னவென்பது.

(2) அத்தகைய வழக்கு ஒவ்வொன்றிலும், குற்றமாக அமைகின்ற சங்கதிகளையும் குற்றவாளி வாக்குமூலம் (ஏதேனும்) கொடுத்திருந்தால், அதையும், மற்றும் முடிபு, தண்டனை ஆகியவற்றையும் சேர்த்து நீதிமன்றம் பதிவு செய்தல் வேண்டும்.

(3) குற்றமானது, இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 228 ஆவது பிரிவின்படியான ஒரு குற்றமாக இருக்குமானால், அந்தப் பதிவானது, எந்த நீதி நடவடிக்கையில் குறுக்கிடப்பட்ட அல்லது நிந்திக்கப்பட்ட நீதிமன்றம் அமர்ந்தியங்கியதோ, அந்த நீதி நடவடிக்கையின் தன்மையையும் கட்டத்தையும், குறுக்கீடு அல்லது நிபந்தனையின் தன்மையையும் காட்டுதல் வேண்டும். 45/1860.

346. (1) 345 ஆவது பிரிவில் குறிக்கப்பட்டதும், நீதிமன்றத்தின் பார்வையில் அல்லது முன்னிலையில் செய்யப்பட்டதுமான குற்றம் எதையேனும் செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்ட ஒருவருக்கு அபராதம் செலுத்தத் தவறியதற்கு உள்ளது அல்லாத கிறைத் தண்டனை அளிக்க வேண்டும் என்பதாகவோ, இருநூறு ரூபாய்க்கு மேற்பட்ட ஓர் அபராதத்தை அவருக்கு விதிக்க வேண்டும் என்பதாகவோ அந்த நீதிமன்றம் எந்த வழக்கிலேனும் எண்ணுமானால், அல்லது அந்த வழக்கு 345 ஆவது பிரிவின்படி தீர்க்கப்படக்கூடாது என்று வழக்கை 345 ஆவது பிரிவின்படி நடத்தக்கூடாது என்று நீதிமன்றம் எண்ணுமிடத்து நடைமுறை.

வேறெந்தக் காரணத்திற்காகவோ அந்த நீதிமன்றம் கருது மானால், அத்தகைய நீதிமன்றம், அக்குற்றம் எந்தச் சங்கதிகள் சேர்ந்தமைகிறதோ அந்தச் சங்கதிகளையும் எதிரியின் வாக்கு மூலத்தையும் இதற்குமுன் வகை செய்யப்பட்டவாறு பதிவு செய்ததற்குப் பின்பு, அதை விசாரிக்க அதிகாரங்கொண்டுள்ள ஒரு நடுவரிடம் அவ் வழக்கை அனுப்பிவைக்கலாம். மற்றும் அத்தகைய நடுவர் முன் அத்தகையவர் ஆஜராவதற்காக ஜாமீன் தரப்பட வேண்டுமென்று கோரலாம்; அல்லது போது மான ஜாமீன் தரப்படவில்லையானால் அத்தகையவரைக் காவலி லிட்டு அந்த நடுவரிடம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

(2) இந்தப் பிரிவின்படி வழக்கு ஏதேனும் அனுப்பி வைக்கப் பெற்றுள்ள நடுவர், அதை, கூடுமான அளவிற்கு, அது ஒரு காவலறிக்கையின்பேரில் தொடரப்பட்டதுபோன்றே, மேல் நடத்துதல் வேண்டும்.

16/1908. பதிவாளர் அல்லது துணைப் பதிவாளர் எப் போது உரிமை வழக்கு நீதி மன்றமாகக் கொள்ளப்பட வேண்டுமென் பது.

347. மாநில அரசு அவ்வாறு உத்தரவிடுமானால், 1908 ஆம் ஆண்டு இந்தியப் பதிவு செய்தல் சட்டத்தின்படி நியமிக்கப் பட்ட பதிவாளர் அல்லது துணைப் பதிவாளர் எவரும், 345 மற்றும் 346 ஆகிய பிரிவுகளின் பொருளின்படி ஓர் உரிமை வழக்கு நீதிமன்றமாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

மன்னிப்புக் கோரலின் பேரில் குற்ற வாளியை விடு வித்தல்.

348. எதைச் செய்யுமாறு குற்றவாளி சட்டபூர்வமாகக் கோரப்பட்டாரோ அதைச் செய்ய மறுத்ததற்காகவோ அல்லது செய்யாமல் விட்டதற்காகவோ கருதியே நிந்தித்தற் காக அல்லது குறுக்கிட்டதற்காகவோ எந்த நீதிமன்றமேனும் 345 ஆவது பிரிவின்படி அவருக்குத் தண்டனைத் தீர்ப்பு அளித்திருக்கும்போது, அல்லது 346 ஆவது பிரிவின்படி அவரை விசாரணைக்காக ஒரு நடுவரிடம் அனுப்பி வைத்திருக்கும்போது அந்த நீதிமன்றம், தன் யுக்தம்போல், அந்தக் குற்றவாளி அத்தகைய நீதிமன்றத்தின் கட்டளை அல்லது கோரிக்கைக்குப் பணிந்து நடப்பதன் பேரிலோ, அல்லது அது திருப்தி கொள்ளும் வகையில் மன்னிப்புக் கோருவதன் பேரிலோ அவரை விடுவிக்கலாம், அல்லது தண்டனையைக் குறைத்துவிடலாம்.

பதில் சொல்லவோ பதிவைத் தாக்கல் செய்யவோ மறுக்கின்றவரைச் சிறையிலடைத்தல் அல்லது மேல் விசாரணைக் கனுப்புதல்.

349. ஒரு குற்ற வழக்கு நீதிமன்றத்தின்முன் ஒரு பத்திரத் தையோ பொருளையோ தாக்கல் செய்யுமாறு கோரப்பட்ட சாட்சி அல்லது ஆள் எவரேனும் அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லவோ, நீதிமன்றம் தாக்கல் செய்யுமாறு அவரைக் கோருகின்ற, அவர் வசம் அல்லது அவரது அதிகாரத்திலுள்ள பத்திரம் அல்லது பொருள் எதை

யேனும் தாக்கல் செய்யவோ மறுப்பதோடு நியாயமான வாய்ப்பினை அளித்ததற்குப் பின்பும் அவ்வாறு மறுப்பதற்கு நியாயமான சமாதானம் எதையும் அவர் அளிக்கவில்லை யானால், அத்தகைய நீதிமன்றம், எழுத்து மூலம் பதிவு செய் யப்படவேண்டிய காரணங்களுக்காக, அவருக்கு மெய் காவல் தண்டனை வழங்கலாம்; அல்லது தலைமை வகிக்கின்ற நடுவர் அல்லது நீதிபதி தம் கையொப்பமிட்டு பிறப்பித்த ஒரு கட்டளையின் மூலம், ஏழு நாட்களுக்கு மேற்படாமல் எந்தக் கால அளவிற்கேனும், அதற்கிடையே, அத்தகையவர் விசாரிக்கப்படவும் பதில் சொல்லவும், அல்லது பத்திரம் அல்லது பொருளைத் தாக்கல் செய்யவும் இசைந்தாலன்றி, நீதிமன்ற அலுவலர் ஒருவரின் பாதுகாவலில் இருக்க அத் தகையவரை அனுப்பிவைக்கலாம்; மற்றும் அவர் பிடிவாத மாகத் தொடர்ந்து மறுத்துவரும் சந்தர்ப்பத்தில், அவர்மீது 345 ஆவது பிரிவு அல்லது 346 ஆவது பிரிவின் வகைமுறை களுக்கினங்க மேல் நடவடிக்கை எடுக்கலாம்.

ஆஜர் கட்டளைக் குக் கீழ்ப் படிந்து சாட்சி ஒருவர் ஆஜ ராகாமைக் காகத் தண்டிப் பதற்கான நடைமுறை.

350. (1) ஒரு குற்ற வழக்கு நீதிமன்றத்தின்முன் ஆஜராகு மாறு ஆஜர் கட்டளை அனுப்பப்பட்டுள்ள சாட்சி எவரேனும், ஆஜர் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து குறிப்பிட்ட ஓர் இடத் திலும் நேரத்திலும் ஆஜராவதற்குச் சட்டப்படி கட்டுப்பட்ட வராயிருந்து, நியாயமான சமாதானமின்றி அந்த இடத்தில் அல்லது நேரத்தில் ஆஜராகாமல் புறக்கணிப்பாரானால் அல்லது ஆஜராக மறுப்பாரானால் அல்லது ஆஜராக வேண்டிய இடத்திலிருந்து எந்த நேரத்தில் அவர் அங்கிருந்து புறப் பட்டுச் செல்வது சட்டபூர்வமானதோ அந்த நேரத்திற்கு முன்பே, புறப்பட்டுச் செல்வாரானால், மற்றும் எந்த நீதி மன்றத்தின் முன் அந்தச் சாட்சி ஆஜராக வேண்டுமோ அந்த நீதிமன்றத்திற்கு, அத்தகைய சாட்சியைச் சுருக்க முறையில் விசாரணை செய்ய வேண்டியது நீதியின் நலத்திற்கு உகந்தது என்று திருப்திகரமாகத் தோன்றுமானால், அந்த நீதிமன்றம் அக்குற்றத்தை விசாரணைக்கெடுத்துக் கொள்ளலாம். மற்றும் இந்தப் பிரிவின்படி குற்றவாளி என் தண்டிக்கப்படக்கூடாது என்பதற்குக் காரணங் காட்டுமாறு அவருக்கு வாய்ப் பொன்றை அளித்ததற்குப் பின்பு, நூறு ரூபாய்க்கு மேற் படாத அபராதத்தை அவருக்குத் தண்டனையாக வழங்கலாம்.

(2) அத்தகைய வழக்கு ஒவ்வொன்றிலும், நீதிமன்றம் எந்த அளவுக்குச் சாத்தியமாகுமோ அந்த அளவுக்கு, சுருக்கு விசாரணைகளுக்காக விதிக்கப்பட்ட நடைமுறையைப் பின் பற்றுதல் வேண்டும்.

344, 345, 349 அல்லது 350-ஆகிய பிரிவுகளின்படி அளிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புகளிலிருந்து மேல் முறையீடுகள்.

351. (1) 344 ஆவது பிரிவு, 345 ஆவது பிரிவு, 349 ஆவது பிரிவு அல்லது 350 ஆவது பிரிவின்படி உயர் நீதிமன்றம் அல்லாத வேறெந்த நீதிமன்றத்தாலேனும் தண்டனையளிக்கப்பட்ட எவரும், இந்தச் சட்டத்தில் என்ன கண்டிருந்தபோதிலும், அத்தகைய நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பினைகள் அல்லது கட்டளைகள் எந்த நீதிமன்றத்திற்குச் சாதாரணமாக மேல்முறையீடு செய்துகொள்ளத்தக்கனவோ அந்த நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்யலாம்.

(2) XXIX ஆவது அத்தியாயத்தின் வகை முறைகள், எந்த அளவுக்கு இயங்கத்தக்கனவோ அந்த அளவுக்கு இந்தப் பிரிவின்படியான மேல்முறையீடுகள் மீது இயங்குதல் வேண்டும், மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றம் மேல் முறையீடு செய்யப்பட்டுள்ள முடிவை மாற்றவோ எதிர் மாறுக்கவோ செய்யலாம்; அல்லது மேல்முறையீடு செய்யப் பட்டுள்ள தண்டனையை குறைக்கவோ எதிர்மாறுக்கவோ செய்யலாம்.

(3) சிறு வழக்கு நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பிலிருந்து செய்யப்படும் ஒரு மேல்முறையீடு, எந்த செஷன்ஸ் பிரிவுக்குள் அத்தகைய நீதிமன்றம் அமைந்துள்ளதோ அந்த செஷன்ஸ் பிரிவுக்கான செஷன்ஸ் நீதிமன்றத்திற்குச் செய்துகொள்ளப்படுதல் வேண்டும்.

(4) 347 ஆவது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஒரு உத்தரவின் காரணமாக, ஓர் உரிமை வழக்கு நீதிமன்றமாகக் கருதப்படும் பதிவாளர் அல்லது துணைப்பதிவாளர் எவரா லேனும் அளிக்கப்பட்ட அத்தகைய தண்டனைத் தீர்ப்பிலிருந்து செய்யப்படும் ஒரு மேல்முறையீடு, எந்த செஷன்ஸ் பிரிவுக்குள் அத்தகைய பதிவாளர் அல்லது துணைப்பதிவாளரின் அலுவலகம் அமைந்துள்ளதோ அந்த செஷன்ஸ் பிரிவுக்கான செஷன்ஸ் நீதிமன்றத்திற்குச் செய்துகொள்ளப்படுதல் வேண்டும்.

சில நீதிபதிகளும், நடுவர்களும் சில குற்றங்கள் தங்கள் முன் செய்யப்படும்போது அவற்றை விசாரணை செய்தல் கூடாது.

352. 344, 345, 349 மற்றும் 350 ஆகிய பிரிவுகளில் வகை செய்யப்பட்டிருந்தாலன்றி (உயர்நீதிமன்ற நீதிபதியல்லாத வேறொரு) குற்ற வழக்கு நீதிமன்றத்தின் நீதிபதியோ, நடுவரோ, 195 ஆவது பிரிவில் குறிக்கப்பட்ட குற்றம் எதற்காகவும், அத்தகைய குற்றம் ஒரு நீதி நடவடிக்கை நடைபெறும்போது அத்தகைய நீதிபதி அல்லது நடுவராக இருந்த நிலையில் தம் முன் அல்லது தம் அதிகாரத்தை அவமதிக்கும் வகையில் செய்யப்படும்போது அல்லது தம் கவனத்திற்குக் கொண்டு வரப்படும்போது, அக் குற்றத்தைச் செய்தவரை விசாரணை செய்தல் ஆகாது.

அத்தியாயம் XXVII.

தீர்ப்பு.

தீர்ப்பு.

353. (1) அசல் அதிகாரம்பு கொண்ட குற்ற வழக்கு நீதிமன்றம் எதிலேனும் நடக்கும் விசாரணை ஒவ்வொன்றிலும், தீர்ப்பானது, அந்த விசாரணை முடிவடைந்ததை அடுத்துப் பிற்தியோ, இது குறித்து தரப்பினர்களுக்கு அல்லது அவர்களது வாதுரைஞர்களுக்கு அறிவிப்பு கொடுத்திருந்தால், பிற்திய ஒரு நேரத்திலோ, தலைமை வகிக்கின்ற அலுவலால் பின்வரும் வழிகளில் ஏதேனுமொன்றால் திறந்த மன்றத்தில் பகரப்படுதல் வேண்டும்:—

(அ) தீர்ப்பு முழுவதையும் இயம்புவதன் மூலமாக; அல்லது

(ஆ) தீர்ப்பு முழுவதையும் படித்துக் காட்டுவதன் மூலமாக; அல்லது

(இ) தீர்ப்பின் செயற்படு பகுதியைப் படித்துக் காட்டுவதன் மூலமாகவும், எதிரியால் அல்லது அவரது வாதுரைஞரால் புரிந்துகொள்ளப்படும் ஒரு மொழியில் அத் தீர்ப்பின் சாரத்தை விளக்குவதன் மூலமாகவும்,

(2) (1) ஆவது உட்பிரிவின் (அ) கூறின்படி தீர்ப்பு வழங்கப்படுமிடத்து, தலைமை வகிக்கின்ற அலுவலர் அதைச் சுருக்கெழுத்தில் எழுதிக்கொள்ளும்படிச் செய்வித்து அதை விரிவுபடுத்தி எழுதிய தீர்ப்புக்கும் அதன் ஒவ்வொரு பக்கத்திற்கும் அது தயாரானவுடன் கையொப்பமிட்டு, நீதிமன்றத்தில் பகிரங்கமாகத் தீர்ப்பு வழங்கப்பட்ட தேதியை அதன்மீது எழுதுதல் வேண்டும்.

(3) தீர்ப்போ அதன் செயற்படு பகுதியோ நிலவரத்திற்கேற்ப (1) ஆவது உட்பிரிவின் (ஆ) கூறு அல்லது (இ) கூறின்படி படித்துக் காட்டப்படுமிடத்து, அது நீதிமன்றத்தில் பகிரங்கமாகத் தலைமை வகிக்கின்ற அலுவலால் தேதியிடப்பட்டுக் கையொப்பமிடப்பட வேண்டும்; மற்றும் அது அவர் கைப்பட எழுதப்படவில்லையானால், தீர்ப்பின் ஒவ்வொரு பக்கத்திலும் அவர் கையொப்பமிடுதல் வேண்டும்.

(4) தீர்ப்பானது (1) ஆவது உட்பிரிவின் (இ) கூறில் குறிப்பிடப்பட்ட முறையில் பகரப்படுமிடத்து, அத் தீர்ப்பு முழுவதும் அல்லது அதன் நகலொன்று, தரப்பினர்கள் அல்லது அவர்களின் வாதுரைஞர்களின் பார்வைக்காகக் கட்டணமின்றி உடனடியாகக் கிடைக்கும்படி செய்யப்படுதல் வேண்டும்.

(5) எதிரி காவலில் இருப்பாராஞல், அவர் பகரப்படும் தீர்ப்பைக் கேட்பதற்காக கொண்டுவரப்படுதல் வேண்டும்;

(6) எதிரி காவலில் இல்லையாயின், விசாரணையின்போது அவர் நேர்முகமாக ஆஜராவது தவிர்க்கப்பட்டிருந்து, தண்டனையானது அபராதம் மட்டுமாகவோ அல்லது அவர் விடுதலை செய்யப்படுவதாகவோ இருந்தாலொழிய பகரப்படும் தீர்ப்பைக் கேட்பதற்கு அவர் ஆஜராகுமாறு நீதிமன்றத்தால் கோரப்படுதல் வேண்டும்;

ஆனல், ஒருவருக்கு மேற்பட்ட எதிரிகள் இருந்து, அவர்களில் ஒருவரோ மேற்பட்டவரோ, தீர்ப்பு பகரப்படவுள்ள தேதியன்று நீதிமன்றத்திற்கு ஆஜராகாதவிடத்து, தலைமை வகிக்கின்ற அலுவலர், வழக்கை முடிவு செய்வதில் அளவு மீறிய தாமதத்தைத் தவிர்ப்பதற்காக, அவர்கள் ஆஜராகவில்லையென்றாலும், தீர்ப்பினைப் பகரலாம்.

(7) குற்ற வழக்கு நீதிமன்றம் எதொன்றிலுலும் வழங்கப்பட்ட தீர்ப்பு எதுவும், அது வழங்கப்படுவதற்கென அறிவிக்கப்பட்ட நாளன்று அல்லது அந்த இடத்தில் தரப்பினர் எவரேனும் அல்லது அவரது வாதுரைஞர் வரவில்லை என்னும் காரணத்தால் மட்டுமே, அல்லது அத்தகைய நாளையும், இடத்தையும் பற்றிய அறிவிப்பைத் தரப்பினர்களுக்கு அல்லது அவர்களின் வாதுரைஞர்களுக்கு அல்லது அவர்களில் எவருக்கேனும் சார்வு செய்யாமல் விடுதல், அல்லது சார்வு செய்வதில் உள்ள குறைபாடு ஆகிய காரணத்தால் மட்டுமே, செல்லாததாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

(8) இந்தப் பிரிவிலுள்ள எதுவும், 465 ஆவது பிரிவின் வகைமுறைகளின் வீச்சை எந்த வகையிலேனும் கட்டுப்படுத்துவதாகப் பொருள்கொள்ளுதல் ஆகாது.

தீர்ப்பின் மொழியும் உள்ளடக்கமும்.

354. (1) இந்தச் சட்டத்தால் வேறுவிதமாக வெளிப்படையாக வகை செய்யப்பட்டவாறல்லாது, 353 ஆவது பிரிவில் குறிக்கப்பட்ட தீர்ப்பு ஒவ்வொன்றும்.—

(அ) நீதிமன்ற மொழியில் எழுதப்படுதல் வேண்டும்;

(ஆ) தீர்ப்புக்குரிய பிரச்சினை அல்லது பிரச்சினைகளும் அவற்றின் மீதான தீர்மானமும் அத் தீர்மானத்திற்கான காரணங்களும் அடங்கியிருத்தல் வேண்டும்;

(இ) எந்தக் குற்றத்தைச் செய்ததாக எதிரி தண்டிக்கப்பட்டுள்ளாரோ அக் குற்றம் (எதுவாயிருப்பின்) அதையும், இந்தியத் தண்டனைச் சட்டத்தின் எந்தப் பிரிவின்படி அல்லது 45/1860.
வேறு எந்தச் சட்டத்தின்படி அவ்வாறு எதிரி தண்டிக்கப்படுகிறாரோ அந்தப் பிரிவை அல்லது சட்டத்தையும் எந்தத் தண்டனை அவருக்குத் தீர்ப்புத் தண்டனையாக அளிக்கப்பட்டுள்ளதோ அந்தத் தண்டனையையும் குறிப்பிடுதல் வேண்டும்;

(ஈ) அது விடுதலைத் தீர்ப்பாக இருக்குமானால், எந்தக் குற்றத்திலிருந்து அவர் விடுதலை செய்யப்பட்டார் என்பதை உரைத்தல் வேண்டும்; மற்றும் அவர் விடுதலை செய்யப்படுதல் வேண்டுமென்றும் உத்தரவிடுதல் வேண்டும்.

(2) தண்டனைத் தீர்ப்பானது இந்தியத் தண்டனைச் சட் 45/1860.
டத்தின்படியானதாக இருந்து, அந்தச் சட்டத்தின் எந்த இரண்டு பிரிவுகளில் எதை அல்லது ஒரே பிரிவின் இரண்டு பகுதிகளில் எதை அக் குற்றம் சேர்ந்தது என்பது சந்தேகத்திற்குரியதாக இருக்கும்போது, நீதிமன்றம் அந்தச் சந்தேகத்தைத் தெளிவாக வெளியிட்டு மாற்றாக இரண்டு குற்றங்களில் எதற்காகிலுமென்று தீர்ப்பு பிறப்பித்தல் வேண்டும்.

(3) தண்டனைத் தீர்ப்பானது, மரண தண்டனையோ, மாற்று வழியாக ஆயுட்காலச் சிறைதண்டனையோ குறிப்பிட்ட ஆண்டுகளுக்குச் சிறைத் தண்டனையோ விதிப்பதற்குரிய ஒரு குற்றத்திற்காக இருக்கும்போது, தீர்ப்பானது அளிக்கப்பட்ட தண்டனைக்கான காரணங்களையும், மரண தண்டனையாக இருப்பின் அத்தகைய தண்டனைக்கான சிறப்புக் காரணங்களையும் உரைத்தல் வேண்டும்.

(4) தண்டனைத் தீர்ப்பானது ஓராண்டு அல்லது மேற்பட்ட காலத்திற்குச் சிறைத் தண்டனை விதிப்பதற்குரிய ஒரு குற்றத்திற்காக இருந்து அஃதல் மூன்று மாதங்களுக்குக் குறைவான காலத்திற்குச் சிறைதண்டனையை நீதிமன்றம் விதிக்கும்போது அத் தண்டனை நீதிமன்றம் கலைந்தெழும் வரையுள்ள சிறை தண்டனையாக இருந்தாலன்றி அல்லது அவ்வழக்கானது இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி சுருக்கு முறையில் விசாரிக்கப்பட்டிருந்தாலன்றி, அது, அத்தகைய தண்டனையைத் தான் அளிப்பதற்கான காரணங்களை, பதிவு செய்தல் வேண்டும்.

(5) எவருக்கேனும் மரண தண்டனை அளிக்கப்படும் போது, அவர் சாகும் வரையில் கழுத்திலிடப் படுதல் வேண்டும் என்பதாக அத் தீர்ப்புத் தண்டனை உத்தரவிட வேண்டும்.

(6) 117 ஆவது பிரிவு அல்லது 138 ஆவது பிரிவின் (2) ஆவது உட்பிரிவின்படி பிறப்பிக்கப்படும் கட்டளை ஒவ்வொன்றிலும் 125 ஆவது பிரிவு 145 ஆவது பிரிவு, அல்லது 147 ஆவது பிரிவின்படி பிறப்பிக்கப்படும் முடிபான கட்டளை ஒவ்வொன்றிலும், தீர்ப்புக்குரிய பிரச்சினை அல்லது பிரச்சினைகளும் அவற்றின் மீதான தீர்மானமும் அத் தீர்மானத்திற்கான காரணங்களும் அடங்கியிருத்தல் வேண்டும்.

பெருநகர் நடுவரின் தீர்ப்பு.

355. இதற்குமுன் வகை செய்யப்பட்ட முறையில் தீர்ப்பொன்றைப் பதிவு செய்வதற்குப் பதிலாக, பெருநகர் நடுவர் ஒருவர் பின்வரும் விவரங்களைப் பதிவு செய்தல் வேண்டும்; அவையாவன:—

(அ) வழக்கின் வரிசை எண்;

(ஆ) குற்றம் செய்யப்பட்ட தேதி;

(இ) முறையிடுபவர் (எவரேனுமிருப்பின்) அவரது பெயர்;

(ஈ) எதிரியின் பெயரும், பெற்றோர் விவரமும் எதிரியின் குடியிருப்பிடமும்;

(உ) முறையீடு செய்யப்பட்ட அல்லது நிரூபிக்கப்பட்ட குற்றம்;

(ஊ) எதிரியின் வாதுரையும் அவரது விசாரணையும் (எதேனுமிருப்பின்);

(எ) முடிபான கட்டளை;

(ஏ) அத்தகைய கட்டளை பிறப்பிக்கப்பட்ட தேதி;

(ஐ) முடிபான கட்டளையிலிருந்து 373 ஆவது பிரிவின்படியோ 374 ஆவது பிரிவின் (3) ஆவது உட்பிரிவின்படியோ மேல் முறையீடு செய்துகொள்ளவேண்டிய வழக்குகள் அனைத்திலும், அத் தீர்மானத்திற்கான காரணங்கள் கொண்ட சுருக்கமான ஓர் உரை.

முன்னமேயே தண்டிக்கப்பட்ட குற்றவாளியை முகவரியை அறிவிப்பதற்கான கட்டளை.

356. (1) இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 215 ஆவது பிரிவு, 489 கா பிரிவு, 489 ஙா பிரிவு, 489 சா பிரிவு அல்லது 489 ஞா பிரிவின்படி தண்டிப்பதற்குரிய குற்றமொன்றையோ, அந்தச் சட்டத்தில் XI ஆவது அத்தியாயம் அல்லது VXII ஆவது அத்தியாயத்தின்படி தண்டிப்பதற்குரிய குற்றமொன்றையோ செய்ததாக மூன்றாண்டுகள் அல்லது மேற்பட்ட காலத்திற்குச் சிறைத் தண்டனை விதித்து, இந்தியாவிலுள்ள ஒரு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டிருக்கின்ற எவரேனும், இரண்டாவது வகுப்பு நடுவரது நீதிமன்றம் அல்லாத வேறு எந்த நீதிமன்றத்தாலேனும் மூன்றாண்டுகள் அல்லது மேற்பட்ட காலத்திற்குச் சிறைத் தண்டனைக்குரிய மேற்சொன்ன பிரிவுகள் அல்லது அத்தியாயங்களில் ஏதேனுமொன்றின்படி தண்டிப்பதற்குரிய குற்றம் எதையேனும் செய்ததாக மீண்டும் தண்டிக்கப்படும்போது, அத்தகைய நீதிமன்றம், தான் பொருத்தமென நினைக்குமானால், அத்தகையவருக்கு சிறைத் தண்டனையைப் பிறப்பிக்கின்ற காலத்தில், அத்தகைய தண்டனை முடிவடையும் தேதியிலிருந்து ஐந்தாண்டுகளுக்கு மேற்படாத காலத்திற்கு விடுவிப்புக்குப் பின்பு அவரது குடியிருப்பிடமும் அதில் மாறுதல் இருந்தால் எதுவும் அல்லது அக் குடியிருப்பிடத்தில் அவர் இல்லாமலிருந்தால் அதுவும் இதற்குப்பின் வகை செய்யப்பட்டவாறு அறிவிக்கப்பட வேண்டும் என்பதாகக் கட்டளையிடுதலும் வேண்டும்.

(2). (1) ஆவது உட்பிரிவில் சொல்லப்பட்ட குற்றங்களைக் குறித்து அந்தப் பிரிவின் வகை முறைகள், அத்தகைய குற்றங்களைச் செய்வதற்கான சதிக் குற்றங்கள்மீதும் அக் குற்றங்களுக்கு உடந்தையாக இருக்கும் குற்றங்கள் மீதும் அவற்றைச் செய்வதற்கான முயற்சி குற்றங்கள் மீதும் கூட இயங்கும்.

(3) அத்தகைய தண்டனைத் தீர்ப்பு மேல்முறையீட்டின் பேரிலோ வேறுவிதமாகவோ நீக்கப்படுமானால் அத்தகைய கட்டளை விழலாகிவிடும்.

(4) இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்படும் ஒரு கட்டளையை, மேல்முறையீட்டு நீதிமன்றமோ உயர்நீதி மன்றமோ செஷன்ஸ் நீதிமன்றமோ தன் மேலாய்வு அதிகாரங்களைச் செலுத்திவருகின்றபோது பிறப்பிக்கலாம்.

(5) விடுவிக்கப்பட்ட குற்றவாளிகளின் குடியிருப்பிடம் அல்லது அதில் ஏற்படும் மாறுதல், அல்லது அக் குடியிருப்பிடத்தில் அவர்கள் இல்லாமை பற்றி அறிவித்தல் சம்பந்தமாக இந்தப் பிரிவின் வகைமுறைகளை நிறைவேற்றுவதற்காக, அறிவிக்கை மூலமாக, மாநில அரசு விதிகளைச் செய்யலாம்.

(6) அத்தகைய விதிகள் அவைகளின் மீறுகைக்கான தண்டனைக்காக வகை செய்யலாம்; மற்றும் அத்தகைய விதி எதையேனும் மீறியதாக குற்றஞ்சாட்டப்பட்ட எவரையும் அவரது குடியிருப்பிடமாக நடுவரால் கடைசியாக அறிவிக்கப்பட்ட ஊர் அமைந்துள்ள மாவட்டத்தில் தகுதி வாய்ந்த அதிகாரங்கொண்டுள்ள நடுவர் ஒருவரால் விசாரணை செய்யலாம்.

நஷ்டஈடு செலுத்துவதற்கான கட்டளை.

357. (1) ஒரு நீதிமன்றம் அபராதத் தண்டனையை அல்லது அபராதம் ஒரு பகுதியாக அமைகின்ற (மரண தண்டனை உள்ளடங்கலான) ஒரு தண்டனையை விதிக்கும் போது, அந்த நீதிமன்றம் அத் தீர்ப்பைப் பிறப்பிக்கும்போது, வசூலிக்கப்பட்ட அபராதம் முழுவதுமோ அதன் பகுதி எதுவுமோ பின்வருவனவற்றிற்குப் பயன்படுத்தப்படவேண்டுமென்று கட்டளையிடலாம்:—

(அ) குற்ற வழக்கு நடத்துவதில் முறையாக செய்யப்பட்ட செலவுகளைக் கொடுப்பதற்கு;

(ஆ) அக் குற்றத்தால் விளைந்த நஷ்டம் அல்லது கேட்டிற்கான நஷ்ட ஈட்டை எவருக்கேனும் செலுத்துவதற்கு, நஷ்ட ஈடானது, நீதிமன்றத்தின் கருத்தின்படி, அத்தகையவரால் ஓர் உரிமையியல் நீதிமன்றத்தில் வசூலிக்கத்தக்கதாக இருக்கும்போது;

(இ) மற்றொருவருக்கு மரணத்தை விளைத்திருக்கின்ற குற்றமெதையேனும் செய்ததாக அல்லது அத்தகைய ஒரு குற்றத்தைச் செய்வதற்கு உடந்தையாக இருந்ததாக எவரேனும் தண்டிக்கப்படும்போது, அத்தகைய மரணத்திலால் ஏற்பட்ட நஷ்டத்திற்காக, தண்டனையளிக்கப்பட்டவரிடமிருந்து இழப்பீட்டை வசூலிப்பதற்கு 1855 ஆம் ஆண்டு மரண விபத்துக்கள் சட்டத்தின்படி உரிமையுடையவர்களுக்கு நஷ்ட ஈடு செலுத்துவதற்கு; 13/1855.

(ஈ) திருட்டு, கையாடல் குற்றம், நம்பிக்கை மோசடிக் குற்றம் அல்லது ஏமாற்றுதல் உள்ளடங்கிய குற்றம் எதற் கேனுமோ இழைத்ததாக அல்லது திருட்டுப் பொருளை அது திருடப்பட்டது என்று தெரிந்தே, அல்லது அவ்வாறு நம்பு வதற்குக் காரணம் இருந்தே, நேர்மையற்ற வகையில் அதைப் பெற்றுக்கொண்டுள்ள அல்லது தொடர்ந்து வைத்துக்கொண் டுள்ள அல்லது அதைப் பராதீனம் செய்வதில் சுயேச்சை யாகவே உதவி செய்துள்ள குற்றம் எதற்கேனுமோ எவரேனும் தண்டிக்கப்படும்போது, அத்தகைய பொருள் அதற்கு உரிமையுடையவரின் அனுபோகத்திற்கு மீட்டுத் தரப்படுமானால், அத்தகைய பொருளை நல்லெண்ணத்துடன் வாங்கியவருக்கு அதனால் ஏற்படும் நஷ்டத்திற்காக நஷ்ட ஈடு வழங்குவதற்கு.

(2) ஒரு வழக்கில் அபராதம் விதிக்கப்பட்டிருந்து அந்த வழக்கு மேல்முறையீட்டிற்கு உட்பட்டிருக்குமாயின் மேல் முறையீட்டைத் தாக்கல் செய்வதற்கான கால அளவு கடந்து விட்டிருப்பதற்கு முன்பு, அல்லது மேல் முறையீடொன்று தாக்கல் செய்யப்படுமானால் அம் மேல்முறையீடு தீர்மானிக்கப் படுவதற்கு முன்பு அத்தகைய நஷ்ட ஈடு எதுவும் செலுத்தப் படுதல் ஆகாது.

(3) ஒரு நீதிமன்றம், அபராதம் ஒரு பகுதியாக அமை யாத தண்டனையொன்றை விதிக்கும்போது, அந்த நீதிமன்றம், தீர்ப்பினைப் பிறப்பிக்கும்போது எதிரிக்கு எந்தச் செய்கைக் காக அவ்வாறு தண்டனையளிக்கப்பட்டுள்ளதோ அந்தச் செய்கையின் காரணத்தால், நஷ்டம் அல்லது கேடு எதை யேனும் அனுபவித்திருக்கின்ற ஒருவருக்கு நஷ்ட ஈடு என்னும் வகையில் அக் கட்டளையில் குறிப்பிடலாகும் தொகையைச் செலுத்துமாறு எதிரிக்குக் கட்டளையிடலாம்.

(4) இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்படும் கட்டளை யொன்றை மேல்முறையீட்டு நீதிமன்றமோ உயர் நீதிமன்றமோ செஷன்ஸ் நீதிமன்றமோகூட தன் மேலாய்வு அதிகாரங்களைச் செலுத்தும்போது, பிறப்பிக்கலாம்.

(5) அதே விஷயம் சம்பந்தமான பிந்திய உரிமை வழக்கு எதிலேனும் நஷ்ட ஈடு அளிக்கின்ற காலத்தில், நீதி மன்றம் இந்தப் பிரிவின்படி நஷ்ட ஈடாக செலுத்தப்பட்ட அல்லது வசூலிக்கப்பட்ட தொகை எதையும் கணக்கி லெடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

ஆதாரமின்றிக் கைது செய்யப் பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு.

358. (1) எவரேனும் மற்றொருவரைக் காவல் அலுவலர் மூலம் கைது செய்விக்கும்போதெல்லாம் அவ்வாறு கைது செய்யவைப்பதற்குப் போதுமான ஆதாரம் எதுவுமில்லை என்பதாக அவ் வழக்கைக் கேட்கின்ற நடுவருக்குத் தோன்றுமானால், அந்த நடுவர், அவ்வாறு கைது செய்யப்பட்டவருக்கு, அந்த விஷயத்தில், ஏற்பட்ட கால விரயத்திற்காகவும் செலவுகளுக்காகவும் நூறு ரூபாய்க்கு மேற்படாது நடுவர் தாம் பொருத்தமென நினைக்கும் நஷ்ட ஈட்டை அவ்வாறு கைது செய்யும்படி செய்தவர் செலுத்தும்படி தீர்ப்பளிக்கலாம்.

(2) அத்தகைய வழக்குகளில் ஒருவருக்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்படுவாரானால், நூறு ரூபாய்க்கு மேற்படாது நடுவர் தாம் தக்கதெனக் கருதும் நஷ்ட ஈட்டை அதேமுறையில் அவர்களில் ஒவ்வொருவருக்கும் வழங்கலாம்.

(3) இந்தப் பிரிவின்படி அளிக்கப்பட்ட நஷ்ட ஈடு அனைத்தும், அது அபராதமாயிருந்தது போன்றே வசூலிக்கப்படலாம்; மற்றும் அதை அவ்வாறு வசூலிக்க முடியவில்லையானால், அது எவரால் செலுத்தப்படத் தக்கதோ அவருக்கு அத்தகைய தொகை முன்னரே செலுத்தப்பட்டாலன்றி, முப்பது நாட்களுக்கு மேற்படாது நடுவர் உத்தரவிடும் காலத்திற்கு மெய்க்காவல் தண்டனை விதிக்கப்படுதல் வேண்டும்.

கைது செய்தற்குரியதல்லாத வழக்குகளில் செலவுத் தொகைகளைச் செலுத்துவதற்குக் கட்டளையிடல்.

359. (1) கைது செய்தற்குரியதல்லாத குற்றம் ஒன்றைப் பற்றிய முறையீடு ஏதேனும் ஒரு நீதிமன்றத்திற்குச் செய்துகொள்ளப்படும்போதெல்லாம், அந்த நீதிமன்றம், தான் எதிரியைத் தண்டிக்குமானால், அவர் மீது விதிக்கப்படும் தண்டத்தோடுகூட குற்ற வழக்குத் தொடர்வதில் முறையிடுபவருக்கு ஏற்பட்ட செலவுத் தொகையை முழுவதுமாகவோ பகுதியாகவோ செலுத்தும்படி அவருக்குக் கட்டளையிடலாம், மற்றும் செலுத்தத் தவறுகையில், எதிரி மூப்பது நாட்களுக்கு மேற்படாத காலத்திற்கு மெய்க்காவல் சிறைத் தண்டனை அனுபவித்தல் வேண்டும் என்றும், நீதிமன்றம் நியாயமென எண்ணும் சார்வுக் கட்டணங்களையும் சாட்சிகள் மற்றும் வாதுரைஞர்களின் ஊதியங்களையும் பொறுத்து ஏற்பட்ட செலவுகள் எவையும் அத்தகைய செலவுத் தொகையில் உள்ளடங்கியிருக்கலாம் என்றும் அது மேலும் கட்டளையிடலாம்.

(2) இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்படும் கட்டளை யொன்றை மேல்முறையீட்டு நீதிமன்றமோ, உயர் நீதி மன்றமோ செஷன்ஸ் நீதிமன்றமோகூட தன் மேலாய்வு அதிகாரங்களை செலுத்தும்போது பிறப்பிக்கலாம்.

நன்னடத்தைக் கண்காணிப்பின் பேரிலோ விடுதலைப்புக் குக்கட்டளை யிடுதல்.

360. (1) இருபத்தொரு வயதிற்குக் கீழ்ப்படாத ஒரு ரேனும் அபராதம் மட்டுமோ அல்லது ஏழாண்டுகள் அல்லது அதற்குக் குறைவான காலத்திற்கான சிறைத் தண்டனையோ விதித்துத் தண்டிப்பதற்குரிய குற்றமொன்றைச் செய்ததாகத் தண்டிக்கப்பட்டு, அல்லது இருபத்தொரு வயதிற் குட்பட்ட எவரேனும் அல்லது பெண் எவரேனும் மரண தண்டனை அல்லது ஆயுட்கால சிறைத்தண்டனை விதிப்பதற் குரிய குற்றமொன்றைச் செய்ததாகத் தண்டிக்கப்பட்டு, முந்திய தண்டனைத் தீர்ப்பு குற்றவாளிக்கெதிராக நிறுவிக்கப்படாதபோது, குற்றவாளியின் வயது, இயல்பு அல்லது முன்வரலாற்றையும் அக் குற்றம் செய்யப்பட்ட சூழ் நிலைகளையும் கவனத்திற்கொண்டு பார்க்கும்போது எந்த நீதி மன்றத்தின்முன் அவர் தண்டிக்கப்படுகிறாரோ அந்த நீதி மன்றத்திற்கு, நன்னடத்தைக் கண்காணிப்பின் பேரில் அக் குற்றவாளி விடுவிக்கப்படவேண்டும் என்பது உகந்ததெனத் தோன்றுமானால், அந்த நீதிமன்றம், உடனடியாகத் தண்டனை ஏதேனும் விதித்து அவரைத் தண்டிப்பதற்குப் பதிலாக, நீதி மன்றம் உத்தரவிடுகிறவாறு (மூன்றாண்டுகளுக்கு மேற் படாத) கால அளவின்போது கூப்பிட்டால் வந்து தண்டனையைப் பெற்றுக்கொள்வதாகவும் அதற்கிடையில் அமைதி பேணுவதுடன் நன்னடத்தையுடன் இருந்து வருவ தாகவும் ஜாமீன்தார்களுடனோ இல்லாமலோ பத்திர மொன்றை எழுதிக் கொடுப்பதன்பேரில் அவர் விடுவிக்கப்பட வேண்டும் என்று உத்தரவிடலாம்:

ஆனால், உயர் நீதிமன்றத்தால் சிறப்பாக அதிகார மளிக்கப்படாத இரண்டாவது வகுப்பு நடுவரால் முதன் முறைக் குற்றவாளி எவரேனும் தண்டிக்கப்பட்டு, அந்த நடுவர் இந்தப் பிரிவினில் வழங்கப்படும் அதிகாரங்கள் செலுத்தப்பட வேண்டும் என்பதாகக் கருதுமிடத்து, அவர் அந்தப்பாடிக்கு, தம் கருத்தைப் பதிவு செய்து, முதலாவது வகுப்பு நடுவரிடம் எதிரியை அனுப்பியோ அல்லது அவர்முன் எதிரி ஆஜராவதற்காக ஜாமீன் வாங்கிக் கொண்டோ அத்தகைய நடுவரிடம் அந்த நடவடிக்கைகளைப் பணிந்தனுப்புதல் வேண்டும்; அந்த நடுவர் (2) ஆவது

உட்பிரிவினால் வகை செய்யப்பட்ட முறையில் அவ் வழக்கை முடிவு செய்தல் வேண்டும்.

(2) நடவடிக்கைகள் (1) ஆவது உட்பிரிவினால் வகை செய்யப்பட்டவாறாக முதல் வகுப்பு நடுவரிடம் பணித்தனுப்பப்படுமிடத்து, அந்நடுவர் அவ் வழக்கு ஆதியில் தம்மால் விசாரிக்கப்பட்டிருந்திருப்பின் தாம் விதித்திருக்கலாகும் அல்லது பிறப்பித்திருக்கலாகும் தண்டனையை விதிக்கலாம் அல்லது கட்டளையைப் பிறப்பிக்கலாம்; மற்றும் எந்தப் பிரசினையின் மீதேனும் மேற்கொண்டு பரிசீலனையோ கூடுதலான சாட்சியமோ அவசியமாகிறது என்று அவர் நினைப்பாராயின், அவர் அத்தகைய பரிசீலனையைச் செய்யலாம் அல்லது தாமே அத்தகைய சாட்சியத்தை எடுக்கலாம். அல்லது அத்தகைய பரிசீலனை செய்யப்படும்படியோ அத்தகைய சாட்சியம் எடுக்கப்படும்படியோ உத்தரவிடலாம்.

(3) திருட்டு, கட்டிடத்திலிருந்து திருட்டு, நேர்மையற்ற கையாடல், ஏமாற்றுதல் அல்லது இரண்டாண்டுகளுக்கு மேற்படாத சிறைத் தண்டனை விதிப்பதற்குரிய இந்தியத் தண்டனைச் சட்டத்தின்படியான குற்றம் எதையேனும் அல்லது அபராதம் மட்டுமே விதித்துத் தண்டிப்பதற்குரிய குற்றம் எதையேனும் செய்ததாக ஒருவர் தண்டிக்கப்பட்டு, அவருக்கெதிராக மூந்திய தண்டனைத் தீர்ப்பு எதுவும் நிறைவேற்றப்படாத எந்தச் சந்தர்ப்பத்திலும், அவரை அவ்வாறு தண்டிக்கும் நீதிமன்றம், தான் பொருத்தமென நினைத்தால் குற்றவாளியின் வயது, இயல்பு, முன்வரலாறு அல்லது உடல்நிலை அல்லது மனநிலையையும், அக் குற்றத்தின் அற்பத்தன்மை அல்லது குற்றத்தின் கடுமையைத் தணிக்கின்ற எந்தச் சூழ்நிலைகளில் அக் குற்றம் செய்யப்பட்டதோ அந்தச் சூழ்நிலைகளையும் கவனத்திற்கொண்டு அவருக்குத் தண்டனையளிப்பதற்குப் பதிலாக, உரிய வகையில் கண்டித்து அவரை விடுவிக்கலாம். 45/1860

(4) இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்படும் கட்டளையொன்றை மேல்முறையீட்டு நீதிமன்றமோ, உயர் நீதிமன்றமோ, செஷன்ஸ் நீதிமன்றமோகூட, தன் மேலாய்வு அதிகாரங்களைச் செலுத்தும்போது பிறப்பிக்கலாம்.

(5) குற்றவாளி எவரையேனும் பொறுத்து இந்தப் பிரிவின்படி கட்டளையொன்று பிறப்பிக்கப்பட்டிருக்கும் போது, உயர் நீதிமன்றம் அல்லது செஷன்ஸ் நீதிமன்றம், அத்தகைய நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்துகொள்ள

உரிமை இருக்கின்றபோது மேல்முறையீட்டின் பேரிலோ தன் மேலாய்வு அதிகாரங்களைச் செலுத்துகின்றபோதோ அக் கட்டளையை நீக்கலாம். மற்றும் அதற்குப் பதிலாகச் சட்டத்திற்குகந்த வகையில் அத்தகைய குற்றவாளிக்குத் தண்டனை பிறப்பிக்கலாம்.

ஆனால், உயர்நீதிமன்றம் அல்லது செஷன்ஸ் நீதிமன்றம், எந்த நீதிமன்றத்தால் அக்குற்றவாளி தண்டிக்கப்பட்டாரோ அந்த நீதிமன்றத்தால் சுமத்தப்பட்டிருக்கக் கூடிய தண்டனைக்கு அதிகமாக இந்த உட்பிரிவின்படி சுமத்துதல் ஆகாது.

(6) 121, 124 மற்றும் 373 ஆகிய பிரிவுகளின் வகை முறைகள், கூடிய அளவிற்கு, இந்தப் பிரிவின் வகைமுறைகளைத் தொடர்ந்து அளிக்கப்பட்ட ஜாமீன்தார்களின் விஷயத்திலும் இயங்குதல் வேண்டும்.

(7) நீதிமன்றம் குற்றவாளியொருவரை விடுவிப்பதற்கு (1) ஆவது உட்பிரிவின்படி உத்தரவிடுவதற்கு முன்பு, எந்த இடத்திற்காக அந்த நீதிமன்றம் செயல்புரிகிறதோ அல்லது எந்த இடத்தில் நிபந்தனைகளைக் கடைப்பிடிப்பதற்காகக் குறிப்பிடப்பட்ட கால அளவின்போது அக் குற்றவாளி வாழக்கூடுமோ அந்த இடத்தில் அக் குற்றவாளிக்கு அல்லது அவரது ஜாமீன்தார் (எவரேனுமிருப்பின்) அவருக்கு நிலையான வாழ்விடமோ முறையான தொழிலோ இருக்கிறது என்பதாகத் திருப்திகரமாகத் தெரிந்துகொள்ளுதல் வேண்டும்.

(8) குற்றவாளியைத் தண்டித்த நீதிமன்றத்திற்கோ அல்லது அக் குற்றவாளியின் ஆனி குற்றத்தைப் பொறுத்து அவர்மீது நடவடிக்கை எடுத்திருக்கக்கூடிய ஒரு நீதிமன்றத்திற்கோ அக் குற்றவாளி தமது ஜாமீன் பத்திரத்தின் நிபந்தனைகளில் எதனையேனும் கடைபிடிக்கத் தவறியிருக்கின்றார் என்பதாகத் திருப்திகரமாகத் தெரியுமாலுல், அது அவரைக் கைதுசெய்வதற்காகப் பிடிகட்டளையொன்றைப் பிறப்பிக்கலாம்.

(9) குற்றவாளியொருவர் அத்தகைய பிடிகட்டளையின் பேரில் கைது செய்யப்படும்போது, அப் பிடிக்கட்டளையைப் பிறப்பித்த நீதிமன்றத்தின்முன் உடனடியாகக் கொண்டுவரப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய நீதிமன்றம் அவ் வழக்கு விசாரிக்கப்படும் வரை அவரைக் காவலில் வைக்கலாம்; அல்லது தண்டனையை ஏற்பதற்காக அவர்

ஆஜாக வேண்டும் என்ற நிபந்தனையின்பேரில் போதுமான ஜாமீன்காருடன் ஜாமீனில் அவரை விடலாம்; மேலும் அத்தகைய நீதிமன்றம் அவ் வழக்கை விசாரித்ததற்குப் பின்பு, தண்டனையை வழங்கலாம்.

(10) இந்தப் பிரிவிலுள்ள எதுவும் 1958 ஆம் ஆண்டு குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்புச் சட்டத்தின் அல்லது 1960 ஆம் ஆண்டு குழந்தைகள் சட்டத்தின், இளங் குற்றவாளிகளின் சீர்திருத்தத்திற்கோ பயிற்சிக்கோ அல்லது மறுவாழ்வுக்கோ அவ்வப்போது அமலிலுள்ள வேறெந்தச் சட்டத்தின் வகைமுறைகளைப் பாதித்தல் ஆகாது.

குறிப்பிட்ட வழக்குகளில் சிறப்புக் காரணங்கள் பதிவுசெய்யப்படுதல்.

'ராஜஸ்தான் ஸ்டேட் ஏ.ஐ.ஆர். 1981

(அ) 360ஆவது பிரிவின்படி அல்லது 1958 ஆம் ஆண்டு குற்றவாளிகள் நன்னடத்தைக் கண்காணிப்புச் சட்டத்தின் வகைமுறைகளின்படி எதிரி ஒருவரைப் பொறுத்து அல்லது

(ஆ) 1960 ஆம் ஆண்டு குழந்தைகள் சட்டம் அல்லது இளங்குற்றவாளிகளின் சீர்திருத்தத்திற்கோ, பயிற்சிக்கோ மறு வாழ்வுக்கோ அவ்வப்போது அமலிலுள்ள வேறெந்தச் சட்டத்தின்படியேனும் இளங்குற்றவாளி ஒருவரைப் பொறுத்து

நடவடிக்கை எடுத்திருக்கக்கூடும் என்றாலும் அவ்வாறு செய்யாதவிடத்து, அது அவ்வாறு செய்யாததற்கான சிறப்புக் காரணங்களைத் தன் தீர்ப்பில் பதிவு செய்தல் வேண்டும்.

நீதிமன்றம் தீர்ப்பை மாற்றுதல் கூடாது என்பது.

362. இந்தச் சட்டத்தாலோ அவ்வப்போது அமலிலுள்ள வேறெந்தச் சட்டத்தாலோ வேறுவிதமாக வகைசெய்யப்பட்டிருந்தாலன்றி, நீதிமன்றம் எதுவும் வழக்கொன்றை முடிவுசெய்து தன் தீர்ப்பு அல்லது முடிவான கட்டளையில் கையொப்பமிட்டிருக்கின்றபோது எற்பட்ட எழுத்துப் பிழை அல்லது கணக்குப் பிழையொன்றைத் திருத்துவதற்காக அல்லாமல் மற்றப்படி அதை மாற்றவோ மறு ஆய்வு செய்யவோ ஆகாது.

தீர்ப்பின் நகல் எதிரிக்கும் மற்றவர்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்பது.

363. (1) எதிரிக்குச் சிறைத் தண்டனை அளிக்கப்படும் போது, அத்தீர்ப்பின் நகலொன்று அத் தீர்ப்பு பகரப் பட்டதும் உடனடியாக அவருக்குக் கட்டணமின்றிக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(2) எதிரியின் விண்ணப்பத்தின்பேரில், உறுதிச் சான்றளிக்கப்பட்ட அத் தீர்ப்பின் நகலொன்றை அல்லது, அவர் அவ்வாறு விரும்பும்போது, சாத்தியமானால் அவரது சொந்த மொழியிலேயே அல்லது நீதிமன்ற மொழியில் மொழிபெயர்ப்பொன்றை காமதமின்றி அவருக்குக் கொடுக்கப் படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய நகல், அத் தீர்ப்பு எதிரியால் மேல்முறையீடு செய்யத் தக்கதாக இருக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கட்டணமின்றிக் கொடுக்கப் படுதல் வேண்டும்:

ஆனால், மரண தண்டனையொன்று பிறப்பிக்கப்படு மிடத்து, அல்லது உயர் நீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப்படு மிடத்து, உறுதிச் சான்றளிக்கப்பட்ட அத் தீர்ப்பின் நகலொன்று எதிரிக்குக் கட்டணமின்றி, அவர் அதற்காக விண்ணப்பித்திருக்கிறார் என்றாலும் இல்லையென்றாலும் உடனடியாகக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(3). (2) ஆவது உட்பிரிவின் வகைமுறைகள், எதிரியால் மேல்முறையீடு செய்யத்தக்க தீர்ப்பொன்றின் தொடர்பாக இயங்குவன போன்றே, அவை 117 ஆவது பிரிவின்படி பிறப்பிக்கப்படும் கட்டளையொன்றின் தொடர்பாகவும் இயங்குதல் வேண்டும்.

(4) எதிரி எந்த நீதிமன்றத்தாலேனும் மரண தண்டனை யளிக்கப்பட்டு அத் தீர்ப்பிலிருந்து மேல்முறையீடொன்று செய்வதற்கு அவருக்கு உரிமை இருக்கும்போது நீதிமன்றம், அவர் மேல்முறையீடு செய்ய விரும்புவாரானால் எந்தக் கால எல்லைக்குள்ளாக அவரது மேல்முறையீடு தாக்கல் செய்யப் படுதல் வேண்டும் என்பதை அவருக்குத் தெரிவித்தல் வேண்டும்.

(5). (2) ஆவது உட்பிரிவில் வேறுவிதமாக வகைசெய் திருந்தாலன்றி ஒரு குற்ற வழக்கு நீதிமன்றத்தால் பிறப் பிக்கப்பட்ட தீர்ப்பு அல்லது கட்டளையினால் பாதிக்கப்பட்ட எவருக்கும் இதன் பொருட்டுச் செய்து கொள்ளப்பட்ட விண்ணப்பத்தின்பேரிலும் நிர்ணயிக்கப்பட்ட செலவுக் கட்டணங்களைச் செலுத்தியதன்பேரிலும், அத் தீர்ப்பு அல்லது கட்டளையின், அல்லது சாட்சியின் வாக்குமூலத்தின் அல்லது பதிவுக் கட்டின் மற்ற பகுதி எதனின் நகலொன்று கொடுக் கப்படுதல் வேண்டும்:

ஆனால், நீதிமன்றம் ஏதேனும் சிறப்புக் காரணங்களுக் காக, தான் பொருத்தமென நினைத்தால், அதை அவருக்குக் கட்டணமின்றிக் கொடுக்கலாம்.

(6) ஒரு தீர்ப்பு அல்லது கட்டளையிலல் பாதிக்கப் படாத எவருக்கும், அத்தகையவரால் அத்தகைய கட்டணம் செலுத்தப்பட்டதன் பேரிலும், உயர் நீதிமன்றம் விதிகள் மூலமாக வகை செய்யலாகும் நிபந்தனைகளுக்குட்பட்டு, ஒரு குற்ற வழக்கு நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்லது கட்டளை நகல்களை வழங்குவதற்காக அத்தகைய விதிகள் மூலமாக உயர் நீதிமன்றம் வகை செய்யலாம்.

தீர்ப்பு எப் போது மொழி பெயர்க்கப்பட வேண்டும என்பது.

364. அசல் தீர்ப்பு நடவடிக்கைகளின் பதிவுக்கட்டுடன் சேர்த்து வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அசலானது நீதிமன்றமொழியினின்றும் வேறுபட்ட ஒரு மொழியில் பதிவு செய்யப்பட்டு எதிரி அவ்வாறு கோருமிடத்து நீதி மன்ற மொழியின் அதன் மொழிபெயர்ப்பு ஒன்று அப்பதிவுக் கட்டுடன் சேர்க்கப்படுதல் வேண்டும்.

செஷன்ஸ் நீதி மன்றம் முடிபு மற்றும் தண் டனையின் நக லொன்றை மாவட்ட நடு வருக்கு அனுப் புதல்.

365. செஷன்ஸ் நீதிமன்றத்திலல் அல்லது தலைமை நீதித் துறை நடுவரால், விசாரணை செய்யப்பட்ட வழக்குகளில், நிலவரத்திற்கேற்ப அந்த நீதிமன்றம் அல்லது அத்தகைய நடுவர் அதன் அல்லது அவரின் முடிபு மற்றும் தண்டனை (எதேனுமிருப்பின்) அதன் நகலொன்றை எந்த மாவட்ட நடுவரின் வட்டார அதிகார வரம்புக்குள் அந்த விசாரணை நடத்தப்பட்டதோ அந்த மாவட்ட நடுவருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

அத்தியாயம் XXVIII

மரண தண்டனைகளை உறுதிப்படுத்துவதற்காகப் பணிந்தனுப்புதல்.

உறுதிப்படுத்துவதற்காக மரணதண்டனைகளை நீதிமன்றத்தால் பணிந்தனுப்பப்படுதல்.

366. (1) செஷன்ஸ் நீதிமன்றம் மரண தண்டனையைப் பிறப்பிக்கின்றபோது, அந்த நடவடிக்கைகள் உயர் நீதிமன்றத்திற்குப் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும். மற்றும் அத் தண்டனை உயர் நீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப் பட்டாலன்றி நிறைவேற்றப்படுதல் ஆகாது.

(2) அத் தண்டனையைப் பிறப்பிக்கின்ற நீதிமன்றம் சிறைக்கனுப்பும் கட்டளையைப் பிறப்பித்து தண்டிக்கப் பட்டவரை சிறைக்காவலுக்கு அனுப்புதல் வேண்டும்.

மேற்கொண்டு பரிசீலனைசெய்யப்படுவதற்கு அல்லது மேற்கொண்டு சாட்சியம் எடுக்கப்படுவதற்கு உத்தரவிடும் அதிகாரம்.

367. (1) அத்தகைய நடவடிக்கைகள் பணிந்தனுப்பப் படும்போது, உயர் நீதிமன்றம், தண்டிக்கப்பட்டவர் குற்ற வாளியா நிரபராதியா என்று விஷயத்தைத் தெளிவுபடுத்தும் பிரச்சினை எதையும் குறித்து மேற்கொண்டு பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும் என்றே அல்லது மேற்கொண்டு சாட்சியம் எடுக்கப்படுதல் வேண்டும் என்றே தனக்கு மானால், அது தானே அத்தகைய பரிசீலனையைச் செய்யலாம், அல்லது தானே அத்தகைய சாட்சியத்தை எடுக்கலாம், அல்லது செஷன்ஸ் நீதிமன்றத்தால் அது செய்யப்படவோ எடுக்கப்படவோ உத்தரவிடலாம்.

(2) உயர் நீதிமன்றம் வேறுவிதமாக உத்தரவிட்டா லன்றி அத்தகைய பரிசீலனை செய்யப்படும்போதோ அத் தகைய சாட்சியம் எடுக்கப்படும்போதோ தண்டிக்கப் பட்டவர் வருவதை வேண்டாமென்று விட்டுவிடலாம்.

(3) அப் பரிசீலனை அல்லது சாட்சியம் (எதேனுமிருப் பின்) உயர் நீதிமன்றத்தால் செய்யப்படாதபோது அல்லது எடுக்கப்படாதபோது அத்தகைய பரிசீலனை அல்லது சாட்சி யத்தின் முடிவு அத்தகைய நீதிமன்றத்திற்கு உறுதிச் சான்றளித்துத் தெரிவிக்கப்படவேண்டும்.

தண்டனையை உறுதிப்படுத்த அல்லது தண்டனைத் தீர்ப்பைப்பற்றதாக்க உயர் நீதி மன்றத்திற்குள்ள அதிகாரம்.

368. 366 ஆவது பிரிவின்படி பணிந்தனுப்பப்பட்ட வழக்கு எதிலும், உயர் நீதிமன்றம் —

(அ) தண்டனையை உறுதிப்படுத்தலாம் அல்லது சட்டத்தால் அனுமதிக்கப்படும் வேறு எந்தத் தண்டனையையும் வழங்கலாம்; அல்லது

(ஆ) தண்டனைத் தீர்ப்பைப் பயனற்றதாக்கி எந்தக் குற்றத்திற்காக செஷன்ஸ் நீதிமன்றம் எதிரியைத் தண்டித்திருக்கக் கூடுமோ அந்தக் குற்றம் எதற்காகவும் அவரைத் தண்டிக்கலாம் அல்லது அதே குற்றச்சாட்டின் பேரிலோ திருத்தப்பட்ட ஒரு குற்றச்சாட்டின்பேரிலோ புதிய விசாரணைக்குக் கட்டளையிடலாம்; அல்லது

(இ) எதிரியை விடுதலை செய்யலாம்:

ஆனால், உறுதிப்படுத்தும் கட்டளை எதுவும் மேல்முறையீடொன்றைத் தாக்கல் செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட கால அளவு முடிவடைந்திராதவரை, அல்லது அக்கால அளவிற்குள் மேல்முறையீடொன்று தாக்கல் செய்யப்படுமாயின், அம்மேல்முறையீடு தீர்மானிக்கப்படும்வரை, இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

உறுதிப்படுத்து கையோ புதிய தண்டனையோ இரண்டு நீதி பதிகளால் கையொப்ப மிடப்பட வேண்டும் என்பது.

369. அவ்வாறு பணித்தனுப்பப்பட்ட வழக்கு ஒவ்வொன்றிலும் உயர் நீதிமன்றத்தால் செய்யப்படும் தண்டனையின் உறுதிப்பாடோ, வழங்கப்பட்ட புதிய தண்டனையோ அல்லது கட்டளை எதுவுமோ அந்த நீதிமன்றம் இரண்டு அல்லது மேற்பட்ட நீதிபதிகள் கொண்டதாயிருக்கும்போது அவர்களில் குறைந்தது இருவராலேனும் விதிக்கப்பட்டு, பிறப்பிக்கப்பட்டுக் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

கருத்து வேறுபாடு ஏற்படும் சந்தர்ப்பத்தில் நடை முறை என்ன என்பது.

370. அத்தகைய வழக்கு எதுவும் நீதிபதிகளின் பேராயம் ஒன்றின் முன் கேட்கப்பட்டு, கருத்தால் வேறுபடும் அத்தகைய நீதிபதிகளின் எண்ணிக்கை சரிசமமாக இருக்குமாயின் அவ் வழக்கு 392 ஆவது பிரிவில் வகை செய்யப்பட்ட முறையில் முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

உறுதிப்படுத்து வதற்காக உயர் நீதி மன்றத் திற்குப் பணித் தனுப்பப்பட்ட வழக்குகளில் நடைமுறை என்பது.

371. மரண தண்டனையை உறுதிப்படுத்துவதற்காக உயர் நீதிமன்றத்திற்கு செஷன்ஸ் நீதிமன்றத்தால் பணிந்தனுப்பப் பட்ட வழக்குகளில், உயர் நீதிமன்றத்தின் உரிய அலுவலர் உயர் நீதிமன்றத்தின் உறுதிப்படுத்திய கட்டளை அல்லது வேறு கட்டளை பிறப்பிக்கப்பட்டதற்குப் பின்பு, தாமதமின்றி அக் கட்டளையின் நகலொன்றை, உயர் நீதிமன்றத்தின் முத்திரையிட்டு, தம் அலுவல்முறைக் கையொப்பத்தைச் சான்றொப்பமாக இட்டு, செஷன்ஸ் நீதிமன்றத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

அத்தியாயம் XXIX.

மேல்முறையீடுகள்.

வேறுவிதமாக வகை செய்யப் பட்டிருந்தா லன்றி மேல் முறையீடு எது வும் செய்தல் ஆகாது.

372. இந்தச் சட்டத்தினாலோ அவ்வப்போது அமலிலுள்ள வேறெந்தச் சட்டத்தினாலோ வகை செய்யப்பட்டவாறன்றி குற்ற வழக்கு நீதிமன்றம் ஒன்றின் தீர்ப்பு அல்லது கட்டளை எதிலிருந்தும் மேல்முறையீடு எதுவும் செய்துகொள்ளுதல் ஆகாது.

ஜாமீன் கோரு கின்ற கட்டளை களிலிருந்து அல்லது அமைதிபேணு வதற்காக அல்லது நன்னடத் தைக்காகத் தரப்பட்ட ஜாமீன்தாரை எற்க மறுக் கின்ற அல்லது நிராகரிக்கின்ற கட்டளைகளி லிருந்து மேல் முறையீடு.

373. எவரேனும்,—

(i) அமைதி பேணுவதற்காக அல்லது நன்னடத்தைக்காக ஜாமீன் கொடுக்க 117 ஆவது பிரிவின்படி கட்டளையிடப்பட்டிருப்பாராயின்; அல்லது

(ii) 121 ஆவது பிரிவின்படி ஜாமீன்தார் ஒருவரை ஏற்க மறுக்கின்ற அல்லது நிராகரிக்கின்ற கட்டளை யொன்றினால் குறையுற்றிருப்பாராயின்,

அவர் அக்கட்டளையின் பேரில் செஷன்ஸ் நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்துகொள்ளலாம்;

ஆனால், இந்தப் பிரிவிலுள்ள எதுவும் எவர்களுக்கெதிரான நடவடிக்கைகள் செஷன்ஸ் நீதிபதியின் முன் 122 ஆவது பிரிவின் (2) ஆவது உட்பிரிவு அல்லது (4) ஆவது உட்பிரிவின் வகைமுறைகளின்படி இடப்பட்டிருக்கின்றனவோ அவர்கள் மீது இயங்குதல் ஆகாது.

தண்டனைத் தீர்ப்புகளி லிருந்து மேல் முறையீடுகள்.

374. (1) ஓர் உயர் நீதிமன்றத்தால் அதன் தனிச் சிறப்பு அசல் குற்ற வழக்கு அதிகாரத்தில் நடத்தப்பட்ட விசாரணையில் தண்டிக்கப்பட்ட எவரும் உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

(2) செஷன்ஸ் நீதிபதி ஒருவரால், அல்லது கூட்டு செஷன்ஸ் நீதிபதி ஒருவரால் நடத்தப்பட்ட விசாரணையில் அல்லது ஏழாண்டுகளுக்கும் மேலாக சிறைத் தண்டனை வேறெந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றதோ அந்த நீதிமன்றத்தால் நடத்தப்பட்ட விசாரணையில் தண்டிக்கப்பட்ட எவரும் உயர் நீதிமன்றத்திற்கு மேல் முறையீடு செய்து கொள்ளலாம்,

(3) (2) ஆவது உட்பிரிவில் வேறுவிதமாக வகை செய்யப்பட்டவாறன்றி,

(அ) பெருநகர் நடுவர் அல்லது உதவி செஷன்ஸ் நீதிபதி அல்லது முதல் வகுப்பு அல்லது இரண்டாவது வகுப்பு நடுவர் ஒருவரால் நடத்தப்பட்ட விசாரணையில் தண்டிக்கப்பட்ட எவரும், அல்லது

(ஆ) 325 ஆவது பிரிவின்படி தீர்ப்புத் தண்டனை யளிக்கப்பட்ட எவரும், அல்லது

(இ) எவரைப் பொறுத்து 360 ஆவது பிரிவின்படி நடுவர் எவராலேனும் கட்டளை அல்லது தீர்ப்புத் தண்டனை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றதோ அவர் எவரும்,

செஷன்ஸ் நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

குறிப்பிட்ட வழக்குகளில் எதிரி குற்றம் செய்ததாக ஒப்புக்கொள்ளும்போது மேல் முறையீடு எதுவும் செய்தல் ஆகாது.

375, 374 ஆவது பிரிவில் என்ன கண்டிருந்தபோதிலும், எதிரி ஒருவர் குற்றஞ் செய்ததாக ஒப்புக்கொண்டு அந்த ஒப்புதல் உரையின் பேரில் அவர் தண்டிக்கப்பட்டிருக்குமிடத்து,

(அ) அத் தண்டனைத் தீர்ப்பை உயர் நீதிமன்றம் பிறப்பித்திருக்குமாயல், அல்லது

(ஆ) அத் தண்டனைத் தீர்ப்பை செஷன்ஸ் நீதிமன்றமோ பெருநகர் நடுவரோ முதல் அல்லது இரண்டாவது வகுப்பு நடுவரோ பிறப்பித்திருப்பாராயல் அத் தீர்ப்புத் தண்டனையின் அளவையோ அல்லது சட்டபூர்வமான தன்மையையோ பற்றியல்லாது மேல்முறையீடு எதுவும் செய்தல் ஆகாது.

சில்லறை வழக்குகளில் மேல் முறையீடு இடையாது என்பது.

376, 374 ஆவது பிரிவில் என்ன கண்டிருந்தபோதிலும் பின்வரும் வழக்குகள் ஏதொன்றிலும் தண்டிக்கப்பட்ட ஒருவர் மேல்முறையீடு எதுவும் செய்தல் ஆகாது, அவையாவன :—

(அ) உயர் நீதிமன்றம் ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்கான சிறைத் தண்டனையை அல்லது ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாத அபராதத்தை அல்லது அத்தகைய சிறைத் தண்டனையும் அபராதமும் சேர்ந்த தண்டனையை மட்டுமே வழங்குமிடத்து ;

(ஆ) செஷன்ஸ் நீதிமன்றம் அல்லது பெருநகர் நடுவர் ஒருவர் மூன்று மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்கான சிறைத் தண்டனையை அல்லது இருநூறு ரூபாய்க்கு மேற்படாத அபராதத்தை அல்லது அத்தகைய சிறைத் தண்டனையும் அபராதமும் சேர்ந்த தண்டனையை மட்டுமே வழங்குமிடத்து ;

(இ) முதல் வகுப்பு நடுவர் ஒருவர் நூறு ரூபாய்க்கு மேற்படாத அபராதத் தண்டனையை மட்டுமே வழங்குமிடத்து ; அல்லது

(ஈ) சுருக்கு முறையில் விசாரிக்கப்பட்ட வழக்கொன்றில் 260 ஆவது பிரிவின்படி செயல் புரிவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள நடுவர் ஒருவர் இருநூறு ரூபாய்க்கு மேற்படாத அபராதத் தண்டனையை மட்டுமே வழங்குமிடத்து :

ஆனால், அத்தகைய தண்டனையுடன் வேறு தண்டனை எதேனும் இணைக்கப்படுமானால் அத்தகைய தண்டனைக் கெதிராக மேல்முறையீடொன்று செய்யலாம். ஆனால்

(i) தண்டிக்கப்பட்டவர் அமைதி பேணுவதற்காக ஜாமீன் அளிக்கக் கட்டளையிடப்பட்டிருக்கின்றார் ; அல்லது

(ii) அபராதம் செலுத்தத் தவறுகையில் சிறைத் தண்டனைக்கான உத்தரவொன்று அத்தண்டனையில் சேர்க்கப் பட்டிருக்கின்றது ; அல்லது

(iii) விதிக்கப்பட்ட மொத்த அபராதத் தொகை இவ் வழக்கைப் பொறுத்து இதற்கு முன் குறிப்பிடப்பட்ட தொகைக்கு மேற்படவில்லையானால், இவ் வழக்கில் ஒன்றுக்கு மேற்பட்ட அபராதத் தண்டனை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது என்ற காரணத்தின்பேரில் மட்டுமே மேல்முறையீடு செய்யத் தக்கது ஆகாது.

தண்டனைக் கெதிராக மாநில அரசு முறையீடு.

377. (1) (2) ஆவது உட்பிரிவில் வேறுவிதமாக வகை செய்யப்பட்டிருந்தாலன்றி, மாநில அரசு, உயர் நீதிமன்றம் அல்லாத வேறெந்த நீதிமன்றத்தாலேனும் நடத்தப்பட்ட விசாரணையில் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட எந்த வழக்கிலேனும், அந்தத் தண்டனை போதுமானதில்லை என்னும் காரணத்திற்காக அத் தண்டனையின் பேரில் உயர் நீதிமன்றத்திற்கு மேல்முறையீடொன்றைத் தாக்கல் செய்யுமாறு அரசு குற்றத் துறை வழக்குரைஞருக்கு உத்தரவிடலாம்.

(2) 1946 ஆம் ஆண்டு டெல்லி சிறப்புக் காவல் பணியாளர்த் தொகுதி சட்டத்தின்படி அமைக்கப்பட்ட டெல்லி சிறப்புக் காவல் பணியாளர் தொகுதியாலோ அல்லது இந்தச் சட்டமல்லாத வேறு மத்திய சட்டம் ஏதொன்றின் படியேனும் குற்றமொன்றைப் புலனுய்வு செய்ய அதிகாரமளிக்கப்பட்டுள்ள வேறெந்த நிறுவனத்தாலோ குற்றமானது புலனுய்வு செய்யப்பட்டிருக்கின்ற வழக்கொன்றில் அத்தகைய தண்டனைத் நிர்ப்பு ளிக்கப் பட்டிருக்குமாலல், மத்திய அரசு அந்தத் தண்டனை போதுமானதில்லை என்னும் காரணத்திற்காக, அத் தண்டனையின்பேரில் உயர் நீதிமன்றத்திற்கு மேல் முறையீடொன்றைத் தாக்கல் செய்யுமாறு அரசு குற்றத் துறை வழக்குரைஞருக்கு உத்தரவிடலாம்.

(3) மேல்முறையீடொன்று அத் தண்டனை போதுமானதில்லை என்னும் காரணத்திற்காக அத் தண்டனையின் பேரில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் போது, உயர் நீதி மன்றம் அத் தண்டனையை அதிகரிப்பதை எதிர்த்து காரணங் காட்டுதற்கு நியாயமான வாய்ப்பொன்றை எதிரிக்குக் கொடுத்ததற்குப் பின்பு அல்லாமல், அவ்வாறு அதிகரித்தல் ஆகாது. மற்றும் அவ்வாறு காரணம் காட்டும்போது, எதிரி தம் விடுதலைக்காகவோ தண்டனையைக் குறைப்பதற்காகவோ வாதாடலாம்.

விடுதலையின் பேரில் மேல் முறையீடு.

378. (1) (2) ஆவது உட்பிரிவில் வேறுவிதமாக வகை செய்யப்பட்டவாறன்றியும் (3) மற்றும் (5) ஆகிய உட் பிரிவுகளின் வகைமுறைகளுக்குட்பட்டும், உயர் நீதிமன்ற மல்லாத வேறெந்த நீதிமன்றமேனும் பிறப்பித்த அசல் அல்லது மேல்முறையீட்டு விடுதலைக் கட்டளையிலிருந்து உயர் நீதிமன்றத்திற்கு மேல்முறையீடொன்றைத் தாக்கல் செய்யுமாறு அரசு குற்றத்துறை வழக்குரைஞருக்கு மாநில அரசு எந்த வழக்கிலும் உத்தரவிடலாம்.

(2) 1946 ஆம் ஆண்டு டெல்லி சிறப்புக் காவல் பணியாளர்த் தொகுதி சட்டத்தின்படி அமைக்கப்பட்ட டெல்லி சிறப்புக் காவல் பணியாளர்த் தொகுதியாலோ இந்தச் சட்டம் அல்லாத வேறெந்த மத்திய சட்டம் எதன்படியேனும் குற்றமொன்றைப் புலனுய்வு செய்ய அதிகாரமளிக்கப் பட்டுள்ள வேறெந்த நிறுவனத்தாலோ புலனுய்வு செய்யப்

பட்டிருக்கின்ற வழக்கு எதிலேனும் அத்தகைய விடுதலைக் கட்டளையானது பிறப்பிக்கப்படுமானால், மத்திய அரசு (3) ஆவது உட்பிரிவின் வகைமுறைகளுக்குட்பட்டு, அந்த விடுதலைக் கட்டளையிலிருந்து உயர் நீதிமன்றத்திற்கு மேல் முறையீடொன்றைத் தாக்கல் செய்யுமாறு குற்றஞ்சாற்றுபவருக்கு உத்தரவிடலாம்.

(3) (1) ஆவது உட்பிரிவு அல்லது (2) ஆவது உட்பிரிவின்படி செய்யப்படும் மேல்முறையீடு எதுவும், உயர் நீதிமன்றத்தின் அனுமதியுடன் அல்லாமல் எற்றுக் கொள்ளப்படுதல் ஆகாது.

(4) அத்தகைய விடுதலைக் கட்டளையானது, முறையீட்டின் பேரில் தொடரப்பட்ட வழக்கு எதிலேனும் பிறப்பிக்கப்பட்டு, உயர் நீதிமன்றம், இதன் பொருட்டு முறையிடுபவர் தன்னிடம் செய்துகொண்ட விண்ணப்பத்தின் பேரில் அந்த விடுதலைக் கட்டளையிலிருந்து மேல்முறையீடு செய்துகொள்ள சிறப்பு அனுமதி அளிக்குமானால், முறையிடுபவர் அத்தகைய மேல்முறையீடொன்றை உயர் நீதிமன்றத்திடம் தாக்கல் செய்யலாம்.

(5) விடுதலைக் கட்டளையிலிருந்து மேல்முறையீடு செய்வதற்குச் சிறப்பு அனுமதி வழங்குவதற்காக, (4) ஆவது உட்பிரிவின்படி செய்துகொள்ளப்படும் விண்ணப்பம் எதுவும், முறையிடுபவர் ஒரு பொது ஊழியராக இருக்குமிடத்து அந்த விடுதலைத் தேதியிலிருந்து கணக்கிட்டுப் பார்க்கும் போது ஆறு மாதங்கள் முடிவடைந்ததற்குப் பின்பும், மற்ற சந்தர்ப்பம் ஒவ்வொன்றிலும் அறுபது நாட்கள் முடிவடைந்ததற்குப் பின்பும் உயர் நீதிமன்றத்தால் எற்றுக் கொள்ளப்படுதல் ஆகாது.

(6) எந்த வழக்கிலேனும், விடுதலைக் கட்டளையிலிருந்து மேல்முறையீடு செய்வதற்குச் சிறப்பு அனுமதி வழங்குவதற்காக (4) ஆவது உட்பிரிவின்படி செய்து கொள்ளப்பட்ட விண்ணப்பம் மறுக்கப்படுமானால், அந்த விடுதலைக் கட்டளையிலிருந்து மேல்முறையீடு எதுவும் (1) ஆவது உட்பிரிவின்படியோ (2) ஆவது உட்பிரிவின்படியோ செய்து கொள்ளுதல் ஆகாது.

உயர்நீதி மன்றத்தால் பிறப்பிக்கப் பட்ட தண்டனைத் தீர்ப்பின் பேரில் சில வழக்குகளில் முறையீடு.

379. உயர் நீதிமன்றம், மேல்முறையீட்டின்பேரில், எதிரி ஒருவரின் விடுதலைத் தீர்ப்பை எதிர்மாறாக்கி அவருக்குத் தண்டனைத் தீர்ப்புரைத்து மரண தண்டனையோ, ஆயுட்கால சிறைத் தண்டனையோ, பத்தாண்டுகள் அல்லது மேற்பட்ட காலத்திற்குச் சிறைத் தண்டனையோ அளித்திருக்குமிடத்து, அவர் உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

சில வழக்குகளில் மேல் முறையீட்டுக்குச் சிறப்பு உரிமை.

380. இந்த அத்தியாயத்தில் என்ன கண்டிருந்தபோதிலும், ஒருவருக்கு மேற்பட்டவர்களுக்கு ஒரே விசாரணையில் தண்டனைத் தீர்ப்பு அளிக்கப்பட்டு மேல்முறையீடு செய்யத் தக்க தீர்ப்பு அல்லது கட்டளையொன்று அத்தகையவர்களில் எவரைப் பொறுத்தேனும் பிறப்பிக்கப்பட்டிருக்கும்போது, அத்தகைய விசாரணையில் தண்டிக்கப்பட்ட நபர்கள் அனைவரும் அல்லது எவரேனும் மேல்முறையீடு செய்ய உரிமை உடையவர் ஆவார்.

செஷன்ஸ் நீதிமன்றத்திடம் செய்யப்படும் மேல் முறையீடு எவ்வாறு கேட்கப்பட வேண்டும் என்பது.

381. (1) (2) ஆவது உட்பிரிவின் வகைமுறைகளுக்குட்பட்டு, செஷன்ஸ் நீதிமன்றத்திற்கு அல்லது செஷன்ஸ் நீதிபதிக்குச் செய்து கொள்ளப்படும் ஒரு மேல்முறையீடு செஷன்ஸ் நீதிபதி அல்லது கூட்டு செஷன்ஸ் நீதிபதியால் கேட்கப்படுதல் வேண்டும்:

ஆனால், இரண்டாவது வகுப்பு நடுவர் ஒருவரால் நடத்தப்பட்ட விசாரணையில் அளிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பின்பேரில் மேல்முறையிடொன்று உதவி செஷன்ஸ் நீதிபதி அல்லது தலைமை நீதித்துறை நடுவரால் கேட்கப்பட்டு முடிவு செய்யப்படலாம்.

(2) ஒரு கூட்டு செஷன்ஸ் நீதிபதி, உதவி செஷன்ஸ் நீதிபதி அல்லது ஒரு தலைமை நீதித்துறை நடுவர் அப்பிரிவின் செஷன்ஸ் நீதிபதி, பொது அல்லது சிறப்புக் கட்டளை மூலமாக மாற்றிவைக்கலாகும் அல்லது உயர் நீதிமன்றம் சிறப்புக் கட்டளை மூலமாக கேட்கும்படித் தமக்கு உத்தரவிடலாகும் மேல்முறையீடுகளை மட்டுமே கேட்க வேண்டும்.

மேல்முறையீட்டு மனு.

382. மேல்முறையீடு ஒவ்வொன்றும், மேல்முறையீட்டாளர், அல்லது அவரது வாதுரைஞரால் தாக்கல் செய்யப்படும் எழுத்துமூலமான ஒரு மனுவடிவில் செய்துகொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய மனு ஒவ்வொன்றுடனும் (அது

தாக்கல் செய்யப்பெறும் நீதிமன்றம் வேறுவிதமாக உத்தரவிட்டாலன்றி) எந்தத் தீர்ப்பு அல்லது கட்டளையின்பேரில் மேல்முறையீடு செய்துகொள்ளப்படுகிறதோ அத் தீர்ப்பு அல்லது கட்டளையின் நகலொன்று சேர்த்தனுப்பப்படுதல் வேண்டும்.

மேல்முறையீட்டாளர் சிறையில் இருப்பாராயின், அவர் தம் மேல்முறையீட்டு மனுவையும் அதனுடன் சேர்ந்து வரும் நகல்களையும், சிறையின் பொறுப்பு அலுவலரிடம் தாக்கல் செய்யலாம். அந்த அலுவலர் அதன் பேரில் உரிய மேல்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அத்தகைய மனுவையும் நகல்களையும் அனுப்பிவைத்தல் வேண்டும்.

மேல்முறையீட்டாளர் சிறையில் இருக்கும் போது நடைமுறை என்ன என்பது.

384. (1) 382 ஆவது பிரிவு அல்லது 383 ஆவது பிரிவின்படி வந்த மேல்முறையீட்டு மனுவையும் தீர்ப்பின் நகலையும் ஆய்வு செய்தபின், தலையிடுவதற்குப் போதுமான ஆதாரம் எதுவும் இல்லை என்பதாக மேல்முறையீட்டு நீதிமன்றம் எண்ணுமானால் அது அம்மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்யலாம்.

மேல்முறையீட்டை உடனடியாகத் தள்ளுபடி செய்தல்.

ஆனால்,

(அ) 382 ஆவது பிரிவின்படி தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு எதுவும், மேல்முறையீட்டாளர் அல்லது அவரது வழக்குரைஞர் அதற்கு ஆதரவாகக் கேட்கப்படுவதற்கு நியாயமான வாய்ப்பொன்றைப் பெற்றிருந்தாலன்றி, தள்ளுபடி செய்யப்படுதல் ஆகாது;

(ஆ) 383 ஆவது பிரிவின்படி தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு எதுவும் மேல்முறையீட்டுக்கு அனுசரணையாகக் கேட்கப்படுவதற்கு நியாயமான வாய்ப்பொன்றை மேல்முறையீட்டாளருக்கு கொடுத்ததற்குப் பின்பு அல்லாது, அம் மேல்முறையீட்டு நீதிமன்றம் அம் மேல்முறையீடு அற்பத்தனமானது என்றோ வழக்கின் சூழ்நிலைகளைக் கவனிக்கும் போது காவலிலுள்ள எதிரியை நீதிமன்றத்தின்முன் கொண்டு வந்து நிறுத்துவது மிதமிஞ்சிய அசௌகரியத்தை உண்டாக்கும் என்றோ எண்ணினாலன்றி தள்ளுபடி செய்யப்படுதல் ஆகாது;

(இ) 383 ஆவது பிரிவின்படி தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடு எதுவும், அத்தகைய மேல்முறையீட்டைச் செய்துகொள்வதற்காக அனுமதிக்கப்பட்ட கால அளவு முடிவடைந்திருந்தாலன்றி உடனடியாகத் தள்ளுபடி செய்யப்படுதல் ஆகாது.

(2) இந்தப் பிரிவின்படி மேல்முறையீடொன்றைத் தள்ளுபடி செய்வதற்கு முன்பு, நீதிமன்றம் வழக்கின் பதிவுக் கட்டை அனுப்புமாறு கோரலாம்.

(3) இந்தப் பிரிவின்படி மேல்முறையீடொன்றைத் தள்ளுபடி செய்கின்ற மேல்முறையீட்டு நீதிமன்றம் ஒரு செஷன்ஸ் நீதிமன்றமாகவோ தலைமை நீதித்துறை நடுவரின் நீதிமன்றமாகவோ இருக்குமிடத்து, அது அவ்வாறு தான் செய்வதற்கான காரணங்களைப் பதிவு செய்தல் வேண்டும்.

(4) 383 ஆவது பிரிவின்படி தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடொன்று இந்தப் பிரிவின்படி உடனடியாகத் தள்ளுபடி செய்யப்பட்டிருந்து, அதே மேல்முறையீட்டாளரின் சார்பாக 382 ஆவது பிரிவின்படி உரியவகையில் தாக்கல் செய்யப்பட்ட வேறொரு மேல்முறையீட்டு மனு தன்னால் பரிசிலனை செய்யப்படவில்லை என்று மேல்முறையீட்டு நீதிமன்றத்திற்குத் தெரியுமிடத்து, அந்த நீதிமன்றம் 393 ஆவது பிரிவில் என்ன கண்டிருந்தபோதிலும் நீதியின் நலத்திற்காகச் செய்வது அவசியமென்று திருப்தி கொள்ளுமானால் அவ்வாறு சட்டத்தின்படி அத்தகைய மேல்முறையீட்டைக் கேட்டு முடிவு செய்யலாம்.

உடனடியாகத் தள்ளுபடி செய்யப்படாத மேல் முறையீடுகளைக் கேட்பதற்கான நடைமுறை.

385. (1) மேல்முறையீட்டு நீதிமன்றம் அம் மேல்முறையீட்டை உடனடியாகத் தள்ளுபடி செய்யவில்லையானால், அது அம் மேல்முறையீடு கேட்கப்படும் காலத்தையும் இடத்தையும் பற்றிய அறிவிப்பைப் பின்வருபவர்களுக்குக் கொடுக்கும்படி செய்தல் வேண்டும்:—

(i) மேல்முறையீட்டாளர் அல்லது அவரது வாதுரைஞர்;

(ii) மாநில அரசு இதன் பொருட்டு நியமிக்கலாகும் அலுவலர்;

(iii) மேல்முறையீடானது முறையீட்டின் பேரில் தொடரப்பட்ட வழக்கொன்றில் அளிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பிலிருந்து செய்து கொள்ளப்படுமேயின், அந்த முறையீட்டாளர்;

(iv) மேல்முறையீடானது 377 ஆவது பிரிவு அல்லது 378 ஆவது பிரிவின்படி செய்துகொள்ளப்படுமேயின், எதிரி;

மற்றும் அந்தவை அனைவருக்கும், முறையீட்டாளருக்கும் எதிரிக்கும் மேல்முறையீட்டு ஆதாரங்களின் நகலொன்றை அளித்தலும் வேண்டும்.

(2) மேல்முறையீட்டு நீதிமன்றம் அதற்குப்பின் அல் வழக்கின் பதிவுக் கட்டை, அது ஏற்கனவே அந்த நீதி மன்றத்தின் கைவசத்தில் இல்லையென்றால் அனுப்புமாறு கோருவதோடு தரப்பினர்களைக் கேட்கவும் வேண்டும்:

ஆனால், அம் மேல்முறையீடானது அத் தீர்ப்புத் தண்டனையின் அளவைப் பற்றியதாகவோ அல்லது சட்டபூர்வமான தன்மையைப் பற்றியதாகவோ மட்டுமே இருந்தால், நீதிமன்றம் அப் பதிவுக்கட்டை அனுப்பும்படி கோராமலேயே, மேல் முறையீட்டை முடிவு செய்யலாம்.

(3) தீர்ப்புத் தண்டனை கடுமையாக இருக்கிறதென்று சொல்லப்பட்டு அந்தக் கடுமை மாத்திரமே தண்டனைத் தீர்ப்பிலிருந்து செய்யப்படும் மேல்முறையீட்டுக்கான ஒரே ஆதாரமாக இருக்குமிடத்து மேல்முறையீட்டாளர், நீதிமன்றத்தின் அனுமதியுடன் அல்லாமல், வேறெந்த ஆதாரத்தைப் பற்றியும் வாதாடுதலோ அதற்கு அனுசரணையாக அவர் கேட்கப்படுதலோ கூடாது.

மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் அதிகாரங்கள்.

386. அத்தகைய பதிவுக்கட்டை பார்வையிட்டதற்குப் பின்பும், மேல்முறையீட்டாளர் அல்லது அவரது வாதுரைஞர் ஆஜராகியிருந்தால் அவரையும், அரசு குற்றத்துறை வழக்குரைஞர் ஆஜராகியிருந்தால் அவரையும், 377 ஆவது பிரிவு அல்லது 378 ஆவது பிரிவின்படி செய்யப்படும் மேல்முறையீட்டொன்றின் விஷயத்தில் எதிரி ஆஜராகியிருந்தால் அவரையும் கேட்டதற்குப் பின்பும் மேல்முறையீட்டு நீதி

மன்றம் தலையிடுவதற்குப் போதுமான ஆதாரம் எதுவும் இல்லை என்பதாகத் தான் கருதுமாயின், மேல்முறை யீட்டைத் தள்ளுபடி செய்யலாம், அல்லது—

(அ) விடுதலைக் கட்டளையொன்றிலிருந்து செய்யப்படும் மேல்முறையீடொன்றில், அத்தகைய கட்டளையை எதிர்முக மாக மாற்று, நிலைபெறத்திற்கேற்ப, மேற்கொண்டு விசாரணை செய்யப்பட வேண்டும் என்பதாகவோ, எதிரி மறுவிசாரணை செய்யப்பட வேண்டும் என்பதாகவோ, மேல் விசாரணைக்கு அனுப்பப்படவேண்டும் என்பதாகவோ உத்தரவிடலாம்; அல்லது அவர் குற்றவாளிதான் என்னும் முடிவுக்கு வந்து சட்டத்தின்படி அவருக்குத் தண்டனையை வழங்கலாம்.

(ஆ) தண்டனைத் தீர்ப்பிலிருந்து செய்யப்படும் மேல் முறையீடொன்றில்—

(i) முடிபையும் தீர்ப்புத் தண்டனையையும் எதிர் முகமாக மாற்றி எதிரியை விடுதலை செய்யலாம், அல்லது விட்டுவிடலாம்; அல்லது அவர் அத்தகைய மேல்முறையீட்டு நீதிமன்றத்திற்குக் கீழமைந்துள்ள தகுதியும் அதிகாரமும் கொண்ட நீதிமன்றத்தால் மறுவிசாரணை செய்யப்படவோ மேல் விசாரணைக்கு அனுப்பப்படவோ கட்டளையிடலாம்: அல்லது

(ii) தண்டனையை அப்படியே வைத்துக்கொண்டு முடிபை மாற்றலாம்; அல்லது

(iii) முடிபை மாற்றியோ மாற்றுமலோ தண்டனை யின் தன்மையை அல்லது அளவை அல்லது தன்மையையும் அளவையும் மாற்றலாம், ஆனால் அதை அதிகரிக்கும் முறை யில் அவ்வாறு செய்தல் ஆகாது;

(இ) தண்டனையை அதிகரிப்பதற்கான மேல்முறையீ டொன்றில்—

(i) முடிபையும் தண்டனையையும் எதிர்முகமாக மாற்றி எதிரியை விடுதலை செய்யலாம் அல்லது விட்டு விடலாம் அல்லது குற்றத்தை விசாரணை செய்யத் தகுதி வாய்ந்த நீதிமன்றத்தால் அவர் மறுவிசாரணை செய்யப்பட வேண்டுமென்று கட்டளையிடலாம், அல்லது

(ii) தண்டனையை அப்படியே வைத்துக்கொண்டு முடிபை மாற்றலாம், அல்லது

(iii) முடிபை மாற்றியோ மாற்றுமலோ தண்டனையை அதிகரிக்கின்ற முறையிலோ குறைக்கின்ற முறையிலோ அதன் தன்மையை அல்லது அளவை அல்லது அதன் தன்மையையும் அளவையும் மாற்றலாம்;

(ஈ) வேறெந்தக் கட்டளையிலிருந்தேனும் செய்யப்படும் மேல்முறையீடொன்றில், அத்தகைய கட்டளையை மாற்றவோ எதிர்முகமாக மாற்றவோ செய்யலாம்.

(உ) நியாயமானதாக அல்லது ஏற்றதாக இருக்கலாகும் நிருத்தம் எதையும் செய்யலாம், அல்லது பின்னிலைவான அல்லது இடைவிலைவான கட்டளை எதையும் பிறப்பிக்கலாம்:

ஆனால், தண்டனையை அதிகரிப்பதை எதிர்த்து காரணங் காட்டுவதற்கு எதிரிக்கு வாய்ப்பு இருந்திருந்தாலன்றி அத் தண்டனையானது அதிகரிக்கப்படுதல் ஆகாது.

மேலும் மேல்முறையீட்டு நீதிமன்றம் தன் கருத்தின்படி எதிரி செய்திருக்கின்ற குற்றத்திற்கு, மேல்முறையீட்டிற்குட் பட்டிருக்கிற கட்டளை அல்லது தண்டனையை மொங்கிய நீதி மன்றம் அந்தக் குற்றத்திற்காக சுமத்தக்கூடிய தண்டனையைக் காட்டிலும் அதிகமான தண்டனையை சுமத்துதல் ஆகாது

கீழ்நிலை மேல் முறையீட்டு நீதிமன்றத் தின்தீர்ப்புகள்.

387. அசல் அதிகார வரம்பு குற்றவழக்கு நீதிமன்றம் ஒன்றின் தீர்ப்பு பற்றி XXVII ஆவது அத்தியாயத்தில் அடங்கியுள்ள விதிகள், எந்த அளவிற்குச் சாத்தியமாகுமோ அந்த அளவிற்கு, செஷன்ஸ் நீதிமன்றத்தின் அல்லது தலைமை நீதித்துறை நடுவரின் மேல்முறையீட்டுத் தீர்ப்பின்மீது இயங்குதல் வேண்டும்:

ஆனால், மேல்முறையீட்டு நீதிமன்றம் வேறுவிதமாக உத்தரவிட்டாலன்றி வழங்கப்படும் தீர்ப்பைக் கேட்பதற்காக எதிரி கொண்டு வரப்படுதலோ, ஆஜராகுமாறு கோரப் படுதலோ ஆகாது.

மேல்முறை யீட்டின் பேரில் உயர் நீதி மன்றம் பிறப் பிக்கும் கட் டளை கீழ் நீதி மன்றத் திற்கு உறுதிச் சான்றளித்து அனுப்பப்படுதல்.

388. (1) வழக்கொன்று, இந்த அத்தியாயத்தின்படி உயர் நீதிமன்றத்தால் மேல்முறையீட்டின்பேரில் முடிவு செய்யப் படும்போதெல்லாம் எந்த முடிபு, தண்டனை அல்லது கட்டளையின் பேரில் மேல்முறையீடு செய்யப்பட்டதோ அந்த முடிபு, தண்டனை அல்லது கட்டளையைப் பதிவு செய்த அல்லது பிறப்பித்த நீதிமன்றத்திற்குத் தன் தீர்ப்பு அல்லது கட்டளையை உறுதிச் சான்றளித்து அனுப்புதல் வேண்டும்; மற்றும் அத்தகைய நீதிமன்றம் தலைமை நீதித்துறை நடுவ ரல்லாத நீதித்துறை நடுவரின் நீதிமன்றமாயிருப்பின் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்லது கட்டளை அத் தலைமை நீதித் துறை நடுவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்; மேலும்

அத்தகைய நீதிமன்றம் நிருவாகத் துறை நடுவரின் நீதிமன்ற மாயின் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்லது கட்டளை மாவட்ட நடுவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) எந்த நீதிமன்றத்திற்கு, உயர் நீதிமன்றம் தன் தீர்ப்பு அல்லது கட்டளையை உறுதிச்சான்றளித்து அனுப்புகிறதோ அந்த நீதிமன்றம் அதன்பேரில் அவ்வுயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்லது கட்டளைக்கு அனுசரணையாகவுள்ள கட்டளைகளைப் பிறப்பித்தல் வேண்டும், மற்றும் அவசியமானால் பதிவுக்கட்டும் அதற்கிணங்க திருத்தப்படுதல் வேண்டும்.

மேல்முறையீடு நடப்பிலிருக்கையில் தண்டனையை நிறுத்தி வைத்தல்; ஜாமீன் பேரில் மேல் முறையீட்டாளரை விடுவித்தல்.

389. (1) தண்டிக்கப்பட்ட ஒருவரால் செய்துகொள்ளப் பட்ட மேல்முறையீடு எதுவும் நடப்பிலிருக்கையில் மேல் முறையிட்டு நீதிமன்றம் எந்தத் தண்டனை அல்லது கட்டளையின்பேரில் மேல்முறையீடு செய்துகொள்ளப் பட்டிருக்கின்றதோ அந்தத் தண்டனை அல்லது கட்டளையை நிறைவேற்றுவதை நிறுத்திவைத்தல் வேண்டும் என்றும், அவர் சிறையிலடைத்து வைக்கப்பட்டிருப்பாராயின், ஜாமீன் பேரிலோ அவரது சொந்தப் பத்திரத்தின் பேரிலோ விடுவிக்கப்படவும் வேண்டும் என்றும் எழுத்துமூலம் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காகக் கட்டளை யிடலாம்.

(2) மேல்முறையீட்டு நீதிமன்றத்திற்கு இத்தப் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரத்தை உயர் நீதிமன்றமும், தனக்குக் கீழமைந்துள்ள நீதிமன்றத்திற்கு தண்டிக்கப்பட்ட ஒருவர் செய்துகொண்ட மேல்முறையீட்டின் விஷயத்தில் செலுத்தலாம்.

(3) தண்டிக்கப்பட்டவர் மேல்முறையிடுவதை நிறுத்தி தாக்கல் செய்யத் தாம் கருதியுள்ளதுபற்றி தம்மைத் தண்டித்த நீதிமன்றத்திற்குத் திருப்தியுண்டாக்குவாரேயானால், அந்த நீதிமன்றம்,—

(i) அத்தகையவர் ஜாமீனில் இருக்கும்போது மூன்றாண்டுகளுக்கு மேற்படாத காலத்திற்குச் சிறைத் தண்டனையளிக்கப்படுமிடத்து, அல்லது

(ii) எந்தக் குற்றத்திற்காக அத்தகையவர் தண்டிக்கப் பட்டிருக்கின்றாரோ அந்தக் குற்றமானது ஜாமீனில் விடுங் குற்றமாக இருந்து, அவரும் ஜாமீனில் இருக்குமிடத்து, ஜாமீன் மறுப்பதற்குச் சிறப்புக் காரணங்கள் இருக்கின்றன என்றாலன்றி, மேல்முறையீட்டைத் தாக்கல் செய்வதற்கும்

(1) அவ்வது உட்பிரிவின்படி மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளைகளைப் பெறுவதற்கும் போதுமான அவகாசத்தை அளித்தபின் கால அளவிற்குத் தண்டிக்கப்பட்டவர் ஜாமீன் மேரில் விடுவிக்கப்படவேண்டும் என்று கட்டளையிடுதல் வேண்டும்; மற்றும் சிறைத் தண்டனையானது, அவர் அவ்வாறு ஜாமீன் பேரில் விடுவிக்கப்பட்டிருக்கின்றவரையில், நிறுத்தி வைக்கப்படுவதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) மேல்முறையீட்டாளர் இறுதியில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கோ ஆயுட்காலத்திற்கோ சிறைத்தண்டனை அளிக்கப்படும்போது அவர் அவ்வாறு தண்டனையளிக்கப்படும் கால அளவைக் கணக்கிடும்போது அவர் அவ்வாறு விடுவிக்கப் பட்டிருந்த கால அளவை நீக்கிவிடுதல் வேண்டும்.

விரதவியிலிருந்து செய்யப்படும் மேல்முறையீட்டில் தீர்ப்பினைக் கைது செய்தல்.

390. மேல்முறையீடொன்று 378 ஆவது பிரிவின்படி தாக்கல் செய்யப்படும்போது, உயர் நீதிமன்றம் எதிரி கைது செய்யப் பட்டு தன் முன்னரோ கீழமைந்த நீதிமன்றம் எதனின் முன்னரோ கொண்டுவரப்படவேண்டும் என்று உத்தரவிட்டுப் பிடிகட்டளையொன்றைப் பிறப்பிக்கலாம்; எந்த நீதிமன்றத் தின்முன் அவர் கொண்டு வரப்படுகின்றாரோ அந்த நீதி மன்றம், மேல்முறையீடு முடிவு செய்யப்படும் வரையில் அவரைச் சிறைக்கு அனுப்பலாம்; அல்லது அவரை ஜாமீனில் விடலாம்.

மேல் முறையீட்டு நீதிமன்றம் மேற்கொண்டு சாட்சியத்தை எடுக்கலாம் அல்லது அதைஎடுக்கும்படி உத்தரவிடலாம்.

391. (1) இந்த அத்தியாயத்தின்படி மேல்முறையீடொன்றை நடத்துவதில் மேல்முறையீட்டு நீதிமன்றம், மேற்கொண்டு சாட்சியம் அவசியமாக இருக்கிறதென்று தான் நினைக்குமானால் தன் காரணங்களைப் பதிவு செய்தல் வேண்டும்: மற்றும் அத்தகைய சாட்சியத்தைத் தானே எடுக்கலாம் அல்லது நடுவர் ஒருவரால் எடுக்கப்படும்படியோ மேல்முறையீட்டு நீதிமன்றம் ஓர் உயர் நீதிமன்றமாக இருக்கும்போது, செஷன்ஸ் நீதிமன்றத்தால் அல்லது நடுவரொருவரால் எடுக்கப்படும்படியோ உத்தரவிடலாம்.

(2) மேற்கொண்டு சாட்சியமானது செஷன்ஸ் நீதிமன்றத்தால் அல்லது நடுவரால் எடுக்கப்படும்போது, அது அல்லது அவர் அத்தகைய சாட்சியத்திற்கு உறுதிச்சான்றளித்து மேல்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அனுப்புதல் வேண்டும்; மற்றும் அத்தகைய நீதிமன்றம் மேல்முறையீட்டை முடிவுசெய்ய மேல்நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(3) எதிரி அல்லது அவரது வாதுரைஞருக்கு, மேற் கொண்டு சாட்சியம் எடுக்கப்படும்போது உடனிருப்பதற்கு உரிமையுண்டு.

(4) இந்தப் பிரிவின்படி சாட்சியம் எடுப்பதானது, அது ஒரு பரிசீலனையாக இருந்தது போன்றே XXIII ஆவது அத்தியாயத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

கருத்து வேறுபடும் மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகளின் எண்ணிக்கை சரிசமமாயிருக்குமிடத்து நடைமுறை.

392. இந்த அத்தியாயத்தின்படி செய்யப்படும் மேல் முறையீடொன்று உயர் நீதிமன்றத்தால் நீதிபதிகளின் போராயத்தின் முன் கேட்கப்பட்டு அவர்கள் கருத்தால் வேறுபடும் போது, அந்த மேல்முறையீடு, அவர்களது கருத்துக்களுடன் சேர்த்து, அந்த நீதிமன்றத்தின் மற்றொரு நீதிபதி முன் இடப்படுதல் வேண்டும்; மற்றும் அந்த நீதிபதி, தான் பொருத்தமென நினைக்கும் கேள்விக்குப் பின்பு தம் கருத்தை விளம்புதல் வேண்டும்; மேலும் அந்தீர்ப்பு அல்லது கட்டளை அந்தக் கருத்தைப் பின்பற்றியமைதல் வேண்டும்:

ஆனால் போராயமாக அமைகின்ற நீதிபதிகளில் ஒருவர் அல்லது, அம் மேல்முறையீடு இந்தப் பிரிவின்படி மற்றொரு நீதிபதியின்முன் இடப்படுமிடத்து, அந்த நீதிபதி அவ்வாறு கோருவாராயல், அம் மேல்முறையீடு இன்னும் அதிக நீதிபதிகள் கொண்ட பெரும் போராயத்தால் மீண்டும் கேட்கப் பட்டு முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

மேல் முறையீட்டின் பேரில் பிறப்பிக்கப்படும் தீர்ப்பு மற்றும் கட்டளைகளின் முடிவான தன்மை.

393. மேல்முறையீடொன்றின்பேரில் ஒரு மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புகளும் கட்டளைகளும், 377 ஆவது பிரிவு, 378 ஆவது பிரிவு, 384 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவு அல்லது XXX ஆவது அத்தியாயத்தில் வகை செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் தவிர முடிவானவையாக இருக்கும்:

ஆனால் எந்த வழக்கிலேனும் தண்டனைத் தீர்ப்பின்பேரில் செய்யப்பட்ட மேல்முறையீடொன்றின் இறுதியான முடிவு எதுவாயிருந்தாலும், மேல்முறையீட்டு நீதிமன்றம் பின் வருவனவற்றைக் கேட்டு வழக்கின் தகுதிகளின்பேரில், முடிவு செய்யலாம்,—

(அ) ஒரே வழக்கிலிருந்து எழுகின்றதும், விடுதலையின் பேரில் 378 ஆவது பிரிவின்படி செய்யப்பட்டதுமான ஒரு மேல் முறையீடு, அல்லது

(ஆ) ஒரே மொழிகளிலிருந்து எழுகின்றதும் தண்டனை அதிகரிப்புக்காக 377 ஆவது பிரிவின்படி செய்யப்பட்டதுமான ஒரு மேல்முறையீடு.

மேல்முறையீடு அற்றுப் போதல்.

394. (1) 377 ஆவது பிரிவு 378 ஆவது பிரிவின்படி செய்து கொள்ளப்படும் மேல்முறையீடு ஒவ்வொன்றும் எதிரி மரணமடைந்ததும் முழுவாக அற்றுப்போகும்.

(2) அபராதத் தண்டனையிலிருந்து செய்துகொள்ளப்படும் ஒரு மேல்முறையீடு தவிர இந்த அத்தியாயத்தின்படி செய்து கொள்ளப்படும் வேறு மேல்முறையீடு ஒவ்வொன்றும் மேல்முறையீட்டாளர் மரணமடைந்ததும் முழுவாக அற்றுப் போகும்.

ஆனால், மேல்முறையீடானது தண்டனைத் தீர்ப்பின் பேரிலும் மரண தண்டனை அல்லது சிறைத் தண்டனையின் பேரிலும் செய்யப்பட்டதாக இருந்து, அம் மேல்முறையீடு நடப்பிலிருக்கும்போது மேல்முறையீட்டாளர் மரணமடையுமிடத்து அவரது நெருங்கிய உறவினர்களில் எவரேனும், அம் மேல் முறையீட்டாளரின் மரணத்திலிருந்து மூப்பது நாட்களுக்குள்ளாக, அம் மேல்முறையீட்டைத் தொடர்வதற்கான அனுமதிக்காக மேல்முறையீட்டு நீதிமன்றத்திற்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம்; அந்த அனுமதி வழங்கப்படுமாயின், அம் மேல்முறையீடு அற்றுப் போதல் ஆகாது.

விளக்கம்.—இந்தப் பிரிவில், "நெருங்கிய உறவினர்" என்பது பெற்றோர், வாழ்க்கைத்துணை, நேர்வழிச்சந்ததி, சகோதரன் அல்லது சகோதரி என்று பொருள்படும்.

அத்தியாயம் XXX.

மேல்முடிவுக்கு அனுப்புதலும் மேலாய்வும்.

உயர் நீதிமன்றத்தின் மேல் முடிவுக்கு அனுப்பி வைத்தல்.

395. (1) எந்த நீதிமன்றமேனும் தன்முன் நடப்பிலுள்ள ஒரு வழக்கில், ஏதேனுமொரு சட்டம், அவசரச் சட்டம் அல்லது ஒழுங்குமுறைச் சட்டம் செல்லுந்தன்மையதா அல்லது ஒரு சட்டம், அவசரச் சட்டம் அல்லது ஒழுங்கு முறைச் சட்டத்தில் அடங்கியுள்ள வகைமுறை ஏதேனும் செல்லுந்தன்மையதா என்பது பற்றி பிரச்சினை எழுகின்றது என்றும், அப் பிரச்சினையைத் தீர்மானிப்பது அந்த வழக்கை முடிவு செய்வதற்கு அவசியமாக இருக்கிறது என்றும் திருப்தி கொள்ளுமிடத்தும், மேலும் அத்தகைய சட்டம், அவசரச் சட்டம், ஒழுங்குமுறைச் சட்டம் அல்லது வகைமுறை செல்லாததாகவோ செயற்பாட்டில் இல்லாததாகவோ இருக்கிறது என்றும் ஆனால் எந்த உயர் நீதிமன்றத்திற்கு அந்த நீதிமன்றம் கீழமைந்திருக்கிறதோ அந்த உயர் நீதிமன்றத்தாலோ உச்ச நீதிமன்றத்தாலோ அவ்வாறு விளம்பப்பட்டிருக்கவில்லை என்றும் கருதுமிடத்தும், அந்த நீதிமன்றம் தன் கருத்தையும் அதற்கான காரணங்களையும் விவரமாக எடுத்துரைத்து உயர் நீதிமன்றத்தின் மேல்முடிவுக்காக, அனுப்புதல் வேண்டும்.

10/1897.

விளக்கம்.—இந்தப் பிரிவில், "ஒழுங்குமுறைச் சட்டம்" என்பது, 1897 ஆம் ஆண்டு பொது வகைமுறைகள் சட்டத்தில், அல்லது மாநிலமொன்றின் பொதுவகை முறைகள் சட்டத்தில் வரையறை செய்யப்பட்டபடியுள்ள எந்த ஒழுங்குமுறைச் சட்டமும் என்று பொருள்படும்.

(2) ஒரு செஷன்ஸ் நீதிமன்றம் அல்லது பெருநகர் நடுவர் (1) ஆவது உட்பிரிவின் வகைமுறைகள் இயங்காத வழக்கு ஏதேனும் தன்முன் நடப்பிலிருந்து, அவ் வழக்கில் தான் பொருந்தமென நினைத்தால், அவ் வழக்கு விசாரணையில் எழுகின்ற சட்டப் பிரச்சினை எதையேனும் உயர் நீதிமன்றத்தின் மேல்முடிவுக்கு அனுப்பலாம்.

(3) (1) ஆவது உட்பிரிவு அல்லது (2) ஆவது உட்பிரிவின்படி உயர் நீதிமன்றத்தின் மேல்முடிவுக்கு அனுப்புகின்ற நீதிமன்றம் எதுவும், அதன்பேரில் உயர் நீதிமன்றம் தீர்மானிக்கும்வரை, எதிரியைச் சிறைக்கு அனுப்பலாம்; அல்லது கோரும்போது ஜாமீனாவதாகத் தரப்படும் ஜாமீன் பேரில் அவரை விடுவிக்கலாம்.

உயர் நீதி மன்றத்தின் நிலைதிரும்ப வழக்கை முடிவுசெய்தல்.

396. (1) பிரச்சினையொன்று அவ்வாறு மேல்முடிவுக்கு அனுப்பப்பட்டிருக்கும்போது, உயர் நீதிமன்றம் அதன்பேரில் தான் பொருத்தமென நினைக்கும் கட்டளையைப் பிறப்பித்தல் வேண்டும்; மற்றும் அவ்வாறு சார்ந்த மேல்முடிவுக்கு அனுப்பிய நீதிமன்றத்திற்கு அந்தகைய கட்டளையின் நகலொன்றை அனுப்பும்படி செய்தல் வேண்டும்; அந்த நீதிமன்றம் மேற்சொன்ன கட்டளைக்கிணங்க அவ்வழக்கை முடிவு செய்தல் வேண்டும்.

(2) உயர் நீதிமன்றம் அவ்வாறு மேல் முடிவுக்கு விடுப்பியதால் ஏற்பட்ட செலவுத் தொகை எவரால் செலுத்தப்படுதல் வேண்டும் என்று உத்தரவிடலாம்.

மேலாவு அதிகாரங்களைச் செலுத்துவதற்காகப் பதிவுக் கூடங்களை அனுப்பக் கோருதல்.

397. (1) உயர் நீதிமன்றம் அல்லது சார்நிலை நீதிபதி எவரும், தம் மாட்டார அதிகாரவரம்புக்குள் அமைந்துள்ள குற்ற வழக்கு சிற்நிலை நீதிமன்றம் ஒன்றின் முன்னர் நடைபெறும் நடவடிக்கையில் பதிவு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட முடிவு தண்டனை அல்லது கட்டளையானது, சரியானது, சட்டச் நிலம் அல்லது பொருத்தமுடையதாக இருக்கிறதா என்றும் அந்த நீதிமன்றத்தின் நடவடிக்கைகள் முறைமையானவையாக உள்ளதா என்றும் தான் திருப்தி கொள்ளும் பொருட்டு அந்த நடவடிக்கையின் பதிவுக்கட்டை அனுப்பும்படி கோரி, பரிசீலனை செய்யலாம்; மற்றும் அப் பதிவுக்கட்டை அனுப்புமாறு கோரும்போது தண்டனை அல்லது கட்டளையை நிறைவேற்றுவதை நிறுத்திவைக்க வேண்டும் என்றும், எதிரி சிறையில் அடைக்கப்பட்டிருப்பாரானால், அப் பதிவுக்கட்டின் பரிசீலனை முடிவடையும் வரை, ஜாமீன்பேரிலோ அல்லது சொந்தப் பத்திரத்தின் பேரிலோ அவர் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிடலாம்.

விளக்கம்.—நடுவர்கள் அனைவரும், திருவாகத்துறை நடுவர்களாயிருந்தாலும் சரி, அல்லது நீதித்துறை நடுவர்களாயிருந்தாலும் சரி, அசல் அதிகாரவரம்பு செலுத்திவருகின்றவர்களாயிருந்தாலும் சரி, அல்லது மேன்முறையீட்டு அதிகாரவரம்பைச் செலுத்திவருகின்றவர்களாகயிருந்தாலும் சரி, இந்த உட்பிரிவின் பொருட்டும் 398 ஆவது பிரிவின் பொருட்டும் செஷன்ஸ் நீதிபதிக்குக் கீழ்நிலையிலுள்ளவர்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) (1) ஆவது உட்பிரிவில் வழங்கப்பட்ட மேலாய்வு அதிகாரங்களை, மேல்முறையீடு, பரிசிலனை, விசாரணை அல்லது வேறு நடவடிக்கை எதிலேனும் பிறப்பிக்கப்பட்ட இடைநிலைக் கட்டளை எதனின் சம்பந்தமாகவும் செலுத்துதல் ஆகாது.

(3) எவரேனும் இந்தப் பிரிவின்படி விண்ணப்பம் ஒன்றை உயர் நீதிமன்றத்திற்கோ செஷன்ஸ் நீதிபதிக்கோ செய்திருந்தால், அதே ஆளால் மேற்கொண்டு செய்யப்படும் விண்ணப்பம் எதுவும், அவர்களில் மற்றவரால் ஏற்றுக் கொள்ளப்படுதல் ஆகாது.

பரிசிலனை செய்ய கட்டளையிடுவதற்குள்ள அதிகாரம்.

398. 397 ஆவது பிரிவின்படியோ வேறுவிதமாகவோ பதிவுக்கட்டு எதையேனும் பரிசிலனை செய்ததன் பேரில், 203 ஆவது பிரிவின்படி அல்லது 204 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் தன்மைபடி செய்யப்பட்டிருக்கின்ற முறையீடு அல்லது குற்றம் சுமத்தப்பட்டிருந்து விட்டுவிடப் பட்டுள்ள எவர் மீதுமுள்ள வழக்கைப் பரிசிலனை செய்யுமாறு தலைமை நீதித்துறை நடுவரையோ அவருக்குக் கீழமைந்த நடுவர்களில் எவரையேனுமோ உயர் நீதிமன்றம் அல்லது செஷன்ஸ் நீதிபதி உத்தரவிடலாம்; மற்றும் நடுவர் தாமே அவ்வாறே செய்யலாம் அல்லது தமக்குக் கீழமைந்த நடுவர் எவரையேனும் அவ்வாறு செய்யுமாறு உத்தரவிடலாம்:

ஆனால், விட்டுவிடப்பட்டுள்ள ஒருவரின் வழக்கைப் பரிசிலனை செய்வதற்காக இந்தப் பிரிவின்படி உத்தரவு என்பிறப்பிக்கப்படக்கூடாது என்பதற்குக் காரணங்காட்டுவதற்கு அத்தகையவருக்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி அத்தகைய உத்தரவு எதையும் நீதிமன்றம் பிறப்பித்தல் ஆகாது.

செஷன்ஸ் நீதிபதியின மேலாய்வு அதிகாரங்கள்.

399. (1) எந்த நடவடிக்கையின் பதிவுக்கட்டை அனுப்புமாறு தாம் கோரியிருக்கின்றாரோ அந்த நடவடிக்கை எதனின் விஷயத்திலும், செஷன்ஸ் நீதிபதி 401 ஆவது பிரிவின் (1) ஆவது உட்பிரிவின்படி உயர் நீதிமன்றத்தால் செலுத்தப்படலாகும் அதிகாரங்கள் அனைத்தையும் அல்லது எதையேனும் செலுத்தலாம்.

(2) மேலாய்வு என்னும் வகையில் நடவடிக்கை எதேனும் (1) ஆவது உட்பிரிவின்படி செஷன்ஸ் நீதிபதியின் முன் தவக்கப்படுமிடத்து, 401 ஆவது பிரிவின் (2), (3), (4) மற்றும் (5) ஆகிய உட்பிரிவுகளின் வகைமுறைகள், கூடிய

அனைத்து, அந்தகைய நடவடிக்கைகள் பரிசீலிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் மேற்சொன்ன உட்பிரிவுகளில் உயர் நீதி மன்றத்தைச் சுட்டும்போதெல்லாம் செஷன்ஸ் நீதிபதியைச் சுட்டுவதாகப் பொருள்கொள்ளுதல் வேண்டும்.

(3) செஷன்ஸ் நீதிபதியின் முன் எவரேனும் அப்படி எவரது சார்பாகவேனும் மேலாய்வுக்கான விண்ணப்பம் எதேனும் செய்யப்படுமிடத்து, அந்தகையவர் சம்பந்தமாக அதன்பேரில் செஷன்ஸ் நீதிபதி செய்யும் நிர்மானம் நிரந்தரமுடிபாகும்; மற்றும் அத்தகையவர் முறையிடுவாரானால், மேலாய்வு என்னும் வகையில் மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் உயர் நீதிமன்றத்தாலோ வேறு நீதி மன்றத்தாலோ எடுக்கப்படுதல் ஆகாது.

கூடுதல் செஷன்ஸ் நீதிபதியின் அதிகாரம்.

400. ஒரு கூட்டு செஷன்ஸ் நீதிபதி, செஷன்ஸ் நீதிபதியின் பொது அல்லது சிறப்புக்கட்டளை எதனாலேனும் அல்லது எதன்படியேனும் தமக்கு மாற்றப்படலாகும் வழக்கு எதையும் பொறுத்து, இந்த அத்தியாயத்தின்படி செஷன்ஸ் நீதிபதி ஒருவருக்குள்ள அதிகாரங்கள் அனைத்தையும் கொண்டவராயிருப்பார்; மற்றும் அவற்றைச் செலுத்தவும் செய்யலாம்.

உயர் நீதி மன்றத்தின் மேலாய்வு அதிகாரங்கள்.

401. (1) எந்த நடவடிக்கையின் பதிவுக்கட்டை அனுப்பு மாறு தானே கோரியிருக்கின்றதோ அல்லது எந்த நடவடிக்கை பற்றி வேறுவிதமாகத் தனக்குத் தெரிய வந்திருக்கின்றதோ, அந்த நடவடிக்கை ஏதொன்றின் விஷயத்திலும், உயர் நீதிமன்றம், தன் யுக்தம்போல், 386, 389, 390 மற்றும் 391 ஆகிய பிரிவுகளால் ஒரு மேல்முறையீட்டு நீதிமன்றத்திற்கோ 307 ஆவது பிரிவினால் ஒரு செஷன்ஸ் நீதிமன்றத்திற்கோ வழங்கப்பட்ட அதிகாரங்களில் எதையும் செலுத்தலாம்; மற்றும் கருத்து வேறுபாட்டினால் மேலாய்வு நீதிமன்ற நீதிபதிகள் சமபாகமாகப் பகுபட்டிருக்கும்போது, அவ் வழக்கு 392 ஆவது பிரிவினால் வகைசெய்யப்பட்ட முறையில் முடிவு செய்யப்படுதல் வேண்டும்.

(2) எதிரியோ மற்றவரோ நேர்முகமாக அல்லது அவரது எதிர்வாதத்திற்காக வாதுரைஞர் மூலமாகக் கேட்கப் படுவதற்கு அவருக்கு வாய்ப்பொன்று கொடுக்கப் பட்டிருந்தாலன்றி இந்தப் பிரிவின்படியான கட்டளை எதுவும் அவருக்குப் பாதகமாகப் பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(3) இந்தப் பிரிவிலுள்ள எதுவும், விடுதலை முடிபைத் தண்டனைத் தீர்ப்பு முடிபாக மாற்ற உயர் நீதிமன்றத்திற்கு அதிகாரமளிப்பதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

(4) இந்தச் சட்டத்தின்படி மேல்முறையீடு ஒன்று போடக்கூடியதாயிருந்து மேல்முறையீடு எதுவும் செய்யப் படாத விடத்து எந்தத் தரப்பினர் மேல்முறையீடு செய்திருக்கக்கூடுமோ அந்தத் தரப்பினர் கோரிக்கையின் பேரில் மேலாய்வு என்ற முறையில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுதல் ஆகாது.

(5) இந்தச் சட்டத்தின்படி மேல்முறையீடொன்று போடலாமாயிருந்து ஆனால் உயர் நீதிமன்றத்திற்கு மேலாய்வுக்கான விண்ணப்பமொன்றை எவரேனும் போட்டிருந்தால் உயர் நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு எதுவும் போட முடியாது என்னும் தவறான நம்பிக்கையின் பேரில் அவ்விண்ணப்பம் செய்யப்பட்டது என்றும் மேலாய்வுக்கான அவ்விண்ணப்பத்தை மேல்முறையீட்டு மனுவாகப் பாவித்து அதை அவ்வாறே மேல்நடத்துவது நீதியின் நலத்திற்கு அவசியமாக இருக்கிறது என்றும் உயர் நீதிமன்றம் திருப்திகொள்ளுமிடத்து அந்த உயர் நீதிமன்றம் அவ்வாறே செய்யலாம்.

மேலாய்வு வழக்குகளைத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்கோ மாற்றுவதற்கோ உயர் நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்.

402. (1) ஒரே விசாரணையில் தண்டிக்கப்பட்ட ஒருவர் அல்லது ஒருவருக்கு மேற்பட்டவர்கள் மேலாய்வுக்காக உயர் நீதிமன்றத்திற்கு விண்ணப்பஞ்செய்து, அதே விசாரணையில் தண்டிக்கப்பட்ட வேறெவரேனும் மேலாய்வுக்காக செஷன்ஸ் நீதிபதிக்கு விண்ணப்பம் செய்துகொள்ளும்போதெல்லாம் தரப்பினர்களின் பொது வசதியையும் சம்பந்தப்பட்டுள்ள பிரச்சினைகளின் முக்கியத்துவத்தையும் கவனத்திற்கொண்டு அந்த இரு நீதிமன்றங்களில் எது மேலாய்வுக்கான விண்ணப்பங்களை இறுதியாக முடிவு செய்தல் வேண்டும் என்பதை உயர் நீதிமன்றம் நிர்மானித்தல் வேண்டும்; மற்றும் மேலாய்வுக்கான விண்ணப்பங்கள் அனைத்தும்

தன்னிலேயே முடிவு செய்யப்படவேண்டும் என்று உயர் நீதி மன்றம் தீர்மானிக்கின்றபோது, செஷன்ஸ் நீதிபதியின் முன் நடப்பிலுள்ள மேலாய்வுக்கான விண்ணப்பங்கள் தனக்கே மாற்றப்படவேண்டும் என்பதாக உயர் நீதிமன்றம் உத்தர விடுதல் வேண்டும்; மேலும் மேலாய்வுக்கான விண்ணப்பங் களை முடிவு செய்வது தனக்கு அதிகமானது என்று உயர் நீதிமன்றம் தீர்மானிக்குமிடத்து, அது தன்னிடம் செய்து கொள்ளப்பட்ட மேலாய்வுக்கான விண்ணப்பங்கள் செஷன்ஸ் நீதிபதிக்கு மாற்றப்பட வேண்டும் என்று உத்தரவிடுதல் வேண்டும்.

(2) மேலாய்வுக்கான விண்ணப்பம் ஒன்று உயர் நீதி மன்றத்திற்கு மாற்றப்படும்போதெல்லாம், அந்த நீதிமன்றம், அது தன் முன்னிலையே உரியமுறையில் செய்துகொள்ளப் பட்ட விண்ணப்பமாக இருந்தது போன்றே அதை நடத்துதல் வேண்டும்.

(3) மேலாய்வுக்கான விண்ணப்பம் எதேனும் செஷன்ஸ் நீதிபதிக்கு மாற்றப்படும்போதெல்லாம், அந்த நீதிபதி, அது தம் முன்னிலையே உரியவாறு செய்து கொள்ளப்பட்ட விண்ணப்பமாக இருந்தது போன்றே அதை நடத்துதல் வேண்டும்.

(4) மேலாய்வுக்கான விண்ணப்பமொன்று உயர் நீதி மன்றத்தால் செஷன்ஸ் நீதிபதிக்கு மாற்றப்படுமிடத்து, மேலாய்வுக்கான எவரது விண்ணப்பங்கள் செஷன்ஸ் நீதிபதியால் முடிவு செய்யப்படுகின்றனவோ அவர் அல்லது அவர்களின் கோரிக்கையின் பேரில், உயர் நீதிமன்றத்திற்கோ வேறு நீதிமன்றத்திற்கோ மேற்கொண்டு மேலாய்வுக்கான விண்ணப்பம் எதுவும் போடப்படுதல் ஆகாது.

தரப்பினர் தங்கள் கேட்பது நீதிமன்றத்தின் விருப்பத்தைப் பொறுத்தது என்பது.

403. இந்தச் சட்டத்தால் வேறுவிதமாக வெளிப்படையாக வகைசெய்யப்பட்டாலன்றி, தன் மேலாய்வு அதிகாரங்களைச் செலுத்துகின்ற எந்த நீதிமன்றத்தின் முன்னிலையிலும், நேர்முகமாகவோ வாதுரைஞர் மூலமாகவோ கேட்கப்படும் உரிமை எதுவும் தாப்பினர் எவருக்கும் கிடையாது; ஆனால் நீதிமன்றம், தான் பொருத்தமென நினைத்தால், அத்தகைய அதிகாரங்களைச் செலுத்தும்போது, தரப்பினர் எவரையும் நேர்முகமாகவோ வாதுரைஞர் மூல மாகவோ கேட்கலாம்.

தம் தீர்மானத்திற்கான ஆதாரங்களைக் குறித்துப் பெருநகர் நடுவர் தரும் உரையை உயர் நீதிமன்றத்தால் பரிசீலனை செய்தல்.

404. பெருநகர் நடுவர் ஒருவரால் நடத்தப்பட்ட விசாரணை முடிவுறுமொன்றின் பதிவுக்கட்டை அனுப்புமாறு 397 ஆவது பிரிவின்படி, உயர் நீதிமன்றத்தால் அல்லது செஷன்ஸ் நீதிமன்றத்தால் கோரப்படும்போது, நடுவர் அந்தப் பதிவுக் கட்டுடன், தம் தீர்மானம் அல்லது கட்டளையின் ஆதாரங்களையும் பிரச்சினைக்கு முக்கியமானவையென்று தாம் நினைக்கும் சங்கதிகள் எவற்றையும் விவரித்து உரையொன்றையும் பணிந்தனுப்பலாம்; நீதிமன்றம் மேற்சொன்ன தீர்மானம் அல்லது கட்டளையை நிராகரிப்பதற்கு அல்லது நீக்குவதற்கு முன்பு, அந்த உரையைப் பரிசீலனை செய்தல் வேண்டும்.

உயர் நீதிமன்றத்தின் கட்டளை, கீழ் நீதிமன்றத்திற்கு உறுதிச் சான்றளித்து அனுப்பப்படுதல்.

405. வழக்கொன்று இந்த அத்தியாயத்தின்படி உயர் நீதிமன்றத்தால் அல்லது செஷன்ஸ் நீதிபதியால் மேலாய்வு செய்யப்படும்போது, அது அல்லது அவர், மேலாய்வு செய்யப்பட்ட முடிவை, தண்டனை அல்லது கட்டளையானது எந்த நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்டதோ அல்லது பிறப்பிக்கப்பட்டதோ அந்த நீதிமன்றத்திற்கு, 388 ஆவது பிரிவினால் வகை செய்யப்பட்ட முறையில் தன் தீர்மானம் அல்லது கட்டளைக்கு உறுதிச் சான்றளித்து அனுப்புதல் வேண்டும்; மற்றும் அத் தீர்மானம் அல்லது கட்டளை அவ்வாறு உறுதிச்சான்றளித்து எந்த நீதிமன்றத்திற்கு அனுப்பப்படுகிறதோ அந்த நீதிமன்றம் அதன் பேரில் அவ்வாறு உறுதிச் சான்றளிக்கப்பட்ட தீர்மானத்திற்கு இணங்கிய முறையில் கட்டளைகளைப் பிறப்பித்தல் வேண்டும்; மேலும் அவசியமானால், அப் பதிவுக்கட்டு அதற்கிணங்கத் திருத்தப்படுதலும் வேண்டும்.

அத்தியாயம் XXXI.

குற்ற வழக்குகளை மாற்றுதல்.

வழக்குகளையும் மேன்முறை யீடுகளையும் மாற்றுவதற்கு உச்ச நீதி மன்றத்திற் குள்ள அதிகாரம்.

406. (1) இந்தப் பிரிவின்படி கட்டளையொன்று பிறப்பிப்பது நீதியின் நோக்கத்திற்கு உகந்தது என்று உச்ச நீதிமன்றத்திற்குத் தெரியவரும்போதெல்லாம், குறிப்பிட்ட வழக்கு அல்லது மேன்முறையீடு எதுவும், ஓர் உயர் நீதி மன்றத்திலிருந்து மற்றோர் உயர் நீதிமன்றத்திற்கு அல்லது ஓர் உயர் நீதிமன்றத்திற்குக் கீழமைந்துள்ள ஒரு குற்ற வழக்கு நீதிமன்றத்திலிருந்து சமமான அல்லது மேல்நிலை அதிகாரங் கொண்டுள்ளதும் மற்றோர் உயர் நீதிமன்றத்திற்குக் கீழமைந்துள்ளதுமான மற்றொரு குற்ற வழக்கு நீதிமன்றத்திற்கு மாற்றப்படவேண்டும் என்று அது உத்தரவிடலாம்.

(2) உச்ச நீதிமன்றம், இந்தியாவின் தலைமை வழக்குரைஞரின் அல்லது அக்கறை கொண்டுள்ள தரப்பினரின் விண்ணப்பத்தின்பேரில் மட்டுமே இந்தப் பிரிவின்படி நடவடிக்கை எடுக்கலாம்; மற்றும் அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றும் விண்ணப்பதாரர் இந்தியாவின் தலைமை வழக்குரைஞராக அல்லது மாநிலத்தின் தலைமை வழக்குரைஞராக இருந்தாலன்றி பிரமாணப் பத்திரம் அல்லது உறுதி மொழியை ஆதாரமாகக் கொண்டுள்ள கோரிக்கையாக இருத்தல் வேண்டும்.

(3) இந்தப் பிரிவுல் வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்துவதற்காகச் செய்துகொள்ளப்படும் விண்ணப்பம் எதுவும் தள்ளுபடி செய்யப்படுமிடத்து, உச்ச நீதிமன்றம், அவ்விண்ணப்பம் அற்பத்தனமாகவோ அலைக்கழித்தலுக்காகவோ செய்யப்பட்டது என்று தான் கருதுமானால் ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாத வழக்கின் சூழ்நிலைகளில் உரியதென்று தான் கருதக்கூடிய தொகையை, அவ் விண்ணப்பத்தை எதிர்த்திருக்கிற எவருக்கும், நஷ்ட ஈடு என்ற முறையில் செலுத்துமாறு விண்ணப்பதாரருக்குக் கட்டளையிடலாம்.

வழக்குகளையும் மேன்முறையீடுகளையும் மாற்றுவதற்கு உயர்நீதி மன்றத்திற் குள்ள அதிகாரம்.

407. (1) உயர் நீதிமன்றம்—

(அ) தனக்குக் கீழமைந்துள்ள குற்றவழக்கு நீதி மன்றத்தில், நேர்மையான பாரபட்சமற்ற பரிசீலனை அல்லது விசாரணைக் கிட்டாது என்பதாக; அல்லது

(ஆ) அசாதாரணமான காரணத்தோடு கூடிய சட்டப் பிரச்சினை ஏதேனும் எழக்கூடும் என்பதாக; அல்லது

(இ) இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் ஏதாவதொன்று இந்தப் பிரிவின்படி கட்டளையொன்றைப் பிறப்பிக்க வேண்டுமென்று கோருவதாக இருக்கிறது என்றோ, தரப்பினர்கள் அல்லது சாட்சிகளின் பொதுவான வசதிக்கு ஏற்றதாக இருக்கிறது என்றோ நீதியின் நோக்கத் திற்கு உகந்ததாக இருக்கிறது என்றோ தனக்குத் தெரிய வரும்போதெல்லாம்,—

அது—

(i) 177 முதல் 185 வரையுள்ள பிரிவுகளின்படி (இரண்டு பிரிவுகளும் உள்ளடங்கலாக) திறமில்லாததும் ஆனால், மற்ற வகைகளில் குற்றமொன்றைப் பரிசீலனை அல்லது விசாரணை செய்வதற்குத் தகுதியுடையதுமான நீதி மன்றத்தால் அத்தகைய குற்றம் எதுவும் பரிசீலனை அல்லது விசாரணை செய்யப்பட வேண்டும் என்பதாக;

(ii) குறிப்பிட்ட வழக்கு அல்லது மேல்முறையீடு அல்லது வழக்குகள் அல்லது மேல்முறையீடுகளின் வகை எதுவும், தன் அதிகாரத்திற்குட்பட்ட கீழமைந்துள்ள குற்ற வழக்கு நீதிமன்றத்திலிருந்து, சமமான அல்லது மேல்நிலை அதிகார வரம்புகொண்டுள்ள வேறெந்தக் குற்றவழக்கு நீதி மன்றத்திற்கேனும் மாற்றப்படவேண்டும் என்பதாக;

(iii) குறிப்பிட்ட வழக்கு எதுவும் மேல் விசாரணைக் காக, செஷன்ஸ் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படவேண்டும் என்பதாக; அல்லது

(iv) குறிப்பிட்ட வழக்கு அல்லது மேல்முறையீடு, தன்னிடமே மாற்றப்பட்டு தன்முன் விசாரணை செய்யப்பட வேண்டும் என்பதாக உத்தரவிடலாம்.

(2) உயர் நீதிமன்றம் கீழ் நீதிமன்றத்தின் அறிக்கையின் பேரிலோ, அக்கறை கொண்டுள்ள தரப்பினர் ஒருவரின் விண்ணப்பத்தின் பேரிலோ, தானே முற்பட்டோ செயற்படலாம்:

ஆனால், ஒரு குற்றவழக்கு நீதிமன்றத்திலிருந்து அம்மு செஷன்ஸ் பிரிவிலுள்ள மற்றொரு குற்றவழக்கு நீதிமன்றத் திற்கு வழக்கொன்றை மாற்றுதற்கான விண்ணப்பம் எதுவும், அத்தகைய மாற்றுதலுக்கான விண்ணப்பம் ஒன்று

செஷன்ஸ் நீதிபதிக்குச் செய்துகொள்ளப்பட்டு அவரால் நிராகரிக்கப்பட்டிருந்தாலன்றி, உயர் நீதிமன்றத்திற்குச் செய்துகொள்ளப்படுதல் ஆகாது.

(3) (1) ஆவது உட்பிரிவின்படி கட்டளை, ஒன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், விண்ணப்பதாரர் மாதிலத்தின் நலனை வழக்குரைஞராக இருந்தாலன்றி, பிரமாணப் பத்திரம் அல்லது உறுதிமொழியை ஆதாரமாகக் கொண்டுள்ள கோரிக்கையின்பேரில் செய்யப்படுதல் வேண்டும்.

(4) அத்தகைய விண்ணப்பம் ஓர் எதிரியால் செய்து கொள்ளப்படும்போது, உயர் நீதிமன்றம், 7-ஆவது உட்பிரிவின்படி தான் வழங்கலாகும் நஷ்ட ஈடு எதனையும் செலுத்துவதற்காக ஜாமீன்தார்களுடனே இல்லாமலோ பத்திரமொன்றை எழுதிக்கொடுக்குமாறு அவருக்கு உத்தரவிடலாம்.

(5) அத்தகைய விண்ணப்பத்தைச் செய்துகொள்ளுகின்ற எதிரி ஒவ்வொருவரும், அவ் விண்ணப்பத்தைப்பற்றி, எந்த ஆதாரங்களின்பேரில் அது செய்யப்படுகிறதோ அந்த ஆதாரங்களின் நகலொன்றுடன் சேர்த்து, எழுத்துமூலமான அறிவிப்பை அரசுக் குற்றத் துறை வழக்குரைஞருக்குக் கொடுத்தல் வேண்டும்; மற்றும் அத்தகைய அறிவிப்பு கொடுத்ததற்கும் அவ்விண்ணப்பம் விசாரிக்கப்படுவதற்கும் இடையே குறைந்தது இருபத்து நான்கு மணி நேரமேனும் கடந்திருந்தாலன்றி அவ்விண்ணப்பத்தின் தகுதிகளின் பேரில் கட்டளையெதுவும் பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(6) விண்ணப்பமானது கீழமைந்த நீதிமன்றம் ஒன்றிலிருந்து ஒரு வழக்கை அல்லது மேல்முறையீட்டை மாற்றுவதற்காகச் செய்துகொள்ளப்படுமிடத்து உயர் நீதிமன்றம் நீதியின் நலத்திற்காக அவ்வாறு செய்வது அவசியமாக இருக்கிறது என்று தான் திருப்தி கொள்ளுமாயின், அவ் விண்ணப்பம் முடிவு செய்யப்படும் கீழமைந்த நீதிமன்றத்தில் நடக்கும் நடவடிக்கைகள், விதிக்கத்தக்கதென அவ்வுயர்நீதிமன்றம் நினைக்கலாகும் நிபந்தனைகளின் பேரில் நிறுத்திவைக்கப்படவேண்டும் என்பதாகக் கட்டளையிடலாம்.

ஆனால், அவ்வாறு நிறுத்திவைப்பதானது, 309 ஆவது பிரிவின்படி, காவலில் வைப்பதற்கு அக் கிழமைந்த நீதி மன்றத்திற்குள்ள அதிகாரத்தைப் பாதித்தல் ஆகாது.

(7) (1) ஆவது உட்பிரிவின்படி கட்டளை ஒன்றுக்கான விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படுமிடத்து, உயர் நீதி மன்றம் அவ் விண்ணப்பம் அற்பத்தனமானது அல்லது அலைக்கழித்தலுக்காகச் செய்யப்படுகிறது என்பதாகக் கருதுமானால் ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாது வழக்கின் சூழ்நிலைகளில் எற்றதெனத் தான் எண்ணலாகும் தொகையை அவ் விண்ணப்பத்தை எதிர்த்திருக்கிற எவருக்கும் நஷ்ட ஈடு என்னும் முறையில் செலுத்துமாறு விண்ணப்பதாரருக்குக் கட்டளையிடலாம்.

(8) வழக்கொன்று எந்த நீதிமன்றத்திலிருந்தேனும் விசாரணைக்காக தன்முன் மாற்றப்பட வேண்டும் என்பதாக (1) ஆவது உட்பிரிவின்படி உயர்நீதிமன்றம் கட்டளையிடும் போது, அது அவ்வழக்கு அவ்வாறு மாற்றப்படாமலிருந்திருப்பின் அந்த நீதிமன்றம் கடைப்பிடித்திருக்கக்கூடிய அதே நடைமுறையை அத்தகைய விசாரணையிலும் கடைப் பிடித்தல் வேண்டும்.

(9) இந்தப் பிரிவிலுள்ள எதுவும், 197 ஆவது பிரிவின் படி பிறப்பிக்கப்படும் அரசாங்கத்தின் கட்டளை எதையும் பாதிப்பதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

வழக்குகளையும் மேல்முறையீடுகளையும் மாற்றுவதற்கு செஷன்ஸ் நீதிபதிக்குள்ள அதிகாரம்.

408. (1) இந்த உட்பிரிவின்படி கட்டளை ஒன்றைப் பிறப்பிப்பது நீதியின் குறிக்கோளுக்கு உகந்தது என்பதாக நீதி பதிக்குத் தெரியப்படுத்தப்படும்போதெல்லாம், அவர் குறிப்பிட்ட எந்த வழக்கேனும் தம் செஷன்ஸ் பிரிவிலுள்ள குற்ற வழக்கு நீதிமன்றம் ஒன்றிலிருந்து மற்றொரு குற்றவழக்கு நீதி மன்றத்திற்கு மாற்றப்படுதல் வேண்டும் என்று கட்டளை யிடலாம்.

(2) செஷன்ஸ் நீதிபதி, கீழ் நீதிமன்றத்தின் அறிக்கையின்பேரிலோ, அக்கறைகொண்டுள்ள தரப்பினர் ஒருவரின் விண்ணப்பத்தின்பேரிலோ தாமே முற்பட்டோ செயற்படலாம்.

(3) 407 ஆவது பிரிவின் (3), (4), (5), (6), (7) மற்றும் (8) ஆகிய உட்பிரிவுகளின் வகைமுறைகள் 407 ஆவது பிரிவின் (1) ஆவது உட்பிரிவின்படியான கட்டளை ஒன்றுக்காக உயர் நீதிமன்றத்திற்குச் செய்துகொள்ளப்பட்ட விண்ணப்பம் ஒன்றின் சம்பந்தமாக இயங்குவன போன்றே, அந்த வகைமுறைகள் (1) ஆவது உட்பிரிவின்படி கட்டளை ஒன்றுக்காக செஷன்ஸ் நீதிபதிக்குச் செய்துகொள்ளப்படும் விண்ணப்பம் ஒன்றின் சம்பந்தமாகவும் இயங்குதல் வேண்டும். ஆனால் அந்தப் பிரிவின் (7) ஆவது உட்பிரிவில் வருகின்ற "ஆயிரம் ரூபாய்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இருநூற்றைம்பது ரூபாய்" என்னுஞ்சொற்கள் சேர்க்கப்பட்டன போன்று அவ்வாறே இயங்குதல் வேண்டும்.

வழக்குகள் மறுக்கும் மேல் முறையீடுகளை செஷன்ஸ் நீதிபதிகள் திருப்பப் பெற்றுக் கொள்ளுதல்.

409. (1) செஷன்ஸ் நீதிபதி ஒருவர் தாக்குந் தகுதியுள்ள உதவி செஷன்ஸ் நீதிபதி அல்லது தலைமை நீதித்துறை நடுவர் எவரிடமிருந்தும் வழக்கு அல்லது மேல் முறையீடு எதையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்; அல்லது அவருக்குந் தாம் மாற்றிவைத்துள்ள வழக்கு அல்லது மேல் முறையீடு எதையும் மீண்டும் அனுப்புமாறு கோரலாம்.

(2) கூட்டு செஷன்ஸ் நீதிபதியின் முன் வழக்கின் விசாரணையோ மேல்முறையீட்டின் கேள்வியோ தொடங்குவதற்கு முன்பு எந்த நேரத்திலும், செஷன்ஸ் நீதிபதி ஒருவர் கூட்டு செஷன்ஸ் நீதிபதி எவருக்கும் தாம் மாற்றி வைத்துள்ள வழக்கு அல்லது மேல்முறையீடு எதையும் மீண்டும் அனுப்புமாறு கோரலாம்.

(3) செஷன்ஸ் நீதிபதியொருவர் (1) ஆவது உட்பிரிவு அல்லது (2) ஆவது உட்பிரிவின்படி வழக்கு அல்லது மேல் முறையீடொன்றைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுமிடத்து அல்லது மீண்டும் அனுப்புமாறு கோருமிடத்து, அவர் தம் நீதிமன்றத்திலேயே அவ் வழக்கை விசாரித்தலோ தாமே அம் மேல்முறையீட்டைக் கேட்டலோ செய்யலாம், அல்லது நிலவரத்திற்கேற்ப, விசாரணைக்காகவோ கேள்விக்காகவோ மற்றொரு நீதிமன்றத்திற்கு இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி அதை மாற்றி வைக்கலாம்.

நீதித்துறை நடுவர்கள் வழக்குகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளுதல்.

410. (1) தலைமை நீதித்துறை நடுவர் எவரும், தமக்குக் கீழமைந்துள்ள நடுவர் எவரிடமிருந்தும் வழக்கு எதனையும் திரும்பப் பெற்றுக்கொண்டு அல்லது அத்தகைய எவருக்கேனும் தாம் மாற்றிவைத்துள்ள வழக்கு எதையும் மீண்டும் அனுப்பக்கோரி, அத்தகைய வழக்கைத் தாமே பரிசீலனை அல்லது விசாரணை செய்யலாம்; அல்லது அதைப் பரிசீலனை அல்லது விசாரணை செய்யத் தகுதி வாய்ந்துள்ள வேறெந்த நடுவருக்கேனும் பரிசீலனை அல்லது விசாரணைக்காக அதைச் சாட்டியனுப்பலாம்.

(2) நீதித்துறை நடுவர் எவரும் 192 ஆவது பிரிவின் (2) ஆவது உட்பிரிவின்படி தம்மால் மாற்றி வைக்கப்பட்டுள்ள வழக்கு எதையும் மீண்டும் அனுப்பக்கோரலாம்; மற்றும் அத்தகைய வழக்கைத் தாமே பரிசீலனையோ விசாரணையோ செய்யலாம்.

திருவாளர் முதல் நடுவர்களின் வழக்கு களை மாற்றி வைத்தல் அல்லது திரும்பப் பெற்றுக் கொள்ளுதல்.

411. மாவட்ட நடுவர் அல்லது உட்கோட்ட நடுவர் எவரும்—

(அ) தம்முன் தொடக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை எதையும், முடிவு செய்வதற்காகத் தமக்குக் கீழமைந்த நடுவர் எவருக்கும் மாற்றி வைக்கலாம்;

(ஆ) தமக்குக் கீழமைந்த நடுவர் எவரிடமிருந்தும் வழக்கு எதையும் திரும்பப்பெற்றுக்கொண்டு அல்லது அத்தகைய எவருக்கேனும் தாம் மாற்றிவைத்துள்ள வழக்கு எதையும் மீண்டும் அனுப்புமாறு கோரி தாமே அத்தகைய நடவடிக்கையை முடிவு செய்யலாம்; அல்லது முடிவு செய்வதற்காக வேறெந்த நடுவருக்கும் அதைச் சாட்டியனுப்பலாம்.

காரணங்களைப் பதிவு செய்யப் படுதல்.

412. 408 ஆவது பிரிவு, 409 ஆவது பிரிவு, 410 ஆவது பிரிவு அல்லது 411 ஆவது பிரிவின்படி கட்டளையொன்றைப் பிறப்பிக்கின்ற செஷன்ஸ் நீதிபதியோ நடுவரோ தாம் அதைப் பிறப்பிப்பதற்கான காரணங்களைப் பதிவு செய்தல் வேண்டும்.

அத்தியாயம் XXXII.

தண்டனைகளை நிறைவேற்றுதல், தற்காலிகமாக நிறுத்தி வைத்தல், குறைத்தல், மாற்றுதல்.

அ. மரண தண்டனைகள்.

413. ஒரு மரண தண்டனையை உறுதி செய்ய உயர் நீதி மன்றத்துக்கு அனுப்பப்பட்ட ஒரு வழக்கில், அதை உறுதிப் படுத்தும் கட்டளையையோ அல்லது வேறு கட்டளையையோ உயர் நீதிமன்றத்திலிருந்து செஷன்ஸ் நீதிமன்றம் பெறும் போது அது ஒரு கட்டளை பிறப்பித்தோ அல்லது அவசியமான வேறு நடவடிக்கைகளை எடுத்தோ அந்தகைய கட்டளையை நிறைவேற்றி வைத்தல் வேண்டும். பிரிவு 368-ன் கீழ் வழங்கப் பட்ட கட்டளையை நிறை வேற்றுதல்.

414. மேல்முறையீட்டிலோ அல்லது மேலாய்விலோ உயர் நீதிமன்றத்தால் மரண தண்டனை வழங்கப்பட்டிருக்கும் போது செஷன்ஸ் நீதிமன்றம் உயர் நீதிமன்றத்தின் கட்டளையைப் பெற்றதும் ஒரு நடைமுறைக் கட்டளை பிறப்பித்து அந்தத் தண்டனையை நிறைவேற்றி வைத்தல் வேண்டும். உயர் நீதி மன்றத்தினால் வழங்கப்பட்ட மரண தண்டனையை நிறை வேற்றுதல்.

415. (1) உயர் நீதிமன்றத்தால் ஒருவர் மரண தண்டனை அடைந்து அதனுடைய தீர்ப்பின்மேல் அரசியல் அமைப்பின் உறுப்பு 134 கூறு 1-ன் உட்கூறு (அ) அல்லது (ஆ)-ன்படி உச்ச நீதிமன்றத்துக்கு ஒரு மேல்முறையீடு போடக்கூடியதாயிருக்கும்போது அந்தகைய மேல்முறையீடு செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட கெடு கழியும் வரையில் அல்லது அந்த நெடுங்குள் மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தால் அந்தகைய மேல்முறையீடு முடிவு செய்யப்படும் வரையில் அந்த உயர் நீதிமன்றம் தண்டனையை நிறைவேற்றுவதை ஒத்திப்போட கட்டளையிடுதல் வேண்டும். உச்ச நீதி மன்றத்திற்கு மேல் முறையீடு செய்யப்பட்ட வழக்கில் மரண தண்டனை நிறை வேற்றுதலை ஒத்தி வைத்தல்.

(2) மரண தண்டனை உயர் நீதிமன்றத்தால் வழங்கப் படும்போதோ, அல்லது உறுதிசெய்யப்பட்டிருந்து, தண்டனை யடைந்தவர் அரசியலமைப்பின் உறுப்பு 132-ன்படி அல்லது உறுப்பு 134-ன் கூறு (1)-ன் உட்கூறு (இ)-ன்படி ஓர் அனுமதிச்சான்று அளிக்க உயர் நீதிமன்றத்துக்கு விண்ணப்பம் செய்யும்வரைக்கும், அந்தகைய விண்ணப்பம், அந்த உயர் நீதிமன்றத்தால் முடிவு செய்யப்படும் வரை அல்லது அந்தகைய விண்ணப்பத்தின்பேரில் ஓர் அனுமதிச்

சான்று அளிக்கப்பட்டிருந்தால் அந்தகைய சான்றின்மேல் உச்ச நீதிமன்றத்துக்கு மேல்முறையீடு செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கும் கெடு கழியும் வரை தண்டனையை நிறைவேற்றுவதை ஒத்திப் போடும்படி கட்டளையிடுதல் வேண்டும்.

(3) உயர் நீதிமன்றத்தால் மரண தண்டனை வழங்கப்படுமிடத்து அல்லது உறுதிசெய்யப்படுமிடத்து அரசியலமைப்பின் உறுப்பு 136-ன் படி தண்டனையுற்றவர் மேல்முறையீடு செய்துகொள்ள சிறப்பு அனுமதி கருவதற்காக உச்ச நீதிமன்றத்துக்கு ஒரு மனுவைச் சமர்ப்பிக்கக் கருதுகிறார் என்று அந்த உயர் நீதிமன்றம் திருப்தி கொள்ளுமாறுல், அத்தகைய மனுவைச் சமர்ப்பிப்பதற்கு அவருக்கு உதவும் வகையில் போதுமானதென்று அது கருதுகிற காலம்வரை அந்த உயர் நீதிமன்றம் தண்டனை நிறைவேற்றுவதை ஒத்திப் போட கட்டளையிடுதல் வேண்டும்.

கருவுற்றிருக்கிற பெண்ணின் மரண தண்டனையை ஒத்திப் போடுதல்.

416. மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒரு பெண் கருவுற்றிருப்பதாகக் காணப்பட்டால் உயர் நீதிமன்றம் அந்தத் தண்டனை நிறைவேற்றப்படுவதை ஒத்திப் போட கட்டளை இடுதல் வேண்டும்; மற்றும் அது தக்கதெனக் கருதினால் அந்தத் தண்டனையை ஆயுள் சிறையாக மாற்றலாம்.

ஆ. சிறைத்தண்டனை.

சிறை வைக்கும் இடத்தை நிர்ணயிக்கும் அதிகாரம்.

417. (1) அவ்வப்போது அமலிலுள்ள எந்தச் சட்டத்தினாலாவது வேறுவிதமாக வகைசெய்யப்பட்டிருந்தாலன்றி இந்தச் சட்டத்தின்படி சிறையில் இடப்படவேண்டிய அல்லது காவலில் வைக்கப்படவேண்டிய எவரும் எந்த இடத்தில் அடைத்து வைக்கப்படுதல் வேண்டும் என்று மாநில அரசு உத்தரவிடலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படி சிறையிடப்படவேண்டிய அல்லது காவலில் வைக்கப்படவேண்டிய ஒருவர் குடியியல் சிறையில் அடைக்கப்பட்டிருந்தால் அந்தச் சிறைத் தண்டனையை அல்லது காவல் தண்டனையை விதித்த நீதிமன்றம் அல்லது நடுவர் அவரைக் குற்றவாளிகளுக்கான ஒரு சிறைக்கு அகற்றுமாறு உத்தரவிடலாம்.

(3) உட்பிரிவு 2-ன்படி குற்றவாளிகளுக்கான சிறைக்கு ஒருவர் அகற்றப்பட்டு அதிலிருந்து விடுவிக்கப்படும்போது, அவர் கீழ்க்கண்ட சந்தர்ப்பங்களில் ஏதேனுமொன்றில் தனிச் சிறைக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(அ) அவர் குற்றவாளிகளுக்கான சிறைக்கு அகற்றப் பட்டதிலிருந்து மூன்று ஆண்டுகள் முடிந்திருக்கும் சந்தர்ப்பத்தில் :—இத்தகைய சந்தர்ப்பத்தில் குடியியல் நடைமுறைச் சட்டம் 1908 (5/1908) பிரிவு 58-ன் படியோ அல்லது நிலவரத்திற்கேற்ப, மாநில நொடிப்பு நீக்கச் சட்டம் 1920 (5/1920) பிரிவு 23-ன்படியோ குடியியல் சிறையிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டதாகக் கொள்ளுதல் வேண்டும்; அல்லது

(ஆ) அவரைக் குடியியல் சிறையில் சிறைவைக்கக் கட்டளையிட்ட நீதிமன்றம் அவர் குடியியல் நடைமுறைச் சட்டம் 1908 பிரிவு 58-ன் படியோ அல்லது நிலவரத்திற் கேற்ப, மாநில நொடிப்பு நீக்கச் சட்டம் 1920 (5/1920) பிரிவு 23 இன் படியோ விடுவிக்கப்படுவதற்கு உரிமை பெற்றுள்ளவர் என்று குற்றவாளிகளுக்கான சிறையின் பொறுப்பு அலுவலருக்கு உறுதிச்சான்று அளிக்கும் சந்தர்ப் பத்தில்.

418. (1) பிரிவு 413-ல் வகை செய்யப்பட்டவையல்லாத மற்ற வழக்குகளில் குற்றவாளி ஆயுள் தண்டனை அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குச் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டவிடத்து, தண்டனை வழங்கும் நீதிமன்றம் உடனடியாக அவர் அடைக்கப்பட்டிருக்கிற அல்லது அடைக்கப்பட வேண்டிய சிறை அல்லது வேறு இடத்துக்கு ஒரு கட்டளையை அனுப்புதல் வேண்டும். மற்றும் குற்றவாளி, அத்தகைய சிறை அல்லது வேறிடத்தில் ஏற்கனவே அடைக்கப்பட்டிருந்தாலன்றி அவரை அத்தகைய சிறை அல்லது வேறு இடத்தைக் குறிப்பிட்டு கட்டளையுடன் அனுப்புதல் வேண்டும். சிறைத் தண்டனை விதிக்கும் கட்டளை.

ஆனால், குற்றவாளிக்கு நீதிமன்றம் கலையும்வரை சிறைத் தண்டனை அளிக்கப்படுமிடத்து கட்டளை ஒன்றைத் தயார் செய்யவோ அல்லது அதைச் சிறைக்கு அனுப்பவோ அவசியம் இல்லை; மற்றும் குற்றவாளியை நீதிமன்றம் உத்தரவிடும் இடத்தில் அடைத்து வைக்கலாம்.

(2) உட்பிரிவு 1-ல் சொல்லப்பட்டபடி குற்றவாளிக்கு மூன்றாண்டுகளைச் சிறைத்தண்டனை வழங்கும்போது குற்றவாளி நீதிமன்றத்துக்கு வராதிருக்குமிடத்து அந்த நீதிமன்றம் அவர் அடைக்கப்படவேண்டிய சிறை அல்லது வேறு இடத்துக்கு அனுப்புவதன் பொருட்டு அவரைக் கைது செய்ய பிடி கட்டளை ஒன்றைப் பிறப்பித்தல் வேண்டும்; மற்றும் அந்தகைய சந்தர்ப்பத்தில் சிறைத்தண்டனையானது அவர் கைதான தேதியிலிருந்து தொடங்குதல் வேண்டும்.

நிறைவேற்று வதற்காகக் கட்டளையை உத்தரவிட் டனுப்புதல்.

419. சிறைத்தண்டனையை நிறைவேற்றுவதற்கான கட்டளை ஒவ்வொன்றும் குற்றவாளி அடைக்கப்பட்டிருக்கும் அல்லது அடைக்கப்படவேண்டிய சிறை அல்லது வேறு இடத்துக்குப் பொறுப்பாயுள்ள அலுவலருக்கு உத்தரவிட்டு அனுப்பப்படுதல் வேண்டும்.

கட்டளையை எவரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

420. கைதி ஒருவர் சிறையில் அடைக்கப்படவேண்டிய போது, கட்டளையைச் சிறை அலுவலரிடம் சேர்ப்பித்தல் வேண்டும்.

இ. அபராதம் வசூலித்தல்.

அபராதம் வசூலிக்கக் கட்டளை.

421. (1) அபராதம் செலுத்தும்படி ஒரு குற்றவாளி தண்டிக்கப்பட்டிருக்கும்போது, தண்டனை வழங்கும் நீதிமன்றம் அபராதத்தைக் கீழ்க்கண்ட முறைகள் இரண்டிலொன்றில் அல்லது இரண்டிலுமாக வசூலிக்க நடவடிக்கை எடுக்கலாம், அதாவது அது—

(அ) குற்றவாளிக்குச் சொந்தமான அசையும் பொருள் எதையும் ஜப்திசெய்து, விற்பதன்மூலம் அந்தத் தொகையை வசூலிக்க ஒரு கட்டளை பிறப்பிக்கலாம்.

(ஆ) செலுத்தத்தவறியவரின் அசையும் அல்லது அசையாப் பொருள் அல்லது இரண்டிலுமிருந்து நிலவரி நிலுவையை வசூலிப்பது போன்று அத் தொகையை வசூலிக்க மாவட்டத்தின் ஆட்சியாளருக்கு அதிகாரமளித்து ஒரு கட்டளை பிறப்பிக்கலாம்.

ஆனால், அபராதத்தைச் செலுத்தத் தவறினால் குற்றவாளி சிறையிலிடப்படுதல் வேண்டும் என்று தீர்ப்பில் உத்தரவிடப்பட்டு அத்தகைய குற்றவாளி அவ்வாறு தவறி

யதற்காகச் சிறைத்தண்டனை முழுவதையும் அனுபவித்து முடித்திருந்தால் எந்த நீதிமன்றமும் எழுத்துமூலம் பதிவு செய்யவேண்டிய சிறப்புக் காரணங்களுக்காக அது அவ்வாறு செய்வது அவசியமெனக் கருதினால் அன்றி அல்லது பிரிவு 357-ன்படி அபராதத்திலிருந்து செலவோ நஷ்ட ஈடோ கொடுக்கும்படியாக அது ஓர் உத்தரவிட்டிருந்தால் அன்றி அத்தகைய கட்டளையை எந்த நீதிமன்றமும் பிறப்பித்தல் கூடாது.

(2) உட்பிரிவு (1)-ன் கூறு (அ)-ன் படியான கட்டளைகளை நிறைவேற்ற வேண்டிய வகையை முறைப்படுத்தவும் மற்றும் அத்தகைய கட்டளையை நிறைவேற்றி ஜப்தி செய்யப்படும் எந்த சொத்தைப் பற்றியாவது குற்றவாளியைத் தவிர, வேறு எவரும் கோரும் உரிமையைத் தவிர, வேறு எவரும் கோரும் உரிமை அரசு விதிகளை வகுக்கலாம்.

(3) நீதிமன்றம் உட்பிரிவு (1)-ன் கூறு (ஆ)-ன்கீழ் ஒரு கட்டளையை மாவட்ட ஆட்சியருக்குப் பிறப்பிக்குமிடத்து அந்த மாவட்ட ஆட்சியாளர் நிலவரி நிலுவையை வசூலிப்பதற்கான சட்டத்தின்படி அத்தகைய கட்டளை அத்தகைய சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட்ட ஒரு சான்றிதழ் போன்ற அந்தத் தொகையை வசூலித்தல் வேண்டும்.

ஆனால் அத்தகைய கட்டளை எதுவும் குற்றவாளியைக் கைது செய்தோ அல்லது சிறையில் இருத்தி வைத்தோ நிறைவேற்றப்படுதல் கூடாது.

422. பிரிவு 421 உட்பிரிவு (1)-ன் கூறு (அ)-ன் கீழ் எந்த நீதிமன்றத்தாலும் பிறப்பிக்கப்பட்ட ஒரு கட்டளை அத்தகைய நீதிமன்றத்தின் வட்டார அதிகார வரம்புக்குள் நிறைவேற்றப்படலாம்; மற்றும் அத்தகைய அதிகார வரம்புக்கு வெளியே இருக்கும் சொத்து எந்த மாவட்ட நடுவரின் (டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்) வட்டார அதிகார வரம்புக்குள் காணப்படுகிறதோ அவரால் மேல்கையொப்பம் இடப்படும்போது, அதை ஜப்தி செய்து விற்பனை செய்வதற்கு அதிகாரமளித்தல் வேண்டும். அதிகாரமளித்தல் செயல்முறை.

423. இந்தச் சட்டத்தில் அல்லது அவ்வப்போது அமலிலுள்ள வேறு எந்தச் சட்டத்தில் என்ன சொல்லியிருந்த போதிலும் இந்தச் சட்டம் அளாவி நில்லாத எந்த மண்டலத்திலுள்ள ஒரு குற்ற வழக்கு நீதிமன்றத்தாலும் ஒரு குற்றவாளி ஓர் அபராதத்தைச் செலுத்துமாறு தண்டிக்கப் இந்தச் சட்டம் அளாவி நில்லாத எந்த மண்டலத்திலும் ஒரு நீதிமன்றத்தாலும் அபராதத்தை வசூலிப்பதற்காக.

பிறப்பிக்கப்படும் ஒரு கட்டளை.

பட்டிருக்கும்போது மற்றும் அந்தத் தீர்ப்பை வழங்கும் நீதிமன்றம் இந்தச் சட்டம் அளாவி நிற்கும் மண்டலங்களில் உள்ள ஒரு மாவட்ட ஆட்சியருக்கு அந்தத் தொகையை நிலவரி நிலுவை போன்று வசூலிக்க அவருக்கு அதிகாரம் அளித்து ஒரு கட்டளையைப் பிறப்பிக்கும்போது அத்தகைய கட்டளை 421-வது பிரிவு, உட்பிரிவு (1) கூறு (ஆ)-ன் கீழ் இந்தச் சட்டம் அளாவி நிற்கும் மண்டலங்களில் உள்ள ஒரு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டது போன்றே கொள்ளப் படுதல் வேண்டும்; மேலும் அத்தகைய கட்டளையை நிறை வேற்றுதல்பற்றிய நடவடிக்கைகள்மீது அவ்வாறே அந்தப் பிரிவின் உட்பிரிவு (3)-ன் வகைமுறைகள் இயங்குதல் வேண்டும்.

சிறைத் தண்டனையை நிறைவேற்றுவதை நிறுத்திவைத்தல்.

424. (1) ஒரு குற்றவாளி அபராதம் மட்டுமே செலுத்தும் படியும் அந்த அபராதத்தைச் செலுத்தத் தவறினால் சிறைத் தண்டனை அனுபவிக்கப்படும்படியும் தண்டிக்கப்பட்டு, அந்த அபராதம் உடனடியாகச் செலுத்தப்படாவிட்டால் அந்த நீதிமன்றம்—

(அ) நிலவரத்திற்கேற்ப அந்த அபராதம் கட்டளைத் தேதியிலிருந்து மூப்பது நாட்களுக்கு மேற்படாத ஒரு தேதியிலோ அல்லது அதற்கு முன்போ முழுமையாகச் செலுத்தப்படுதல் வேண்டும் என்றும், அல்லது இரண்டு மூன்று தவணைகளில் அவற்றில் முதல் தவணை கட்டளைத் தேதியிலிருந்து மூப்பது நாட்களுக்கு மேற்படாத ஒரு தேதியிலோ அதற்கு முன்போ மற்ற தவணை அல்லது மற்ற தவணைகள் மூப்பது நாட்களுக்கு மேற்படாத ஓர் இடைக் காலத்தில் அல்லது இடைக்காலங்களில் செலுத்தப்படுதல் வேண்டும் என்றும் கட்டளையிடலாம்.

(ஆ) சிறைத்தண்டனையை நிறைவேற்றுதலை நிறுத்தி வைத்து, நிலவரத்திற்கேற்ப, அபராதம் அல்லது அதன் தவணைகள் எந்தத் தேதியில் அல்லது தேதிகளில் செலுத்தப் படவேண்டுமோ அந்தத் தேதி அல்லது தேதிகளில் அல்லது அவற்றிக்கு முன்னால் நீதிமன்றத்துக்கு முன்பு அவர் வர வேண்டும் என்ற நிபந்தனையைக் கொண்ட ஒரு ஜாமீன் பத்திரத்தை நீதிமன்றம் தக்கதெனக் கருதும் ஜாமீன்தார் களுடனே, ஜாமீன்தார்கள் இல்லாமலோ குற்றவாளி எழுதித்தருவதன்பேரில் குற்றவாளியை விடுவிக்கலாம்.

நிலவரத்திற்கேற்ப, அபராதத் தொகை அல்லது தவணை எதுவும் உத்தரவின்படி செலுத்தப்படவேண்டிய கடைசித்

தேதியில் அல்லது அதற்கு முன்பே வழங்கப்படாவிட்டால், அந்த நீதிமன்றம் தண்டனையை உடனே நிறைவேற்றுமாறு உத்தரவிடலாம்.

(2) பணம் செலுத்துவதற்காகக் கட்டளையிடப்பட்டு தண்டனை விதிக்கக்கூடிய எந்த வழக்கிலும் கூட அந்தப் பணம் உடனடியாகச் செலுத்தப்படாவிட்டால் 64 ஆவது உட்பிரிவின் வகைமுறைகள் இயங்கும். அவ்வாறு பணம் செலுத்தப்படாவிட்டால் மற்றும் எவருக்கு எவர்மீது அந்தக் கட்டளையிடப்பட்டதோ அவர் அந்த உட்பிரிவில் குறிக்கப்பட்டுள்ள அத்தகைய ஒரு பத்திரத்தை எழுதித்தரக் கோரப்பட்டு அவ்வாறு செய்யத் தவறுவாராயின் நீதிமன்றம் உடனடியாகச் சிறைத் தண்டனை விதிக்கலாம்.

ஈ. நிறைவேற்றுதல் பற்றிய பொது வகைமுறைகள்.

கட்டளையைப் பிறப்பிக்கக் கூடியவர் யார் என்பது.

425. ஒரு தண்டனையை நிறைவேற்றுவதற்கான ஒவ்வொரு கட்டளையும் அந்தத் தண்டனையை விதித்த நீதிபதியால் அல்லது நடுவரால் (மாஜிஸ்டிரேட்) அல்லது பதவியில் அவருக்குப் பின்னவரால் வழங்கப்படலாம்.

தப்பியோடிய கைதியின்மீது இந்தச் சட்டத்தின்படி மரண தண்டனை. ஆயுள் தண்டனை அல்லது அபராதம் விதிக்கப்படும்போது அத்தகைய தண்டனை இதற்குமுன் கண்டுள்ள வகைமுறைகளுக்கு உட்பட்டு உடனடியாக அமலுக்கு வருதல் வேண்டும்.

தப்பியோடிய கைதியின்மீதான தண்டனை எப்போது அமலுக்கு வரும் என்பது.

426. (1) ஒரு தப்பியோடிய தீர்ப்புக் குற்றவாளியின்மீது கால அளவுக்குச் சிறைத் தண்டனை விதிக்கப்படும்போது—

(அ) அத்தகைய தண்டனை அத்தகைய தீர்ப்புக் குற்றவாளி தப்பியோடியபோது அனுபவித்துக்கொண்டிருந்த தண்டனையைவிட தரத்தில் கடுமையானதாக இருக்குமானால் அந்தப் புதிய தண்டனை உடனடியாக அமலுக்கு வருதல் வேண்டும்.

(ஆ) அத்தகைய தண்டனை அத்தகைய தீர்ப்புக் குற்றவாளி தப்பியோடியபோது அனுபவித்துக் கொண்டிருந்த தண்டனையைவிட தரத்தில் கடுமையாக இல்லாதிருப்பின் அவர் தப்பி ஓடும்போது முன்னைய தண்டனையில் அனுபவிக்கப்படாமல் எஞ்சியிருந்த கால அளவுக்குச் சமமான ஒரு

காலத்திற்கு மேற்கொண்டு அவர் பிறைத் தண்டனையை அனுபவித்த பிறகு புதிய தண்டனை அமலுக்கு வருதல் வேண்டும்.

(3) உட்பிரிவு (2)-ன் நோக்கத்தைப் பொறுத்தமட்டில் கடுங்காவல் தண்டனை மேற்காவல் தண்டனையைவிட நரத்தில் கடுமையானதெனக் கொள்ளுதல் வேண்டும்.

ஏற்கனவே மற்றொரு குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்ட குற்றவாளி மீது தண்டனை.

427. (1) ஏற்கனவே பிறைத் தண்டனையை அனுபவித்து வரும் ஒருவர் பிந்திய தீர்ப்பு ஒன்றில் பிறைத்தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கப்படும்போது பிந்திய தண்டனை முந்திய தண்டனையுடன் ஏககாலத்தில் நீதிமன்றம் உத்தரவிட்டாலன்றி செயற்படுதல் வேண்டுமென்று அத் தகைய பிறைத்தண்டனை அல்லது ஆயுள் தண்டனை அவருக்கு முன்னமே விதிக்கப்பட்ட பிறைத்தண்டனை முடிவடைந்த பிறகு தொடங்குதல் வேண்டும்.

ஆனால், ஒருவர் ஜாமீன் தரத் தவறியதற்காக பிரிவு 122-ன்படியான ஒரு கட்டளையினால் பிறைத் தண்டனை விதிக்கப் பட்டு அத்தகைய தண்டனையை அனுபவிக்கும்போது அத்தகைய கட்டளை இடப்படுவதற்கு முன்பு செய்யப்பட்ட ஒரு குற்றத்திற்காக அவர் பிறைத் தண்டனை விதிக்கப்படு மிடத்து அந்தப் பிந்திய தண்டனை உடனடியாகத் தொடங்குதல் வேண்டும்.

(2) ஏற்கனவே ஆயுள் தண்டனை அனுபவித்துவரும் ஒருவர் பிந்திய தீர்ப்பில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குச் பிறைத் தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கப்படும் போது பிந்திய தண்டனை அத்தகைய முந்திய தண்டனை யுடன் ஏக காலத்தில் செயற்படுதல் வேண்டும்.

குற்றவாளி காவலில் இருந்த காலத்தைச் சிறைத் தண்டனைக் காலத்தி லிருந்து கழிக்க வேண்டும் என்பது.

428. எதிரி தண்டனைத் தீர்ப்பின் பேரில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருக்குமிடத்து அதே வழக்கில் தீர்ப்பு தேதிக்குமுன் புலனாய்வு, பரிசீலனை அல்லது விசாரணையின்போது அவர் காவலில் இருந்திருந் தால் அந்தக் காலத்தை அத்தகைய தண்டனைத் தீர்ப்பில் விதிக்கப்பட்ட சிறைத் தண்டனைக் காலத்திலிருந்து கழித்தல் வேண்டும், மற்றும் அத்தகைய தீர்ப்பின்பேரில் சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டியவரின் கடப்பாட்டை அவர்மீது விதிக்கப்பட்ட சிறைத்தண்டனையின் காலம் ஏதேனும் எஞ்சியிருந்தால் அந்த எஞ்சிய காலத்திற்கு வரை யறுக்கப்படுதல் வேண்டும்.

429. (1) பிரிவு 426 அல்லது பிரிவு 427-ல் உள்ள எதுவும் கம்பெனியையும் அவரது முந்திய அல்லது பிந்திய தண்டனைத் தீர்ப்பின்மூலம் அவர் ஆளாகியிருக்கிற தண்டனையின் எந்த பாகத்திலிருந்தும் அவர் மன்னிக்கப்பட்டிருப்பதாகத் தோன்றுதல் கூடாது.

(2) அபராதத்தைச் செலுத்தாத் தவறியதற்கான சிறைத் தண்டனையாவது தனித்தியங்கும் சிறைத்தண்டனை ஒன்றுடன் சேர்த்து விதிக்கப்படும்போது அத் தண்டனையை அனுபவிக்கின்றவர் அது நிறைவேற்றப்பட்ட பின்பு மேலும் ஒரு தனித்தியங்கும் சிறைத்தண்டனை அல்லது சிறைத் தண்டனைகளை அனுபவிக்க வேண்டியிருக்கும்போது, அத் தண்டனை அல்லது தண்டனைகளை அவர் அனுபவித்து முடிக்கும்வரை அபராதத்தைச் செலுத்தாத் தவறியதற்கான சிறைத் தண்டனையைச் செயற்படுத்தல் ஆகாது.

430. ஒரு தண்டனை முழுவதும் நிறைவேற்றப்பட்டதும், அதை நிறைவேற்றும் அதிலலர் எந்த நீதிமன்றத்திலிருந்து தண்டனைக் கட்டளை பிறப்பிக்கப்பட்டதோ அந்த நீதிமன்றத்துக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்ட விதத்தைப்பற்றி உறுதிச் சான்று அளிக்கும் மேற்குறிப்போடு தன் கையொப்பமிட்டு அந்தக் கட்டளையைத் திருப்பியனுப்புதல் வேண்டும்.

431. இந்தச் சட்டத்தின்கீழ் கட்டளை எதன் மூலமாகவும் (ஒரு அபராதத்தைத் தவிர) எந்தப் பணமாவது செலுத்தப்பட வேண்டியிருந்து அதை வசூலிக்கும் முறை பற்றி வேறு விதத்தில் வெளிப்படையாக வகைமுறை செய்யப்படாதிருக்கும்போது அது ஓர் அபராதம் போன்றே வசூலித்துப் படல் வேண்டும்.

ஆனால், பிரிவு 421 ஆவது பிரிவு 359-ன் படியான ஒரு கட்டளையின் மீது இயங்கும்போது இந்தப் பிரிவின் காரணத்தால் 421 ஆவது பிரிவின் உட்பிரிவு (1)-க்கான விலக்கில் "357 ஆம் பிரிவின்படி" என்ற சொற்களுக்கும் எண்களுக்கும் பின்னர் "அல்லது பிரிவு 359-ன்படி செலவுத் தொகை செலுத்துவதற்கான கட்டளை ஒன்று" என்ற சொற்களும் எண்களும் செருகப்பட்டிருந்தாற்போன்றே பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

உ. தண்டனைகளை நிறுத்தி வைத்தல், தள்ளுபடி, மாற்றுதல்.

தண்டனைகளை நிறுத்தி வைக்கவோ தள்ளுபடி செய்யவோ உள்ள அதிகாரம்.

432. (1) ஒரு குற்றத்திற்காக எவரேனும் தண்டிக்கப்பட்டிருக்கும்போது தண்டிக்கப்பட்டவர் ஒத்துக்கொள்ளுகிற எவற்றின் நிபந்தனைகளின் பேரிலோ அல்லது நிபந்தனைகள் இல்லாமலோ உரிய அரசு எந்தச் சமயத்திலும் அவருடைய தண்டனை நிறைவேற்றப்படுதலை நிறுத்தி வைக்கலாம். அல்லது அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனை முழுவதையுமோ அல்லது அதன் பகுதி எதையுமோ தள்ளுபடி செய்யலாம்.

(2) தண்டனையை நிறுத்தி வைக்கவோ அல்லது தள்ளிவிடவோ உரிய அரசுக்கு ஒரு விண்ணப்பம் செய்யப்பட்டிருக்கும்போதெல்லாம் உரிய அரசு தண்டனைத் தீர்ப்பு எந்த நீதிமன்றத்தில் தலைமை வகிக்கும் நீதிபதி முன்பு அல்லது நீதிபதியால் விதிக்கப்பட்டதோ அல்லது உறுதி செய்யப்பட்டதோ அந்த நீதிபதியை அவ் விண்ணப்பம் ஏற்கப்பட வேண்டுமா அல்லது மறுக்கப்பட வேண்டுமா என்பதைப்பற்றிய அவருடைய கருத்தையும் கருத்துக்கான அவருடைய காரணங்களையும் உரைத்து, மற்றும் அத்தகைய உரையுடன் விசாரணையின் பதிவுக்கட்டு அல்லது இருக்கக்கூடிய பதிவுக்கட்டின் உறுதிச் சான்றளிக்கப்பட்ட நகலை அனுப்பும்படிக் கோரலாம்.

(3) எந்த ஒரு நிபந்தனையின்மீது ஒரு தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டதோ அல்லது தள்ளுபடி செய்யப்பட்டதோ அது உரிய அரசின் கருத்தில் நிறைவேற்றப்படவில்லையானால் உரிய அரசு, நிறுத்திவைத்ததை அல்லது தள்ளுபடி செய்ததை ரத்து செய்யலாம், அதன்பேரில் எவரொருவருக்குச் சாதகமாக அந்தத் தண்டனை நிறுத்திவைக்கப்பட்டதோ அல்லது தள்ளுபடி செய்யப்பட்டதோ அவர் சுதந்திரமாக இருந்தாரென்றால் எந்தக் காவல் அலுவலராலும் பிடிகட்டனை இல்லாமல். அவர் கைது செய்யப்பட்டு எஞ்சியிருக்கும் தண்டனைப் பகுதியை அனுபவிப்பதற்காகச் சிறைக்கு அனுப்பப்படலாம்.

(4) இந்தப் பிரிவின்படி எந்த நிபந்தனையின்மீது ஒரு தண்டனை நிறுத்தி வைக்கப்படுகிறதோ அல்லது தள்ளுபடி செய்யப்படுகிறதோ அது எவருக்குச் சாதகமாக நிறுத்தி வைக்கப்படுகிறதோ அல்லது தள்ளுபடி செய்யப்படுகிறதோ

அவரால் நிறைவேற்றுவதற்கான ஒன்றாகவோ அல்லது அவருடைய விருப்பத்தைச் சார்ந்திராத ஒன்றாகவோ இருக்கலாம்.

(5) உரிய அரசு பொதுவிதிகளால் அல்லது சிறப்புக் கட்டளைகளால் தண்டனைகளை நிறுத்திவைத்தல் பற்றியும் எந்த நிபந்தனைகளின்பேரில் தாக்கல் செய்யவேண்டும் என்பது பற்றியும் அவை எவ்வாறு விசாரிக்கப்படவேண்டும் என்பது பற்றியும் உத்தரவுகள் போடலாம்:

ஆனால், பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட ஓர் ஆண்மகன் மீது விதிக்கப்பட்ட (அபராத தண்டனையல்லாத) எந்தத் தண்டனை சம்பந்தமாகவும் தண்டிக்கப்பட்டவரோ அல்லது அவர் சார்பாக வேறு எவரோ கொடுக்கும் அத்தகைய மனு எதுவும் அவர் சிறைச்சாலையில் இருந்தாலன்றியும், மற்றும்

(அ) அத்தகைய மனு தண்டிக்கப்பட்டவரால் செய்யப்படுமிடத்து அது அந்தச் சிறைக்குப் பொறுப்பாயிருப்பவர் மூலமாக சமர்ப்பிக்கப்பட்டாலன்றி, அல்லது

(ஆ) அத்தகைய மனு வேறு எவராலும் செய்யப்படுமிடத்து, தண்டிக்கப்பட்டவர் சிறைச்சாலையில் உள்ளார் என்ற ஓர் உறுதியுரையை அது கொண்டிருந்தாலன்றி எற்றுக்கொள்ளப்படல் ஆகாது.

(6) ஒருவரது சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகிற அல்லது அவர்மீது அல்லது அவருடைய சொத்தின்மீது கடப்பாட்டைச் சுமத்துகிற இந்தச் சட்டத்தின் அல்லது வேறு எந்தச் சட்டத்தின் எந்தப் பிரிவின்படியோ ஒரு குற்ற வழக்கு நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட எந்தக் கட்டளையின் மீதும்கூட மேற்கண்ட உட்பிரிவின் வகைமுறைகள் இயங்குதல் வேண்டும்.

(7) இந்தப் பிரிவிலும் பிரிவு 433-லும் "உரிய அரசு" என்ற சொற்றொடர்

(அ) இந்திய ஒன்றியத்தின் நிருவாக அதிகாரத்துக்குட்பட்ட விஷயம் சம்பந்தமாகவுள்ள சட்டம் எதற்கும் விரோதமாகவோ (6)-வது உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட கட்டளைக்கு விரோதமாகவோ செய்யப்பட்ட ஒரு குற்றத்துக்காகத் தண்டனை விதிக்கப்பட்ட வழக்குகளில், மத்திய அரசு என்றும்

(ஆ) மற்ற வழக்குகளில் எந்த மாநில எல்லைக்குள் குற்றவாளி தண்டிக்கப்படுகிறாரோ அல்லது மேற்சொன்ன கட்டளை வழங்கப்படுகிறதோ அந்த மாநில அரசு என்றும் பொருள்படும்.

தண்டனையை மாற்றும் அதிகாரம்.

433. உரிய அரசு தண்டிக்கப்பட்டவரின் சம்மதம் இல்லாமலேயே,

(அ) ஒரு மரண தண்டனையை இந்தியத் தண்டனைச் சட்டத்தில் (45/1860) வகை செய்யப்பட்டிருக்கும் வேறு எந்தத் தண்டனையாகவும்;

(ஆ) ஆயுள் தண்டனையைப் பதினான்கு ஆண்டுக்கு மேற்படாத ஒரு குறிப்பிட்ட காலத்திற்குச் சிறைத்தண்டனையாகவோ அல்லது அபராதமாகவோ;

(இ) கடுங்காவல் தண்டனையை அவரை எவ்வளவு காலத்துக்குத் தண்டித்திருக்கக்கூடுமோ அவ்வளவு காலத்துக்கு மெய்காவல் தண்டனையாகவும் அல்லது அபராதமாகவும்;

(ஈ) மெய்காவல் தண்டனை (தண்டனையை) அபராதமாகவும் மாற்றலாம்.

மரணதண்டனைகளில் மத்திய அரசின் ஒப்புகை அதிகாரம்.

434. 432, 433 பிரிவுகளின்படி மரண தண்டனைகள் சம்பந்தமாக மாநில அரசுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மத்திய அரசினாலும் கூட செலுத்தப்படலாம்.

ஒரு சில வழக்குகளில் மாநில அரசு மத்திய அரசுடன் ஆலோசனை செய்த பின்னர் செயல்படுதல்.

435. (1) 432 மற்றும் 433 பிரிவுகளின்படி ஒரு தண்டனையைத் தள்ளுபடி செய்யவோ அல்லது மாற்றவோ மாநில அரசுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களானவை, வழக்கெதிலும் தண்டிக்கப்பட்ட குற்றம்,—

(அ) டெல்லி சிறப்புக் காவல் நிறுவனச் சட்டம் (1946)-ன்படி அமைக்கப்பட்ட டெல்லி சிறப்புக் காவல் நிறுவனத்தால் அல்லது இந்தச் சட்டத்தைத் தவிர வேறு எந்த மத்திய சட்டத்தின்படி புலனாய்வு செய்ய அதிகாரம் பெற்ற எதேனும் நிறுவனத்தினால் புலனாய்வு செய்யப்பட்டிருந்தால், அல்லது

(ஆ) மத்திய அரசுக்குச் சொந்தமான எந்தச் சொத்தையாவது கையாடல் செய்தல் அல்லது அழித்தல் அல்லது சேதம் விளைவித்தல் உள்ளடக்கியதாயிருந்தால், அல்லது

(இ) மத்திய அரசின் ஊழியத்தில் உள்ள ஒருவர் அலுவல்முறைக் கடமையை ஆற்றிவரும்போது அல்லது ஆற்றிவருவதாகத் தென்படும்போது செய்யப்பட்டிருந்தால்

மத்திய அரசுடன் ஆலோசனை செய்த பின்னர் தவிர மாநில அரசினால் செலுத்தப்படுதல் கூடாது.

(2) குற்றங்களுக்காக ஒருவர் தண்டிக்கப்பட்டு அவற்றில் சில, ஒன்றியத்தின் நிருவாக அதிகாரத்துக்கு உட்பட்ட விஷயங்களைப் பொறுத்தனவாக இருந்து, மற்றும் அவர்மீது ஏககாலத்தில் இயங்கும் தனித்தனியான காலகெடுக்களுக்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருந்து, அந்தத் தண்டனைகளை நிறுத்திவைத்தோ, நள்ளுபடி செய்தோ அல்லது மாற்றியமைத்தோ மாநில அரசு பிறப்பிக்கும் கட்டளை எதுவும்

ஒன்றியத்தின் நிருவாக அதிகாரத்துக்கு உட்பட்ட விஷயங்கள் சம்பந்தமாக அத்தகையவர் செய்த குற்றங்களுக்கான தண்டனைகளை மத்திய அரசும் நிறுத்திவைத்தோ நிலவாத்திற்கேற்றபடி நள்ளுபடி செய்தோ மாற்றியமைத்தோ கட்டளை பிறப்பித்தலன்றி

அமலுக்கு வருதல் ஆகாது.

அத்தியாயம் XXXIII.

ஜாமீன்கள், மற்றும் பத்திரங்கள் பற்றிய வகைமுறைகள்.

எந்த வழக்கு களில் ஜாமீன் வாங்கப்பட வேண்டும் என்பது.

436. (1) ஜாமீனில் விடாக் குற்றஞ்சுமத்தப்பட்டவ ரல்லாத எவரும் காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் ஒருவரால் பிடிகட்டளையின்றிக் கைது செய்யப்பட்டபோதோ, காவலில் வைக்கப்பட்டபோதோ, அல்லது நீதிமன்றத்தின் முன் அவர் ஆஜராகும்போதோ, அல்லது ஆஜர்ப்படுத்தப் படும்போதோ அல்லது அத்தகைய அலுவலரின் காவலில் இருக்கும்போது எந்தச் சமயத்திலும் அல்லது அந் நீதி மன்றத்தின் முன் நடக்கும் நடவடிக்கையின் எந்தக் கட்டத்திலும் ஜாமீன் கொடுப்பதற்குத் தயாராக இருப்பா ராஞல், அவரை ஜாமீனில் விடுவித்தல் வேண்டும்:

ஆனால், அத்தகைய அலுவலர் அல்லது நீதிமன்றம், அவர் அல்லது அது பொருத்தமென நினைத்தால், அத்தகையவரிட மிருந்து ஜாமீன் வாங்கிக்கொள்ளுவதற்குப் பதிலாக, இதற்குப் பின் வகை செய்யப்பட்டபடி அவர் நேரில் ஆஜராக ஜாமீன்தார்களின்றி பத்திரமொன்றை எழுதிக் கொடுப் பதன் பேரில் அவரை விட்டுவிடலாம்.

மேலும், இந்தப் பிரிவிலுள்ள எதுவும் 116 ஆவது பிரிவின் (3) ஆவது வகைமுறைகளைப் பாதிப்பதாகக் கொள்ளுதல் ஆகாது.

(2) (1) ஆவது உட்பிரிவில் என்ன கண்டிருந்த போதிலும், ஆஜராக வேண்டிய காலத்தையும் இடத்தையும் பற்றிய ஜாமீன் நிபந்தனைகளுக்கு இணங்கி நடக்க ஒருவர் தவறியிருக்குமிடத்து, அந்த நீதிமன்றம் அதே வழக்கில் பிந்திய ஒரு சந்தர்ப்பத்தில் அவர் நீதிமன்றத்தின் முன் ஆஜராகும்போது அல்லது காவலில் கொண்டு வரப்படும் போது அவரை ஜாமீனில் விடுவிக்க மறுக்கலாம்; மற்றும் 446 ஆவது பிரிவின்படி ஜாமீலில் கட்டுப்பட்ட எவரையும் அதில் கண்ட தண்டத்தைச் செலுத்துமாறு கோருவதற்கு நீதிமன்றத்திற்கு உள்ள அதிகாரங்களுக்கு அத்தகைய மறுத் தலானது பாதித்தல் ஆகாது

ஜாமீனில் விடாக் குற்றம் சம்பந்தமாக எப்போது ஜாமீனில் எடுப்பது என்பது.

437. (1) ஜாமீனில் விடாக்குற்றம் எதையேனும் செய்ததாகக் குற்றஞ்சுமத்தப்பட்ட அல்லது சந்தேகிக்கப்பட்ட எவரேனும் ஒரு காவல் நிலையப் பொறுப்பு அலுவலால் பிடி கட்டளையின்றிக் கைது செய்யப்படும்போதோ, காவலில் வைக்கப்படும்போதோ உயர் நீதிமன்றம் அல்லது செஷன்ஸ் நீதிமன்றம் அல்லாத வேறு நீதிமன்றம் ஒன்றின்முன் ஆஜராகும்போதோ அல்லது ஆஜர்ப்படுத்தப்படும்போதோ, அவர் ஜாமீன் பேரில் விடுவிக்கப்படலாம், ஆனால் அவர் மரண தண்டனையோ, ஆயுட்காலச் சிறைத்தண்டனையோ அளிக்கப் படத்தக்க குற்றமொன்றைச் செய்த குற்றவாளியாக இருந்திருக்கின்றார் என்று நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருக்குமாலல், அவர் அவ்வாறு விடுவிக்கப்படுதல் ஆகாது:

ஆனால், அக் குற்றத்தைச் செய்ததாகக் குற்றஞ்சுமத்தப் பட்ட பதினாறு வயதிற்குட்பட்ட எவரும் அல்லது பெண் எவரும் அல்லது நோயுற்ற அல்லது தளர்ச்சியுற்ற எவரும் ஜாமீன் பேரில் விடுவிக்கப்பட வேண்டும் என்பதாக நீதி மன்றம் உத்தரவிடலாம்:

மேலும், ஒருவர் மற்றபடி ஜாமீனில் விடுவிக்கப்படு வதற்கு உரிமையுடையவராயிருந்து, நீதிமன்றம் இடலாகும் உத்தரவுகளுக்கு அவர் இணங்கி நடப்பதற்கு உறுதிப்பத்திரம் ஒன்றைக் கொடுப்பாரானால், புலனாய்வின்போது சாட்சிகளால் அடையாளங்காட்டப்படுவதற்காக அவர் கோரப்படலாம் என்ற ஒரே சங்கதியானது எதிரியை ஜாமீனில் விட மறுப்பதற்குப் போதிய ஆதாரம் ஆகாது.

(2) எதிரி ஜாமீனில் விடாக் குற்றமொன்றைச் செய்திருக்கின்றார் என்று நம்புவதற்கு நியாயமான ஆதாரங்கள் இல்லையென்பதாகவும், ஆனால் அவருடைய குற்றத்தை மேற்கொண்டு பரிசீலனை செய்வதற்குப் போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன என்பதாகவும், நிலவரத்திற்கேற்ப, புலனாய்வு, பரிசீலனை அல்லது விசாரணையின் எந்தக் கட்டத் திலேனும் அத்தகைய அலுவலர் அல்லது நீதிமன்றத்திற்குத் தோன்றுமாலல், எதிரி அத்தகைய பரிசீலனை நடப் பிலிருக்கையில், ஜாமீன்பேரில் அல்லது அத்தகைய அலுவலர் அல்லது நீதிமன்றத்தின் யுக்தம் போல, இதற்குப் பின் வகை செய்யப்பட்டவாறு அவர் ஆஜராவதாக ஜாமீன்தார் களில்லாமல் பத்திரமொன்றை எழுதித் தருவதன் பேரில் விடுவிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஏழாண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத் 45/1860. திற்குச் சிறைத்தண்டனை அளிக்கப்படத்தக்க குற்றமொன்றை அல்லது இந்தியத் தண்டனைச் சட்டத்தின் VI ஆவது அத்தியாயம் XVI ஆவது அத்தியாயம் அல்லது XVII ஆவது அத்தியாயத்தின்படியுள்ள குற்றமொன்றைச் செய்ததாக அல்லது அத்தகைய குற்றமொன்றுக்கு உடந்தையாக இருந்ததாக அல்லது அதைச் செய்வதற்குச் சதி செய்ததாக அல்லது அக்குற்றத்தைச் செய்வதற்கு முயன்றதாகக் குற்றஞ்சுமத்தப்பட்ட அல்லது சந்தேகிக்கப்பட்ட ஒருவர் (1) ஆவது உட்பிரிவின்படி ஜாமீன் பேரில் விடுவிக்கப்படும் போது—

(அ) இந்த அத்தியாயத்தின்படி எழுதிக் கொடுக்கப் பட்ட பத்திரத்தின் நிபந்தனைகளின்படி அவர் ஆஜாக வேண்டியதை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக, அல்லது

(ஆ) எந்தக் குற்றத்திற்காக அவர் குற்றஞ்சுமத்தப் பட்டுள்ளாரோ அல்லது எந்தக் குற்றம் செய்ததாக அவர் சந்தேகிக்கப்படுகின்றாரோ அந்தக் குற்றத்தை ஒத்த குற்ற மொன்றை அவர் செய்தல் ஆகாது என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, அல்லது

(இ) மற்றப்படி நீதியின் நலத்திற்காக தான் அவசிய மென எண்ணுகிற நிபந்தனை எதையும் நீதிமன்றம் விதிக்கலாம்.

(4). (1) ஆவது உட்பிரிவு அல்லது (2) ஆவது உட் பிரிவின்படி ஜாமீன் பேரில் எவரையேனும் விடுவிக்கின்ற அலுவலர் அல்லது நீதிமன்றம், அவ்வாறு செய்வதற்கான தன் காரணங்களை எழுத்துமூலம் பதிவு செய்தல் வேண்டும்.

(5). (1) ஆவது உட்பிரிவு அல்லது (2) ஆவது உட் பிரிவின்படி ஜாமீன் பேரில் ஒருவரை விடுவித்திருக்கின்ற நீதிமன்றம் எதுவும், அவ்வாறு செய்வது அவசியமெனத் தான் எண்ணினால், அவர் கைது செய்யப்பட்டுக் காவலில் சிறைக்கு அனுப்பப்பட வேண்டும் என்று உத்தரவிடலாம்.

(6) நடுவர் ஒருவரால் விசாரிக்கத்தக்க வழக்கு எதிலும், ஜாமீனில் விடாக்குற்றம் எதையேனும் செய்ததாகக் குற்றஞ் சுமத்தப்பட்ட ஒருவர் மீதான விசாரணையானது, வழக்கொன் றில் சாட்சியம் எடுப்பதற்காக நிர்ணயிக்கப்பட்ட முதலாவது தேதியிலிருந்து அறுபது நாள் கால அளவிற்குள் முடிக்கப் படவில்லையெனில், மேற்சொன்ன காலம் முழுவதும் அவர்

காவலிலிருக்கிறார் என்றால், எழுத்துமூலம் பதிவு செய்யப்பட்ட காரணங்களுக்காக தடுவர் வேறுவிதமாக உத்தரவிட்டாலன்றி, தடுவருக்குத் திருப்தி தரக்கூடிய ஜாமின் பேரில் அவர் விடுவிக்கப்படுதல் வேண்டும்.

(7) ஜாமீனில் விடாக்குற்றமொன்றைச் செய்ததாகக் குற்றஞ்சுமத்தப்பட்டவரின் மீதான விசாரணை முடிவுற்றதற்குப் பின்பும், நிற்பு வழங்கப்படுவதற்கு முன்பும் எந்தக் காலத்திலும் குற்றவாளி அந்தகைய குற்றத்தைச் செய்யவில்லை என்று நம்புவதற்கு நியாயமான காரணங்களிருக்கின்றன என்பதாக நீதிமன்றம் கருதுமாயின், வழங்கப்படும் நிற்பை அவர் ஆஜராகி கேட்பதற்காகப் பத்திரமொன்றை ஜாமீன்தார்களில்லாமல் அவர் எழுதிக் கொடுக்குங்கால் எதிரியை அது விடுவித்தல் வேண்டும்.

கைது செய்யப்படுவதை அச்சத்தோடு எதிர்நோக்குகிற வரை ஜாமீனில் விடுவதற்கு உத்தரவிடுதல்.

438. (1) ஜாமீனில் விடாக் குற்றமொன்றைச் செய்திருப்பதாக குற்றஞ்சுமத்தலின் பேரில் தாம் கைது செய்யப்படலாம் என்று நம்புவதற்கு ஒருவருக்குக் காரணம் இருக்கும்போது, அவர் இந்தப் பிரிவின்படி ஒரு உத்தரவுக்காக உயர் நீதிமன்றத்திற்கோ, செஷன்ஸ் நீதிமன்றத்திற்கோ விண்ணப்பிக்கலாம்; அந்த நீதிமன்றம், தான் பொருத்தமென நினைத்தால், அவ்வாறு கைது செய்யப்படுங்கால், அவர் ஜாமீனில் விடுவிக்கப்படுதல் வேண்டும் என்று உத்தரவிடலாம்.

(2) உயர் நீதிமன்றம் அல்லது செஷன்ஸ் நீதிமன்றம் (1) ஆவது உட்பிரிவின்படி உத்தரவு ஒன்றைப் பிறப்பிக்கும்போது குறிப்பிட்ட வழக்கின் சங்கதிகளை அனுசரித்து, பின்வருவன உள்ளடங்கலாக, தான் பொருத்தமென நினைக்கும் நிபந்தனைகளைச் சேர்க்கலாம்—

கோரப்பட்டபடியும், கோரப்படும்போதும் காவல் அலுவலரால் விசாரிப்படுவதற்குத் தம்மைத் தயாராக அவர் வைத்துக்கொள்ளுதல் வேண்டும் என்ற ஒரு நிபந்தனை;

(ii) நேரடியாகவோ மறைமுகமாகவோ தூண்டுதல், அச்சுறுத்தல் அல்லது வாக்கு கொடுத்தல் மூலமாக வழக்கின் சங்கதிகளைத் தெரிந்துள்ள எவரையும் அச் சங்கதிகளை நீதிமன்றத்திற்கோ, காவல் அலுவலர் எவருக்குமோ சொல்லாமலிருக்க வேண்டும் என்று அவர் தூண்டுதல் ஆகாது என்ற ஒரு நிபந்தனை;

(iii) அவர் நீதிமன்றத்தின் முன் அனுமதியில்லாமல் இந்தியாவை விட்டுச் செல்லக்கூடாது என்ற ஒரு நிபந்தனை;

(iv) ஜாமீனைது 437 ஆவது பிரிவின்படி அளிக்கப் பட்டது போன்று, அப்பிரிவின் (3) ஆவது உட்பிரிவின்படி விதிக்கப்படலாகும் வேறெந்த நிபந்தனையும்.

(3) அத்தகையவர் அதற்குப் பின்பு குற்றஞ் சுமத்து தலின் பேரில் காவல் நிலையப் பொறுப்பு அலுவலரால் பிடி கட்டளையில்லாமல் கைது செய்யப்பட்டு, கைது செய்யப்படும் காலத்திலோ, அவ்வலுவலரின் பாதுகாவலில் இருக்கும் போதான எந்தக் காலத்திலுமோ ஜாமீன் கொடுக்க ஆயத்தமா யிருப்பாரானால், அவர் ஜாமீனில் விடுவிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அக் குற்றத்தை விசாரணைக்கு எடுத்துக் கொள்கின்ற நடுவர் அத்தகையவருக்கெதிராக முதலில் பிடி கட்டளை ஒன்று பிறப்பிக்கப்பட வேண்டும் என்று தீர்மானிப் பாரானால், அவர் (1) ஆவது உட்பிரிவின்படியுள்ள நீதி மன்றத்தின் தீர்மானத்திற்கேற்ப, ஜாமீனில் விடும் பிடிகட்டளை ஒன்றைப் பிறப்பித்தல் வேண்டும்.

ஜாமீன் குறித்து உயர் நீதி மன்றம் அல்லது செஷன்ஸ் நீதி மன்றத்திற்குள்ள அதிகாரங்கள்.

439. (1) ஓர் உயர் நீதிமன்றமோ, செஷன்ஸ் நீதி மன்றமோ—

(அ) குற்றமொன்றைச் செய்திருப்பதாகக் குற்றஞ் சுமத்தப்பட்டுக் காவலில் உள்ள எவரும் ஜாமீனில் விடுவிக்கப் பட வேண்டும் என்று உத்தரவிடலாம்; மற்றும் அக்குற்ற மானது 437 ஆவது பிரிவின் (3) ஆவது உட்பிரிவில் குறிப் பிடப்பட்ட தன்மையுடையதாயின், அந்த உட்பிரிவில் குறிப்பிட்டுள்ள நோக்கங்களுக்காக, தாம் அவசியமென எண்ணும் நிபந்தனை எதனையும் விதிக்கலாம்;

(ஆ) ஜாமீனில் எவரையேனும் விடுவிக்கும்போது நடுவர் ஒருவரால் விதிக்கப்பட்ட நிபந்தனை எதுவும் நீக்கப் பட வேண்டும் அல்லது மாற்றப்பட வேண்டும் என்பதாக உத்தரவிடலாம்:

ஆனால், உயர் நீதிமன்றமோ, செஷன்ஸ் நீதிமன்றமோ, செஷன்ஸ் நீதிமன்றத்தாலேயே தனித்து விசாரிக்கத்தக்கதாக வுள்ள, அல்லது அவ்வாறு விசாரிக்கத்தக்கதல்லவென்றாலும் ஆயுட்காலச் சிறைத்தண்டனை அளிக்கத்தக்கதாகவுள்ள குற்ற மொன்றைச் செய்திருப்பதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள ஒருவரை ஜாமீனில் விடுவதற்கு முன்பு, ஜாமீனுக்கான விண்ணப்பங்குறித்த அறிவிப்பை, எழுத்து மூலம் பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக அவ்வறிவிப்பைத் தருவது சாத்தியமல்ல என்று கருதினாலன்றி அரசு குற்றத் தூறை வழக்குரைஞருக்குக் கொடுத்தல் வேண்டும்.

(2) ஓர் உயர் நீதிமன்றமோ, செஷன்ஸ் நீதிமன்றமோ இந்த அத்தியாயத்தின்படி ஜாமீனில் விடுவிக்கப்பட்டிருக்கின்ற எவரையும் கைது செய்யும்படி உத்தரவிடலாம்; மற்றும் அவரைக் காவலில் வைக்க அனுப்பலாம்.

ஜாமீன் தொகையும் அதைக் குறைத்தலும்.

440. (1) இந்த அத்தியாயத்தின்படி எழுதிக் கொடுக்கப்பட்ட ஜாமீன் ஒவ்வொன்றின் தொகையும் வழக்கின் சூழ்நிலைகளைக் கவனத்திற்கொண்டு நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்; அது மிகையானதாக இருத்தல் ஆகாது.

(2) உயர் நீதிமன்றம் அல்லது செஷன்ஸ் நீதிமன்றம் காவல் அலுவலரால் அல்லது நடுவரால் கோரப்படும் ஜாமீன் குறைக்கப்பட வேண்டும் என்று உத்தரவிடலாம்.

எதிரி, ஜாமீன்தார்கள் முன்பு யோகின் பத்திரம்.

441. (1) எவரேனும் ஜாமீனில் விடுவிக்கப்படுவதற்கு முன்பு அல்லது அவரது சொந்தப் பத்திரத்தின்பேரில் விடுவிக்கப்படுவதற்கு முன்பு, நிலவரத்திற்கேற்ப, காவல் அலுவலர் அல்லது நீதிமன்றம் போதுமென நினைக்கும் பணத் தொகைக்கான பத்திரமொன்று அத்தகையவராலும் அவர் ஜாமீனில் விடுவிக்கப்படும்போது, அவர் அப் பத்திரத்தில் சொல்லப்பட்ட காலத்திலும் இடத்திலும் ஆஜராக வேண்டும் என்ற நிபந்தனையுடனும், நிலவரத்திற்கேற்ப, அக்காவல் அலுவலரால், அல்லது நீதிமன்றத்தால் வேறுவிதமாக உத்தரவிடப்படும் வரை, அவ்வாறு தொடர்ந்து ஆஜராகிக் கொண்டிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடனும் ஒருவர் அல்லது மேற்பட்ட போதுமான ஜாமீன்தார்களாலும் எழுதிக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(2) எவரையேனும் ஜாமீனில் விடுவிப்பதற்காக நிபந்தனை எதேனும் விதிக்கப்படுமிடத்து, அப் பத்திரத்தில் அந்த நிபந்தனையும் அடங்கியிருத்தல் வேண்டும்.

(3) வழக்கின் தன்மையைப்பொறுத்து, கோரப்படும் போது குற்றச்சாட்டுக்குப் பதிலளிப்பதற்காக உயர் நீதிமன்றத்திலோ செஷன்ஸ் நீதிமன்றத்திலோ வேறு நீதிமன்றத்திலோ அவர் ஆஜராக வேண்டும் என்று ஜாமீனில் விடுவிக்கப்பட்டவரை அந்தப் பத்திரம் கட்டுப்படுத்தலும் வேண்டும்.

(4) ஜாமீன்தார்கள் பொருத்தமானவர்களா அல்லது போதுமானவர்களா என்பதை நிர்ணயிப்பதற்காக, நீதிமன்றம், ஜாமீன்தார்களின் போதிய நிலை அல்லது

பொருத்தம் பற்றி பிரமாணப் பத்திரங்களில் அடங்கியுள்ள சங்கதிகளை நிரூபிப்பதற்காக அப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ளலாம்; அல்லது தான் அவசியமென எண்ணுமாறால், அத்தகைய போதிய நிலை அல்லது பொருத்தம் பற்றித் தானே பரிசிலனையொன்றை நடத்தலாம், அல்லது தனக்குக் கீழமைந்துள்ள நடுவர் ஒருவரால் விசாரணையொன்று செய்யும்படி செய்யலாம்.

காவலிலிருந்து விட்டு விடுதல்.

442. (1) பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்ட உடனையே, எவர் ஆஜராவதற்காக அது எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கின்றதோ அவர் விடுவிக்கப்பட வேண்டும்; மற்றும் அவர் சிறைச்சாலையிலிருக்கும்போது, அவரை ஜாமீனில் விடுவிக்கின்ற நீதிமன்றம், அச் சிறைச்சாலையின் பொறுப்பு அலுவலருக்கு விடுவிப்புக்கட்டளை ஒன்றைப் பிறப்பித்தல் வேண்டும்; மேலும் அவ்வலுவலர் அக் கட்டளை வந்ததன் பேரில் அவரை விடுவித்தல் வேண்டும்.

(2) இந்தப் பிரிவிலோ, 436 ஆவது பிரிவிலோ, 437 ஆவது பிரிவிலோ உள்ள எதுவும், எந்த விஷயத்தைப் பொறுத்து அப் பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்டதோ அதுவல்லாத வேறு விஷயம் எதற்காகவேனும் காவலில் வைக்கப்படுவதற்கு ஆட்பட்ட எவரையும் விடுவிக்கக் கோருவதற்காகக் கொள்ளுதல் ஆகாது.

முதலாவதாக வாங்கப்பட்டது போதாமையாக இருக்கும்போது, போதுமான ஜாமீன் கொடுக்க கட்டளையிடுவதற்குள்ள அதிகாரம்.

443. தவறுகளோ, மோசடியாகவோ அல்லது வேறுவிதமாகவோ போதிய நிலையற்ற ஜாமீன்தார்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்திருப்பார்களானால், அல்லது அவர்கள் பிற்பாடு போதிய நிலையற்றவர்களானால் நீதிமன்றம் ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளவர் தம் முன் ஆஜர்படுத்தப்பட வேண்டும் என்று உத்தரவிட்டு, கைது செய் பிடிகட்டளை யொன்றை பிறப்பிக்கலாம்; மற்றும் போதுமான ஜாமீன்தார்களைக் கொடுக்குமாறு அவருக்குக் கட்டளை யிடலாம்; மேலும் அவ்வாறு செய்ய அவர் தவறும்போது, அவரைச் சிறையில் வைக்க அனுப்பலாம்.

ஜாமீன்தார் கடமை விட்டுவிடுதல்.

444. (1) ஜாமீனில் விடுவிக்கப்பட்ட ஒருவர் ஆஜராகவும் நடவடிக்கையின்போது இருக்கவும் பொறுப்பேற்றுள்ள ஜாமீன்தார்கள் அனைவரும் அல்லது எவரேனும் எந்தக் காலத்திலும் அப் பத்திரத்தை முழுவதாகவோ விண்ணப்பதார்களைப் பொறுத்த மட்டிலுமோ ரத்து செய்வதற்கு நடுவருக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) அத்தகைய விண்ணப்பம் செய்யப்பட்டதன் பேரில், நடுவர் அவ்வாறு விடுவிக்கப்பட்டவர் தம் முன் கொண்டு வரப்பட வேண்டும் என்று உத்தரவிட்டு, கைது செய்வதற்கான பிடிகட்டளையைப் பிறப்பித்தல் வேண்டும்.

(3) அப் பிடிகட்டளையைத் தொடர்ந்து அத்தகையவர் ஆஜராவதன் பேரிலோ அல்லது அவர் தன்னிச்சையாகவே சரணடைவதன் பேரிலோ நடுவர் அப் பத்திரமானது முழுமையாக அல்லது விண்ணப்பதார்களைப் பொறுத்த மட்டில் ரத்து செய்யப்பட வேண்டுமென்று உத்தரவிடுதல் வேண்டும். மற்றும் போதிய வேறு ஜாமீன்தார்களைக் கொடுக்குமாறு அத்தகையவரைக் கோருதல் வேண்டும். மேலும், அவர் அவ்வாறு செய்யத் தவறுவாரானால், அவரைச் சிறைச்சாலைக்கு அனுப்பிவைக்கலாம்.

ஜாமீனுக்குப் பதிலாக வைப்பீடு வைத்தல்.

445. ஜாமீன்தார்களுடனே இல்லாமலோ பத்திரமொன்றை எழுதிக் கொடுக்குமாறு நீதிமன்றத்தால் அல்லது அனுவலரால் எவரேனும் கோரப்படும்போது, அந்த நீதிமன்றம் அல்லது அனுவலர், நன்னடத்தைக்கான பத்திரமொன்றின் விஷயத்தில் தவிர, அப் பத்திரத்தை எழுதிக் கொடுப்பதற்குப் பதிலாக அந்த நீதிமன்றம் அல்லது அனுவலர் நிர்ணயிக்கலாகும் பணத்தொகையை அல்லது அத் தொகைக்கான அரசாங்கக் கடனுறுதிச் சீட்டுகளை வைப்பீடாக வைப்பதற்கு அவரை அனுமதிக்கலாம்.

பத்திரமானது தண்ட இழப்பாகியிருக்கும்போது நடைமுறை.

446. (1) நீதிமன்றத்தின் முன் ஆஜராவதற்காகவோ, அல்லது சொத்தைத் தாக்கல் செய்வதற்காகவோ இந்தச் சட்டத்தின்படியான பத்திரமொன்று எழுதிக் கொடுக்கப்பட்டிருந்து அந்த நீதிமன்றத்திற்கோ அல்லது அவ் வழக்கு பின்னர் மாற்றப்பட்டுள்ள நீதிமன்றத்திற்கோ திருப்திஏற்படும் வகையில் அப் பத்திரம் தண்ட இழப்பாகியிருக்கிறது என்று நிரூபிக்கப்படுமிடத்து, அல்லது இந்தச் சட்டத்தின் பரூயான வேறெந்தப் பத்திரத்தையேனும் பொறுத்து, அப் பத்திரத்தை வாங்கிக்கொண்ட நீதிமன்றம், அல்லது அவ் வழக்கு பின்னர் மாற்றப்பட்டுள்ள நீதிமன்றம் அல்லது முதல் வகுப்பு நடுவரின் நீதிமன்றத்திற்குத் திருப்தி ஏற்படும் வகையில் அப் பத்திரம் தண்ட இழப்பாகியிருக்கிறது என்று நிரூபிக்கப்படுமிடத்து,

நீதிமன்றம் அவ்வாறு நிரூபிக்கப்பட்டதற்கான ஆதாரங்களைப் பதிவு செய்தல் வேண்டும்; மற்றும் அப் பத்திரத்தில் கட்டுப்பட்டுள்ள எவரையும் அதற்குரிய தண்டத்தைச் செலுத்துமாறே, அது ஏன் செலுத்தப்படக் கூடாது என்பதற்குக் காரணங் காட்டுமாறே கேட்கலாம்.

விளக்கம்.—ஒரு நீதிமன்றத்தின் முன் ஆஜராவதற்காக அல்லது சொத்தைத் தாக்கல் செய்வதற்காக உள்ள பத்திரத்தின் நிபந்தனையொன்றில் அவ் வழக்கு பின்னர் மாற்றப்படலாகும் நீதிமன்றத்தின் முன்னும், நிலவரத்திற் கேற்ப, ஆஜராவதற்கான அல்லது சொத்தைத் தாக்கல் செய்வதற்கான நிபந்தனையும் அடங்கியிருப்பதாகப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

(2) போதுமான காரணங்காட்டப்படாமலும் தண்டம் செலுத்தப்படாமலுமிருந்தால், நீதிமன்றம் அத் தண்டம் இந்தச் சட்டத்தின்படி தன்னால் விதிக்கப்பட்ட ஓர் அபராதத்தைப் போன்று அதை வசூலிக்க நடவடிக்கை எடுக்கலாம்.

(3) நீதிமன்றம், கன்யுக்தம்போல், குறிப்பிடப்பட்ட தண்டத்தின் பகுதி எதையும் தள்ளுபடி செய்து, அதன் பகுதி மாத்திரம் செலுத்துவதையே கட்டாயப்படுத்தலாம்.

(4) பத்திரம் ஒன்றுக்குப் பொறுப்பேற்றுள்ள ஜாமீன்தார் ஒருவர் அப் பத்திரம் தண்ட இழப்பாக்கப்படுவதற்கு முன் மரணமடையுமிடத்து, அவரது சொத்து அப் பத்திரத்தைப் பொறுத்த எல்லாக் கடப்பாடுகளினின்றும் விடுவிக்கப்படுதல் வேண்டும்.

(5) 106 ஆவது பிரிவு, 117 ஆவது பிரிவு அல்லது 360 ஆவது பிரிவின்படி ஜாமீன் அளித்திருக்கின்ற ஒருவர் ஒரு குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டு, அந்தக் குற்றமானது அவர் கொடுத்த பத்திரத்தின் நிபந்தனைகளை மீறுவதாகவோ அல்லது 448 ஆவது பிரிவின்படி அவர் கொடுக்க வேண்டிய பத்திரத்திற்குப் பதிலாக எழுதிக் கொடுக்கப்பட்டுள்ள பத்திரத்தின் நிபந்தனைகளை மீறுவதாகவோ அமையுமானால் அக் குற்றத்திற்காக அவரைத் தண்டித்த நீதிமன்றம் அளித்த தீர்ப்பின் உறுதிச்சான்றளிக்கப்பட்ட நகலொன்றை, அவரது ஜாமீன்தார் அல்லது ஜாமீன்தார்களுக்கெதிராக இந்தப் பிரிவின்படி நடக்கும் நடவடிக்கைகளில் சாட்சியமாகப் பயன்படுத்தலாம்; மற்றும் அவ்வாறு உறுதிச்

சான்றளிக்கப்பட்ட நகல் அவ்வாறு பயன்படுத்தப்படுமானால், அத்தகைய குற்றம் அவரால் செய்யப்பட்டது என்று அதற்கு எதிர்மாறாக நிரூபிக்கப்பட்டாலன்றி நீதிமன்றம் அனுமானித்தல் வேண்டும்.

ஜாமீன்தாரின் தொடர்பு நீக்கம் அல்லது மரணத்தின் போது அல்லது பத்திரமொன்று தண்ட இழப்பாகும் போது நடைமுறை.

447. இந்தச் சட்டத்தின்படி பத்திரமொன்றுக்கான ஜாமீன்தார் எவரேனும் நொடித்துப் போகும்போது, அல்லது மரணமடையும்போது அல்லது 446 ஆவது பிரிவின் வகை முறைகளின்படி பத்திரம் ஏதேனும் தண்ட இழப்பாகிற போது எந்த நீதிமன்றத்தின் கட்டளையால் அத்தகைய பத்திரம் வாங்கப்பட்டதோ அந்த நீதிமன்றம், அல்லது முதல் வகுப்பு நடுவர் ஒருவர், ஜாமீன் கோரப்பட்டுள்ளவரை மூலக்கட்டளையின் கோரிக்கைகளின்படி புதிய ஜாமீன் அளிக்குமாறு கட்டளையிடலாம். மற்றும் அத்தகைய ஜாமீன் அளிக்கப்படவில்லையானால், அம் மூலக்கட்டளைக்கிணங்கத் தவறியது போன்றே அந் நீதிமன்றம் அல்லது நடுவர் மேல் நடவடிக்கை எடுக்கலாம்.

பத்திரம் வயது வராதவரிட மிருந்து கோரப்படுதல்.

448. பத்திரமொன்றை எழுதிக் கொடுக்குமாறு நீதிமன்றம் அல்லது அலுவலர் எவராலேனும் கோரப்படுபவர் வயது வராதவராக இருக்கும்போது, அந் நீதிமன்றம் அல்லது அலுவலர், அதற்குப் பதிலாக, ஒரு ஜாமீன்தார் அல்லது ஜாமீன்தார்களால் மட்டுமே எழுதிக் கொடுக்கப்பட்ட பத்திரமொன்றை ஏற்றுக்கொள்ளலாம்.

446 ஆவது பிரிவின்படியுள்ள கட்டளைகளிலிருந்து மேல் முறையீடு.

449. 446 ஆவது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட கட்டளைகள் அனைத்தும்,—

(i) நடுவர் ஒருவர் பிறப்பித்த கட்டளையாயிருந்தால் அதன் மீதிருந்து செஷன்ஸ் நீதிபதிக்கும்;

(ii) செஷன்ஸ் நீதிமன்றம் பிறப்பித்த கட்டளையாயிருந்தால், அந் நீதிமன்றத்தால், பிறப்பிக்கப்பட்ட கட்டளையிலிருந்து மேல்முறையீடொன்று எந்த நீதிமன்றத்திற்குச் செய்துகொள்ளக்கூடுமோ அந்த நீதிமன்றத்திற்கும்

—மேல்முறையீட்டிற்குரியனவாகும்.

சில ஜாமீன்களின் பேரில் கொடுபட வேண்டிய தொகையை வசூலிப்பதற்கு உத்தரவிடுவதற்கான அதிகாரம்.

450. உயர் நீதிமன்றம் அல்லது செஷன்ஸ் நீதிமன்றம் அல்லது செஷன்ஸ் நீதிமன்றத்தின் மூன் ஆஜராவதற்காக அல்லது நடவடிக்கையின்போது இருப்பதற்காக எழுதிக் கொடுக்கப்பட்ட பத்திரமொன்றின்பேரில் கொடுபட வேண்டிய தொகையினை வசூலிக்கும்படி நடுவர் எவருக்கும் உத்தரவிடலாம்.

அத்தியாயம் XXXIV.

சொத்துக்கு வகை செய்தல்.

தெ வழக்குகளில் விசாரணை நடப்பிலிருக்கையில் சொத்தினை பாதுகாப்புக்கும் அதற்கு வகை செய்வதற்குமாகக் கட்டளையிடுதல்.

451. சொத்து ஏதேனும் குற்ற வழக்கு நீதிமன்றம் ஒன்றின் முன் பரிசீலனை அல்லது விசாரணையின்போது தாக்கல் செய்யப்படும்போது, அந்நீதிமன்றம் அப்பரிசீலனை அல்லது விசாரணை முடிவடையும்வரை அச்சொத்தின் தக்க பாதுகாப்புக்காகத் தான் பொருத்தமென நினைக்கும் கட்டளையைப் பிறப்பிக்கலாம்; மற்றும் அச்சொத்தானது இயல்பாகவும் விரைவாகவும் அழியக்கூடியதாயிருப்பின், அல்லது அவ்வாறு செய்வது மற்றபடி நலமாயிருப்பின், நீதிமன்றம், தான் அவசியமென நினைக்கும் சாட்சியத்தைப் பதிவு செய்ததற்குப் பின்பு, அச்சொத்து விற்பனை செய்யப்படவோ வேறுவிதமாக அதற்கு வகை செய்வதற்கோ கட்டளையிடலாம்.

விளக்கம்.—இந்தப் பிரிவின் நோக்கங்களைப் பொறுத்த மட்டில் "சொத்து" என்பதில்—

(அ) நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்யப்படும் அல்லது, அதன் பாதுகாப்பிலுள்ள எந்த வகைச் சொத்தும் அல்லது பத்திரமும்;

(ஆ) எந்தச் சொத்தைப் பொறுத்து குற்றமொன்று செய்யப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறதோ, அல்லது எந்தச் சொத்து குற்றம் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறதோ அந்தச் சொத்து எதுவும்

—உள்ளடங்கும்.

விசாரணையின் முடிவில் சொத்துக்கு வகை செய்யப்படுவதற்குக் கட்டளையிடுதல்.

452. (1) ஒரு குற்ற வழக்கு நீதிமன்றத்தில் பரிசீலனை அல்லது விசாரணை முடிக்கப்படும்போது, நீதிமன்றம் தன் முன் தாக்கல் செய்யப்பட்ட அல்லது தன் பாதுகாப்பிலுள்ள சொத்து அல்லது பத்திரம் எதற்கும் அல்லது, எந்தச் சொத்து அல்லது பத்திரத்தைப் பொறுத்து குற்றம் ஏதேனும் செய்யப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறதோ அல்லது எந்தச் சொத்து அல்லது பத்திரம் குற்றம் எதையேனும் செய்வதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறதோ அந்தச் சொத்து அல்லது பத்திரம் எதற்கும், அழித்து விடுதல் மூலமாகவோ பறிமுதல் மூலமாகவோ அல்லது அதன் அனுபோகத்திற்குப் பாத்தியதை கொண்டாடுகிறவருக்கு ஒப்படைப்பதன் மூலமாகவோ வேறுவிதமாகவோ

வகை செய்வதற்காகத் தான் பொருத்தமெனை நினைக்கும் கட்டளையைப் பிறப்பிக்கலாம்.

(2) சொத்தின் அனுபோகத்திற்குப் பாத்தியதை கொண்டாடுகின்ற எவருக்கும் நியத்தனை எதையும் இல்லாமல் சொத்தை ஒப்படைப்பதற்காக, அல்லது (1) ஆவது உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட கட்டளை, மேல் முறையீட்டின் பேரிலோ மேலாய்வின் பேரிலோ மாற்றப் படுமானால் அல்லது நீக்கப்படுமானால், அத்தகைய சொத்தை நீதிமன்றத்திற்குத் திரும்ப ஒப்படைப்பதாக உறுதி கூறி, நீதிமன்றத்திற்குத் திருப்திகரமான வகையில், பத்திர மொன்றை ஜாமீன்தார்களுடனே இல்லாமலோ அவர் எழுதிக் கொடுக்க வேண்டும் என்னும் நியத்தனையின் பேரில் அச் சொத்தை ஒப்படைப்பதற்காக (1) ஆவது உட்பிரிவின்படி கட்டளையொன்று பிறப்பிக்கப்படலாம்.

(3) எதனால் நீதிமன்றம் (1) ஆவது உட்பிரிவின்படி தானே கட்டளையொன்றைப் பிறப்பிப்பதற்குப் பதிலாக, தலைமை நீதித்துறை நடுவருக்கு அச் சொத்து ஒப்படைக்கப் பட வேண்டுமெனை உத்தரவிடலாம்; அதன் பேரில் அவர் 457, 458 மற்றும் 459 ஆகிய பிரிவுகளில் வகை செய்யப்பட்ட முறையில் அது குறித்து நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(4) சொத்தானது, கால்நடையாகவோ இயல்பாகவும் சாதாரணமானதும் இயற்கையானதுமான விரைவாகவும் அழியக்கூடியதாகவோ இருந்தாலல்லாமல், அல்லது (2) ஆவது உட்பிரிவைத் தொடர்ந்து பத்திரமொன்று எழுதிக் கொடுக்கப்பட்டிருக்குமிடத்து, (1) ஆவது உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட கட்டளை இரண்டு மாதங்களுக்கு, அல்லது மேல்முறையீடொன்று நாக்கல் செய்யப்படும்போது, அம் மேல்முறையீடு முடிவு செய்யப்பட்டிருக்கின்றவரை நிறை வேற்றப்படுதல் ஆகாது.

(5) இந்தப் பிரிவில் "சொத்து" என்னும் சொல்லானது, எந்தச் சொத்தைப் பொறுத்து குற்றமொன்று செய்யப் பட்டிருப்பதாகத் தோன்றுகிறதோ அந்தச் சொத்து சம்பந்தமாக ஆதியில் தரப்பினர் எவரது அனுபோகத்திலோ கட்டுப்பாட்டிலோ இருந்தபடியான சொத்து மட்டுமன்றி,

எந்தச் சொத்தாக அல்லது எந்தச் சொத்துக்காக அச் சொத்து மாற்றப்பட்டிருக்கக்கூடுமோ அல்லது பரிமாற்றிக் கொள்ளப்பட்டிருக்கக்கூடுமோ அந்தச் சொத்து எதையும் உடனடியாகவாயினும் வேறுவிதமாகவாயினும் அத்தகைய மாற்றம் அல்லது பரிமாற்றத்தால் அடையப்பெற்ற எந்தப் பொருளையும் கூட உள்ளடக்கும்.

கள்ளமில்லாமல் வாங்கிய வருக்கு எதிரியிடம் காணப்படும் பணத்திலிருந்து கொடுத்தல்.

453. திருட்டு அல்லது திருட்டுப் பொருளைப் பெற்றுக் கொள்ளுதல் உள்பட்ட அல்லது அத்தகைய குற்றமாக ஆகின்ற குற்றம் எதற்காகவேனும் எவரேனும் தண்டிக்கப் பட்டு, அத் திருட்டுப் பொருள் திருடப்பட்டது என்று தெரியாமல் அல்லது அவ்வாறு நம்பக் காரணமில்லாமல் அவரிடமிருந்து வேறெவரேனும் அதை வாங்கியுள்ளார் என்றும் தண்டிக்கப்பட்டவர் கைது செய்யப்பட்டபோது அவர் வசமிருந்து பணம் ஏதேனும் எடுக்கப்பட்டிருக்கிறது என்றும் நிரூபிக்கப்படும்போது, நீதிமன்றம், அவ்வாறு வாங்கியவரின் விண்ணப்பத்தின் பேரிலும், அந்தச் சொத்தின் அனுபோக உரிமை உடையவருக்குப் பொருளை மீட்டிக் கொடுத்ததன் பேரிலும் அவ்வாறு வாங்கியவரால் செலுத்தப் பட்ட விலைக்கு மேற்படாத ஒரு தொகை அப் பணத்திலிருந்து அவருக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று கட்டளையிடலாம்.

452 ஆவது பிரிவு அல்லது 453 ஆவது பிரிவின்படி பிறப்பிக்கப் பட்ட கட்டளைகளுக்கெதிராக மேல் முறையீடு.

454. (1) 452 ஆவது பிரிவு அல்லது 453 ஆவது பிரிவின் படி ஒரு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட கட்டளை ஒன்றினால் குறையுற்றுள்ள எவரும், அதற்கு எதிராக முன் சொன்ன நீதிமன்றம் பிறப்பித்த தண்டனைத் தீர்ப்பு கையிலிருந்து எந்த நீதிமன்றத்திற்குச் சாதாரணமாக மேல் முறையீடுகள் செய்துகொள்ளக்கூடுமோ அந்த நீதி மன்றத்திற்கு மேல்முறையீடு செய்யலாம்.

(2) அத்தகைய மேல்முறையீட்டின் பேரில் மேல்முறை யீட்டு நீதிமன்றம், மேல்முறையீடு முடிவு செய்யப்படும் வரை அக் கட்டளை நிறுத்திவைக்கப்பட வேண்டுமென்று உத்தரவிட்டு அல்லது அக் கட்டளையை மாற்றியோ திருத்தி யோ அல்லது பயனற்றதாக்கியோ நியாயமான கட்டளைகள் எவற்றையும் மேற்கொண்டும் பிறப்பிக்கலாம்.

(3) (1) ஆவது உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட கட்டளை பிறப்பிக்கப்பட்ட வழக்கினை ஆயும்போது, ஒரு மேல்முறை யீட்டு உறுதிப்பாட்டு அல்லது மேலாய்வு நீதிமன்றமும் (2) ஆவது உட்பிரிவில் குறிப்பிடப்படும் அதிகாரங்களைச் செலுத்தலாம்.

45/1860 எழுத்துவம் அவதூறுன விஷயத்தையும் மற்ற விஷயத்தையும் அறிந்த விதம்.

455. (1) இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 292 ஆவது பிரிவு, 293 ஆவது பிரிவு, 501 ஆவது பிரிவு அல்லது 502 ஆவது பிரிவின்படி அளிக்கப்பட்ட தண்டனைத்தீர்ப்பின் பேரில், அந்தத் தண்டனைத் தீர்ப்பு எந்தப் பொருளைப் பொறுத்து வழங்கப்பட்டதோ அந்தப் பொருள்களின் நகல்கள் அனைத்தையும், அவை அந்த நீதிமன்றத்தின் பாதுகாப்பிலோ அல்லது தண்டிக்கப்பட்டவர் கைவசத்திலோ, அதிகாரத்திலோ இருக்கும்போது நீதிமன்றம், அந்த நகல்கள் அனைத்தையும் அழித்துவிடுவதற்குக் கட்டளையிடலாம்.

(2) நீதிமன்றம், அதே போன்ற முறையில், இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 272 ஆவது பிரிவு, 273 ஆவது பிரிவு, 274 ஆவது பிரிவு அல்லது 275 ஆவது பிரிவின்படி அளிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பின்பேரில் எந்த உணவு, பானம், மருந்து அல்லது மருத்துவத் தயாரிப்பைப் பொறுத்து அத் தண்டனைத் தீர்ப்பு அளிக்கப்பட்டதோ அந்த உணவு, பானம், மருந்து அல்லது மருத்துவத் தயாரிப்பு அழிக்கப்படுதல் வேண்டுமென்று கட்டளையிடலாம்.

அசையாப் பொருளின் அனுபோகத்தைத் திரும்ப ஒப்படைப்பதற்கான அதிகாரம்.

456. (1) வன்முறைத் தாக்குதல் அல்லது வன்மை காட்டுதல் அல்லது மிரட்டுதல் குற்றத்தோடு கூடிய குற்றமொன்றைச் செய்ததாக ஒருவர் தண்டிக்கப்படும்போதும், அந்தகைய வன்முறைத்தாக்கு, வன்மை காட்டுதல் அல்லது மிரட்டுதல் குற்றத்தின் மூலம் எவரேனும் அசையாப் பொருளின் அனுபோகத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார் என்று நீதிமன்றத்திற்குத் தோன்றும்போதும், நீதிமன்றம், தான் பொருத்தமென நினைத்தால், அச் சொத்தின் அனுபோகத்தை வைத்திருக்கலாகும் வேறெவரையும் அவசியமானால், வன்முறை மூலம் அப்புறப்படுத்திய பின்பு, அச் சொத்தின் அனுபோகம் அவருக்குத் திரும்ப ஒப்படைக்கப்பட வேண்டுமென்று கட்டளையிடலாம்.

ஆனால், அந்தகைய கட்டளை எதுவும் தண்டனைத் தீர்ப்புத் தேதிக்குப் பின்பு ஒரு மாதத்திற்கு மேற்பட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

(2) குற்றத்தை விசாரிக்கின்ற நீதிமன்றம் (1) ஆவது உட்பிரிவின்படி கட்டளையொன்றைப் பிறப்பிக்காதவிடத்து, மேல்முறையீட்டு, உறுதிப்பாட்டு, அல்லது மேலாய்வு நீதிமன்றம், தான் பொருத்தமென நினைத்தால்

நிலவரத்திற்கேற்ப, மேல்முறையீடு, மேல்முடிவு அல்லது மேலாய்வினை முடிவு செய்யும்போது, அத்தகைய கட்டளையைப் பிறப்பிக்கலாம்.

(3) கட்டளையொன்று, (1) ஆவது உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்டிருக்குமிடத்து, 454 ஆவது பிரிவின் வகைமுறைகள், 453 ஆவது பிரிவின்படியான கட்டளையொன்று சம்பந்தமாக இயங்குவன போன்றே அவை அக் கட்டளை சம்பந்தமாகவும் இயங்குதல் வேண்டும்.

(4) அத்தகைய அசையாப் பொருளுக்கு அல்லது அசையாப் பொருளில் உரிமையோ பாத்தியதையோ இருப்பதாக எவரேனும் உரிமை வழக்கொன்றில் நிலைநாட்டக்கூடிய உரிமை அல்லது பாத்தியதையை இந்தப் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட கட்டளை எதுவும் பாதித்தல் ஆகாது.

சொத்து கைப்பற்றப்படுவதன் பேரில் காவல் துறை மேற்கொள்ளும் நடைமுறை.

457. (1) காவல் அலுவலர் எவரேனும் சொத்தைக் கைப்பற்றியது பற்றி இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி நடுவர் ஒருவருக்கு அறிவிக்கப்பட்டு, பரிசீலனை அல்லது விசாரணையின்போது குற்றவழக்கு நீதிமன்றம் ஒன்றின் முன் அச் சொத்து தாக்கல் செய்யப்படாதபோதெல்லாம், அச் சொத்துக்கு வகை செய்வது பற்றி, அல்லது அதன் அனுபோகத்திற்கு உரிமை உடையவருக்கு அத்தகைய சொத்தை ஒப்படைப்பது பற்றி அல்லது அத்தகையவர் உறுதியாகக் கண்டறியப்பட முடியவில்லையானால், அத்தகைய சொத்தின் பாதுகாப்பைப் பொறுத்தும் அதைத் தாக்கல் செய்வதைப் பொறுத்தும், நடுவர் தாம் பொருத்தமென நினைக்கும் கட்டளையைப் பிறப்பிக்கலாம்.

(2) அவ்வாறு உரிமையுடையவர் யாரென்று தெரிந்தால், நடுவர் தாம் பொருத்தமென நினைக்கும் நிபந்தனைகள் (எவையேனுமிருப்பின்) அவற்றின் பேரில் அவருக்கு அச் சொத்து ஒப்படைக்கப்பட வேண்டுமென்று கட்டளையிடலாம்; மற்றும் அத்தகையவர் யாரெனத் தெரியவில்லையானால், நடுவர் அதைத் தொடர்ந்து வைத்துக்கொள்ளலாம்; மேலும் அத்தகைய சந்தர்ப்பத்தில், எந்த உருப்படிகள் அச் சொத்தில் அடங்கியிருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டும், அதற்குப் பாத்தியதை கொண்டாடலாகும்

எவரையும் தம் முன் வந்து பரிசங்க அறிக்கையின் தேதியி லிருந்து ஆறு மாதங்களுக்குள் தம் பாத்தியதையை நிலை நாட்டுமாறும் கோரி பரிசங்க அறிக்கையொன்றைப் பிறப்பிக்க வேண்டும்.

458. (1) எவரும் அத்தகைய கால கெடுவுக்குள் அச் சொத்துக்குத் தமக்குள்ள பாத்தியதையை நிலைநாட்ட வில்லையானாலும், எவரது அனுபோகத்தில் அத்தகைய சொத்து இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டதோ அவர், தம்மால் சட்டரீதியாக அது அடையப்பட்டது என்று காட்ட இயலவில்லையானாலும், நடுவர் அத்தகைய சொத்து மாநில அரசின் கைவசத்தில் இருத்தல் வேண்டும் என்றும் அந்த அரசால் அது விற்பனை செய்யப்படலாம் என்றும், அத்தகைய விற்றுமுதல் சம்பந்தமாக விதிக்கப்படலாகும் முறையில் வகை செய்ய வேண்டும் என்றும் கட்டளை மூலமாக உத்தர விடலாம். பாத்தியதார் ஆறு மாதங்களுக்குள் வராதிடத்து நடைமுறை.

(2) நடுவரால் அளிக்கப்பட்ட தண்டனைத்தீர்ப்புகளி லிருந்து சாதாரணமாக மேல்முறையீடுகள் எந்த நீதிமன்றத் திற்குச் செய்துகொள்ளக்கூடுமோ அந்த நீதிமன்றத்திற்கு அத்தகைய கட்டளை எதற்கும் எதிரான மேல்முறை யீடொன்று செய்துகொள்ளுதல் வேண்டும்.

459. அத்தகைய சொத்தின் அனுபோகத்திற்கு உரிமை யுடையவர் யாரெனத் தெரியாமலிருந்து, அல்லது யாரா லிருந்து சொத்தானது இயல்பாக விரைவில் அழியக் கூடியதாக இருக்குமானால், அல்லது எந்த நடுவருக்கு அச் சொத்து கைப்பற்றப்பட்டது பற்றி அறிவிக்கப்பட் டுள்ளதோ அந்த நடுவர் அதனை விற்பனை செய்வதானது சொந்தக்காரருக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்றோ, அச் சொத்தின் மதிப்பு பத்து ரூபாய்க்குக் குறைவாக இருக் கிறது என்றோ கருதுவாரானால், அவர் அது விற்பனை செய்யப்பட வேண்டுமென்று எந்தக் காலத்திலும் உத்தரவிட லாம்; மற்றும் 457 மற்றும் 458 ஆகிய பிரிவுகளின் வகை முறைகள், கிட்டத்தட்ட எந்த அளவுக்குச் சாத்தியமாகுமோ அந்த அளவுக்கு அத்தகைய நிகர விற்றுமுதல் மீது இயங்குதல் வேண்டும். அழிந்துபோகக் கூடிய சொத்தை விற்பனை செய்வதற்குள்ள அதிகாரம்.

அத்தியாயம் XXXV.

முறைகேடான நடவடிக்கைகள்.

நடவடிக்கை கள் விழலாக் காத முறை கேடுகள்.

460. பின்வரும் செய்கைகளில் எதொன்றையும் செய்ய, அதாவது:—

(அ) 94 ஆவது பிரிவின்படி சோதனைக் கட்டளை ஒன்றைப் பிறப்பிக்க;

(ஆ) குற்றமொன்றைப் புலனுய்வு செய்ய, காவல் துறைக்கு 155 ஆவது பிரிவின்படி கட்டளையிட;

(இ) 176 ஆவது பிரிவின்படி பிரேத விசாரணையை நடத்த;

(ஈ) தம் வட்டார அதிகார வரம்புகளுக்கு வெளியே குற்றமொன்றைச் செய்துவிட்டுத் தம் அதிகார வரம்புக்குள் இருக்கின்ற ஒருவரைக் கைது செய்வதற்காக 187 ஆவது பிரிவின்படி நீதிமுறைக் கட்டளையைப் பிறப்பிக்க;

(உ) 190 ஆவது பிரிவின் (1) ஆவது உட்பிரிவின்—

(அ) கூறு அல்லது (ஆ) கூறின்படி குற்றமொன்றை விசாரணைக்கெடுத்துக்கொள்ள;

(ஊ) 192 ஆவது பிரிவின் (2) ஆவது உட்பிரிவின்படி வழக்கொன்றை மாற்றிவைக்க;

(எ) 306 ஆவது பிரிவின்படி மன்னிப்பு அளிக்க;

(ஏ) 410 ஆவது பிரிவின்படி வழக்கொன்றை மீண்டும் தருவித்துத் தாமே விசாரிக்க; அல்லது

(ஐ) 458 ஆவது பிரிவு அல்லது 459 ஆவது பிரிவின்படி சொத்தை விற்பனை செய்ய

சட்டத்தினால் அதிகாரமளிக்கப்படாத நடுவர் எவரேனும் அச் செய்கையை, தவறுக நல்லெண்ணத்துடன் செய்வாராஞல் அவரது நடவடிக்கைகள் அவர் அவ்வாறு அதிகாரமளிக்கப்படவில்லை என்னும் ஆதாரத்தின்பேரில் மட்டுமே தீக்கப்படுதல் ஆகாது.

நடவடிக்கை கள் விழலாக் கும் முறை கேடுகள்

461. இதற்கெனச் சட்டத்தால் அதிகாரமளிக்கப்படாத நடுவர் எவரேனும், கீழ்க்கண்ட எதையேனும் செய்வாராஞல், அவரது நடவடிக்கைகள் விழலாகிவிடும், அதாவது,—

(அ) 83 ஆவது பிரிவின்படி சொத்தை ஜப்தி செய்து விற்பனை செய்கிறார்;

(ஆ) அஞ்சலக அல்லது தந்தி அதிகாரியின் பாதுகாப்பி லுள்ள பத்திரம், அஞ்சற்கட்டு அல்லது வேறு பொருளுக் காகச் சோதனைக் கட்டளையொன்றைப் பிறப்பிக்கிறார்;

(இ) அமைதி பேணுவதற்கான ஜாமீன் கோருகிறார்;

(ஈ) நன்னடத்தைக்கான ஜாமீன் கோருகிறார்;

(உ) நன்னடத்தையுடனிருந்து வருவதாகச் சட்டப்படி கட்டுப்பட்டுள்ள ஒருவரை விட்டுவிடுகிறார்;

(ஊ) அமைதி பேணுவதற்கான பத்திரமொன்றை ரத்து செய்கிறார்;

(எ) ஜீவனாம்சத்திற்கான கட்டளையொன்றைப் பிறப்பிக் கிறார்;

(ஏ) தவத்தொல்லை ஒன்றினைக் குறித்து 133 ஆவது பிரிவின்படி கட்டளையொன்றைப் பிறப்பிக்கிறார்;

(ஐ) பொதுத் தொல்லையொன்று மீண்டுமோ தொடர்ந் தோ செய்யப்படுவதை 143 ஆவது பிரிவின்படி தடை செய்கிறார்;

(ஒ) X ஆவது அத்தியாயத்தின் "இ" பகுதி அல்லது "ஈ" பகுதியின்படி கட்டளையொன்றைப் பிறப் பிக்கிறார்;

(ஓ) 190 ஆவது பிரிவின் (1) ஆவது உட்பிரிவின் (இ) கூறின்படி குற்றமொன்றை விசாரணைக்கு எடுத்துக்கொள் கிறார்;

(ஔ) குற்றவாளியொருவரை விசாரணை செய்கிறார்;

(அஅ) குற்றவாளியொருவரைச் சுருக்கு முறையில் விசாரணை செய்கிறார்;

(அஆ) மற்றொரு நடுவரால் பதிவு செய்யப்பட்ட நடவடிக்கைகளின் பேரில் 325 ஆவது பிரிவின்படி தண்டனை ஒன்றைப் பிறப்பிக்கிறார்;

(அஇ) மேல்முறையீடொன்றைத் தீர்மானிக்கிறார்;

(அஈ) 397 ஆவது பிரிவின்படி நடவடிக்கைகளை அனுப்பு மாறு கோருகிறார்; அல்லது

(அஉ) 446 ஆவது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட கட்டளையொன்றை மேலாய்வு செய்கிறார்.

தவறுன இடத்தில் நடந்த நடவடிக்கைகள்.

462. ஒரு குற்ற வழக்கு நீதிமன்றத்தின் முடிபு, தண்டனை அல்லது கட்டளை எதுவும், எந்தப் பரிசிலனை, விசாரணை அல்லது வேறு நடவடிக்கைகள் நடக்கும்போது அந்த முடிபு காணப்பட்டதோ, தண்டனை அல்லது கட்டளை பிறப்பிக்கப் பட்டதோ அந்தப் பரிசிலனை, விசாரணை அல்லது வேறு நடவடிக்கைகள் தவறுன ஒரு செஷன்ஸ் பிரிவு, மாவட்டம், உட்கோட்டம் அல்லது வேறு வட்டார இடத்தில் நிகழ்ந்தது என்னும் காரணத்தின்பேரில் மட்டுமே, அத்தகைய தவறுனது உண்மையிலேயே நீதி தவறுவதற்குக் காரணமா யிருந்திருக்கிறது என்று தோன்றினலன்றி நீக்கப்படுதல் ஆகாது.

164 ஆவது பிரிவு அல்லது 281 ஆவது பிரிவின் வகை முறைகளுக்கு இணங்காமை.

463. (1) 164 ஆவது பிரிவு அல்லது 281 ஆவது பிரிவின் படி பதிவு செய்யப்பட்ட, அல்லது பதிவு செய்யப்பட்டதாகப் புலப்படுகின்ற எதிரி ஒருவரின் ஒப்புதல் வாக்குமூலம் அல்லது மற்ற உரை எந்த நீதிமன்றத்தின் முன் அளிக்கப் படுகிறதோ அல்லது சாட்சியமாகப் பெற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறதோ அந்த நீதிமன்றம், அவ்வுரையைப் பதிவு செய்கின்ற நடுவர் அப் பிரிவுகளில் எதொன்றின் வகைமுறை களில் எதற்கும் இணங்கி நடக்கவில்லை என்பதாகத் தெரிய வந்தால், அது 1/1872 ஆம் ஆண்டு இந்தியச் சாட்சியச் சட்டத்தின் 91 வது பிரிவில் என்ன கண்டிருந்தபோதிலும், அவ்வாறு இணங்காமை பற்றிச் சாட்சியம் எடுக்கலாம்; மற்றும் அவ்விணங்காமையானது எதிரியின் எதிர்வாதத்திற்கு தகுதி அடிப்படையில் கேடு விளைவிக்கவில்லையென்பதாகவும், பதிவு செய்யப்பட்ட உரையை அவர் உரியவாறு செய்தார் என்பதாகவும் திருப்தி கொள்வாரானல் அத்தகைய உரையை ஏற்கலாம்.

(2) இந்தப் பிரிவின் வகைமுறைகள் மேல்முறையீட்டு, மேல் முடிவு, மற்றும் மேலாய்வு நீதிமன்றங்கள் மீது இயங்கும்.

குற்றச்சாட்டை வனைய விட்டு விடுதலால், அல்லது குற்றச் சாட்டு இல்லா மையால் அல்லது குற்றச் சாட்டிலுள்ள பிழையால் ஏற்படும்விளைவு.

464. (1) குற்றச்சாட்டு வனையப்படவில்லை என்னும் காரணத்தின்பேரில் மட்டுமோ அல்லது குற்றச்சாட்டுகளின் தப்புச்சேர்க்கை உள்ளடங்கலாக, குற்றச்சாட்டில் பிழை, விடுதல் அல்லது முறைகேடு ஏதேனும் இருக்கிறது என்னும் காரணத்தின் பேரில் மட்டுமோ, மேல்முறையீட்டு, உறுதிப் பாட்டு அல்லது மேலாய்வு நீதிமன்றத்தின் கருத்தின்படி அதன் காரணமாக உண்மையிலேயே நீதி தவறியிருந்தாலன்றி

அதிகாரத் தகுதி வாய்ந்த ஒரு நீதிமன்றத்தின் முடிபு, தண்டனை அல்லது கட்டளை எதுவும் செல்லுபடியற்றதாகக் கொள்ளப்படுதல் ஆகாது.

(2) உண்மையிலேயே நீதி தவறியிருக்கிறது என்று மேல்முறையீட்டு, உறுதிப்பாட்டு அல்லது மேலாய்வு நீதிமன்றம் கருதுமானால், அது—

(அ) குற்றச்சாட்டொன்று வனையாமல் விடுபட்டிருந்தால், குற்றச்சாட்டொன்று வனையப்பட வேண்டும் என்றும், அக்குற்றச்சாட்டை வனைந்த கட்டத்திலிருந்து உடனடியாக விசாரணை மீண்டும் தொடக்கப்பட வேண்டும் என்றும் கட்டளையிடலாம்;

(ஆ) குற்றச்சாட்டில் பிழை, விடுதல் அல்லது முறைகேடு ஏதேனுமிருக்கும்போது நான் பொருத்தமென நினைக்கும் எந்த முறையிலும் வனையப்பட்ட குற்றச்சாட்டு ஒன்றின் பேரில் புதிய விசாரணையொன்று நடத்தப்பட வேண்டும் என்று உத்தரவிடலாம்.

ஆனால், நிரூபிக்கப்பட்ட சங்கதிகள் பொறுத்து, எதிரிக்கு விரோதமாகச் செல்லுபடியாகும் குற்றச்சாட்டு எதையும் காட்ட முடியாதபடி வழக்கின் சங்கதிகள் இருக்கின்றன என்று நீதிமன்றம் கருதுமானால், அது தண்டனைத் தீர்ப்பை நசித்தல் வேண்டும்.

முடிபு அல்லது தண்டனையானது பிழை, விடுதல் அல்லது முறைகேட்டின் காரணமாக எப்போது எதிர்மாறுக்கப்படலாம் என்பது.

465. (1) முறையீடு, ஆஜர்கட்டளை, பிடிகட்டளை, பதிரங்க அறிக்கை, கட்டளை, தீர்ப்பு அல்லது இந்தச் சட்டத்தின்படி விசாரணைக்கு முன்பு அல்லது விசாரணையின்போது நடக்கும் வேறு நடவடிக்கையில் அல்லது பரிசீலனை அல்லது வேறு நடவடிக்கைகள் எவற்றிலேனும் பிழை, விடுதல் அல்லது முறைகேடு ஏதேனும் இருக்கிறதென்னும் காரணத்தால் அல்லது குற்ற வழக்குத் தொடர்வதற்கான ஒப்பளிப்பில் பிழை அல்லது முறைகேடு ஏதேனுமிருக்கிறதென்னும் காரணத்தால், அந்த நீதிமன்றத்தின் கருத்தின்படி அதன் மூலம் உண்மையிலேயே நீதி தவறியிருந்தாலன்றி, இதற்கு முன் அடங்கியுள்ள வகைமுறை கருதிக்குட்பட்டு, அதிகாரத் தகுதி வாய்ந்த நீதிமன்றம் ஒன்றினால் பிறப்பிக்கப்பட்ட முடிபு, தண்டனை அல்லது கட்டளை எதுவும், மேல்முறையீட்டு, உறுதிப்பாட்டு அல்லது மேலாய்வு நீதிமன்றத்தால் எதிர்மாறுக்கப்படுதலோ, மாற்றப்படுதலோ ஆகாது.

(2) இந்தச் சட்டத்தின்படி நடக்கும் நடவடிக்கை எதிலேனும் பிழை, விடுதல் அல்லது முறைகேடு ஏதேனும் இருக்கிறது என்னும் காரணத்தாலும் அல்லது குற்றவழக்குத் தொடர்வதற்கான ஒப்பளிப்பு எதிலேனும் பிழை அல்லது முறைகேடு ஏதேனுமிருக்கிறது என்னும் காரணத்தாலும், நீதி தவறியிருக்கிறதா என்பதைத் தீர்மானம் செய்யும்போது, அந்த ஆட்சேபணை அந்த நடவடிக்கையின் முந்திய கட்டம் ஒன்றில் எழுப்பப்பட்டிருக்கக்கூடுமா மற்றும் எழுப்பப்பட்டிருந்த வேண்டுமா என்னும் சங்கதியை நீதிமன்றம் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

முறைபாடு அல்லது பிழையானது ஜப்தியைச் சட்ட விரோதமாக்கல் இல்லை.

466. ஆஜர்கட்டளை, தண்டனைத்தீர்ப்பு, ஜப்திக் கட்டளை அல்லது அதற்குச் சம்பந்தப்பட்ட வேறு நடவடிக்கைகளில் காணப்படும் குறைபாடு அல்லது முறையின்மை காரணமாக இந்தச் சட்டத்தின்படி செய்கின்ற ஜப்தி எதுவும் சட்ட விரோதமானதென்று கொள்ளப்படுதலோ, அதைச் செய்கின்ற எவரும் அத்து மீறுபவராகக் கொள்ளப் படுதலோ ஆகாது.

அத்தியாயம் XXXVI.

சில குற்றங்களை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கான கால வரம்பு.

467. இந்த அத்தியாயத்தின் நோக்கங்களோடு பொருத்தமட்டில், சந்தர்ப்பம் வேறு பொருள் குறித்தாலன்றி "கால வரையறை" என்பது, குற்றமொன்றை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்காக 468 ஆவது பிரிவில் குறிப்பிடப்படும் கால அளவு என்று பொருள்படும். நிலக்கரை எண்.

468. (1) இந்தச் சட்டத்தில் வேறெங்கேனும் வேறு விதமாக வகைசெய்யப்பட்டிருந்தால் தவிர, நீதிமன்றம் எதுவும், காலாவதியான பின்பு (2) ஆவது உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட வர்க்கத்தைச் சேர்ந்த குற்றம் ஒன்றையும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதல் ஆகாது. காலாவதியான பின்பு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுதற்குத் தடை.

(2) காலவரையறையானது—

(அ) குற்றம் அபராதம் மட்டுமோ விதிக்கப்படத்தக்க தாலில், ஆறு மாதங்களாகவும்,

(ஆ) அக் குற்றம் ஓராண்டுக்கு மேற்படாத காலத் திற்கான சிறைத் தண்டனை விதிக்கப்படத்தக்கதாலில், ஓராண்டாகவும்,

(இ) அக் குற்றம் ஓராண்டுக்கு மேற்பட்ட, ஆனால் மூன்றாண்டுகளுக்கு மேற்படாத காலத்திற்குச் சிறைத் தண்டனை விதிக்கப்படத்தக்கதாலில், மூன்றாண்டுகளாகவும் இருத்தல் வேண்டும்.

469. (1) குற்றவாளியொருவரைப் பொறுத்து, கால வரையறையானது— காலவரையறையின் துவக்கம்.

(அ) அக் குற்றத் தேதியன்று; அல்லது

(ஆ) அக் குற்றம் செய்யப்பட்டிருப்பது அக் குற்றத்தால் குறையுற்றவருக்கு அல்லது காவல் அலுவலர் எவருக்கேனும் தெரிந்திராதவிடத்து, அக் குற்றம் அத்தகையவர் அல்லது அத்தகைய காவல் அலுவலர் இவர்களில் எவருக்கு முதன்முதல் தெரிய வருகிறதோ அந்த நாளன்று; அல்லது

(இ) எவரால் அக் குற்றம் செய்யப்பட்டதென்பது தெரியாதவிடத்து, அக் குற்றத்தால் குறையுற்றவருக்கு அல்லது அக் குற்றத்தைப் புலனாய்வு செய்கின்ற காவல்

அலுவலருக்கு இவர்களில் எவருக்கு அக் குற்றவாளியின் அடையாளம் முத்திரை தெரிய வருகிறதோ அந்த நாளன்று தொடங்குதல் வேண்டும்.

(2) மேற்சொன்ன கால அளவைக் கணக்கிடும்போது, எந்த நாளிலிருந்து அத்தகைய கால அளவு கணக்கிடப்பட வேண்டுமோ, அந்த நாளை நீக்கி விடுதல் வேண்டும்.

சில வழக்குகளில் காலக் கழிவு செய்தல்.

470. (1) காலவரையறையைக் கணக்கிடுவதில், எவரேனும் குற்றவாளிக்கெதிராக முதற்கேள்வி நீதிமன்றத்திலாயினும் சரி, அல்லது மேல்முறையீட்டு அல்லது மேலாய்வு நீதி மன்றத்திலாயினும் சரி, எவ்வளவு காலம் வேறொரு குற்ற வழக்கை உரிய சிரத்தையுடன் தொடர்ந்திருக்கின்றாரோ அந்தக் கால அளவைக் கழிவு செய்தல் வேண்டும்:

ஆனால், குற்ற வழக்குத் தொடர்வு ஒரே சங்கதிகளைப் பொறுத்ததாகவும், அதிகார வரம்பில் உள்ள குறை பாட்டினாலோ, அது போன்ற தன்மையுடைய வேறு காரணத்தாலோ, அதை ஏற்றுக் கொள்ள இயலாமலிருக்கின்ற ஒரு நீதிமன்றத்தில் நல்லெண்ணத்துடன் அக் குற்ற வழக்கு தொடரப்படுகிறது என்றாலன்றி, அத்தகைய கழிவு எதுவும் செய்யப்படுதல் ஆகாது.

(2) குற்றமொன்றைப் பொறுத்து, வழக்குத் தொடுப்பதை ஏவுகட்டளை அல்லது கட்டளையின் மூலமாக நிறுத்தி வைத்திருக்குமிடத்து, அப்போது காலவரை யறையைக் கணக்கிடும்போது ஏவுகட்டளை அல்லது கட்டளை தொடர்ந்திருந்து வந்த கால அளவையும், அது பிறப்பிக்கப் பட்ட அல்லது இடப்பட்ட நாளையும் அது திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்ட நாளையும் கழிவு செய்தல் வேண்டும்.

(3) குற்ற வழக்குத் தொடர்வுக்கான அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்குமிடத்து, அல்லது அவ்வப்போது அமலிலுள்ள சட்டம் ஏதொன்றின்படியும், குற்ற வழக்கு ஒன்று தொடர்வதற்கு அரசின் அல்லது வேறெந்த அதிகாரியின் முந்திய இசைவு அல்லது ஒப்பளிப்பு வேண்டிய தாயிருக்குமிடத்து, அப்போது, காலவரையறையைக் கணக் கிடும்போது, நிலவரத்திற்கேற்ப, அவ்வறிவிப்பின் கெடுவை அல்லது அத்தகைய இசைவு அல்லது ஒப்பளிப்பைப் பெறு வதற்குத் தேவைப்படும் காலத்தைக் கழிவு செய்தல் வேண்டும்.

விளக்கம்.—அரசின் அல்லது வேறெந்த அதிகாரியின் இசைவு அல்லது ஒப்பளிப்பைப் பெறுவதற்காகத் தேவைப் படும் காலத்தைக் கணக்கிடும்போது, அத்தகைய இசைவு அல்லது ஒப்பளிப்பைப் பெறுவதற்காக விண்ணப்பம் செய்து கொள்ளப்பட்ட தேதியையும் அரசு அல்லது வேறெந்த அதிகாரியின் கட்டளை பெறப்பட்ட தேதியையும் ஆக இரண்டையுமே கழிவு செய்தல் வேண்டும்.

(4) காலவரையறையைக் கணக்கிடும்போது, குற்ற வாளி எந்தக் காலத்தின்போது,—

(அ) இந்தியாவிலோ மத்திய அரசின் நிர்வாகத் திலுள்ள இந்தியாவிற்கு வெளியேயுள்ள மண்டலம் ஏதொன் றிலுமோ இல்லாமலிருந்திருக்கின்றாரோ அல்லது

(ஆ) தலைமறைவாவதன் மூலமாகவோ நம்மையே மறைத்துக்கொள்வதன் மூலமாகவோ கைது செய்யப் படுவதைத் தவிர்த்திருக்கின்றாரோ அந்தக் காலத்தைக் கழிவு செய்தல் வேண்டும்.

நீதிமன்றம் மூடப்பட்டிருக்கிற தேதியைக் கழிவு செய்தல்.

471. காலவரையறையானது நீதிமன்றம் மூடப்பட் டிருக்கின்ற ஒரு நாளன்று முடிவடைவதாயிருக்குமிடத்து, நீதிமன்றம் மீண்டும் திறக்கப்படுகின்ற நாளன்று நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

விளக்கம்.—இந்தப் பிரிவுக்குப் பொருள் கொள்ளும் போது, எதேனுமொரு நாளன்று ஒரு நீதிமன்றம் தன் வழக்கமான வேலை நேரத்தின்போது மூடப்பட்டு இருக்கு மானால், அந்த நாளன்று அந்த நீதிமன்றம் மூடப்பட்டிருப் பதாகக் கொள்ளுதல் வேண்டும்.

தொடர்ந்து இருக்கும் குற்றம்.

472. தொடர்ந்து இருக்கும் குற்றமொன்று சம்பந்தப்பட்ட மட்டில் அக் குற்றம் தொடர்ந்திருக்கும் ஒவ்வொரு கணத் திலிருந்தும் புதிய காலவரையறையொன்று துவங்குதல் வேண்டும்.

சில சந்தர்ப் பங்களில் கால வரையறையை நீட்டித்தல்.

473. இந்த அத்தியாயத்தின் முன் சென்ற வகைமுறை களில் என்ன கண்டிருந்தபோதிலும், வழக்கிலுள்ள சங்கதி களையும் சூழ்நிலையையும் கவனிக்கும்போது நாமதந்திற்குத் தகுந்த முகாந்தரம் காட்டப்பட்டிருக்கிறது என்பதாகவோ, அல்லது நீதியின் நலத்திற்காக அவ்வாறு செய்வது அவசிய மாக இருக்கிறது என்பதாகவோ தனக்குத் திருப்தி ஏற்படு மானால், நீதிமன்றம் எதுவும், காலவரையறை முடிவடைந்த தற்குப் பின்பு குற்றமொன்றை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

அத்தியாயம் XXXVII.

பலவகைப்பட்டவை.

உயர்நீதிமன்றங்களின் முன் நடக்கும் விசாரணைகள்.

474. குற்றமொன்று 407 ஆவது பிரிவின்படியல்லாமல் வேறுவிதமாக உயர் நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்படும் போது, அது, அக் குற்றத்தை விசாரிக்கும்போது, செஷன்ஸ் நீதிமன்றமொன்று இவ்வழக்கை விசாரணை செய்யுமாயின் அனுசரிக்கும் அதே நடைமுறையை அனுசரித்தல் வேண்டும்.

படைநீதிமன்றத்தால் விசாரணை செய்யப்படுவதற்கு உட்பட்டவர்களைப் படைத் தலைவர்களிடம் ஒப்படைத்தல். 46/1950 62/1957 45/1950.

475. (1) மத்திய அரசு, இந்தச் சட்டத்திற்கும், 1950 ஆம் ஆண்டு ஆயுதப்படைச் சட்டத்திற்கும், 1957 ஆம் ஆண்டு கடற்படைச் சட்டத்திற்கும், 1950 ஆம் ஆண்டு வான்படைச் சட்டத்திற்கும், ஒன்றியத்தின் ஆயுதப்படைகள் பொறுத்த வேறெந்தச் சட்டத்திற்கும் இணங்கிய வகையில், ஆயுதப் படை, கடற்படை அல்லது வான்படைச் சட்டம், அல்லது அது போன்ற வேறு சட்டத்திற்குட்பட்டவர்கள், இந்தச் சட்டம் மீறியங்குகிற நீதிமன்றத்தாலோ, படைநீதிமன்றத் தாலோ விசாரணை செய்யப்பட வேண்டிய வழக்குகள் பற்றிய விதிகளைச் செய்யலாம். மற்றும் எவரேனும் நடுவர் ஒருவர் முன் கொண்டு வரப்பட்டு, இந்தச் சட்டம் மீறியங்குகிற நீதி மன்றத்தாலோ, படைநீதி மன்றத்தாலோ விசாரிக்கப்படுவதற்கு உட்பட்டுள்ள குற்றமொன்றைச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்படும்போது, அந்த நடுவர் அவ்விதிகளைக் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்; மேலும் ஏற்ற சந்தர்ப்பங்களில், நிலவரத்திற்கேற்ப, அவர் சேர்ந் திருக்கும் பிரிவின் படைத்தலைவரிடம் அல்லது மிக்க அருகி லுள்ள ஆயுதப்படை, கடற்படை அல்லது வான்படை நிலையத்தின் படைத்தலைவரிடம் எந்தக் குற்றத்தைச் செய்த தாக அத்தகையவர் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளாரோ அதைப் பற்றிய உரையொன்றுடன் சேர்த்து, ஒரு படைநீதிமன்றத் தால் விசாரணை செய்யப்படுவதற்காக அவரை ஒப்படைத்தல் வேண்டும்.

விளக்கம்.—இந்தப் பிரிவில்—

(அ) "தொகுதி" (Unit) என்பதில் (படை வகுப்பு), (Regiment) படைத்துறைவகுப்பு, கோர் (Corps) கப்பல் (Ship), சிறப்புப்பணிப் படைப்பிரிவு (Detachment),

படைக்குழு (Group), பட்டாளம் (பட்டாலியன் Battalion) அல்லது படைப்பிரிவு (கம்பெனி Company) உள்ளடங்கும்.

(ஆ) "படைநீதிமன்றம்" என்பதில் ஒன்றியத்தின் ஆயுதப் படைகள் மீதியங்கும் தொடர்புற்ற சட்டத்தின்படி அமைக்கப்பட்டு படைநீதிமன்றம் ஒன்றின் அதிகாரங்களைப் போன்ற அதிகாரங்களையுடைய தீர்ப்பு மன்றம் எதுவும் உள்ளடங்கும்.

(2) அத்தகைய இடம் எதிலேனும் அமர்த்தப்பட்டுள்ள அல்லது மேலே செய்து வருகிற தரைப்படை வீரர், கடற் படை வீரர் அல்லது வான்படை வீரர் தொகுதி அல்லது பகுதி ஒன்றில் படைத்தலைவரிடமிருந்து அதன் பொருட்டு எழுத்து மூலமான விண்ணப்பம் ஒன்று வந்தால் அவர் பேரில் அக் குற்றத்தைச் செய்ததாகக் குற்றஞ்சுமத்தப்பட்ட எவரையும் கைது செய்து பாதுகாவல் செய்வதற்கு நடுவர் ஒவ்வொருவரும் முடிந்த அளவு முயற்சிகளை மேற் கொள்ளுதல் வேண்டும்.

(3) மாநிலத்திற்குள் அமைந்துள்ள சிறைச்சாலை எதொன்றிலும் காவலில் வைக்கப்பட்டுள்ள கைதி ஒருவர் மீது படைநீதிமன்றத்தின் முன் விசாரணை நடத்துவதற்கோ அல்லது படைநீதிமன்றத்தின் முன் நடப்பிலுள்ள விஷயம் எதையும் பற்றி அவரை விசாரிப்பதற்கோ படைநீதி மன்றத்தில் முன் கொண்டு வரப்பட வேண்டும் என்று ஓர் உயர் நீதிமன்றம் தான் பொருத்தமென நினைத்தால் உத்தர விடலாம்.

படிவங்கள்.

476. அரசமைப்பின் 227 ஆவது பிரிவினால் வழங்கப் பட்ட அதிகாரத்திற்குட்பட்டு, இரண்டாவது இணைப்புப் பட்டியலில் விவரிக்கப்பட்ட படிவங்கள் ஒவ்வொரு வழக்கின் சூழ்நிலைகளுக்கேற்ப அவசியமான மாறுதல்களுடன் அதில் சொல்லப்பட்ட அந்தந்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப் படலாம்; மற்றும் பயன்படுத்தப்படுமானால், அவை போது மானவை ஆகும்.

அதிகாரஞ் செலுத்துவதற்கு உயர் நீதிமன்றத்திற்குள்ள அதிகாரம்.

477. (1) ஒவ்வொரு உயர் நீதிமன்றமும் மாநில அரசின் முந்திய ஒப்பளிப்புடன்

(அ) தனக்குக் கீழமைந்துள்ள குற்ற வழக்கு நீதி மன்றங்களில் மனு எழுதுபவர்களாகச் செயல் புரிய அனுமதிக்கப்படக்கூடிய ஆட்கள் பற்றி.

(ஆ) அத்தகையவர்களுக்கு உரிமங்களை வழங்குவதையும், அவர்கள் அலுவல் நடத்தும் விதத்தையும், அதற்காக அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய ஊதியத் திட்டத்தையும் முறைப்படுத்துகின்ற

(இ) அவ்வாறு செய்யப்பட்ட விதிகளில் எதை யேனும் மீறியதற்கான தண்டத்திற்கு வகை செய்வதற்கும் அம் மீறுகையைப் பரிசிலனை செய்து தண்டங்களை விதிக்கக் கூடிய அதிகாரியை நிர்ணயிப்பதற்குமான

(ஈ) விதிக்கப்பட வேண்டிய, விதிக்கப்படக்கூடிய அல்லது வேறெந்த விஷயத்தையும் பற்றி

விதிகளைச் செய்யலாம்.

437.	மேல்தளமுள்ள ஒரு கலத்தை அல்லது 20 டன் சுமை கொள்ளும் ஒரு கலத்தை அழிக்கும் அல்லது பாதுகாப்பற்றதாக்கும் உட்கருத்துடன் அழிம்பு செய்தல்.	10 ஆண்டு சிறை வாசமும் அபராதமும்.
438.	கடைசிப் பிரிவில் விவரிக்கப்பட்ட அழிம்பானது தீ அல்லது வெடி பொருள் மூலமாகச் செய்யப்படும் போது.	ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டு சிறைவாசமும் அபராதமும்.
439.	திருட்டு முதலியவற்றைச் செய்யும் உட்கருத்துடன் கலத்தைக் கரைதட்ட வைத்தல்.	10 ஆண்டு சிறைவாசமும் அபராதமும்.

எந்த நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்படக் கூடியது என்பது.	ஜாமீனில் விடக் கூடியதா அல்லது ஜாமீனில் விடக் கூடாததா என்பது.	கைது செய்தற் குரியதா அல்லது கைது செய்தற் குரியதல்லாததா என்பது.
(6)	(5)	(4)
முதல் வகுப்பு நடுவர்.	ஜாமீனில் விடக் கூடியது.	கைது செய்தற் குரியது.
செஷன்ஸ் நீதிமன்றம்.	ஜாமீனில் விடக் கூடாதது.	ஷை
ஷை	ஷை	ஷை
ஷை	ஷை	ஷை
ஷை	ஷை	ஷை

பிரிவு.	குற்றம்.	தண்டனை.
(1)	(2)	(3)
440.	மரணம் அல்லது காயம் முதலியவற்றை விளைவிப்பதற்கென எடுக்கப்பட்ட முன்னேற்பாட்டிற்குப் பின்பு, அழிம்பு செய்தல்.	5 ஆண்டு சிறைவாசமும் அபராதமும்.
447.	அத்துமீறுதல் குற்றம்.	3 மாதம் சிறைவாசம் அல்லது 500 ரூபாய் அபராதம் அல்லது இரண்டும்.
448.	வீட்டிற்குள் அத்துமீறி நுழைதல் குற்றம்.	1 ஆண்டு சிறைவாசம் அல்லது 1,000 ரூபாய் அபராதம் அல்லது இரண்டும்.
449.	மரண தண்டனைக்குரிய ஒரு குற்றத்தைச் செய்வதற்காக வேண்டி வீட்டிற்குள் அத்துமீறி நுழைதல்.	ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டு கடுங்காவல் சிறைவாசமும் அபராதமும்.
450.	ஆயுள் தண்டனை விதிப்பதற்குரிய ஒரு குற்றத்தைச் செய்வதற்காக வேண்டி வீட்டிற்குள் அத்துமீறி நுழைதல்.	10 ஆண்டு சிறைவாசமும் அபராதமும்.
451.	சிறைத் தண்டனை விதிப்பதற்குரிய ஒரு குற்றத்தைச் செய்வதற்காக வீட்டிற்குள் அத்துமீறி நுழைதல்.	2 ஆண்டு சிறைவாசமும் அபராதமும்.
	அக் குற்றம் திருட்டுக் குற்றமாக இருக்குமானால்.	7 ஆண்டு சிறைவாசமும் அபராதமும்.

கைது செய்தற் குரியதா அல்லது கைது செய்தற் குரியதல்லாததா என்பது. (4)	ஜாமீனில் விடக் கூடியதா அல்லது ஜாமீனில் விடக் கூடாததா என்பது. (5)	எந்த நீதிமன்றத் தால் விசாரணை செய்யப்படக் கூடியது என்பது. (6)
கைது செய்தற் குரியது.	ஜாமீனில் விடக் கூடியது.	முதல் வகுப்பு நடுவர்.
ஷை	ஷை	எந்த நடுவரும்.
ஷை	ஷை	ஷை
ஷை	ஜாமீனில் விடக் கூடாதது.	செஷன்ஸ் நீதிமன்றம்.
ஷை	ஷை	ஷை
ஷை	ஜாமீனில் விடக் கூடியது.	எந்த நடுவரும்.
ஷை	ஜாமீனில் விடக் கூடாதது.	ஷை

பிரிவு.	குற்றம்.	தண்டனை.
(1)	(2)	(3)
452	காயம், தாக்குதல் முதலிய வற்றை விளைவிப்பதற் கான முன்னேற்பாட்டைச் செய்துகொண்டு, வீட் டிற்குள் அத்துமீறி நுழை தல்.	7 ஆண்டு சிறைவாச மும் அபராதமும்.
453	பதுங்கி வீட்டிற்குள் அத்து மீறி நுழைதல் அல்லது கன்னமிடுதல்.	2 ஆண்டு சிறைவாச மும் அபராதமும்.
454	சிறைத் தண்டனை விதிப்பதற் குரிய ஒரு குற்றத்தைச் செய்வதற்காக வேண்டி பதுங்கி வீட்டிற்குள் அத்து மீறி நுழைதல் அல்லது கன்னமிடுதல்.	3 ஆண்டு சிறைவாச மும் அபராதமும்.
	அக்குற்றம் திருட்டுக் குற்றமாக இருக்குமாஞல்.	10 ஆண்டு சிறை வாசமும் அபராத மும்.
455	காயம், தாக்குதல் முதலிய வற்றை விளைவிப்பதற்காக முன்னேற்பாடு செய்து கொண்ட பிறகு பதுங்கி வீட்டிற்குள் அத்துமீறி நுழைதல் அல்லது கன்னமிடுதல்.	ஷை
456.	இரவில் பதுங்கி வீட்டிற்குள் அத்துமீறி நுழைதல் அல்லது கன்னமிடுதல்.	3 ஆண்டு சிறைவாச மும் அபராதமும்.

கைது செய்தற் குரியதா அல்லது கைது செய்தற் குரியதல்லாததா என்பது. (4)	ஜாமீனில் விடக் கூடியதா அல்லது ஜாமீனில் விடக் கூடாததா என்பது. (5)	எந்த நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்படக் கூடியது என்பது. (6)
கைது செய்தற் குரியது.	ஜாமீனில் விடக் கூடாதது.	எந்த நடுவரும்.
〃	〃	〃
〃	〃	〃
〃	〃	முதல் வகுப்பு நடுவர்.
〃	〃	〃
〃	〃	எந்த நடுவரும்.

பிரிவு.	குற்றம்.	தண்டனை.
(1)	(2)	(3)
457	சிறைத் தண்டனை விதிப்பதற்குரிய ஒரு குற்றத்தைச் செய்வதற்காக வேண்டி இரவில் பதுங்கி வீட்டிற்குள் அத்துமீறி நுழைதல் அல்லது கன்னமிடுதல்.	5 ஆண்டு சிறைவாசமும் அபராதமும்.
	அக்குற்றம் திருட்டுக் குற்றமாயிருக்குமானால்.	14 ஆண்டு சிறைவாசமும் அபராதமும்.
458	காயம் முதலியன விளைவிப்பதற்காக முன்னேற்பாடு செய்து கொண்டதற்குப் பிறகு, இரவில் பதுங்கி வீட்டிற்குள் அத்துமீறி நுழைதல் அல்லது கன்னமிடுதல்.	14 ஆண்டு சிறைவாசமும் அபராதமும்.
459	பதுங்கி வீட்டிற்குள் அத்துமீறி நுழையும்போதோ கன்னமிடும் போதோ கொடுங்காயம் விளைவித்தல்.	ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டு சிறைவாசமும் அபராதமும்.
460	இரவில் கன்னமிடுதல் முதலியவற்றில் கூட்டாகச் சம்பந்தப்பட்டுள்ள பல வேறு ஆட்களில் ஒருவர் மரணம் அல்லது கொடுங்காயத்தை விளைவித்தல்.	ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டு சிறைவாசமும் அபராதமும்.

எந்த நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்படக் கூடியது என்பது.	ஜாமீனில் விடக் கூடியதா அல்லது ஜாமீனில் விடக் கூடாததா என்பது.	கைது செய்தற் குரியதா அல்லது கைது செய்தற் குரியதல்லாததா எனபது.
(6)	(5)	(4)
முதல் வகுப்பு நடுவர்.	ஜாமீனில் விடக் கூடாதது.	கைது செய்தற் குரியது.
ஷை	ஷை	ஷை
ஷை	ஷை	ஷை
செஷன்ஸ் நீதிமன்றம்.	ஷை	ஷை
ஷை	ஷை	ஷை

பிரிவு.	குற்றம்.	தண்டனை.
(1)	(2)	(3)
461	சொத்து அடங்கியுள்ள அல்லது அடங்கியுள்ளதென்று நினைக்கும்படியுள்ள மூடிய ஏனத்தை நேர்மையற்ற வகையில் உடைத்தல் அல்லது திறந்துவிடுதல்.	இரண்டு ஆண்டு சிறை வாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும்.
462	எந்தச் சொத்தேனும் அடங்கியுள்ள அல்லது அடங்கியதென்றுநினைக்கும்படியுள்ள மூடிய ஏனம் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும்போது, மோசடியாக அதைத் திறத்தல்.	மூன்று ஆண்டு சிறை வாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும்.

கைது செய்தற் குரியதா அல்லது கைது செய்தற் குரியதல்லாததா என்பது. (4)	ஜாமீனில் விடக் கூடியதா அல்லது ஜாமீனில் விடக் கூடாததா என்பது. (5)	எந்த நீதிமன்றத் தால் விசாரணை செய்யப்படக் கூடியது என்பது. (6)
கைது செய்தற் குரியது.	ஜாமீனில் விடக் கூடாதது.	எந்த நடுவரும்.
ஷி	ஜாமீனில் விடக் கூடியது.	ஷி

பிரிவு.	குற்றம்.	தண்டனை.
(1)	(2)	(3)

அத்தியாயம் XVIII.

பத்திரங்கள் மற்றும் சொத்து உடையவளைக் குறிகள் சம்பந்தமான குற்றங்கள்.

465	சிருஷ்டனை ...	இரண்டு ஆண்டு சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும்.
466	ஒரு நீதிமன்றத்தின் பதிவுக்கட்டு ஒன்றையோ, அல்லது ஒரு பொது ஊழியரால் வைத்துவரப்படும் பிறப்பு முதலியவற்றிற்கான பதிவேடு ஒன்றையோ சிருஷ்டனை செய்தல்.	ஏழு ஆண்டு சிறைவாசமும் அபராதமும்.
467	ஒரு பெறுமானப் பத்திரம், உயில் அல்லது பெறுமானப் பத்திரமெதையேனும் உருவாக்க அல்லது மாற்றுவதற்கான அல்லது பணம் முதலியவற்றைப் பெறுவதற்கான அதிகாரப் பத்திரத்தை சிருஷ்டனை செய்தல்.	ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டு சிறைவாசமும் அபராதமும்.
	அப் பெறுமானப் பத்திரம் மத்திய அரசின் கடன் உறுதிச் சீட்டாக இருக்கும்போது.	ஷை
468	ஏமாற்றும் பொருட்டு சிருஷ்டனை.	ஏழு ஆண்டு சிறைவாசமும் அபராதமும்.
469	எவருடைய பெயரையேனும் கெடுக்கும் பொருட்டோ அல்லது அதற்காகப் பயன்படுத்தப்படக்கூடியதென்று தெரிந்தோ சிருஷ்டனை செய்தல்.	மூன்று ஆண்டு சிறைவாசமும் அபராதமும்.

(4)	(5)	(6)
கைது செய்தற் குரியதா அல்லது கைது செய்தற் குரியதல்லாததா எனபது.	ஜாமீனில் விடக் கூடியதா அல்லது ஜாமீனில் விடக் கூடாததா எனபது.	எந்த நீதிமன்றத் தால் விசாரணை செய்யப்படக்கூடி யது என்பது.
கைது செய்தற் குரியதல்லாதது.	ஜாமீனில் விடக் கூடியது.	முதல் வகுப்பு நடுவர்.
மேற்படி	ஜாமீனில் விடக் கூடாதது.	மேற்படி
மேற்படி	மேற்படி	மேற்படி
கைது செய்தற் குரியது.	மேற்படி	மேற்படி
மேற்படி	மேற்படி	மேற்படி
மேற்படி	ஜாமீனில் விடக் கூடியது.	மேற்படி

பிரிவு :	குற்றம்.	தண்டனை.
(1)	(2)	(3)
471	சிருஷ்டனை செய்யப்பட்ட தென்று தெரிந்த ஒரு சிருஷ்டனைப் பத்திரத்தை உண்மையானது போலப் பயன்படுத்துதல்.	அந்தப் பத்திரங்களை சிருஷ்டனை செய்ததற்கான தண்டனை.
	சிருஷ்டனை செய்யப்பட்ட அந்தப் பத்திரமானது, மத்திய அரசின் கடனுறுதிச் சீட்டாக இருக்கும்போது.	ஷை
472	இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 467 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரிய சிருஷ்டனைப் பத்திரம் தயாரிக்கும் உட்கருத்துடன் தகடு முதலியவற்றைச் செய்தல் அல்லது அவற்றைப் போன்றவற்றைக் கள்ளத்தனமாகத் தயாரித்தல், அல்லது அத்தகைய இலச்சினை, தகடு முதலியவற்றை அவை கள்ளத்தனமாகத் தயாரிக்கப்பட்டவையென்று தெரிந்தே அதேபோன்ற உட்கருத்துடன் கைவசம் வைத்திருத்தல்.	ஆயுள் தண்டனை அல்லது 7 ஆண்டு சிறைவாசமும் அபராதமும்.

எந்த நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்படக்கூடியது எனபது.	ஜாமீனில் விடக் கூடியதா அல்லது ஜாமீனில் விடக் கூடாததா எனபது.	கைது செய்தற் குரியதா அல்லது கைது செய்தற் குரியதல்லாததா என்பது.
(6)	(5)	(4)
முதல் வகுப்பு நடுவர்.	ஜாமீனில் விடக் கூடியது.	கைது செய்தற் குரியது.
,,	,,	,,
,,	,,	,,
,,	,,	,,

பிரிவு.	குற்றம்.	தண்டனை.
(1)	(2)	(3)
473	இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 467 ஆவது பிரிவின்படியல்லாது மற்றப்படி தண்டிப்பதற்குரிய சிருஷ்டனைப் பத்திரம் தயாரிக்கும் உட்கருத்துடன் இலச்சினை, முதலியவற்றைக் கள்ளத்தனமாகத் தயாரித்தல் அல்லது அத்தகைய இலச்சினை, முதலியவற்றை அவை கள்ளத்தனமாகத் தயாரிக்கப்பட்டவை என்று தெரிந்தே அதே போன்ற உட்கருத்துடன் கைவசம் வைத்திருத்தல்.	7 ஆண்டு சிறைவாசமும் அபராதமும்.
474	சிருஷ்டனைப் பத்திரம் என்று தெரிந்தே ஒரு பத்திரத்தை உண்மையானது போலப் பயன்படுத்தும் உட்கருத்துடன் கைவசம் வைத்திருத்தல், அந்தப் பத்திரமானது இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 466 ஆவது பிரிவில் சொல்லப்பட்டுள்ள வகையைச் சேர்ந்ததாயிருக்குமானால்.	மே
	அந்தப் பத்திரமானது இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 467 ஆவது பிரிவில் சொல்லப்பட்டுள்ள வகையைச் சேர்ந்ததாயிருக்குமானால்.	ஆயுள் தண்டனை அல்லது 7 ஆண்டு சிறைவாசமும் அபராதமும்.

எந்த நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்படக்கூடியது என்பது.	ஜாமீனில் விடக் கூடியதா அல்லது ஜாமீனில் விடக் கூடாததா எனபது.	கைது செய்தற் குரியதா அல்லது கைது செய்தற் குரியதல்லாததா என்பது.
(6)	(5)	(4)
முதல் வகுப்பு நடுவர்.	ஜாமீனில் விடக் கூடியது.	கைது செய்தற் குரியது.
ஷை	ஷை	கைது செய்தற் குரியதல்லாதது.
ஷை	ஷை	ஷை

பிரிவு.	குற்றம்.	தண்டனை.
(1)	(2)	(3)
475	இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 467 ஆவது பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள பத்திரங்கள் உண்மையானவை என்பதைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் சாதனம் அல்லது குறியைக் கள்ளத்தனமாகத் தயாரித்தல், அல்லது கள்ளத் தயாரிப்பாகக் குறியிடப்பட்ட பொருளைக் கைவசம் வைத்திருத்தல்.	ஆயுள் தண்டனை அல்லது 7 ஆண்டு சிறைவாசமும் அபராதமும்.
476	இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 467 ஆவது பிரிவில் விவரிக்கப்பட்டவையல்லாத மற்ற பத்திரங்கள் உண்மையானவையென்று காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் சாதனம் அல்லது குறியைக் கள்ளத்தனமாகத் தயாரித்தல் அல்லது கள்ளத் தயாரிப்பாகக் குறியிடப்பட்ட பொருளைக் கைவசம் வைத்திருத்தல்.	7 ஆண்டு சிறைவாசமும் அபராதமும்.
477	ஓர் உயில் முதலியவற்றை மோசடியாக அழித்தல் அல்லது உருக்குலைத்தல் அல்லது அழிக்கவோ உருக்குலைக்கவோ முயற்சித்தல் அல்லது மறைத்து வைத்தல்.	ஆயுள் தண்டனை அல்லது 7 ஆண்டு சிறைவாசமும் அபராதமும்.

கைது செய்தற் குரியதா அல்லது கைது செய்தற் குரியதல்லாததா என்பது.	ஜாமீனில் விடக் கூடியதா அல்லது ஜாமீனில் விடக் கூடாததா என்பது.	எந்த நீதிமன்றத் தால் விசாரணை செய்யப்படக்கூடி யது என்பது.
(4)	(5)	(6)
கைது செய்தற் குரியது.	ஷை	ஷை
ஷை	ஜாமீனில் விடக் கூடாதது.	ஷை
ஷை	ஷை	ஷை

பிரிவு.	குற்றம்.	தண்டனை.
(1)	(2)	(3)
477	அ. பொய்க்கணக்குத் தயாரித்தல்.	7 ஆண்டு சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும்.
482	எவரையேனும் வஞ்சிக்கும் அல்லது எவருக்கேனும் கேடு விளைவிக்கும் உட்கருத்துடன் ஒரு பொய்யான சொத்து அடையாளக் குறியைப் பயன்படுத்துதல்.	1 ஆண்டு சிறைவாசம், அபராதம் அல்லது இரண்டும்.
483	சேதம் அல்லது கேடு விளைவிக்கும் உட்கருத்துடன் மற்றொருவரால் பயன்படுத்தப்பட்ட சொத்து அடையாளக் குறியைக் கள்ளத்தனமாகத் தயாரித்தல்.	2 ஆண்டு சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும்.
484	ஒரு பொது ஊழியரால் பயன்படுத்தப்பட்ட ஒரு சொத்து அடையாளக் குறியை அல்லது சொத்து எதொன்றின் உற்பத்தி அல்லது தரம் முதலியவற்றைக் குறித்துக் காட்ட அவரால் பயன்படுத்தப்பட்ட குறி எதையேனும் கள்ளத்தனமாகத் தயாரித்தல்.	3 ஆண்டு சிறைவாசமும் அபராதமும்.

கைது செய்தற் குரியதா அல்லது கைது செய்தற் குரியதல்லாததா என்பது.	ஜாமீனில் விடக் கூடியதா அல்லது ஜாமீனில் விடக் கூடாததா என்பது.	எந்த நீதிமன்றத் தால் விசாரணை செய்யப்படக் கூடியது எனபது.
(4)	(5)	(6)
கைது செய்தற்குரிய தல்லாதது.	ஜாமீனில் விடக் கூடியது.	முதல் வகுப்பு நடுவர்.
ஷை	ஷை	எந்த நடுவரும்.
ஷை	ஷை	முதல் வகுப்பு நடுவர்.
ஷை	ஷை	எந்த நடுவரும்.

பிரிவு.	குற்றம்.	தண்டனை.
(1)	(2)	(3)
485	அரசுக்குரிய அல்லது தனியாருக்குரிய சொத்து அடையாளக் குறி எதையேனும் கள்ளத்தனமாகத் தயாரிப்பதற்கான அச்சு, தகடு அல்லது வேறு கருவியை மோசடியாகச் செய்தல் அல்லது கைவசம் வைத்திருத்தல்.	3 ஆண்டு வரை வாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும்.
486	கள்ளத் தயாரிப்பு சொத்து அடையாளக் குறியிடப்பட்ட சரக்குகளைத் தெரிந்தே விற்பனை செய்தல்.	1 ஆண்டு வரை வாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும்.
487	சரக்குகளைக் கொண்ட ஒரு சிப்பம் அல்லது ஏனத்தில் இல்லாத சரக்குகள் அதில் இருப்பது போல் நம்பும்படிச் செய்விக்கும் உட்கருத்துடன் மோசடியாக அதன் மீது பொய்யான குறியை இடுதல்.	3 ஆண்டு வரை வாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும்.
488	அத்தகைய ஒரு பொய்யான குறியைப் பயன்படுத்திக் கொள்ளுதல்.	ஷை
489	கேடு விளைவிக்கும் உட்கருத்துடன் சொத்து அடையாளக் குறியை அகற்றுதல், அழித்தல் அல்லது உருக்குலைத்தல்.	1 ஆண்டு வரை வாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும்.
489 அ.	நாணயத் தாள்கள் அல்லது வங்கித் தாள்களைக் கள்ளத்தனமாகத் தயாரித்தல்.	ஆயுள் அல்லது 10 ஆண்டு வரை சிறைவாசமும் அபராதமும்.

(6)	(5)	(4)
எந்த நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்படக்கூடியது என்பது.	ஜாமீனில் விடக் கூடியதா அல்லது ஜாமீனில் விடக் கூடாததா என்பது.	கைது செய்தற்குரியதா அல்லது கைது செய்தற்குரியதல்லாததா என்பது.
எந்த நீதிமன்றமும்.	ஜாமீனில் விடக் கூடியது.	கைது செய்தற்குரியதல்லாதது.
,,	,,	,,
,,	,,	,,
,,	,,	,,
,,	,,	கைது செய்தற் குரியது.
நீதி மன்றம்.	ஜாமீனில் விடக் கூடாதது.	,,

பிரிவு.	குற்றம்.	தண்டனை.
(1)	(2)	(3)
489 ஆ.	சிருஷ்டனை செய்யப்பட்ட அல்லது கள்ளத் தயாரிப்பான நாணயத்தாள்கள் அல்லது வங்கித் தாள்களை உண்மையானவை போலப் பயன்படுத்துதல்.	ஆயுள் சிறைவாசம் அல்லது 10 ஆண்டு சிறைவாசமும் அபராதமும்.
489 இ.	சிருஷ்டனை செய்யப்பட்ட அல்லது கள்ளத் தயாரிப்பான நாணயத்தாள்களை அல்லது வங்கித் தாள்களைக் கைவசம் வைத்திருத்தல்.	7 ஆண்டு சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும்.
489 ஈ.	நாணயத் தாள்களை அல்லது வங்கித் தாள்களை சிருஷ்டனை செய்வதற்காக அல்லது கள்ளத்தனமாகத் தயாரிப்பதற்காக இயந்திரம், கருவி அல்லது பொருளைச் செய்தல் அல்லது கைவசம் வைத்திருத்தல்.	ஆயுள் சிறைவாசம் அல்லது 10 ஆண்டு சிறைவாசமும் அபராதமும்.
489 உ.	நாணயத் தாள்கள் அல்லது வங்கித் தாள்களைப் போன்ற பத்திரங்களை உற்பத்தி செய்தல் அல்லது பயன்படுத்துதல்.	100 ரூபாய் அபராதம்.
	அச்சிட்டவரின் பெயரையும் முகவரியையும் வெளிப்படுத்த மறுப்பதன் பேரில்.	200 ரூபாய் அபராதம்.

கைது செய்தற் குரியதா அல்லது கைது செய்தற் குரியதல்லாததா என்பது.	ஜாமீனில் விடக் கூடியதா அல்லது ஜாமீனில் விடக் கூடாததா என்பது.	எந்த நீதிமன்றத் தால் விசாரணை செய்யப்படக்கூடியது என்பது.
(4)	(5)	(6)
கைது செய்தற் குரியது.	ஜாமீனில் விடக் கூடாதது.	செஷன்ஸ் நீதி மன்றம்.
மே	ஜாமீனில் விடக் கூடியது.	மே
மே	ஜாமீனில் விடக் கூடாதது.	மே
கைது செய்தற் குரியதல்லாதது.	ஜாமீனில் விடக் கூடியது.	எந்த நடுவரும்.
மே	மே	மே

பிரிவு.	குற்றம்.	தண்டனை.
(1)	(2)	(3)
	அத்தியாயம் XIX.	
	ஊழிய ஒப்பந்தத்தை மீறும் குற்றம்.	
491.	இளமை, அல்லது புத்தி சுவாதீனமின்மை அல்லது நோய் காரணமாக ஆதரவற்றிருக்கும் ஒருவரைக் கவனிக்கவோ அல்லது அவரது தேவைகளைப் பூர்த்தி செய்யவோ கடமைப்பட்டிருந்து, தம்மிச்சையாகவே அவ்வாறு செய்யாமல் விட்டுவிடுதல்.	3 மாதம் அல்லது 200 ரூபாய் அபராதம் அல்லது இரண்டும்.	சிறைவாசம் அல்லது

(4)	(5)	(6)
கைது செய்தற் குரியதா அல்லது கைது செய்தற் குரியதல்லாததா என்பது.	ஜாமீனில் விடக் கூடியதா அல்லது ஜாமீனில் விடக் கூடாததா என்பது.	எந்த நீதிமன்றத் தால் விசாரணை செய்யப்படக்கூடியது என்பது.
கைது செய்தற்குரிய தல்லாதது.	ஜாமீனில் விடக் கூடியது.	எந்த நடுவரும்.

பிரிவு.	குற்றம்.	தண்டனை.
(1)	(2)	(3)
	அத்தியாயம் XX.	
	மணவாழ்க்கை சம்பந்தமான குற்றங்கள்.	
493.	ஒருவர் தம்மைச் சட்டபூர்வமாக மணந்துகொள்ளாத ஒரு பெண்ணை வஞ்சனையாக அவள் தனக்குச் சட்டபூர்வமாகத் திருமணஞ் செய்து வைக்கப்பட்டதாக நம்புமாறும் அந்த நம்பிக்கையில் உடலுறவு கொள்ளுமாறும் செய்தல்.	10 ஆண்டு சிறைவாசமும் அபராதமும்.
494.	கணவன் அல்லது மனைவி உயிரோடிருக்கும்போதே மீண்டும் திருமணஞ்செய்து கொள்ளுதல்.	7 ஆண்டு சிறை வாசமும் அபராதமும்.
495.	எவருடன் திருமணம் செய்து கொள்கிறாரோ அவரிடம் முந்திய திருமணத்தைப் பற்றி மறைப்பதுடன் முன் சொன்ன குற்றத்தைச் செய்தல்.	10 ஆண்டு சிறை வாசமும் அபராதமும்.
496.	திருமணச் சடங்கை மேற்கொள்ளுவதன் மூலம், சட்டபூர்வமான திருமணம் தனக்கு ஆகவில்லை என்பதைத் தெரிந்தே மோசடியான உட் கருத்துடன் அச் சடங்கை மேற்கொள்ளுதல்.	7 ஆண்டு சிறைவாசமும் அபராதமும்.
497.	முறை பிறழ்ந்த புணர்ச்சி.	5 ஆண்டு சிறை வாசம் அல்லது அபராதம்.
498.	குற்றமுறு உட்கருத்துடன் திருமணமான ஒரு பெண்ணைப் பசப்பிக் கடத்திச் செல்லுதல் அல்லது இட்டுச் செல்லுதல் அல்லது தொடர்ந்து வைத்திருத்தல்.	2 ஆண்டு சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும்.

கைது செய்தற் குரியதாயினும் அல்லது கைது செய்தற் குரியதல்லாததாயினும்.	ஜாமீனில் விடக் கூடியதாயினும் அல்லது ஜாமீனில் விடக் கூடாததாயினும்.	எந்த நிலையத்தாலும் விசாரிக்கப்படக் கூடியதென்பது.
(4)	(5)	(6)
கைது செய்தற்குரிய தல்லாதது.	ஜாமீனில் விடக் கூடாதது.	முதல் வகுப்பு நடுவர்.
〃	ஜாமீனில் விடக் கூடியது.	〃
〃	〃	〃
〃	〃	〃
〃	ஜாமீனில் விடக் கூடாதது.	எந்த நடுவரும்.
〃	〃	〃

பிரிவு.	குற்றம்.	தண்டனை.
(1)	(2)	(3)
	அத்தியாயம் XXI— அவதூறு.	
500.	குடியரசுத்தலைவர் அல்லது குடியரசுத் துணைத்தலைவர் அல்லது ஒரு மாநிலத்தின் ஆளுநர், அல்லது ஒன்றியத்து மண்டல ஆட்சியாளர், அல்லது ஓர் அமைச்சரின் பேரில் தம் பொதுப் பணிகளை அவர் ஆற்றும்போது அவரது நடத்தையைப் பொறுத்துச் செய்யப்படும் அவதூறு, அரசு குற்றத்துறை வழக்குரைஞரால் செய்யப்படும் முறையீட்டின்பேரில் வழக்கு தொடுக்கப்படும் போது.	இரண்டு ஆண்டு மெய்க்காவல் சிறைவாசம், அல்லது அபராதம் அல்லது இரண்டும்.
	வேறெந்தச் சந்தர்ப்பத்திலும் அவதூறு.	ஷை
501.	(அ) குடியரசுத் தலைவர், அல்லது குடியரசுத் துணைத் தலைவர், அல்லது ஒரு மாநிலத்தின் ஆளுநர் அல்லது ஒன்றியத்து மண்டல ஆட்சியாளர் அல்லது ஓர் அமைச்சரின் பேரில் தம் பொதுப்பணிகளை ஆற்றும்போது அவரது நடத்தையைப் பொறுத்துச் செய்யப்படும் அவதூறென்று தெரிந்தே அந்த விஷயத்தை அச்சடித்தல் அல்லது செதுக்குதல், அரசு குற்றத்துறை வழக்குரைஞரால் செய்யப்பட்ட முறையீட்டின்பேரில் வழக்கு தொடுக்கப்படும்போது.	ஷை

(4)	(5)	(6)
கைது செய்தற் குரியதா அல்லது கைது செய்தற் குரியதல்லாததா என்பது.	ஜாமீனில் விடக் கூடியதா அல்லது ஜாமீனில் விடக் கூடாததா என்பது.	எந்த நீதிமன்றத் தால் விசாரணை செய்யப்படக் கூடியது என்பது.
கைது செய்தற் குரியதல்லாதது.	ஜாமீனில் விடக் கூடியது.	செஷன்ஸ் நீதி மன்றம்.
ஷை	ஷை	முதல் வகுப்பு நடுவர்.
ஷை	ஷை	செஷன்ஸ் நீதி மன்றம்.

பிரிவு	குற்றம்.	தண்டனை.
(1)	(2)	(3)
	(ஆ) அவதூறானதென்று தெரிந்தே விஷயத்தை அச்சடித்தல் அல்லது செதுக்குதல், வேறெந்தச் சந்தர்ப்பத்திலும்.	இரண்டு ஆண்டு மெய்க்காவல் சிறைவாசம், அல்லது அபராதம் அல்லது இரண்டும்.
502.	(அ) குடியரசுத் தலைவர், அல்லது குடியரசுத் துணைத் தலைவர், அல்லது ஒரு மாநிலத்தின் ஆளுநர், அல்லது ஒன்றியத்து மண்டல ஆட்சியாளர் அல்லது ஓர் அமைச்சரின் பேரில், தம் பொதுப்பணிகளை அவர் ஆற்றும்போது அவரது நடத்தையைப் பொறுத்துச் செய்யப்படும் அவதூறான விஷயம் அடங்கியுள்ளதென்று தெரிந்தே அச்சிடப்பட்ட அல்லது செதுக்கப்பட்ட பொருளை விற்பனை செய்தல், அரசு குற்றத்துறை வழக்குரைஞரால் செய்யப்பட்ட முறையீட்டின் பேரில் வழக்கு தொடுக்கப்படும்போது.	ஏழு.
	(ஆ) அவதூறான விஷயம் அடங்கியுள்ள அச்சடிக்கப்பட்ட அல்லது செதுக்கப்பட்ட பொருளை, அத்தகைய விஷயம் அதில் அடங்கியுள்ளதென்று தெரிந்தே விற்பனை செய்தல், வேறெந்தச் சந்தர்ப்பத்திலும்.	ஏழு.

கைது செய்தற் குரியதாய் அல்லது கைது செய்தற் குரியதல்லாதது எனபது.	ஜாமீனில் விடக் கூடியதாய் அல்லது ஜாமீனில் விடக் கூடாதது எனபது.	எந்த நீதிமன்றத் தால் விசாரணை செய்யப்படக் கூடியது என்பது.
(4)	(5)	(6)
கைது செய்தற் குரியதல்லாதது.	ஜாமீனில் விடக் கூடியது.	முதல் வகுப்பு நடுவர்.
கூடி	கூடி	செஷன்ஸ் நீதி மன்றம்.
கூடி	கூடி	முதல் வகுப்பு நடுவர்.

பிரிவு.	குற்றம்.	தண்டனை.
(1)	(2)	(3)
அத்தியாயம் XXII—குற்றமுறு மிரட்டல், நிந்தித்தல் மற்றும் தொந்தரவு கொடுத்தல்.		
504. அமைதி மீறுதலைத தூண்டக் கருதி, நிந்தித்தல்.		2 ஆண்டு சிறைவாசம் அல்லது அபராதம், அல்லது இரண்டும்.
505. படை வீரர் கலகத்தை அல்லது பொது அமைதிக்கு விரோதமான குற்றத்தை விளைவிக்கும் உட்கருத்துடன் மக்களிடையே பொய்யுரை, வதந்தி முதலியவற்றைப் பரப்புதல்.		3 ஆண்டு சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும்.
வெவ்வேறு வகுப்புகளுக்கிடையே பகைமை, வெறுப்பு அல்லது கெட்ட எண்ணம் இவற்றில் எதையேனும் வளர்க்கும் உட்கருத்துடன் பொய்யுரை, வதந்தி முதலியவற்றைப் பரப்புதல்.		ஷை
பகைமை, வெறுப்பு அல்லது கெட்ட எண்ணம் இவற்றில் எதையேனும் வளர்க்கும் உட்கருத்துடன் வழிபாட்டிடம் முதலியவற்றில் பொய்யுரை, வதந்தி முதலியவற்றைப் பரப்புதல்.		5 ஆண்டு சிறைவாசமும், அபராதமும்.
506. குற்றமுறு மிரட்டல்		2 ஆண்டு சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும்.

கைது செய்தற் குரியதா அல்லது கைது செய்தற் குரியதல்லாதது எனல்.	ஜாமீனில் விடக் கூடியது அல்லது ஜாமீனில் விடக் கூடாதது எனல்.	எந்த நீதிமன்றத் தால் விசாரணை செய்யப்படக் கூடியது என்பது.
(4)	(5)	(6)
கைது செய்தற் குரியதல்லாதது.	ஜாமீனில் விடக் கூடியது.	எந்த நடுவரும்.
ஷை	ஜாமீனில் விடக் கூடாதது.	ஷை
கைது செய்தற் குரியது.	ஷை	ஷை
ஷை	ஷை	ஷை
கைது செய்தற் குரியதல்லாதது.	ஜாமீனில் விடக் கூடியது.	ஷை

பிரிவு.	குற்றம்.	தண்டனை.
(1)	(2)	(3)
	அவ்வாறு பயமுறுத்துவது, மரணம் அல்லது கொடுங்காயம் முதலியவற்றை விளைவிப்பதற்காக இருக்குமாயின்.	7 ஆண்டு சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும்.
507. மொட்டைக் கடிதம் மூலமாகவோ, எவ்விடத்திலிருந்து பயமுறுத்தப்படுகிறதென்பதை மறைக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்த பின்போ குற்றமுறு மிரட்டல் செய்தல்.		மேற்சொன்ன பிரிவின் படி விதிக்கும் தண்டனையோடுகூட, 2 ஆண்டு சிறைவாசம்.
508. ஒருவரை, அவர் தெய்வ கோபத்திற்காளாவார் என்று நம்பும்படி தூண்டுவதன் மூலமாக விளைவிக்கப்படும் செய்கை.		1 ஆண்டு சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும்.
509. ஒரு பெண்ணின் மானத்திற்குப் பங்கம் விளைவிக்கக் கருதி எந்தச் சொல்லையேனும் சொல்லுதல் அல்லது எந்தச் சைகையேனும் காட்டுதல் முதலியன.		1 ஆண்டு மெய்காவல் சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும்.
510. குடிவெறி நிலையில் ஒரு பொது இடம் முதலியவற்றிற்கு வருதலும், எவருக்கேனும் தொந்தரவு கொடுத்தலும்.		24 மணி நேரத்திற்கு மெய்காவல் சிறைவாசம் அல்லது 10 ரூபாய் அபராதம் அல்லது இரண்டும்.

(4)	(5)	(6)
கைது செய்தற் குரியது அல்லது கைது செய்தற் குரியதல்லாதது என்பது.	ஜாமீனில் விடக் கூடியது அல்லது ஜாமீனில் விடக் கூடாதது என்பது.	எந்த நீதிமன்றத் தால் விசாரணை செய்யப்படக்கூடி யது என்பது.
கைதுசெய்தற் குரியதல்லாதது.	ஜாமீனில் விடக் கூடியது.	முதல் வகுப்பு நடுவர்.
ஷை	ஷை	ஷை
ஷை	ஷை	எந்த நடுவரும்.
கைது செய்தற் குரியது.	ஷை	ஷை
கைது செய்தற் குரியதல்லாதது	ஷை	ஷை

பிரிவு.	குற்றம்.	தண்டனை.
(1)	(2)	(3)
	அத்தியாயம் XXIII—குற்றங்களைச் செய்வதற்கு முயற்சி செய்தல்.	
511. ஆயுள் தண்டனை அல்லது சிறைத் தண்டனை விதிப்பதற்குரிய குற்றங்களைச் செய்ய முயற்சித்தலும், அத்தகைய முயற்சியின் போது அக்குற்றத்தைச் செய்வதற்காக எந்தச் செய்கையையேனும் செய்தலும்.		ஆயுள் தண்டனை அல்லது அக் குற்றத்திற்காக வகை செய்யப்பட்டுள்ளபடி எவ்வளவு அதிகமான அளவுக்குச் சிறைத்தண்டனையைக் கொடுக்க முடியுமோ அந்தக் கால அளவில் பாதிக்கு மேற்படாத காலத்திற்குச் சிறைவாசம், அல்லது அபராதம், அல்லது இரண்டும்.

எந்த நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்படக்கூடியது என்பது.

(6)

ஜாமீனில் விடக் கூடியதா அல்லது ஜாமீனில் விடக் கூடாததா என்பது.

(5)

கைது செய்தற் குரியதா அல்லது கைது செய்தற் குரியதல்லாததா என்பது.

(4)

எந்தக் குற்றத்திற்காக முயற்சி செய்யப்பட்டதோ அந்தக் குற்றம் எந்த நீதிமன்றத்தால் விசாரிக்கத் தக்கதோ அந்த நீதிமன்றம்.

குற்றவாளியால் முயற்சி செய்யப்பட்ட குற்றம் ஜாமீனில் விடக் கூடியதா அல்லது விடக்கூடாததா என்பதற்கேற்ப.

அக் குற்றம் கைது செய்தற்குரியதா அல்லது கைது செய்தற்குரியதல்லாததா என்பதற்கேற்ப.

II—மற்ற சட்டங்களுக்கு விரோதமான குற்றங்களை வகைப்படுத்துதல்.

குற்றம்.	கைது செய்தற் குரியதா அல்லது கைது செய்தற் குரியதல்லாததா என்பது.
(1)	(2)
மரண தண்டனை, ஆயுள் தண்டனை அல்லது 7 ஆண்டுக்கு மேலாகச் சிறைத்தண்டனை விதிப்பதற் குரியதாய் இருக்குமாயல்.	கைது செய்தற் குரியது.
3 ஆண்டுக்கும் அதற்கு மேற்பட்டும் ஆனால் 7 ஆண்டுக்கு மேற்படாமல் சிறைத்தண்டனை விதிப் பதற்குரியதாயிருக்குமாயல்.	ஷை
3 ஆண்டுக்குக் குறைவாகச் சிறைத் தண்டனை, அல்லது அபராதம் மட்டும் விதிப்பதற் குரியதாயிருக்குமாயல்.	கைது செய்தற்குரியதல்லாதது.

எந்த நீதிமன்றத்தால் விசாரிக்கப்படத்தக்கது என்பது.	ஜாமீனில் விடக்கூடியதா அல்லது ஜாமீனில் விடக் கூடாததா என்பது.
(4)	(3)
செஷன்ஸ் நீதிமன்றம்.	ஜாமீனில் விடக்கூடாதது.
முதல் வகுப்பு நடுவர்.	கூடி
எந்த நடுவரும்.	ஜாமீனில் விடக்கூடியது.

இரண்டாவது இணைப்புப் பட்டியல்

(476 ஆவது பிரிவைக் காண்க)

படிவம் எண் 1.

எதிரிக்கு ஆஜர் கட்டளை.

(61 ஆவது பிரிவைக் காண்க)

பெறுபவர் (எதிரியின் பெயர்) (முகவரி)

(சாட்டப்பட்ட குற்றத்தைச் சுருக்கமாகச் சொல்லவும்) என்னும் குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்க நீங்கள் ஆஜராவது தேவையாக இருப்பதால், நீங்கள் இன் ஆம் நாளன்று நடுவர் (மாஜிஸ்ட்ரேட்) முன் நேரில் ஆஜராக (அல்லது நிலவரத்திற் கேற்ப வாதுரைஞர் மூலமாக வருமாறு) இதன்படி கோரப்படுகிறீர்கள்.

இதில் தவறுதல் ஆகாது.

தேதியிட்டது ஆம் நாள் 19 .

(நீதிமன்றத்தின் இலச்சினை) (கையொப்பம்)

———

படிவம் எண் 2.

பிடிகட்டளை.

(70 ஆவது பிரிவைக் காண்க)

பெறுபவர் (பிடிகட்டளையை நிறைவேற்றவேண்டியவர் அல்லது நிறைவேற்ற வேண்டியவர்களின் பெயரும், பதவியும்)

(எதிரியின் பெயர்—முகவரி)

(குற்றத்தை உரைக்கவும்) குற்றம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருப்பதால், மேற்சொல்லப்பட்ட ஐக் கைது செய்து மற்றும் அவரை என் முன் ஆஜர் படுத்துமாறு உங்களுக்கு இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது. இதில் தவறுதல் ஆகாது.

தேதியிட்டது ஆம் நாள் 19 .

(நீதிமன்றத்தின் இலச்சினை) (கையொப்பம்)

(71 ஆவது பிரிவைக் காண்க)

இந்தப் பிரகடனையின் பின்னுரையாக மேற்குறிப்பு எழுதலாம்.

நான் ..... ரூபாய்
தொகைக்கு ஒரு ஜாமீன்தாருடன் (அல்லது ரூபாய்
தொகைக்கு) வெள்ளி முன் தானன்று ஆஜராகவும், மற்றும் வேறுவிதமாக எங்களால் பணிக்கப்படும் வரையில் தொடர்ந்து ஆஜராவதற்கும் ஜாமீன் கொடுத்தால் அவர் விடுவிக்கப்படலாம்.

தேதியிட்டது ..... ஆம் நாள் 19 .

(நீதிமன்றத்தில் இசைவினை) (கையொப்பம்)

படிவம் எண் 3.

பிடிகட்டளையின்படி கைது செய்யப்பட்டதற்குப் பின்பு கொடுக்கப்படும் பத்திரமும் ஜாமீன் பத்திரமும்.

(81 ஆவது பிரிவைக் காண்க)

நான் (பெயர், இடம்) குற்றச்சாட்டின் பேரில் ஆம் நாளன்று (மாஜிஸ்ட்ரேட்) முன் (நீதிமன்றத்திற்கெதிரில்) பிடிகட்டளையின்படி நேரில் ஆஜராவதற்குக் கட்டாயப்படுத்திக் கொண்டுவரப்பட்டு அடுத்து வரும் ஆம் நாளன்று இன்ன நீதிமன்றத்தில் வந்து குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கவும், மற்றும் நீதிமன்றம் வேறுவிதமாக உத்தரவிடும் வரை அவ்வாறு தொடர்ந்து ஆஜராகவும் பத்திரம் கட்டிக்கொடுத்திருக்கிறேன்; இதில் நான் தவறினிடத்தில் நான் ரூபாய் தொகையை அரசருக்குத் தண்டமாக இழக்க நான் கட்டுப்படுகிறேன்.

தேதியிட்டது ..... ஆம் நாள் 19 .

(கையொப்பம்)

நான் சேர்ந்த மேற்சொன்ன பெயருடைய குற்றச்சாட்டின் பேரில், அவர் கைது செய்யப்பட்டிருந்தாரோ அந்தக் குற்றச்சாட்டிற்குப் பதிலளிக்க ஆம் நாளன்று இன்ன நீதிமன்றத்தின் முன் அவர் ஆஜராவார் என்பதற்கும், நீதிமன்றத்தால் வேறுவிதமாக உத்தரவிடப்படும் வரையில் அவ்வாறு தொடர்ந்து ஆஜராவார் என்பதற்கும் நான் இதன்படி ஜாமீன் தாராக இருக்க இதன்மூலம் உறுதியளிக்கிறேன்; மற்றும் அதன்படி அவர் செய்யத் தவறினால் ரூபாய் தொகையை அரசருக்குத் தண்டமாக இழக்க நான் கட்டுப்படுகிறேன்.

தேதியிட்டது ..... ஆம் நாள் 19 .

(கையொப்பம்)

படிவம் எண் 4.

குற்றம் சாட்டப்பட்ட ஒருவர் நேரில் ஆஜராகக் கோருகின்ற பகிரங்க அறிக்கை.

(82 ஆவது பிரிவைக் காண்க)

(பெயர், விவரம் மற்றும் முகவரி) இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவின்படி தண்டிக்கத்தகுந்த குற்றத்தைச் செய்திருக்கிறார் (அல்லது செய்திருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறார்) என்று என் முன் முறையிடு செய்யப்பட்டிருப்பதால், மற்றும் அதன்பேரில் மேற்சொன்னவர் (பெயர்) காவல்துறை அதிகாரியில்லை என்று கையெழுத்திட்டு நீதிமன்றத்தால் பிடிவிறாந்து திருப்பியனுப்பப்பட்டிருக்கிறது என்பதாலும் மற்றும் மேற்சொன்ன (பெயர்) தலைமறைவாகியிருக்கிறார் (அல்லது மேற்சொன்ன பிடிவிறாந்து சார்வு செய்யப்படுவதைத் தவிர்க்கத் தம்மை மறைத்துக்கொண்டிருக்கிறார்) என்று நான் திருப்தி அடையுமாறு காட்டப்பட்டிருப்பதாலும்;

சேர்த்த மேற்சொன்ன ஆம் நாளன்று மேற்சொன்ன முறையீட்டுக்குப் பதிலளிக்க இந்த நீதிமன்றத்தின் முன் (இடத்தில்) (அல்லது என் முன்) நாளன்று நேரில் ஆஜராகக் கோரப்படுகிறார் என இதன்மூலம் பகிரங்க அறிக்கை பிறப்பிக்கப்படுகிறது.

தேதியிட்டது ஆம் நாள் 19 .

(நீதிமன்றத்தின் இலச்சினை) (கையொப்பம்)

படிவம் எண் 5.

சாட்சி ஒருவர் ஆஜராவதைக் கோருகின்ற பகிரங்க அறிக்கை.

(82, 87 மற்றும் 90 ஆகிய பிரிவுகளைக் காண்க)

(பெயர், விவரம் மற்றும் முகவரி) குற்றத்தைச் செய்திருக்கிறார் (அல்லது செய்திருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறார்) என்பதாக என் முன் முறையீடு செய்யப்பட்டு, அம்முறையீடு சம்பந்தமாக விசாரிக்கப்படுவதற்காக இந்த நீதிமன்றத்தின் முன் (சாட்சியின் பெயர், விவரம் மற்றும் முகவரி) ஆஜராவதைக் கட்டாயப்படுத்த (குற்றத்தைச் சுருக்கமாகச் சொல்க) பிடிகட்டளையொன்று பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதாலும்; மேற்சொன்ன (சாட்சியின் பெயர்) சார்வுக் சார்வு செய்ய முடியவில்லை என்பதாக மேற்சொன்ன பிடிகட்டளை திருப்பியனுப்பப்பட்டிருக்கிறது என்பதுடன், அவர் தலைமறைவாகியிருக்கிறார் (அல்லது, அத்தகைய பிடிகட்டளையைச் சார்வு செய்வதைத் தவிர்ப்பதற்காகத் தன்னை மறைத்துக் கொண்டிருக்கிறார்) என்பதாக எனக்குத் திருப்தி தரும் வகையில் காட்டப்பட்டிருக்கிறது என்பதாலும்;

மேற்சொன்ன முறையீடு செய்யப்

(பெயர்)

பட்டுள்ள குற்றம் சம்பந்தமாக விசாரிக்கப்படுவதற்காக, அடுத்துவரும் ஆம் நாளன்று மணிக்கு இன் நீதிமன்றத்தின்முன் தில் ஆஜராகுமாறு கோரப்

(இடம்)

படுகிறார் என்பதாக இதன்மூலம் பகிரங்க அறிக்கை பிறப்பிக்கப்படு கிறது.

தேதியிட்டது ஆம் நாள் 19

(நீதிமன்றத்தின் இலச்சினை) (கையொப்பம்)

படிவம் எண் 6.

சாட்சி ஒருவர் ஆஜராவதைக் கட்டாயப்படுத்துவதற்கான ஜப்திக் கட்டளை.

(83 ஆவது பிரிவைக் காண்க.)

பெறுபவர் :

இல் உள்ள

காவல் நிலையப் பொறுப்பு அலுவலருக்கு

இந்த நீதிமன்றத்தின்முன் நடப்பிலிருக்கும் முறையீடொன்றுபற்றிச் சாட்சியம் கொடுக்க (பெயர், விவரம் மற்றும் முகவரி) ஆஜராவதைக் கட்டாயப்படுத்த பிடிகட்டளை யொன்று முறைப்படி பிறப்பிக்கப்பட்டிருக்கிறது, என்பதாலும் அதைச் சார்வு செய்ய முடியவில்லை என்பதாக மேற்சொன்ன பிடிகட்டளை திருப்பி யனுப்பப்பட்டிருக்கிறது என்பதாலும்; மற்றும் அவர் தலைமறைவாகி யிருக்கிறார் (அல்லது மேற்சொன்ன பிடிகட்டளையைச் சார்வு செய்வதைத் தவிர்ப்பதற்காகத் தன்னை மறைத்துக்கொண்டிருக்கிறார்) என்பதாக எனக்கு திருப்தி தரும் வகையில் காட்டப்பட்டிருக்கிறது; மேலும் அதன் பேரில் பகிரங்க அறிக்கையொன்று, அதில் சொல்லப்பட்ட காலத்திலும் இடத்திலும் ஆஜராகிச் சாட்சியம் கொடுக்க மேற்சொன்ன ஐக் கோரி முறையாகப் பிறப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கிறது அல்லது பிறப்பிக்கப்பட்டு வெளியிடப்படு கிறது என்பதாலும்;

மாவட்டத்திற்குள் நீங்கள் காணலாகும் மேற்சொன்னவருக்குச் சொந்தமான ரூபாய் மதிப் புடைய அசையும் பொருளைக் கைப்பற்றி ஜப்தி செய்யுமாறும், இந்த நீதிமன்றம் மேற்கொண்டு கட்டளை பிறப்பிக்கும்வரை மேற்சொன்ன சொத்தை ஜப்தியில் வைத்திருக்குமாறும் இந்தப் பிடிகட்டளையை நிறை வேற்றிய விதத்தைப்பற்றி உறுதிச்சான்றளிக்கும் ஒரு மேற்குறிப்புடன் திருப்பியனுப்புமாறும் உங்களுக்கு அதிகாரமளித்து இதன்மூலம் கோரப் படுகிறது.

தேதியிட்டது ஆம் நாள் 19

(நீதிமன்றத்தின் இலச்சினை) (கையொப்பம்)

படிவம் எண் 7.

குற்றஞ் சுமத்தப்பட்ட ஒருவர் ஆஜராவதைக் கட்டாயப்படுத்துவதற்கான ஐப்பி கட்டளை.

(83 ஆவது பிரிவைக் காண்க.)

பெறுபவர் :

.....

(பிடிகட்டளையை நிறைவேற்றவேண்டியவர் அல்லது நிறைவேற்றவேண்டியவர்களின் பெயரும் பதவியும்)

(பெயர், விவரம் மற்றும் முகவரி)

..... இந்தியத் தண்டனைச் சட்டத்தின் .....ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரிய ..... குற்றத்தைச் செய்திருக்கிறார் (அல்லது செய்திருப்பதாக சந்தேகிக்கப்படுகிறார்) என்பதாக என் முன் முறையிடு செய்யப்பட்டு, மேற்சொன்ன ..... (பெயர்) காணக்கிடைக்கவில்லை என்பதாக அதன்பேரில் பிறப்பிக்கப்பட்ட பிடிகட்டளை திருப்பியனுப்பப்பட்டிருக்கின்றது என்பதாலும்; மேற்சொன்ன ..... (பெயர்) தலைமறைவாகியிருக்கிறார் (அல்லது மேற்சொன்ன பிடிகட்டளையைச் சார்வு செய்வதைத் தவிர்ப்பதற்காகத் தன்னை மறைத்துக்கொண்டிருக்கிறார்) என்பதாகவும் அதன் பேரில் மேற்சொன்ன குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்ல ..... நாட்களுக்குள் ஆஜராகுமாறு மேற்சொன்ன .....ஐக் கோரி பகிரங்க அறிக்கையொன்று முறைப்படி பிறப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கின்றது அல்லது பிறப்பிக்கப்பட்டு வெளியிடப்படுகிறது என்பதாகவும் எனக்குத் திருப்தி தரும் வகையில் காட்டப்பட்டிருக்கிறது என்பதாலும்; ..... மாவட்டத்திலுள்ள .....ஐச் சேர்ந்த, ஊரில் (அல்லது நகரில்) உள்ளதும் அரசாங்கத்திற்கு வருவாய் செலுத்துகின்ற நிலம் அல்லாததுமான பின்வரும் சொத்து, அதாவது .... மேற்சொன்ன .... இன் அனுபோகத்திலிருப்பதுடன், அதை ஐப்தி செய்வதற்காகக் கட்டளையொன்று பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதாலும்;

83 ஆவது பிரிவின் (2) ஆவது உட்பிரிவின் (அ) கூறு, அல்லது (இ) கூறில் அல்லது இரண்டிலுமே * குறிப்பிடப்பட்ட முறையில் மேற்சொன்ன சொத்தை ஐப்தி செய்யவும், இந்த நீதிமன்றம் மேற்கொண்டு கட்டளை பிறப்பிக்கும் வரையில், அதை ஐப்தியில் வைத்திருக்கவும் இந்தப் பிடிகட்டளையை நிறைவேற்றிய விதத்தை உறுதிச்சான்றளிக்கும் ஒரு மேற்குறிப்புடன் பிடிகட்டளையைத் திருப்பியனுப்பவும் இதன்மூலம் உங்களைக் கோரப்படுகிறது.

தேதியிட்டது ஆம் நாள் 19

(நீதிமன்றத்தின் இலச்சினை) (கையொப்பம்)

---

* ஐப்தி செய்யப்பட வேண்டிய சொத்தின் தன்மையைப் பொருத்து, தேவையற்றதை அடித்து விடுக.

படிவம் எண் 8.

மாவட்ட நடுவர் அல்லது ஆட்சியரால் ஜப்தி செய்யப்படுவதற்கு அதிகாரமளிக்கின்ற கட்டளை.

(83 ஆவது பிரிவைக் காண்க.)

பெறுபவர் :

..... மாவட்டத்தில் மாவட்ட நடுவர்/ஆட்சியர்.

.....

(பெயர், விவரம் மற்றும் முகவரி)

இந்தியத் தண்டனைச் சட்டத்தின் .....ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரிய .....குற்றத்தைச் செய்திருப்பதாக (அல்லது செய்திருப்பதாக சந்தேகிக்கப்படுவதாக) என் முன் முறையீடு செய்யப்பட்டு, மேற்சொன்ன ..... (பெயர்) காணக் கிடைக்கவில்லை என்பதாக அதன் பேரில் பிறப்பிக்கப் பட்ட பிடிகட்டளை திருப்பியனுப்பப்பட்டிருக்கிறது என்பதாலும்; மேற் சொன்ன ..... (பெயர்) தலைமறைவாகி யிருக்கின்றார் (அல்லது மேற்சொன்ன பிடிகட்டளையைச் சார்பு செய் வதைத் தவிர்ப்பதற்காகத் தன்னை மறைத்துக்கொண்டிருக்கிறார்) என்ப தாகவும்; அதன் பேரில் ..... நாட்களுக்குள் மேற்சொன்ன குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்க ஆஜராகுமாறு (பெயர்) ஐக் கோரி பகிரங்க அறிக்கையொன்று முறைப்படி பிறப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கிறது அல்லது பிறப்பிக்கப்பட்டு வெளியிடப்படு கிறது என்பதாக எனக்குத் திருப்தி தரும் வகையில் காட்டப்பட்டிருக் கிறது என்பதாகவும்; ..... மாவட்டத்தில் உள்ள ..... இன் வரில் (அல்லது நகரில்) உள்ளதும் அரசாங்கத்திற்கு வருவாய் செலுத்துகின்றதுமான, குறிப்பிட்ட நிலமானது மேற்சொன்ன .....இன் அனுபோகத்திலிருக்கிறது என்பதாலும்;

மேற்சொன்ன நிலத்தை 83 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் (அ) கூறு, அல்லது (இ) கூறு, அல்லது இரண்டிலுமே * குறிப்பிடப் பட்ட முறையில் ஜப்தி செய்விக்குமாறும், இந்த நீதிமன்றம் மேற் கொண்டு கட்டளை பிறப்பிக்கும் வரையில் அதை ஜப்தியில் வைத்திருக்கச் செய்யுமாறும், இந்தக் கட்டளையைத் தொடர்ந்து நீங்கள் எதைச் செய் திருக்கக் கூடுமோ அதைத் தாமதமின்றி உறுதிச் சான்றளிக்குமாறும் இதன்மூலம் அதிகாரமளித்து உங்களைக் கோரப்படுகிறது.

தேதியிட்டது ஆம் நாள் 19

(நீதிமன்றத்தின் இலச்சினை)

(கையொப்பம்)

---

*விரும்பப்படாத ஒன்றை அடித்து விடுக.

படிவம் எண் 9.

சாட்சியைக் கொண்டுவர முதல் சந்தர்ப்பத்தில் பிறப்பிக்கப்படும் பிடி கட்டளை.

(87 ஆவது பிரிவைக் காண்க.)

பெறுபவர் :

. . . . . .

. . . . . .

(பிடிகட்டளையை நிறைவேற்றவேண்டிய காவல் அலுவலர் அல்லது வேறு ஆள் அல்லது ஆட்களின் பெயரும் பதவியும்)

. . . . . ஐச் . . . . . .

(முகவரி) (எதிரியின் பெயரும் விவரமும்)

(குற்றத்தைச் சுருக்கமாகக் குறிப்பிடுக)

. . . . . குற்றத்தைச் செய்திருக்கிறார் (அல்லது செய்திருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறார்) என்பதாக என் முன் முறையீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதாலும்; மேற்சொன்ன முறையீடு பற்றி (சாட்சியின் பெயரும் விவரமும்) சாட்சியம் கொடுக்கக்கூடுமென்று தோன்றுகிறது என்பதாலும்; அவ்வாறு கூடாயப்படுத்தப்பட்டாலன்றி மேற்சொன்ன முறையீட்டை விசாரிக்கும்போது அவர் ஒரு சாட்சியாக ஆஜராகமாட்டார் என்று நான் நம்புவதற்குப் போதுமான நல்ல காரணம் இருக்கிறது என்பதாலும்; மேற்சொன்ன . . . . . (சாட்சியின் பெயர்) ஐக் கைது செய்து, முறையீடு செய்யப்பட்ட குற்றம் சம்பந்தமாக விசாரிப்பதற்காக, இந்த நீதிமன்றத்தின்முன் . . . . . ஆம் நாளன்று அவரைக் கொண்டுவருமாறு உங்களுக்கு இதன்மூலம் அதிகாரமளித்துக் கோரப்படுகிறது.

தேதியிட்டது . . . . . ஆம் நாள் 19

(நீதிமன்றத்தின் இலச்சினை) (கையொப்பம்)

படிவம் எண் 10.

குறிப்பிட்ட குற்றத்தைப்பற்றிய தகவலுக்குப்பின் இடும் சோதனைக் கட்டளை.

(93 ஆவது பிரிவைக் காண்க.)

பெறுபவர் :

. . . . . .

(பிடிகட்டளையை நிறைவேற்றவேண்டிய காவல் அலுவலர் அல்லது வேறு ஆள் அல்லது ஆட்களின் பெயரும் பதவியும்).

. . . . . .

(குற்றத்தைச் சுருக்கமாகச் சொல்க)

குற்றத்தைச் செய்ததை (அல்லது செய்ததாகச் சந்தேகிக்கப்படுவதைப்) பற்றி என் முன் தகவல் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது அல்லது (முறையீடு செய்யப்பட்டிருக்கிறது) என்பதாலும் மேற்சொன்ன

குற்றத்தை (அல்லது சந்தேகிக்கப்படும் குற்றத்தை)ப்பற்றி தற்போது செய்யப்பட்டுவரும் விசாரணைக்கு ..... (பொருளைத் தெளிவாகக் குறிப்பிடுக) ஐத் தாக்கல் செய்வது மிகவும் அவசியம் என்று எனக்குத் தோற்றுவிக்கப்பட்டிருப்பதாலும்;

மேற்சொன்ன (குறிப்பிட்ட பொருள்) ஐ (எந்த வீடு அல்லது இடம் அல்லது இடத்தின் பகுதி மட்டுமே சோதனை போடப்பட வேண்டுமென்று வரம்பிடப்படுகின்றதோ அதை விவரிக்கவும்) சோதனையிட்டு அது கிடைத்தால் அதையும், இந்தக் கட்டளையை நிறைவேற்றியவுடன் அதன்படி நீங்கள் என்ன செய்திருக்கின்றீர்கள் என்பதை, ஓர் உறுதிச்சான்றளிக்கும் மேற்குறிப்போடு கூடிய இக் கட்டளையுடனும் நீதிமன்றத்தின் முன் உடனடியாகத் தாக்கல் செய்ய வேண்டுமென்று உங்களுக்கு இதன்மூலம் அதிகாரமளித்துக் கோரப்படுகிறது.

தேதியிட்டது ..... ஆம் நாள் 19

(நீதிமன்றத்தில் இலச்சினை.) (கையொப்பம்.)

படிவம் எண் 11.

பொருள் வைக்கப்பட்டுள்ளதாகச் சந்தேகிக்கப்படும் இடத்தைச் சோதனை போடுவதற்கான கட்டளை.

(94 ஆவது பிரிவைக் காண்க.)

பெறுபவர்:

.....(காவலர் பதவிக்கு மேற்பட்ட ஒரு காவல் அலுவலரின் பெயரும் பதவியும்)

நகவல் என் முன் தாக்கல் செய்யப்பட்டு, அதன் பேரில் செய்யப்பட்ட உரிய பரிசீலனையின் பேரில் ..... (வீடு அல்லது வேறு இடத்தை விவரிக்க) ஆனது திருட்டுப் பொருளை வைப்பதற்கான (அல்லது அதன் விற்பனைக்கான) (அல்லது இப் பிரிவில் வெளிப்படையாகச் சொல்லப்பட்டுள்ள வேறு நோக்கங்களில் ஏதேனுமொன்றுக்காக இருக்குமானால், அந்த நோக்கத்தை இப் பிரிவின் சொற்களிலேயே சொல்லுக) ஓரிடமாகப் பயன்படுத்தப்படுகிறது என்ற நம்பிக்கை எனக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறபடியால்;

கோரப்படவேண்டிய உதவியுடன் மேற்சொன்ன வீட்டில் (அல்லது வேறு இடத்தில்) புகுமாறும், அந்த நோக்கத்திற்காக நியாயமான வன்முறையை, அவசியமானால் பயன்படுத்துமாறும் மேற்சொன்ன வீட்டின் (அல்லது வேறு இடத்தின் அல்லது சோதனை போடுவதானது ஒரு பகுதியை மட்டுமே பொறுத்திருக்க வேண்டுமானால், அப் பகுதியைத் தெளிவாகக் குறிப்பிடுக) ஒவ்வொரு பகுதியையும் சோதனை போடுமாறும் சொந்து அல்லது, நிலவரத்திற்கேற்ப, பத்திரங்கள் அல்லது முத்திரைகள் அல்லது இலச்சினைகள் அல்லது நாணயங்கள் அல்லது ஆபாசப் பொருள்கள் (சந்தர்ப்பத்திற்கேற்ப தேவைப்படும்போது சேர்த்துக் கொள்க) கிருஷ்டனைப் பத்திரங்கள் அல்லது போலி முத்திரைகள் அல்லது போலி இலச்சினைகள், கள்ள நாணயங்கள் அல்லது கள்ள நாணயத்தாள்களை (நிலவரத்திற்கேற்ப) உற்பத்தி செய்வதற்காக வைத்து

வரப்படுவதாக நீங்கள் நியாயமான முறையில் நம்பக்கூடிய எந்தக் கருவிகளையும் பொருள்களையும் கைப்பற்றிக் கைவசம் எடுத்துக் கொள்ளுமாறும், இந்தக் கட்டளையை நிறைவேற்றியதன் பேரில் உடனடியாக, அதன்படி நீங்கள் செய்திருப்பதென்ன என்பதை உறுதிச் சான்றளிக்கும் மேற்குறிப்புடன் பிடிகட்டளையைத் திருப்பியனுப்பி, கைவசம் எடுத்துக் கொள்ளலாகும் பொருள்களை உடனடியாக இந்த நீதிமன்றத்தின் முன் கொணருமாறும் இதன்மூலம் உங்களுக்கு அதிகாரமளித்துக் கோரப்படுகிறது.

தேதியிட்டது ..... ஆம் நாள் 19

(நீதிமன்றத்தின் இலச்சினை) (கையொப்பம்)

படிவம் எண் 12.

அமைதி பேணுவதற்கான பத்திரம்.

(106 மற்றும் 107 ஆகிய பிரிவுகளைக் காண்க.)

.....இல் வசிக்கும் .....ஆகிய நான்,
(இடம்) (பெயர்)

..... காலத்திற்கு அல்லது ..... இன்
(கால அளவை உரைக்க)

நீதி மன்றத்தில் தற்போது நடப்பிலுள்ள விஷயத்தில் பரிசீலனை முடிவடையும் வரை அமைதி பேணுவதற்காகப் பத்திரமொன்றை எழுதிக் கொடுக்குமாறு கோரப்பட்டிருப்பதனால், மேற்சொன்ன காலத்தின் போது அல்லது மேற்சொன்ன பரிசீலனை முடிவடையும்வரை, அமைதியைக் குலைப்பதில்லை என்று, அல்லது அமைதிக் குலைவை உண்டாக்கக்கூடிய எந்தச் செய்கையையும் செய்வதில்லையென்று நான் என்னைக் கட்டுப்படுத்திக்கொள்கிறேன்; மேலும் அதைச் செய்ய நான் தவறும் சந்தர்ப்பத்தில் ..... ரூபாய் தொகையை அரசுக்குத் தண்டமாக இழப்பதற்கு இதன்மூலம் நான் கட்டுப்படுகிறேன்.

தேதியிட்டது ..... ஆம் நாள் ..... 19 .

(கையொப்பம்)

படிவம் எண் 13.

நன்னடத்தைக்கான பத்திரம்.

(108, 109 மற்றும் 110 ஆகிய பிரிவுகளைக் காண்க.)

..... இல் வசிக்கும் ..... ஆகிய நான்,
(இடம்) (பெயர்)

..... காலத்திற்கு அல்லது (கால அளவை உரைத்திடுக)

.....இன் நீதிமன்றத்தில் தற்போது நடப்பிலுள்ள ..... விஷயத்தில் விசாரணை முடிவடையும் வரை அரசாங்கத்திடமும் இந்தியாவின் குடிமக்கள் அனைவரிடமும் நன்னடத்தையுடன் இருந்து வருவதாகப்

பத்திரமொன்றை எழுதிக் கொடுக்குமாறு கோரப்பட்டிருப்பதனால், மேற் சொன்ன கால அளவின்போது அல்லது மேற்சொன்ன விசாரணை முடிவடையும்வரை அரசாங்கத்திடமும் இந்தியாவின் குடிமக்கள் அனைவரிடமும் நன்னடத்தையுடனிருந்து வருவதாக நான் இதன்மூலம் கட்டுப்படுகிறேன்; மேலும் அதைச் செய்ய நான் தவறினால் . . . . ரூபாய் தொகையை அரசுக்குத் தண்டமாக இழப்பதற்கு நான் கட்டுப் படுகிறேன்.

தேதியிட்டது .....ஆம் நாள் 19

(கையொப்பம்)

(ஜாமீன்தார்களுடன் பத்திரமொன்றை எழுதிக் கொடுக்க வேண்டியிருக்குமிடத்து, ...).

(கீழ்க் கண்டதைச் சேர்த்துக் கொள்க)

மேற்சொன்ன பெயருடையவர் மேற்சொன்ன கால அளவின்போது அல்லது மேற்சொன்ன பரிசீலனை முடிவடையும்வரை அரசாங்கத்திடமும் இந்தியாவின் குடிமக்கள் அனைவரிடமும் நன்னடத்தையுடனிருந்து வருவார் என்பதற்கு அவருக்கான ஜாமீன்தார்களாக இருப்பதாக நாங்கள் இதன்மூலம் வினம்புகிறோம்; மற்றும் அதைச் செய்ய அவர் தவறினால் ..... ரூபாய் தொகையை அரசுக்குத் தண்டமாக இறுப்பதற்கு நாங்கள், கூட்டாகவும் தனித்தனியாகவும் கட்டுப்படுகிறோம்.

தேதியிட்டது ..... ஆம் நாள் 19

(கையொப்பம்)

படிவம் எண் 14.

அமைதிக்குலைவு உண்டாகக்கூடும் என்னும் தகவலின்பேரில் பிறப்பிக்கப்படும் ஆஜர் கட்டளை.

(113 ஆவது பிரிவைக் காண்க.)

பெறுபவர்:

..... ஐச் சேர்ந்த .....

(தகவலின் சாரத்தை உரைத்திடுக)

..... என்பதாகவும் நீங்கள் அமைதிக்குலைவை (அல்லது அந்தச் செய்கையின் காரணமாக அமைதிக் குலைவு உண்டாகுமோ அச் செய்கையால்) உண்டாக்கப்போகிறீர்கள் என்பதாகவும் நம்பத்தக்க தகவல் மூலமாக எனக்குத் தெரிய வந்திருப்பதால் ..... கால அளவிற்கு நீங்கள் அமைதி பேணிவருவீர்கள் என்பதாக ..... ரூபாய்க்கு (ஜாமீன்தார்கள் கோரப்படும்போது, சேர்த்துக்கொள்க) பத்திரமொன்றை எழுதிக்கொடுக்குமாறும் ..... ரூபாய் தொகைக்கு (ஒருவருக்கு மேற்பட்டவராயின் ஒவ்வொருவரும்) ஒரு (அல்லது நிலவரத்திற்கேற்ப, இரண்டு) ஜாமீன்தாரின் (அல்லது

ஜாமீன்தார்களின்) பத்திரம் மூலமாக ஜாமீன் கொடுக்குமாறு நீங்கள் ஏன் கோரப்படக்கூடாது என்பதற்குக் காரணங் காட்டுமாறு, . . . இன் நடுவரின் அலுவலகத்தில் 19 .... ஆம் நாளன்று முற்பகல் 10 மணிக்கு, நேர்முகமாக (அல்லது முறைப்படி அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி/முகவர் மூலமாக) ஆஜராகுமாறு நீங்கள் இதன்மூலம் கோரப் படுகிறீர்கள்.

தேதியிட்டது.....ஆம் நாள் .....19 .

(நீதிமன்றத்தின் இலச்சினை) (கையொப்பம்)

படிவம் எண் 15.

அமைதி பேணுவதற்கான ஜாமீன் கொடுக்கத் தவறியதன்பேரில் சிறையில் வைப்பதற்குக் கட்டளை.

(122 ஆவது பிரிவைக் காண்க.)

பெறுபவர் :

.....இல் உள்ள சிறைச்சாலையின் பொறுப்பு அலுவலர்

.....மாதக் கால அளவுக்கு அமைதி பேணி

(பெயர்)

வருவதாக ஒரு ஜாமீன்தாருடன் . . . ரூபாய்க்குப் பத்திரமொன்றை (அல்லது ஒவ்வொருவரும்.....ரூபாய்க்கு இரண்டு ஜாமீன் தார்களுடன் பத்திரமொன்றை) ஏன் எழுதிக்கொடுக்கக்கூடாது என்பதற்குக் காரணங்காட்டுமாறு கோரப்பட்டு மேற்சொன்னவருக்கு அனுப்பப்பட்ட ஆஜர் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து.....ஆம் நாளன்று நேர்முகமாக (அல்லது அவரது அதிகாரம் பெற்ற பிரதிநிதி மூலமாக).....

(பெயரும் முகவரியும்)

.....

என் முன் ஆஜரானார் என்பதாலும் அதன்பின்பு அத்தகைய ஜாமீன் பத்திரத்தை (கட்டளையிடப்பட்ட ஜாமீன் பத்திரமானது ஆஜர் கட்டளையில் சொல்லப்பட்டதனின்றும் வேறுபடும்போது அதை உரைத் திடுக) எழுதிக் கொடுக்குமாறும் வாங்கிக் கொடுக்குமாறும் மேற்சொன்ன .....ஐக் கோரி கட்டளையொன்று பிறப்பிக்கப்பட்டு, மேற்

(பெயர்)

சொன்ன அக் கட்டளைக்கு அவர் இணங்கத் தவறியிருக்கின்றார் என்பதாலும் ;

மேற்சொன்ன.....ஐ, இந்தப் பிடிகட்டளையோடு உங்கள்

(பெயர்)

பாதுகாப்பில் ஏற்றுக்கொள்ளுமாறும், மேற்சொன்ன சிறைச்சாலையில் மேற்சொன்ன.....கால அளவிற்கு, அதற்கிடையே சட்ட

(சிறைவாச காலம்)

பூர்வமாக அவரை விடுவிக்கும்படி கட்டளையிடப்பட்டாலன்றி, காவந்தாக

அவரை வைத்திருக்குமாறும், இந்தக் கட்டளையை நிறைவேற்றிய விதத்தைப் பற்றி உறுதிச் சான்றளிக்கும் மேற்குறிப்புடன் கட்டளையைத் திருப்பியனுப்புமாறும் இதன்மூலம் உங்களுக்கு அதிகாரமளித்துக் கோரப்படுகிறது.

தேதியிட்டது..... ஆம் நாள், 19 .

(நீதிமன்றத்தின் இலச்சினை.) (கையொப்பம்.)

படிவம் எண் 16.

நன்னடத்தைக்கான ஜாமீன் வாங்கிக் கொடுக்கத் தவறியதன் பேரில் சிறையில் வைப்பதற்குப் பிடிகட்டளை.

(122 ஆவது பிரிவைக் காண்க.)

பெறுபவர் :

.....இல் உள்ள சிறைச்சாலையின் பொறுப்பு அலுவலர்.

.....மாவட்டத்திற்குள் .....
(பெயரும் விவரமும்)

தாம் இருப்பதை மறைத்துக்கொண்டிருப்பினும் என்பதாகவும், கைது செய்தற்குரிய குற்றமொன்றைச் செய்என்ற நோக்கத்துடன் அவர் அவ்வாறு செய்கிறார் என்று நம்புவதற்குக் காரணமிருக்கிறது என்பதாகவும் எனக்குத் தெரியவந்திருப்பதால் ;

அல்லது

.....இன் பொது நடத்தையைப் பற்றிய சாட்சியம்
(பெயரும் பதவியும்)

என் முன் கொடுக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டிருப்பதுடன், அதிலிருந்து அவர் ஒரு வாடிக்கையான கொள்ளைக்காரர் (அல்லது நிலவரத்திற்கேற்ப, கன்னமிடுபவர் முதலியோர்) என்று தோன்றுகிறது என்பதால் ;

அதை விளக்கியுரைத்தும், ஒரு ஜாமீன்தாருடன் (அல்லது நிலவரத்திற்கேற்ப இரண்டு அல்லது மேற்பட்ட ஜாமீன்தார்களுடன்) தாமே ..... ரூபாய்க்கும், மேற்சொன்ன ஜாமீன்தார் அல்லது (மேற்சொன்ன ஜாமீன்தார்களில் ஒவ்வொருவரும்) ..... ரூபாய்க்குமாக ஜாமீன் எழுதிக் கொடுப்பதன் மூலமாக ..... (கால அளவிற்கு நன்னடத்தையுடனிருந்து .....கால அளவை உரைத்திடுக)

வருவதாக ஜாமீன் கொடுக்குமாறு மேற்சொன்ன .....ஐக்
(பெயர்)

கோரியும் கட்டளையொன்று எழுதிப் பிறப்பிக்கப்பட்டு, மேற்சொன்ன ....., மேற்சொன்ன கட்டளைக்கு இணங்கத் தவறியுள்ளார்
(பெயர்)

என்பதாலும் அத்தகைய தவறுகைக்காக மேற்சொன்ன ஜாமீன்

உடனடியாக அது முடிவதற்கு முன்னம் அளிக்கப்பட்டாலன்றி .....க்குச் சிறைத்தண்டனையென்று தீர்ப்பு (கால அளவை உரைத்திடுக) அளிக்கப்பட்டிருக்கிறது என்பதாலும் ;

மேற்சொன்ன .....ஐ, இந்தக் கட்டளையுடன் உங்கள் பாதுகாப்பில் ஏற்றுக்கொள்ளுமாறும், அவரைக் காவந்தாகச் சிறைச்சாலையில் வைத்திருக்குமாறும் அல்லது அவர் ஏற்கெனவே சிறையிலிருந்துவருவாரானால் மேற்சொன்ன .....

(சிறைவாசக் காலம்)

கால அளவிற்கு அகற்கிடையில் சட்டபூர்வமாக அவரை விடுவிக்கும்படி கட்டளையிடப்பட்டாலன்றி, அதிலேயே காவலில் வைத்திருக்குமாறும் இந்தக் கட்டளையை நிறைவேற்றிய விதத்தைப் பற்றி உறுதிச் சான்றளிக்கும் மேற்குறிப்புடன் இந்தக் கட்டளையைத் திருப்பியனுப்பு மாறும் இதன் மூலம் உங்களுக்கு அதிகாரமளித்துக் கோரப்படுகிறது.

தேதியிட்டது.....ஆம் நாள், 19.....

(நீதிமன்றத்தின் இலச்சினை.) (கையொப்பம்.)

படிவம் எண் 17.

ஜாமீன் கொடுக்கத் தவறியதன் பேரில் சிறையிலடைக்கப்பட்ட ஒருவரை விடுவிப்பதற்கான கட்டளை.

(122 மற்றும் 123 ஆகிய பிரிவுகளைக் காண்க.)

பெறுபவர் :

.....இடத்திலுள்ள சிறைச்சாலையின் பொறுப்பு அலுவலர் (அல்லது வேறெந்த அலுவலரின் பாதுகாப்பில் அந்த ஆள் இருக்கின்றாரோ அந்த அலுவலர்).

.....19.....ஆம் நாள் தேதியிட்ட நீதி (கைதியின் பெயரும், விவரமும்)
மன்றத்தின் கட்டளையின்படி, உங்கள் பாதுகாப்பிலிருக்கச் சிறைக்கு அனுப்பப்பட்டு, அதற்குப்பிறகு 1973 ஆம் ஆண்டு குற்ற விசாரணை முறைச் சட்டத்தின்.....ஆவது பிரிவின்படி ஜாமீன் முறைப்படி கொடுத்திருக்கிறார் என்பதால் ;

அல்லது

.....19.....ஆம் நாள் தேதியிட்ட, (கைதியின் பெயரும் விவரமும்)
நீதிமன்றத்தின் கட்டளையின்படி உங்கள் பாதுகாப்பிலிருக்கச் சிறைக்கு அனுப்பப்பட்டு, அவரை விடுவிப்பதால் சமூகத்திற்கு அபாயமேற்படாது என்று கருதுவதற்குப் போதுமான ஆதாரங்கள் இருப்பதாக எனக்குத் தோன்றியிருப்பதால் ;

மேற்சொன்ன .....ஐ, வேறொந்தக் காரணத்திற்காகவேனும்
(பெயர்)
காவலில் வைப்பதற்கு உரிமைப்பட்டவராக இருந்தாலன்றி அவரை உடனடியாக விடுவிக்குமாறு உங்களுக்கு ஆணையாணைத்துக் கோரப்படுகிறது.

தேதியிட்டது.....ஆம் நாள், 19.....

(நீதிமன்றத்தின் இலச்சினை.) (கையொப்பம்.)

படிவம் எண் 18.

ஜீவனாம்சம் செலுத்தத் தவறியதன் பேரில் சிறையிலடைக்கப் பிறப்பிக்கப்படும் கட்டளை.

(125 ஆவது பிரிவைக் காண்க.)

பெறுபவர் :
.....இன்ன இன்ன நிறைச்சாலையின் பொறுப்பு அலுவலர்.

.....என்பவர்.....
(பெயர், விவரம் மற்றும் முகவரி)
.....காரணத்தால் தம்மையே பாரா
(காரணத்தை உரைத்திடுக)
மரித்துக் காத்துக்கொள்ள இயலாதவராக இருக்கின்ற தம் மனைவி
...../அல்லது தம் குழந்தை..... அல்லது
(பெயர்) (பெயர்)
தம் தந்தை அல்லது தாயினை.....ப் பராமரிக்கப்
போதுமான வசதி உடையவராயிருந்து, அவ்வாறு செய்யப் புறக்கணித்திருப்ப (அல்லது மறுத்திருப்ப)தாக என் முன் நிரூபிக்கப்பட்டிருப்பதாலும், ஜீவனாம்சத்திற்காக.....ரூபாய் மாதத் தொகையை மேற்சொன்ன மனைவி (அல்லது குழந்தை அல்லது தந்தை அல்லது தாய்)க்குக் கொடுக்கும்படி மேற்சொன்ன.....
ஐக் கோரி கட்டளையொன்று முறைப்படி பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதாலும்; மேற்சொன்ன கட்டளையை வேண்டுமென்றே அலட்சியப்படுத்தும் வகையில்.....மாதத்திற்கான (அல்லது மாதங்களுக்கான), படித்தொகையான.....ரூபாயைச் செலுத்த மேற்சொன்ன..... தவறியிருக்கின்றார் என்பதாக மேற்
(பெயர்)
கொண்டு நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்பதாலும்;

அதன் பேரில்.....கால அளவிற்கு மேற்சொன்ன சிறைச்சாலையில் சிறைத்தண்டனை அனுபவிக்குமாறு அவருக்குத் தீர்ப்பு அளிக்கும் கட்டளையொன்று பிறப்பிக்கப்பட்டது என்பதாலும்;

மேற்சொன்ன .....ஐ இந்தக் கட்டளையுடன்
(பெயர்)

சேர்த்து மேற்சொன்ன நிறைச்சாலையில் உங்கள் பாதுகாப்பில் ஏற்றுக் கொண்டு, மேற்சொன்ன கட்டளையைச் சட்டத்தின்படி அங்கே நிறை வேற்றி, இந்தக் கட்டளையை நிறைவேற்றிய விதத்தைப் பற்றி உறுதிச் சான்றளிக்கும் மேற்குறிப்புடன் இந்தக் கட்டளையைத் திருப்பியனுப்பு மாறு இதன்மூலம் உங்களுக்கு அதிகாரமளித்துக் கோரப்படுகிறது.

தேதியிட்டது .....ஆம் நாள், 19.....

(நீதிமன்றத்தின் இலச்சினை.) (கையொப்பம்.)

படிவம் எண் 19.

ஜப்தி செய்து விற்பனை செய்வதன் மூலமாக ஜீவனும்சம் செலுத்துவதைக் கட்டாயப்படுத்துவதற்கான கட்டளை.

(125 ஆவது பிரிவைக் காண்க.)

பெறுபவர் :

.....(கட்டளையை நிறைவேற்ற வேண்டிய காவல் அலுவலர் அல்லது வேறு ஆளின் பெயரும், பதவியும்)

ஜீவனும்சத்திற்காக .....ரூபாய் மாதத் தொகையைத் தம் மேற்சொன்ன மனைவி (அல்லது குழந்தை அல்லது தந்தை அல்லது தாய்)க்குக் கொடுக்குமாறு .....ஐக் கோரி
(பெயர்)

கட்டளையொன்று முறைப்படி பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதாலும்; மேற்சொன்ன கட்டளையை வேண்டுமென்றே அலட்சியப்படுத்தும் வகையில் .....மாதத்திற்கான அல்லது மாதங்களுக்கான) படி-த்தொகையான .....ரூபாயைச் செலுத்த மேற்சொன்ன .....தவறியிருக்கின்றார் என்பதாலும்;
(பெயர்)

.....மாவட்டத்திற்குள் காணப்படலாகும் மேற்சொன்ன ..... என்பவருக்குச் சொந்தமாயுள்ள அசையும் பொருள் எதையும் ஜப்தி செய்யவும், அத்தகைய ஜப்திக்கு அடுத்துப் பின்பு .....க்குள்
(அனுமதிக்கப்படும் நாட்கள் அல்லது மணி நேரத்தின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)

(அல்லது உடனடியாக) மேற்சொன்ன தொகை செலுத்தப்படாவிடில், ஜப்தி செய்யப்பட்ட அசையும் பொருளை அல்லது மேற்சொன்ன தொகையை அடைப்பதற்கு எந்த அளவு போதுமானதாக இருக்குமோ, அந்த அளவினை விற்பனை செய்து, இந்தக் கட்டளையை நிறைவேற்றியதன் பேரில் உடனடியாக, இதன்படி நீங்கள் செய்திருப்பதென்ன என்பதை உறுதிச்சான்றளிக்கும் மேற்குறிப்புடன் இந்தக் கட்டளையைத் திருப்பி யனுப்புமாறு உங்களுக்கு அதிகாரமளித்துக் கோரப்படுகிறது.

தேதியிட்டது .....ஆம் நாள், 19.....

(நீதிமன்றத்தின் இலச்சினை.) (கையொப்பம்.)

படிவம் எண். 20.

தொல்லைகளை அகற்றுவதற்கான கட்டளை.

(133 ஆவது பிரிவைக் காண்க.)

பெறுபவர் :

.....

(பெயர், விவரம் மற்றும் முகவரி)

..... முதலியவை

(சாலை அல்லது பொது இடத்தை விவரிக்க)

.....

(எது தடங்கல் அல்லது தொல்லையை விளைவிக்கிறது என்பதை உரைத்திடுக)

முதலியவற்றினுல் பொதுச் சாலை வரியை (அல்லது வேறு பொது இடத்தை)ப் பயன்படுத்தி, ஆட்களுக்குத் தடங்கல் (அல்லது தொல்லையை) நீங்கள் விளைவித்திருக்கின்றீர்கள் என்பதாலும், அந்தத் தடங்கல் (அல்லது தொல்லை) இன்னமும் நிடிக்கிறது என்று எனக்குத் தெரிய வந்துள்ளது என்பதாலும்;

அல்லது

.....இன்

(குறிப்பிட்ட வணிகம் அல்லது தொழிலையும் அது நடத்தி வரப்படுகிற இடத்தையும் உரைத்திடுக)

வணிகம் அல்லது தொழிலைச் சொந்தக்காரராக அல்லது மேலாளராக நீங்கள் நடத்தி வருகிறீர்கள் என்பதாகவும்.....

.....

(எந்த முறையில் கேடு விளைவுகள் விளைவிக்கப்படுகின்றன என்பதைச் சுருக்கமாக உரைத்திடுக)

என்னும் காரணத்தால் பொது உடல் நலத்திற்கு (அல்லது வசதிக்கு) அது கேடு விளைவிப்பதாக, இருப்பதாக எனக்குத் தெரிய வந்திருப்பதாலும் அது ஒழிக்கப்பட வேண்டும் அல்லது வேறோர் இடத்திற்கு அப்புறப்படுத்தப்பட வேண்டும் என்பதாலும்,

அல்லது

நீங்கள் பொது வழிக்குப் பக்கத்திலுள்ள . . . (பொது வழியை விவரித்திடுக) குறிப்பிட்ட ஒரு குளம் (அல்லது கிணறு அல்லது வெட்டுப் பள்ளத்தின்) அணுபோகத்தைக் கொண்டிருக்கிறீர்கள் அல்லது அது உங்கள் ஆளுகையில் இருந்து வருகிறது என்று மேற்சொன்ன குளம் (அல்லது கிணறு அல்லது வெட்டுப்பள்ளம்) வேலியின்றி (அல்லது பாதுகாப்பில்லாமல் வேலியிடப்பட்டு) இருக்கின்ற காரணத்தால் பொது மக்களின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்றும் எனக்குத் தெரிய வந்திருப்பதால்;

அல்லது

(நிலைபேற்றிற்கேற்ப).....முதலியன, முதலியன செய்தல்.

.....க்குள்
(அனுமதிக்கப்படும் காலத்தைக் குறிப்பிடுக)

.....
(தொல்லையை அப்புறப்படுத்தச் செய்ய கோரப்படுவது என்ன என்பதை விளக்குக)

அல்லது அடுத்து வரும் 19.....ஆம் நாளன்று.....நீதிமன்றந்நிறுவன.....இடத்தில் ஆஜராகி, இந்தக் கட்டளை ஏன் அமல்படுத்தப்படக்கூடாது என்பதற்குக் காரணங்காட்டுமாறு இதன் மூலம் உங்களுக்கு நான் உத்தரவிடவும் அல்லது கோரவும் செய்கிறேன்;

.....க்குள் மேற்சொன்ன இடத்தில்
(அனுமதிக்கப்படும் காலத்தைக் குறிப்பிடுக)
மேற்சொன்ன வணிகம் அல்லது தொழிலை நடத்துவதை நிறுத்திவிடுமாறும்; அதை மீண்டும் நடத்தாதிருக்குமாறும், அல்லது தற்போது அது நடத்தி வரப்படுகிற இடத்திலிருந்து மேற்சொன்ன அவ்வணிகத்தை அகற்றுதல் அல்லது ஆஜராதல் முதலியவற்றைச் செய்யுமாறு இதன் மூலம் உங்களுக்கு நான் உத்தரவிட்டுக் கோருகிறேன்.

அல்லது

.....க்குள்
(அனுமதிக்கப்படும் காலத்தைக் குறிப்பிடுக)

.....
(வேலியின் வகையையும் வேலியிடப்பட வேண்டிய பகுதியையும் உரைத்திடுக)

போதுமான வேலி போடுதல் அல்லது ஆஜராதல் முதலியவற்றைச் செய்யுமாறு உங்களுக்கு இதன் மூலம் நான் உத்தரவிடவும் கோரவும் செய்கிறேன்.

அல்லது

(நிலவரத்திற்கேற்ப).....முதலியன, முதலியன செய்யுமாறு இதன் மூலம் உங்களுக்கு உத்தரவிட்டுக் கோருகிறேன்.

தேதியிட்டது.....ஆம் நாள், 19.....

(நீதிமன்றத்தின் இலச்சினை) (கையொப்பம்)

படிவம் எண். 21.

நடுவரின் அறிவிப்பும் கண்டிப்பானதும் முடிவானதுமான கட்டளையும்.

(141 ஆவது பிரிவைக் காண்க.)

பெறுபவர் :

.....

(பெயர், விவரம் மற்றும் முகவரி)

.....

(கட்டளையிலுள்ள வேண்டுகோளை சாராம்சம் தெரியும் வகையில் உரைத்திடுக)

செய்யுமாறு உங்களைக் கோரி 19.....ஆம் நாளன்று பிறப்பிக்கப்பட்ட கட்டளை நியாயமானதென்றும் ஏற்றதென்றும் தெரிய வந்திருக்கிறது என்பதாக இதன் மூலம் உங்களுக்கு நான் அறிவிப்பு கொடுக்கிறேன். அந்தமைய கட்டளை முடிவானதாக்கப்பட்டிருக்கிறது; மற்றும் மேற்சொன்ன கட்டளைக்குக் கீழ்ப்படியவில்லையென்றால் இந்தியத் தண்டனைச் சட்டத்தால் வகை செய்யப்பட்டுள்ள தண்டத்திற்கு உள்ளாக வேண்டியிருக்கும் என்ற இடர்ப்பாட்டை உணர்ந்து, ...

(அனுமதிக்கப்படும்

.....க்குள் அதற்குக் கீழ்ப்படியுமாறு

காலத்தைக் குறிப்பிடுக)

இதன் மூலம் உங்களுக்கு நான் உத்தரவிடவும் கோரவும் செய்கிறேன்.

தேதியிட்டது 19.....ஆம் நாள்.

(நீதிமன்றத்தின் இலச்சினை) (கையொப்பம்)

படிவம் எண். 22.

பரிசீலனை நடப்பிலிருக்கும்போது விரைவில் நிகழக் காத்திருக்கிற அபாயத்தைத் தடுப்பதற்கான ஏவு கட்டளை.

(142 ஆவது பிரிவைக் காண்க)

பெறுபவர் :

.....

(பெயர், விவரம் மற்றும் முகவரி)

19 ஆம் நாளன்று என்னால் பிறப்பிக்கப்பட்ட நிபந்தனைக் கட்டளையைப் பற்றிய பரிசீலனை நடப்பிலிருப்பதாலும், மேற்சொன்ன கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள தொல்லையானது, கடுமை வாய்ந்ததும் விரைவில் நிகழக் காத்திருப்பதுமான அபாயம் அல்லது கேட்டைப் பொது மக்களுக்கு உண்டாக்கக்கூடியதாயிருக்கிறது என்றும், ஆகையினால் அந்த அபாயம் அல்லது கேட்டைத் தடுப்பதற்கு உடனடியான நடவடிக்கைகள் எடுப்பது அவசியமாக இருக்கிறதென்றும் எனக்குத் தெரிய வந்திருப்பதால், 1973 ஆம் ஆண்டு குற்ற விசாரணை முறைச் சட்டத்தின் 142 ஆவது பிரிவின் வகைமுறைகளின்படி அப் பரிசீலனை

முடிவடையும் வரை, ...ஐ
(தற்காலிகப் பாதுகாப்பாக என்ன செய்யக் கோரப்பட வேண்டுமென் பதைத் தெளிவாக விளக்குக)
உடனடியாகச் செய்யுமாறு உங்களுக்கு இதன் மூலம் உத்தரவிடவும் வற்புறுத்தவும் செய்கிறேன்.

தேதியிட்டது 19.....ஆம் நாள்.

(நீதிமன்றத்தின் இலச்சினை) (கையொப்பம்)

படிவம் எண். 23.

தொல்லையொன்றைத் திரும்பவும் செய்தல் முதலியவற்றைத் தடை செய்கின்ற நடுவரின் கட்டளை.

(143 ஆவது பிரிவைக் காண்க)

பெறுபவர் :

.....
(பெயர், விவரம் மற்றும் முகவரி).

..... (நிலவரத்திற்கேற்ப, படிவம் எண். 20 அல்லது படிவம் என். 24 இன் உதவியைக் கொண்டு ஏற்ற வாசகத்தை உரைத்திடுக).

முதலியன உள்ளன என்பதாக எனக்குத் தெரிய வந்திருப்பதால்,

மேற்சொன்ன தொல்லையைத் திரும்பவும் செய்ய வேண்டாம் அல்லது தொடர வேண்டாம் என்று இதன் மூலம் கண்டிப்பாக உங்களுக்குக் கட்டளையிடவும் வற்புறுத்தவும் செய்கிறேன்.

தேதியிட்டது 19.....ஆம் நாள்.

(நீதிமன்றத்தின் இலச்சினை) (கையொப்பம்)

படிவம் எண். 24.

தடங்கல், கலகம் முதலியவற்றைத் தடை செய்வதற்கான நடுவரின் கட்டளை.

(144 ஆவது பிரிவைக் காண்க.)

பெறுபவர் :

.....
(பெயர், விவரம் மற்றும் முகவரி)

.....
(சொத்தைத் தெளிவாக விவரித்திடுக)
உங்கள் அனுபோகத்தில் இருக்கிறது (அல்லது உங்கள் ஆளுகையில் இருக்கிறது) என்றும், மேற்சொன்ன நிலத்தின் வடிகால் ஒன்றைத் தோண்டும்போது, சாலையைப் பயன்படுத்துகின்றவர்களுக்குத் தடங்கல்

உண்டாக்கும் வாய்ப்பை எற்படுத்தும் வகையில், வெட்டியெடுக்கப்பட்ட மண்ணையும் கல்லையும் அடுத்துள்ள அப் பொதுச் சாலையின் மீது நீங்கள் கொட்டப் போகிறீர்கள் அல்லது அவற்றின் ஒரு பகுதியை வைக்கப் போகின்றீர்கள் என்றும் எனக்குத் தோற்றுவிக்கப்பட்டிருப்பதால்,

அல்லது

நீங்களும் வேறு பல ஆட்களும் (ஆட்களின் வகுப்பைச் சொல்லுக) பொதுத் தெரு முதலியவற்றின் வழியாக (நிலவரத்திற்கேற்ப) ஊர்வல மாகச் செல்லப் போவதாகவும் அந்த ஊர்வலம் கலகம் அல்லது கலவரத்தை எற்படுத்தக்கூடியதாகவுள்ளது என்பதாகவும் எனக்குத் தோற்றுவிக்கப்பட்டிருப்பதால்,

அல்லது

என்பதால் ..... முதலியன (நிலவரத்திற்கேற்ப) நிலத்திலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட மண்ணையோ கல்லையோ மேற் சொன்ன சாலையின் எந்தப் பகுதியின் மீதும் வைக்கக்கூடாது அல்லது வைப்பதற்கு அனுமதிக்கக்கூடாது என்று இதன் மூலம் உங்களுக்குக் கட்டளையிடுகிறேன்;

அல்லது

நான் இதன் மூலம் மேற்சொன்ன தெரு வழியாக ஊர்வலம் செல்வதைத் தடை செய்வதுடன், அந்த ஊர்வத்தில் (அல்லது எடுத் துரைக்கப்பட்ட சந்தர்ப்பத்திற்கேற்றபடி) பங்கு கொள்ளக்கூடாது என்று உங்களைக் கண்டிப்பாக எச்சரிக்கையும் வற்புறுத்தலும் செய்கிறேன்.

தேதியிட்டது : 19.....ஆம் நாள்.

(நீதிமன்றத்தில் இலச்சினை) (கையொப்பம்)

படிவம் எண். 25.

தாவாவில் உள்ள நிலம் முதலியவற்றின் அனுபோகத்தைத் தொடர்ந்து வைத்துக்கொள்ள உரிமையுடைய தரப்பினர் யாரென்பதை விளம்பும் நடுவரின் கட்டளை.

(145 ஆவது பிரிவைக் காண்க)

என் வட்டார அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள, குறிப்பிட்ட .....

.....

(தாவாச் சொத்தைச் சுருக்கமாக உரைத்திடுக)

சம்பந்தமாக .....

(தரப்பினர்களின் பெயர் மற்றும் குடியிருப்பிடம் அல்லது .....

.....

தரப்பினர்களை தகராறுனது ஊர்க்காரர்களின் குழுக்களுக்கிடையே யிருக்குமானால் குடியிருப்பிடத்தால் மட்டுமே விவரித்திடுக)

ஆகியவர்களுக்கிடையே, அமைதிக் குலைவை உண்டாக்கக்கூடிய தாவா

என்று இருந்தது என்று முறைப்படி பதிவு செய்யப்பட்ட ஆதாரங்களின் பேரிலும் எனக்குத் தோன்றுவதாலும், மேற்சொன்ன .....
.....(தாவாச் சொத்து தகராறுக்குரிய விஷயம்)
..... இல் நேரடியான அனுபோகம் பற்றிய தத்தம் பாத்தியதைகளைக் குறித்து எழுத்து மூலமான உரையைக் கொடுக்குமாறு மேற்சொன்ன தரப்பினர் அனைவரும் கோரப்பட்டனர் என்றும், அதன் பேரில் நடத்தப்பட்ட உரிய பரிசீலனையின் மூலம் சட்டப்படியான அனுபோக உரிமைக்கு மேற்சொன்ன தரப்பினர்களில் எவரேனும் கொண்டாடும் பாத்தியதையின் தருதிகளைக் கவனிக்காமல் மேற்சொன்ன .....
..... கொண்டாடும் நேரடி அனுபோக
(பெயர் அல்லது பெயர்கள் அல்லது விவரம்)
பாத்தியதை உண்மையானது என்று எனக்குத் திருப்தி ஏற்படுவதாலும்; அவர் (அல்லது அவர்கள்) மேற்சொன்ன
(தாவாச் சொத்து)
அனுபோகத்தைக் கொண்டிருக்கிறார் அல்லது கொண்டிருக்கிறார்கள் என்பதாகவும் சட்டமுறைப்படி வெளியேற்றப்படும் வரை அந்த அனுபோகத்தைத் தொடர்ந்து வைத்திருக்க உரிமையுடையவர்கள் என்றும் தீர்மானிக்கவும் விளம்பவும் செய்கிறேன்; அதற்கிடையே அவரது (அல்லது அவர்களது) அனுபோகத்திற்குக் குழப்பம் எதையும் உண்டாக்கக்கூடாதென்று கண்டிப்பான தடையும் விதிக்கிறேன்.

தேதியிட்டது 19.....ஆம் நாள்.

(நீதிமன்றத்தின் இலச்சினை) (கையொப்பம்)

படிவம் எண். 26

நிலத்தின் அனுபோகம் முதலியவற்றிற்குரிய தாவாவில் ஜப்தி கட்டளை

(146 ஆவது பிரிவைக் காண்க)

பெறுபவர்: .....இடத்திலுள்ள காவல் நிலையத்தின் பொறுப்பு அலுவலர்
(அல்லது .....இன் ஆட்சியர்)

என் வட்டார அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள குறிப்பிட்--
(தாவாச் சொத்தைச் சுருக்கமாக உரைத்திடுக)
சம்பந்தமாக .....
(தரப்பினர்களின் பெயர் மற்றும் குடியிருப்பிடம் அல்லது தகராறுனது ஊர்க்காரர்களின் குழுக்களுக்கிடையேயிருக்குமாலை, குடியிருப்பிடத்தால் மட்டும் தரப்பினர்களை விவரித்திடுக).
ஆகியவர்களுக்கிடையே, அமைதிக் குலைவை உண்டாக்கக்கூடிய தகராறொன்று இருந்தது என்று எனக்குத் தோற்றுவிக்கப்பட்டிருப்பதாலும், அதன்பேரில் மேற்சொன்ன .....இன் நேரடியான
(தாவாச் சொத்து)
அனுபோகம் பற்றிய தத்தம் பாத்தியதைகளைக் குறித்து எழுத்து மூலமான உரையைக் கொடுக்குமாறு மேற்சொன்ன தரப்பினர்கள் அனைவரும் முறைப்படி கோரப்பட்டனர் என்றும்; மேற்சொன்ன பாத்தியதைகளை முறைப்படி பரிசீலனை செய்ததன் பேரில், மேற்சொன்ன
..... இன் அனுபோகத்தை மேற்சொன்ன தரப்
(தகராறுக்குரிய பொருள்)
பினர்களில் எவரும் கொண்டிருக்கவில்லை என்பதாக நான் தீர்மானித்

திருப்பதாலும் (அல்லது மேற்சொன்ன தரப்பினர்களில் எவர் மேற் சொன்னவாறு அனுபோகத்தைக் கொண்டிருந்தார் என்பது பற்றி எனக்குத் திருப்தி ஏற்படவில்லை);

மேற்சொன்ன (தாவாச் சொத்து)-இனை எடுத்துக்கொண்டு கைவசம் வைத்திருப்பதன் மூலமாக ஜப்தி செய்யுமாறும், தரப்பினர் களின் உரிமைகளையோ, அனுபோகத்திற்கான பாத்தியதையையோ நிர்மானித்து, அதிகாரம் கொண்ட ஒரு நீதிமன்றம் பிறப்பிக்கும் தீர்ப் பாணை அல்லது கட்டளையைப் பெறும் வரை அதை ஜப்தியில் வைத் திருக்குமாறும், இந்தக் கட்டளையை நிறைவேற்றிய விதத்தைப் பற்றி உறுதிச்சான்றளிக்கும் மேற்குறிப்புடன் இந்தக் கட்டளையைத் திருப்பி யனுப்புமாறும் இதன் மூலம் உங்களுக்கு அதிகாரமளித்துக் கோரப் படுகிறது.

தேதியிட்டது : 19 ஆம் நாள்.

(நீதிமன்றத்தின் இலச்சினை)

(கையொப்பம்)

படிவம் எண் 27.

நிலம் அல்லது நீரின்மீது எதையேனும் செய்வதைத் தடைசெய்கின்ற நடுவரின் கட்டளை.

(147 ஆவது பிரிவைக் காண்க.)

என் வட்டார அதிகார எல்லைக்குள் அமைந்துள்ளதும் அனுபோகம் ..... தமக்கேயுரியதென்று பாத்தியதை கொண்டாடு (ஆள் அல்லது ஆட்களை விவரித்திடுக)
வதுமான நிலம் அல்லது நீரின் புழங்கு உரிமை சம்பந்தப்பட்ட தாவா ஒன்று (தாவாவுக்குரிய சொத்துபற்றி சுருக்கமாக உரைத்திடுக) எற்பட்டிருந்து, அதை முறைப்படி பரிசிலனை செய்ததன் பேரில், மேற் சொன்ன நிலம் (அல்லது நீர்) பொதுமக்களின் (அல்லது தனியாள் ஒருவர் அல்லது ஆட்களின் வகை, அவர் அல்லது அவர்களை விவரித்திடுக) புழக்க உரிமைக்கு உட்பட்டிருக்கிறது என்பதாகவும் (அந்தப் புழக்க உரிமை ஆண்டு முழுவதுமே அனுபவிக்கப்படக்கூடியதாயிருந்தால்) மேற்சொன்ன புழக்க உரிமை மேற்சொன்ன பரிசிலனை தொடுக்கப் பட்டதிலிருந்து மூன்று மாதங்களுக்குள் (அல்லது அப் புழக்க உரிமை குறிப்பிட்ட ஒரு பருவத்தில் மட்டும் அனுபவிக்கத் தக்கதாயிருந்தால், அதாவது, "அது அனுபவிக்கப்பட்டிருக்கக்கூடிய பருவங்களில் கடைசிப் பருவத்தின்போது" அனுபவிக்கப்பட்டு வந்திருக்கிறது என்பதாகவும் எனக்குத் தோன்றுகிறது;

மேற்சொன்ன (அனுபோக பாத்தியதாரர் அல்லது பாத்தியதாரர் கள்) அல்லது அவர்களின் நலனுக்காக எவரேனும், அவருக்கு (அல்லது அவர்களுக்கு) மாத்திரமே அனுபோக உரிமை உண்டென்று தீர்ப்பு சாத்து அதிகாரம் கொண்ட நீதிமன்றம் ஒன்று தீர்ப்பாணை அல்லது கட்டளை பிறப்பிக்கும்வரை மற்றவர்களை மேற்சொன்ன புழக்க உரிமை

அனுபோகத்திலிருந்து நீக்குவிக்கும் முறையில் மேற்சொன்ன நிலம் (அல்லது நீரின்) அனுபோகத்தை எடுத்துக்கொள்ளுதல் (அல்லது தொடர்ந்து வைத்திருத்தல்) ஆகாது என்று நான் கட்டளையிடுகிறேன்.

தேதியிட்டது..... ஆம் நாள்..... 19 .

(நீதிமன்றத்தின் இலச்சினை)

(கையொப்பம்)

படிவம் எண் 28.

காவல் அலுவலர் ஒருவரின்முன் நடக்கும் முதல்நிலைப் பரிசீலனையின் பேரில் கொடுக்கப்படும் பத்திரமும் ஜாமீன்பத்திரமும்.

(169 ஆவது பிரிவைக் காண்க.)

.....குற்றத்தைச் செய்ததாகக் குற்றஞ் சுமத்தப் பட்டு, பரிசீலனைக்குப் பின்பு ..... இன் நடுவரின் முன் ஆஜராகுமாறு கோரப்பட்டுள்ள

அல்லது

பரிசீலனைக்குப் பின்பு கோரப்படும்போது ஆஜராவதாக ஜாமீன் பத்திர மொன்றை எழுதிக் கொடுக்குமாறு கோரப்பட்டுள்ள..... ஐச் சேர்ந்த நான்.....சுமத்தப்பட்ட மேற் சொன்ன குற்றத்திற்கு மேற்கொண்டு பதிலளிக்க அடுத்த..... இன்.....ஆம் நாளன்று (அல்லது ஆஜராகுமாறு இதற்குப்பின் நான் கோரப்படலாகும் நாளன்று)..... இந்நீதிமன்றத்தில் ஆஜராவதாக நான் இதன் மூலம் கட்டுப்படு கிறேன்; மற்றும் அதைச் செய்ய நான் தவறினால்..... ரூபாய் தொகையை அரசுக்குத் தண்டமாக இழப்பதற்கு நான் கட்டுப் படுகிறேன்.

தேதியிட்டது..... ஆம் நாள்..... 19 .

(கையொப்பம்)

(நீதிமன்றத்தின் இலச்சினை)

மேற்சொன்ன ..... அவருக்கெதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றத்திற்குப் பதிலளிக்க அடுத்த..... .....ஆம் நாளன்று (அல்லது அவர் இதற்குப் பின் ஆஜராகுமாறு கோரப்படலாகும் நாளன்று)..... இன் நீதிமன்றத்திலுள்ள..... இடத்தில் அவர் ஆஜராக வேண்டும் என்பதற்கு அவருக்காக நான் இதன்மூலம் ஜாமீன்தாராக இருப்பதாக உறுதிகூறுகிறேன். (அல்லது நாங்கள் கூட்டாகவும் தனித்தனியாகவும் ஜாமீன்தார்களாக இருப்பதாக நாங்கள் அனைவரும் மற்றும் எங்களில் ஒவ்வொருவரும் உறுதி கூறு

இருேம்); மற்றும் அதைச் செய்ய அவர் தவறினால் ..... ரூபாய் தொகையை அரசுக்குத் தண்டமாக இழப்பதற்கு நான் இதன் மூலம் கட்டுப்படுகிறேன் (அல்லது நாங்கள் இதன்மூலம் கட்டுப் படுகிறோம்).

தேதியிட்டது..... ஆம் நாள்..... 19 .

(கையொப்பம்)

படிவம் எண் 29.

வழக்குத் தொடர்வதற்கு அல்லது சாட்சியம் கொடுப்பதற்கான பத்திரம்.

(170 ஆவது பிரிவைக் காண்க.)

கா. வா. என்னும் ஒருவருக்கெதிரான ..... குற்றச் சாட்டு விஷயமாக வழக்குதொடர (அல்லது வழக்குத் தொடர்வதோடு சாட்சியமும் கொடுக்க) (அல்லது சாட்சியம் கொடுக்க) அடுத்த..... .....இன் நாளன்று ..... மணிக்கும் அவ்வப்போதும் ..... நீதிமன்றத்திலுள்ள ..... இடத்தில் ஆஜராவதாக ..... ஐச் (இடம்)

சேர்ந்த.....நான் இதன் மூலம் கட்டுப்படு (பெயர்)

கிறேன்; மற்றும் நான் அதைச் செய்யத் தவறினால்..... ரூபாய் தொகையை அரசுக்குத் தண்டமாக இழப்பதற்கு நான் கட்டுப் படுகிறேன்.

தேதியிட்டது.....ஆம் நாள்.....19 .

(கையொப்பம்)

(நீதிமன்றத்தின் இலச்சினை)

படிவம் எண் 30.

சில்லறைக் குற்றம் செய்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட ஒருவருக்குச் சிறப்பு ஆஜர் கட்டளை.

(206 ஆவது பிரிவைக் காண்க.)

பெறுபவர் :

(எதிரியின் பெயர்)

.....

(முகவரி)

(சாட்டப்பட்ட குற்றத்தைச் சுருக்கமாக உரைத்திடுக) சில்லறைக் குற்றத்தைச் செய்ததாகச் சாட்டப்பட்ட குற்றச் சாடடுக்குப் பதிலளிக்க நீங்கள் ஆஜராவது அவசியமாக இருப்பதால் 19..... ஆம் நாளன்று ..... இன் ..... (நடுவர்) முன் நேர்முகமாக (அல்லது வாதுரைஞர்) மூலமாக ஆஜராகுமாறு, அல்லது அந்த நடுவர் முன் ஆஜராகாமலேயே அக் குற்றத்தைச் செய்த தாக நீங்கள் ஒப்புக்கொள்ள விரும்பினால், மேற்சொன்ன தேதிக்குள் எழுத்து மூலமான ஒப்புதல் உரையையும் அபராதமாக.....

ரூபாய் தொகையையும் அனுப்பிவைக்குமாறு அல்லது வாதுரைஞர் மூலமாக ஆஜராகி அவ் வாதுரைஞர் மூலமாக அந்த ஒப்புதல் உரையைக் கொடுக்க நீங்கள் விரும்பினால் உங்கள் சார்பாக அத்தகைய ஒப்புதல் உரையைக் கொடுப்பதற்கும், அபராதத்தை அவ் வாதுரைஞர் மூலமாகச் செலுத்துவதற்கும் அவ் வழக்குரைஞருக்கு எழுத்துமூலமாக அதிகாரமளிக்குமாறு இதன்மூலம் உங்களைக் கோரப்படுகிறது. இதில் தவறுதல் ஆகாது.

தேதியிட்டது .....ஆம் நாள் .....19 .

(நீதிமன்றத்தின் இலச்சினை)

(கையொப்பம்)

(குறிப்பு.—இந்த ஆஜர் கட்டளையில் குறிப்பிடப்படும் தொகை நூறு ரூபாய்க்கு மேற்படுதல் ஆகாது)

படிவம் எண் 31.

நடுவர் மேல் விசாரணைக்கு அனுப்புவது பற்றி அரசு குற்றத் துறை வழக்குரைஞருக்குக் கொடுக்கும் அறிவிப்பு.

(209 ஆவது பிரிவைக் காண்க.)

.....இன் நடுவர் ..... என்னும் ஒருவரை அடுத்த செஷன்ஸில் மேல் விசாரணை செய்யப்படுவதற்காக அனுப்பியிருக்கிறார் என்பதாக இதன் மூலம் அறிவிப்பு கொடுக்கிறார்; மற்றும் மேற்சொன்ன குற்றவழக்கைத் தொடருமாறு அரசு குற்றத் துறை வழக்குரைஞர், நடுவரால் இதன்மூலம் கோரப்படுகிறார்.

எதிரிக்கு விரோதமான குற்றச்சாட்டு..... (குற்றச் சாட்டில் உள்ளவாறு குற்றத்தை உரைத்திடுக) முதலியன.

தேதியிட்டது .....ஆம் நாள் .....19 .

(நீதிமன்றத்தின் இலச்சினை)

(கையொப்பம்)

படிவம் எண் 32.

குற்றச் சாட்டுகள்.

(211, 212 மற்றும் 213 ஆவது பிரிவுகளைக் காண்க.)

ஒரு தலைப்பு கொண்ட குற்றச் சாட்டுகள்

1. (அ) ..... ஆகிய நான்,
(நடுவரின் பெயர், பதவி முதலியன)
.....ஆகிய உங்கள் மீது பின்
(எதிரியின் பெயர்)
வருமாறு இதன் மூலம் குற்றஞ் சாட்டுகிறேன்:

121ஆவது பிரிவின்மீது

(ஆ) நீங்கள், ... இடத்தில் .....ஆம் தேதியில் அல்லது அந்தத் தேதி வாக்கில் இந்திய அரசுக்கு விரோதமாகப் போர் தொடுத்து அதன் மூலமாக இந்தியத் தண்டனைச் சட்டத்தின்

121 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரியதும், இந்த நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் தக்கதுமான குற்றமொன்றைச் செய்திருக்கிறீர்கள்.

(இ) மற்றும் மேற்சொன்ன குற்றச்சாட்டின்மீது நீங்கள் இந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட வேண்டும் என்பதாக இதன் மூலம் உத்தரவிடுகிறேன்.

(நடுவரின் கையொப்பமும்
இலச்சினையும்)

[(ஆ) வுக்குப் பதிலாகச்
சேர்க்கப்படவேண்டியது]

124 ஆவது பிரிவின் மீது

(2) இந்தியக் குடியரசுத் தலைவரை [அல்லது, நிலவரத்திற்கேற்ப, ... இன் ஆளுநரை] அத்தகைய குடியரசுத் தலைவராக (அல்லது நிலவரத்திற்கேற்ப, ஆளுநராக) சட்டபூர்வமான அதிகாரத்தைச் செலுத்தாதிருக்குமாறு தூண்டும் உட்கருத்துடன் ..... ஆம் தேதியில் அல்லது அந்தத் தேதி வாக்கில்..... இடத்தில், நீங்கள் குடியரசுத் தலைவரை (அல்லது, நிலவரத்திற்கேற்ப, ஆளுநரை) நோக்கி, அதன் மூலமாக இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 124 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரியதும், இந்த நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் தக்கதுமான குற்றமொன்றைச் செய்தீர்கள்.

161 ஆவது பிரிவின் மீது

(3) செய்ய வேண்டிய அலுவல்முறைச் செய்கையொன்றைச் செய்யாமலிருக்க வேண்டும் என்ற உள்நோக்கத்துடன், சட்டப்படியான ஊதியமல்லாத ஒரு வெகுமதியை (பெயரைக் குறிப்பிடுக) வேறொரு தரப்பினருக்காக ..... இடமிருந்து, (பெயரைக் குறிப்பிடுக) .....தறையில் ஒரு பொது ஊழியராக இருக்கும் நீங்கள் நேரடியாக ஏற்றுக்கொண்டு, அதன் மூலமாக இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 161 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரியதும், இந்த நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் தக்கதுமான குற்றமொன்றைச் செய்தீர்கள்.

166 ஆவது பிரிவின் மீது

(4) ..... சட்டத்தின் ..... ஆவது பிரிவின் வகைமுறைகளுக்கு முரணானதாக இருப்பதும் .....க்கு பாதகம் விளைவிப்பதாக இருக்கும் என்று உங்களுக்குத் தெரிந்திருப்பதுமான ..... ஐ, ... தேதியில் அல்லது அந்தத் தேதிவாக்கில் ..... இடத்தில் நீங்கள் செய்து (அல்லது நிலவரத்திற்கேற்ப, செய்யாதுவிட்டு) அதன்மூலம், இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 166 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரியதும், இந்த நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் தக்கதுமான குற்றமொன்றை நீங்கள் செய்தீர்கள்.

193 ஆவது பிரிவின் மீது

(5) பொய்யானதென்று உங்களுக்குத் தெரிந்த அல்லது நீங்கள் நம்பிய, அல்லது உண்மையானதென்று நீங்கள் நம்பாத " ...." என்ற உரையை ..... முன் நடந்த ..... விசாரணையின்போது ..... இடத்தில் ..... ஆம் தேதியில் அல்லது அந்நாள் தேதி வாக்கில் நீங்கள் சாட்சியமாக உரைத்து, அதன்மூலமாக இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 193 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரியதும், இந்த நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் தக்கதுமான குற்றமொன்றைச் செய்தீர்கள்.

304 ஆவது பிரிவின் மீது

(6) ..... இன் மரணத்தை விளைவிக்கின்ற கொலையாகாத மரணம் விளைவிக்கும் குற்றத்தை நீங்கள் ..... இடத்தில் ..... ஆம் தேதியில் அல்லது, அந்தத் தேதி வாக்கில் செய்து அதன் மூலமாக இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 304 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரியதும், இந்த நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் தக்கதுமான குற்றமொன்றைச் செய்தீர்கள்.

306 ஆவது பிரிவின்மீது

(7) குடிவெறியிலுள்ளவரான கா. ங. என்பவர் தற்கொலைக் குற்றம் செய்வதற்கு ..... இடத்தில் ..... ஆம் தேதியில் அல்லது அந்தத் தேதிவாக்கில் நீங்கள் உடந்தையாக இருந்து, அதன் மூலமாக இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 306 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரியதும், இந்த நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளத்தக்கதுமான குற்றமொன்றைச் செய்தீர்கள்.

325 ஆவது பிரிவின் மீது

(8) ..... இடத்தில் ..... ஆம் தேதியில் அல்லது அந்தத் தேதிவாக்கில் ..... க்குக் கொடுங்காயத்தைத் தம்மிச்சையாகவே நீங்கள் விளைவித்து, அதன் மூலமாக, இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 325 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரியதும், இந்த நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத்தக்கதுமான குற்றமொன்றைச் செய்தீர்கள்.

392 ஆவது பிரிவின் மீது

(9) ..... இடத்தில் ..... ஆம் தேதியில் அல்லது அந்தத் தேதிவாக்கில் ..... ஐ நீங்கள் (பெயரைக் குறிப்பிடுக) கொள்ளையடித்து, அதன் மூலமாக இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 392 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரியதும் இந்த நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத்தக்கதுமான குற்றமொன்றைச் செய்தீர்கள்.

395 ஆவது பிரிவின் மீது

(10) இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 395 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரியதும் இந்த நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளத்தக்கதுமான கூட்டுக்கொள்ளைக் குற்றத்தை நீங்கள் .... ஆம் தேதியில் அல்லது அந்தத் தேதி வாக்கில் செய்தீர்கள்.

II. இரண்டு அல்லது மேற்பட்ட தலைப்புகள் கொண்ட குற்றச்சாட்டுகள்.

(1) (அ) ..... ஆகிய நான்,
(நடுவரின் பெயர், பதவி முதலியன)

..... ஆகிய உங்கள் மீது பின்வருமாறு
(எதிரியின் பெயர்)
இதன்மூலம் குற்றஞ்சாட்டுகிறேன்:—

241 ஆவது பிரிவின் மீது

(ஆ) முதலாவதாக—நாணயமொன்றை அது கள்ள நாணயமென்று தெரிந்தே, கா. ஙா. என்னும் பெயர் கொண்ட வேறொருவருக்கு அதை உண்மையானதுபோல நீங்கள் ..... இடத்தில் ..... ஆம் தேதியில் அல்லது அந்தத் தேதிவாக்கில் கொடுத்து அதன் மூலமாக இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 241 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரியதும் செஷன்ஸ் நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத்தக்கதுமான குற்றமொன்றைச் செய்தீர்கள்.

இரண்டாவதாக—நாணயமொன்றை அது கள்ள நாணயமென்று தெரிந்தே, அதை உண்மையானதுபோலப் பெற்றுக்கொள்ளுமாறு கா. ஙா. என்னும் பெயருடைய வேறொருவரைத் தூண்டுவதற்காக .....இடத்தில் .....ஆம் தேதியில் அல்லது அந்தத் தேதிவாக்கில் முயன்று, அதன் மூலமாக இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 241 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரியதும் செஷன்ஸ் நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளத்தக்கதுமான குற்றமொன்றைச் செய்தீர்கள்.

(இ) மற்றும் மேற்சொன்ன குற்றச்சாட்டின்பேரில் நீங்கள் மேற்சொன்ன நீதிமன்றத்தால் விசாரணை செய்யப்படவேண்டும் என்று நான் இதன்மூலம் உத்தரவிடுகிறேன்.

(நடுவரின் கையொப்பமும் இலச்சினையும்)

[(ஆ) வுக்குப் பதிலாகச் சேர்க்கப்படவேண்டியது]:—

302 மற்றும் 304 ஆகிய பிரிவுகளின் மீது

(2) முதலாவதாக ..... இன் மரணத்தை விளைவிக்கின்ற கொலையை நீங்கள் ..... இடத்தில் ..... ஆம் தேதியில் அல்லது அந்தத் தேதிவாக்கில் செய்து, அதன் மூலமாக இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 302 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரியதும், செஷன்ஸ் நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளத்தக்கதுமான குற்றமொன்றைச் செய்தீர்கள்.

இரண்டாவதாக—நீங்கள் ..... இன் ஆணைத்தை விளைவிப்பதன் மூலமாக, கொலையாகாத மரணம் விளைவிக்கும் குற்றத்தை ..... இடத்தில் ..... ஆம் தேதியில் அல்லது அந்தத் தேதிவாக்கில் செய்து, அதன் மூலமாக, இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 304 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரியதும், செஷன்ஸ் நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளத்தக்கதுமான குற்றமொன்றைச் செய்தீர்கள்.

379 மற்றும் 382 ஆகிய பிரிவுகளின் மீது

(3) முதலாவதாக நீங்கள் ..... இடத்தில் ..... ஆம் தேதியில் அல்லது அந்தத் தேதிவாக்கில் திருட்டுக் குற்றத்தைச் செய்து, அதன் மூலமாக, இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 379 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரியதும், செஷன்ஸ் நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத்தக்கதுமான குற்றமொன்றைச் செய்தீர்கள்.

இரண்டாவதாக—திருட்டுக்குற்றத்தைச் செய்ய வேண்டி, ஒருவருக்கு மாணத்தை விளைவிப்பதற்காக முன்னேற்பாடு செய்து, அத்தகைய திருட்டுக் குற்றத்தை நீங்கள் ..... இடத்தில் 19 ..... ஆம் தேதியில் அல்லது அந்தத் தேதிவாக்கில் செய்து, அதன் மூலமாக இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 382 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரியதும், செஷன்ஸ் நீதிமன்றத்தால் விசாரணைக்கெடுத்துக்கொள்ளத்தக்கதுமான குற்றமொன்றைச் செய்தீர்கள்.

மூன்றாவதாக—திருட்டுக்குற்றத்தைச் செய்ததற்குப் பின்பு நீங்கள் தப்பித்துக்கொள்ளும் பொருட்டு, ஒருவரைத் தடுத்து வைக்கும்படி செய்வதற்கான முன்னேற்பாட்டைச் செய்து ..... இடத்தில், ... ஆம் தேதியில் அல்லது அந்தத் தேதி வாக்கில் அத்திருட்டுக் குற்றத்தை நீங்கள் செய்து அதன் மூலமாக இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 382 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரியதும் செஷன்ஸ் நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளத்தக்கதுமான குற்றமொன்றைச் செய்தீர்கள்.

நான்காவதாக—திருடியதன்மூலம் எடுக்கப்பட்ட சொத்தைத் தொடர்ந்து வைத்திருக்க வேண்டி, ஒருவருக்குக் காயம் விளைவிக்கும் அச்சத்தை விளைவிப்பதற்கான முன்னேற்பாட்டைச் செய்து ..... இடத்தில் ..... ஆம் தேதியில் அல்லது அந்த தேதிவாக்கில் அத் திருட்டுக் குற்றத்தை நீங்கள் செய்து, அதன் மூலமாக, இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 382 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரியதும் செஷன்ஸ் நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளத்தக்கதுமான குற்றமொன்றைச் செய்தீர்கள்.

193 ஆவது பிரிவின் மீது மாற்றுக வனையப்படும்

குற்றச்சாட்டு.

(4).....என்று சாட்சியமாக கொடுக்கப் பட்ட உரையை.....முன் நடக்கும்.....
.....பற்றிய பரிசிலனையின்போது.....
இடத்தில்.....ஆம் தேதியில் அல்லது அத்தத் தேதி வாக்கிலும்.....என்று சாட்சியமாகக் கொடுக்கப் பட்ட உரையை.....முன்.....
பற்றிய விசாரணையின்போது ..... இடத்தில் .....
..... ஆம் தேதியில் அத்தத் தேதிவாக்கிலும் அவ்வுரைகளில் ஒன்று, பொய்யானதென உங்களுக்குத் தெரிந்தே அல்லது நீங்கள் நம்பியே அல்லது உண்மையானதென்று நீங்கள் நம்பாமலே உரைத்து, அதன் மூலமாக இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 193 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரியதும் செஷன்ஸ் நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளத்தக்கதுமான குற்றமொன்றை நீங்கள் செய்தீர்கள்.

* (நடுவர்களால் விசாரணை செய்யப்படும் வழக்குகளில் "செஷன்ஸ் நீதிமன்றத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத்தக்கதுமான" என்பதற்குப் பதிலாக "என்னுல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் தக்கதுமான" என்பதைச் சேர்த்துக்கொள்க.)

III. முந்திய தண்டனைத் தீர்ப்புக்குப் பின்பு செய்யப்பட்ட திருட்டுக் குற்றத்திற்கான குற்றச்சாட்டுகள்.

..... ஆகிய நான்,
(நடுவரின் பெயர், பதவி முதலியன)
..... ஆகிய உங்கள் மீது பின்வருமாறு குற்றஞ்
(எதிரியின் பெயர்)
சாட்டுகிறேன்:—

.....ஆம் தேதியில் அல்லது அத்தத் தேதி வாக்கில் நீங்கள் செய்து, அதன் மூலமாக இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 379 ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரியதும் செஷன்ஸ் நீதிமன்றத்தால் (அல்லது நிலவரத்திற்கேற்ப, நடுவரால்) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத்தக்கது மான குற்றமொன்றைச் செய்தீர்கள்.

மேலும், நீங்கள் மேற்சொன்ன குற்றத்தைச் செய்வதற்கு முன்பு, அதாவது, ஆம் தேதியில் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் XVII ஆவது அத்தியாயத்தின்படி மூன்றாண்டு காலத் திற்குச் சிறைத் தண்டனை விதிப்பதற்குரிய குற்றமொன்றை அதாவது, இரவில் கன்னமிடும் குற்றத்தை (எதிரியானவர் எந்தப் பிரிவின்படி தண்டிக்கப்பட்டாரோ அந்தப் பிரிவில் பயன்படுத்தப்பட்ட சொற்களில் குற்றத்தை விவரித்திடுக) செய்ததற்காக .....

இடத்திலுள்ள (தண்டனைத் தீர்ப்பையளித்த நீதிமன்றத்தைக் குறிப்பிடுக) ....., ... இதனால் மேற்சொன்ன .....

(எதிரியின் பெயர்)

ஆகிய நீங்கள் தண்டிக்கப்பட்டு, அத் தண்டனைத் தீர்ப்பு இன்னமும் முழு அளவில் அமலில் இருந்துவரும்போது, அந்தக் குற்றத்தைச் செய்ததாகவும் நீங்கள் மேற்கொண்டு குற்றஞ் சாட்டப்பட்டுள்ளீர்கள். மற்றும் நீங்கள் இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 75 ஆவது பிரிவின்படி அதிகப்படியான தண்டனைக்கு இதன்மூலம் உட்பட்டவராகவும் இருக்கிறீர்கள்.

மேலும் நீங்கள் விசாரணை முதலியன செய்யப்படவேண்டும் என்பதாக நான் இதன் மூலம் உத்தரவிடுகிறேன்.

படிவம் எண் 33.

சாட்சிக்கு ஆஜர் கட்டளை.

(61 மற்றும் 244 ஆகிய பிரிவுகளைக் காண்க.)

பெறுபவர் : .....

(எதிரியின் பெயரும் முகவரியும்)

.....

(குற்றத்தை அது செய்யப்பட்ட காலம் மற்றும் இத்துடன் சுருக்கமாக உரைத்திடுக)

குற்றத்தைச் செய்திருப்பதாக (அல்லது செய்திருப்பதாக சந்தேகிக்கப்படுகிறார் என்பதாக) என்மூன் முறையீடு செய்யப்பட்டு, நீங்கள் அரசுதரப்பில் தொடர்புள்ள சாட்சியத்தைக் கொடுக்கவோ அல்லது பத்திரம் எதையேனும் அல்லது வேறு பொருளைத் தாக்கல் செய்யவோ கூடும் என்று எனக்குத் தோன்றுவதால் :

அடுத்த .....ஆம் நாளன்று முற்பகல் 10 மணிக்கு இந்த நீதிமன்றத்தின்முன் ஆஜராவதற்கும் மேற்படி பத்திரம் அல்லது பொருளைத் தாக்கல் செய்வதற்கு அல்லது மேற்சொன்ன முறையீட்டிற்குரிய விஷயம் சம்பந்தமாக உங்களுக்குத் தெரிந்துள்ளதைக் குறித்து வாக்குமூலம் கொடுப்பதற்கும் நீதிமன்றத்தின் அனுமதியில்லாமல் அவ்விடத்திலிருந்து புறப்படாதிருப்பதற்குமாக இதன்மூலம் உங்களுக்கு ஆஜர் கட்டளை இடப்படுகிறது; மேலும் நியாயமான முகாந்திரமில்லாமல் மேற்படி தேதியன்று நீங்கள் ஆஜராவதைப் புறக்கணித்தாலோ, அல்லது ஆஜராவதற்கு மறுத்தாலோ, நீங்கள் ஆஜராவதைக் கட்டாயப்படுத்த பிடிகட்டளையொன்று பிறப்பிக்கப்படும் என்பதாக உங்களுக்கு இதன்மூலம் எச்சரிக்கை செய்யப்படுகிறது.

தேதியிட்டது : 19.....ஆம் நாள்.

(நீதிமன்றத்தின் இலச்சினை.)

(கையொப்பம்)

படிவம் எண் 34.

சிறை அல்லது அபராதத் தண்டனையின்பேரில் சிறையிலடைக்கப் பிறப்பிக்கப்படும் கட்டளை, அத் தண்டனை நடுவால் பிறப்பிக்கப்பட்டிருக்குமானால்.

(248 மற்றும் 255 ஆகிய பிரிவுகளைக் காண்க.)

பெறுபவர் .....

(பிரைச்சாலை பொறுப்பு அலுவலர்)

19..... ஆண்டிற்கான வரிசைப் பட்டியல் வழக்கு எண் .....இல் (நிலவாத்திற்கேற்ப முதலாவது, இரண்டாவது, மூன்றாவது) கைதியான....., இந்தியத்

(கைதியின் பெயர்)

தண்டனைச் சட்டத்தின் (அல்லது ..... சட்டத்தின்) .....ஆவது பிரிவின்படி (அல்லது.....பிரிவுகளின்படி) உள்ள குற்றத்தை (குற்றத்தை அல்லது குற்றங்களைச் சுருக்கமாகச் சொல்லுக) செய்ததற்காக ..... ஆம் நாளன்று தண்டிக்கப்பட்டு,.....க்கு

(தண்டனையை முழுமையாகவும் தெளிவாகவும் உரைத்திடுக)

தண்டனை அளிக்கப்பட்டதால்,

மேற்படி (கைதியின் பெயர்).....ஐ கட்டளையுடன் சேர்த்து மேற்படி சிறைச்சாலையில் உங்கள் பாதுகாப்பில் ஏற்றுக்கொள்ளுமாறும், அதன் மூலமாக சட்டத்தின்படி மேற்சொன்ன தண்டனையை நிறைவேற்றிவைக்குமாறும் உங்களுக்கு அதிகாரமளித்துக் கோரப்படுகிறது.

கொடுக்கப்பட்டது : 19.....ஆம் நாள்.

(நீதிமன்றத்தின் இலச்சினை.)

(கையொப்பம்)

படிவம் எண் 35.

தண்டனை செலுத்தத் தவறியதன் பேரில் சிறையிலடைப்பதற்குக் கட்டளை.

(250 ஆவது பிரிவைக் காண்க.)

பெறுபவர் :.....
(சிறைச்சாலை பொறுப்பு அலுவலர்)

.....

.....என்பதாக முறையீடொன்றை
(சுருக்கமாகக் குறிப்பிடுக)

.....பேரில்
(எதிரியின் பெயரும் விவரமும்)

.....கொண்டு வந்து அது
(பெயரும் விவரமும்)

மேற்படி ..... மீது குற்றஞ்சுமத்து
(பெயர்)

வதற்கு நியாயமான ஆதாரம் எதுவும் இல்லை என்னும் காரணத்தின் பேரில் தள்ளுபடி செய்யப்பட்டு அத் தள்ளுபடிக் கட்டளையானது ..... ரூபாய் தொகையை மேற்படி ..... செலுத்துமாறு தீர்ப்பு அளிக்கப்
(முறையிடுபவரின் பெயர்)

பட்டதாலும்; மேற்படி தொகை செலுத்தப்படாததாலும் மேற்சொன்ன தொகை அதற்குப் பின்பு செலுத்தப் படவில்லையென்றால்,..... ..... நாள் கால அளவுக்குச் சிறைச்சாலையில் அவரை மெய்காவலில் வைப்பதற்குக் கட்டளையொன்று பிறப்பிக்கப்பட்டிருப்பதாலும்;

மேற்படி.....ஐ, இந்தக் கட்டளை
(பெயர்)

யுடன் சேர்த்து உங்கள் பாதுகாப்பில், ஏற்றுக்கொள்ளுமாறும் மேற்படி தொகை அதற்குப்பின் செலுத்தப்பட்டாலன்றி, இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 69 ஆவது பிரிவின் வகைமுறைகளுக்குட்பட்டு, ...மேற்படி கால அளவிற்கு (சிறைவாசகாலம்) மேற்படி சிறைச்சாலையில் அவரைக் காவந்தாக வைத்திருக்குமாறும், அத் தொகை வந்ததன் பேரில் அவரை உடனடியாக விடுவித்து, இந்தக் கட்டளையை நிறைவேற்றிய விதத்தைப் பற்றி உறுதிச் சான்றளிக்கும் மேற்குறிப்புடன் இந்தக் கட்டளையைத் திருப்பியனுப்புமாறும் உங்களுக்கு அதிகாரமளித்துக் கோரப்படுகிறது.

தேதியிட்டது : 19.....ஆம் நாள்.

(நீதிமன்றத்தின் இலச்சினை)

(கையொப்பம்)

படிவம் எண் 36.

குற்றச்சாட்டுக்குப் பதிலளிப்பதற்காக சிறையிலுள்ள ஆளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தக்கோரும் கட்டளை.

(சிறைச்சாலையின் பொறுப்பு அலுவலர்.)

பெறுபவர்: .....

சிறைச்சாலையின் பொறுப்பு அலுவலர்.

.....

.....குற்றச்சாட்டுக்கு

(சாட்டப்பட்ட குற்றத்தைச் சுருக்கமாக உரைத்திடுக)

பதிலளிப்பதற்காகவோ அல்லது நடவடிக்கையொன்றின் (நடவடிக்கையின் விவரங்களைச் சுருக்கமாக உரைத்திடுக) பொருட்டோ தற்போது மேற்சொல்லப்பட்ட சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள/தடுப்புக் காவலிலுள்ள .....இந்த நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு
(கைதியின் பெயர்)
கோரப்படுவதால்;

மேற்படி.....ஐ 19.....ஆம் நாளன்று முற்பகல் ..... மணிக்குள் இந்த நீதிமன்றத்தின்முன் அங்கே மேற்படி குற்றச்சாட்டுக்குப் பதிலளிப்பதற்காக அல்லது மேற்படி நடவடிக்கையின் பொருட்டு கொண்டு வந்து நிறுத்துமாறும், மேற்கொண்டு அவர் ஆஜராவதை இந்த நீதிமன்றம் தவிர்த்ததற்குப் பின்பு, அவரை மேற்படி சிறைக்குக் காவந்தாகவும் நம்பகமான முறையிலும் திரும்ப அனுப்பி வைக்கச் செய்யுமாறும் உங்களை இதன்மூலம் கோரப்படுகிறது.

மேலும் இந்தக் கட்டளையின் உள்ளடக்கத்தை மேற்சொன்ன [redacted] -ங்குத் தெரிவிக்குமாறும் இணைக்கப்பட்டுள்ள அதன் நகலினை அவருக்கு ஒப்படைக்குமாறும் உங்களை மேலும் கோரப்படுகிறது.

தேதியிட்டது: 19 [redacted] ஆம் நாள்.

(கையொப்பம்)

(நீதிமன்றத்தின் இலச்சினை)

மேலொப்பமிடப்பட்டது.

(இலச்சினை)

(கையொப்பம்)

படிவம் எண் 37.

சிறையிலிருக்கும் ஆளை சாட்சியம் கொடுப்பதற்காக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தக்கோரும் கட்டளை.

(267 ஆவது பிரிவைக் காண்க.)

.....

(சிறைச்சாலையின் பொறுப்பு அலுவலர்)

.....

.....ஐச் சேர்ந்த.....

.....

(எதிரியின் பெயர்)

.....

(குற்றத்தை, அது செய்யப்பட்ட காலம் மற்றும் இடத்துடன் சுருக்கமாக உரைத்திடுக)

குற்றத்தைச் செய்திருக்கிறார் என்று இந்த நீதிமன்றத்தின் முன் முறையீடு செய்யப்பட்டு தற்போது மேலே சொல்லப்பட்டுள்ள சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தடுப்புக் காவலிலுள்ள .....

(கைதியின் பெயர்)

.... அரசுத் தரப்பில்/எதிர் தரப்பில் தொடர்புள்ள சாட்சியத்தைக் கொடுக்கக்கூடும் என்று தோன்றுவதால் இந்த நீதிமன்றத்தின்முன் தற்போது நடப்பிலுள்ள விஷயம் சம்பந்தமாக இங்கே சாட்சியம் கொடுப்பதற்குக் காவந்தாகவும் நம்பகமான முறையிலும் 19 ஆண்டு ..... மாதம் ..... ஆம் நாளன்று, முற்பகல் ..... மணிக்குள் இந்த நீதிமன்றத்தின்முன் மேற் சொன்ன ..... ஐ ஆஜர் படுத்துமாறும் இந்த நீதிமன்றம் மேற்கொண்டு ஆஜராவதைத் தவிர்த்ததற்குப் பின்பு, அவரை மேற்சொன்ன சிறைச்சாலைக்குக் காவந்தாகவும் நம்பகமான முறையிலும் திருப்பியனுப்பிவைக்கச் செய்யுமாறும் உங்களை இதன் மூலம் கோரப்படுகிறது.

இந்தக் கட்டளையின் உள்ளடக்கத்தை மேற்சொன்ன.....
..... க்குத் தெரிவிக்குமாறும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள நகலை அவரிடம் ஒப்படைக்குமாறும் உங்களை மேற்கொண்டும் கோரப்படுகிறது.

தேதியிட்டது: 19..... ஆம் நாள்.

(கையொப்பம்)

(நீதிமன்றத்தின் இலச்சினை.)

மேலொப்பமிடப்பட்டது.

(இலச்சினை) (கையொப்பம்)

படிவம் எண் 38.

அவமதிப்புக்காக அபராதம் விதிக்கப்படும் தருணங்களில் சிறையிலடைப்பதற்கான கட்டளை.

(345 ஆவது பிரிவைக் காண்க.)

பெறுபவர்:

சிறைச்சாலைப் பொறுப்பு அலுவலர்.

.....

இந்நாள் என்முன் நடந்த நீதிமன்றத்தில்.....

(குற்றவாளியின் பெயரும் விவரமும்)

நீதிமன்றத்தின் முன்னிலையில் (அல்லது பார்வையில்) வேண்டுமென்றே அவமதிப்புக் குற்றத்தைச் செய்ததால்;

அந்த அவமதிப்புக்காக மேற்சொன்ன.....

(குற்றவாளியின் பெயர்).....ரூபாய் அபராதம் செலுத்துமாறு அல்லது செலுத்தத் தவறினால்.....

.....(மாதங்கள் அல்லது நாட்களின் எண்ணிக்கையை உரைத்திடுக) கால அளவிற்கு மெய்க்காவல் சிறைத் தண்டனையனுபவிக்குமாறு இத் நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பதால்;

இந்தக் கட்டளையுடன் மேற்சொன்ன ..... ஐ

(குற்றவாளியின் பெயர்)

உங்கள் பாதுகாப்பில் ஏற்றுக்கொள்ளுமாறும் மேற்சொன்ன அபராதம் அதற்குப் பின்பு செலுத்தப்பட்டாலன்றி, மேற்சொன்ன.....

(சிறைவாசக் காலம்)

கால அளவிற்கு மேற்சொன்ன சிறையில் காவந்தாக வைத்திருக்குமாறும், அவ்வபராதம் வந்ததன் பேரில், உடனடியாக அவரை விடுவிக்குமாறும், இந்தக் கட்டளையை நிறைவேற்றிய விதத்தைப் பற்றி உறுதிச் சான்றளிக்கின்ற மேற்குறிப்புடன் கட்டளையைத் திருப்பியனுப்பி வைக்குமாறும் உங்களுக்கு அதிகாரமளித்துக் கோரப்படுகிறது.

தேதியிட்டது: 19..... ஆம் நாள்.

(நீதிமன்றத்தின் இலச்சினை.)

(கையொப்பம்)

படிவம் எண் 39.

பதிலளிக்கவோ பத்திரத்தைத் தாக்கல் செய்யவோ மறுக்கின்ற சாட்சியைச் சிறையிலடைப்பதற்கான நடுவர் அல்லது நீதிபதியின் கட்டளை.

(349 ஆவது பிரிவைக் காண்க.)

பெறுபவர் :

.....

(நீதிமன்ற அலுவலரின் பெயரும் பதவியும்)

சாட்சியாக ஆஜராகுமாறு ஆஜர் கட்டளையிடப்பட்டு (அல்லது இந்த நீதிமன்றத்தின் முன் ஆஜர்ப்படுத்தப்பட்டு) சொல்லப்பட்ட குற்றம் சம்பந்தமான பரிசீலனையில் சாட்சியம் கொடுக்குமாறு இந்நாள் கோரப்பட்டுள்ள..... சொல்லப்பட்ட

(பெயரும் விவரமும்)

மேற்சொன்ன குற்றம் சம்பந்தமாக அவரிடம் கேட்கப்படும் குறிப்பிட்ட கேள்வி (அல்லது குறிப்பிட்ட கேள்விகள்)க்கு/களுக்குப் பதிலளிக்க மறுத்து, அது முறைப்படி பதிவு செய்யப்பட்டிருப்பதால், அல்லது பத்திரம் எதையேனும் தாக்கல் செய்யுமாறு கோரப்பட்டிருந்து அந்தகைய பத்திரத்தைத் தாக்கல் செய்ய மறுத்ததற்கான நியாயமான முகாந்திரம் எதையும் கொடுக்காமலேயே அவ்வாறு மறுத்திருப்பதாலும் அவர் மறுத்ததற்காக.....க்குத்

(தீர்ப்பளிக்கப்பட்ட கால அளவும் தடுப்புக்காவலும்)

தடுப்புக் காவலில் வைக்கப்படுவதற்குக் கட்டளையிடப்பட்டிருப்பதாலும் ;

மேற்சொன்ன.....ஐ, பாதுகாப்பில் ஏற்றுக் கொண்டு,.....நாட்கள் கால அளவிற்கு, அதற்கிடையில் விசாரிக்கப்படுவதற்கும், அவரிடம் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதிலளிக்கவோ அவரிடமிருந்து கேட்கப்படும் பத்திரத்தைத் தாக்கல் செய்யவோ, அவர் இசைந்தால்லாமல், உங்கள் பாதுகாப்பில் காவந்தாக வைத்திருக்குமாறும், மேற்சொன்ன நாட்களில் கடைசி நாளன்று, அல்லது அத்தகைய இசைவு தெரிவிக்கப்பட்ட உடனேயே, சட்டத்தின் படி அவர்பேரில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்காக இந்த நீதிமன்றத்தின் முன் அவரை ஆஜர்படுத்துமாறும், இந்தக் கட்டளையை நிறைவேற்றிய விதத்தைப்பற்றி உறுதிச் சான்றளிக்கின்ற மேற்குறிப்புடன் இந்தக் கட்டளையைத் திருப்பியனுப்புமாறும் உங்களுக்கு அதிகாரமளித்துக் கோரப்படுகிறது.

தேதியிட்டது.....19.....

(நீதிமன்றத்தின் இலச்சினை)

(கையொப்பம்)

படிவம் எண் 40.

மரணதண்டனையின்படி சிறையிலடைக்கும் கட்டளை.

(366 ஆவது பிரிவைக் காண்க.)

பெறுபவர் :

சிறைச்சாலை பொறுப்பு அலுவலர்,

....

..... 19 .....ஆம் நாளன்று என் முன் நடந்த செஷன்ஸ் விசாரணையில் 19 .....க்கான வரிசைப்பட்டியல் செஷன்ஸ் வழக்கு எண்.....இல் ..... (நிலவரத்திற்கேற்ப முதலாவது, இரண்டாவது அல்லது மூன்றாவது) கைதியான..... (கைதியின் பெயர்)

.....இந்தியத் தண்டனைச் சட்டத்தின் .....ஆவது பிரிவின்படி கொலைக்குற்றமாகிற மானைக் விளைவிக்கும் குற்றத்தைச் செய்ததாக முறைப்படி தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டு, ...இன்.....நீதிமன்றத்தால் மேற்சொன்ன தண்டனை உறுதியாக்கப்படுவதற்குட்பட்டு,.....மரண தண்டனை விதிக்கப்பட்டிருப்பதால் ;

இந்தக் கட்டளையுடன் மேற்சொன்ன ..... ஐ (கைதியின் பெயர்)

உங்கள் பாதுகாப்பில் ஏற்றுக் கொள்ளுமாறும் மேற்சொன்ன.....

.....நீதிமன்றத்தின் கட்டளையை நிறைவேற்றுவதற்கு மேற்கொண்டு இந்த நீதிமன்றத்தின் கட்டளை அல்லது உத்தரவை நீங்கள் பெறும்வரை அவரை அங்கே காவலாக வைத்திருக்குமாறும் உங்களுக்கு அதிகாரமளித்துக் கோரப்படுகிறது.

தேதியிட்டது.....19.....

(நீதிமன்றத்தின் இலச்சினை)

(கையொப்பம்)

படிவம் எண் 41.

தண்டனையை மாற்றியதற்குப் பின்பு கட்டளை.

(386 ஆவது பிரிவைக் காண்க.)

பெறுபவர் :

சிறைச்சாலை பொறுப்பு அலுவலர்,

.....

19 ..... ஆம் நாளன்று நடந்த செஷன்ஸ் விசாரணையில் அந்த செஷன்சின் 19 ..... ஆவது ஆண்டுக்கான வரிசைப் பட்டியல் வழக்கு எண்.....இல் (நிலவரத்திற்கேற்ப முதலாவது, இரண்டாவது, மூன்றுவது) கைதியான.....
(கைதியின் பெயர்)
இந்தியத் தண்டனைச் சட்டத்தின் ..... ஆவது பிரிவின்படி தண்டிப்பதற்குரிய.....குற்றத்தைச் செய்ததாகத் தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டு,.....க்குத் தண்டிக்கப்பட்டு, அதன் பேரில் உங்கள் பாதுகாப்பிலிருக்கும் சிறைக்கு அனுப்பப்பட்டிருப்பதாலும்;.....இன்.....நீதிமன்றத்தின் கட்டளையால் (அதன் இரண்டாவது நகல் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது) மேற்சொன்னவாறு தீர்ப்பளிக்கப்பட்ட தண்டனை, ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டிருப்பதாலும்;

மேற்சொன்ன.....ஐ, அவர் மேற்சொன்ன
(கைதியின் பெயர்)
கட்டளையின்படி சிறைத் தண்டனையை அனுபவிக்கும் பொருட்டு, ஏற்ற அதிகாரியிடமும் பாதுகாப்பிலும் உங்களால் ஒப்படைக்கப்படும்வரை சட்டத்தின் மூலம் கோரப்படுகிறபடி, அவரை மேற்சொன்ன சிறைச்சாலையில் உங்கள் பாதுகாப்பில் காவந்தாக வைத்திருக்குமாறு உங்களுக்கு அதிகாரமளித்துக் கோரப்படுகிறது.

அல்லது

குறைக்கப்பட்ட தண்டனையாவது சிறைத் தண்டனையாக இருக்குமானால், "மேற்சொன்ன சிறைச்சாலையில் பாதுகாப்பில் காவந்தாக வைத்திருக்க" என்னுஞ் சொற்களுக்குப் பின்பு, "மற்றும் அங்கே, மேற்சொன்ன கட்டளையின்படி சிறைத் தண்டனையைச் சட்டத்தின்படி நிறைவேற்ற" என்பதைச் சேர்த்துக்கொள்க.

தேதியிட்டது: 19.....ஆம் நாள்.

(நீதிமன்றத்தின் இலச்சினை.)

(கையொப்பம்)

படிவம் எண் 42.

மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கான கட்டளை.

(414 ஆவது பிரிவைக் காண்க.)

பெறுபவர் :

சிறைச்சாலை பொறுப்பு அலுவலர்,

.....

19 ..... ஆம் நாளன்று என் முன் நடந்த செஷன்ஸ் விசாரணையில் 19 ..... ஆவது ஆண்டிற்கான வரிசைப் பட்டியல் வழக்கு எண் ..... இல் (நிலவரத்திற்கேற்ப, முதலாவது, இரண்டாவது, மூன்றாவது) கைதியான .....இன் .....ஆம்
(கைதியின் பெயர்)
நாள் தேதியிட்ட, நீதிமன்றத்தின் கட்டளையால், மரண தண்டனை விதிக்கப்பட்டு, உங்கள் பாதுகாப்பிலிருக்க சிறைக்கு அனுப்பப்பட்டிருப்பதாலும் ;

மேற்சொன்ன தண்டனையை உறுதிப்படுத்தி .....இல் உள்ள உயர்நீதிமன்றம் பிறப்பித்த கட்டளை இந்த நீதிமன்றத்திற்கு வந்திருப்பதாலும் ;

..... இல், மேற்சொன்ன (இன்னுரை)
(நிறைவேற்ற வேண்டிய காலமும் இடமும்)
செத்துப் போகும் வரை கழுத்தினால் தூக்கிலிட்டு வைக்கும்படி செய்விப்பதன் மூலமாக மேற்சொன்ன தண்டனையை நிறைவேற்றுமாறும் அத் தண்டனை நிறைவேற்றப்பட்டுவிட்டது என்று உறுதிச் சான்றளிக்கின்ற மேற்குறிப்புடன் இந்தக் கட்டளையை இந் நீதிமன்றத்திற்குத் திருப்பி யனுப்பி வைக்குமாறும் இதன் மூலம் உங்களுக்கு அதிகாரமளித்துக் கோரப்படுகிறது.

தேதியிட்டது: 19.....ஆம் நாள்.

(நீதிமன்றத்தின் இலச்சினை.)

(கையொப்பம்)

படிவம் எண் 43.

ஜப்தி செய்யவும் விற்பனை செய்யவும் அவற்றின் மூலமாக அபராதம் விதிப்பதற்கான கட்டளை.

பெறுபவர் :

.....

(காவல் அலுவலர் அல்லது கட்டளையை நிறைவேற்ற வேண்டிய வேறு ஆள் அல்லது ஆட்களின் பெயரும் பதவியும்)

.....குற்றம் செய்ததற்காக என்

(குற்றத்தைச் சுருக்கமாகச் சொல்லுக)

மூன் 19.....ஆம் நாளன்று.....

(குற்றவாளியின் பெயரும் விவரமும்)

தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டு.....ரூபாய் அபராதஞ் செலுத்துமாறு தண்டனையளிக்கப்பட்டதாலும்; மேற்சொன்ன அபராதத்தைச் செலுத்துமாறு கோரப்பட்டிருந்தும், மேற்சொன்ன.....

(பெயர்)

அதை அல்லது அதன் பகுதியைச் செலுத்தாததாலும்;

..... மாவட்டத்திற்குள் காணப்படலாகும்,

மேற்சொன்ன.....க்குச் சொந்தமான அசையும்

(பெயர்)

பொருள் எதையும் ஜப்தி செய்யவும்; அத்தகைய ஜப்திக்குப் பிறகு

(அனுமதிக்கப்பட்ட நாட்கள் அல்லது மணி நேரத்தின் எண்ணிக்கையை உரைத்திடுக)

..... க்குள் (அல்லது உடனடியாக), மேற்சொன்ன தொகை செலுத்தப்படவில்லையாதல், ஜப்தி செய்யப்பட்ட அசையும் பொருளை, அல்லது மேற்சொன்ன அபராதத்தை நிறைவேற்றுவதற்குப் போதுமானதாக இருந்திடும் அச் சொத்தின் பகுதியை விற்பனை செய்து, இத்தக் கட்டளையின்படி நீங்கள் செய்திருப்பதென்ன என்பதைப் பற்றி உறுதிச் சான்றளிக்கும் மேற்குறிப்புடன் இக் கட்டளையை நிறைவேற்றி உடனேயே இதைத் திருப்பியனுப்பி வைக்குமாறு இதன் மூலம் உங்களுக்கு அதிகாரமளித்துக் கோரப்படுகிறது.

தேதியிட்டது: 19.....ஆம் நாள்.

(நீதிமன்றத்தின் இலச்சினை)

(கையொப்பம்)

படிவம் எண் 44.

அபராதம் வசூலிப்பதற்கான கட்டளை,

(421 ஆவது பிரிவைக் காண்க.)

பெறுபவர் :

மாவட்ட ஆட்சியர்

.....

.....

(குற்றத்தைச் சுருக்கமாகச் சொல்லுக)

.....குற்றத்திற்காக என் முன் 19 ..... ஆம் நாளன்று .....

(குற்றவாளியின் பெயர், முகவரி மற்றும் விவரம்)

தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டு.....ரூபாய் அபராதஞ் செலுத்துமாறு தண்டிக்கப்பட்டுள்ளதாலும் ;

மேற்சொன்ன.....மேற்சொன்ன அபராதத்தைச் செலுத்துமாறு கோரப்பட்டிருந்தும், அதையோ அதன் பகுதியையோ செலுத்தாததாலும் ;

(பெயர்)

மேற்சொன்ன.....இன் அசையும் அல்லது அசையாப் பொருளிலிருந்து மேற்சொன்ன அபராதத்தை நில வருவாய் பாக்கியைப் போன்று வசூலிக்குமாறும் இந்தக் கட்டளையைத் தொடர்ந்து நீங்கள் செய்திருக்கக்கூடியது என்ன என்பதைப் பற்றித் தாமதமின்றி உறுதிச் சான்றளிக்குமாறும் இதன் மூலம் உங்களுக்கு அதிகாரமளித்துக் கோரப்படுகிறது.

(பெயர்)

தேதியிட்டது: 19.....ஆம் நாள்.

(நீதிமன்றத்தின் இலச்சினை)

(கையொப்பம்)

படிவம் எண் 45.

காவல் நிலையப் பொறுப்பு அலுவலர் அல்லது நீதிமன்றத்தின்முன் ஆஜராவதற்கான பத்திரம் அல்லது ஜாமீன் பத்திரம்.

(436, 437, 438 (3) மற்றும் 441 ஆகிய பிரிவுகளைக் காண்க.)

.....ஐச் சேர்ந்த..... ஆகிய
(இடம்) (பெயர்)

நான்,.....குற்றம் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு .....காவல் நிலையத்தின் பொறுப்பு அலுவலரால் பிடிகட்டளை யில்லாமல் கைது செய்யப்பட்டிருந்து அல்லது காவலில் வைக்கப்பட் டிருந்து (அல்லது ..... நீதிமன்றத்தின் முன் ஆஜர் படுத்தப்பட்டிருந்து), அக் குற்றச்சாட்டு பற்றிப் புலனுய்வு அல்லது விசாரணை ஏதேனும் நடத்தப்படுகிற ஒவ்வொரு நாளன்றும் அத்தகைய அலுவலர் அல்லது நீதிமன்றத்தின்முன் ஆஜராக வேண்டும் என்னும் நிபந்தனையின் பேரில் அத்தகைய அலுவலர் அல்லது நீதிமன்றத்தின் முன் நான் ஆஜராவதாக ஜாமீன் கொடுக்குமாறு கோரப்பட்டிருக் கிறேன். அவ்வாறு நான் செய்யத் தவறினால்..... ரூபாய் தொகையை அரசுக்குத் தண்டமாக இழப்பதற்கு நான் கட்டுப் படுகிறேன்.

தேதியிட்டது: 19.....ஆம் நாள்.

(கையொப்பம்)

மேற்சொன்ன.....குற்றச்சாட்டு பற்றிப் புலனுய்வு
(பெயர்)
ஏதேனும் செய்யப்படுகிற அல்லது அக் குற்றச் சாட்டின்மீது விசாரணை ஏதேனும் நடத்தப்படுகிற ஒவ்வொரு நாளன்றும்..... காவல் நிலையத்தின் பொறுப்பு அலுவலரிடம் அல்லது..... நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்றும் (நிலவரத்திற்கேற்ப) அப் புலனுய்வின் பொருட்டோ அவர் மீதான குற்றச்சாட்டுக்குப் பதிலளிக் கவோ அத்தகைய அலுவலர் அல்லது நீதிமன்றத்தின் முன் அவர் அங்கிருப்பார் என்றும் ஆஜராவார் என்றும் மேற்சொன்னவருக்கான ஜாமீன்தாராக நான் இருப்பதாக இதன் மூலம் உறுதி கூறுகிறேன். (அல்லது ஜாமீன்தார்களாக இருப்பதாகக் கூட்டாகவும் தனித்தனியாக வும் நாங்கள் ஒவ்வொருவரும் உறுதி கூறுகிறோம்) ; மற்றும் இதில் அவர் தவறினால் ..... ரூபாய் தொகையை அரசுக்குத் தண்டமாக இழப்பதாக நான் இதன் மூலம் கட்டுப்படுகிறேன். (அல்லது நாங்கள் இதன் மூலம் கட்டுப்படுகிறோம்).

தேதியிட்டது: 19.....ஆம் நாள்.

(கையொப்பம்)

படிவம் எண் 46.

ஜாமீன் கொடுக்கத் தவறியதன் பேரில் காவலில் அடைக்கப்பட்ட ஒருவரை விட்டுவிடுவதற்கான கட்டளை.

(442 ஆவது பிரிவைக் காண்க.)

பெறுபவர் :

.....சிறைச்சாலைப் பொறுப்பு அலுவலர் (அல்லது வேறெந்த அலுவலரின் பாதுகாப்பில் இருக்கின்றாரோ அந்த அலுவலர்) .....

(கைதியின் பெயரும் விவரமும்)

.....ஆம் நாள் தேதியிட்ட, இந்த நீதிமன்றத்தின் கட்டளையின்படி உங்கள் பாதுகாவலில் இடப்பட்டு தம் ஜாமீன் தாருடன் (அல்லது ஜாமீன்தார்களுடன்) குற்ற விசாரணை முறைச் சட்டத்தின் 441ஆவது பிரிவின்படி பத்திரமொன்றை முறைப்படி எழுதிக் கொடுத்திருப்பதால் ;

மேற்சொன்ன ..... வேறொரு விஷயத்திற்காகக் காவலில்
(பெயர்)

வைக்கப்படுவதற்கு உட்பட்டிருந்தாலன்றி, அவரை உங்கள் பாதுகாப்பிலிருந்து உடனடியாக விட்டுவிடுமாறு இதன் மூலம் உங்களுக்கு அதிகாரமளித்துக் கோரப்படுகிறது.

தேதியிட்டது : 19.....ஆம் நாள்.

(நீதிமன்றத்தின் இலச்சினை.)

(கையொப்பம்)